செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்
திட்ட இயக்ககம்

# பையடக்க அகராதி

பதிப்பாசிரியர்

முனைவர் **கோ.விசயராகவன்**
இயக்குநர்

தமிழ்நாடு அரசு

**2022**

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பையடக்க அகராதி |
| பதிப்பாசிரியர் | : | **முனைவர் கோ.விசயராகவன்** |
| முதல் பதிப்பு | : | திருவள்ளுவராண்டு 2053<br>கும்பம் (மாசி) 2022 பிப்பிரவரி |
| பதிப்புரிமை | : | தமிழ்நாடு அரசு |
| பக்கம் | : | 304 |
| தாள் | : | 80 ஜி.எஸ்.எம். மேப்லித்தோ |
| நூலின் அளவு | : | டெம்மி 1/16 |
| நூல் வெளியீடும்,<br>கிடைக்குமிடமும் | : | **செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்**<br>எண்: 75, முதல்தளம்,<br>நகர் நிருவாக அலுவலக வளாகம்,<br>எம்.ஆர்.சி.நகர்,<br>சாந்தோம் நெடுஞ்சாலை,<br>சென்னை–28.<br>தொலைபேசி எண் :<br>044– 29520509<br>044– 29520462<br>மின்னஞ்சல் முகவரி :<br>dir.dtedp@tn.gov.in |
| அச்சீடு | : | அரசு மைய அச்சகம்,<br>சென்னை – 600 079. |


**விலையில்லா நூல்**

**தங்கம் தென்னரசு**
மாண்புமிகு அமைச்சர்,
தொழில்துறை, தமிழ் ஆட்சிமொழி,
தமிழ்ப் பண்பாடு (ம) தொல்லியல்துறை

தலைமைச் செயலகம்
சென்னை – **600 009.**

# வாழ்த்துரை

**"தமிழுயர்ந்தால் தமிழ்நாடு தானுயரும்
அறிவுயரும் அறமும் ஓங்கும்"**

என்றார் பாவேந்தர் பாரதிதாசன். புதிய புதிய துறைகள் தோன்றுந்தொறும், ஏராளமான கலைச்சொற்கள் தோன்றுவதால், வழங்கும் சொற்களில் புதிய பல பொருள்கள் இணைந்து விரிவடைவதற்கான சூழ்நிலையில் அகரமுதலி மிகவும் இன்றியமையாத நூலாகிறது என **மேனாள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் 'முத்தமிழறிஞர்' கலைஞர் அவர்கள்** எடுத்துரைத்தார்கள்.

அந்த வகையில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி திரு.மு.க.ஸ்டாலின்** அவர்கள் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில் ஒரு செயலியை உருவாக்கி, புதிய கலைச்சொற்களைத் திரட்டி அகராதிகளில் பதிவேற்றம் செய்யலாம் என்று அறிவிறுத்தினார்கள்.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் வெளியீடுகளுள் ஒன்றான இந்தப் **'பையடக்க அகராதி'** பார்க்கச் சிறிதே என்றாலும், பல சொற்களுக்கு எளிய சுருங்கிய தெளிந்த நற்பொருளை உணர்த்துவதில் சிறந்து விளங்குகிறது. இந்த அகராதி, தமிழ்கூறும் நல்லுலகத்தார்க்கும். தமிழார்வலர்களுக்கும் பெரிதும் உதவிடும். அகரமுதலி இயக்ககத்தின் செயற்பாடுகளை நன்முறையில் நெறிப்படுத்திவரும் தமிழ்வளர்ச்சி (ம) செய்தித்துறை அரசு செயலாளர் **திரு. மகேசன் காசிராசன்** இ.ஆ.ப., அவர்களுக்கும், இதனை உருவாக்கிய இவ்வியக்கக இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன், அகராதி வல்லுநர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் அன்போடு தெரி வித்துக்கொள்கிறேன்.

அன்புடன்,

**(தங்கம் தென்னரசு)**

**மகேசன் காசிராஜன்** இ.ஆ.ப.,
அரசு  செயலாளர்
தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை

தலைமைச் செயலகம்
சென்னை – **600 009.**

நாள் : **20.04.2022**

# <u>அணிந்துரை</u>

**“ஏற்றமுறச் செய்வதுவும் மாற்றமுற வைப்பதுவும் ஏடேயாகும்”**

- பாவேந்தர் பாரதிதாசன்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தால் உருவாக்கப்பட்ட அனைவருக்குமான பயன்பாட்டு அகராதியே பையடக்க அகராதியாகும். அகரமுதலித் திட்ட மகுடத்திற்கு அணி சேர்க்கும் செம்மணி என்றால் மிகையில்லை. இன்றைய தேவைக்கு ஏற்ற செந்தமிழ்ச் சொற்களையெல்லாம் ஒன்று திரட்டி உருவாக்கப்பட்ட இந்தப் பையடக்க அகராதி தமிழ் கற்போருக்கும் கற்பிப்போருக்கும் பயன்படவல்ல ஒரு கை விளக்காகும்.

பையடக்க அகராதியை பயன்படுத்துவோருக்கு வாழ்த்துகள்.

அன்புடன்,

**(மகேசன்காசிராஜன்)**

**முனைவர் கோ.விசயராகவன்**
இயக்குநர்

நகர்நிருவாக அலுவலக வளாகம்,
முதல் தளம், எண்.75, சாந்தோம்
நெடுஞ்சாலை, எம்.ஆர்.சி. நகர்,
சென்னை – 600 028.

# பதிப்புரை

**ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கி**
**ஏங்கொலி ஞாலத்து இருளகற்றும்-ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரோன் ஏனையது**
**தன்னேர் இல்லாத தமிழ்!**

கற்கவும் கற்பிக்கவும் எளிதில் கையாளக் கூடிய கருவி அகரமுதலி ஒன்றேயாகும். அகரமுதலிக்கென்றே உருவாக்கப்பட்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி திட்ட இயக்ககம் பல்வேறு அகராதிகளை அறிஞர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் உதவிடும் வகையில் பதிப்பித்து வெளியிட்டுவரும் பணிகளை செவ்வனே செய்து வருகிறது. அவ்வகையில் முகாமையான, பயன்பாட்டிற்குரிய சொற்களைத் தேர்ந்தெடுத்து எந்த விடத்தும் பயன்படும் வண்ணம் பையடக்க அளவில் வெளியிட்டுள்ளது.

அகராதி உருவாக்கம் என்னும் மொழிக்கான ஆக்கப்பணிக்கு தாயினும் சாலப்பரிந்து தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கி வரும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு, மு.க. ஸ்டாலின்** அவர்களுக்கு முதற்கண் என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன். இயக்ககத்தின் செயற்பாடுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் மாண்புமிகு தொழில்துறை, தமிழ் ஆட்சிமொழி. தமிழ்ப் பண்பாடு(ம) தொல்லியல்துறை அமைச்சர் **திரு. தங்கம் தென்னரசு** அவர்களுக்கும், எங்களை ஆற்றுப்படுத்தி வரும் தமிழ்வளர்ச்சி (ம) செய்தித்துறை அரசு செயலாளர் **திரு. மகேசன் காசிராசன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும் என்நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

அனைவருக்கும் பயன்தரும் வகையில் அமைந்துள்ள இதனைப் பயன்படுத்தி நல்ல தமிழை நாமும் பிறரும் அறிய இயலும். தமிழ் மொழியைக் காக்கவும், வளர்க்கவும், உலகெங்கும் பரப்பவும் இந்தப் பையடக்க அகராதி பயனுள்ளதாக இருக்கும். இதனை உருவாக்க ஒத்துழைத்த துறை அறிஞர்களுக்கு வாழ்த்துகளும் பாராட்டுகளும் உரித்தாகுக.

**இயக்குநர்**

## செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

**பதிப்பாசிரியர்கள்**

முனைவர் மா. பூங்குன்றன்

திரு சு. வீரவேலு

முனைவர் மு. கண்ணன்

முனைவர்
தி. பாலசுப்பிரமணியன்
(ஒருங்கிணைப்பாளர்)

திரு. கி. தமிழ்மணி

முனைவர்
மு. கோமதிவள்ளியம்மை

**உதவிப் பதிப்பாசிரியர்**
திரு. ஏ. காந்தி,

**தொகுப்பாளர்கள்**

முனைவர் வே. கார்த்திக்

திரு. கி. இராமர்

திருமதி ஜெ. சாந்தி

திரு. வே. பிரபு

திருமதி கு. சங்கீதா

**கண்காணிப்பாளர்**
திருமதி ஆ.மு. பிந்து

**கணிப்பொறியாளர்கள்**

திருமதி க. கஸ்தூரி

திரு. ப. தீபக்

**அ** - தமிழ் மொழியின் முதல் எழுத்து, எட்டு என்ற எண்ணைக் குறிக்கும், சுட்டு, எதிர்மறை, அசை, அஃறிணைப் பன்மை ஈறு, அழகு, சிவன், திருமால், அயன், திப்பிலி

**அஃகம்** - தவசம் , கூலம் (தானியம்) , ஊறு நீர், சுருக்கம்

**அஃகல்** - நுணுகுதல், குறைதல், வற்றுதல், வறுமை

**அஃகாமை** - குறையாமை, சுருங் காமை

**அஃகுள்** - அக்குள், கக்கம்

**அஃது** - அது, ஒரு சுட்டுப்பெயர்

**அஃதை** - திக்கற்றவர், சோழன் மகள் ஒருத்தியின் பெயர்

**அஃறிணை** - மாந்தர், தேவர் அல்லாத பிற உயிர்களையும், உயிரற்ற பொருள்களையம் உள்ளடக்கிய பெயர்ச்சொல் பகுப்பு

**அக்கக்காய்** - துண்டு துண்டாக

**அக்கசாலை** - பொன், வெள்ளி முதலிய கனியவேலை செய்யு மிடம், தங்க சாலை

**அக்கப்போர்** - கலகம், தொந்தரவு, தொல்லை, வம்பு, வெட்டிப் பேச்சு

**அக்கம்** - தவசம், கயிறு, பொன், வெள்ளி முதலிய கனியம்

**அக்கமணி** - சிவமணி

**அக்கரைச்சீமை**-அயல்நாடு, வெளி நாடு, கடலுக்கு அக்கரையிலுள்ள நாடு

**அக்கழற்சி** - எலும்புக்கு உண்டாகும் அழற்சி

**அக்கறுவாள்** - சப்பாத்துக் கள்ளியையும் முட்செடிகளையும் வெட்ட உதவும் அறுவாள் வகை

**அக்கறை** - (ஒன்றில் அல்லது ஒருவர் மீது காட்டும் ஈடுபாடு, நாட்டம்), அதிகக் கருத்து அல்லது கவனம் செலுத்துதல், இரக்கம்

**அக்கறை** - பற்று, ஊக்கம், கவனம், கருத்து, கவலை, தேவை

**அக்கன்** - அக்கை

**அக்கா** - தாய் மூத்த சகோதரி, மூத்த தேவி, உறவல்லா மூத்த பெண்

**அக்காணி** - பூதவுடம்பு

**அக்காரடலை** - சருக்கரை சேர்த்துச் சமைத்த சோறு

**அக்காரடியல்** - சருக்கரைப் பொங்கல்

**அக்காரநீர்** - பதநீர்

**அக்காரம்** - ஆடை

**அக்காள்** - உடன் பிறந்த மூத்தவள், பிற மூத்தப் பெண்ணை அழைக்கும் சொல், தாய், அரத்தக் கலப்புள்ள உறவினர்க்குள் அக்கை முறைப் பட்டவள், மண வுறவால் அக்கை முறைப்பட்டவள், மதிப் புரவால் அக்கா என்று விளிக்கப்படும் அல்லது சொல்லப்படும் உறவல்லா மூத்த பெண், திருமகளுக்கு அக்கையாகச் சொல்லப்படும் மூ(த்த)தேவி, அக்கை என்பதன் விளிவடிவம்.

**அக்காளிமண்டை** - மொந்தையாகப் படைக்கப்படும் திருக்கோயில் திருச் சோறு

**அக்கி** - சூட்டினால் சிறுசிறு கொப்புளப் படலமாகத் தோன்றும் தோல்நோய்

**அக்கிரகாரம்** - பார்ப்பனச் சேரி

**அக்கிலிப்பிக்கிலி** - குழப்பம், மனக் குழப்பம்

**அக்குள்** - விலாக்குழி, கமுக்கூடு

**அகக்கண்** - உட்கண், அறிவம், உள்ளறிவு மனம், எலும்பின் உட்டுளை, புண்புரை

**அகக்கரணம்** - மதி, உள்ளம் , மனம்

**அகக்களிப்பு** - மன மகிழ்ச்சி

**அகக்காழ்** - மரத்தின் உள் வயிரம் ஆண்மரம், வயிரக்கல்

**அகக்கோளார்** - அகம்படிப் பெண்டுகள்

**அகங்கரி-த்தல்** - செருக்குதல்

**அகங்காரம்** - சினம், செருக்கு, இறு மாப்பு

**அகங்கை** - உள்ளங்கை

**அகட்டுதல்** - அகலமாகப்பரப்புதல், அகல வைத்தல்

**அகடு** - உள், உட்புறம், வயிறு, நடு, நடுநிலைமை

**அகடூரி** - வயிற்றால் நகரும் உயிரி, பாம்பு

**அகண்டம்** - பகுக்கப்படாதது, நிறைவு, முழுதும், எல்லாம், நந்தா விளக்கு

**அகண்டி** - இசைக்கருவி வகை

**அகணி** - உட்புறம், மருதநிலம், நெல்வயல்

**அகணி** - கடுக்காய் (சித்.சுக), பனை, தெங்கு முதலியவற்றின் மட்டை களின் நார், உள், உட்புறம் மரப்பட்டை

**அகத்திணை** - கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என்னும் ஏழு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ள காதலின் வொழுக்கம்

**அகத்தியம்** - கி.மு. 12-ஆம் நூற்றாண்டில், அகத்திய முனிவரால் இயற்றப் பட்டதாகக் கருதப்படும் மாபிண்டம் என்னும் முத்தமிழி லக்கணச் சார்பு நூல்

**அகத்தீடு** - எண்ணம், கையால் உள்ளணைக்கை

**அகத்துறுப்பு** - அன்பு, அருள், இரக்கம் முதலிய மனப்பண்பு, உடலின் உள்ளுறுப்பு

**அகத்தை** - தாய்

**அகந்தை** - இறுமாப்பு, செருக்கு, அகங்காரம், தன் முனைப்பு

**அகநகை-த்தல்** - இகழ்ச்சியாகச் சிரித்தல்

**அகநாழிகை** - தெய்வப் படிமை யிருக்கும் கருவறை, உண்ணா ழிகை

**அகப்பகை** - உட்பகை, ஒரு குடும்பம், இனம், வகுப்பு, அமைப்பகம், நிறுவனம், நாடு முதலியவற்றுள் ஒன்றற் குள்ளேயே தோன்றி, ஒற்றுமையைக் குலைத்துப் பகை வர்க்குக் காட்டிக்கொடுக்கும் பகை, புறப்பகைக்கு எதிர்

**அகப்பட்டி** - அகக் கட்டுப்பாடு இல்லாதவன்-ள்

**அகப்படுத்து-தல்** - சிக்க வைத்தல், பிடித்தல்

**அகப்படுதல்** - உள்ளடங்குதல், உட்படுதல், குறைதல், சிக்கிக் கொள்ளுதல், பிடிபடுதல், வசப்படுதல், கிடைத்தல்

**அகப்படுதல்** - பிடிபடுதல், மாட்டுதல், சிக்குதல் (தானாக, தாராளமாக) கிட்டுதல், கிடைத்தல்

**அகப்பரம்** - திண்ணை

**அகப்பரிவாரம்** - வீட்டு வேலைக் காரர், அரண்மனைப் பணியாளர்

**அகப்பற்று** - தன் உடம்பின் மீதுள்ள பற்றெண்ணம், சிற்றூர்ப் பங்காளிகள் அவ்வப்போது பகிர்ந்து பயன்படுத்தும் ஊர் நிலம், தொடக்கந் தொட்டுக் குளப் பாசனமுள்ள நிலம்

**அகப்பா** - கோட்டை மதில், மதிலுண் மேடை, அகழி

**அகப்பாட்டுறுப்பு** - அகப்பொருட் செய்யுளின் திணை, கைகோள், கூற்று, கேட்போர், இடம், காலம், பயன், முன்னம், மெய்ப்பாடு, எச்சம், பொருள், வகை, துறை என்னும் பன்னிரண்டு உறுப்புகள்

**அகப்பு** - ஆழம், மரப்பிளப்பிற் செலுத்தும் மரத்துண்டு, ஆப்பு, எழுச்சி

**அகப்பை** - சோறு, குழம்பு, காய்கறி முதலிய சமைத்த உணவுப் பொருள்களை முகந்து பரிமாற உதவும் நீண்ட பிடியுள்ள சிரட்டை அல்லது சிறுகலம்

**அகப்பொருட்கோவை** - களவில் தொடங்கிக் கற்பில் முடியும் அகப் பொருட்டலைவன் தலைவியரின் காதல் வாழ்க்கையை, நானூற்றிற்குக் குறையாத கட்டளைக் கலித்துறையில் கோவைபடக் கூறும் பனுவல் நூல்

**அகப்பொருள்** - நாற்பொருள்களுள் ஒன்றான இன்பம், காமவின்பம், அகத்திணையென்னும் இன்ப வொழுக் கங்கூறும் நூற்றொகுதி, அகத்திணையாகிய பொருள், உட்பொருள், வீட்டிலுள்ள பொருள்

**அகம்** - உள்ளிடம் புறம் என்பதற்கு எதிர், உள்ளடங்குகை, உடம் பினகத்துள்ள மனம், நெஞ்சம், ஆதன், மார்பு, அகப்பொருள் என்னும் காதல், எழுவகைப்பட்ட அகத்திணை, காதலால் விளையும் காமவின்பம், அகப்பொருள் பற்றிய அகநானூறு என்னும் அகவற் றொகை, வதியும் உள்ளிடங் கொண்ட வீடு, ஒரு நிலப்பகுதியின் உள்ளிடமான மருத நிலம், இடம், எங்கும் பரந்துள்ள இடமாகிய விசும்பு

**அகம்** - வீடு, இல்லம், மனம், காதலைப் பற்றிய இலக்கியம்

**அகமகிழ்ச்சி** - மனக்களிப்பு

**அகமடல்** - பாளை

**அகம்படியர்** - வீட்டு வேலை செய்வோர், உழவுத்தொழில் செய்து வரும் ஒரு குலத்தார்

**அகம்படியார்** - திருக்கோயில்களிலும் அரண்மனைகளிலும் அகத் தொண்டு செய்வோர்

**அகம்பாவம்** - அகங்காரம், திமிர்

**அகம்பு** - உள், புறம்பு என்பதற்கு எதிர்

**அகமுகம்** - உள்முகம்

**அகமுடையாள்** - மனைவி, அக முடையான் என்பதன் பெண்பால்

**அகமுடையான்** - கணவன், வீட்டுக் காரன், அகம்படியக்குலத்தான்

**அகரம்** - 'அ' என்னும் எழுத்து, மருத நிலத்து ஊர் ,தேர்

**அகரம்** - வெள்ளெருக்கு

**அகரமுதலி** - அகராதி அகரத்தில் தொடங்கி, ஒரு மொழியின் எல்லாச் சொற்களையும், அல்லது பெரும்பாற் சொற்களையும் வண்ணமாலை வரிசைப்படுத்திப் பொருள் கூறும் சொற்பொத்தகம் (இச்சொல்லை உருவாக்கியவர் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்)

**அகராதி** –அகரவரிசைப்படி சொற்களின் பொருள் கூறும் நூல், அகரமுதலி

**அகராதிக்கலை** - அகரமுதலித் தொகுப்புக்கலை

**அகல்** - ஓரிடத்ததிலிருந்து நகர்தல், நினைவு, நோய், வலி, முதலியவற்றி னின்று நீங்குதல், விரிதல், எண்ணெய், திரியிட்டு விளக்கேற்று வகையில் அமைந்த குழிவு நிறைந்த சிறுவட்டு, விரிவு, பரப்பு, அல்குல், வாயகன்றகலமான சட்டி, விளக்குத் தகழி, ஓர் அளவு, உள்ளூர், ஊரின் உட்புறம், நாடு, பெருமரம்

**அகல்(லு)-தல்** - விரிவடைதல், ஆக்கமுறுதல், பெருகுதல், வளர்ச்சி யடைதல், நீங்குதல், பிரிதல், கடத்தல், நைந்து கிழிதல்

**அகல்வு** - அகலம், அடர்த்தியின்மை, நீங்குகை

**அகல்வோர்** - விலகியிருப்பவர், தீண்டாதார்

**அகலக்கால்வை-த்தல்** - செலவு, வினை முயற்சி முதலியவற்றில் அளவுகடந்து போதல்

**அகலவுழு-தல்** - மேலாக உழுதல்

**அகலறை** - பாசறை, மலைப்பக்கம்

**அகலன்** - பருத்தவன், தீண்டாதவன்

**அகலிடம்** - அகன்ற இடமாகிய ஞாலம்

**அகலுள்** - அகலம், பெருமை, அகன்ற தெரு, ஊர், நாடு, ஞாலம்

**அகவர்** - வைகறையிற் பாடி அர– சனைத் துயிலெழுப்பும் பாணர்

**அகவல்** - மயிற்குரல், ஆசிரியப்பா, கூவுதல், அழைத்தல், ஆடல், பாடுதல்

**அகவல்** - மயிற்குரல், அழைக்கை, பாடல், நடஞ்செய்தல், எடுத்த லோசை, அகவற்பாவிற்குரிய ஓசை, ஆசிரியப்பா

**அகவலோசை** - ஆசிரியப் பாவிற் குரிய ஓசை

**அகவற்சீர்** - ஆசிரியப்பாவிற்குரிய இயற்சீர்கள்

**அகவற்பா** - அகவலோசையுடைய ஆசிரியப்பா

**அகவன்மகள்** - பாணமகள்

**அகவாட்டி** - மனையாள், இல்லக் கிழத்தி

**அகவிலை** - தவசவிலை

**அகவு-தல்** - மயில் அகவுதல், பாடுதல், நடஞ்செய்தல், நெடுமை யாதல், அழைத்தல்

**அகவுதல்** - மயிலின் குரல் எழுப்பல், ஒலித்தல், பாடுதல், அழைத்தல், ஆடல்

**அகவை** - உள்ளிடம், உட்பட்ட பருவம், ஆண்டுப்பருவம்

**அகழ்தல்** - தோண்டுதல் ,பிடுங்குதல், அடியோடு களைதல்

**அகழ்-தல்** - தோண்டுதல், பிடுங்குதல், அடியோடு களைதல், மூலத்தோடு நீக்குதல்

**அகழான்** - வளை தோண்டும் வயலெலி அல்லது காட்டெலி

**அகழி** - கோட்டையைச் சூழ்ந்துள்ள பாதுகாப்பு நீர்க்கிடங்கு, வாயகன்ற கலம், கிடங்கு

**அகழெலி** - வளை தோண்டும் எலி

**அகளம்** - சாடி, மிடா, நீர்ச்சால், யாழின் பத்தர்

**அகற்சி** - அகலம், பிரிவு, துறவறம்

**அகற்றம்** - பரப்பு

**அகற்றல்** - மந்திர வலிமையால் ஒருவரை ஓரிடத்தினின்று நீங்கச் செய்தல்

**அகற்றுதல்** - நீக்குதல், அப்புறப் படுத்துதல் வெளியேற்றுதல், விரிவுபடுத்துதல், பெருகச்செய்தல், நீக்குதல்

**அகறல்** - அகலம், கடத்தல், நீங்கல்

**அகன்** - உள், மனம், காதல்

**அகன்றில்** - ஆண் அன்றில்

**அகாலச்சாவு** - இளமை சாவு அல்லது மூப்பிற்கு முந்திய சாவு

**அகாலம்** - தகாத அல்லது உரிய காலமல்லாத காலம்

**அகில்** - ஒருவகை நறுமண மரம்

**அகைத்தல்** - எழுதல், கிளைத்தல், உயர்த்துதல், செல்லுதல்,அறுத்தல், முறித்தல், வலிய மலர்த்துதல், தளிர்த்தல், விட்டு விட்டுச் செல்லுதல்,மலர்த்துதல், ஒடித்தல், அடித்தல், இழுத்தல்.

**அகைத்தல்** - கிளைத்து எரிதல், வருந்துதல், தாழ்தல், ஒடிதல், முறித்தல், தழைத்தல், தளிர்த்தல், செழித்தல், மலர்தல், வருந்துதல், காலந் தாழ்த்துதல், செல்லுதல்

**அகைப்பு** - வருத்தம், முயற்சி, மனத் திட்பம்

**அகையாறு** - கிளையாறு

**அகைவாய்க்கால்** - கிளைவாய்க்கால்

**அங்கண்** - அவ்விடம், அழகிய கண், கண்ணோட்டம்

**அங்கணம்** - சாய்கடை (சலதாரை) சேறு, இரு தூண்களுக்கிடைப்பட்ட இடம், முற்றம், உள் அறை, கட்டடப்பிரிவு, நான்கு தூண்களுக் கிடைப்பட்ட இடம், மனைக்குரிய 72 சதுர அடி நிலப் பரப்பளவு, இடம்

**அங்கதம்** - வசை, பழிப்பு, பொய்

**அங்கம்** - கட்டில்

**அங்கமணி** - மணப்பெண் கணவன் வீட்டிற்குத் தன்னுடன் கொண்டு செல்லும் சீர்வரிசை

**அங்கயற்கண்ணி** - மதுரையிற் கோயில் கொண்டிருக்கும் மீனக் கண்ணி (மீனாட்சி)யம்மை

**அங்கலாய்த்தல்** - துயருறுதல், பொறாமைக் கொள்ளுதல்

**அங்காடி** - கடை,கடைத்தெரு

**அங்காடி பாரித்தல்** - மனக்கோட்டை கட்டுதல்

**அங்காத்தல்** - வாய் திறத்தல்

**அங்குசம்** - யானை துறட்டி, வாழை

**அங்கை** - அகங்கை, உள்ளங்கை

**அச்சகம்** - நீர்முள்ளி, அச்சுக்கூடம்

**அச்சடி-த்தல்** - உருக்கெழுத்தைப் பதித்தல், முத்திரையைப் பதித்தல்

**அச்சடையாளம்** - அடிமை யென்பதைக் காட்டும் சூட்டுக்குறி, முத்திரையச்சுருவம், உறுப்பொப்பு மை

**அச்சம்** - வெரு (பயம்), சரிசமானம், கரடி, கோரைப்புல், தகடு, பளிங்கு, முன்புறம், சன்னம்

**அச்சன்** - தந்தை, கடவுள்

**அச்சாணி** - கடையாணி

**அச்சி** - தாய், அக்கை, நாயர்குலப் பெண், ஒரு பெண்பாலீறு

**அச்சு** - உருள்கோத்த மரம், கட்டளைக் கருவி, எந்திர அச்சு, கம்பியச்சு, குத்தும் முத்திரை, சரியொப்பு, அடையாளம், அச்சுக் கட்டு, அச்சுருவாணி, திரிகை யச்சு, தாங்கல், வலிமை, மூலவுருவம், உடம்பு, செய் வரம்பு, அச்சுக் கட்டின நிலம்

**அச்சுத்தாலி** - காசுமாலை

**அசட்டன்** - குற்றமுள்ளவன், கீழ் மகன்

**அசட்டுச்சிரிப்பு** - மடத்தனமான சிரிப்பு

**அசட்டை** - மதியாமை, பாராமுகம்

**அசடு தட்டுதல்** - அறியாமை வெளிப் படல்

**அசதி** - அயர்ச்சி, மறதி, களைப்பு, சோர்வு

**அசல்** - அண்டை, பக்கம், முதலீட்டு முதல்

**அசலம்** - மலை, அசையாதது

**அசா** - தளர்ச்சி, வருத்தம்

**அசுணம்** - இசையறியும் புள்

**அசும்பு-தல்** - ஒழுகுதல், பரவுதல், வழுக்குதல்

**அசை** - செய்யுளுறுப்பு, மாடுகள் மீட்டு மெல்லும் இரை, தூக்குதல், செயலுறவு

**அசைத்தல்** - கட்டுதல், இயக்குதல், சொல்லுதல்

**அசைதல்** - ஆடுதல், துடங்குதல், துவளுதல், தளர்தல், சோம்பல், இருத்தல், தங்குதல், துவளுதல், வருந்துதல்

**அஞ்சல்** - பயப்படல், கலங்கல், மடல்

**அஞ்சலர்** - பகைவர்

**அஞ்சி** - அதியமான், தலைவன்

**அஞ்சுகம்** - கிளி

**அஞ்செவி** - உட்செவி

**அஞ்ஞை** - அன்னை

**அஞர்** - சோம்பல், துன்பம், நோய், வழுக்கு நிலம்

**அஞல்** - கொக்கு

**அஞலம்** - கொசுகு, மின்மினி, நுளம்பு

**அட்டக்கரி** - மிகக்கருப்பு, மிகக் கருப்பானது

**அட்டணை** - குறுக்கமடித்தல்

**அட்டணைக்கால்** - கால்மேலிடுங்கால்

**அட்டலாகம்** - கோட்டை மேல் காவற் கூடம்

**அட்டவணை** - வரிசைக்குறிப்பு

**அட்டாணி** - கோட்டை மதில் மேல் மண்டபம்

**அட்டாலை** - பரண்

**அட்டி** - தடை, தாழ்த்தல், இட்டு

**அட்டிகை** - கழுத்தணி

**அட்டில்** - சமையலறை

**அட்டு** - பனாட்டு, சமைத்தது

**அட்டுதல்** - வார்த்தல், குற்றுதல், இடுதல், வடிதல்

**அட்டுழியம்** - கொடுந்தீம்பு

**அட்டை** - நிலம், நீர்வாழ் உயிரி, புழுப்போன்றதுமான ஓர் ஊருயிரி, பொத்தக மேலுரை, துலாக்கட்டை, தலையில்லா முண்டம், செருப்பின் தோலட்டை, பொத்தகக்கட்ட அட்டை

**அடக்கம்** - அடங்குகை, வரம்புக்குள், ஒடுங்குதல், வாங்கின விலை, ஒரு தோல் கருவி, புதைத்தல்

**அடக்கல்** - மறைத்தல், பணியச் செய்தல்

**அடக்கு** - அடங்கச்செய், கீழ்ப்படுத்து, சுருக்கு

**அடக்கு முறை** - கண்டித்து அடக் குகை, வலிய ஒடுக்குதல்

**அடகு** - இலைக்கறி, கீரை, வெற்றிலை, ஈடு, மகளிர் விளையாட்டு வகை

**அடங்கல்** - சுருங்கல், அடங்குகை, நெருங்குதல்

**அடங்காப்பிடாரி** - எவர்க்கும் அடங்காதவன்-ள்

**அடங்கார்** - பகைவர்

**அடசுதல்** - செறிதல், சிறிது விலகுதல்

**அடம்** - விடாப்பிடி, பிடிவாதம், பொல்லாங்கு

**அடம்பு** - கொடி வகை

**அடர்** - நெருக்கம், நொய்ம்மை, தகடு, இதழ், ஐயம்

**அடர்த்தி** - நெருக்கம்

**அடரார்** - பகைவர்

**அடல்** - வலிமை, வெற்றி, கொல்லுதல்

**அடலை** - துன்பம், போர், நீறு, சுடுகாடு

**அடவி** - காடு,மலை சேர்ந்த நாடு, மிகுதி

**அடா** - இகழ்வு, வியப்புகளின் குறிப்பு, அடக்கி

**அடாபிடித்தனம்** - வன்செயல் தன்மை

**அடார்** - விலங்குகளை அகப்படுத்தும் பொறி

**அடாவடி** - கொடும்பேச்சு, கொடுஞ் செயல்

**அடி** - களவு, காலடி, ஆதி, தாக்கு, கீழ், மகடூஉ முன்னிலை, செருப்பு, செய்யுள் உறுப்புகளில் ஒன்று

**அடி நாள்** - முதல் நாள், ஆதிகாலம்

**அடி பறிதல்** - வேரோடு எடுத்தெறிதல், பிடுங்குதல்

**அடிக்கடி** - திரும்பத்திரும்ப

**அடிக்கணை** - கணைக்கால்

**அடிக்கலம்** - சிலம்பு, அடிக்க மாட்டோம், காலணி, கப்பல்தளம்

**அடிக்காயம்** - அடியாலுண்டாகும் காயம்

**அடிக்காற்று** - பெருங்காற்று, புயல்

**அடிக்கீழ்** - அடியுரைமாக்கள், வணக்க மொழி, அடியுறுறை

**அடிக்குச்சி** - அளவுகோல்

**அடிகள்** - ஆசாரியர், முனிவர், கடவுள்

**அடிச்சால்** - உழவின் முதல்சால்

**அடிச்சுவடு** - காலடிச்சுவடு, காலடித்தடம்

**அடிச்சூடு** - பாதத்தில் உறைக்கும் வெப்பம்

**அடிச்செருப்பாதல்** - அடிமைப்பட்டு உழைத்தல்

**அடிச்சேரி** - பணியாளர் குடியிருப்பு

**அடிசாய்தல்** - அடியின் நிழல் சாய்தல்

**அடிசில்** - சோறு, உணவு

**அடிசிற்பள்ளி** - மடைப்பள்ளி

**அடிசிற்புரம்** - உணவுக்கான, இறையிலி நிலம்

**அடிசிற்விலை** - உணவுச்சத்திரம்

**அடிசிற்றளி** - மடைப்பள்ளி

**அடிசீப்பு** - வாழைக்குலையின் முதல் சீப்பு

**அடித்தடம்** - அடிச்சுவடு

**அடித்தளம்** - கீழிடம், அத்திவாரம், அடிவரிசை, அடிமட்டம்

**அடித்தூறு** - மரத்தின் அடிக்கட்டை

**அடித்தொழில்** - குற்றேவல்

**அடிதடி** - சண்டை, கை கலப்பு

**அடிபடுதல்** - பழைமையாதல், தாக்குண்ணுதல், நீக்கப்படுதல்

**அடிமுடி** - காலுந்தலையும், பாத முந்தலையும், ஒழுங்கு, தொடக் கமும் முடிவும், வரலாறு

**அடிமை** - தொழும்பு, பிறருக்குக் கட்டாயத் தொண்டு செய்யும் நிலைமை, அடிமையாள், தொழும் பன், தொண்டன், இறையடியான்

**அடியந்தாதி** - ஒரு செய்யுளின் ஓரடி அடுத்தவடியாகவேனும், ஒரு செய்யுளின் ஈற்றடி அடுத்த செய்யுளின் முதலடியாகவேனும் அமையுமாறு தொடுக்கப்படுவது

**அடுக்கல்** - ஒன்றன்மேலொன்றாக வைத்தல், அடுக்கு, குவியல், படை படையாய் அமைந்த மலை

**அடுக்காழி** - மணிக்கல் பதிக்கப்பட்ட கணையாழி (மோதிரம்)

**அடுகலன்** - சமையற்கலம்

**அடுகளம்** - போர்க்களம்

**அடை** - கோழி அடைகாத்தல், பொருந்துகை, சேர்ப்பிக்கை, அடைக்கலம், சன்னமான அப்ப வகை, வெற்றிலை, தாங்கி, கரை, வழி, அடைமொழி, பண்புச்சொல், விலை, கருக்கு, தேனடை

**அடையலர்** - பகைவர்

**அடையாளம்** - அறிகுறி, நோய்க்குறி

**அண்டை** - அண்மை, அயல், பக்கம், ஓட்டையடைக்கும் ஒட்டு, முட்டு, வரப்பு, நீர் தூவுங்கருவி, ஒரு கட்டியின் அல்லது காயத்தின் விளைவாக மற்றோரிடத்தில் தோன்றும் வீக்கம்

**அண்ணம்** - மேல்வாய், உண்ணாக்கு, அண்ணாக்கு

**அணங்கு** - வருத்தம், வருந்துதல், கொலை, அச்சம், நோய், காம நெறியால் உயிர்கொள்ளுந் தெய்வ மகள், வருத்திக் கொல்லுந் தெய்வ மகள், கொல்லிப் பாவை, தெய்வம், தெய்வ மகள், தெய்வத்தன்மை, அழகு, வடிவு, மையல்நோய், ஆசை, வெறியாட்டு, சிவ ஆற்றல், அழகிய பெண், பெண், பேய்மகள், பேய், சண்டாளன், ஆளியின் குட்டி

**அணத்தான்** - ஓணான்

**அணி** - அழகு, அணிகலம், ஒப்பனை, சொல்லணி பொருளணியென்னும் இரு வகையிலக்கிய அழகு, அணியிலக்கணம், தொழிற்கருவி, வழிப்போக்கு, போர் முதலிய வற்றிற்குரிய பூட்டுப் பொருத்துகள், கோலம், அடுக்கு, திரள், கூட்டம், பெருமை, வரிசை, ஒழுங்கு, பூமாலை, படையுறுப்பு, அழகு தோன்றும் முகம், இனிமை, நன்மை, அன்பு, தேரின் அச்சாணி, அண்மை, எல்லை, நுணா, முப்பத்தைந்தைக் குறிக்கும் குழூஉக்குறி, ஓர் உவமஉருபு

**அணிகலம்** - நகை, நகைப்பெட்டி, கம்மாளர் கருவி

**அணியம்** - உடனே வினைதொடங்கற் கேற்ற நிலை, கப்பலின் முன்பக்கம், துணைக்கருவி, ஆட்டின் தலை

**அணியல்** - வரிசை, மாலை, அழகு செய்கை

**அணு** - நுண்மை, பகுக்க முடியாவாறு நுண்மையானது, ஆதன், நுண்ணுடம்பு, நுண்ணாற்றல் வடிவம், மந்திரம், பொடி, தினை, வரகு

**அதட்டு** - வெருட்டும் ஓர் உரத்த ஒலி அல்லது சொல்

**அதர்** - சிறுகல், நுண்மணல், புழுதி, மருந்துக் கசடு

**அதிகாரம்** - அதிகரித்தல், உடைமை, உரிமை, ஆட்சி, பதவி வலிமை, தலைமை, நூற்பெரும் பிரிவு, நூல், முறைமை, தகுதி, அமையம், கூற்றம், நாட்டுப்பிரிவு, இடம்

**அதிகாரி** - கேள்வித்தலைவர், அரசியல் அலுவலர், மேலதிகாரி, ஓர் அதிகாரத்தின் தலைமையலுவலன், பெருவுடையார், உரிமையுள்ளவன், ஒரு படிப்புத் துறையில் அல்லது ஒரு நூலறிவில் தேர்ச்சிபெற்றவன், ஒரு நூலைக் கற்கத் தகுந்தவன்

**அதிர்** - நடுக்கம், அச்சம், கடுவிலை

**அதிர்ச்சி** - அசைவு, அதிகப்படுதல், நடுங்குகை, அச்சம், பேரோசை, பிளிறல், உரறல், மின்வலியால் நரம்பிற்கும், கடுந்துயரச் செய்தியால் மனத்திற்கும் ஏற்படும் திடுந்தாக்கு

**அந்தணன்** - அழகிய அருளாளன், முனிவன், துறவி, அறவோன், தூயோன், பார்ப்பனன், பிராமண வகை நாகம், நான்முகன், சிவன், அருகன், கடவுள், வியாழன், காரி, ஒரு சிறந்த முழுத்தம்

**அப்பு** - பூசுதல், சாத்துதல், ஒற்றுதல், தாக்குதல், அறைதல், கும்முதல், கவ்வுதல், வாயில் திணித்தல், கொட்டுதல், ஐம்பூதங்களுள் ஒன்றான நீர், கடல், பனிக்குடத்து நீர்

அம்பல் - பூ அலர்வதற்குச் சிறிது முன்னுள்ள நிலை, சிலர் கூறும் புறங்கூற்று, சிலரறிந்து தம்முட் கூறும் களவுக் காதற் செய்தி, பழிச்சொல்

**அம்பனம்** - வாழை

**அம்பியம்** - கள்

**அம்பிலி** - கேழ்வரகின் கூழ்

**அம்பு** - நீர், கடல், முகில், குடிநீர், நீர் சூழ்ந்தவுலகம், தளிர், வாளி, ஒருவகைக் கனிய நஞ்சு, வளையல்

**அம்புலி** - சோளக்கூழ்

**அம்போதரங்கம்** - அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாவின் ஐந்துறுப்புகளுள் ஒன்றும், வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவின் ஆறுறுப்புகளுள் ஒன்றுமாக அமைவதும், ஈரள வடியும் ஓரள வடியும் சிந்தடியும் குறளடியுமாக உயர்ந் தெழுந்து வரவரச் சுருங்கும் கடற் கரையலை போல் வரவரக் குறைவது மான செய்யுளுறுப்பு

**அம்மானைப்பருவம்** - பெண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பனுவற் பருவங்கள் பத்தனுள் ஒன்று

**அமதி** - அறிவின்மை, சமையம், காலம்

**அமர்** - விருப்பம், அன்பு, போர்க்களம், கோட்டைமதில், வெறி, நோய்க் கடுமை, காய்ச்சலின் மும்முரம்

**அமர்க்களம்** - போர்க்களம், குழம்பிய ஆரவாரம்

**அமர்-தல்** - இருத்தல், இளைப் பாறுதல், படிதல், பொருந்துதல், பொலிதல், விளக்கணைதல், ஏற்றதாதல், திட்டமாதல், வேலையிற் சேர்தல், மகிழ்தல், நெருங்குதல், ஒப்பாதல், விரும்புதல், செய்தல், மேற் கொள்ளுதல், நேசித்தல், காமமுறுதல்

**அமரி** - சிறுநீர், போர்த்தெய்வமான காளி

**அமல்** - நிறைவு

**அமளி** - மிகுதி, ஆரவாரம், மக்கட் படுக்கை, கட்டில், பள்ளியறை

**அமிர்தகுணம்** - சிறந்தகுணம்

**அமிழ்தம்** - உணவு, உயிர்மருந்து, முலைப்பால், ஆவின்பால், தீங்குடிப்பு

**அரக்கன்** - அசுரன்

**அரங்கம்** - திருவரங்கம், நாடக மேடை, நாடகசாலை, அவைக் களம், அவை, சூதாடுமிடம், படைக் கலம் பயிலுமிடம், சிலம்பக்கூடம், மற்போர்க்களம், போர்க்களம், கமுக்கம்

**அரசன்** - ஆள்வோன், வன்னியன், வியாழன், பூவரசு, கோவைக்கொடி

**அரட்டல்** - அச்சுறுத்தல்

**அரண்** - வலிமை, காப்பு, தற்காப்பு, கோட்டை, சுற்றுமதில், காப்பான இடம், மார்புக்காப்பான அல்லது உடற்காப்பான கவசம், வேல், அழகு

**அரத்தம்** - சிவப்பு, சிவந்த பொருள், குருதி, பவளம், அரக்கு, செம்பு, செம்பருந்து, செந்தாமரை, செம் பருத்தி, செம்பரத்தை, செங்கழுநீர், செங்குவளை, செங்கடம்பு, குங்கு மப்பூ, ஒருவகைத் துகில், செம் மெழுகு, செம்பொட்டு, செம்பொன், செம்மஞ்சள், செம்பஞ்சுக் குழம்பு

**அரம்** - நாகருலகம், கீழுலகம், குகை

**அரல்** - கோழை, முதலாளி

**அரிமா** - சிங்கம், ஒட்டுமாமரம்

**அரிமாநோக்கம்** - முன்னும்பின்னு முள்ள நூற் பாக்களொடு பொருள் தொடர்பு கொள்ளும் நூற்பா நிலை, நாவல் வகையுள் ஒன்று

**அருகன்** - தோழன், புத்த தெய்வம்

**அருட்பா** - தேவாரம் திருவாசகம் போல இறைவன் ஏவியெழுப்பலாற் பாடப்பட்ட செய்யுள் அல்லது பாட்டு, வள்ளலார் இராமலிங்க அடிகளின் பாடல், திருவருட்பா

**அருணன்** - எழுங்கதிரவன், அறிவன், ஏகம்பச்சாரம்

**அருந்திறல்** - அரிய திறமை, அரிய திறமையுடையவன்

**அரும்பொருள்** - பெறுதற்கரிய பொருள், விலையுயர்ந்த பொருள், பெருஞ்செல்வம், எளிதில் விளங்காத பொருள், தென் புலத்தார் / நீத்தார்

**அருவருப்பு** - மிக வெறுப்பு

**அருவாநாடு** - இடைக்காலப் பன்னிரு கொடுந்தமிழ் நாடுகளுள் ஒன்று, தென்னார்க்காடு என்று முன்பு பிரிந்திருந்த மாவட்டத்திலொரு பகுதியும் வடார்க்காடு மாவட்டத் திலொரு பகுதியுஞ் சேர்ந்த நிலப் பாகமாகத் தெரிகின்றது.

**அருவி** - மலையினின்று விழும் நீர் வீழ்ச்சி, ஆறு, கழிமுகம், நீரூற்று, நீர், ஒழுங்கு, மலை

**அரை** - இடை, பாதி, நடு, வயிறு, அல்குல், கருவாய் தொடையின் மேற்பாகம், தண்டு, மரத்தின் அடிப்பாகம், இடம்

**அரைகுறை** - போதாமை, வினை முடியாமை, முற்றுப்பெறாமை

**அரைஞாண்** - ஆண் மக்கள் அரையிற் கட்டுங்கயிறு, அரையணி, கிணற்றின் செங்கல் வரை

**அல்** - கதிரவன், வெயில், சுக்கு, விறகு, சூட்டினாலுண்டாகும் வயிற்றுளைச்சல் அல்லது வயிற்றோட்டம்

**அல்லங்காடி** - மாலைக் கடைத்தெரு

**அல்லல்** - துன்பம்

**அல்லவை** - தீவினை, பயனற்றவை

**அல்லாப்பு** - வருத்தம்

**அல்லி** - இரவு, ஆம்பல்,வெள்ளாம்பல், தாமரை, அல்லியரிசி, அகவிதழ், பூந்தாது

**அல்வழி** - நெறியல்லா நெறி, தகாத நெறி,தீயநெறி,சொற்புணர்ச்சியின் வேற்றுமையல்லாத வழி

**அலகு** - கூர்மை, படைக்கலம், பறவை மூக்கு, குறடு, உயிரிகளின் கொடிறு, தாடை எலும்பு, கைம்மரம்

**அலர்** - மலர்ந்த பூ, பூமாலை, இரு காதலர் களவொழுக்கத்தைப் பலரறிந்து வெளிபடையாகக் கூறும் பழிக்கூற்று, பழிச்சொல், நீர், மகிழ்ச்சி, மிளகு, மஞ்சள்

**அலரி** - பூ, அழகு, ஒரு பூச்செடி, நறுமணம், ஆற்றுப்பாலை, ஒருமரம், தேனீ, நீர்நிலை

**அலவல்** - பெண்டிரின் கற்பில்லா ஒழுக்கம், இழைவிலக்கமாய் நெய்யப்பட்டது

**அலி** - ஆணும் பெண்ணுமல்லாது இரண்டிற்கும் பொதுவான மாந்தப் பிறவி

**அலியெழுத்து** - ஆயுதம்

**அலைக்கழித்தல்** - அலைத்து வருத்துதல், கெடுத்தல், அழகு காட்டுதல்

**அவம்** - கேடு, வீண் பயனின்மை, வானத்தாமரை

**அவர்** - பலர் பார்த்த சேய்மைச் சுட்டுப்பெயர், ஒருவரைக் குறிக்கும் உயர்வுப் பன்மைச் சொல்

**அவல்** - பள்ளம், விளைநிலம், குளம், நெல்லை ஊறவைத்து வறுத்திடித்த

தின்பண்டம்

**அவலம்** - வலியின்மை, நோய், துன்பம், அழுகை, வறுமை, கவலை, மாயை

**அவா** - ஆசை

**அழுகம்** - ஒருவனைப்போல் நடித்து ஏளனம் செய்தல்

**அழகு** - எழில், சிறப்பு, நற்குணம், இன்பம், இளமை, பாட்டின் எண் வகையான வனப்புகளுள் ஒன்று

**அழல்** - தீ, நெருப்பு, சூடு, காய்ச்சல், நரகம், செவ்வாய், ஆரல், கேட்டை, எரிவு, உறைப்பு, நஞ்சு, எருக்கு, கள்ளி, கொடுவேலி

**அழறு** - சேறு

**அழனீர்** - தென்னங் கள்

**அழி** - கேடு, வைக்கோல், வருத்தம், இரக்கம், மிகுதி

**அழிச்சாட்டியம்** - அழிம்பு, தீம்பு

**அழிபசி** - கடும்பசி

**அழுக்காறு** - பொறாமை

**அழுவம்** - ஆழம், குழி, கடல், பரப்பு, பெருமை, மிகுதி, முரசு, நடுக்கம்

**அள்** - கூர்மை, நீர்முள்ளி, வாண்முள்ளி, பெண்பாலீறு

**அளபெடுத்தல்** - செய்யுள் வழக்கிலும் உலக வழக்கிலும் எழுத்து மாத்திரை மிக்கொலித்தல்

**அளவடி** - பத்து முதற் பதினாக்கு வரை உயிரும் உயிர்மெய்யுமான எழுத்துகளைக் கொண்ட நாற்சீர்க் கட்டளையடி

**அளவியல்** - பாவின் அடிவரையறை

**அளவு** - எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நால்வகையளவுகளுள் ஒன்று, மட்டு, மாத்திரை, தாளத்தில் 3 மாத்திரைக்காலம், அறிவகம், மட்டும், இடை, தொடங்கி

**அளவையாகுபெயர்** - எண்ணல், எடுத்தல் முதலிய நால்வகை அளவைப் பெயர்களுள் ஒன்று, அவ்வளவை யுடைய பொருளுக்கு ஆகிவருவது

**அளறு-தல்** - நெரிதல், பிளத்தல், சிதறி வெடித்தல்

**அளி** - அன்பு, அன்பு காரணியத்தால் தோன்றும் அருள், அன்பினா லுண்டாகும் ஆசை, அருள் போன்ற குளிர்ச்சி, அன்பினால் நிகழுங்கொடை, அன்போடு கூடிய வேளாண்மை மதிப்புரவு, அருளினால் அல்லது அன்பினால் இரங்கத்தக்க எளிமை

**அற்கம்** - அடக்கம்**அற்கம்** - அடக்கம்

**அற்றம்** - நீங்குகை, இடைவிடுகை, ஆடை நீங்கிய நிலை, அவமானம், ஆள் நீங்கிய சமையம், பொய், வறுமை, கேடு, அழிவு, அச்சம், வருத்தம், சோர்வு, மெலிவு, அறுதி, முடிவு

**அற்றைக்கூலி** - அன்றன்று பெறும் நாட்கூலி

**அறக்கழிவு** - உலக வழக்கத்திற்குப் பொருத்தமில்லாமை

**அறக்கற்பு** - அமைதி நிலையுள்ள கற்பு, மறக்கற்பு என்பதற்கு எதிர்

**அறக்காடு** - சுடுகாடு

**அறங்காவல்** - கோவில், சத்திரம் முதலியன காக்குந்தொழில்

**அறத்தொடுநிற்றல்** - தோழி தலைவியின் களவொழுக்கத்தைச் செவிலிக்கும் பெற்றோர்க்கும் படிமுறையாய் அறிவித்தல்

**அறநெறி** - அறவொழுக்க நெறி, நன்னெறி, ஊசலாங்கொடி

**அறம்** - நல்வினை, ஐயம், ஏழைகட்கு இலவயமாகக் கொடுப்பது, நேயாளிகட்கு இலவயமாக மருந்தீகை, நலமானது, இன்பம், தகுதியானது, கற்பு, நோன்பு, அறப்பயன், சமயம், ஓதி, அறச்சாலை, அறத்தெய்வம், நடுநிலையறம் பேணும் கூற்றுவன்

**அறவுரை** - அறவியல் அல்லது சமயவியல் அறிவுரை

**அறன்** - நல்வினை, எளியார்க்கீதல், மனத்தூய்மை, சமயம், வேள்வி முதல்வன்

**அறிதுயில்** - அறிவு அல்லது உணர்ச்சி குன்றாது தூங்குந் தூக்கம், ஓகத்தூக்கம், விழிப்பொடு தூங்கும் ஒரு நோய்

**அறியாமை** - மடமை

**அறுகால்** - ஆறுகாலுள்ள வண்டு, தேனீ, பாம்பு

**அறுதல்** - கயிறு முதலியன இறுதல், உண்டது செரித்தல், கருமங் குதிர்தல், நீங்குதல், பிரிதல், நோய் முதலியன இல்லாமற்போதல், பாழ்படுதல், முடிதல், தாலி நீங்குதல்

**அறுபொருள்** - பகுப்பற்று ஒன்றாய் எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருள், பெயர்ச்சொல்லாற் குறிக்கப்படும் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பொருள்கள், வினைச்சொல்லுணர்த்தும் வினைமுதல், கருவி,

**அறுபொழுது** - கதிரவன் தோற்றம் முதல் பப்பத்து நாழிகை கொண்ட நாட் பிரிவுகளாகிய காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை என்னும் அறுவகைச் சிறுபொழுதுகள்

**அறுவகைத்தானை** - வேற்றானை, வாட்டானை, விற்றானை, தேர்த்தானை, பரித்தானை, களிற்றுத் தானை என்னும் அறுவகைப் படைகள்

**அறைகூவல்** - பொதுநலத்துக்கு ஒத்துழைக்குமாறு அழைக்கும்

அழைப்பு, உண்மை என்று நிறுவுமாறு அழைக்கும் அழைப்பு (சவால்)

**அறைகூவுதல்** - போருக்கழைத்தல், வலியக் கூவியழைத்தல்

**அன்புடைக்காமம்** - ஐந்திணையுந் தழுவும் இருதலைக் காதல்

**அன்மொழித்தொகை** - வேற்றுமைத் தொகை முதலிய ஐந்தொகைகளுள் ஒன்றன்மேல் வேறொரு சொல் தொக்கு அடையடுத்த ஆகுபெயர் போல் வரும் இருசொற்றொடர்

**அன்றில்** - ஆணும் பெட்டையும் இணைபிரியாததும், அவற்றுள் ஒன்றிறப்பின் மற்றொன்றும் உடனிறப்பதும், ஒருவரையொருவர் இன்றியமையாக் கணவனும் மனைவி யுமான காதலர்க்கு உவமையாக இலக்கியத்திற் கூறப்படுவதுமான கிரௌஞ்சப் பறவை

**அனிச்சம்** - ஒருமுறை மோந்தாலே வாடிவிடும் பூ வகை

**அனையன்** - அத்தன்மையன், ஒத்தவன்

**ஆ** - வியப்பைக் குறிக்கும், விட்டிசைச் சொல், தமிழ் வண்ண மாலை

**ஆ** - பசுப்பொது, வகை, ஆச்சாமரம், (வரை, அற்பம், மறுப்பு, சோறு, மாமரம், நினைவு, சம்மதம், நிந்தை, துயர், வியப்பு, இரக்கம், வினை முதலிய பொருள்களைக் குறிக்கும் இடைச்சொல்)

**ஆஅ** - வியப்பிடைச்சொல்

**ஆக்கம்** - உண்டுபண்ணுகை, பெருக்கம், உயர்வு, நுகர் பொருள், செல்வம், பொன், பருவம், ஆசி, கொடிப்படை

**ஆக்கல்** - சமைத்தல், செய்தல், படைத்தல், பழக்கல்

**ஆக்கியோன்** - செய்தோன், ஆசிரியன்

**ஆக்கை** - யாக்கை, உடம்பு, கழிகளைக் கட்டும் கயிறு

**ஆகம்** - உடல், மார்பு, நெஞ்சு

**ஆகமம்** - முதல்வன் வாக்கு, தரும நூல்

**ஆகமனம்** - வந்து சேருதல்

**ஆகரம்** - சுரங்கம், உறைவிடம்

**ஆகலூழ்** - ஆகூழ்

**ஆகாசம்** - வான், வெளி

**ஆகாயம்** - ஆகாசம்

**ஆகாறு** - பொருள் வரும் வழி

**ஆகு** - பெருச்சாளி, கொப்பூழ்

**ஆகுதல்** - செல்வம் பெறுதல், பயன்படுதல், மேலாதல், விளைதல், உண்டாகுதல், வளர்தல்

**ஆகுதி** - ஓமத்தீயில் நெய் விடுதல்

**ஆகுபெயர்** - ஒன்று மற்றொன்றுக்குத் தொன்று தொட்டு ஆகி வரும் பெயர்

**ஆகுலம்** - ஆரவாரம், மனக்கலக்கம், துன்பம்

**ஆகுளி** - சிறுபறை

**ஆகூழ்** - நல்வினைப்பயன்

**ஆகேறு** - சரக்கொன்றை

**ஆகோள்** - பசுக்கவர்தல்

**ஆங்க** - (ஓர் உவமையசைச் சொல்)

**ஆங்கண்** - ஊர், அவ்விடத்து

**ஆங்காரம்** - அகங்காரம்

**ஆங்கு** - அவ்வாறு, அவ்விடம், அக்காலத்து, (ஓர் அசைச்சொல்)

**ஆச்சல்** - பாய்ச்சல், அசைதல்

**ஆச்சாட்டுப் பயிர்** - சிறிது ஈரமுள்ள நிலத்துப்பயிர்

**ஆச்சி** - தாய்

**ஆச்சியம்** - நெய்

**ஆச்சிலை** - கோமேதகம்

**ஆசத்தி** - பற்று

**ஆசந்தி** - சவப்பாடை

**ஆசம்** - சிரிப்பு

**ஆசமனம்** - மந்திரநீர் உட்கொள்கை

**ஆசயம்** - உடலின் உட்பை, உறைவிடம்

**ஆசறுதல்** - முடிதல்

**ஆசறுதி** - முடிவு, கடைசி

**ஆசன்** - நகையுண்டாக்குவோன்

**ஆசனம்** - இருக்கை, எருவாய்

**ஆசான்** - ஆசிரியன், வியாழன், மூத்தோன், முருகன், ஒரு பண்

**ஆசி** - வாழ்த்து, நன்மொழி

**ஆசிடை** - வாழ்த்து, ஆசாக இடையிட்ட சொல்

**ஆசிரியம்** - ஆசிரியப்பா

**ஆசிரியன்** - குரு, ஆசான்

**ஆசினி** - வான், ஈராப்பலா, மரவைரம், மரவுரி

**ஆசீவகர்** - சமணத்துறவி

**ஆசு** - குற்றம், சிறுமை, நுட்பம், பற்றாசு, கைப்பிடி, பற்றுக்கோடு, கவசம், ஆசுகவி, அலக்கு, விரைவு

**ஆசுசம்** - தீட்டு

**ஆசுகம்** - இம்பு, காற்று

**ஆசுகவி** - பாடெனப்பாடுவோன், கொடுத்தபொருளை அடுத்த பொழுதிற் பாடும் பாட்டு

**ஆசுமணை** - நூல் சுற்றுங்கருவி

**ஆசுரம்** - அசுரம்

**ஆசுவாசம்** - இளைப்பாறுகை

**ஆசெறூண்** - ஆதீண்டு குற்றி

**ஆசை** - விருப்பம், பொன், திக்கு

**ஆஞ்சி** - அசைவு, கூற்று, ஏலம்

**ஆஞ்சில்** - சங்கஞ் செடி

**ஆஞ்ஞை** - ஆணை

**ஆஞா,ஆ** - தந்தை

**ஆடகம்** - பொன், உலோகக்கட்டி, துவரை

**ஆட்காட்டி** - சுட்டுவிரல், ஒரு பறவை

**ஆட்கொல்லி** - கொலைஞன், பணம்

**ஆட்கொள்ளுதல்** - அடிமை கொள்ளல்

**ஆட்சி** - ஆளுகை, ஆன்றோர் வழக்கு, பயன்கோடல், அனுபவம், கோள்நிலை

**ஆட்டம்** - கூத்து, அசைவு, அதிகாரம்

**ஆட்டாள்** - ஆட்டிடையன், விளையாடும் ஆள்

**ஆட்டாளி** - செயலாற்றுவோன், நிர்வகிப்போன்

**ஆட்டி** - பெண், மனைவி, (ஒரு விகுதி)

**ஆட்டு** - விழவு, ஆடல், கூத்து

**ஆட்டுக்கல்** - அரைக்குங்கல்லுரல்

**ஆட்டுதல்** - அரைத்தல், அலைத்தல், துன்புறுத்தல், வருத்தி ஓட்டல், ஆடச் செய்தல், நீராட்டல், பாராட்டுதல்

**ஆட்டுப்பலகை** - செக்கின் கீழ்ச்சுற்றும் மரம்

**ஆட்டுரல்** - ஆட்டுக்கல்

**ஆட்படுதல்** - தொண்டனாதல், உயர் நிலையடைதல், உடல்நலமுறுதல்

**ஆட்பிடியன்** - முதலை

**ஆடகி** - துவரை

**ஆடங்கம்** - துன்பம், காலந்தாழ்த்தல்

**ஆடம்** - படி, ஆமணக்கு

**ஆடம்பரம்** - இடம்பம், ஒட்டோலக்கம்

**ஆடல்** - அசைகை, கூத்து, துன்பம், செய்கை, விளையாட்டு, புணர்ச்சி, சொல்லுகை, போர், வெற்றி

**ஆடலை** - பூவாத மரம்

**ஆடவன்** - ஆண்மகன், இளைஞன்

**ஆடவை** - நடன அவை, ஆடவர்கள் (இரட்டையர்)

**ஆடி** - கண்ணாடி, கூத்தாடுபவன், நான்காம் மாதம்

**ஆடு** - கொல்லுகை, சமைக்கை, காய்ச்சுகை, வெற்றி, விலங்கு வகை, மேழ ஓரை (மேட ராசி)

**ஆடுதல்** - அசைதல், நீராடுதல், விளையாடுதல், முயலுதல், செய்தல், சொல்லுதல், வெல்லுதல், நடனஞ் செய்தல், தோன்றுதல், பிறத்தல், அனுபவித்தல், புணர்தல், வழுவுதல், கொண்டாடுதல், கலத்தல், பூசுதல், வழங்குதல்

**ஆடூஉ** - ஆண்மகன்

**ஆடை** - சீலை, தயிர், பாலேடு, சித்திரை மீன்

**ஆண்** - ஆண்மகன்

**ஆண்டகை** - ஆண் தன்மையுடையோன், சிறந்தோன்

**ஆண்டலை** - பூவாதுகாய்க்கும் மரம், கோழி

**ஆண்டலைப்புள்** - ஆண்மகன் தலைப் போன்ற வடிவங்கொண்ட பறவை

**ஆண்டவன்** - கடவுள், அரசன்

**ஆண்டி** - துறவி, நாடற்றவர், வரிக்கூத்து வகை

**ஆண்டு** - அங்கு, வருடம், வயது, (ஓர் அசைச்சொல்)

**ஆண்டை** - இயமானன், முதலாளி, தலைவன், பண்ணையார், அவ்விடம், அவ்வுலகம்

**ஆண்மை** - ஆண்மைத்தன்மை, ஆளுந் தன்மை, வீரம், வெற்றி, மனமுயற்சி, வாய்மை, உடைமை

**ஆணம்** - பற்றுக்கோடு, அன்பு, சிறுமை, குழம்பு, கோள்கலம்

**ஆணவம்** - செருக்கு, அகங்காரம்

**ஆணாடுதல்** - மனம்போனபடி நடத்தல்

**ஆணாறு** - மேற்கு நோக்கி ஓடும் ஆறு

**ஆணி** - முதன்மை, மேன்மை, மேற்கோள், ஆதாரம், எல்லை, இரும்பாணி, அச்சாணி, எழுத்தாணி, உரையாணி, புண்ணாணி (மிகுதி காட்டும் ஒரு விகுதி)

**ஆணித்தரம்** - முதற்றரம், உறுதி

**ஆணு** - இனிமை, நன்மை, நேயம்

**ஆணை** - கட்டளை, மந்திரம், வஞ்சினம், ஆட்சி, ஆன்றோர், மரபு

**ஆத்தன்** - அருகன், கடவுள்

**ஆத்தானம்** - அரசவை, பெருமன்றம், கோபுர வாயில்

**ஆத்தி** - ஒரு மரவகை

**ஆத்திகன்** - கடவுள் உண்டென்போன்

**ஆத்திரம்** - பரபரப்பு, சினம், சீற்றம்

**ஆத்தை** - தாய், (ஓர் அதிசய விரக்கச்சொல்)

**ஆதவன்** - ஆதபன்

**ஆதன்** - குருடன், அறிவிலான், பெருந்துன்பம், கவலை, வருத்தம் உயிர், மனம்

**ஆதாயம்** - ஊதியம் , வருவாய்

**ஆதாரம்** - பற்றுக்கோடு, நிலை, உடல், மழை

**ஆதி** - முதல், காரணம், பழைமை, தொடக்கம், கடவுள், குதிரையின் நேரோட்டம்,குதிரைக்கதியுளொன்று, தாள வகையுளொன்று

**ஆதிக்கம்** - தலைமை

**ஆதீண்டு குற்றி** - பசுக்கள் உரிஞ்ச அமைக்கப்படும் கல்

**ஆதீனம்** - உரிமை, ஆளுகை, சிவமடம்

**ஆது** - யானைப்பாகர் வழங்கும் சொல் (ஆறனுருபு)

**ஆதொண்டை** - ஒரு கொடி

**ஆப்பி** - பசுச்சாணி, மாட்டுச்சாணி

**ஆப்பு** - முளை, நொய்

**ஆபத்து** - இடையூறு, ஏதம்

**ஆபத்து சம்பத்து** - தாழ்வு வாழ்வு

**ஆபம்** - நீர்

**ஆபயன்** - ஆவின்பால்

**ஆபரணம்** - அணிகலம், நகை

**ஆம்** - ஈரம், நீர், அழகு, (ஓர் அசைச்சொல்)

**ஆம்பல்** - ஒரு பேரெண், அல்லி, செவ்வாம்பல், இசைக்குழல், ஒருவகைப் புல்லாங்குழல், கள், சந்திரன், மூங்கில், ஒருபண், யானை

**ஆம்பி** - குடைக் காளாண், இறைகூடை, ஒலி, பன்றிப்பத்தர்

**ஆம்புடை** - உபாயம்

**ஆமா** - காட்டுமாடு

**ஆமாறு** - உபாயம்

**ஆமிடம்** - உணவு

**ஆமிரம்** - மாமரம், புளிப்பு

**ஆமிலம்** - புளியமரம், புளிப்பு

**ஆமைக்கல்** - அறுகோணக்கல்

**ஆய்** - தாய், வள்ளல்களுளொருவன், அழகு, இடைச்சாதி

**ஆய்க்குடி** - இடைச்சேரி

**ஆய்ச்சி** - இடைச்சி, தாய்

**ஆய்தல்** - நுணுகியறிதல், வருந்துதல், அழகமைதல், அசைதல், கொண்டாடுதல், குத்துதல்,கொய்தல்

**ஆய்ந்தோர்** - அறிவுடையோர்

**ஆய்ப்பாடி** - இடைச்சேரி

**ஆய்ப்பு** - ஒடுங்குகை

**ஆய்மகள்** - இடைப்பெண்

**ஆய்மை** - ஆராயுந்தன்மை, நுண்ணிய பொருள்

**ஆய்வு** - ஆராய்கை, அகலம், வருத்தம்

**ஆயக்கட்டு** - ஒரு நீர்நிலையை ஆதாரமாகக் கொண்ட நிலப்பரப்பு, குளப்புரவு, கணக்கு, பொய்ம்மொழி

**ஆயக்கால்** - சிவிகை தாங்கி, குத்துக்கால்

**ஆயத்தம்** - முன்னேற்பாடு

**ஆயத்துறை** - சுங்கச்சாவடி

**ஆயம்** - ஆதாயம், பொருள் வருவாய், சுங்கம், சூதாடுகருவி, தோழியர் கூட்டம், பசுந்திரள், மேகம், மல்லரிப் பறை

**ஆயர்** - இடையர்

**ஆயர்பாடி** - இடையர் ஊர், இடைச்சேரி

**ஆயி** - தாய்

**ஆயிட்டு** - ஆகலான்

**ஆயிடை** - அவ்விடம், அக்காலத்து

**ஆயிழை** - பெண், தெரிந்தெடுத்த அணிகளை உடையவள்

**ஆயு, ஆயுசு** - வாழ்நாள்

**ஆயுதம்** - கருவி, படைக்கலம்

**ஆயுள்** - வாழ்நாள், அப்பொழுது

**ஆர்** - கூர்மை, அழகு, நிறைவு, பூமி, செவ்வாய், அச்சுமரம், ஆர்க்கு, ஆரங்கால், ஆத்தி, சரக் கொன்றை, யார் என்னும் வினா

**ஆரக்கம்** - அகில், சந்தனம்

**ஆரக்கால்** - சக்கரத்தின் ஆர்

**ஆர்கலி** - கடல், வெள்ளம், மிக்க ஒலி, ஆரவாரம்

**ஆர்கை** - தின்னுதல்

**ஆரணி** - சிவை, மலைமகள், மாகாளி

**ஆரணியம்** - காடு

**ஆர்த்தல்** - ஒலித்தல், கட்டல், பொருதல், ஆரவாரித்தல், கட்டிக் கொள்ளுதல், கொக்கரித்தல்

**ஆரத்தி** - ஆத்தி மரம், பூமாலை, கடம்பு, தோட்டம், சந்தனம், சந்தன மரம், ஆட்டு அதர், அணிகலன், கண்ணீர், முத்து, ஆர்க்கால், பித்தளை, பறவைக் கழுத்துவரி

**ஆர்த்தி** - துன்பம்

**ஆர்த்துதல்** - ஊட்டுதல், நுகர் வித்தல், நிறைவித்தல், கொடுத்தல்

**ஆர்தல்** - அடைதல், பெறுதல், ஒத்தல், நுகர்தல், குடித்தல், நிறைதல், பொருந்துதல், புசித்தல், தங்குதல்

**ஆர்ப்பரித்தல்** - ஆரவாரித்தல்

**ஆர்ப்பு** - பேரொலி, சிரிப்பு, மகிழ்ச்சி, போர், கட்டு

**ஆர்பதம்** - நிழல், வண்டு, உணவு

**ஆர்வலன்** - அன்புடையவன், பரிசிலன்

**ஆர்வு** - செல்வம், நிறைவு, விருப்பம்

**ஆர்வம்** - அன்பு, ஒலி, பத்தி, விருப்பம், பற்றுள்ளம்

**ஆரல்** - நெருப்பு, மதில், மதிற்சுவர் மேன் மறைப்பு, செவ்வாய், மீன்வகை

**ஆரவாரம்** - பேரொலி, துக்கம், ஆடம்பரம்

**ஆரறிவு** - நிறைந்த அறிவு

**ஆராட்டு** - தாலாட்டு

**ஆராதனை** - பூசை, வணக்கம்

**ஆராமை** - தெவிட்டாமை

**ஆராய்ச்சி** - ஆய்வு, துருவிப் பார்க்கை

**ஆராய்ச்சிமணி** - முறை வேண்டு வோர் அசைக்க அரண்மனை வாயிலிற்கட்டும் மணி

**ஆரி** - அருமை, மேன்மை, அழகு, சோழன், கதவு

**ஆரிடம்** - பசு, எருதுகளின் முன்னிலையில் நீர் பெய்து கன்னியைக் கொடுக்கும் மணம், முனிவரருளிய நூல், வழுக்கு நிலம்

**ஆரிடர்** - முனிவர், சமணர், குருமார்

**ஆரிடை** - அரியவழி

**ஆரிய** - சிறிய

**ஆரியக்கூத்து** - கழைக்கூத்து

**ஆரியப்பாவை** - பாவைக்கூத்து

**ஆரியம்** - இமய விந்திய மலைகளுக் கிடையேயுள்ள நாடு, சமற்கிருதம், கேழ்வரகு

**ஆரியர்** - பார்ப்பன வந்தேறி, ஆசிரியர், தொம்பர், மிலேச்சர்

**ஆரூடம்** - ஏறியது, நினைத்ததை யுணர்ந்து கூறும் கணியம்

**ஆரை** - ஒருகீரை, மதில், அச்சுமரம், புற்பாய்

**ஆரோகணம்** - ஏறுவகை, கற்படிக்கட்டு, தாழ்வாரம்

**ஆல்** - ஆலமரம், நீர், ஆமெனல், கார்த்திகை மீன், நஞ்சு, அகற்சட்டி, ஓர் அசைச் சொல், சொல் பின்னொட்டு, உருபு

**ஆல** - ஆரவாரித்து அழைப்பு

**ஆலகாலம்** - பாற்கடல் நஞ்சு

**ஆலங்கட்டி** - கனமழை

**ஆலங்காட்டாண்டி** - ஒருவகை வரிக் கூத்து

**ஆலசியம்** - காலத்தாழ்வு, சோம்பு

**ஆலத்தி** - ஆரத்தி

**ஆலம்** - மஞ்சள் சுண்ணாம்பு கலந்த நீர், நீர், மழை, கடல், நஞ்சு, கருமை, ஆலமரம், அகலம், கலப்பை

**ஆலம்பம்** - பற்றுக்கோடு

**ஆலயம்** - தேவர் கோயில், தங்குமிடம், நகரம், யானைக்கூடம்

**ஆலல்** - ஒலி, மயிற்குரல்

**ஆலவட்டம்** - விசிறி

**ஆலவாய்** - தென்மதுரை, பாம்பு

**ஆலவாலம்** - மரத்தின் கீழ்ப்பாத்தி, விளைநிலம்

**ஆலா** - கடற்கரைப் பறவை வகை

**ஆலாத்தி** - ஆரத்தி

**ஆலாபித்தல்** - பன்னிப்பன்னிப் பாடுதல்

**ஆலாலம்** - நஞ்சு, துரிஞ்சல்

**ஆலி** - மழைத்துளி, நீர்த்திரள், பனிக்கட்டி, ஆலங்கட்டி, கள், காற்று

**ஆலிங்கனம்** - தழுவுகை

**ஆலித்தல்** - ஒலித்தல்

**ஆலிநாடன்** - திருமங்கையாழ்வார்

**ஆலிப்பு** - ஆரவாரம்

**ஆலுதல்** - களித்தல், ஒலித்தல், தங்குதல்

**ஆலை** - கரும்பு, கரும்பாலை, கொட்டில், யானைக்கூடம்

**ஆலைபாய்தல்** - மனஞ்சுழலுதல், அலைவுறுதல், ஆலையாட்டுதல்

**ஆலோகம்** - ஒளி, பார்வை

**ஆலோசித்தல்** - சிந்தித்தல், தீராய்தல்

**ஆலோலம்** - புள்ளோச்சும் ஒலிக்குறிப்பு, நீரொலி

**ஆவ** - இரக்கக் குறிப்புச் சொல்

**ஆவசியகம்** - இன்றியமையாதது

**ஆவஞ்சி** - ஒரு தோற்கருவி

**ஆவணம்** - கடைத்தெரு, தெரு, முறிச்சீட்டு, அடிமைத்தனம், உரிமை, பதிவு ஏடு

**ஆவணமாக்கள்** - குடஓலை தேரும் மாக்கள்

**ஆவம்** - அம்புக்கூடு, வில்நாண்

**ஆவரணம்** - மறைப்பு, சீலை, தடை, கோட்டை

**ஆவர்த்தம்**, **ஆவர்த்தி** - தடவை

**ஆவல்** - அவா, ஆசை

**ஆவலாதி** - குறைகூறுகை

**ஆவலி** - ஆவளி

**ஆவலித்தல்** - புலம்பல்

**ஆவலிப்பு** - செருக்கு

**ஆவளி** - வரிசை

**ஆவாகனம்** - அழைக்கை

**ஆவி** - நீராவி, உயிர், நெட்டுயிர்ப்பு, கொட்டாவி, புகை, மணம், பிட்டு, வலி, பொய்கை, உயிரெழுத்து

**ஆவிகை** - பற்றுக்கோடு

**ஆவிடையார்** - ஆவுடையாள்

**ஆவித்தல்** - வாய்விடுதல், அங்காத்தல், பெருமூச்சுவிடுதல், வெளிவிடுதல், கொட்டாவி விடுதல்

**ஆவியர்** - வேளாளர், வேடர்

**ஆவிர்ப்பவித்தல்** - வெளிப்படுதல்

**ஆவிருத்தி** - தடவை, திரும்பத்திரும்ப வோதுகை

**ஆவுடையாள்** - சக்தியைக் குறிக்கும், லிங்கபீடம்

**ஆவுதல்** - விரும்புதல்

**ஆவுதி** - வேள்வி

**ஆவுரிஞ்சி** - மந்தைக்கல், ஆதீண்டு குற்றி

**ஆழ்தல்** - ஆழமாதல், அழுந்துதல், வருந்துதல், மூழ்குதல்

**ஆழ்வார்** - திருமாலடியார், கருடன்

**ஆழ்வு** - ஆழம்

**ஆழங்காற்படுதல்** - அழுந்துதல், முழுக்கு ஈடுபடுதல்

**ஆழம்** - ஆழ்ந்திருக்கை, ஆழ்ந்த கருத்து

**ஆழல்** - கறையான்

**ஆழாக்கு** - அரைக்காற்படி

**ஆழாத்தல்** - ஈடுபடுதல்

**ஆழாரம்** - வட்டமான புதைகுழி

**ஆழி** - கடற்கரை, கடல், சக்கரம், உருளை, வட்டம், கணையாழி, கட்டளை, யானைக்கைந்நுனி, கணவனைப் பிரிந்த மனைவி யிழைக்குங் கூடற்சுழி

**ஆழியான்** - திருமால்

**ஆள்** - ஆண்மகன், துணையாள், வீரன், காலாள், ஊழியன், கணவன், வளர்ந்த ஆள்மட்டம், ஓர் விகுதி

**ஆள்வினை** - முயற்சி, உற்சாகம், இடை விடாத மெய்ம்முயற்சி

**ஆளரி** - அரிமா, சிங்கம்

**ஆளன்** - ஆள்பவன், கணவன்

**ஆளானம்** - யானை கட்டுந்தறி, தூண்

**ஆளி** - ஆள்வோன், யாளி, சிங்கம், செடிவகை, கிளிஞ்சல் வகை

**ஆளுகை** - ஆட்சி

**ஆளுதல்** - உடையராதல், அரசு செய்தல், வழங்குதல், கைக் கொள்ளுதல்

**ஆளோட்டி** - வேலை வாங்குவோன்

**ஆளோலை** - அடிமைச்சீட்டு

**ஆற்ற** - மிக, முற்ற

**ஆற்றல்** - பொறை, வல்லமை, முயற்சி, மிகுதி, ஆண்மை, வெற்றி, வாய்மை, ஞானம்

**ஆற்றறுத்தல்** - இடையிற்கை விடுதல், வலியுறுத்தல்

**ஆற்றாமை** - தாங்கமுடியாமை, தளர்ச்சி

**ஆற்றார்** - வலியிலார், வறியர்

**ஆற்றிடைக்குறை** - ஆற்றினிடைத் திட்டு, அரங்கம்

**ஆற்றுணா** - வழியுணவு, கட்டுச் சோறு

**ஆற்றுதல்** - செய்தல், பொறுத்தல், உய்தல், கூடியதாதல், போதியதாதல், வலியடைதல், தேடுதல், உதவுதல், சுமத்தல், தணித்தல், உலர்த்தல், நீக்குதல்

**ஆற்றுப்படுத்தல்** - வழிப்படுத்தல், போக்குதல், வழிச்செல்லுதல்

**ஆற்றுப்படை** - இலக்கிய நூல்வகை

**ஆற்றுவரி** - இசைப்பா வகையுள் ஒன்று

**ஆற்றொழுக்கு** - ஆற்றின் நீரோட்டம், சூத்திர நிலையுள் ஒன்று

**ஆறலைத்தல்** - வழிபறித்தல்

**ஆறன்மட்டம்** - தாளவகை

**ஆறாட்டம்** - நோயுற்றார்படும் துன்பம்

**ஆறாட்டு** - தீர்த்தவாரி விழா

**ஆறாமீன்** - கார்த்திகை

**ஆறாயிரப்படி** - திருவாய் மொழி முதல் விரிவுரை

**ஆறியகற்பு** - அறக்கற்பு

**ஆறு** - ஓரெண், ஒழுக்கம், பக்கம், சமயநெறி, விதம், நிலை, வழி, உபாயம், இயல்பு

**ஆறுதல்** - மன அமைதி, தணிவு, சூடு குறைதல், ஒழிதல்

**ஆறுமுகன்** - முருகன்

**ஆறெறிதல்** - வழிபறித்தல்

**ஆன்** - பெற்றம், எருமை, மரை இவற்றின் பெண், பசுமாடு, அவ்விடம், அங்கே

**ஆன்மா** - உயிர்

**ஆன்ற** - மாட்சிமைப்பட்ட, அகன்ற, அடங்கிய, நிறைந்த, இல்லாமற்போன

**ஆன்றல்** - மாட்சிமை, அகலம், மிகுதி, அமைதல், நீங்கல்

**ஆன்றவர்(அ)ஆன்றோர்** - அறிவு நிறைந்தவர், பெரியோர், தேவர்

**ஆனகம்** - துந்துபி, போர் முரசு

**ஆனஞ்சு** - பஞ்சகவ்வியம்

**ஆனந்தன்** - சிவன், அருகன்

**ஆனந்தை** - உமை, குறிஞ்சி யாழ்த்திறன்

**ஆனம்** - கள்

**ஆனன்** - சிவன்

**ஆனாமை** - கெடாமை, குறையாமை, இடையறாமை, பொருந்தாமை, அமையாமை, நீங்காமை

**ஆனாயன்** - மாட்டிடையன்

**ஆனி** - கேடு, மாதப்பெயர்

**ஆனியம்** - நாள், பருவம்

**ஆனிரை** - பசுக்கூட்டம்

**ஆனிலை** - தொழுவம், பசு மந்தை நிற்குமிடம்

**ஆனும்** - ஆயினும்

**ஆனேறு** - எருது

**ஆனை** - யானை, அத்திமரம்

**ஆனைத்தீ** - பெரும்பசி நோய்

**ஆனைத்தோட்டி** - அங்குசம்

**ஆனைந்து** - ஆனஞ்சு

**இக்கட்டு** - நெருக்கடி, கடினம்

**இக்கணம்** - இந்தநேரம், இப்பொழுது

**இக்கரை** - இந்தக்கரை, இந்துப்பு

**இகம்** - இவ்வுலகம்

**இகல்** - பகை, போர், வலிமை, சிக்கு, அளவு, புலவி

**இகழ்ச்சி** - அவமதிப்பு, ஈனம், வெறுப்பு

**இகழ்வார்** - அவமதிப்பவர்

**இகுதல்** - சொரிதல் ,கரைதல், விழுதல்

**இகுளை** - நட்பு, சுற்றம், உறவு, தோழி

**இங்கிதம்** - விருப்பம், விரும்பத்தக்க இயல்புகள், இனிமை, சூழலுக் கேற்பப் பழகு முறை

**இங்கு-தல்** - அழுந்துதல், தங்குதல்,

குத்துதல், துன்புறுத்தல், எரிதல், கரிதாதல்

**இச்சம்** - இச்சை, விருப்பம், வினா, அறியாமை

**இசக்குதல்** - ஏமாற்றுதல்

**இசகுபிசகாக** - எதிர்பாராதவிதமாக

**இசிவு** - தசை இறுக்கநோய்

**இசை** - பொன், ஊதியம், ஓசை, சொல், புகழ், இசைவு, இசைப்பாட்டு, சங்கீதம்

**இசைக்கடன்** - நேர்த்திக்கடன்

**இசைகாரன்** - பாணன், பாடுவோன்

**இசைகுடிமானம்** - நகரத்தார் திருமணக் காலத்தில் எழுதப்படும் உறுதிப்பத்திரம்

**இசைகேடாக** - உரியமுறையில் இல்லாமல்

**இசைகேடு** - மானமின்மை, இழிந்தகுணம்

**இசையாமை** - உடன்படாமை, இணக்க மின்மை

**இசைவு** - உடன்பாடு, தகுதி, ஏற்றது, பொருத்தம், சம்மதம், ஒற்றுமை

**இசைவுக்கேடு** - வேறுபாடு, மன வேற்றுமை, உடன்படாமை, தோல்வி

**இஞ்சக்கம்** - கையூட்டு

**இஞ்சை** - துன்பம், கொலை

**இஞ்ஞான்று** - இந்நாள், இந்தநாள்

**இட்டடைச்சொல்** - தீங்கினை அளித்திடக் கூடிய சொல்

**இட்டி** - சுருக்கச்செய்யுள், கொடை, பூசை, இச்சை

**இட்டுரைத்தல்** - சிறப்பித்து உரைத்தல்

**இட்டூறு** - பழிகூறுதல், செய்ய வேண்டிய நலன்களைச் செய்ய வில்லை என்பதற்காகக் கூறப்படும் குற்றச்சாட்டு

**இடக்கர்** - கூறிடத்தகாத சொல்

**இடக்கல்** - தோண்டல், கடைக்கால்

**இடக்கன்** - தாறுமாறு செய்பவன்

**இடக்கு** - முரண்டு, ஏறுக்கு மாறான பேச்சு, தடை, வல்லூறு என்னும் பறவை

**இடங்கழி** - எல்லை கடப்பது, காம மிகுதி, மரப்பாத்திரம்

**இடங்கேடு** - வறுமை, தாறுமாறு, நாடு கடத்தல்

**இடம்** - வினை, காலம், செய்பொருள் என்னும் அறுவகைப் பொருள்கள்

**இடம்பம்** - ஆடம்பரம், பகட்டு, தற்பெருமை

**இடர்** - துன்பம், வருத்தம், வறுமை

**இடர்ப்பாடு** - இடையூறுக்குள்ளான நிலை, துன்பத்துக்கு உள்ளான நிலை

**இடன்** - அகலம், நல்ல காலம், செல்வம், இடம், இடப்பக்கத் திலிருப்பவன்

**இடித்துரை** - அறிவுரை கூறித் திருத்தும் நோக்குடன் கண்டித்தல்

**இடிதாங்கி** - கட்டடத்தின் மீது இடி விழாதபடி காத்திட வைக்கப்பெறும் காந்தக்கம்பி

**இடிப்பு** - இடி, ஒலி, வீரமுழக்கம்

**இடிபாடு** - சிதைவு, தகர்ந்து விழுந்த நிலை

**இடிமரம்** - உலக்கை

**இடுக்கு** - குறுகலான சந்து, மூலைமுடுக்கு

**இடுகிடை** - சிறுவழி, நெருக்கம், இடைஞ்சல்

**இடுகுறி** - வைக்கப்படும் அடையாளம், பெயர், காரணமின்றி இடப்படும் இடுகுறிப்பெயர்

**இடுதண்டம்** - ஒறுப்புத்தொகை

**இடுதிரை** - திரைச்சீலை

**இடும்பு** - செருக்கு, கொடுஞ்செயல், புலக்குறும்பு, வெறுப்பு, அவமதிப்பு, துன்பம்

**இடும்பை** - துன்பம், தீமை, நோய், ஏழ்மை, அச்சம், ஏதம், எலி

**இடைஞ்சல்** - இடையூறு, தடை, நெருக்கம், வருத்தம்

**இடைத்தரகர்** - வணிகம் போன்றவற்றில் உண்டாகும் பேரத்தை முடித்து வைப்பவர்

**இடைத்தீனி** - சிற்றுண்டி

**இடைநேரம்** - நிகழ்ச்சி ஒன்றின் இடையில் விடப்படும் ஓய்வு நேரம்

**இடைப்போகம்** - இடைக்காலத்திய விளைச்சல்

**இடையழிவு** - கருச்சிதைவு

**இடையறுதல்** - நடுவே முடிந்து போதல்

**இடையினம்** - தமிழ் மெய்யெழுத்து வகைப்பாடு மூன்றனுள் ஒன்றான ஒருவகைப் பாட்டு எழுத்துகள். அவை ய,ர,ல,வ,ழ,ள எனவாகும்.

**இடையீடு** - குறுக்கீடு, இடைவெளி, வேறுபாடு, தடை ,குற்றம், நடுவே நிகழ்வது

**இடையூறு** - தடை, இடைஞ்சல், தொல்லை

**இணக்கம்** - இசைவு,பொருத்தம், நட்பு, உடன்பாடு, சம்மதம்

**இணங்காதவர்** - பகைவர்

**இணுக்கு** - கைப்பிடியளவு,இலை

**இணைமுரண்** - ஓரடியின் முதலிரு சீரும் முரண்பட இணைந்து வருந்தொடை

**இணையல்** - சேர்தல், இணைதல்

**இதலை** - கொப்பூழ்

**இதழ்** - பூவின் தோடு, உதடு, கண்ணிமை, பனையேடு, மாலை, பாளை, சாதிபத்திரி, கதவின் இலை, பொத்தகத்தின் தாள், கால வரம்புக்குட்பட்டுவெளியிடப்படும் பருவ இதழ், தாளிகை

**இந்தம்** - புளி

**இப்பி** - சங்கு, கிளிஞ்சல், சிப்பி, முத்துச்சிப்பி

**இம்பர்** - இவ்வுலகம், இவ்விடத்து, பின்

**இம்மை** - இப்பிறப்பு

**இமிழ்** - ஒலி, பிணைப்பு, கயிறு

**இமிழி** - இசை

**இயல்** - தன்மை, தகுதி, ஒழுக்கம், உழுவலன்பு, செலவு, ஒப்பு, இயற்றமிழ், நூல், நூலின் பகுதி, மாலியப் பாடல்களை ஓதுதல், ஆற்றல், அழகு, நாட்டியத்தாளம்

**இயல்வாணர்** - புலவர்

**இயற்கை** - இயல்பு, இயல்பாக இருத்தல், வழக்கம், இலக்கணம், நிலைமை, கொள்கை

**இயற்சீர்** - அகவலுரிச்சீர்

**இயற்சொல்** - எல்லார்க்கும் பொருள் விளங்குஞ் சொல், திரிசொல்லின் வேறானது

**இரங்கல்** - ஒருவர் மரணம் அடைந்ததற்காகத் தெரிவிக்கும் கழிவிரக்கம்

**இரட்டுற மொழிதல்** - இருபொருள் படக்கூறுமோர் உத்தி

**இரட்டுறல்** - சிலேடை

**இரண்டகம்** - ஏமாற்று, இருமனம்

**இரவல்** - தன் பயன்பாட்டிற்காக பிறரின் பொருளைப் பெற்றுத் திருப்பித்தரும் முறை, வேண்டிப் பெறுதல்

**இரவோன்** - நிலவு, இரவலன்

**இரற்றுதல்** - அரற்றுதல், ஒலித்தல், சத்தமிடல்

**இரிசல்** - பிளவு, மனமுறிவு

**இரிபு** - அச்சம், ஓடுதல், பகை, தோல்வி

**இரியல்** - அச்சத்தால் நிலை கெடுகை, விரைந்து செல்கை, அழுகை

**இருசு** - நேர்மை, வண்டியச்சு, மூங்கில்

**இருசுடர்** - நிலவு, சூரியன்

**இருணம்** - கடன்

**இரு-த்தல்** - உளதாதல், நிலை பெறுதல், உட்காருதல், உள்ளிறங்குதல், உயிர் வாழ்தல், அணியமாயிருத்தல், நினைத்தல்

**இருதிணை** - உயர்திணை, அஃறிணை

**இருந்தமிழ்** - செந்தமிழ்

**இல்லக்கிழத்தி** - மனைவி

**இல்லுறைகல்** - அம்மிக்கல்

**இலங்குபொழுது** - சூரியன் மறையும் பொழுது

**இலம்பகம்** - நூலின் உட்பிரிவு, மாலை, தலைக்கோலமென்னும் அணி

**இலவயம்** - விலையின்றிப் பெறுவது

**இலைமறைகாய்** - மறைபொருள்

**இவறல்** - விருப்பம், பேராசை, இவறன்மை, மறதி

**இவறன்மை** - பற்றுள்ளம், இவறன்

**இழ-த்தல்** - தவறவிடுதல், சாகக் கொடுத்தல்

**இழவு** - இழப்பு, கேடு, சாவு, இறுதிச்சடங்கு, தொந்தரவு, எச்சில், வறுமை

**இழிசினன்** - தாழ்ந்தோன்

**இழிதகவு** - இழிவு, எளிமை

**இழிவு** - தாழ்வு, இகழ்ச்சி, குறைவு, கேடு, குற்றம், தீட்டு, பள்ளம்

**இழுக்கடித்தல்** - வீணாக அலைய வைத்தல்

**இழுக்கு** - குற்றம், பொல்லாங்கு, நிந்தை, களங்கம், தாழ்வு,வழுக்கு, தவறு, மறதி

**இழுப்பு** - இழுக்கை, கவர்ச்சி, இசிவு நோய், ஈளைநோய், நீரிழுப்பு, காலத்தாழ்வு, குறைவு, உறுதி யின்மை

**இழுவல்** - இழுக்கை, சுணக்கம், தன் செயலில் கவனமின்றிப் பிறர் செயலில் வீணே நுழைபவன், சுறுசுறுப் பில்லாதவன், குறைவு, உறுதியின்மை

**இழை** - நூல், நூலிலை, கல் இழைத்த அணிகலன், மாதரணி வடம், கையிற் கட்டுங்காப்பு

**இழைதல்** - குழைதல், கூடுதல், நெருங்கிப்பழகுதல், உராய்தல், மனம் பொருந்துதல், நூற்கப்படுதல்

**இளக்காரம்** - ஈவிரக்கம், மன நெகிழ்ச்சி, தாழ்நிலை, குறைவு

**இளங்காலை** - அதிகாலை

**இளங்காற்று** - தென்றல் காற்று

**இளந்தாரி** - இளைஞன்

**இளம்பூரணர்** - தொல்காப்பியத்தின் முதல் உரையாசிரியர்

**இளி** - இகழ்ச்சி, குற்றம், சிரிப்பு, இகழ்ச்சிக் குறிப்பு நகை, இசையின் ஏழொலியுள் ஐந்தாவது ஒலி

**இளிவரல்** - இழிவு, அருவருப்பு, இழிதொழில், சிறுமை, நிந்தை

**இளை-த்தல்** - சோர்தல், மெலிதல், பின்னடைதல், ஏழைமைப்படுதல், வளங்குறைதல்

**இற்கிழத்தி** - இல்லக்கிழத்தி, மனைவி

**இற்பாலர்** - நற்குடியில் பிறந்தவர்கள்

**இறத்தல்** - கடத்தல், கழிதல், நெறிகடந்து செல்லுதல், மிகுதல், சாதல், வழக்கு வீழ்தல், நீங்குதல்

**இற்றுப்போதல்** - கெட்டுப்போதல், கிழிந்துபோதல்

**இறல்** - ஒடிதல், அழிவு, இறுதி, கிளிஞ்சல், சிறுவேர்

**இறவாரம்** - தாழ்வாரம்

**இறவை** - ஏணி, இறைப்புக்கூடை

**இறுக்கம்** - நெகிழாத்தன்மை, நெருக்கம், கடுஞ்செட்டு, முட்டுப்பாடு, புழுக்கம்

**இறுகுதல்** - கெட்டியாதல், அழுத்தமாதல், உறைதல், நிலை பெறுதல்

**இறுங்கு** - சோளம்

**இறுத்தல்** - சொல்லுதல், தங்குதல், ஒடித்தல், வடித்தல், விடைகூறுதல், முடித்தல், வெட்டுதல், அழித்தல், வீழ்த்துதல், எறிதல், வினாவுதல்

**இறுதி** - முடிவு, சாவு, வரையறை

**இறுமாப்பு** - தற்பெருமை, தற்புகழ்ச்சி, செருக்கு

**இறை** - இறைத்தீடு, தூவிடு, எறிந்திடு, வீசிடு, தங்கீடு

**இறைஞ்சுதல்** - தாழ்தல், வணங்குதல், வேண்டுதல், வளைதல், விழுதல்

**இறைத்தல்** - நீர் இறைத்துப் பாய்ச்சுதல், சிதறுதல், மிகுதியாகச் செலவிடுதல்

**இறையிலி** - வரிவிலக்களிக்கப்பட்ட நிலம்

**இன்கண்** - இன்பம், மனநிறைவு, அன்பு

**இன்சொல்** - இனிமை தரும் பேச்சு, இனிமை பயத்திடும் சொல்

**இன்பன்** - கணவன்

**இன்னல்** - துன்பம்

**இன்னலம்** - வளமான சூழ்நிலை, இனிமையான ஏந்துகள்

**இன்னா** - தீங்கு தருபவை, துயரம்

**இன்னாது** - தீங்கினைத்தருவது, துன்பம், தீமை

**இன்னியம்** - இசைக்கருவி

**இனமுறை** - ஒத்தகுலம்

**இனிமை** - தித்திப்பு, இன்பம், மகிழ்ச்சி, மேன்மை, சோறு

**இனிய** - மென்மையான, இனிமையான

**இனை-த்தல்** - துன்பப்படுத்தல், அழித்தல், வருத்துதல், கெடுத்தல்

**இனைவு** - வருத்தம், இரக்கம்

**ஈ** - தமிழ் நான்காம் உயிர் நெடில் எழுத்து

**ஈகுதல்** - படைத்தல், கொடுத்தல்

**ஈகை** - கொடை, பொன், விண்ணுலகக் கற்பக மரம்

**ஈசல்** - சீழ்க்கை

**ஈட்டம்** - மிகுதி, திரள், கூட்டம், வலிமை, பொருள் ஈட்டல்

**ஈட்டல்** - வணிகர்களின் எண் குணங்களுள் ஒன்று

**ஈட்டு,தல்** - கூட்டுதல், தடித்தல், பருத்தல், கொழுத்தல், தேடுதல்

**ஈடழிதல்** - பெருமைகெடுதல், ஏழையாதல், சீர்கேடு

**ஈடாடுதல்** - நெகிழ்தல்

**ஈடு** - தாக்குதல், அடித்தல், நிகர், இணை

**ஈடுகட்டு** - நிறைவு செய்திடல், நிறை வேற்றல்

**ஈடுபாடு** - ஆர்வம், ஒன்றல், மனங் கவிகை, வரும்படி இழப்பு, துன்பம் ஈடுக்கட்டியிருத்தல், சாரவைத்தல், ஒருவரின் நலனில் அக்கறை கொள்ளுதல்

**ஈடுவை** - அடகுவை

**ஈடேறுதல்** - கடைத்தேறுதல், வாழ் வடைதல், அழிவிலிருந்து மீளுதல், உய்வித்தல், முன்னேறுதல்

**ஈதல்** - ஈனுதல், கொடுத்தல், பகிர்தல், வீசுதல், வறியவர்க்குத் தந்திடல்,

இடுதல், உதவுதல்

**ஈ-தல்** - ஈனுதல், கொடுத்தல், பகிர்ந்து கொடுத்தல், இல்லாதோர்க்குக் கொடுத்தல், வீசுதல்

**ஈந்து** - பேரீச்சை மரம், சிற்றீந்து

**ஈமம்** - சுடுகாடு, பிணஞ்சுட அடுக்கும் விறகடுக்கு

**ஈயம்** - கல்லீயம், வெண்மாழை

**ஈயல்** - சிறகு முளைத்த கரையான், தம்பலப்பூச்சி (இந்திர கோபப்பூச்சி)

**ஈயெச்சிற்கீரை** - புதினாக்கீரை

**ஈயோட்டுதல்** - வேலை ஏதுமின்றி யிருத்தல்

**ஈர்** - நுண்மை, பேன் முட்டை, ஈர்க்கு, இறகு, ஈரம், பசுமை, நெய்யுப்பு, இனிமை

**ஈர்ப்பு** - இழுப்பு, இசிவு நோய், மரணகால மதிமயக்கம்

**ஈரடி** - இரண்டடி, ஐயம், கவர்

**ஈரணை** - இரண்டு இணை மாடு

**ஈரநா** - புறம்பேசும் நாக்கு

**ஈரம்** - நீர்ப்பற்று, பசுமை, குளிர்ச்சி, நயனுடைமை, அருள், பரிவு, அறிவு, குங்குமம், கரும்பு, அழகு, வெள்ளரி

**ஈரல்** - ஈருள், குடல், விரிதல்

**ஈவு** - கொடை, நன்கொடைப் பொருள், நல்கை, பங்கிடுகை, ஒழிகை, கணக்கிற் பிரித்துக் கண்ட பேறு

**ஈழம்** - இலங்கை (தமிழர் நாடு), பொன், கள், கள்ளி

**ஈழவன்** - சேர நாட்டுக் (இன்றைய மலையாளம்) கள்ளிறக்கும் குடியினர்

**ஈளை** - கோழை, இழைப்பு, என்புருக்கி நோய், உமிழ்நீர் எச்சில்

**ஈளை** - கோழை, இளைப்பு, காசநோய்

**ஈற்றம்** - ஈனுகை, பேறு புரிதல், பெண் விலங்குகளின் பிறப்புறுப்பு

**ஈற்று** - ஈனுகை, கன்றீன்றல், ஈனப்பட்டது, மரக்கன்று

**ஈறு** - முடிவு, கடைசி, இறப்பு, எல்லை, எயிறு,பல் பொருந்தியுள்ள கெட்டித் தசை

**ஈன்(னு)தல்** - கருவுயிர்த்தல், உண்டாக்குதல்

**ஈன்றோன்** - தந்தை, பிரம்மன்

**ஈனில்** - பிள்ளைப் பேற்றிடம்

**ஈனுதல்** - காய்த்தல், வயிற்றினின்று குழவியை வெளிப்படுத்தல், பிள்ளை பெறுதல், குட்டிபோடுதல்

**ஈனோர்** - இவ்வுலகினர்

**உ** - தமிழ் எண்களில் இரண்டு என்னும் எண், உயர்ச்சி, வியப்பு, நீர்நிலைகளின் கரை

**உக்கடம்** - முதலாவது, தொடக்கம், வீட்டின் முன்னுள்ள தெருவாயில், அரண்மனையின் முகப்பு, மதில், வாயில், முன் பக்கத்தில் அமர்ந்து செலுத்தும் ஓடம், ஊரின் எல்லை யிலுள்ள காவலிடம், காவற்பரண்

**உக்களம்** - இரவுக்காவல், யாமக் காவல், தலைக்காவல், பாளையஞ் சூழ்கழி

**உகட்டுதல்** - தெவிட்டுதல், அருவருத்தல்

**உகந்தவன்** - பொருத்தமானவன், ஏற்றவன், பிடித்தவன்

**உகந்தார்** - நண்பர்கள்

**உகப்பு** - உயர்ச்சி, விருப்பம், மகிழ்ச்சி, மகிழ்ச்சியான இடம்

**உகரம்** - ஐந்தாமுயிர், தமிழ் எண்களில் இரண்டு என்னும் எண்

**உகிர்** - நகம்

**உகை-த்தல்** - செலுத்துதல், எழுப்புதல், பதித்தல், உயரவெழும்புதல்

**உங்கரி-த்தல்** - உம்மென் றொலித்தல், அதட்டுதல், உரப்புதல், உங்காரஞ் செய்தல்

**உச்சம்** - உயரம், உச்சந்தலை, தலைக்கு நேரான வான்முகடு, சிறப்பு. வல்லிசை, கோள் நிலையு ளொன்று, அறுதியளவு, நுனி, முனை, நண்பகல், உயர்வு

**உசாத்துணை** - உற்றதுணைவர், சிறந்த ஆலோசகர், உற்ற நண்பன்

**உசாவல்** - விசாரணை

**உசுப்புதல்** - வெருட்டுதல் , எழுப்புதல்

**உட்கண்** - உள்ளுணர்வு, மனக்கண்

**உட்காய்ச்சல்** - உள்ளுக்குக்காய்தல்

**உட்குறிப்பு** - மனக்குறிப்பு

**உட்கொள்ளுதல்** - தன்னகத்துக் கொள்ளுதல், உட்கருதல், உண்ணுதல், உள்ளிழுத்தல்

**உட்செலுத்து-தல்** - உள்ளே செலுத்துதல், சூழ்ச்சி செய்து உள்ளே புகுவித்தல், கையூட்டுக் கொடுத்தல்

**உட்படு-த்தல்** - உள்ளாக்குதல், அகப்படுத்துதல், உடன்படுத்துதல், உட்செலுத்துதல்

**உட்புகு-தல்** - உள்ளே புகுதல், ஆழ்ந்து கவனித்தல்

**உடந்தை** - குற்றம், தீய செயல் போன்ற வற்றிற்குத்துணை, கூட்டுறவு, உறவு

**உடம்படுமெய்** - நிலைமொழி யீற்றிலும் வருமொழி முதலிலும் உள்ள இரண்டு உயிர்களைச் சேர்க்கும் மெய்யெழுத்து (அவை ய், வ் என்பன)

**உடம்பை** - கலங்கிய நீர், கலங் கற்புனல்

**உடலுதல்** - மாறுபடுதல், சினத்தல், போர்புரிதல், பகைத்தல், வருத்த முறல்

**உடலுநர்** - பகைவர்

**உடலூழ்** - உடம்பின் நுகர்ச்சி

**உடல்** - உடம்பு, பொன், பொருள், கரணியம், மாறுபாடு

**உடற்சி** - கோபம், சினத்துடன் பொரு முதல்

**உடன்படல்** - இசைதல், உடன் படிக்கை செய்தல், சேரல், பொருந்தல், ஒட்டல், நேர்தல்

**உடன்பாடு** - இசைகை, மனப் பொருத்தம்

**உடனாளி** - கூட்டாளி

**உடு** - விண்மீன், அகழி, அம்பு, ஓடக்கோல், மரவகை, ஆடு

**உடுக்கோன்** - சந்திரன்

**உடுநீர்** - அகழி

**உடும்பு** - பல்லி வகையைச் சார்ந்த உயிரினம்

**உடைமணி** - குழந்தைகள் அணியும் அரையணி

**உடைமை** - உடையனாந்தன்மை, உடைமைப்பொருள், செல்வம், அணிகலன்கள்

**உண்டாட்டு** - கள்ளுண்டு மகிழ்கை, கள்ளுண்டு மகிழ்தலைத் தெரிவிக்கும் புறத்துறை

**உண்டி** - இரை, உணவு, சோறு

**உண்டைக்கட்டி** - கோவிலில் பட்டையாகத் தரும் படையல் செய்த உணவு

**உண்ணி** - உண்பவன், உயிர்வகை, பாலுண்ணி

**உண்ணீர்** - குடிக்கும் நீர்

**உண்ணோக்கல்** - சிந்தித்தல்

**உண்பலி** - பிச்சை

**உணக்கம்** - உலர்ந்த தன்மை

**உணா** - சோறு, உணவு

**உத்தரம்** - மறுமொழி, எதிராடல், பின் நிகழ்வது, மேற்பட்டது, தலைக்கு மேலுள்ள முகட்டு விட்டம், வடகதிர் வழி, குமரி மலை மூழ்கியபின் உயர்ந்த வடக்குத்திசை, வடவனல், 12-ஆவது விண்மீன், மானேறு

**உத்தரவு** - கட்டளை, அனுமதி, தெய்வ ஒப்புதல், மறுமொழி, வேண்டு கோட்குப் பின் தரும் விடையோலை

**உத்தி** - சேர்க்கை, நூலுக்குச் சொல்லப்படும் 32 வகை உத்தி

**உதிர்-தல்** - கீழ்விழுதல், பிதிர்தல், சாதல், குலைதல்

**உந்தி** - பேசும்போது வாய்வழிக் காற்றைத் தள்ளுவதாகக் கருதப்படும் கொப்பூழின் உட்பக்கம், வயிறு, நீர்ச்சுழி, ஆறு, யாற்றிடைக்குறை, நீர், கடல், தேரின் உருளை, தேர்த்தட்டு, மகளிர் விளையாட்டு வகை, யாழுறுப்பு, நடு, உயர்ச்சி

**உந்து** - தள்ளுதல், வீசியெறிதல், அம்பு முதலியன விடுதல், செலுத்துதல், அனுப்புதல், வெளிப்படுத்தல், யாழ்நரம்பு தெறித்தல், மரம் முதலியன கடைதல், ஆயக்காய் முதலியன உருட்டுதல்

**உப்பசம்** - வயிற்று வீக்கம், ஈளைநோய்

**உமணன்** - உப்பமைக்கும் குலத்தினன், உப்பு வணிகன்

**உமி** - நெல்லின் மேல்தோல் உவமானத்தையும்,உவமேயத்தையும் வேற்றுமைப்படுத்தாமல் ஒற்றுமைப் படுத்தி கூறும் முறை, உருவக அணி

**உமித்தல்** - இற்றுப்போதல், பதனழிதல்

**உமிழ்நீர்** - வாயூறு நீர்

**உய்த்துணர்வு** - ஆராய்ந்துணரும் அறிவு, ஞானம்

**உய்வு** - உயிர் பிழைக்கச் செய்யும் வழி, மீட்சி, நற்கதி, வருத்தம், வண்டிச் சக்கரத்திற்கு இடும் பசை

**உயிர்-த்தல்** - ஈனுதல், மோத்தல், கூறுதல், பெருக்குதல், வெளிப் படுத்துதல்

**உயிர்மெய்** - ஒற்று முன்னும் உயிர் பின்னுமாயிணைந்து ஒலிக்கு மெழுத்து, உயிருடம்பு

**உயிரளபெடை** - தனக்குரிய மாத்திரையின் மிக்கொலிக்கும் உயிரெழுத்து

**உயிரோம்பல்** - உயில்காத்தல்

**உரட்டல்** - அதட்டல்

**உரிச்சொல்** - பெயரெச்சம், வினையெச்சம் போன்றவற்றிற்கு அடியாக விளங்கும் தமிழின் நால்வகைச் சொற்களுள் ஒன்று

**உரிப்பொருள்** - ஐந்திணைகளுக்கு உரியனவான புணர்தல், பிரிதல், இருத்தல், ஊடல் இரங்கல்களும் அவற்றின் நிமித்தங்களும்

**உரிமையாளி** - சொந்தக்காரன்

**உரு** - வடிவு, வடிவழகு, உடல், சிலை, உருவமுள்ளது, உளியாற் செய்த ஓவிய வேலை, தோணி, தாலி முதலிய வற்றிற்கு கோக்கும் உரு, கரு, வண்ணம், பலமுறை செய்யும் வழிபாடு

**உருடை** - வண்டி, சக்கரம்

**உருப்பெயர்** - ஒரு சொல்லைப் பிறமொழியெழுத்தில் எழுதுதல்

**உருபு** - வடிவம், நிறம், வேற்றுமை முதலியவற்றைக் காட்டும் இடைச் சொல்

**உருவகம்** - உவமத்தைப் பொருளுடன் வேறுபாடின்றிப் பொருந்தக் கூறும் அணி

**உருவாரம்** - ஐயனார் கோயிலில் நேர்த்திக்கடனாகச் செய்து நிறுத்தி வைக்கப்படும் உருவம்

**உருவு** - இறுக்கமான ஒன்றிலிருந்து ஒரு பொருளை பிரித்து எடுத்தல், விரலால் இழுத்துத் தடவுதல் பிடித்து நீவுதல்

**உருவேற்று** - ஒருவரைத் தன் வழிக்குக் கொண்டு வர திரும்பத் திரும்ப சொல்லி மனத்தில் பதிய வைத்தல், இறைவனைப் போற்றி மந்திரத்தை திரும்பத் திரும்பச் சொல்லுதல்

**உருள்** - படுத்த நிலையில் ஒரு திசையில் புரளுதல், உருளும்

வடிவப் பொருள்கள் இடம்பெயர்தல், கீழ் நோக்கிப் புரண்டு விழுதல், ஒரு செயலில் ஒருவரின் பெயர் அடிபடுதல்

**உருளி** - வாய் அகன்ற உருண்டை வடிவம், உயரம் குறைந்த வெண்கல ஏனம்

**உருளை** - நீள் உருண்டை

**உரை** - தெரிவித்தல், கூறுதல், தங்கத்தின் தரம் அறியும் பொருட்டு தேய்த்தல், பேச்சு

**உரைக்கோவை** - ஒரு பொருளைப் பற்றிய பலருடைய கட்டுரைத் தொகுப்பு

**உரைகல்** - தங்கத்தின் தரம் அறியத் தேய்த்துப்பார்க்கும் கையடக்கமான கருமை நிறக்கல்

**உரையாடல்** - இருவரிடையே இயல்பாகப் பேசிக்கொள்வது

**உலக்கை** - கொழுந்து, மந்த புத்தி யுள்ளவர், தவசங்களை உரலி லிட்டுக் குத்த உதவும் மரத்தலான பொருள்

**உலக வழக்கு** - பெரும்பாலானவர்கள் பின்பற்றும் வழக்கம், மக்களிடையே பேச்சு மொழியில் வழங்கும் சொற்களின் ஆட்சி

**உலகப்பற்று** - ஒருவர் தன் குடும்பத்தின் மீதும் பொருள்கள் மீதும் கொண்டுள்ள பிடிப்பு

**உலகப்போர்** - பல நாடுகளுக்கிடையே நடைபெறும் பெரும் பாதிப்பை உண்டாக்கும் போர்

**உலர்** - காய்தல், ஈரப்பசையற்றுப் போதல்

**உலர் சலவை** - தண்ணீரைப் பயன் படுத்தாமல் வேதிப் பொருட்களைக் கொண்டு இயந்திரத்தின் மூலம் துணிகளைத் துவைத்தல்

**உலர் சாம்பல்** - மிக நுண்ணிய சாம்பல்

**உலர்உணவு** - காய வைத்துப் பயன் படுத்தப்படும் உணவு வகைகள்

**உலவு** - பேய்கள் உலாவுதல், பொய்ச் செய்திகள் பரவச் செய்தல்

**உலா** - தெய்வம் அரசன் போன்றோர் வீதிகளில் உலா வருதல், தொண்ணூற்றாறு சிற்றிலக்கி யங்களில் ஒன்று

**உலுக்கு** - அசைத்தல், ஆட்டுதல்

**உலுத்தன்** - முறை தவறி நடப்பவன்

**உலை** - தளர்தல், நெகிழ்ந்து பிரிதல், குலைத்தல், உணவு சமைப் பதற்காகப் பாத்திரத்தில் நீர் ஊற்றி அடுப்பில் வைக்கும் பொருள், மாழைகளை உருக்கும் உலை

**உலை வைத்தல்** - சோறு சமைப்பதற்கு அடுப்பில் ஏனம் வைத்தல், பிறருக்குத் துன்பம் வரும்படி செய்தல்

**உலைக்களம்** - கொல்லன் பட்டறை

**உவகை** - மகிழ்ச்சி

**உவப்பு** - மனத்திற்குப் பிடித்தது

**உவமானம்** - ஒன்றுக்கு ஒப்புமைக் காட்ட எடுத்துக் கொண்ட பொருள்

**உவமேயம்** - ஒப்பிடப்படும் பொருள்

**உவமை** - இணையாகக் காட்டும் ஒப்புமை

**உவர்** - **கரித்தல்**, துவர்த்தல், உப்புத் தன்மை கொண்ட

**உவர்நிலம்** - உப்புத்தன்மை கொண்ட நிலம்

**உவர்ப்பு** - உப்புச்சுவை, துவர்ப்பு, இகழ்ச்சி, வெறுப்பு, அவாவின்மை

**உவளித்தல்** - தூய்மைசெய்தல்

**உழக்கு** - படியில் நான்கில் ஒரு பாகம்

**உழப்பு** - உரிய வேலையைச் செய்யாமல் குழப்புதல்

**உழல்** - வறுமை, நோய் முதலிய வற்றில் அமிழ்ந்து திணறுதல், துன்பப்படுதல்

**உழவன்** - உழவுத்தொழில் செய்யும் வேளாண் தொழிலாளி

**உழவு** - ஏர் கொண்டு மண்ணைக் கிளறிவிடும் செயல்

**உழுவாரப்பணி** - கோயிலின் வெளிப் புறத்தையும் உட்புறத்தையும் தூய்மை செய்யும் தனியார் பணி

**உழுவாரம்** - களைக் கொத்தி போன்ற சிறிய புல் களையும் கருவி

**உள் கட்டமைப்பு** - அடிப்படை கட்டுமானம்

**உள் காது** - ஒலிகளைக் கேட்கும் காதின் உட்பகுதி

**உள் காயம்** - அடிபடுவதினால் அரத்தம் தோல் உரியாமல் கன்றி சிவந்து அழற்சிக்கு உள்ளான நிலை

**உள் குத்தகை** - நிலம், வீடு போன்ற வற்றை வாடகைக்குப் பெற்றவர் அதை மற்றொருவருக்கு வாடகைக்கு விடுதல்

**உள் சாதி** - ஒரு சாதியின் உட்பிரிவு

**உள் நீச்சல்** - நீரின் மேற்பரப்பில் அல்லாமல் உள்ளுக்குள்ளேயே நீந்தும் செயல்

**உள் நோயாளி** - மருத்துவ மனையிலேயே தங்கிப் பண்டுவம் பெறுபவர்

**உள்கை** - சட்டப் புறம்பான செயல்களுக்கு பிறர் அறியாமல் உதவி செய்பவர்

**உள்துறை** - நாட்டின் சட்ட ஒழுங்கை நிலைநாட்டும் அரசுத் துறை

**உள்நாக்கு** - உள்வாயில் தொண்டையின் மேல் புறத்தின் முடிவில் தொங்கும் சிறுதசை

உளநூல் - உளவியல், உளவியல் நூல்

**உள்நோக்கம்** - ஒரு செயலைச் செய்பவர் அதை மற்றவர்களுக்குத் தெரியாமல் காக்கும் கெட்ட எண்ணம்

**உள்பாவாடை** - பெண்கள் உள்ளாடை யாக அணியும் பாவாடை

**உள்மனம்** - எச்சரிக்கும் உணர்வு,

**உள்வட்டச்சாலை** - நகரத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று வரப்பயன்படும் உள்சாலை

**உளவாளி** - உளவு வேலையில் ஈடு படுபவர்

**உள்ளக்கிடக்கை** - வெளிப்படையாக இல்லாமல் உள்ளத்தில் வைத் திருக்கும் ஆசை, செய்ய விரும்புவது

**உள்ளங்கை** - கை வரிகள் காணப்படும் கைப்பகுதி

**உள்ளாற்றல்** - உள்ளே அடங்கியிருக்கும் வெளிப்படாத ஆற்றல்

**உள்ளித்தேங்காய்** - உள்ளீடற்ற தேங்காய்

**உள்ளிருப்புப் போராட்டம்** - பணியாளர்கள் பணியிடத்தின் உள்ளே தங்கியிருந்து நடத்தும் வேலை நிறுத்தப் போராட்டம்

**உள்ளுணர்வு** - செயல் நடக்கப் போவதை மனம் தானே முன்னறியும் நிலை

**உள்ளும்புறமும்** - முழுமையாக, முற்றாக

**உள்ளூர்** - குறிப்பிடப்படும் ஊரும் அதைச் சார்ந்த பகுதிகளும்

**உள்ளூர் வரி** - பொருள்களின் மீது உள்ளாட்சி நிருவாகமோ மாநில அரசுகளோ விதிக்கும் வரி

**உள்ளுறை** - சங்கப்பாடல்களில் அகம் பற்றிய குறிப்பினை வெளிப் படையாக ஒப்பிடாமல் பொருளைக் குறிப்பால் உணர்த்தும் உவமை

**உள்ளே தள்ளு** - சிறைக்கு அனுப்பதல்

**உளப்பகுப்பாய்வு** - ஒருவரின் சிக்கலுக்கு அவரின் நடத்தை பேச்சு முதலியவற்றைக் கொண்டு தரப்படும் பண்டுவமுறை

**உளப்பாங்கு** - மனப்பாங்கு அடிமனம்

**உளரல்** - பொருள் புரியாப்பேச்சு

**உளறுவாயன்** - கமுக்கத்தைக் காப்பாற்றத் தெரியாமல் எளிதில் வெளியே சொல்லி விடுபவன்

**உளைச்சல்** - கை கால் மூட்டுப் பகுதியில் ஏற்படும் கடுமையான வலி

**உற்சாகம்** - ஒரு செயலைச் செய்வதற்குக் காட்டும் ஆர்வம்

**உற்பத்தி** - உருவாக்குதல், உண்டாக்குதல், விளைவித்தல்

**உற்ற** - மிகவும் வேண்டிய

**உற்றது** - நேரிட்டது, நடந்தவுண்மை, பேரிடர்

**உற்றளவு** - உள்ளளவு, சரியளவு

**உற்றறிதல்** - தொட்டறிதல், பயின்றறிதல்

**உற்றார்** - உறவோர், நண்பர்

**உற்றிடம்** - துன்பம் நேர்ந்த காலம்

**உற்று** - ஓர் உவமவுருபு

**உற்றுழி** - துன்புற்ற இடம் (காலம்)

**உறக்கம்** - தூக்கம்

**உறவாக்கு** - சந்து செய்வித்தல்

**உறவாடு** - தொடர்பு கொண்டு உறவு ஏற்படுத்திக் கொள்ளுதல்

**உறவினர்** - சொந்தக்காரர்

**உறிதல்** - உறிஞ்சுதல்

**உறு** - மிக்க உறுகின்ற

**உறுக்கு** - அதட்டுகை

**உறுக்குதல்** - அதட்டுதல், சினத்தல், தண்டித்தல், தாண்டுதல்

**உறுகண்** - துன்பம், வறுமை, நோய்

**உறுகணாளன்**- வறிஞன், தீவினையாளன்

**உறுகோள்** - பற்றுக்கோடு

**உறுத்தல்** - உடலில் எரிச்சலை ஏற்படுத்தும் உணர்வு

**உறுத்தை** - அணில்

**உறுதரல்** - தீண்டல், உறுத்துதல்

**உறுதல்** - இருத்தல், தங்குதல், நேர்தல், பொறுத்தல், வருந்துதல், பயன்படல், நிகழ்தல், பொருந்துதல், மிகுதல், சேர்தல், தொடுதல், ஒத்தல்;, நினைத்தல்

**உறுதி** - திண்மை, வலிமை

**உறுதி** - வலி, மேம்பாடு, மனந்தளர் வின்மை, விடாப்பிடி, பற்றுக்கோடு, நன்மை, பயன், இலாபம், நல்லறிவு, கல்வி

**உறுதி செய்தல்** - உண்மையறிதல்

**உறுதிபத்திரம்** - ஆவணம், உரிமை அளிப்பது

**உறுதிப்பாடு** - அசைக்க முடியாத நம்பிக்கை

**உறுதிமொழி** - சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடப்பதாக அளிக்கும் வாக்கு

**உறுநர்** - சேர்ந்தவர்

**உறுப்படக்கி** - ஆமை

**உறுப்பறை** - உறுப்புக்குறைத்தல்

**உறுப்பு** - உடல், உடலழகு, பயனுறுங் கருவிகள், பிரிவு, மெய்யெழுத்து, மரக்கொம்பு

**உறுபொருள்** - தானே வந்தடையும் பொருள்

**உறுமுதல்** - உறுமென்று ஒலித்தல், குமுறுதல், எழும்புதல்

**உறுவது** - வரற்பாலது, இலாபம், ஒப்பது

**உறுவரர்** - தேவர்

**உறுவல்** - துன்பம்

**உறை** - இருப்பிடம், வாணாள், ஆயுதக்கூடு, ஆளுமிடம், ஆடையுறை, கிணற்றுறை, குதிர், போர்வை, காணிக்கை, நீர்த்துளி, மழை, பாம்பின் நஞ்சு, உறைப்பு, மரக்கால்

**உறைக்கிணறு** - வட்ட உறைகளால் ஆன கிணறு, சுடுமண்ணறை யிட்ட கிணறு

**உறைத்தல்** - உதிர்த்தல், நீர் சொரிதல், துளித்தல், பெய்தல், உறுதி யடைதல், தாக்கிப் பயன் விளைத்தல், மோதுதல், மிகுதல், அதட்டுதல், அமுக்குதல்

**உறைதல்** - தோய்தல், தங்குதல், வாழ்தல், இறுகுதல், ஒழுகுதல், செறிதல், உறுதியாதல்

**உறைபதி** - உறைவிடம்

**உறைப்பு** - சுவைக்கூர்மை, காரம், ஊற்றம், வாய்ப்பு, கொடுமை, அழுத்தம், தொல்லை, மழை பெய்கை, தாக்குகை

**உறையுள்** - உறைகை, தங்குமிடம், துயிலிடம், வீடு, நாடு

**உன்மத்தம்** - மனக்கோளாறு, மன மயக்கம், வெறி

**உன்னதம்** - உயர்ச்சி, மேன்மை

**உன்னல்** - நினைக்கை,மனம்

**உன்னலர்** - பகைவர்

**உன்னிப்பு** - கவனிப்பு, ஊகிப்பு, அறிவுக் கூர்மை, குறிப்பு

**உன்னியம்** - உரிமை

**உன்னியர்** - உறவினர், சுற்றத்தார்

**உன்னு** - ஏவல், இழு, உந்து, எழும்பு, நினை, விரைந்தெழும்புகை

**ஊ** - தசை, நலமின்மை, ஊண், உணவு, இறந்தகால வினையெச்ச ஈறு

**ஊக்கம்** - உண்மை, உயர்ச்சி, உள்ளமிகுதி, மனவுறுதி, முயற்சி, வலி, குறிக்கோள்

**ஊக்கல்** - எழும்பல், ஏறுதல், தளர்தல், முயன்றுசெய்தல், நெகிழ்தல், கற்பித்தல்

**ஊக்கலர்** - முயற்சியுடையவர்கள்

**ஊக்கி** - முயற்சியூட்டி, தூக்கி

**ஊக்கு** - ஊக்கம்

**ஊக்குதல்** - ஆட்டுதல், தப்புதல், மேற்கொள்ளுதல், கருதுதல், முயலுதல்

**ஊகடன்** - முருங்கை

**ஊகம்** - ஊமத்தை, கருத்து, குரங்கு, ஊழ்கம், நினைவு, மனமயக்கம்

**ஊகளி** - துடைப்பம்

**ஊகி** - நுண்ணறிவுடையோன்

**ஊகித்தல்** - ஞாயம் சொல்லல், நினைத்தல், எண்ணுதல்

**ஊகை** - ஊகம், கல்வி

**ஊங்கண்** - முன்பு

**ஊங்கனோர்** - முன்னுன்னோர்

**ஊங்கு** - உயர்ச்சி, மிகுதி, மேம் பட்டது, முன்பு, நாடு

**ஊங்குதல்** - ஆடுதல், முன்னிலை யிடம், மிகுதல்

**ஊச்சுதல்** - உறிஞ்சுதல்

**ஊசரம்** - உவர்மண், உவர்நிலம், களர் நிலம், பூவிழலை

**ஊசல்** - அசைவு, ஊஞ்சல், ஒருவகைச் சிற்றிலக்கியப்பதனழிவு, மனத்தடுமாற்றம்

**ஊசல்வரி** - ஊஞ்சல் பாட்டு

**ஊசலாடல்** - அடிக்கடி போக்கு வரத்தாயிருத்தல், ஊஞ்சலாடல்

**ஊசற்சீர்** - மகளிர் ஊஞ்சலாடும்போது பாடும் பாடல்

**ஊசா** - மூக்குத்திக் கொடி

**ஊசி** - இழை வாங்கி, எழுத்தாணி, சூரிய கடிகாரத்தின் முள், துலாக்கோல் முள், குயவனார்

மட்கலமறுக்கும் கருவி, தையலூசி, கூர்மை, நிரைக்குழு, வடக்கு, சிறுமை

**ஊசி காந்தம்** - இரும்பிழுக்கும் காந்தக்கல்

**ஊசிப்பாலை** - ஒருவகைப் பாலை

**ஊசுதல்** - அழுகுதல், சீவுதல், சுவை கெடுதல்

**ஊஞ்சல்** - ஊசல். ஊசற்பாட்டு

**ஊட்டம்** - உணவு, செழிப்பு

**ஊட்டல்** - உண்பித்தல், அடைவித்தல்

**ஊட்டா** - வருத்தம், உண்டு பண்ணாமல்

**ஊட்டி** - உணவு, குரல்வளை, மழை, பறவை விலங்குகளின் உணவு

**ஊட்டித்தல்** - வயலை மட்டஞ்செய்தல்

**ஊட்டிரம்** - தேட்கொடுக்கி

**ஊட்டு** - உணவு, உண்பிக்கை

**ஊட்டுதல்** - உண்பித்தல், புகட்டுதல், நுகரச்செய்தல், சாயமேற்றுதல், நிறைத்தல்

**ஊட்டுப் பணியிடம்** - சமையலிடம்

**ஊட்டுப்புரை** - உணவளிக்கும் சாலை

**ஊட்டுவான்** - சமையற்காரன்

**ஊட்டுறுபச்சை** - நிறம் தோய்ந்த தோல்

**ஊட்டெலன்** - ஊட்டேன்

**ஊடணம்** - சுக்கு, மிளகு, மிளகுக் கொடி

**ஊடரம்** - உவர் மண், வைகறை

**ஊடல்** - கலவியிற்பிணங்கல், பிரிவு, வெறுப்பு

**ஊடலறுத்தல்** - ஊடுதல், இடையறுத்துச் செல்லுதல், வழக்கு தீர்த்தல்

**ஊடலுவகை** - ஊடலிலுண்டாகும் மகிழ்ச்சி

**ஊடலொழித்தல்** - ஊடல் நீக்குதல்

**ஊடாடுதல்** - பலகாற்பழகுதல், பெரு முயற்சிசெய்தல், நடுவில் திரிதல்

**ஊடாமை** - பிணங்காமை

**ஊடான்** - ஒருவகை மீன்

**ஊடு** - உள், ஊடென்னேவல், ஏழனுருபு, நடு

**ஊடுதல்** - புலத்தல், பிணங்குதல், ஊடுறுதல்

**ஊடுபோதல்** - ஒன்றோடொன்று கலத்தல், ஒன்றிப்போதல்

**ஊடுருவுதல்** - இடையிற் புகுந்து போதல்

**ஊடை** - நூற்றார், புடவையின் குறுக்கு நூல், மனைவி

**ஊடையம்** - நீரான்

**ஊண்** - உணவு, இரை

**ஊண்டழல்** - வயிற்றுத்தீ

**ஊணம்** - ஒருதேயம்

**ஊணர்** - ஊணத்தேயத்துள்ளோர், பேருண்பு யுண்டோர்

**ஊணூர்** - தழும்பின் என்னும் உபகாரியின் ஊர்

**ஊத்தை** - அழுக்கு, புலால்

**ஊதல்** - ஊதுதல், ஊதுகருவி, குளிர்காற்று, ஊணநோய், மிகுதி, பருத்தல், வீக்கம்

**ஊதா** - செம்மை கலந்த நீல நிறம்

**ஊதாரி** - வீண் செலவுக்காரன்

**ஊதாரித்தனம்** - அழிப்பு, வீண் செலவு

**ஊதிகை** - முல்லைக்கொடி

**ஊதியம்** - ஈட்டம், கல்வி, பயன், சேறு, பொருள், ஆக்கம்

**ஊது** - ஊதுகுழல்

**ஊதுகுழல்** - நெருப்பூதும் குழல், ஊதும் இசைக்குழல்

**ஊதுகொம்பு** - கொம்பிசைக்கருவி

**ஊதுதல்** - நுகர்தல், குழலூதுதல், வண்டு தேனை நுகர்தல்

**ஊதுபத்தி** - மணக்குச்சி

**ஊதுலைக்குருகு** - துருத்தி

**ஊதுவரம்** - வெள்ளி

**ஊதை** - காற்று, குளிர்காற்று, வாடைக் காற்று, ஊதை நோய்

**ஊந்து** - கச்சோலம்

**ஊம்** - ஊமை, மௌனம்

**ஊமச்சி** - நத்தை

**ஊமணை** - அழகற்றது, பேசுந் திறனற்றவர்

**ஊமத்தை** - ஒருசெடி

**ஊமல்** - கிழங்கு கழிந்தபனங் கொட்டை

**ஊமன்** - ஊமையன், கோட்டான், கூகை

**ஊமின்** - சிறுபூளைச் செடி

**ஊமை** - மூங்கைத்தன்மை, கீரி, இசைக் கருவி

**ஊமைக்குருளை** - வாய் திறவாக்குட்டி

**ஊமைத்தசும்பு** - வாயில்லாக் குடம்

**ஊமையன்** - மூங்கையன்

**ஊமையெழுத்து** - மெய்யெழுத்து

**ஊய்தல்** - பதனழிதல்

**ஊர்** - சிற்றூர், ஊர்தல், இடம், ஊரிலுள்ளவர், பரிவேடம்

**ஊர்க்குருவி** - அடைக்கலக்குருவி

**ஊர்கிழான்** - மருதநிலத்தலைவன்

**ஊர் கொண்டான்று** - நிரம்பு தலை யுடைந்தது

**ஊர் கொள்ளுதல்** - ஒளிபரத்தல்

**ஊர்கோலம்** - ஊர்வலம்

**ஊர்கோள்** - கதிரவனைச் சூழத்தோன்றும் வட்டம், பரிவேடம்

**ஊர்நத்தம்** - ஊரில் வீடு கட்டுவதற்காக ஏற்பட்ட இடம்

**ஊர் நேரிசை** - ஒரு சிற்றிலக்கியம்

**ஊர் வாரியம்** - ஊர் அவை

**ஊரண்டினார்** - கள்ளி

**ஊர்ணம்** - புரவ நடுக்குழி

**ஊர்தரல்** -பரத்தல்

**ஊர்தருதல்** - வீசுதல்

**ஊர்தல்** - சுழலுதல், ஏறுதல், பரத்தல், செல்லுதல், செலுத்துதல், சுழன்று விழுதல், கூடுதல், தழுவுதல்,

மேலிடுதல், மேலே தோன்றுதல், மேலே வருதல்

**ஊர்தி** - எருது, குதிரை, சிவிகை, தேர், யானை, வண்டி முதலிய ஊர்திகள்

**ஊர்ந்தான்** - ஏறுபவன், ஊர்தியில் செல்பவன்

**ஊர்ப்புலம்** - ஆமணக்கு

**ஊர்மன்று** - ஊர்ப் பொதுவிடம்

**ஊர்மி** - அலை, வருத்தம், வயிற்றின் மடிப்பு, விரைவு

**ஊர்முகம்** - போர்க்களம்

**ஊரல்** - ஈரம், உரிஞ்சல், உருதல், கிளிஞ்சில், குளுவையென்னும் பறவை, பசுமை

**ஊர்வசி** - வானுலக ஆடலரசி

**ஊரவர்** - ஊரார், ஊரிலுள்ளோர்

**ஊர்வன** - வயிற்றாலும் மார்பாலும் நகர்ந்து செல்லும் விலங்குகள்

**ஊர்வாரி** - ஊர்ச்சாய்கடை

**ஊரன்** - மருதநிலத்தலைவன், அழகன்

**ஊரா** - ஊர் மாடு

**ஊராஏற்றோர்** - வானூர்தி

**ஊராக்குதிரை** - குதிரைமலை

**ஊராட்சி** - ஒரு பழைய வரி

**ஊராண்மை** - மிக்க செயல், உதவுந் தன்மை, ஊரையாளுந்தன்மை, ஒப்புரவு, ஊரின்கண் மேம்பாடு டைமை

**ஊரார்** - ஊரவர், அயலவர்

**ஊரி** - இளமை, சங்கு, மேகம்

**ஊரிய** - சுரந்த

**ஊரின்** - ஏறின்

**ஊரின்னிசை** - ஒருவகைச் சிற்றிலக்கியம்

**ஊரீர்** - ஊரிலுள்ளோர்

**ஊரு** - தொடை, அச்சம், அட்டை

**ஊருகன்** - வணிகன்

**ஊருகால்** - நத்தை, சங்கு

**ஊருடை** - முருங்கை

**ஊருணி** - ஊரார் உண்ணு நீரெடுக்கும் குளம்

**ஊருதல்** - ஏறுதல், சுரத்தல், நகருதல்

**ஊரும்** - படரும், ஊர்ந்து செல்லும்

**ஊலுகம்** - ஆந்தை, கோட்டான்

**ஊவைன்** - மாந்தன்

**ஊழ்** - தலைவிதி, முடிவு, பழவினைப் பயன், முறைமை, முதிர்ச்சி, தடவை, கதிரவன், மலர்ச்சி, நீதி,வைரம்

**ஊழ்கோடு** - செவ்வியழிந்த கொம்பு

**ஊழ்த்தல்** - இறைச்சி, முடைநாற்றம், அளறு, பருவம், முதிர்தல், சுழலுதல், விரிதல், சிறத்தல், நினைத்தல்

**ஊழ்த்து** - செவ்வியழிந்தது

**ஊழ்துணை** - மனைவி

**ஊழ்மலர்** - முற்றிய மலர்

**ஊழ்முறை** - நெறிமுறை

**ஊழ்மை** - முறைமை

**ஊழல்** - அருவருக்கத்தக்கது, நிரையம், கெட்டது, தாறுமாறு,

ஊழற் குடித்தனம், குலைவு, உலைவு, நாற்றம், கேடு, பாடு, தளர்ச்சி, அறநெறிக்கும் சட்டத்திற்கும் புறம்பான செய்கைகள்

**ஊழி** - கடற்கோளால் உலகம் முடியுங்காலம், உகம், நெடுங் காலம், வாழ்நாள், உலகம், முறைமை, கேடு, அழிவு

**ஊழிக்கால்** - உலக முடிவுக் காலத்துத் தோன்றும் பெருங்காற்று

**ஊழித்தீ** - உலக முடிவுக் காலத்துத் தோன்றும் பெரு நெருப்பு

**ஊழிமுதல்வன்** - கடவுள்

**ஊழியம்** - தொண்டு, தொழில் சிறைப்பட்டோர் செய்யும் வேலை, அரசுப் பணி, படைப்பணி, கூலி

**ஊழியன்** - பணியாள்

**ஊழியான்** - கடவுள், நெடுங்கால் வாழ்க்கையுடைவன்

**ஊழில்** - அருவருப்பான சேறு

**ஊழிலை** - இலைச்சருகு

**ஊழுமுற்று** - முற்றுதலற்று

**ஊழுறுகோடல்** - முறையற்ற கோடல்

**ஊழுறுதல்** - குடைதல், முடிவு பெறுதல்

**ஊழை** - பித்தம்

**ஊழைக்குருத்து** - துளசி

**ஊளன்** - நரி, ஆணரி

**ஊளா** - நெடுவாய் மீன்

**ஊளான்** - கடல் மீன் வகை

**ஊளி** - பசி, ஒலி

**ஊளை** - கொள்ளுதல், ஒலிவிடல், குரவையிடுதல்

**ஊளை** - நரி முதலியவற்றின் ஒலி, தீநாற்றம், ஊத்தை சளி, மிகுதசை

**ஊறணி** - நீரூற்று, சாரு, வருவாய், தினவு, களிம்பு

**ஊற்று** - நீரூற்று, சுரத்தல், ஊன்றுகோல், ஆதரவு

**ஊற்று மரம்** - செக்கு வகை

**ஊற்றுக்களம்** - பலர் கூடுமிடம்

**ஊற்றுக்கோள்** - ஊன்றுகோள்

**ஊற்றுதல்** - வார்த்தல், வடித்தல்

**ஊற்றுநீர்** - மலைமடுவில் ஊறும் நீர்

**ஊறு** - இடையூறு, உறுதல், புண், துன்பம், பரிசம், கொலை, வல்லூறு

**ஊறுக** - மிகுக

**ஊறுகறி** - ஊறுகாய்

**ஊறுகோள்** - காயம், கொலை

**ஊறுதல்** - நீரூறுதல், கசிதல், பெருகுதல், உள்ளிறங்குதல்

**ஊறுநீர்** - ஊற்றுநீர்

**ஊறுபாடு** - இடையூறு, துன்பம், காயமுண்டாக்குதல்

**ஊறும்** - சுரக்கும்

**ஊறுமுலை** - பாலூறும் முலை

**ஊறை** - சவ்வரிசி

**ஊன்** - இறைச்சி, தசை, உடல் கொழுப்பு

**ஊன்கணார்** - மாந்தர்

**ஊன்புழுக்கு** - கறிச்சோறு

**ஊன்றல்** - இருகப்பிடித்தல், ஊன்றி நிற்றல், தள்ளல், சார்தல், நடுதல், நிறுத்தல், நினைத்தல், பதித்தல், மெய்யுணர்வு, எட்டினிலொன்று

**ஊன்று** - பாம்பு, சார்பு

**ஊன்றுகோல்** - பற்றுக்கோல், கைத்தடி

**ஊன்றுதல்** - நிலைபெறுதல், நடுதல், நிலைநிறுத்துதல், சென்றுதங்குதல், தீர்மானித்தல், தாங்குதல், குதித்தல், உறுத்துதல்

**ஊனக்கண்** - தசையால் ஆன கண், உயிர் பற்றிய நுண்ணறிவு

**ஊனம்** - குறைவு, குற்றம், பழி, அழிவு, தீமை, பிணம், கேடு,சாரம், தசை நீர்

**ஊனன்** - உடற்குறைபாடுடையவன்

**ஊனி** - அமுக்கிராக்கிழங்கு, தசை உடலிலுள்ளவன்

**ஊனோட்டி** - உடும்பிறைச்சி

**எ** - தமிழின் ஏழாம் உயிரெழுத்து, ஏழு என்னும் எண்ணின் குறி

**எஃகம்** - கூர்மை, நுதி, சக்கரம், ஆயுதம், வேல், வாள், சூலம், எறிபடை

**எஃகல்** - எக்குதல்

**எஃகு** - உருக்கு, கூர்மை, வேல் கத்தி முதலிய ஆய்தம், ஆயுதப் பொது, மனவொடுக்கம், எதிர்த்தாக்கு, உதைந்தேறு, நெகிழு, அவிழ், ஆராய்

**எஃகு** - யாது

**எஃகுக்கோல்** - பஞ்சடிக்கும் வில்

**எஃகுச்செவி** - நுனித்தறியும் காது

**எஃகுடை** - எழில், நுண்ணழகு

**எஃகுதல்** - அவிழ்தல், உதைத் தேறுதல், எட்டுதல், எதிர்த்தல், தாழ்ந்தெழும்பல், நீளல், நெகிழ்தல், நொய்தாக்கல், பஞ்சு கொட்டல், பருத்தி எடுத்தல்

**எஃகுதல்** - வில்லால் பஞ்சினை யடித்தல்

**எஃகுறுதல்** - அறுக்கப்படுதல்

**எள** - இகழ்ச்சிக் குறிப்பு, இரக்கக் குறிப்பு

**எக்கச்சக்கமாக** - வசமாக, தப்ப முடியாமல்

**எக்கச்செக்கம்** - இடக்கு, தாறுமாறு

**எக்கர்** - இடுமணல், மணற்குன்று, நுண் மணல்

**எக்களி** - இறுமாப்புடன் மகிழ்ச்சியை வெளிக்காட்டுதல், குதூகலம் அடைதல்

**எக்களிப்பு** - இறுமாப்புடன் கூடிய மகிழ்ச்சி, அளவு கடந்த மகிழ்ச்சி

**எக்கி** - நீர் வீசுங்கருவி

**எக்கியம்** - வேள்வி

**எக்குதல்** - உள்ளிழுத்தல்

**எகத்தாளி** - ஏளனம்

**எகர வினா** - 'எ' என்னும் வினா

**எகனை** - எதுகை என்பதன் கொச்சை வழக்கு

**எகிருதல்** - துள்ளுதல்

**எகிறு** - விசையுடன் துள்ளுதல், தாவுதல், அளவு மீறுதல், அதிகமாக உயர்தல்

**எகின்** - அன்னம், கவரிமா, புளிமா, புளியமரம், அழிஞ்சில், செம்மரம்

**எங்கண்** - எவ்விடம்

**எங்கணும்** - எவ்விடத்தும்

**எங்கு** - எவ்விடம்

**எங்ஙனம்** - எவ்விடம், எப்படி

**எச்சச்சொல்** - பெயர், வினை, உம்மை, சொல்பிரிநிலை, என, எதிர்மறை, சைக்குறிப்பு முதலிய குறைந்து நிற்குஞ் சொல்

**எச்சம்** - தொக்கு நிற்பது

**எச்சம்** - பறவைக் கழிவு

**எச்சம்** - மிச்சம், பிறங்கடை, மகன், எச்சில், கழிவு,நறுமணப்பொருள், குறைவு, பிறைவிக்குறை, எச்சக்குறிப்பு, தொக்கு நிற்பது, உருபுகளும் முற்றுகளும் முடியும் பெயரும் வினையும்

**எச்சரிக்கை** - கவனமாய் இருக்குமாறு முன்னறிவிப்பு செய்தல்

**எச்சரித்தல்** - கடிந்து கொள்ளல்

**எச்சரிப்பு** - எச்சரிக்கை

**எச்சவுரை** - மேற்கோள் காட்டி விரிவு படுத்திக் கூறல்

**எச்சில்** - உமிழ்நீர்

**எச்சு** - உயர்வு

**எஞ்சல்** - மிஞ்சுதல்

**எஞ்சாது** - ஒழியாமல்

**எஞ்சாமை** - குறையாமை

**எஞ்சிய சொல்லினெய்தக் கூறல்** - முப்பத்திரண்டு உத்திகளுள் ஒன்று

**எஞ்சுதல்** - குறைதல்

**எஞ்ஞான்றும்** - எப்போதும்

**எட்காற்பூச்சி** - சிலந்திப்பூச்சி

**எட்கிடை** - எள் கிடத்தற்கு வேண்டும் இடம்

**எட்டடிப்பறவை** - சிம்புட்பறவை

**எட்டனுருபு** - எட்டாம் வேற்றுமை உருபுகள்

**எட்டி** - வணிகர் பட்டம்

**எட்டிப்பூ** - வணிகத்தால் சிறந்தவர்க்கு அரசன் கொடுக்கும் பொற்பூ

**எட்டிப்புரவு** - வணிகத்தால் சிறந்தவர்க்கு அரசன் கொடுக்கும் நிலம்

**எட்டு** - ஓரெண், நடையளவு

**எட்டுணை** - எள்ளளவு

**எட்டுத்தொகை** - சங்க இலக்கிய நூல்களுள் ஒருவகை

**எட்டுதல்** - கிட்டுதல்

**எடுத்த செயல்** - பலகாற் கூறிய கூற்று

**எடுத்தலளவை** - நிறுத்தல் அளவை

**எடுபட்டவள்** - கற்பிழந்து குடும்பத்தின்று வெளிப்போனவள்

**எடுபடுதல்** - கைக்கொள்ளப்படுதல், நீக்கப்படுதல்

**எடுப்பு** - இறுமாப்பு, ஏற்றம்

**எடுபாடு** - குலைவு, நிலையின்மை

**எடுபிடி** - குற்றேவலர், கையாள்

**எடை** - நிறை

**எண்** - இலக்கம், எண்ணிக்கை, எண்ணுதல், எண்ணென்னு மேவல்

**எண் குணத்தார்** - எட்டுக் குணங் களையுடைய கடவுள்

**எண்சுவடி** - வாய்பாடு

**எண்சுவை** - எட்டு வகைச் சுவைகள்

**எண் பொருள்** - எளிதில் அடையும் பொருள்

**எண்ணம்** - கருத்து, நினைவு, நோக்கம், மதிப்பு

**எண்ணலளவை** - இலக்கத்தால் எண்ணுமளவை

**எண்ணலளவையாகுபெயர்** - அளவையாகு பெயர் நான்கனுள் ஒன்று

**எண்ணுலும்மைத் தொகை** - எண்ணுலும்மை தொக்கு நிற்பது

**எண்ணூல்** - கணித நூல்

**எண்ணெய் காப்பு** - எண்ணெய் முழுக்கு

**எண்ணேகாரம்** - எண்ணைச் சுட்டும் ஏகாரம்

**எண்பேராயம்** - அரசற்க்குற்ற எட்டு துணைவர்

**எண்மயம்** - எண்வகைச் செருக்கு

**எண்மர்** - எட்டு பேர்

**எண்மானம்** - எண்ணினை எழுத்தால் எழுதுதல்

**எண்மை** - எளிமை

**எண்மையன்** - எளியவன்

**எதிர்** - நேர்முரண், மாறு

**எதிர் கழறுதல்** - ஒத்தல்

**எதிர் காலம்** - வருங்காலம்

**எதிர் கொள்ளுதல்** - வரவேற்றல்

**எதிர் தோன்றல்** - உருவெளித் தோற்றம்

**எதிர் நிரனிறை** - நேரின்றி மாறி வரும் நிரனிறை

**எதிர் மலர்** - புதிய மலர்

**எதிர் மறுத்தல்** - எதிர் தடுத்தல்

**எதிர்கோள்** - வரவேற்றல்

**எதிர்ச்சுளை** - சுவைமிக்க பலாச் சுளை

**எதிர்செலவு** - வரவேற்க எழுந்து செல்லுதல்

**எதிர்த்தல்** - தாக்குதல்

**எதிர்த்தவன்** - போரிட்டவன், எதிரி

**எதிர்த்தோர்** - மாறுபட்டோர்

**எதிர்தல்** - சந்தித்தல்

**எதிரதா** - முன்கூட்டியே

**எதிரது போற்றல்** - ஓர் உத்தி

**எதிர்ந்தன்று** - மேற்கொண்ட தன்மைத்து

**எதிர்ந்தனன்** - ஏற்றுக் கொண்டான்

**எதிர்நிலையணி** - உவமானத்திற்குக் குறைவு தோன்றச் சொல்லுதல்

**எதிர்நூல்** - பிறர் கொள்கையை மறுக்கும் நூல்

**எதிர்ப்படுதல்** - முன்னே தோன்றுதல்
**எதிர்ப்பாடு** - சந்தித்தல்
**எதிர்ப்பு** - எதிர்த்தல், வருங்காலம்
**எதிர்பார்த்தல்** - ஒன்றை நோக்கியிருத்தல்
**எதிர்பேணுதல்** - எதிர்முகமாகச் சென்று உச்சரித்தல்
**எதிர்மறை** - மாறுபாடு, முரண்
**எதிர்மறையணி** - அணிவகை
**எதிர்மறையும்மை** - எதிர்த்து மறுத்துச் சொல்லும் உம்மை
**எதிராளி** - பகைவன், எதிர்வழக்காளி, போட்டி போடுபவன்
**எதிரிடை** - சமமானது, எதிர்ச்சொல்
**எதிருரை** - எதிர்மொழி
**எதிரூன்றல்** - போருக்கு எதிர்நிற்றல்
**எதிரெடுத்தல்** - வாந்தி எடுத்தல்
**எதிரே** - முன்னே
**எதிரேற்றல்** - எதிர் நிற்றல்
**எதிரேறு** - எதிர் கொள்ளல்
**எதிரொலி** - மாறொலி, எதிர்பட்டுத் திரும்பும் ஒலி
**எந்தை** - என் தந்தை, என் தமையன், என் தலைவன்
**எமன்** - இறப்புக்கடவுள்
**எயில்** - மதில், ஊர், நகரம்
**எயிறு** - பல், பல்லின் விளிம்பு, யானை, காட்டுப் பன்றிகளின் வாய்க்கோடு
**எயின்** - வேடர்குலம்
**எரி-தல்** - தீமூளல், சொலித்தல், ஒளிர்தல், எரிச்சலுண்டாதல், பொறாமை கொள்ளுதல், மனம் வருந்துதல், சினம் கொள்ளுதல், முதிர்தல், மிகுதல்
**எரு** - உரம், மலம், எருது, சாணம்
**எல்** - நெருப்பு, கதிரவன், வெயில், பகல், நாள், பெருமை, இகழ்மொழி
**எழில்** - ஒளி, வண்ணம், அழகு, தோற்றப்பொலிவு
**எழிலி** - மேகம்
**எழினி** - எழுகை, இடுதிரை
**எழுதாக்கிளவி** - வாய்மொழியிலேயே வழங்கிய வடமொழி
**எழுமை** - உயர்ச்சி, ஏழுமுறை பிறக்கும் பிறப்பு
**எழுவாய்** - தோற்றம், முதல், முதல் வேற்றுமை, கருத்தன்
**எள்ளு-தல்** - இகழ்தல், இகழ்ந்து நகைத்தல், ஒப்பாதல்
**எற்பாடு** - பகல் 20 நாழிகை முதல் 30 நாழிகை வரை, காலைப் பொழுது
**எற்று** - உதைத்தல், அடித்தல், தள்ளுதல்
**என்பிலி** - புழு
**என்பு** - எலும்பு, உடம்பு
**ஏ** - உயர்வு, பெருமை, மேனோக்குகை, இறுமாப்பு , உய ர்ச்சி, அம்பு, (பிரிநிலை, வினா, எண், தேற்றம்,

ஈற்றசை, விளி, இசை நிறை இவற்றைக் குறிக்கும் இடைச்சொல்)

**ஏக்கம்** - கவலை , விரும்பியது பெறாமையாலுண்டாகும் துக்கம் , அச்சம், ஆசை

**ஏக்கரவு** - ஏக்கம்

**ஏக்கழுத்தம்**- தலையெடுப்பு , இறுமாப்பு, வீற்றிருக்கை

**ஏக்கறவு** - இச்சை

**ஏக்கறுதல்** - ஆசையால் தாழ்ந்து நிற்றல், இச்சித்தல் , விரும்பி நிற்றல், இளைத்து இடைதல்

**ஏக்கெறிதல்** - கவலையொழித்தல் , அச்சமுறுதல்

**ஏக்கை** - இகழ்ச்சி

**ஏகத்துவம்** - ஒன்றாயிருக்குந்தன்மை

**ஏகதண்டி** - ஒற்றைக்கோல் ஏந்தும் துறவி

**ஏகதமன்** - பலருள் ஒருவன்

**ஏகதேசம்** - சிறுபான்மை, அரிது , குறைவு, நிந்தை , ஒருபுடை

**ஏகநாதன்** -தனித்தலைவன்

**ஏகபாதம்** - ஓ ர் இருக்கை

**ஏகபாவம்** - ஒரே தன்மை, ஒரே எண்ணம்

**ஏகபோகம்** - தனக்கே உரிய சிறப்பு ஒரு போகம்

**ஏகம்** - ஒன்று , தனிமை , முழுமை , மிகுதி, திப்பிலி

**ஏகராசி** - அமாவாசை

**ஏகல்** - கடத்தல், போகல்,கண்டவிடம், செல்லல், ஓங்கிய கற்கள்

**ஏகவசனம்** - ஒருமை

**ஏகன்** - ஒருவன் , கடவுள்

**ஏகாண்டம்** - முழுக்கூறு

**ஏகாதிபத்தியம்** - தனியரசு

**ஏகாந்தம்** - தனிமை , இரகசியம் , தகுதி , நிச்சயம் , தனித்திருக்குமிடம்

**ஏகாலி** - வண்ணான் , சவர்க்காரம்

**ஏகாவலி** - ஒற்றைவடம்

**ஏகுதல்** - போதல் , கடத்தல் , கழலுதல்

**ஏகை** - உமை , வயிரக் குற்றங்களு ளொன்றாகிய இரேகை

**ஏகோபித்தல்** - ஒன்றுபடுத்தல்

**ஏங்கல்** - ஆரவாரிக்கை , அழுகை , மயிலோசை, யாழ் நரம்பினோசை

**ஏங்குதல்** - ஒலித்தல் , இளைத்தல், மனம் வாடுதல், அழுதல் , அஞ்சுதல்

**ஏச்சு** - வைவு , பழிப்பு

**ஏசல்** - இழக்கை , பழிமொழி , பாட்டு வகை

**ஏசறவு** - விருப்பம் , தோத்திரம் , துக்கம், நாணம்

**ஏசறுதல்** - வருத்தமுறுதல், ஆசைப் படுதல், பழித்தல்

**ஏசுதல்** - இகழ்தல்

**ஏட** - தோழன் முன்னிலை

**ஏட ர்** - ஏட

**ஏட ர்** - தொழும்பர்

**ஏடகம்** - பூ, துகில் , தெங்கு

**ஏட்டுக்கல்வி** - குருவில்லாக்கல்வி , உலக அனுபவமில்லாத கல்வி

**ஏட்டை** - வறுமை , இளைப்பு , ஆசை, துன்பம், விலங்கேற்றின் பெயர்

**ஏடணை** - விருப்பம்

**ஏடமூகன்** - ஆற்றலற்றவன்

**ஏடல்** - கருத்து

**ஏடன்** - தோழன் , தொழும்பன்

**ஏடாகூடம்** - ஒழுங்கின்மை , தாறுமாறு

**ஏடு** - பனையேடு, பாலாடை, மென்மை, பூவிதழ் , புத்தகவிதழ் , வாழையிலைத் துண்டு, உடல், மேன்மை , குற்றம்

**ஏடுகோளாளன்** - கணக்கன்

**ஏடை** - ஆசை

**ஏண்** - எல்லை , வலிமை , உயர்ச்சி, பெருமை , கருவப்பேச்சு

**ஏணம்** - நிலைபேறு , மான்

**ஏணி** - எல்லை, ஏறுதற்கருவி , எண் , அடுக்கு , பாசறை , நாடு , மான்

**ஏணை** - புடவைத் தொட்டில், நிலை

**ஏத்தாளி** - புகழ்வோன்

**ஏத்து** - புகழ்கை, தேக்கம், ஆழமின்மை

**ஏத்துதல்** - துதித்தல், வணங்கல், புகழ்தல், வாழ்த்துதல், உயர்த்திக் கூறுதல்

**ஏதப்பாடு** - குற்றம் உண்டாகுகை

**ஏதம்** - குற்றம் , துன்பம் , கேடு , நோய்

**ஏதன்** - மூலகாரணம், கடவுள்

**ஏதி** - ஆயதப்பொது, வாட்படை, துண்டம்

**ஏதிலார்**- அன்னியர், அன்பில்லாதார், பகைவர், பரத்தையர், வறுமையாளர்

**ஏதின்மை** - அயலாந்தன்மை, அயன்மை, முன்னறியாமை, பகைமை

**ஏதீடு** - காரணமிட்டுரைத்தல்

**ஏது** - யாது , காரணம் , ஏதம்

**ஏந்தல்** - கையேந்துகை , தாங்குகை, தேக்கம், ஆழமின்மை, அரசன், பெருமை , உய ர்ச்சி, சிறந்தோன்

**ஏந்திலை** - வேல்

**ஏந்திழை** - பெண், அழகிய அணிகலன்

**ஏந்துதல்** - பூணுதல், சிறத்தல், மிகுதல், தாங்குதல், கைநீட்டுதல், சுமத்தல்

**ஏந்தெழில்** - மிக்க அழகு

**ஏப்பம்** - தேக்கெறிவு, உண்டபின் வரும் வாயொலி

**ஏம்** - ஏமம், செருக்கு, மயக்கம், இன்பம்

**ஏம்பல்** - ஆரவாரம் , அவா , களிப்பு , வருத்தம்

**ஏம்புதல்** - களித்தல் , வருந்துதல்

**ஏமம்** - ஏம் , இன்பம் , களிப்பு , காவல், பள்ளியறை, பாதுகாப்பு, இரா, பொன், உறுதி, ஐயம், மயக்கம், பைத்தியம் , இடுதிரை , திருநீறு

**ஏமருதல்** - களிப்புறுதல் , காக்கப்படுதல்

**ஏமன்** - இயமன்

**ஏமார்த்தல்** - காப்புச் செய்தல், பலப்படுத்துதல்

**ஏமார்தல்** - மனங்கலங்குதல், அரணாதல்

**ஏமாத்தல்** - அரணாதல், ஆசைப் படுதல், இன்புறுதல், கலக்க முறுதல், செருக்குறுதல்

**ஏமாப்பு** - பாதுகாப்பு, இறுமாப்பு, கருத்து

**ஏமாளி** - பேதை

**ஏமாற்றம்** - வஞ்சகம் , மனக்கலக்கம்

**ஏமாற்றுதல்** - வஞ்சித்தல், ஏமஞ் செய்தல்

**ஏமாறுதல்** - மோசம்போதல்

**ஏமுறுதல்** - மகிழ்வுறுதல், இறுமாத்தல், தன்மை திரிதல், வருந்துதல், மயங்குதல், பித்துப் பிடித்தல், பொருத்த முறுதல்

**ஏய்த்தல்** - தழுவல், ஒத்தல், வஞ்சித்தல் , பொருந்தச் சொல்லுதல்

**ஏய்தல்** - பொருந்துதல் , எதிர்ப்படுதல் , ஒத்தல் , அடைதல் , தகுதல்

**ஏர்** - உழவுமாடு , கலப்பை , உழவு , அழகு, எழுச்சி , நன்மை , ஒப்பு , பொருந்திய , ஓ ர் உவம உருபு

**ஏரண்டம்** - கண்டபேரண்டம், ஆமணக்கு

**ஏரணம்** - காரணங்காட்டி மெய்பிக்கும் அறிவியல்

**ஏர்பு** - எழுச்சி

**ஏர்மங்கலம்** - பொன்னேர் பூட்டிப் பாடும் மங்கலப் பாட்டு

**ஏரம்பன்** - விநாயகன்

**ஏரல்** - கிளிஞ்சல்

**ஏராண்மை** - உழவுத்தொழில்

**ஏராளம்** - மிகுதி

**ஏராளர்** - உழவர்

**ஏரெழுபது** - ஏரைப் புகழ்ந்து கம்பர் பாடிய ஒரு நூல்

**ஏல்** - பொருத்தம், உணர்ச்சி, மனவெழுச்சி, ஒரு விகுதி

**ஏல்வை** - நாள் , பொழுது , நீர்நிலை

**ஏல** - ஏடி , மிக , முன்னமே

**ஏலம்** - மயிர்ச்சாந்து , ஏலக்காய்ச் செடி, போட்டியிற் பலர்முன் ஏற்றும் விலை

**ஏலா** - தோழன் , தோழி , முன்னிலை

**ஏலாமை** - கூடாமை , பொருந்தாமை

**ஏவதும்** - ஒவ்வொன்றும் , எதுவும்

**ஏவம்** - குற்றம் , இகழ்ச்சி

**ஏவல்** - தூண்டுகை, பணிவிடை, கட்டளை, ஏவலாள் , வறுமை

**ஏவறை** - ஏப்புழை

**ஏவு** - அம்பு

**ஏவுதல்** - கட்டளையிடுதல், தூண்டி விடுதல், செலுத்துதல் , சொல்லுதல்

**ஏழகம்** - செம்மறியாட்டுக் கடா

**ஏழில்** - ஏழிலைப் பாலை, இசை, ஒருமலை

**ஏழை** - வறியோன் , அறிவிலி , பெண்

**ஏழைமை** - ஏழைத்தனம், அறியாமை, ஏழு

**ஏளனம்** - ஏளிதம் - அவமதிச் சிரிப்பு,கழ்ச்சி

**ஏறக்கட்டுதல்** - அடியோடு நிறுத்துதல், குவித்துச்சேர்த்தல்

**ஏற்கெனவே** - முன்னமே
**ஏற்கை** - வாங்குந்தன்மை, ஏற்பிசைவு
**ஏற்ப** - தக்கபடி , ஓ ர் உவம உருபு
**ஏற்படுத்துதல்** - உண்டு பண்ணுதல், இணங்கச்செய்தல் , நியமித்தல்
**ஏற்படுதல்** - உண்டாதல், தலைப்படுதல்
**ஏற்பது** - இரப்பது
**ஏற்பாடு** - ஒழுங்கு, உடன் படிக்கை, அமர்த்தல், நிறுவுதல்
**ஏற்பு** - இரப்பு , பொருத்தம்
**ஏற்புழி** - ஏற்குமிடத்து
**ஏற்றணை** - அரியணை, அரசு கட்டில்
**ஏற்றம்** - நினைவு , துணிவு , ஏறுகை, உயர்வு, புகழ், அதிகப்படி, மேன்மை, நீர்ப்பெருக்கு, நீரிறைக் குங்கருவி
**ஏற்றிழிவு** - உயர்வு தாழ்வு, மேடுபள்ளம்
**ஏற்று** - ஏறதல் , மரத்தினாற் செய்த மேடை
**ஏற்றுதல்** - ஒருங்குமுடித்தல், அடக்குதல் , துணிதல்
**ஏற்றுப்பனை** - ஆண்பனை, ஏற்றைப் பனை
**ஏற்றுமதி** - கப்பலிற்பண்ட மேற்றுகை, ஏற்றுமதிப் பண்டம்
**ஏற்றூண்** - இரந்துண்ணுமுணவு
**ஏற்றை** - ஆண்சிங்கம் , ஆண்கரடி
**ஏறடுதல்** - மேல் வைத்தல், மேற் கொள்ளுதல் , ஏற்றுக்கொள்ளுதல்
**ஏறப்போதல்** - குறித்துச் சொல்லுதல்
**ஏறவாங்குதல்** - முழுவதும் விலைக்குப் பெறுதல், நயமாக வாங்குதல், விலகியிருத்தல்
**ஏறு** - உயரம், இடபம், விலங் கேற்றின் பொது, ஆண்அரிமா, இடியேறு, எறிகை , அடிக்கை
**ஏறுகடை** - கடைசிமுடிவு
**ஏறுதல்** - உய ர்தல், முற்றுப்பெறுதல், வளர்தல், புகுதல், மோதுதல்
**ஏறுதழுவல்** - மணமுடிக்க காளையடக்கல்
**ஏறுபொழுது** - முற்பகல்
**ஏறுமாறு** - தாறுமாறு, கலுகை
**ஏறெடுத்தல்** - மேலெடுத்தல், நிமிர்தல்
**ஏனம்** - பாத்திரம், ஓலைக்கலம், காட்டுப் பன்றி , பாவம்
**ஏனல்** - கதிர், தினை , தினைப்புனம்
**ஏன்றுகோள்** - ஆதரிக்கை
**ஏனாதி** - மறவன் , படைத்தலைவன் , மந்திரி , நாவிதன்
**ஏனை** - மற்றது, ஒழிந்தது, எத்தன்மைத்து
**ஐ** - தமிழ் உயிரெழுத்தில் ஒன்பதாம் எழுத்து, இரண்டாம் வேற்றுமை உருபு, அழகு, வியப்பு, பெருமை, தலைவன், கணவன், அரசன், ஆசான், அத்தன், கடவுள், சிவன், எண் ஐந்து, நுண்மை, அம்பு,

ஐயம், அச்சம், கடுகு, சருக்கரை, முதலாளி , ஆண்டை, கொற்றவை

**ஐகலம்** - 'ஐ' என்னும் எழுத்து

**ஐங்கணை** - காதல் தெய்வத்தின் அம்புகள்

**ஐங்கணைக்கிழவன்** - மன்மதன்

**ஐங்கரன்** - பிள்ளையார்

**ஐங்குறு நூறு** - எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று

**ஐசிலம்** - இருள்மரம்

**ஐது** - அழகுள்ளது, நுண்ணியது, மெல்லியது, வியப்புடையது, இளகிய தன்மையது, செறிவின்மை

**ஐந்தடக்குதல்** - ஐம்பொறிகளையும் அடக்குதல்

**ஐந்தமுதம்** - சருக்கரை, தேன், தயிர், நெய், பால், முதலியவற்றைக் கலந்து செய்த அமுதம்

**ஐந்தரம்** - அழகுள்ளது, மந்தம், பனை, நெருக்கமின்மை

**ஐந்தரி** - இந்திராணி, கிழக்கு

**ஐந்தறிவு** - புலனறிவு

**ஐந்தாங்கால்** - திருமணத்திற்கு ஐந்து நாள் முன்னதாக நடும் பந்தக்கால்

**ஐந்தாம் படை** - எதிரிக்கு உதவும் குழு

**ஐந்தார்** - பனைமரம்

**ஐந்திணை** - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலங்கள்

**ஐந்திரம்** - தொல்காப்பியத்திற்கு முந்து நூலாக இருந்து வழங்கி மறைந்த பண்டைத் தமிழிலக்கணம், இந்திய மொழிகளுக்கு இலக்கணம் வகுக்க எடுத்துக்காட்டாக விளங்கியதும், பாணினியின் வடமொழி இலக்கணத்திற்குக் காலத்தால் மிகவும் தொன்மையானதும் ஆகிய முந்துதமிழ் பொது இலக்கண நூல், ஐந்து அங்கங்களைக் கொண்ட ஆன்முகக் கால கணிய நூல்

**ஐந்திறம்** - பஞ்சாங்கம், யோகவகை, சிற்பநூல், கிழக்குதிசை

**ஐந்து** - 5 என்னும் எண், ஐம்புலன், ஐம்பொறி, ஐந்திரம்

**ஐந்து முகத்தோன்** - சிவபெருமான்

**ஐந்துண்டி** - கடித்தல், நக்கல், பருகல், மெல்லல், விழுங்கல் எனும் ஐவகையுணவு

**ஐந்துருவாணி** - தேரின் அச்சாணி

**ஐந்துறுப்படக்கி** - ஆமை

**ஐந்தெழுத்து** -'சிவயநம' என்னும் சைவ மந்திரச்சொல் நமசிவாய, பஞ்சாட்சரம்

**ஐந்தை** - சிறுகடுகு

**ஐந்தொகை** - வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை என்பன

**ஐந்தொகைக்குறிப்பு** - வரவு, செலவு, கொள்முதல், விற்றுவரவு, இருப்பு ஆகியவற்றின் விளக்கம் அடங்கிய கணக்கு

**ஐந்தொழில்** - படைத்தல், காத்தல், அழித்தல், காத்தல், அருளல் ஆகிய

ஐந்து தொழில்களையும் செய்யும் சிவன்

**ஐந்நூறு** - ஐந்து நூறு, நூற்றின் ஐம்மடங்கு

**ஐப்பசி** - ஒரு தமிழ் மாதம்

**ஐம்பது** - ஐந்து பத்து

**ஐம்பால்** - ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின் பால் என்னும் பால்பகுப்பு

**ஐம்பான்முடி** - மகளிர் கூந்தலின் கொண்டை, குழல், பனிச்சை, முடி, சுருள் என்ற ஐவகை முடி

**ஐம்புலன்** - மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் உணர்வுப் புலன்கள்

**ஐம்பூதம்** - நிலம், நீர், காற்று, நெருப்பு, வான்

**ஐம்பெருங்காப்பியம்** - சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, வளையாபதி, மணிமேகலை, குண்டலகேசி என்னும் ஐம்பெரும் தமிழ்க் காப்பியங்கள்

**ஐம்பெருங்குழு** - அரசருக்கு ஏடலுரைக் கூறும் அமைச்சர், படைத்தலைவர், தூதர், ஒற்றர், அறமுறக்கும் அறிஞர்கள் என்னும் அரச தலைவர்கள்

**ஐம்முகி** - ஆமணக்கு

**ஐமவதி** - மலைமகள் (பார்வதி)

**ஐய** - வியக்கத்தக்க, அழகிய, சிறிய, மிச்சம், ஈழவழக்கு, சந்தேகம்

**ஐயஉணர்வு** - உறுதியற்ற அறிவு, தெளிவின்மை

**ஐயக்கடிஞை** - பிச்சைப்பாத்திரம், இரத்தல் ஏனம்

**ஐயகோ** - துயர்வெளிப்பாட்டுச்சொல்

**ஐயங்கன்** - பேய், பிசாசு

**ஐயஞ்சு** - இருபத்தைந்து, நிலப்பனைக் கிழங்கு, நிலப்பனை

**ஐயடிகள்** - மதிப்புமிக்கோர்க்கு வழங்கும் சிறப்புச்சொல்

**ஐயநாடி** - சிலேத்துமநாடி

**ஐயப்படுதல்** - சந்தேகப்படுதல், நம்பாமை, அச்சங்கொள்ளுதல்

**ஐயப்பாடு** - சந்தேகம், அவநம்பிக்கை

**ஐயம்** - ஒன்றின் மேல் ஏற்படும் தெளிவுக்குறைவு, அகப் பொருட்டு ரைகளுள் ஒன்று, ஒரு பொருளை அதனின்று வேறுபட்ட பல பொருள்களாக உணர்தல், இரப்புணவு (பிச்சை), இரப்போர்க் கலம்

**ஐயம்புகுதல்** - பிச்சை எடுத்தல்

**ஐயர்** - தந்தையார், முனிவர், உயர்ந்தோர், வானோர், வீர சைவரின் பட்டப்பெயர், வேதியரின் பட்டப்பெயர், பாதிரிமாரின் பட்டப்பெயர்

**ஐயரி** - அழகிய செவ்வரி

**ஐயவாதி** - தவறான கருத்துகளை முன்வைத்து அறத்தையும் அறமற்றவையும் தீர்மானிப்பதில் வல்லவர்

**ஐயவி** - கடுகு, ஒருநிறை, வெண்சிறு கடுகு, துலாமரம், கடுக்காய், அம்புகளின் கட்டு

**ஐயவித்துலாம்** - ஒரு மதில் பொறி

**ஐயள்** - வியத்தகு பேரழகி

**ஐயன்** - அரசன், தலைவன், மூத்தோன், முனிவன், ஆசான், தந்தை, கடவுள், ஐயனார், உயர்ந்தோன்

**ஐயன்பாழி** - சாத்தன் கோயில்

**ஐயனார்** - சாத்தன், எல்லைக்காவல், தெய்வம், சிவனார் மைந்தன் ஐயப்பன்

**ஐயா** - மதிப்புச்சொல், தலைவன்

**ஐயாறு** - திருவையாறு

**ஐயுறு** - சந்தேகம் அடைதல், சந்தேகித்தல்

**ஐயை** - தலைவி, காளி, குருபத்தினி, மகள், பார்வதி, துர்க்கை, ஆயர் குலப்பெண்

**ஐயோ** - துக்கம், இரக்கம் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒரு குறிப்புச்சொல்

**ஐராவணம்** - கீழ்த்திசைக்குரிய யானை, பட்டத்து யானை

**ஐராவணன்** - இந்திரனின் யானை, கீழ்த்திசைக்குரிய யானை

**ஐவகை மன்றம்** - வெள்ளிடை, இலஞ்சி, நெடுங்கல், பூதச்சதுக்கம், பாவை என பூம்புகாரில் இருந்த ஐந்து மன்றங்கள்

**ஐவகைத்தாயார்** - ஈன்றதாய், ஊட்டுந் தாய், சீராட்டுந்தாய், கைத்தாய், செவிலித்தாய் என ஐவகை அன்னையர்

**ஐவணி** - மருதோன்றி

**ஐவர்** - ஐம்பொறிகள், ஐம்புலன்கள், ஐந்து பாண்டவர்கள்

**ஐவளம்** - ஐந்து வகை வளங்கள் (கறி,கோட்டம், குங்குமம்,காரகில், தக்கோலம்)

**ஐவனம்** - காட்டு நெல், மலைநெல்

**ஐவாய் விலங்கு** - கரடி, அரிமா

**ஐவாய்மான்** - அரிமா

**ஐவிரலி** - கொடி வகை, ஐவேலி, கொவ்வை

**ஐவேலி** - ஐந்து வேலி

**ஒ** - ஒக்க, ஒத்து, சமமாய் இருத்தல், பொருந்துதல், ஏற்றவாறு இருத்தல், ஒன்று போலிருத்தல்

**ஒ** - தமிழ்மொழி உயிரெழுத்துகள் 12-இல் பத்தாவது எழுத்து

**ஒஃகுதல்** - பின்வாங்குதல்

**ஒக்கடித்தல்** - தாளங்கொட்டுதல், செப்பனிடுதல்

**ஒக்கல்** - உறவினர், சுற்றத்தார்

**ஒக்கலித்தல்** - ஆவலங்கொட்டுதல்

**ஒக்கலை** - இடுப்பு

**ஒக்கு** - இடுப்பு

**ஒக்குதல்** - ஒத்திருத்தல், கொப்புளித்தல், பிற்படவிடுதல்

**ஒகரம்** - மயில்

**ஒசித்தல்** - முறித்தல், அசைத்தல்

**ஒசிதல்** - அடங்குதல், சாய்தல், ஒடிதல், நாணுதல், வருந்துதல்

**ஒட்ட** - முற்றிலுமாக, முழுமையாக, குட்டையாக, இறுக்கமாக, நெருக்கமாக

**ஓட்டகம்** - இரட்டைத் திமிலும் நெடிய கழுத்தும் உள்ள பாலைவன விலங்கு

**ஓட்டச்சிவிங்கி** - நீண்ட கழுத்தும் கால்களும் உள்ள ஓர் ஆப்பிரிக்க விலங்கு

**ஓட்டடை** - சுவர், மூலைகளில் கூரைகளில் படிந்து திரித்திரியாக தொங்கம் தூசி

**ஓட்டடைக்கம்பு** - ஒட்டையடிக்க உதவும் மெல்லிய நீளமான துடைப்பம் சுற்றப்பட்ட கம்பு

**ஓட்டி** - செதிலில்லா சாம்பல் நிறக் கடல்மீன், இடைச்சொல், நெருங்கி, அடுத்து, தொடர்ந்து, சார்ந்து

**ஓட்டிக்கிரட்டி** - ஒன்றுக்கு இருமடங்கு

**ஓட்டியாணம்** - பெண்களின் இடுப்பு அணி

**ஓட்டில்** - ஓரத்தில்

**ஓட்டு** - இணை, சேர், பற்று, பிடி, ஒன்று, மறை(த்தல்), பெண்குஞ்சு, வயலில் அறுத்தபின் உள்ள தாள், தண்டு

**ஓட்டுக்கேள்** - மற்றவர் உரையாடலை மறைந்திருந்து கேட்டல்

**ஓட்டுண்ணி** - ஒன்றைச் சார்ந்து உயிர்ச் சத்தை உறிஞ்சி வாழும் உயிரி

**ஓட்டுத்திண்ணை** - சுவற்றோடு ஒட்டியுள்ள அமர்வதற்கான சிறு திண்ணை மேடை

**ஓட்டுத்துணி** - சிறுஆடை

**ஓட்டுத்துத்தி** - துண்டுத்துணி, ஒருவகைச் செடி, அன்பால் உண்டான

**ஓட்டுத்தையல்** - ஒட்டுத்துணியிட்டுத் தைத்திடும் வேலை

**ஓட்டுதல்** - நெருக்கம், அன்பால் பிணைதல், இணக்கமாதல்

**ஓட்டுநர்** - நண்பர், தோழர்

**ஓட்டுப்பலகை** - மெல்லிய பலகைகளை ஒன்றன் மேல் ஒன்றாக ஒட்டப்பட்ட பலகை

**ஓட்டுப்பழம்** - இருவேறு வகையான ஒரே இன மரங்களை இணைத்து உருவாக்கி வளர்த்த பழம்

**ஓட்டுப்புதவும்** - இரட்டைக்கதவு

**ஓட்டுப்புழு** - புறாமுட்டி என்னும் செடி வகை

**ஓட்டுமீசை** - நடிகர்கள் பயன்படுத்தும் செயற்கை மீசை

**ஓட்டு மொத்தம்** - அனைத்தும், எல்லாமாக, ஆகமுழுவதும்

**ஓட்டுரிமை** - நட்பு, உடந்தை

**ஓட்டுவாரொட்டி** - தொற்றுநோய்

**ஓட்டுறவு** - தொடர்பு, பாசவுறவு, அன்பால் உருவான உறவு

**ஓட்டை** - ஒட்டகம்

**ஓட்டோலக்கம்** - வெற்றி, பெருங் கூட்டம், பகட்டு

**ஓட்பம்** - அழகு, அறிவு, மேன்மை, விளக்கம்

**ஒடிசில்** - கவண்

**ஒடித்தல்** - முறித்தல், அழித்தல்

**ஒடிதல்** - முறிதல், கெடுதல்

**ஒடு** - முதுபுண், நிலப்பாலை, ஓர் உருபு, இடைச்சொல்

**ஒடுங்கி** - தன் உறுப்புகளை உள்ளொடுக்கும் இயல்புள்ள ஆமை

**ஒண்டன்** - ஆண்நரி, நரி

**ஒண்டி** - தனி, தனிமாந்தன், அண்டிஇரு

**ஒண்டிக்கட்டை** - துணையில்லாமல் வாழ்பவர்

**ஒண்டிக்குடி** - ஒருவர் குடியிருக்கும் வீட்டில் வேறொருவர் வாடகைக் கொடுத்து குடியிருத்தல், தனியொருவர் மட்டும் குடியிருப்பது

**ஒண்டு** - பதுங்கு, ஒளிந்து கொள், ஒதுங்கு

**ஒண்டொடி** - பெண்

**ஒண்ணுதல்** - இயலுதல், கூடுதல், தக்கதாதல், ஒள்ளிய நெற்றியள், பெண்

**ஒண்மை** - விளக்கம், கூரிய அறிவு, ஒளி, சிறப்பு, இயற்கையழகு, நன்மை, அறநெறி,ஒழுங்கு ,மிகுதி

**ஒத்தல்** - கேள்வியால் தெளிந்தவற்றில் மனம் ஊன்றி நிற்கை, நடு, பொருந்துதல், போலுதல்

**ஒத்தாசை** - உதவி

**ஒத்துக்கொள்(ளு)தல்** - ஏற்றுக் கொள்ளுதல், பிழையை ஒப்புக் கொள்ளுதல், கணக்கிலேற்றுக் கொள்ளுதல்

**ஒத்து-தல்** - தாளம் போடுதல், தாக்குதல், ஒற்றுதல், தள்ளுதல்

**ஒதனை** - ஒரு மருந்து

**ஒதி** - ஒருவகை மரம்,ஒதியமரம்

**ஒதியன்** - ஒதியமரம்

**ஒதுக்கம்** - தனிமை, நடை, பதுங்குகை, பின்னிடுகை, இருப்பிடம், மறைவிடம், மகளிர் பூப்பு, தங்குமிடம், ஓர் அமங்கல இசை

**ஒதுக்கிடு** - பழுதுநீக்கு, தனித்து வைத்தல்

**ஒதுக்கிவை** - விலக்கிவை, தள்ளிவை

**ஒதுக்கீடு** - உரியதைப்பிரித்துத் தருவது

**ஒதுக்கு** - ஒருபக்கமாகக் கொண்டு சேர்த்தல்

**ஒதுக்குப்புறம்** - தனிஇடம், ஆள்நட மாட்ட மற்ற தனிஒதுங்கிடம்

**ஒதுங்கு** - விலகு, தள்ளிச்செல்

**ஒப்படை** - சேர்ப்பித்தல், பொறுப்பில் விடுதல்

**ஒப்பந்தக்காரர்** - கட்டுமானம், ஆளுமை செய்தல் போன்ற பணிகளைக் குறிப்பிட்ட தொகையைப் பெற்றுக் கொண்டு செய்தல்

**ஒப்பந்தப்புள்ளி** - செலவு விளக்க அட்டவணை ஆவணம்

**ஒப்பந்தம்** - நடவடிக்கை, செயல்பாடுகள் உடன்படுக்கை

**ஒப்பம்** - கையொப்பம், கைச்சாத்து

**ஒப்பற்ற** - மீச்சிறந்த

**ஒப்பனை** - அழகு புனைதல்

**ஒப்பாய்வு** - இருவேறு தலைப்புப் பொருள்களுக்கான பொது அமைப்பை ஒப்பிடும் ஆராய்ச்சி

**ஒப்பாரி** - இறந்தவர் குறித்து இழவு வீட்டில் அழும் புலம்பற்பாட்டு

**ஒப்பாரி-வை** - புலம்பு, பாடி அழு

**ஒப்பி** - மனனம் செய்து ஒப்பித்தல்

**ஒப்பிடு** - இரண்டின் ஒப்புமை வேற்றுமைகளை மதிப்பிடல்

**ஒப்பீடு** - ஒப்பிட்டுப் பார்க்கும் செயல்

**ஒப்பு** - இணங்கு, ஏற்றுக் கொள், இணை, சமம், பொருத்தம்

**ஒப்புக்கு** - பெயருக்கு (செய்தல்) மனம் ஒன்றி செய்யாமை, உண்மை யின்றி சடங்குக்காக

**ஒப்புக்குச்சப்பாணி** - ஒப்புக்காகக் குழுவம் சேர்க்கப்படும் ஒருவர்

**ஒப்புக்கொடு** - கையளி

**ஒப்புக்கொள்** - ஏற்றுக்கொள், ஆம் அல்லது உண்மை என்பதை ஏற்றல்

**ஒப்புதல்** - உடன்பாடு, சம்மதம், இசை வளித்தல்

**ஒப்புரவு** - நன்றி, உதவி, அன்பு குணம்

**ஒப்பேற்று** - சரிக்கட்டு, முடிவிற்குக் கொண்டு வா, பூர்த்தி செய்

**ஒப்பேறு** - தேறு, வெற்றிபெறு, கரைசேர்

**ஒம்மல்** - ஊர்ப்பேச்சு

**ஒய்யாரம்** - நளினம், ஒயில், மகிழ்வான நிலை, ஆரவாரம்

**ஒய்யாரி** - பிறரை ஈர்க்கும் நளினமான பெண்

**ஒயில்** - ஒய்யாரம்

**ஒயில் கும்மி** - ஒயிலாட்டம், கைகளில் துணிகளை வைத்து ஆட்டிக் கொண்டு தெய்வப் பெருமையைப் பாடிக் கொண்டு தென்தமிழ் நாட்டில் ஆண்கள் மட்டுமே ஆடும் ஒருவகை ஆட்டம்

**ஒயிலாட்டம்** - ஒயில்கும்மி

**ஒரட்டுக்கை** - இடக்கை

**ஒரணை** - இரட்டை

**ஒரி-த்தல்** - ஒற்றுமையாயிருத்தல்

**ஒரு** - ஒன்று என்னும் எண்ணின் பெயரடை, ஒன்றைக் குறிப்பிடும்

**ஒருஉமுரண்** - முதலாம் சீரினும் நான்காம் சீரினும் முரண்படுவது

**ஒருஉவண்ணம்** - ஆற்றொழுக்காகப் பொருள் கொண்டு செல்லுஞ்சந்தம்

**ஒருக்களி** - விலாப்புறமாகச் சாய்ந்து படுத்தல், பக்கவாட்டில் சாய்ந்த நிலை, கதவைப் பாதி மூடிய நிலையில் திறந்து வைத்தல்

**ஒருக்கால்** - சிறிதுநேரம், ஒருவேளை, ஒருமுறை, ஒருதரம்

**ஒரு காலத்திலும்** - ஒரு போதும் (எதிர்மறைவினைகளுடன்) எக்காரணம் கொண்டும்

**ஒருகாலம்** - கடந்த காலம்

**ஒருகுடைகீழ்** - ஒரே நிருவாகத்தின் கீழ்

**ஒரு கை கொடு** - வினைமுடிக்க உதவு

**ஒரு கை பார்** - திடமான ஒரு முடிவு, சவால் விடுதல், சுவை உணவை வயிறு கொண்ட மட்டும் உண்

**ஒருங்கமை** - ஒன்று சேர்

**ஒருங்கிணை** - ஒன்றாக்கு, இணை, ஒன்றாகச் சேர்

**ஒருங்கிணைந்த** - பல கூறுகளை உள்ளடக்கிய

**ஒருங்கிணைப்பாளர்** - இணைக்கும் பொறுப்பை ஆள்பவர்

**ஒருங்கிணைப்பு** - ஒன்றிணைக்கும் செயல், இணைக்கும் தொடர்பு

**ஒருங்கு** - ஒன்றாக

**ஒருங்கே** - ஒரே சமயத்தில், ஒன்றாக, மொத்தமாக, முழுமையாக

**ஒருசந்தி** - ஒரு நாளைக்கு ஒருமுறை

**ஒரு சொட்டு** - மிகக்குறைந்த அளவுமட்டும் உணவு கொள்ளும் நோன்பு

**ஒருத்தர்** - ஒருவர்

**ஒருத்தன்** - ஒருவன், ஒப்பற்றவன், கடவுள்

**ஒருதலைக்காமம்** - ஒரு பக்கமான காதல்

**ஒருதலையன்** - கொக்கு

**ஒருதலைவலி** - நரம்புவலி

**ஒருதாரை** - ஒருமுறை, ஒரு பக்கக் கூர்மை, இடையீடில்லாத நீரொழுக்கு

**ஒருபது** - பத்து

**ஒருப்பாடு** - முயற்சி, உடன்பாடு, ஒருதன்மையாகை, ஒன்றி நிற்கை, மனத்திண்மை

**ஒருமா** - இருபதில் ஒருகூறாகிய கீழ் வாயிலக்க எண்

**ஒருமி-த்தல்** - ஒன்றுசேர்தல்

**ஒருமுகவெழினி** - ஒரு பக்கமாக இழுக்கப்படும் திரைச்சீலை

**ஒருமை** - ஒற்றுமை, தனிமை, ஒரே தன்மை, ஒப்பற்ற தன்மை, ஒருமை எண் கூற்று, மனமொன்றுகை, இறையுணர்வு, கருத்துரை முடிவு, துறக்கம், மெய்ம்மை, ஒரு பிறப்பு

**ஒருவாமை** - அகலாமை, நீங்காமை, பிறழாமை

**ஒருவாய்க்கோதை** - ஒருகட்பறை

**ஒருவாற்றான்** - ஒருவாறு, ஒருவழியாக

**ஒரு வியாழ வட்டம்** - பன்னிரண்டாண்டுகள்

**ஒருவு** - ஆடு, ஒருவுதல், நீங்குகை, நீக்கு, தவிர், விலகு, விலக்கு, தப்பு, ஒருவன்னேவல், நீங்கென்னேவல்

**ஒரூஉத்தொடை** - அளவடியுள் நடுவிரு சீர்கள் ஒழிய முதற்சீர்க் கண்ணும் நான்காம்சீர்க்கண்ணும் மோனை முதலியன வரத் தொடுப்பது

**ஒரோவழி** - சிறுபான்மை

**ஒரோவொருவர்** - தனித்தனி, ஒவ்வொருவர்

**ஒல்** - ஒலிக்குறிப்பு, முடிவிடம், ஒல்லென்னேவல்

**ஒல்க** - சாய

**ஒல்கல்** - ஒல்குதல்

**ஒல்காமை** - தளராமை, நாணாமை, கூசாமை

**ஒல்கு** - தளர், கீழ்ப்படி, குழை, குறை, சுருங்கு

**ஒல்குதல்** - தளர்தல், குழைதல், நுடங்குதல், சுருங்குதல், ஒதுங்குதல், வளைதல், குறைதல், வறுமைப்படுதல், மேலே படுதல், மனம் அடங்குதல், கெடுதல், நாணுதல், எதிர்கொள்ளுதல்

**ஒலரி** - சிறுமீன்

**ஒல்லல்** - இயலுகை, இசைதல், இயலல், பொருந்துதல், பொத்துதல், ஊடல் தீர்த்தல்

**ஒல்லாங்கு** - பொருந்தும் வழி

**ஒல்லாதவர்** - பகைவர்

**ஒல்லாமை** - இகழ்ச்சி, இல்லாமை, அவாவின்மை

**ஒல்லார்** - பகைவர், நேரார்

**ஒல்லி** - ஒடுங்கினது, துடைப்பம், மெலிந்தவர், மென்மை

**ஒல்லித்தேங்காய்** - உள்ளீடற்ற தேங்காய்

**ஒல்லு** - கூடு, இணங்கு, பொருத்து

**ஒல்லுதல்** - இயலுதல், ஆற்றுதல், உடன் படுதல், தகுதல், பொருந்துதல், பொறுத்தல், ஒலித்தல்

**ஒல்லுநர்** - நண்பர்

**ஒல்லை** - விரைவு, பழைமை, சிறுமை, கடுப்பு, காலந்தாழ்தலின்றி

**ஒல்வது** - இயல்வது

**ஒல்வழி** - பொருந்திய இடத்து, பொருந்திய காலத்து

**ஒலி** - ஓசை, காற்று, சொல், அமலை, அரவம், தொனி, நாரம், ஒலியென் னேவல்

**ஒலிசை** - மணமகளின் சுற்றத்தார் திருமணத்தின் நான்காம்நாள் மண மகனுக்குக் கொடுக்கும் வரிசை

**ஒலித்த** - தழைத்த

**ஒலித்தல்** - தழைத்தல், ஒலி செய்தல், ஆடை அழுக்கு அகற்றுதல், விளக்குதல், ஒலிசெய்தலைக் குறித்து வரும் பிறபொருள்

**ஒலிதல்** - தழைத்தல்

**ஒலிப்பு** - பேரொலி

**ஒலிமுகவாயில்** - கோட்டையின் முன்புற வாயில், நகரம் அல்லது முன்புற வாயில்

**ஒலியல்** - தழைக்க,தளிர், மாலை, ஈயோட்டுங்கருவி,ஆறு,தெரு,மேலாடை, பீலிக்குஞ்சம்

**ஒலியற்கண்ணி** - தளிர்மாலை

**ஒலியன்** - ஆடை

**ஒலியன் காரியம்** - எழுத்து

**ஒலியெழுத்து** - மொழி முதற்காரண மாகிய அணுத்திரள்

**ஒலிவு** - ஒருவகை மரம், ஒரு வாக்கியம்

**ஒலுகு** - திண்டு

**ஒலுங்கு** - பெருங்கொசு

**ஒலோவு** - குறைவாகு

**ஒவ்வாப்பக்கம்** - தருக்கத்தில் பொருந்தாதப்பக்கம்

**ஒவ்வாமை** - இசையாமை, பொருந் தாமை, ஏற்காமை, இயலாமை, தகுதியில்லாமை

**ஒவ்வுதல்** - இணங்குதல், பொருந்துதல்

**ஒவ்வுறல்** (ம) ஒவ்வுறுதல் - பொருத்த முறல், ஒப்பாதல்

**ஒவ்வோர்க்குழி** - நிலத்திலே சிறுவர் எழுதும் அரிக்குழி

**ஒவ்வோன்** - ஒப்பிலி, ஒப்பற்றவன்

**ஒழி** - முடி, தள்ளு, தவிர், அழி, கொல், துற, ஓய், நீங்கு, சா, முடித்து, விடு, ஒழியென்னேவல்

**ஒழிகடை** - பெரும்பான்மை, முடிந்த நிலை

**ஒழிகை** - ஒய்தல், விடுகை

**ஒழித்தல்** - அழுத்தல், கொல்லல், ஒதுக்குதல், குறைத்தல், தவிர்த்தல், தீர்த்தல், துறத்தல், முடித்தல்

**ஒழித்தார்** - ஏனையோர், தவிர்த்தோர், மற்றவர்

**ஒழித்துக்காட்டணி** - ஒரு பொருளை ஓர் இடத்தில் இல்லையென மறுத்து மற்றோர் இடத்தில் உண்டென்று ஏற்படுத்திக்காட்டும் அணி

**ஒழிதல்** - எஞ்சுதல், தங்குதல், அழிதல், சாதல், நீங்கல், வெறுமையாதல், ஓய்தல்

**ஒழிபணி** - பலவற்றைச் சுருக்கிக் காட்டுவது

**ஒழிப்பு** - விலக்கு, தவிர்ப்பு

**ஒழிப்புயர்வு நவிர்ச்சியணி** - ஓர் அலங்காரம்

**ஒழிபியல்** - நூலின்கண் முன் இயல்களிற் சொல்லா தொழிந்த வற்றைக் கூறும் இயல்,பொதுவியல்

**ஒழிபு** - எஞ்சியது, மற்றது, முன் சொன்னது, பிரிந்தது

**ஒழிபொருள்** - எச்சில்

**ஒழிய** - தவிர, நீங்க, கெட

**ஒழிய வைத்தல்** - ஒழித்து வைத்தல், ஒழிவு பார்த்தல், முடித்தல், ஒழித்தல்

**ஒழியல்** - ஒழிவு, ஒழிக, ஒழியற்க, ஒழியாதே

**ஒழியா விளக்கம்** - ஒழியா விளக்கு, விடி விளக்கு , அணையா விளக்கு

**ஒழியாமை** - நீங்காமை ,விலகாமை

**ஒழியிசை** - ஒழிந்த சொற்களைத் தருதல்

**ஒழிவித்தல்** - அழித்தல், ஒழிய வைத்தல், கொல்வித்தல், நீங்கு வித்தல்,முடித்தல்

**ஒழிவு** - இன்மை ,ஒழிகை ,மறைவு, முடிவு, குறைவு

**ஒழுக** - மெதுவாக, இலகுவாக, சொரிய, வடிய, மிக இயல்பாக, சிறிது சிறிதாக, ஓட

**ஒழுக்கம்** - சீலம், நன்னடக்கை ,வழி

**ஒழுக்கமின்மை** - கையறல்

**ஒழுக்கு** - நடக்கை, உயரம், நீளம், உயர்ச்சி, ஒழுக்கம், நீர்முதலியன ஒழுகுதல், கசிதல்

**ஒழுக்கு நீர்ப்பாட்டம்** - ஆற்று நீர்ப் பாசன வரி

**ஒழுகலாறு** - ஒழுக்கநெறி, நன்னெறி

**ஒழுகிசை** - வெறுத்திசையில்லாமல் செவிக்கினிய மெல்லிசையுடைமை யாகிய குணம்

**ஒழுகிசைச்செப்பல்** - இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை இரண்டும் விரவி வந்த வெண்பாவின் ஓசை

**ஒழுகு** - உயரம், ஒழுங்கு, நீளம், ஒழுகஎனேவல்

**ஒழுகுதல்** - ஓடுதல், ஒழுங்குபடுதல், நடத்தல், நீளுதல், பெருகியோடுதல், போதல், வளர்தல்

**ஒழுகுமாடம்** - உடம்பு, உடல் யாக்கை

**ஒழுகை** - வண்டி ,சகடஒழுங்கு

**ஒழுங்கரம்** - ஒருவகை அரம்

**ஒழுங்கல்** - ஒழுங்கு தவறுதல், நிரல்படல்

**ஒழுங்கு** - கட்டளை, விதி, நன்னடை, வரிசை, ஒழுங்கென்னேவல், முறை, நேர்மை, திரள்

**ஒழுங்கை** - ஒடுங்கிய வழி, இடுக்கு வழி

**ஒள்** - ஒளி, அழகு,மேன்மை, உண்மை, அறிவு

**ஒள்ளியன்** - அறிவுடையோன், மேன்மை யுடையோன்

**ஒள்ளொளி** - மிகுந்த ஒளி

**ஒளி** - அறிவு, ஒளித்தல், மறைதல், ஒளிப்பிடம், ஒளியென்னேவல், கடவுள், கண்மணி, கேட்டைநாள், திங்கள், சிவசக்தி, சுவாலி, புகழ், கதிர், விண்மீன், வெயில், வெப்பம்,

ஈர்ப்பு, விளக்கு, தலைமை, பெருமை, மதிப்பு, தோற்றம், புகழ், அழகு, செயற்கையழகு, அரசனது கடவுட்டன்மை, மின்னல், வெளிச்சம்

**ஒளிக்கடல்** - பற்கள்

**ஒளிக்களம்** - மறைவிடம், ஒளித் துறைவு

**ஒளிசெய்தல்** - விளங்குதல்

**ஒளித்தல்** - மறைத்தல், மனத்தில் அடக்குதல்

**ஒளிதல்** - மறைதல், தவிர்தல்

**ஒளிநாடு** - செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்த பன்னிரு நாடுகளுள் ஒன்று

**ஒளிப்பு** - மறைவு, பதுங்கி மறைகை, அடங்குகை

**ஒளிமரம்** - மிளிர்மரம்

**ஒளிமறைவு** - ஒளித்துத் திரிகை

**ஒளியர்** - ஒளி நாட்டிற் சிறந்து விளங்கியவர், வேளாளர்

**ஒளியவன்** - கதிரவன்

**ஒளியார்** - ஒள்ளியார்

**ஒளியிருத்தல்** - மறைவிடத்திருத்தல், பதுங்கியிருத்தல்

**ஒளியிழை** - அணிகலன், பெண்

**ஒளியுருவியகல்** - வைடூரியம்

**ஒளியோன்** - கதிரவன்

**ஒளிர்** - ஒளிரென்னேவல்

**ஒளிர்தல்** - ஒளிசெய்தல்

**ஒளிர்பு** - கதிர் வெளிச்சம், சூடு, ஈர்ப்பு, மின்னல்

**ஒளிர்மருப்பு** - யானைக்கொம்பு

**ஒளிர்முகம்** - வைரக்கல்

**ஒளிர்வு** - ஒளி

**ஒளிவட்டம்** - கண்ணாடி, திங்கள், வட்டமான வெளிச்சம்

**ஒளிவட்டி** - பச்சைக் கருப்பூரம்

**ஒளிவளவாய்** - கமுக்கமாய், கரவாய், மறைவாய்

**ஒளிவைத்தல்** - கண்ணிவைத்தல், விலங்குகளை அகப்படுத்த மறைப்பு வைத்தல்

**ஒளிறல்** - ஒளி கொள்ளல்

**ஒளிறி** - உலரிமீன்

**ஒளிறு** - ஒளி, விளக்கம்

**ஒளிறுதல்** - விளங்குதல்

**ஒளுகை** - வண்டி

**ஒற்கம்** - தளர்ச்சி, குறைவு, வறுமை

**ஒற்கிடம்** - தளர்விடம், சோர்விடம், அசைவிடம்

**ஒற்கு** - குறை, தளர்

**ஒற்றடம்** - வெப்பம்பட ஒற்றுகை

**ஒற்றல்** - உடுத்தல், ஒற்றுதல், நினைத்தல், சாய்த்தல், வீழ்த்துதல், உதைத்தல், ஏற்றல், காற்று வீசுதல்

**ஒற்றளபெடை** - தனக்குரிய மாத்திரையில் மிகுந்தொலிக்கும் மெய்யெழுத்து

**ஒற்றறுத்தல்** - தாளத்தை அறுதியிடுதல்

**ஒற்றன்** - தூதன், வேவுகாரன்

**ஒற்றி** - உரிமையடைமானம், ஒற்றிப்

பார்த்து,தள்ளிடைத்து, ஒற்றியூர், ஒற்றைப்படு, ஒற்றுமைப்படு

**ஒற்றிக்கரணம்** - ஒற்றிச்சீட்டு, ஒற்றிக்கலம், ஒற்றிப்பத்திரம்

**ஒற்றித்தல்** - ஒற்றையாயிருத்தல், ஒற்றுமையாய் இருத்தல்

**ஒற்றித்தவெண்** - ஒற்றைப்பட்ட வெண்

**ஒற்றிப்போடுதல்** - தவணை தள்ளி வைத்தல்

**ஒற்று** - ஒற்றன், ஒற்றடம், தூதன், உளவு, மெய்யெழுத்து

**ஒற்றுக்கேட்டல்** - பிறர் பேச்சை மறைந்து நின்று கேட்டல்

**ஒற்றுப்போர்த்தல்** - மிறைக்கவியின் ஓர் உறுப்பு, அஃது எழுத்தைத் திரித்தல்

**ஒற்றுபு** - அமுக்கி

**ஒற்றுமை** - ஒன்றாய் இருக்கும் தன்மை, ஒருநிலைப்படுகை, உரிமை, ஒருமை, கலப்புக்குறிப்பு, செல்வம், தகுதி, மனமொன்றுகை, ஒற்றரின் தன்மை

**ஒற்றுமை கோடல்** - பிறரோடு ஒன்றித்து வாழ்தல்

**ஒற்றுமை நயம்** - ஒருமித்த தன்மை, ஒற்றுமைத் தன்மை

**ஒற்றுவன்** - தூதுவன்

**ஒற்றெழுத்து** - மெய்யெழுத்து

**ஒற்றை** - ஒன்று, தனிமை, ஒப்பின்மை

**ஒற்றைக்கண்ணன்** - சுக்கிரன் (வெள்ளி), குபேரன், ஒரு கண் மட்டும் பார்வை கொண்டவன்

**ஒற்றைத் தலைவலி** - ஒற்றைத் தலை நோய்

**ஒற்றையாழியான்** - கதிரவன்

**ஒறு** - அடக்கு, தண்டி, கண்டி, அழு, குறை

**ஒறுத்தல்** - கடிதல், தண்டித்தல், இகழ்தல், அழித்தல், துன்புறுத்தல், நீக்கல், குறைத்தல், நோய் செய்தல், ஒடுக்குதல்

**ஒறுப்பு** - தண்டனை ,கடிந்து பேசுகை, வெறுப்பு

**ஒறுவாய்** - ஒடிந்தவாய், மூளிவாய், கதுவாய், வடு, சிதைவு, முரவு, கொறுவாய்

**ஒறுவாய்ப்பானை** - விளிம்பு சிதைந்த பானை, ஒருவுகலம்

**ஒறுவாயன்** - உதடு சிதைந்த வாயை உடையவன்

**ஒறுவினை** - தீராவருத்தம், தீராத்துன்பம், ஒறுக்கும்செயல்

**ஒறுவு** - வருத்தம், ஒருவினை, இன்னல், துன்பம், இனைவு

**ஒன்பதொத்து** - ஒருவகைத்தாளம்

**ஒன்பாதி** - ஏறக்குறையப்பாதி

**ஒன்பான்** - ஒன்பது

**ஒன்றல்** - பொருந்துதல்

**ஒன்றலர்** - பகைவர்

**ஒன்றறியாதவன்** - யாதும் அறியாதவன்

**ஒன்றன்கூட்டம்** - ஒரே பொருளின் கூட்டம்

**ஒன்றாக** - உறுதியாக ,ஒருமித்து

**ஒன்றாதவன்** - பகைவன்

**ஒன்றாமை** - பகைமை, இணையாமை

**ஒன்றாய்** - ஒருமிக்க, ஒருசேர, உடன்சேர

**ஒன்றார்** - பகைவர்

**ஒன்றி** - தனிமை

**ஒன்றிப்பு** - ஒருமிப்பு

**ஒன்றிய** - உடன்பட்ட, ஒன்றின, உடன் பட்டவை ,உடன்பட்டன

**ஒன்றிய வஞ்சித்தளை** - நிரையீற்று உரிச்சீரின் முன் நிரையசை வரும் தளை

**ஒன்றியார்** - தன்னைச்சேர்ந்தவர்

**ஒன்றியான்** - ஒற்றையான்

**ஒன்றினொன்றபாவம்** - ஒன்றில் ஒன்றின்மை

**ஒன்று** - எண், மதிப்பக்குரியப் பொருள், வாய்மை,அறம், செல்வம், தனிமை, வீடுபேறு

**ஒன்றுக்குமற்றவன்** - பயனற்றவன், பயனிலி

**ஒன்றுக்கொதையாதல்** - அரை குறையாதல்

**ஒன்றுகட்டுதல்** - ஒன்றாய்ச் சேர்தல், ஒற்றுமைப்படுதல், சரிப்படுத்தல்

**ஒன்றுகை** - இசைகை

**ஒன்றுதல்** - ஒன்றிடும்படி சேர்த்தல், முத்திரையிடுதல், உளவறிதல், தாளம் போடுதல், அடித்தல், அமுக்குதல், தாங்குதல், தீண்டுதல், தழுவுதல், துடைத்தல், உய்த் துணர்தல், தள்ளுதல், வீழ்த்துதல், கட்டுதல், வலித்தல், அடுத்தல், எய்தல், தீர்மானித்தல், காற்று வீசுதல், மெய்யெழுத்தாய் நிற்றல், தத்துதல், ஒட்டிக் கொள்ளுதல், ஒற்றம் போடுதல், நினைதல், மறைதல் பொருந்துதல், கூடுதல், நிலைபெறுதல், கலத்தல், இடை விடா திருத்தல்

**ஒன்றுநர்** - நண்பர்

**ஒன்றுநன்** - நண்பன்

**ஒன்றுபடுதல்** - பொருந்துதல்

**ஒன்றுமற்றவன்** - வறியவன்

**ஒன்றுமொழி** - வஞ்சினங்கூறுதல்

**ஒன்றுமொழிதல்** - வஞ்சினங் கூறுதல்

**ஒன்றைக்கண்ணன்** - ஒரு பக்கம் சரிந்த பார்வையாளன்

**ஒன்றொழிப்பொதுச்சொல்** - இரு திணை ஆண் பெண்ணுள் ஒன்றினை ஒழிக்கும் பொதுச்சொல்

**ஒன்றோ** - வியப்பிரக்கச் சொல்

**ஒன்னப்பூ** - மாதர் காதணியின் ஒன்று

**ஒன்னலன்** - பகைவர்

**ஒன்னவர்** - பகைவர்

**ஒன்னாமை** - பொருந்தாமை

**ஒன்னார்** - பகைவர்

**ஒன்னுதல்** - பொருந்துதல், பொருத்தல்

**ஒன்னுதல்** - தொலைவு

**ஓ** - ஒழிவு, சென்று தங்குகை ,மதகு நீர், தாங்கும் பலகை, உயர்வு, இழிவு, கழிவு, இரக்கம், மகிழ்ச்சி, வியப்பு, நினைவு, அழைத்தல், வினா, எதிர்மறை, தெரிநிலை, பிரிநிலை, ஐயம், அசைநிலை, இவற்றைக் காட்டும் ஓர் இடைச் சொல், கொன்றை, நான்முகன், மகிழ்ச்சிக் குறிப்பு

**ஓஓ** - வியப்புக்குறிப்பு

**ஓக்கம்** - உயர்ச்சி, பெருமை ,எழுதல், உயரம், பெருக்கம், எழுச்சி, பருமை

**ஓக்கமிராட்டி** - ஒருவகை கலித் தாழிசை

**ஓக்காளம்** - வாந்திக்குணம்

**ஓக்கி** - புறப்படவிட்டு

**ஓக்கிய** - உயர்த்திய, ஓங்குவித்த, தகுந்த, எறிந்த

**ஓக்கியம்** - ஏற்றது, தகுந்தது

**ஓக்கினார்** - எறிந்தார்

**ஓக்குதல்** - உயர்த்துதல், எழும்பச் செய்தல், அறுதியிட்டு வைத்தல், தருதல், எறிதல், ஆக்குதல்

**ஓகணம் (அ) ஓகணி** - பேன், மூட்டுப்பூச்சி

**ஓகம்** - மூச்சுடன் கலந்த உடற்பயிற்சி, அடைக்கலம், ஒரு குருவி, கூட்டம், புகலிடம், பெருக்கு, பெருங்கூட்டம், வெள்ளம், போதனை, வீடு

**ஓகாரம்** - 'ஓ' என்னும் உயிரெழுத்து மயில்

**ஓகாரவுரு** - கடவுள்

**ஓகுலம்** - அப்பம்

**ஓகை** - உவகை, இனிய மொழி, ஆறு

**ஓகொதணி** - மூட்டுப்பூச்சி

**ஓகோ** - ஒரு வியப்பிரக்கச் சொல்

**ஓங்கல்** - தலைவன், வலியோன், உயர்ச்சி, மேடு, மலை, மரம், மூங்கில், சுதகம்புள், யானை, மரக்கலம், வழித்தோன்றல், ஒருவகை நீர்ப்பறவை

**ஓங்கார உரு** - இறைவன், கடவுள், கவுரிபாடாணம்

**ஓங்காரம்** - ஓங்கார ஒலி, நாதம், ஓம் என்னும் ஒலி, முதன் மந்திரம்

**ஓங்காரி** - சத்தி, ஓம்

**ஓங்கில்** - ஒருமீன்

**ஓங்குதல்** - மிகுதிப்படல், உயர்த்துதல், தேறுதல், அருமையுறல், வளர்தல், பெருகுதல்

**ஓங்குவித்தல்** - உயரச்செய்தல்

**ஓச்சம்** - உயர்வு, புகழ், பெரும்போர்

**ஓச்சர்** - பதினெண் குடிமக்களின் ஒருவர், பிடாரி கோயில் பூசாரிகள்

**ஓச்சன்கத்தி** - எறிதல், ஓங்குதல், ஓட்டுதல், உயர்த்துதல்

**ஓச்சை** - வரையல்

**ஓசடி** - பறவை சிறகடி

**ஓசம்** - மிகுபுகழ், ஒளி, ஆதூரம், நிமித்தம், குறி சொல்லுதல்

**ஓசரம்** - குறி சொல்லல், விடை, பொருட்டு

**ஓசரி** - கேடு, அதிசயம்

**ஓசழுக்கு** - வருத்தமின்மை

**ஓசன்** - உவாத்தி, பிடாரி கோயில் பூசாரி, ஆசாரியன், குரு

**ஓசனை** - நாற்காதம்

**ஓசி** - இரவல், ஆசிரியன் மனைவி

**ஓசுநன்** - வலியோன், எண்ணெய் வணிகன், மீகாமன், பரவச் சாதியான்

**ஓசை** - இசை, ஒலி,கீர்த்தி ,ஆகாசம் என்னும் பூதம் தோன்றுவதற்றுக் காரணமாகிய சப்ததன் மாத்திரை, எழுத்தோசை, செய்யுளோசை, நாதம், இரைச்சல், அரவம், சொல், பேச்சு, புகழ்(கீர்த்தி)

**ஓசைக்கழல்** - வீர வெண்டயம்

**ஓசையுடைமை** - நூலழகு பத்தில் ஒன்று

**ஓசையூட்டல்** - செய்யுள் ஓசையை இசையச் செய்தல்

**ஓட** - உவமையுருபு

**ஓடக்கோல்** - படகு தள்ளுங்கழி

**ஓட்டக்காரன்** - அஞ்சற்காரன்

**ஓட்டடை** - ஓட்டப்பம், அப்பவகை

**ஓட்டம்** - உதடு, ஓடுதல், தோல்வி, மேலுதடு, உருக்குச் சுத்தம் செய்கை, நீரோட்டம், விலைமதிப்பு ஏறுகை

**ஓட்டம்பிடித்தல்** - தப்பித்தல், தப்பி யோடுதல்

**ஓட்டன்** - பாட்டனுக்குப் பாட்டன், காலாற் செல்லுந்தூதன்

**ஓட்டாங்குச்சு** - மட்கலவோடு

**ஓட்டாண்டி** - இரந்துண்பவன்

**ஓட்டாம்பாரை** - மீன்வகைகள்

**ஓட்டி** - ஓடச் செய்வோன், ஓட்டுநர், செலுத்தி,கெடுத்து ,கொவ்வைக்கனி, பாட்டிக்குப் பாட்டி ,ஓடச்செய்தது

**ஓட்டியம்** - பாடல் முழுவதும் இதழ் குவிந்தும் கூடியும் இயலும் எழுத்துக் களேயுள்ள மிறைக்கவி

**ஓட்டிரம்** - உற்கலநாடு

**ஓட்டு** - வாக்குரிமை, வாக்குச்சீட்டு, சமாளித்தல்

**ஓட்டு(தல்)** -விரட்டுதல் தொடர்பான வழக்கு, பெரும்பாலும் வீட்டு விலங்குகள், பூச்சி பொட்டுகளை விரட்டுதல், கொண்டு போதல், நடக்க அல்லது போகச் செய்தல், இயக்குதல், குதிரை முதலியவற்றை ஓட்டச் ( சவாரி) செய்தல், நேரத்தைக் கழித்தல்

**ஓட்டுநர்** - உந்துஓட்டி

**ஓட்டுப்பதிவு** - வாக்குப்பதிவு

**ஓட்டுனர்** - உந்து ஓட்டி

**ஓட்டை** - துளை, குறைபாடு, பழுது, நல்ல நிலையில் இல்லாதது

**ஓட்டை நெஞ்சு** - அறைபோன மனம்

**ஓட்டை வாய்(யன்)** - எதையும்

பிறரிடம் எளிதாகச் சொல்லிவிடும் இயல்பு, ஒளிக்கத் தெரியாமல் அனைத்தையும் பிறரிடம் சொல்லிவிடும் தன்மையர்.

**ஓட்டைக் கை** - செலவாளி

**ஓட்டைச் செவி** - கேள்வி கேட்காத செவி

**ஓட்டைப்பல்** - பல்லிடை வெளி

**ஓட்டையுடைசல்** - பயன்படா ஏனங்கள், தட்டுமுட்டுச் சாமான்கள்

**ஓடதி** - ஒருகாற்காய்த்துப்படும் மரம், மருந்துக்குரிய பூண்டு முதலியன

**ஓடம்** - சிறுபடகு, தோணி, செங்கருங்காலி, நெய்வோர் கருவியில் ஒன்று, ஒருவகைப்பாட்டு, அம்பி, பகடு ,பஃறி, நாவாய்

**ஓடல்** - ஓடுமை, கெடுகை ,குலைவு, ஒருமரம், அச்சத்தினால் ஓடுகை

**ஓடவிடுதல்** - புடமிடுதல்

**ஓடவைத்தல்**- புடமிடுதல், உறுதிப் படுத்தல்

**ஓடன்** - ஆமை, ஓடம்விடும் தொழிலர்

**ஓடாக** - உடல் மெலியும் அளவிற்கு

**ஓடாணி** - அணிகலக்கடைப் பூட்டாணி

**ஓடாவி** - ஓவியக்காரன், தச்சன், மரக்கலஞ் செய்வோன்

**ஓடிகை** - கான்நெல், கானில் விளையும் நெல்

**ஓடிமை** - கானெல்

**ஓடியம்** - அவைக்கடாப் பேச்சு, கழுவாய்

**ஓடியவோடம்** - கிளிஞ்சல்

**ஓடு** - வீடு வேயும் ஓடு, பானையோடு, விரைந்தோடல், ஓடென்னேவல், மண்டையோடு, ஓர் உருபு

**ஓடுகால்** - நீரோடுங்கால்வாய்

**ஓடுகாலி** - வீடு தங்காப்பெண், முறை கேடாக வீட்டைவிட்டு வெளியேறும் பெண்

**ஓடுதல்** - ஓட்டமாய்ச் செல்லுதல், செல்லுதல், மனம் பற்றுதல், நீளுதல், வருந்துதல், நேரிடுதல், பிறக்கிடுதல், கழலுதல், பொருந்துதல், குலைதல், விரைதல், பரத்தல், வளர்தல், எண்ணுஞ்செல்லுதல்

**ஓடுபடம்** - இடுதிரை, திரைப்படம்

**ஓடுவிப்புருதிக்கட்டி** - புரையோடும் புண்வகை

**ஓடை** - நீரோடை, குணம், உலவை மரம், சந்தனம் வைக்கும் மடல், யானை, நெற்றிப்பட்டம், மலைவழி, அகழி, ஒரு படர் கொடி

**ஓடைமரம்** - உலவை

**ஓணப்பிரான்** - திருமால்

**ஓணம்** - திருவோண நாள், நாண்மீன், ஆறு

**ஓத்து** - ஓதகை, வரை, விதி, இயல், நூல், ஓரினப் பொருளை ஒரு வழி

வைத்திருக்கும் இயல்

**ஓதப்புரோதம்** - நெசவின் நெட்டிழை, குறுக்கிழைகள், பாவு ஆடு இழைகள்

**ஓதம்** - ஈரம், கடல், கடற்திரை, நீர்ப் பெருக்கம், அண்டவாத நோய்

**ஓதல்** - கல்விகற்றல், படித்தல், ஒழிதல், செல்லல், பயிற்றுதல் (போதித்தல்), மந்திரம் செபித்தல்

**ஓதவனம்** - கடல்

**ஓதளை** - காசுக்கட்டி, காவிக்கட்டி

**ஓதனம்** - சோறு, உணவு

**ஓதன்மை** - ஓதற்றன்மை ,பாடல்

**ஓதனை** - காசுக்கட்டி

**ஓதி** - ஓதுபவன், அறிவு, செறிவு, நுண்ணறிவு (ஞானம்), கூந்தல், பொன் மயிர், ஓந்தி,அன்னம், அவதி ஞானம், கல்வி, நெருங்கித் தாக்குகை

**ஓதிம்** - வாகனன், நான்முகன்

**ஓதிம விளக்கு** - அன்னவடிவு விளக்கு

**ஓதிமம்** - அன்னம், கவரிமா, மாலை, புளியமரம்

**ஓதிமன்** - நான்முகன்

**ஓதியிடுதல்** - திருமணம் முதலிய நிகழ்வுகளில் மொய்யிடுதல்

**ஓது** - பூனை, படி ,சொல், அறிவுரை கூறு , ஓதென்னேவல்

**ஓதுதல்** - படித்தல், சொல்லுதல், பாடுதல், பயிற்றுதல், செபம் செய்தல், செபித்தல்

**ஓதுவார்** - திருமுறைவாணர்

**ஓதுவார்க்குணவு** - கற்போர்க்கு உணவிடுதல்

**ஓதுவான்** - ஆசான், படிப்பவன்

**ஓதை** - ஆரவாரம், காற்று, மதில், ஒலி, பேரொலி, மலை, மீயொலி, எழுத் தொலி , மதிலுள்ளமேடை

**ஓதைவாரி** - இறகு, சிறகு, வீட்டின் வரிசை , ஒலியுள்ள கடல்

**ஓந்தி** - ஓணான், கரட்டான்

**ஓநாய்** - கோநாய், ஓனாய், ஒருவகை நாய்

**ஓப்பல்** - ஓப்புதல், ஓட்டுதல், துரத்தல், உயரவெடுத்தல்

**ஓப்பு** - ஓட்டு ,உயர்த்து

**ஓபு** - கதவு

**ஓம்** - சைவப்புனித மந்திரம், உடன் பாட்டை உணர்த்தும் ஓர் இடைச் சொல்

**ஓம்படு** - ஒத்துக் கொள்ளுதல், உடன்படுதல், ஏற்றல், இணக்கமாதல்

**ஓம்பு** - பேணு, தயவுடன் வேண்டு, கெஞ்சு

**ஓம்பு-தல்** - பாதுகாத்தல், பேணுதல், தீதுவராமறகாத்தல், பரிகரித்தல், வளர்த்தல்

**ஓமப்பொடி** - தின்பண்டவகை ,ஓம மருந்து , திருநீறு

**ஓமம்** - ஒரு பூடு, வேள்வி , தாளகம், பலி, வேள்வித் தீயில் நெய் முதலியன பெய்கை

**ஓமல்** - ஊர்ப்பேச்சு ,பேச்சுப்பரவுதல், அபவாதம்

**ஓமலிப்பு** - ஊர்ப்பேச்சு ,வசைப்பேச்சு, அலர்

**ஓமவள்ளி** - கற்பூரவள்ளி

**ஓமறத்தல்** - ஒழிவறுதல்

**ஓய்(தல்)** - முடிதல், அடங்குதல், களைப் படைதல், தளர்தல், அமைதியாதல்

**ஓய்ச்சல்** - அசதி, தளர்ச்சி

**ஓய்வு** - களைப்பு அகல எடுக்கும் அமைதி, ஆறுதல், முழுஅமைதி நிலை, மாற்ற மின்றி தொடர்ந்து இருப்பது, பணி நிறைவிற்குப்பின் பெறும் பணியிலா நிலை

**ஓய்வு ஒழிச்சல்** - மிகக்குறைந்த கால ஓய்வு

**ஓய்வு நாள்** - விடுமுறை நாள், பணி இல்லா நாள் (இறைவன் ஓய்வெடுத்த) ஞாயிற்றுக் கிழமை

**ஓய்வுக் கொடுப்பனவு** - ஓய்வூதியம்

**ஓய்வுக்காலம்** - குறிப்பிட்ட அகவைக்குப் பின் அரசு மற்றும் தனியார் பணியினின்று விலகிக் கழிக்கும் காலம்

**ஓய்வூதியம்** - அரசுப்பணியாளர் பணி ஓய்விற்குப் பின் திங்கள் தோறும் பெறும் ஊதியம்

**ஓய்வூதியர்** - ஓய்வூதியம் பெறுபவர்

**ஓய்வெடு** - களைப்பு நீங்க பணியைத் தவிர்த்துத் தம்மைத் தளர்த்திக் கொள்ளல்

**ஓயாமல்** - இடைவிடாமல், தொடர்ந்து

**ஓயாமல் ஒழியாமல்** - எப்பொழுதும்

**ஓர்** - ஒன்று என்னும் எண்ணின் அடைப் பெயர்

**ஓரகத்தி** - கணவனுடன் பிறந்தான் மனைவி

**ஓரங்க நாடகம்** - தொடக்கம் முதல் இறுதிவரை ஒரே களத்தில் நிகழ்த்தப் பெறும் நாடகம்

**ஓர்ப்படி** - ஓரகத்தி, கணவனின் சகோதரனுடைய மனைவி

**ஓரம்** - ஒதுங்கிடம், ஒதுங்குபக்கம், விளிம்பு, பக்கவாட்டு ,நுனி, கரையை யொட்டிய பகுதி ,ஒட்டிய பகுதி

**ஓரம்கட்டு** - ஒதுக்கி நிறுத்து, பிறரின் அல்லது பிறவற்றின் முகாமைத் தன்மையைக் குறைத்தல், ஓரத்தில் ஒதுங்குதல், ஒதுக்கு

**ஓரவஞ்சகம்** - ஓரவாரம், வஞ்சகம், இரண்டகம், புறக்கணிப்பு, நேர்மை யின்மை

**ஓரளவு** - குறிப்பிட்ட அளவிற்கு,

குறிப்பிட்ட அளவு, கணிசமாக, தாழ்வின்றி

**ஓரனித்தல்** - பறவை சிறகடித்தல், செல்ல முயலுதல், பறக்க முயலுதல்,

**ஓரா** - ஒருவகை பழுப்பு நிறக்கடல் மீன்

**ஓராசிரியர் பள்ளி** - ஒரேயொரு கற்பிப்போரை மட்டும் கொண்ட தொடக்கப் பள்ளி

**ஓராட்டு** - தாலாட்டுதல், ஏமாற்றுதல், காலந்தாழ்த்துதல், தாலாட்டுப்பாடல்

**ஓரிரு** - மிகவும் குறைவான, சில

**ஓரினச்சாகுபடி** - ஒரே வகைப்பயிரை பயிரிடுதல் முறை

**ஓரினத்திருமணம்** - ஒரே பாலினத்தவர் மணந்து கொள்ளல்

**ஓரை** - ஒரு நாளில் ஒரு கோளின் ஆதிக்கம் பெற்றுள்ள காலப் பொழுது

**ஓலம்** - துயர ஒலி, ஊளை

**ஓலாலம்** - தாலாட்டு

**ஓலை** - பனை,தென்னை, ஈச்சமரம் ஆகியவற்றின் இலை ,உலர் பனை இலை, ஆவணம், தூது ஓலை, பிறப்பியம்

**ஓலை அனுப்பு** - மடல் மூலம் விரும்பும் செய்தியைத் தெரியப் படுத்துதல்

**ஓலைச்சட்டம்** - (கூடை பாய் பின்ன ஏற்றவாறு) அளவாக நறுக்கப்பட்ட பனை ஓலைத்துண்டு

**ஓலைச்சுவடி** - பனையோலையில் எழுதிக் கோத்துக் கட்டிய பொத்தகம்

**ஓலைப்பட்டாசு** - பனையோலையில் செய்யப்பட்ட ஒருவகை வெடி

**ஓலைப்பூ** - தாழம்பூ

**ஓவாப்பிணி** - தீராத நோய்

**ஓவியம்** - சித்திரம், படம்

**ஓவியர்** - சித்திரம் வரைபவர்

**ஓவென்றவெளி** - பெருமைதானம், மாத்திடல்

**ஓளி** - ஒழுங்கு, யானைக்கூடம், மணமகளுக்குத் தரப்படும் சீர் வரிசை

**ஔ** - அநந்தன் என்னும் பாம்பு, நிலம், விளித்தல்

**ஔகாரக்குறுக்கம்** - தன் மாத்திரையிற் குறுகிய ஔகாரம்

**ஔவித்தல்** - பொறாமைப்படுதல்

**ஔவியம்** - பொறாமை, தீவினை, மனக்கோட்டம், ஏய்ப்பு

**ஔவை** - தவப்பெண், தாய் பெண் புலவர்

**ஔவை நோன்பு** - செவ்வாய் நோன்பு

**க** - நான்முகன், திருமால், காமன், கதிரவன், நிலவு, ஆதன்

**கக்கம்** - அக்குள், கமுக்கூடு, மறைவிடம், இடுப்பு

**கக்கல்** - வாயாலெடுக்கை, கக்கிய பொருள், கழன்று வெளிவருதல், திருடுதல்

**கக்கு-தல்** - வாயாலெடுத்தல், வெளிப் படுத்துதல்

**ககுத்து** - காளையின் திமில்

**கங்கணம்** - மங்கல நிகழ்வுகளைச் செய்து முடிக்கும் பொருட்டு மணிக்கட்டில் கட்டப்படும் மஞ்சள் துண்டு அல்லது மஞ்சள் கயிறு, ஒரு செயலைச் செய்யும் பொருட்டு மனத்திற்கொள்ளும் உறுதிப்பாடு, ஒரு வகைக் கைவளை, இறந்தார்க்குச் செய்யும் இறுதி நடப்பில் அவரது கால்வழியினர் கையில் கட்டும் மஞ்சள் கயிறு அல்லது துண்டு, தான் கொண்ட உறுதியை நிறைவேற்றுவதற்காக இடக்கை மணிக்கட்டில் கட்டிக் கொள்ளும் மஞ்சள் துண்டு அல்லது மஞ்சள் கயிறு, முடி

**கங்காணி** - சிற்றூர் ஆட்சி அலுவலரின் பணியாளர், ஊரிலுள்ள விளை நிலங்களின் எல்லையறிந்தவன்

**கங்கு** - எல்லை, கருத்தினை, தீப்பொறி

**கங்குகரை** - எண்ணிக்கை

**கங்குல்** - இருள், தாழி (பரணிநாள்) இரவு

**கச்சக்கயிறு** - யானையின் கழுத்தில் கட்டும் பட்டைக்கயிறு, யானையின் வயிற்றைச் சுற்றிக் கட்டும் கயிறு

**கச்சாங்கட்டுதல்** - ஒருசெயலை முடிக்க முனைந்து நிற்றல்

**கச்சட்டம்** - உடைமடிப்பு, கோவணம்

**கச்சடம்** - வண்டி

**கச்சடா** - இழிவு, போலித்தன்மை

**கச்சம்** - இடையாடையின் ஒரு முனையை ஒருங்கு சேர்த்துக் கால்களுக்கிடையே விட்டு இடுப்பில் செருகிக் கட்டும் பாங்கு

**கச்சல்** - இளம்பிஞ்சு, ஒல்லி, கசப்பு

**கச்சி** - துடைப்பம்

**கச்சை** - அரைக்கச்சு, கயிறு, கவசம், கோவணம், மேலாடை, நாடாவாற் கட்டப்பட்ட பயணத்தூளி யானையின், கீழ்வயிற்றில் கட்டும் கயிறு கட்ட உதவும் நாடாப்பட்டை, பாதிரியார் அணியும் இடைவார்.

**கச்சை கட்டுதல்** - ஒன்றைச் செய்ய மூண்டு நிற்றல்

**கசக்குதல்** - கசங்கச்செய்தல், ஆடையைக் கும்முதல், நெருக்குதல்

**கசகுதல்** - பின்வாங்குதல்

**கசடு** - குற்றம், அழுக்கு, ஐயம், அடிமண்டி, கழிவு

**கசம்** - காரிருள், குற்றம், துன்பம்

**கசிதல்** - ஊறுதல், ஈரமுறுதல்

**கஞ்சத்தனம்** - செல்வம் சேர்க்கும் முகத்தான், இன்றியமையாத செலவைக் கூடத் தவிர்த்து வாழும் பண்பு

**கஞ்சல்** - கூளம், குப்பை

**கஞ்சன்** - கஞ்சத்தன முள்ளவன், இவரன், ஏய்ப்பவன், கம்சன்

**கஞ்சிக்கலம்** - கஞ்சி ஊற்றி வைக்கும் ஏனம், பருவமடைதல்

**கஞ்சுகம்** - சட்டை, பாம்புச்சட்டை

**கட்சி** - மரம்மடர்ந்த காடு, புகலிடம், மக்கள் துயிலிடம், பறவைக்கூடு, ஓர் இலக்குடன் சேர்ந்த மக்கள் குழு

**கட்டளை** - முறைமை, எல்லை, கட்டுப்பாடு, ஆண்டவன் கட்டளை, ஊழ்வினை, ஆணை, மெய்ம்மம் உணர்த்தும் நூல், செங்கல் அல்லது உருவம் வார்க்கும் சட்டம்

**கட்டளைக்கல்** - பொன் உரைக்கும் கல், எடையிடும் அளவுக்கல்

**கட்டாடி** - வண்ணத்தன், வண்ணான், வண்ணாரத் தலைவன்

**கட்டாயம்** - பண்டைய வரிகளில் ஒன்று, குறித்த பருவங்களில் உறுதியாகச் செலுத்தி ஆக வேண்டிய வரி, வலக்காரம், வன்முறை, கட்டுப்பாடு, உறுதி

**கட்டி** - இறுகின பொருள், கருப்புக்கட்டி, கற்கண்டு, சிலந்திப்புண், சுரக்கட்டி, கருப்பிண்டம், கனிமம், பொன், வளையல் செய்யும் அரக்கு, பலம் கொண்ட நிறையளவு, துண்டு, கன சதுரம், எலும்பு, திரண்ட மாத்திரளை

**கட்டியம்** - வேந்தர், தெய்வம் முதலியோரைக் குறித்துக் கூறும் புகழ்த்தொடர், கூத்துவகை, சிற்றிலக்கிய வகையுளொன்று

**கட்டில்** - கால் கோத்த நீளிருக்கை, துயிலணை, அரியணை

**கட்டிளம்** - இளமை நிறைந்த தன்மை

**கட்டு** - பிணைப்பு, கட்டடம், மூட்டை, முறைமன்றத்தில் கட்சிக் காரருடைய வழக்கேடுகளின் தொகுதி, உறுதி, உடற்கட்டு, அணைக்கட்டு, புண்கட்டி, அஞ்சற்கட்டு, அஞ்சல்

**கட்டுச்சோறு** - வழிநடைக்காகக் கட்டி எடுத்துச் செல்லும் உணவு

**கட்டு-தல்** - பிணைத்தல், அமைத்தல், பதித்தல், தோற்றுவித்தல், தழுவுதல், தாலிபூட்டி மணத்தல், இறுகச் செய்தல்

**கட்டுரை** - உறுதிச்சொல், பொருள் பொதிந்த சொற்கோவை, பழமொழி

**கட்டுவிச்சி** - குறிசொல்பவள்

**கட்டையன்** - குள்ளன்

**கடத்தல்** - பொருள்களை ஓரிடத்தினின்று மற்றோரிடத்திற்குக் கொண்டு செல்லல், திருட்டுக் தனமாகப் பொருள்களைக் கொண்டு செல்லல், ஆளைக் கடத்துதல், தாண்டுதல், நடத்தல், வெல்லுதல்

**கடப்பாடு** - கடமை, முறைமை, கொடை, ஒப்புரவு, தகுதி, நடை, நேர்மை

**கடப்பாரை** - இரும்பாலாகிய ஒரு கருவி

**கடப்புக்கால்** - வளைந்தகால், ஊன முள்ளகால் கடந்து செல்லும் வழி, படகு, பக்கம், நீர்த்துறை, சந்து, முடுக்கு

**கடவு** - கடந்து செல்லும் வழி, படகு, பக்கம், நீர்த்துறை, சந்து, முடுக்கு, வழி, எருமைக்கடா

**கடவுச்சீட்டு** - வெளிநாடுகளுக்குச் செல்ல வழங்கப்படும் நுழைவுச்சீட்டு

**கடவுதல்** - செலுத்துதல், விரைவு படுத்துதல், முடுக்குதல், ஓட்டுதல், படைக்கலன் செலுத்துதல், உசாவுதல்

**கடற்கோள்** - கடற்பெருக்கத்தால் நிலப்பகுதிகளுக்குள் நுழைந்து ஏற்படுத்தும் பேரழிவு

**கடற்படுபொருள்** - கடலில் தோன்றும் முதன்மையான பொருள்களான ஓர்க்கோலை, சங்கம், பவளம், முத்து, உப்பு போன்றவை

**கடற்றுறை** - துறைமுகம்

**கடறு** - காடு, அருநெறி, பாலை நிலம், மலைச்சாரல்

**கடி** - அச்சம், வியப்பு, இரப்போர்கலம், மிகுதி

**கடிகை** - நாழிகை வட்டில், நாழிகை, தகுந்த சமயம், நிமித்திகன், மங்கலப் பாடகன்

**கடிஞை** - இரப்போர்கலம்

**கடிநகர்** - காவலுள்ள நகரம், மணவீடு

**கடிறு** - யானை

**கடு** - கைப்பு, கார்ப்பு, வெறுப்பு, துவர்ப்பு, கடுமை, கூர்மை, விரைவு

**கடுக்கன்** - ஆடவர் காதணி

**கடுங்கண்** - தறுகண்மை, கொடுமை

கடு-த்தல் - நோவெடுத்தல், உளைதல், உறைத்தல், மிகுதல்

**கடுப்பு** - நோவு, வேகம், வெகுளி

**கடுமா** - வல்விலங்கு, புலி

**கடுமுடை** - பெருந்தட்டுப்பாடு, பணமுடை

**கடுமுனை** - போர்க்களம்

**கடுமை** - கொடுமை, கண்டிப்பு, வன்மை, விரைவு, கடினம், மிகுதி, சினம், வெம்மை, வலிமை

**கடுவரல்** - விரைந்து வருகை

**கடுவன்** - வலிமை மிக்க ஆண் விலங்கு, ஆண் குரங்கு, ஆண் பூனை, நாய், படைநோய்

**கடுவெளி** - நிழலற்றவெளி

**கடை** - இறுதி, முடிபு, எல்லை, வாயில், தலைவாயில், நுனி, முனை, முன்றில், பின், இறப்பு, வரையறை, இறுதிநிலை, கடைக்கோடி, இடம், கீழ்மை, தாழ்ந்தோன், கதவு, அங்காடி

**கடைகண்ணி** - கடை, கடைத்தெரு

**கடைகோல்** - கடைந்து தீயுண்டாக்கும் கோல்

**கடை-தல்** - கெட்டி நீர்மப் பொருளில் மத்துப் போன்றவற்றைக் கொண்டு சூழலச் செய்தல், மரம், இரும்புப் போன்றவற்றைக் குடைதல், மசித்தல், அரைத்தல்

**கடைப்பிடி** - உறுதி, தேற்றம், கொண்முடிபு, பற்று, ஆடவர்க்குரிய அறிவு, அறிந்தபடி நடத்தல்

**கடைப்பிடித்தல்** - உறுதியாகப் பற்றுதல், தெளிவுறவறிதல், மறவா திருத்தல், சேர்த்து வைத்தல், மேற் கொள்ளுதல்

**கடையர்** - வேளாளரில் ஒருபிரிவினர், மருதநிலத் தொழிலாளர்

**கடையாணி** - அச்சாணி, பூட்டாணி

**கண்** - விழி, கண்ணோட்டம், பீலிக்கண், துளை மரக்கணு, மூட்டுவாய், முரசடிக்குமிடம்,அறிவு, இடம், மூங்கில், அழகு

**கண்காட்சி** - பார்வையிற்படும் காட்சி, பார்த்து உணர்ந்து பயன்பெறும் வகையிலமைந்த பொருட்காட்சி

**கண்காணி** - மேற்பார்வைக்காரன்

**கண்காணிப்பாளர்** - அலுவல் நடை முறைகளைக் கவனிக்கும் பொறுப் புடைய அலுவலர்

**கண்கூடு** - கண்களால் கண்ட உண்மை, கண்குழி

**கண்சாடை** - கண்ணாற் காட்டும் குறிப்பு

**கண்சாய்தல்** - அறிவு தளர்தல்

**கண்டதுண்டம்** - பல பகுதிகள்

**கண்டம்** - கழுத்து, குரல், துண்டம், பால்வண்ணத்திரை, நிலப்பெரும் பிரிவு, இடையூறு

**கண்டமாலை** - ஒரு கழுத்தணி, கழுத்தைச் சுற்றியுண்டாகும் புண்

**கண்டவன்** - வெளியார், பழக்க மற்றவர், ஒரு பொருளையோ நிகழ்ச்சியையோ கண்டவன், தொடர்பில்லாதவன்

**கண்டனம்** - பிறர் கொள்கையையோ கூற்றையோ கண்டித்தல்

**கண்டி-த்தல்** - குற்றஞ் செய்தவன் திருந்துமாறு கடிந்து கூறுதல், துண்டித்தல், பகிர்தல், பருத்தல், வரையறைப்படுத்துதல், முடிவு கட்டிப்பேசுதல், நோயைத் தணித்தல்

**கண்டு** - கற்கண்டு,கட்டி, நூற்பந்து, நெசவாளரின் பாவில் ஊடே செல்லும் ஊடைக்குச்சியில் சுற்றப்பட்டுள்ள நூல் கண்டு

**கண்ணடை-தல்** - துளை அடைபடுதல், பயிரின் குருத்துக் கண்ணடைதல், திரிந்து கேடுறுதல்

**கண்ணமுது** - கன்னல் (பாயாசம்)

**கண்ணயர்** - உறக்க நிலையை அடைதல்

**கண்ணராவி** - துக்கநிலை

**கண்ணவர்** - அமைச்சர்

**கண்ணழித்தல்** - பதப்பொருளு ரைத்தல்

**கண்ணழிவு** - பதப்பொருள் கூறுகை, குறைவு, காலத்தாழ்வு

**கண்ணறை** - குருடு, வன்னெஞ்சு, அகலம், சிறு அறை

**கண்ணாடியிலை** - வாழையின் ஈற்றிலை

**கண்ணார்** - பகைவர்

**கண்ணாளன்** - கணவன், நாயகன், அன்பன், மேற்பார்வையாளன்

**கண்ணாறு** - பாசன வாய்க்கால்

**கண்ணி** - பூமாலை ,தலைமாலை, பூவரும்பு, புட்படுக்கும் முடிச்சுக் கயிறு, ஓரிசைப்பாட்டு

**கண்ணியம்** - மதிப்புறவு

**கண்ணுறுத்தல்** - கண்ணோதல், பொறாமை உண்டாதல்

**கண்ணெறிதல்** - அடித்தல்

**கண்ணேறு** - பிறரின் பொறாமைப் பார்வை, திருட்டி, அழுக்காறு நோக்கு

**கண்ணொடி** - இமைப்பொழுது

**கண்ணோட்டம்** - கண்பார்வை, நோக்கல், கனிவுள்ளம், மறக்க மாட்டாமை, பார்வையிடுகை, கடைக்கண் பார்வை, சுழிமுனை நோக்கு

**கண்திட்டம்** - பார்வையால் மதிப்பிடல்

**கண்படல்** - உறக்கங்கொள்ளுதல், கண்ணேறு

**கண்பனி** - கண்ணீர்

**கண்பூத்தல்** - வறுமையால் கண்ணொளி குன்றுதல், கண்விழிக் கோலம்

**கண்மணி** - அக்கமணி

**கண்மாயம்** - பொய்க்காட்சி, கண்ணுறுவிளைவு

**கண்வட்டம்** - துளையிட்ட பொற்காசு, நாணயச்சாலை

**கண்வாய்** -நீர்த்தேக்கம்

**கணக்கன்** - கணக்கெழுதுவோன், ஓர் இனம், அறிவியல் சமயம், கோட்பாடு ஆகியவற்றில் வல்லவன், அறிவன், கோள், ஆசிரியன்

**கணக்காயன்** - ஆசிரியன், புலவர்

**கணக்கீடு** - மதிப்பீடு

**கணக்கு** - எண், கணித முறைகள், கணக்கியல், திட்டம்

**கணம்** - திரட்சி, வட்டம், நொடிப் பொழுது

**கணவன்** - கொழுநன்

**கணவாய்** - இருமலையிடை உள்ள பிளவு, சிப்பி வகை

**கணிச்சி** - மழு, குந்தாலி, யானைத் துறட்டி, உளி, கோடரி, இலை மூக்கரி கத்தி

**கணித்தல்** - கணக்கிடுதல், அளவு குறித்தல், மதித்தல்

**கணிதம்** - கணக்கு நூல், சோதிடம், அளவு

**கணிப்பு** - கணக்கிடுகை

**கணிப்பொறி** - நினைவு வைத்துக் கொள்ளவும், தரவுகளைக் கொண்டு செயற்படுவதுமான மின்னணுப் பொறி

**கணியன்** - நிமித்திகன், குறி சொல்பவன்

**கணு** - கரும்பு, மூங்கில் முதலியற்றின் துண்டுப்பகுதிகள் சேரும் இணைப்பு, தண்டில் இலை தளிர்க்கக் கூடிய இடமாகவும், இறுக்கமுடையதாகவும் சற்றுப் பருத்தும் காணப்படும் பகுதி, உறுப்புப் பொருத்து, எலும்புக் கணு, மூங்கில், உடம்பிலேற்படும் நரம்பு முடிச்சுகள், கணுக்கால்

**கணை** - திரண்ட வடிவு, திரட்சி, அம்பு, காம்பு, வளைதடி, செக்குரலின் அடிப்பாகம், பதினோராவது விண்மீன்

**கணையம்** - தண்டாயுதம், வளைதடி, கோட்டை, யானைத்தூண், சருக்கரையைச் செரிமானம் செய்யும் சுரப்பு நீர் சுரக்கும் வயிற்றின் உறுப்பு

**கணையாழி** - முத்திரை மோதிரம்

**கத்தரி** - வேனிற்காலத்துக் கடுங் கோடையில் மிகவும் வெப்பமான மேழ(சித்திரை)த் திங்கள் 23 முதல் விடை (வைகாசி)த் திங்கள் 7-ஆம் நாள் வரைப்பட்ட காலம்

**கத்தரி-த்தல்** - சிறிது சிறிதாய் வெட்டியறுத்தல், புழு வரித்தல், அறுத்தல், நட்புப் பிரித்தல்

**கத்தல்** - உரத்த குரல் பேச்சு, அலறல், உரத்த ஒலி

**கத்தி** - பிடிபொருந்திய நெடும்பட்டை வடிவக் கூர்மையுடைய வெட்டுக் கருவி, மழிப்புக் கத்தி, அறுவைக் கத்தி, வாள், குறுவாள், குத்துவாள், அரிவாள், கொடுவாள், மடக்குக்கத்தி, கப்பியிடிக்க உதவும் கட்டைக்கத்தி, அட்டைக்கத்தி

**கதம்பம்** -வெண்கடம்பு ,கலப்புணவு, கலவைப்பொடி, கூட்டம், மேகம்

**கதலி** - வாழை, துகிற்கொடி, பறக்கவிடுங்காற்றாடி

**கதலிமணம்** - வாழையை மணப் பெண்ணாகக் கருதி மணம் புரியும் சடங்கு

**கதவு** - கோட்டை, கோயில், மனை, அறை போன்றவற்றின் நுழை வாயில்களை மூடித்திறக்கும் தடுப்பு, காப்பறை, பேழை போன்றவற்றின் கதவு, ஊர்திகளின் கதவு, பலகணியின் கதவு, மதகு கதவு,

தொழுவம், குடிசை போன்றவற்றை மூடும் பலகை

**கதிர்** - நேராகச் செல்லும் ஒளியிழை, ஒளி, சூரியன், வெயில், கதிர்வீசும் இருவெண்சுடர், ஆண்டு, ஆரக்கால், நூல் நூற்கும் கருவி, தட்டார் கருவிவகை

**கதிர்-த்தல்** - ஒளிர்தல், வெளிப்படுதல், மிகுதல், இறுமாத்தல்

**கதிரம்** - அம்பு, காசுக்கட்டி

**கதிரவன்** - சூரியன்

**கதுப்பு** - கன்னச்சதை, பழத்தின் சதைப்பகுதி, தலைமயிர், கூந்தல்

**கதை** - உரையாடல், செய்தியைச் சுவைபடச் சொல்லுதல், நடந்ததை எடுத்துரைத்தல், நொடிச்செய்தி, இயலாததையும் பொருந்தக்கூறல், எதிராடலுக்கான பொருள், வாழ்க்கை, பெரிய வரலாறு, தொல்பழங்கதை, பெருங்கதை, பொய்ப் பொருள் புணர்த்துக் கூறுவது, புத்தார்வமிக்க காதல் கதை, கட்டுக்கதை, செய்தி, விதம்

**கதை-த்தல்** - சொல்லுதல், சிறப்பித்துச் சொல்லுதல்

**கதைதீர்-தல்** - இறத்தல்

**கதைவிடு-தல்** - பொய்ப்பேச்சு எழுப்புதல், மறைபொருள் வெளியே வரும்படி சூழ்ச்சியாய் சொல்லாடல், நம்பமுடியாத அளவில் கூறுதல்

**கந்தகம்** - எளிதில் தீப்பற்றக் கூடியதும், மஞ்சள் நிறமுடையதும், மூன்று வேற்றுருக்கள் கொண்டதும், குறைந்த உருகு நிலையுடை யதுமான தனிமம்

**கந்தல்** - துண்டு துண்டாக இருப்பது, ஒழுக்கக்கேடு, அறியாமையால் விளையும் குற்றம்

**கந்து** - தூண், யானை கட்டுந்தறி, தெய்வமுறையுந்தறி,பற்றுக்கோடு, பதர், குதிரையின் முழுப்பாய்ச்சல்

**கந்துரு** - யாழ்

**கந்தை** - கிழிந்த துணி, சிறு துகில்

**கபடம்** - வஞ்சகம்

**கப்பம்** - சிற்றரசர் பேரரசர்க்கிடுந்திறை, வேந்தனுக்குச் செலுத்தும் திறை, தொழில்வரி

**கப்பலேறு-தல்** - மானக்கேடு உண்டாதல்

**கப்பு** - கவர்கொம்பு, கிளை, பிளவு, சிறுதூண், தோள், பற்றுக்கோடு, கவர்ச்சி

**கபாடபுரம்** - தமிழாய்தற்காக இரண்டாம் தமிழகக் கழகம் அமைத்த பாண்டிய மன்னர்களின் தலை நகராயிருந்த ஊர்

**கபிலை** - புகர் நிறம், குரால் நிற ஆன், தெய்வஆன், தென்கீழ்த் திசைப் பெண்யானை

**கமண்டலம்** - கரகம்

**கம்பம்** - அடிமரம், தூண், விளக்குத் தண்டு, கழைக்கூத்திற்குப் பயன்படும் கொம்பு, வெடிகளை வெடிக்கப் பயன்படும் தூண், வேளாண்மை

**கம்பல்** - பேரொலி

**கம்பலை** - ஒலி,யாழோசை, மருத நிலம், யானையின் பிளிறல், பறவைகள் பேரிரைச்சல், அலர் மொழி, ஓசை, சுழலோசை

**கம்பு** - கழி, ஒரு வகைத்தவசம், சங்கு

**கமலம்** - தாமரை ,நீர், பட்டை தீட்டிய வயிரம், ஒரு பேரெண்

**கமுகு** - பாக்குமரம்

**கயம்** - பெருமை, மென்மை, கீழ்மை, நீர்நிலை, குளம், மடு, ஆழம், குறைவு, கேடு ,யானை

**கயமை** - கீழ்மை ,கொடுமை

**கயல்** - கெண்டைமீன்

**கயவன்** - கீழ்மகன், கொடியவன்

**கயினி** - நாண், நூல், சாத்திரம்

**கர்ப்பூரம்** - சூடம், பொன்

**கர்வம்** - செருக்கு, ஒரு பேரெண்

**கரகம்** - கமண்டலம், பூங்குடம், நீர்த்துளி, ஆலங்கட்டி

**கரகரப்பு** - தொண்டையரிப்பு, அலைக் கழிப்பு

**கரட்டை** - ஓணான்

**கரடிவித்தை** - சிலம்ப வித்தை

**கரடு** - முருகு, மரக்கணு, வளர்ச்சி யற்றது, மணிக்கட்டு

**கரடுமுரடு** - ஒழுங்கின்மை

**கரண்டகம்** - சுண்ணச்செப்பு, பூக்குடலை

**கரண்டுதல்** - சுரண்டுதல்

**கரண்டை** - கமண்டலம், கற்பாழி

**கரணை** - உணர்ச்சி, அறிவு

**கரணை** - துண்டு ,கரண்டி

**கரத்தல்** - மறைத்தல், கவர்தல்

**கரம்பு** - பாழ்நிலம்

**கரிசு** - குற்றம், பாவம்

**கரு** - கருமை, கருப்பம், முட்டைக்கரு, பிறப்பு, குழந்தை, அச்சுக்கரு, ஆயுதப்பல், நிமித்த காரணம், நடு, கருப்பொருள், அணு

**கருக்கம்** - கார்மேகம்

**கருக்கல்** - இருள், மந்தாரம்

**கருக்கு** - கூர்மை,நேர்மை, பொறித்த சித்திரம்

**கருகல்** - தீய்ந்து போகை, இருள்

**கருணை** - அருள் இரக்கம், ஒரு கிழங்கு

**கருத்தரங்கு** - கலந்துரையாடி, ஆய்வு செய்யும் வல்லுநர் குழுக்கூட்டம்

**கருத்தளவு** - ஊகம், மதிப்பீடு

**கருத்து** - நோக்கம், தன்முனைப்

பாற்றல், உட்பொருள், கருத்துப் பிழிவு, கொள்கை, சீரிய விழிப்புணர்வு, விருப்பம், அறிவு

**கருத்துரு** - செய்யக் கருதுவது

**கருத்துரை** - தாற்பரியம்

**கருதல்** - எண்ணுகை, உறுதிப் படுத்துகை, மதிக்கை, விரும்புகை

**கருதுகோள்** - உண்மை நிலையை வெளிபடுத்தும் முகத்தான், காரண காரியங்களடிப்படையில், இவ்வாறு இருக்கலாம் எனக்கொள்ளுதல்

**கருது-தல்** - சற்று விருப்பத்தோடு முன்னுதல், மறந்ததை நினைத்தல், தீர்மானித்தறிதல், ஓர்ந்தறிதல், ஊகித்தல், மதித்தல், விரும்புதல், உன்னித்தறிதல், இறுதியாக ஆராய்தல், ஒத்தல்

**கருந்தொழில்** - கொலைத்தொழில்

**கருநாக்கு** - சிறு கரும்புள்ளிகளை யுடைய நாக்கு, தீயநாக்கு

**கருநாடகம்** - பழங்கால ஐம்பத்தாறு நாடுகளுளொன்று, நவாபு ஆட்சி செய்த தென்பகுதி, தென்னாட்டு இசை, பண்வகையுளொன்று, பழைய பழக்க வழக்கங்களைக் கடைபிடிப்பவர்

**கருப்பட்டி** - பனைவெல்லம்

**கருப்பிணி** - கருக்கொண்டவள்

**கருப்பு** - குறவிலைக்காலம், இன்மை வறுமை, பஞ்சம், கரி, கருந்தும்பி

**கருப்பொருள்** - அடிப்படையாக அமையும் மூலப்பொருள், காரணப் பொருள், ஐந்திணைகளுள் ஒவ்வொன்றுக்குமுரிய தெய்வம் முதலிய பொருள்கள்

**கரும்பிள்ளை** - காக்கை

**கரும்பு** - புல் வகையைச் சார்ந்ததும், மூங்கிலும் நாணலும்போற் கணுக் களுள்ளதும், இனிக்கும் சாறுள்ளதும், கழை வடிவானதும், வெப்ப நாடுகளில் 6 அடி முதல் 26 அடி வளர்வதும், சருக்கரை, வெல்லம் செய்ய மூலப் பொருளானதுமான, உயிர்க்கால் நெடும் பயிர் வகை, கழை (புணர்பூசம்) என்னும் ஏழாம் விண்மீன், காமனின் வில், இனிப்பு

**கரும்புல்** - பனை

**கரும்புள்** - வண்டு

**கரும்பொன்** - இரும்பு

**கருமம்** - செயல், வினைப்பயன், கடமைச் செயல், ஆள்வினைச் செயல்

**கருமா** - யானை, பன்றி

**கருமி** - தீவினையுடையோன், பாவி, அரசனுக்குத் தேவையானவற்றை நிறைவேற்றும் பணியாளர்

**கருமை** - கறுப்பு,வலிமை,பெருமை, பசுமை ,கொடுமை, ஆற்றல்

**கருவல்** - குட்டையாள்

**கருவறை** - கோவிலில் இறைவன் கொலுவீற்றிருக்கும் அறை

**கருவாடு** - மீன் உணங்கல், காய்ந்த உப்பு மீன்

**கருவி** - ஆயுதம், கேடகம், சாதனம், சித்திரம், துணைக்காரணம், தொகுதி, கூட்டம், கைத்தாளம், யாழ், குதிரைச் சாட்டை

**கருவி நூல்** - கல்வி அறிவை வளர்த்தற்குப் பயனாகும் நூல்

**கருவினை** - பாவம்

**கருவுயிர்த்தல்** - ஈனுதல்

**கருவூர்** - கருப்பை

**கருவூலம்** - பாதுகாப்பு அறை

**கருள்** - கறுப்பு ,குற்றம், சீற்றம், நல்லாடை

**கருனை** - பொரிக்கறி

**கரை** - எல்லை,சீலை,விளிம்பு, சொல்

**கரை-தல்** -கரைந்து போதல், மண்ணரிப்பு உண்டாதல், உருகுதல், இளைத்தல், கெடுதல், வருந்துதல், காலந்தாழ்த்தல், அழுதல், பதனழிதல், கனிதல், அழைத்தல், சொல்லல், ஒலித்தல்

**கரைப்பான்** - கரைக்கும் பொருள்

**கரையான்** - மீன் வலைஞன், சிதல், கடற்கரை அல்லது ஆற்றங்கரை பக்கத்தில் வாழ்பவன்

**கரையேறுதல்** - நற்கதியடைதல்

**கல்** - வெட்டியெடுத்த கல், சிறுகல், பாறை, மலை, சிவப்புக்கல் (இரத்தினம்), காவிக்கல், முத்து, வீரக்கல், நீத்தார் நினைவால் இறந்தார் பொருட்டுப் பத்து நாளைக்கு நாட்டப்படுங்கல், மரகதக் குற்றம் எட்டனுள் ஒன்று, செங்கல், ஒரு கல் தொலைவு (5280 அடி நீளங்கொண்டது), அரைகல், ஆட்டுக் கல் முதலானவை, எல்லைக்கல், சாணைக்கல், சிறுநீரகத்தில் உருவாகும் கல், கடுமையான பொருள், தோசை முதலியன சுடும் தட்டையான கல், உப்பின் கட்டி

**கல்(லு)-தல்** - தோண்டி எடுத்தல், கல்லடைப்பை நீக்குதல்

**கல்(ற்)-த(ற)ல்** - படித்தல், பயின்றறிதல்

**கல்நாடு** - மலைநாடு, கன்னட நாட்டின் பழைய பெயர்

**கல்யாணம்** - மணவினை, திருமணம், பொன், நற்குணம்

**கல்லணை** - கல்லாற்கட்டிய நீரணை

**கல்லறை** - மலைக்குகை ,பிணக்குழி

**கல்லூரி** - கல்விபயிலிடம், கலாசாலை

**கல்லை** - இலைக்கலம், குமிழ், அவதூறு

**கல்வி** - கற்கை, கல்வியறிவு

**கல்வெட்டு** - கல்லில் பொறித்த குறிப்புகள்

**கலக்கம்** - கலங்குகை, குழப்பம், துன்பம், புத்தி மாறாட்டம்

**கலங்கரை விளக்கம்** - துறைமுக விளக்குக்கூண்டு

**கலசம்** - குடம், கிண்ணம்

**கலந்துரையாடல்** - ஒன்றுக்கு மேற் பட்டோர் பங்குப்பெறும் உரையாடல்

**கலப்பினம்** - ஓர் இனத்தின் இரு வகைகளை ஒன்று சேர்த்து உருவாக்கும் ஆற்றல் மிகு வகை

**கலப்புமொழி** - ஒன்றுக்கு மேற்பட்ட மொழிக்கூறுகள் கலந்துள்ள மொழி

**கலப்புவினை** - பிறமொழிச் சொற்கள் தமிழ் வினையுடன் சேர்ந்து உருவாகும் கூட்டுவினை

**கலப்பை** - உழுகலப்பை, வாத்தியக் கருவிகள் வைக்கும் பை

**கலம்** - பாத்திரம், உண்கலம், கப்பம், மரக்கலம், அணிகலம், ஆயுதம், யாழ், ஒரு முகத்தலளவை

**கலம்பகம்** - கலவை, பல்வகைச் செய்யுட்களாகிய நூல்

**கலவரம்** - மனக்கலக்கம், சண்டை

**கலவி** - கலக்கை, புணர்ச்சி

**கலவு** - மூட்டுவாய்

**கலவை** - சந்தனக்குழம்பு கலப்பு

**கலாய்-த்தல்** - கிண்டல்பேசுதல், கோபித்தல்

**கலி** - முழக்கம், ஒலி, செருக்கு, துளக்கம், கலிப்பா, விழா, போர், மனவெழுச்சி, மகிழ்ச்சி, வறுமை, கடல், வலி, தழைக்கை, ஆண்மை

**கலிகாலம்** - இரும்புக் கருவிகளை மக்கள் பயன்படுத்திய காலம், தீமை, கொடுமை ஆகியவை பெருகிவிட்ட காலம்

**கலிங்கம்** - ஒரு தேயம், ஆடை

**கலிங்கு** - ஏரியின் வடிகால் மடை, நீர் வழியும் அணைக்கட்டு

**கலிப்பு** - ஒலிக்கை,பொலிவு, கக்குதல், மிகுதி, வெடிப்பு, உயரம், இனப் பெருக்கம்

**கலிமா** - குதிரை

**கலை** - ஆண்மான், சீலை,அமிசம், நிலவொளி, முப்பது காட்டை, சாத்திரம், கல்வி, மொழி, மூச்சு, உடல், இடையணி ,ஆண்குரங்கு

**கலைக்களஞ்சியம்** - ஒரு துறை பற்றியோ பல துறைகள் பற்றியோ செய்திகளைப் பல கட்டுரைத் தலைப்புகளில் உள்ளடக்கிய நூற்றொகுதி, அகர வரிசையில் தரப்படும் விளக்கங்கள்

**கலைக்கூடம்** - கலை நிகழ்ச்சிகள் நடத்துதற்கேற்ற பெரிய கூடம், கலைப்பொருள்கள் காட்சிக்காக வைக்கப்பட்டிருக்குமிடம்

**கலைச்சொல்** - துறை சார்ந்த கோட்பாட்டுச் சொல், துறை சார்ந்த சிறப்புச் சொல்

**கலைத்தல்** - குலைத்தல், சிதைத்தல், பிரித்து நீக்குதல், எண்ணத்தைக் கணித்தல், பலகை முதலியவற்றில் எழுதப்பட்டவற்றை அழித்தல், ஒட்டுதல்

**கலைத்தொழில்** - யாழ் மீட்டுதலுக் குரிய செய்கைகள், ஆடல், பாடல் முதலிய கலைகளைக் கொண்டிருக்கும் தொழில்

**கலை-தல்** - கூட்டம் முதலியன பிரிந்து போதல், அழிதல், நிலைகுலைதல், பலகை முதலியவற்றில் எழுதப் பட்டவை அழிதல்

**கலைமகள்** - கல்விக்கான பெண் தெய்வம்

**கலைமான்** - ஆண்மான், செம்பழுப்பு நிற உடலில் வெள்ளைப் புள்ளிகள் உடைய மான் வகை

**கவசம்** - இரும்புச் சட்டை, சீலை மண், மெய்புகு கருவி, பாதுகாக்கை

**கவட்டை** - மரக்கிளையின் கவர், இரு பிரிவாக அமைந்த மரத்துண்டு, இரு தொடைகளுக்கு இடையே உள்ள இடைவெளி

**கவடு** - மரக்கிளை, கவையுள்ள மரக்கிளை, தொடைச்சந்து, யானை கழுத்திடுங்கயிறு, பகுப்பு, அடி வைப்பு, ஏமாற்று

**கவண்** - கல்லெறியுங் கருவி, கயிற்றில் கட்டப்பட்ட பட்டையான தோலில் கல் வைத்துக் கழற்றி எறியும் சிறுவிசைக் கருவி

**கவர்ச்சி** - இழுக்கை, மனம்பற்றுதல், அழகு

**கவர்-தல்** - அகப்படுத்துதல், கொள்ளையிடுதல், தன்னகப் படுத்துதல், கைப்பற்றுதல், ஆசைப்பெருக்கம், விரும்புதல், பெற்றுக்கொள்ளுதல், நுகர்தல், முயங்குதல், பிடித்தல், கடைதல், அழைத்தல்

**கவரி** - எருமை ,சாமரை ,தேர்

**கவரிமான்** - ஒருவகை விலங்கு, மான் வகை

**கவல்(லு)-தல்** - மனம் வருந்துதல்

கவலை - பல ஊர்களுக்குச் செல்லும் வழிகள் ஒன்று கூடும் கவர்த்த வழி, பல தெருக்கள் கூடுமிடம், மரக்கிளை, ஆற்றிடைக் குறை, பல நினைவு அலைபாயுமெண்ணம், மனத்துயர், வருத்தம், துன்பம், மனத்தடுமாற்றம், அச்சம், பற்றார்வம், அக்கறை

**கவ்வு-தல்** - வௌவுதல்

**கவ்வை** - உறுமல், பழிச்சொல், துன்பம், கவலை, பொறாமை, கள்

**கவளம்** - கவுள் என்னும் கன்னக் கதுப்பு அளவு கொண்ட உணவு, யானை ஒருமுறை வாயிலிட்டு உண்ணும் அளவு, கைப்பிடி அளவான சோற்று உருண்டை, சோற்றுப்பருக்கை

**கவற்றி** - ஆர்வத் துடிப்பு

**கவனம்** - கருத்து ,வேகம், நினை வோட்டம், கலக்கம், வெப்பம், காடு

**கவி** - பாவலன், ஞானி ,குரங்கு
**கவிகை** - வளைவு ,குடை, ஈகை
**கவிச்சு** - புலால் நாற்றம்
**கவிஞன்** - பாவலன், சுக்கிரன்
**கவிதை** - பாட்டு, பா
**கவிப்பு** - மூடுகை, குணமனம் பற்றுகை
**கவிழ்-தல்** - தலைகீழாதல், நாண முதலியவற்றால் தலையிறங்குதல், குனிதல், நிலை குலைதல், அழிதல், முழுகிப்போதல், தாழ்தல்
**கவின்** - அழகு
**கவின்கலை** - உணர்வுகளைத் தொடும் பாடல், இசை, ஓவியம், சிற்பம், கட்டடக்கலை போன்ற வற்றின் அழகுத் தன்மை
**கவுள்** - கன்னம், யானையின் கன்னம், யானையின் உள்வாய், பக்கம்
**கவை** - கவரி,கவைக்கோல், பிளப்பு, இரட்டை, மரக்கப்பு, காரியம், தாமணி
**கவைக்குழி** - அக்குள்
**கழகம்** - கற்றோரும் புலவரும் கூடும் கூட்டம், சூதாடுமிடம், ஒரு கொள்கையை முன்னிட்டு சேர்த் தியங்கும் அமைப்பு அல்லது அரசியல் கட்சி
**கழங்கு** - கழற்சிக்காய், கழற்சிக்காய் விளையாட்டு, கழற்சிக்காயைக் கொண்டு வெறியாட்டில் வேலன் சொல்லுங்குறி, சூது
**கழல்** - வீரக்கழல், சிலம்புபாதம், செருப்பு, நடக்கும் உயிரினங்களின் உடற் பகுதிகளில் ஒன்றாகவும் அதன் துணை கொண்டு நிற்கவும், நடக்கவும் பயன்படும் பகுதியாகிய கால்
**கழல்(லு)-தல்** - நெகிழ்ந்து போதல், உடற்பொருத்து விலகுதல், வெளி யேறுதல், ஓடுதல், நீங்குதல், பிதுங்குதல், விழுதல், செலவாதல், அவிழ்தல்
**கழமை** - இரணக்கட்டி ,புரைகுழல்
**கழனி** - போரடிக்கும் களமுள்ள வயல், மருதநிலம், சேறு
**கழி** - கடலடுத்த உவர் நீர்ப்பரப்பு, நீரோடை, மிகுதி ,கோல், புலால்
**கழிசடை** - கழிக்கப்பட்ட மயிர்ச் சடைபோல இழிந்த-வன்-வள்-து
**கழி-த்தல்** - நீக்குதல், ஒதுக்குதல், பெரிய எண்ணினின்று சிறிய எண்ணைக் குறைத்தல், வெட்டுதல், குறைத்தல், போக்குதல், வரி முதலியவை தள்ளிக் கொடுத்தல், மலம் முதலியவற்றை வெளிபடுத்துதல், உருவுதல்
**கழி-தல்** - கடந்து போதல், செல விடுவதால் கழிதல், நடத்தல்
**கழிபடர்** - அளவிடற்கரிய துன்பம்
**கழிப்பு** - ஒழிக்கை, சாந்தி கழிக்கை, குற்றம், தள்ளுண்ட பொருள், கழித்தல்

**கழிமுகம்** - சங்கமுகம், அருவி

**கழிவிரக்கம்** - அளவற்ற இரக்கம், பிறர்மேல் காட்டும் இரக்கம், நிகழ்ந்ததையெண்ணி ஒருவன் தன்னைத் தானே நொந்து கொள்ளுகை

**கழிவு** - இறந்த காலம், கழிகடை, அழிவு, மிகுதி

**கழுக்காணி** - உலக்கை, வேங்கை மரம், அறிவற்ற தடியன்

**கழுத்தேர்** - முதலேரைப் பின் தொடரும் இரண்டாம் ஏர்

**கழுநீர்** - செங்குவளை, கருங்கு வளை, குவளை மலர், பூக்கும் கொடி வகை

**கழுவன்** - பொய்யில் நிலைப்பவன், கொடுந்தீயன், கழுவேறினவன்

**கழுவாய்** - தீர்திறம்

**கழுவுதல்** - துவைத்தல், நீராட்டுதல்

**கழை** - மூங்கில், மூங்கிற்குழாய், வேய்ங் குழல், ஓடக்கோல், குத்துக் கோல், கரும்பு, கழைக்கூத்து, தூம்பு என்னும் மூங்கிலாலி என்றவோர் இசைக்கருவி

**கள்** - புளிக்க வைத்த பனை, தென்னை போன்றவற்றின் வடிநீர், கள்ளிற்கினமான தேன், தேனுண்ணும் வண்டு

**கள்ளம்** - ஏய்ப்பு, பொய், களவு, குற்றம், மெய்யியல் அறியாமை, புண்ணிலுள்ள அசறு

**கள்ளி** - முட்செடிவகை, திருகுகள்ளி, இலைக்கள்ளி, சதுரக்கள்ளி, மண்டங் கள்ளி, சப்பாத்துக்கள்ளி, சாதிக்காய் மரம், கள்ளனின் மனைவி, திருடி, வேலை செய்யாது குழப்புவள்

**கள்வன்** - திருடன், தீயவன், பொய் யுரைப்பவன், ஏமாற்றுபவன், உள்ளங் கவர்பவன்

**களகம்** - நெற்கதிர், சுண்ணச்சாந்து, அன்னம், பெருச்சாளி

**களங்கம்** - குற்றம், கரிய மறு, கருத்தொலைப்பு குற்ற வகை, புகழ்க்கேடு, துரு, களிம்பு, கறுப்பு, கறுப்புப் புள்ளியாகிய ஒரு வகை வயிரக்குற்றம், நீலம், அடையாளம்

**களஞ்சியம்** - தவசம் சேர்க்கும் இடம், பண்டகசாலை, கருவூலம்

**களப்பணி** - உரிய இடத்திற்குச் சென்று நேரிடையாகச் செய்யும் பணி

**களப்பிரர்** - தமிழராயிருந்து மொழியால் வடுகர், கருநாடராகவும் சமயத்தால் பவுத்த சமணராகவும் விளங்கி கி.பி.மூன்றாம் நூற்றாண்டு முதல் ஐந்தாம் நூற்றாண்டு வரை தமிழகத்தை ஆட்சி புரிந்த அரச மரபினர்

**களபம்** - சுண்ணச்சாந்து ,கலைவைச் சாந்து, யானை, யானைக்கன்று

**களம்** - இடம், கதிரடிக்கும் நிலம், அவை, வேள்விச்சாலை,

போர்க்களம், களர் நிலம், உள்ளம், கடலில் விழும் திட்டு

**களம்** - இடம், நெற்களம், போர்க்களம், சபை, யாகசாலை , கருமை, மேசம், வஞ்சகம், கண்டம்

**களமர்** - வேளாளரில் ஒருவகைப் பிரிவினர், போர் மறவர், பண்ணைப் பணியாளர்கள்

**களரி** - களர்நிலம், காடு ,போர்க்களம், கூத்தாடுமிடம், சபை, நடுவர் அவை

**களரி** - விற்போர், மற்போர், நாடகம் முதலியன பயிலும் அரங்கு, அவை, அறமன்றம், போர்க்களம், தொழில் செய்யும் இடம், தெய்வமேறிகள் ஆடுமிடம்

**களவன்** - நண்டு

**களவு** - திருட்டு, பிறர் உடைமைகளைப் பறித்து உரியவருக்கு உரிமை இல்லா மலாக்கிக் கொள்ளும் நோக்கத்தில் மேற்கொள்ளும் செயல், திருடிய பொருள், முறையற்ற செயற்பாடு, ஏய்ப்பு, களவுப்புணர்ச்சி

**களி** - மகிழ்ச்சி, கள்ளுண்டு களிக்கை, தேன், கள், கட்குடியன், கட்குடியன் கூற்றாக வரும் கலம்பகவுறுப்பு, உள்ளச்செருக்கு, சினம், தியக்கம், யானை மதம், மதங்கொண்ட யானை, குழைவு, குழம்பு, மாவு முதலியவற்றால் ஆக்கிய களி, கஞ்சி, வண்டல், உருகிய மாழை நீர், களிமண், இறுகிய பழச்சாறு

**களி** - மகிழ்ச்சி, கள்ளுண்டு களிக்கை, உள்ளச்செருக்கு,யானைமதம், தேன், கள், கட்டுடியன், குழைவு, குழம்பு, கஞ்சி ,களிமண்

**களிப்பு** - மகிழ்ச்சி ,செருக்கு, மயக்கம், மதுவெறி,மண்பசை

**களிப்பு** - மனமகழ்ச்சி, செருக்கு, மயக்கம், மதுவெறி, சிற்றின்பம், மண்ணின் பசை

**களிறு** - ஆண்யானை ,ஆண் பன்றி

**களை** - அயர்வு, அழகு ,குற்றம், கழனியில் முளைக்கும் பயனற்ற பயிர்

**களை-தல்** - பிடுங்கியெறிதல், நீக்குதல், ஆடையணி முதலியன கழற்றுதல், அழித்தல், குழைதல், அரிசி கழுவுதல்

**கற்காலம்** - கல்லைக் கருவியாகப் பயன்படுத்திய காலம்

**கற்கி** - கோயில்

**கற்கிடை** - செங்கற்சூளை

**கற்சிறை** - கல்லணை

**கற்பகம்** - ஐந்தருவினொன்று தென்னை, பனை

**கற்பம்** - நானூற்று முப்பத்திரண்டு கோடி ஆண்டுகள் கொண்ட காலம், நான்முகனின் வாழ்நாள், இந்திரன் முதலிய தேவர்களின் வாழ்நாளளவு,

வாழ்நாளை நீட்டிக்கச் செய்யும் மருந்து, இலக்கங்கோடி, தேவர் உலகம்

**கற்பனை** - கல்வி, கற்பித்தல் கட்டளை காரிய ஏற்பாடு, இல்லாததைக்கட்டிச் சொல்லுதல், வருணனை வண்ணனை, ஏய்ப்பு, பொய்த் தோற்றம்

**கற்பி-த்தல்** - பயிற்றுவித்தல்

**கற்பு** - மகளிர் நிறை, கல்வி,அறிவு, தியானம், ஆணை

**கறவை** - பால் தரும் மாடு

**கற்றை** - திரள், கட்டு, தென்னோலைக் கற்றை

**கறகறப்பு** - ஒலிக்குறிப்பு, நறுமுறு வென்றிருக்கை, தொண்டையறுப்பு

**கறப்பு** - கறக்கை

**கறி** - மரக்கறி, மிளகு, இறைச்சி

**கறுப்பு** - கருமை ,வெகுளி ,குற்றம், கறை

**கறை** - வாழை, நுங்கு முதலியவற்றின் சாற்றாலுண்டாகும் சாயம், குற்றம், கறுப்பு நிறம், நிறம், இருள், நஞ்சு, அரத்தம், மாதவிலக்கு, உரல், கருங்காலி வகை

**கறையான்** - சிதல்

**கன்று** - கழுதை, ஆன், எருமை, யானை, குதிரை, மரை, கவரிமா, கராம், ஒட்டகம் முதலிய விலங்குகளின் இளமைப் பெயர், மா, புளி, வாழை முதலியவற்றின் இளநிலை, சிறுமை, கைவளை

**கன்னம்** - காது, கதுப்பு, களவு, பெருமை

**கன்னி** - குமரி, இளமை,புதுமை, முதனிகழ்ச்சி, மலைமகள், அழிவின்மை, பருவ மடைந்தவள், பருவப்பெண்

**கன்னு-தல்** - பழுத்தல், அரத்தங்கட்டிச் சிவப்பாதல்

**கன-த்தல்** - பாரமாதல், மிகுதியாதல், பருத்தல், தடித்தல், கட்டைக் குரலாதல், பெருமையுறுதல்

**கனம்** - சுமை, பருமன், பெருமை, செறிவு, திரட்சி, உறுதி, மிகுதி, ஓரெண்ணை அதனாலேயே இருமுறை பெருக்க வரும் இலக்கம், கனவடிவு, கூட்டம், வட்டம், அகலம், முகில், கோரைக்கிழங்கு

**கனல்** - நெருப்பு, சினம்

**கனலி** - கதிரவன், நெருப்பு

**கனவு** - கனா, ஊக்கத்தில் தோன்றும் காட்சி, மயக்கம்

**கனி** - கனிவு, பழம், இனிமை, சாரம், மூவசைச்சீரில் இறுதியிலுள்ள நிரை யசை

**கனிக்காழ்** - பழத்தின் விதை

**கனிதல்** - பழுத்தல், இனித்தல், மன மிளகுதல்

**கனிப்பு** - இனிமை

**கனிவு** - முதிர்கை, அன்பு, மாந்த நேய வெளிப்பாடு, இரக்கம்

**கனைப்பு** - ஒலி, குதிரை முதலிய வற்றின் குரலோசை, கொக்கரிப்பு

**கா** - அசைச்சொல், காத்தல், சோலை, காடு, விரும்பியதைத் தருவதாகக் கருதப்பட்ட கற்பகமரம், ஆல், செறிவு, தோட்சுமை, இரு பக்கமுஞ் சுமை தாங்கும் காவடித் தண்டு, துலாக்கோல் பூ அல்லது இதழ் முதலியன வைக்கும் பெட்டி, துன்பம், வலி

**காக்கை கொடியோள்** - மூதேவி

**காக்கை மனம்** - தீய மனம்

**காகணம்** - குட்டநோய், குன்றிக்கொடி

**காகம்** காக்கை, **23**-ஆம் நாண்மீன், கீரி

**காகூவெனல்** - ஒலிக்குறிப்பு

**காங்கு-தல்** - வறளுதல் பேராசை கொள்ளுதல்

**காங்கை** - வெப்பம்

**காசா** - சொந்தம், அசல் விலை, நாணல், எருமை

**காசு** - குற்றம், கவறாடுங்குருவி, செப்புக்காசு, பொன், அச்சுத்தாலி, ஒரு பழைய பொன் நாணயம், கைப்பணம், மணி, மணிமேகலை என்னும் அணிகலன், பல்லாங் குழியாட்டத்திற் காய்கள் சேர்தற்குரிய நடுக்குழிகள், வெண்பாவின் இறுதிச்சீர் வாய்பாட்டுள் ஒன்று

**காஞ்சி** - ஆற்றுப் பூவரசு,காஞ்சிப் பூமாலை, வேற்றுமன்னன் படையெடுத்து வரும்போது அரசன் காஞ்சி என்னும் பூவைச் சூடித் தன் காவலிடத்தைக் காக்கும் புறத்துறை, நிலையாமை , செவ்வழிப்பண் வகை, நொய்யலாறு, மருதப்பண், காஞ்சிபுரம், ஏழு கோவையணி, மயிர், பெருமை, அறிவு

**காட்சி** - கண்ணுறல், தோற்றம், தோன்றியருளல், கண்காட்சி, புதுமையான நிகழ்ச்சி, நேர்த் தோற்றம், தலைவன் தலைவியை முதன்முதற் காணுதலைக் கூறும் ஒரு கைக்கிளைத் துறை, வீரருக்கோ, வீரரின் கற்பில் சிறந்த மனைவியருக்கோ எடுத்த நடுகல்லை ஆராய்ந்து காணும் புறத்துறை, நடுகல்லை வீரர் வணங்குவதைக் கூறும் புறத்துறை, ஒரு பொருளைக் கண்ட இடம், நூல், அறிவு, அழகு, தன்மை, திருவடிப் பேறு, வேடிக்கை, வியப்பு, தேற்றம்

**காட்டம்** - விறகு, காய்ந்த குச்சி, புளிப்பு, உறைப்பு, எரிநோவு

**காட்டிக்கெடு-த்தல்** - கற்றுக் கொடுத்தல், தன் பக்கத்தா னொருவனை எதிரி கைக்கொள்ளும் நிலைமையை உண்டாக்குதல்,

ஆய்வு முறையைக் கையாண்டு வெளிப்படுத்துதல்

**காட்டிக்கொள்ளு-தல்** - இல்லாததை உள்ளதுபோல் காட்டிக்கொள்ளுதல்

**காட்டிமறை-த்தல்** - எளிதில் கிடைப்பது போல் தோற்றுவித்து ஏமாறச் செய்தல்

**காட்டு** - காட்டுதல், உதாரணம், செத்தை

**காட்டு-தல்** - காண்பித்தல், அறிவித்தல், நிறுவுதல், நினை வூட்டுதல், திருவமுது படைத்தல், நிழலுருச் செய்தல், உண்டாக்குதல், அறிமுகஞ் செய்வித்தல், நறுமண முதலியன ஊட்டுதல், வெப்பம் உறைக்கச் செய்தல், மீட்டுத்தருதல்

**காட்டுமிராண்டி** - காட்டுவிலங்காண்டி நாகரிகமற்றவன்

**காட்டேறி** - ஒரு தீய சிறு தெய்வம்

**காடர்** - காட்டில் வாழும் குடிகள், ஆனை மலையில் வாழும் ஓரினத்தார்

**காடி** - புளித்த கஞ்சி, புளித்தகள், கஞ்சி, புளித்த பழச்சாறு, ஊறுகாய், சோறு, கடுத்து, மிடா, மேடை வண்டி, பள்ளம்

**காடு** - மரங்கள் செறிந்த நிலப்பகுதி, செத்தை, சோலை, கடற்கரை, இடம், புன்செய்நிலம், சிறிய ஊர், எல்லை, நான்கு அணைப்புள்ள ஒரு நிலவளவு, தாழி நாண்மீன், முரட்டுத் தன்மை, வனம், பாலை, மிகுதி, நெருக்கம், சுடுகாடு

**காடுகிழாள்** - கொற்றவை

**காடுகெடு-த்தல்** - காடழித்தல்

**காடுதல்** - அலைக்கழித்தல், துன்புறுத்தல்

**காடுபடு-தல்** - நிரம்புதல், வீணாதல்

**காடுபலியூட்டு-தல்** - வேடர், குறவர் முதலியோர் காட்டில் உள்ள தெய்வங்களுக்குப் பலியிடுதல்

**காடுபற்று-தல்** - காடாக மாறுதல்

**காடுமேய்-தல்** - வீணாய்த் திரிதல்

**காடேறு-தல்** - காட்டிற்கு ஓடுதல், சாகுந்தறுவாயில் நோய்த்தெளிவு உண்டாதல்

**காண்** - காட்சி, அழகு ,ஆராய்ச்சி, காணுதல்

**காண்(ணு)-தல்** - பார்த்தல், இறைவன், பெரிய மனிதர், முழுநிலவு போன்றவற்றைக் காணுதல், கண்டறிதல், உண்டாக்குதல், பொறியாலறிதல், ஆராய்தல், தானே நுகர்ந்து அறிதல், மதித்தல், வணங்குதல், புறங்காணுதல், பெறுதல், சொல்லுதல், ஒத்திருத்தல், பொருந்துதல், பலித்தல், கண்ணுக்குத் தெரிதல், போதியதாதல்

**காண்கொடு-த்தல்** - பார்க்கும்படிச் செய்தல்

**காண்டம்** - நீர், நூற்பெரும் பிரிவு, குதிரை, திரட்சி ,ஆடை

**காண்டிகை** - சூத்திரப் பொருளைச் சுருங்க உரைக்கும் வகை

**காண்டு** - கோபம், கூப்பிடுதொலைவு

**காணம்** - பொற்காசு, பொருள், கொள்ளு, செக்கு பழைய நிறுத்த லளவையுள் ஒன்று, பொன், தாண மொத்த வடிவிலுள்ள பழைய பொற்காசு, பொருள்

**காணம்போடு-தல்** - செக்காட்டி எண்ணெய் பிழிதல், அடிக்கடி ஏதேனும் தின்று கொண்டே யிருத்தல்

**காணல்** - காண்கை, மனத்தால் குறிக்கை, வணங்குகை, தோற்றம், பெரியோரை நேர்காணல்

**காணாக்கண்ணிடு-தல்** - பாராதது போல் இருத்தல்

**காணார்** - பகைவர், குருடர்

**காணி** - ஓரெண், குழிநிலம், காணியாட்சி, கொடி வழியுரிமை, நில அளவில் ஒரு வேலியில் ஐந்தில் ஒரு பகுதி, 400 குழிப்பரப்பு, நிலம்

**காணிக்கடன்** - நிலவரி

**காணிக்கை** - கையுறை, இலவயமாகக் கொடுக்கும் பொருள்

**காணி-த்தல்** - காட்டுதல்

**கா-த்தல்** - காவல் செய்தல், கெடாது பேணுதல், அழியாது காத்தல், உயிருடன் வைத்துப் பேணுதல், நடைமுறையில் இருக்குமாறு செய்தல், பாதுகாத்தல், அரசாளுதல், பின்பற்றுதல், அரண் காப்புச் செய்தல், பேணிவளர்த்தல், கவனித்துப் பேணுதல், ஆடுமாடு முதலியன மேய்த்தல், எதிர்பார்த் திருத்தல், கா என்னும் ஏவல்

**காத்தல்** - பாதுகாத்தல், அரசாளுதல், அளித்தல், முத்தொழிலில் ஒன்று

**காத்திரு-த்தல்** - எதிர்பார்த்திருத்தல், காவல் பூண்டிருத்தல்

**காதம்** - பண்டைய நீட்டல் அளவு, ஏழுறை நாழிகை வழி

**காதல்** - அன்புடைமை, காமவிச்சை, இறையுணர்வு, வேட்கை, ஆவல், மகன், சிற்றிலக்கிய வகை

**காதலன்** - அன்பன், கணவன், மகன், நண்பன்

**காதலி** - அன்பு கொண்டவள், மனைவி, மகள், தோழி

**காதலி-த்தல்** - அன்பு கூர்தல், விரும்புதல்

**காதறு-தல்** - காதின் துளை அறுதல், ஆவணம் தீர்க்கப்பெற்றுக் கிழிபடுதல், செருப்பின வாரறுதல், ஊசித்துளை முறிதல், கவணிற் கல் வைக்கும் இடம் அற்றுப்போதல், பகை கொள்ளுதல்

**காதை** - கதை கொண்ட பகுதி, வரலாறு, சொல்

**காந்தப்பெட்டி** - திசையறி கருவி

**காந்தமணி** - காந்தக்கல்

**காந்தருவம்** - காதலர் தம்முள் மனமொத்துக் கூடுங்கூட்டம், இசைப் பாட்டு, காந்தருவமறை, யாழ்

**காந்தல்** - இசைக்குறிப்பு, சுடல்

**காந்தள்** - அழுத்தமான செந்நிறத்திலும் வெண்ணிறத்திலும் காட்டில் பூப்பதும் தமிழ் இலக்கியங்களில்

இடம் பெற்றதுமான மலர்வகை, காந்தள் மலரணிந்து வேலன் வெறியாடுவதைக் கூறும் புறத்துறை, முருகக்கடவுளுக்குரிய காந்தளைச் சிறப்பித்துக் கூறும் புறத்துறை, சவர்க்காரம்

**காப்பு** - பாதுகாவல், தெய்வ வணக்கம், திருநீறு, முழுக்கு, கை கால்களின் அணி, மதில், அரசமுத்திரை, ஊர், திக்குப்பாலகர், சிறை, பாதஅணி, அரசன் நுகர்பொருள்

**காபாலம்** - சிவன்கூத்து

**காம்பு** - இலை முதலியவற்றின் தாள், கைப்பிடி, மூங்கில், பட்டுச்சீலை

**காமம்** - விருப்பம், இன்பம், ஆசை, சிற்றின்பம்

**காமாட்சி** - மலைமகள்

**காமுகன்** - தூர்த்தன், நாகரிகன், திருமால்

**காய்கை** - சினத்தல்

**காய்ச்சல்** - எரிச்சல், கடிந்து கொள்ளல்

**காய்தல்** - உலர்தல், சினத்தல், ஆறுதல்

**கார்த்திகேயன்** - குமாரக்கடவுள்

**காரணம்** - ஏது, ஏடல்

**காரம்** - அழிவு ,திருநீறு ,கோபம்

**காரி** - கரிக்குருவி ,சனி ,நஞ்சு ,கரிய எருது, வாசுதேவன், வயிரவன், இந்திரன், ஒரு வள்ளல், காரி நாயனார், ஒருநதி

**காரிகை** - பெண், அழகு ,அலங்காரம், ஓரிலக்கண நூல்

**காரியம்** - காரணத்தாலாவது செய்தி, செய்யதக்கது, நோக்கம்

**காரை** - சுண்ணச்சாந்து, ஊத்தை, ஆடை

**கால்** - நாலிலொன்று, பாதம், அடிப் பாகம், தேருருள், வண்டி, கைப்பிடி, தூண், கம்பம், கால்வழி, மரபுவழி, பிறப்பிடம், வாய்க்கால், நடை, முனை,கிரணம், காற்று, பொழுது, முயற்சி, துறை, தடை, இயமன்

**காலடி** - உள்ளங்கால், காற்சுவடு

**கால்வழி** - ஒற்றையடிப் பாதை, மரபுவழி

**காலன்** - இயமன், கரந்துறை கோள்களுள் ஒன்று

**காலாவதி** - காலவரையறை, நாள் முடிவுற்றுப்போதல்

**காலை** - காலம், வாணாள், சமயம், முறை,விடியற்காலம், சூரியன்

**காவல்** - பாதுகாப்பு ,வேலி ,பரண், மதில், சிறை ,காவலாள்

**காவலன்** - பாதுகாப்போன், அரசன்

**காவற்காடு** - பாதுகாக்கப்படும் காடு

**காவற்கூடம்** - சிறைச்சாலை

**காவி** - பழுப்பு நிறம், கருங்கு வளைகள், செம்மண், செங்கழுநீர்

**காவியம்** - காப்பியம்

**காவு** - சிறுதெய்வப்பலி

**காவுதடி** - காவடித்துண்டு

**காவுதல்** - சுமத்தல்

**காவுவோர்** - பல்லக்குச்சுமப்போர்

**காளமேகம்** - கருமேகம்

**காளி** - துர்க்கை, பாம்பின் நச்சுப் பற்களிலொன்று

**காளை** - இளவெருது, கட்டிளமையோன், பாலை நிலத் தலைவன், வீரன்

**காற்படை** - கோழி, காலாட்படை

**கானகம்** - காடு

**கானம்** - காடு,பாலை , கடற்கரைச் சோலை, நந்தவனம் தொகுதி,மிகுதி, மனம், இசைப்பாட்டு

**கானல்** - வாசனை, கடற்கரை, கடற்கரைச் சோலை,கழி,வெப்பம், ஒளி, பேய்த்தேர்

**கானல் வரி** - கழிக்கரைப்பாடல், இசைப்பா வகையுள் ஒன்று

**கானா** - சுக்கான் கைப்பிடி

**கி** - தமிழ் நெடுங்கணக்கில் மூன்றாவதாக வரும் உயிர்மெய் எழுத்து

**கிக்கரி** - மீன்கொத்திப்புள்

**கிக்கிலம்** - மலை, பருவதம்

**கிங்கரர்** - ஏவலாட்கள்

**கிச்சிலி** - நாரத்தை

**கிச்சு** - நெருப்பு

**கிஞ்சம்** - சிறுமை, நுட்பம்

**கிஞ்சுகம்** - கிளி, கேசயப்புள்

**கிடுகு** - கேடகம், சட்டப்பலகை ,தட்டி

**கிடுகோலை-** கீற்றுக்குரிய தென்னோலை

**கிடுமுடி** - சிறுபறை

**கிரகித்தல்** - ஈர்த்தல், பற்றுதல், நுண்ணிதினுணர்தல்

**கிரந்தம்** - நூல், வடமொழித் தமிழெழுத்து , வடமொழி

**கிரந்தி** - மேகவூறல், ஏலத்தோல்

**கிராம்பு** - இலவங்கம்

**கிலம்** - சிதைந்தது

**கிலாய்த்தல்** - சினங்கொள்ளல்

**கிலுகிலுப்பை** - விளையாட்டுக்கருவி, செடிவகை

**கிழக்கு** - கீழ்த்திசை, கீழிடம், இழிவு

**கிழடு** - முதுமை

**கிழத்தி** - உரியவள், தலைவி, மருத நிலத்தலைவி

**கிழமை** - உரிமை, உறவு, நட்பு, குணம், முதுமை, வாரநாள்

**கிழவன்** - உரியவன், தலைவன், முதியவன், பரணி ,நாள்

**கிழவி** - முதியவள், தலைவி

**கிழவு** - கிழத்தன்மை

**கிழி** - கிழிபட்ட துகில், சீலைப்படம், கீழுடை, பணமுடிச்சு

**கிழித்தல்** - போர்த்தல், சீறுதல், வரைதல், சாதித்தல், அங்காத்தல், தின்னுதல்

**கிழிப்பு** - கிழிக்கை, பிளப்பு ,குகை

**கிளர்ச்சி** - எழும்புகை, செழிப்பு, கோபம், கலவரம், கொந்தளித் தெழுகை

**கிளவி** - பேச்சு, மொழி

**கிளறுதல்** - கிண்டுதல், கலக்குதல், துழாவுதல், துருவியாராய்தல், வெளியாக்குதல்

**கிளிஞ்சல்** - கடல்வாழ் உயிரி வகை

**கிளை** - கப்பு, தளிர், பூங்கொத்து, சுற்றம், இனம், பகுப்பு, ஓரிசைக் கருவி

**கிறுகிறுப்பு** - தலைச்சுழற்சி, செருக்கு

**கின்னம்** - துன்பம், கிளி, கீழ்மை

**கின்னரம்** - கின்னரப்பறவை, இசை யெழுப்பும் பறவை, ஒரு வகையாழ், ஆந்தை

**கின்னரி** - யாழ்வகை

**கின்னாரப்பெட்டி** - கின்னரப்பெட்டி

**கீ** - ஒரெழுத்து, கிளிக்குரல்

**கீகடம்** - நெருக்கம்

**கீச்சு** - அழுகையொலி, புள்ளொலி

**கீதம்** - இசைப்பாட்டு, வண்டு மூங்கில்

**கீர்த்தனை** - இசைப்பாட்டு ,புகழ்ச்சி

**கீரி** - கீரிப்பிள்ளை

**கீரை** - இலைக்கறி

**கீழ்நிலை** - தாழ்ந்த நிலைமை

**கீழ்மை** - இழிவு ,பணிவு

கீழை நிலை - விடியற்காலம்

**கீற்று** - வரி, கூரைக்கிடுகு, வயிரக் குற்றம்

**கீறல்** - கீறுதல், எழுதுகை,கிழிகை, கையெழுத்திடத் தெரியதாவன்

**கீறுதல்** - வரிக்கீறுதல், எழுதுதல், பிறாண்டுதல், அறுத்தல், வகிர்தல்

**கீனம்** - குறைவு, இழிவு

**குகன்** - முருகன்

**குகை** - மலைக்குகை, உலோகம் உருக்குங் கலம், சமாதியறை,சிமிழ்

**குங்குமம்** - செடிவகை ,செஞ்சாந்து

**குச்சி** - உச்சி, மரக்குச்சி

**குஞ்சம்** - பூங்கொத்து, புற்குச்சு, கொய்சகம், பாவாற்றி, நாழி, கூன், குறளை, ஈயோட்டி

**குஞ்சு** - பறவை, எலி, அணில் முதலியவற்றின் பிள்ளை

**குடக்கு** - மேற்கு

**குடக்கூத்து** - கண்ணன் குடமெடுத் தாடிய கூத்து

**குடக்கூலி** - குடிக்கூலி, வாடகை

**குடகம்** - மேற்கு, குடகுநாடு

**குடங்கை** - உள்ளங்கை, நாடக உறுப்புள் ஒன்று

**குட்டை** - குறுகியது ,குளம், சிறுதுணி, குறுணி

**குடந்தை** - வளைவு, கும்பகோணம், குடவாயில்

**குடம்** - நீர்க்குடம், குடக்கூத்து, வண்டிக் குடம், திரட்சி ,நகரம், ஆ,வெல்லம்

**குடலை** - பூக்குடலை, கதிர்க்குடலை, கிணற்றுக்குடலை

**குடி** - பருகுகை, மதுபானம், குடியானவன், குடியிருப்போன், ஆட்சிக்குட்பட்ட குடிகள், குடும்பம், குலம், வீடு, ஊர், வாழ்விடம், புருவம்

**குடிக்கூலி** - வீட்டுவாடகை

**குடிகை** - கோயில், பர்ணசாலை, ஏலவரிசி, கமண்டலம்

**குடிநீர்** - குடிக்கும் நீர், கியாழ மருந்து

**குடிமக்கள்** - பணிசெய்வதற்குரிய 18 வகை ஊர்க்குடிகள்

**குடியானவன்** - பயிரிடுவோன்

**குடியிருப்பு** - சிற்றூர், குடியிருக்கை

**குடியேற்றம்** - குடிபுகுதல்

**குடில்** - குடிசை, வானம்

**குடும்பம்** - குலம், மனைவி

**குடுமி** - ஆண்மயிர், உச்சி, கொண்டை, முடிபு, வெற்றி, ஒரு பாண்டியன்

**குடை** - கவிகை, அரசாட்சி, குடைக் கூத்து, மிதியடிக்குமிழ், நீருண்ணும் ஓலைப் பட்டை

**குடைதல்** - கிண்டுதல், துளைத்தல், வருந்துதல், உளைவு நோய், எடுத்தல், உட்புகுதல், நீரில் மூழ்குதல்

**குண்டலம்** - ஆடவர் காதணி, வானம், வட்டம்

**குண்டலி** - நாபித்தானம், சுத்த மாயை, சீந்தில், தொப்புள்

**குண்டி** - புட்டம், இதயம், அடிப்பாகம், சிறுநீரகம்மூத்திரப்பை, மீன்சினை

**குண்டு** -உருண்டு கனப்பது, துமிக்கிக் குண்டு, ஆண்குதிரை, சிறுசெய், ஆழம், இழி செய்கை

**குண்டூசி** - தலைதிரண்டவூசி

**குணப்படுதல்** - சீர்ப்படுதல், நோய் குறைதல்

**குணம்** - தன்மை, அனுகூலம், மேன்மை , வில்லின்நாண், குடம், நிறமி

**குத்தல்** - தின்னல், ஊன்றல், தைத்தல்

**குத்து** - தாக்குகை, குத்துகை,புள்ளி, நோவு ,பிடி

**குத்துக்கோல்** - தாற்றுக்கோல்

**குத்துதல்** - துளையிடுதல், தைத்தல், முட்டுதல், இடித்தல், தின்னுதல், ஊன்றுதல், கிண்டுதல், சுடுசொற் சொல்லுதல்

**குதலை** - மழலைச்சொல், இனிய மொழி, அறிவில்லான்

**குதி** - குதிப்பு, குதிகால்

**குதித்தல்** - பாய்தல், எழும்பிவிடுதல், கூத்தாடுதல், கடந்துவிடுதல்

**குதிர்** - ஒரு மரம், நெற்கூடு

**குதிரை** - பரி, கயிறு முறுக்குங்கருவி, யாழுறுப்பு, தாங்கு சட்டம், ஊர்க்குருவி, ஒரு மலை

**குந்துதல்** - ஊன்ற வைத்து உட்காருதல், வளைதல், தவறுதல்

**குப்பை** - குவியல், கூட்டம், நெற்குவியல், செத்தை,தொகுதி

**குபேரன்** - இயக்கரதிபன், நிதிக் கிழவன், வடதிசைப்பாலன், சந்திரன் குப்பாயம், சட்டை

**கும்பம்** - குடம், யானை மத்தகம், நூறுகோடி

**கும்பிடு** - வணக்கம்

**கும்மாளம்** - குதித்து விளையாடுகை

**குமட்டுதல்** - தெவிட்டுதல், வாந்திக்கு வருதல்**குமரவேள்** - முருகக்கடவுள்

**குமரன்** - இளைஞன், புதல்வன், முருகன், வைரவன்

**குமரி** - அழிவின்மை, இளமை, கன்னி, ஓராறு, ஒரு தீர்த்தம்

**குமாரன்** - குமரன்

**குமாரி** - புதல்வி, காளி, அழியா விளமையினள்

**குமிழி** - குமிழ், ஊற்றுவாய்

**குமுதம்** - ஆம்பல், அல்லிமலர் படைவகை, அடுப்பு, பேரொலி, தருப்பை

**குயவன்** - குசவன், மறைபொருளவன்

**குயில்** - சொல், துளைத்தல், மேகம், பின்னுதல், கூவும்புள், செறிதல், இசைக்கருவி ஒலித்தல்

**குரங்கு** - வளைவு, வானரம், முசுமுசுக்கை

**குரல்** - கதிர், பூங்கொத்து, சேர்க்கை, தினை, வாழை முதலியவற்றின் தோகை, கழுத்து,மிடறு, ஒலி ஓசை, மொழி,கிண்கிணிமாலை

**குரல்வளை** - மிடறு

**குரவர்** - ஐங்குரவர், அரசன், குரு, தாய், தந்தை ,மந்திரி, அமைச்சர்

**குரவை** - மகளிர் கைகோத்தாடுங் கூத்து, கடல்

**குரு** - கொப்புளம், வேர்க்குரு, புளகம், நிறம், ஒளி, ஞானாசாரியன், தகப்பன், கனம், குருகுலத் தலைவன்

**குருக்கள்** - சிவன்கோயில் பூசாரி

**குருடன்** - கண்ணில்லாதவன், பார்வையற்றவன்

**குருடு** - பார்வையின்மை, காதின் வெளிப் புறத்துள்ள செவிள், மூடன்

**குருத்து** - வெண்மை, இளமை, மரம் முதலியவற்றின் குருத்து

**குருதி** - அரத்தம், சிவப்பு

**குலம்** - குடி ,உயர்குலம், மேன்மை, இனம், கூட்டம், கோயில், மூங்கில், மலை, அழகு

**குலமுறை** - கொடி வரலாறு, குலவழக்கம்

**குலை** - நாணி ,வில்லின் குதை, கொத்து, பாலம்

**குலைதல்** - அவிழ்தல், கலைதல், குழைதல், நடுங்குதல், அழிதல்

**குவளை** - கருங்குவளை ,செங்கழுநீர், ஒரு பேரெண், கண்குழி

**குழப்பம்** - தாறுமாறு ,மனக்கலக்கம்

**குழம்பு** - குழம்பான பொருள், குழைசேறு

**குழல்** - மயிர், சுருட்டி முடித்த கூந்தல், இசைக்குழல், உட்டுளைப்பொருள், ஒரு மீன்

**குழவி** - குழந்தை, அம்மிக்குழவி, யானைக்கன்று

**குழவு** - இளமை

**குழி** - பள்ளம், பாத்தி ,பன்னீரடிச் சதுரம், வயிறு ,கிடங்கு ,நீர்நிலை

**குழூஉக்குறி** - ஒரு கூட்டத்தார் மட்டும் பேசும் சொல்

**குழைதல்** - இளகுதல், அளிதல், வளைதல், வாடுதல், துவளுதல், தளர்தல், வருந்துதல்

**குள்ளம்** - குறள், வறுமை

**குளநெல்** - குளத்தின் நீர்ப்பிடிப்பில் தானாக விளையும் நெல்

**குளம்** - வெல்லம், தடாகம், நெற்றி, மார்கழி

**குளவி** - கொட்டும் வண்டு ,காட்டு மல்லிகை

**குளித்தல்** - நீராடுதல், தைத்தல், அழுந்துதல், வலிய உட்புகுதல், மறைதல், தோல்வியுறுதல்

**குளிப்பாட்டுதல்** - நீராட்டுதல்

**குளிர்** - குளிர்ச்சி, நடுக்கம், கிளிகடி கருவி, அரிவாள், குடமுழவு, கவண், நண்டு

**குற்றம்** - பிழை, பழி, துன்பம், குறைவு

**குற்றேவல்** - பணிவிடை

**குறட்டை** - உரத்த மூச்சொலி, எலிவகை

**குறட்பா** - சிறு வெண்பா, அரை வெண்பா

**குறடு** - பற்றுக்குறடு, பாதக் குறடு, மரத்துண்டு, பட்டடை மரம், ஒட்டுத் திண்ணை, பறைவகை, நண்டு

**குறத்தி** - குறிஞ்சிநிலப்பெண்

**குறத்திப்பாட்டு** - குறத்திக்குறி சொல்வ தாகப்பாடும் நூல்

**குறம்** - குறத்தி சொல்லும் குறி

**குறவஞ்சி** - குறிசொல்லுங்குறமகள், குறத்திப்பாட்டு

**குறவர்** - குறிஞ்சி, பாலை நிலமக்கள்

**குறள்** - குறுமை, சிறுமை, குள்ளன், பூதம், குறள் வெண்பா

**குறளடி** - இருசீரடி

**குறளன்** - குள்ளன், வாமனன்

**குறி** - அடையாளம், இலக்கு, பெயர், நோக்கம், மதக்கொள்கை, முன்னறிந்து கூறும் நிமித்தம், சபை, ஒழுக்கம், இலக்கணம்

**குறிக்கோள்** - மனவொருமை, ஞாபகத்தில் வைத்தல், அறியுந்திறம், உயர்ந்த, லட்சியம், நல்லுணர்வு

**குறிஞ்சி** - குறிஞ்சிப்பூ, மலையும் மலை சார்ந்த இடமும், புணர்தலும் புணர்தல் நிமித்தமுமாகிய ஒழுக்கம்

**குறிப்பு** - கருத்து, சைகை, சுருக்கம், வெளிப்படையல்லாதது,அடையாளம், இலகீடு, கைக்குறிப்பு ஏடு

**குறியீடு** - குறியாக இட்டாளும் பெயர்

**குறில்** - குற்றெழுத்து, குறமை

**குறுக்கு** - ஒரு வாத்திய மரம், இடை

**குறுகுதல்** - குள்ளமாதல், சிறுகுதல், அணுகுதல், மாத்திரை குறைதல்

**குறுகுறுத்தல்** - மனமுறுத்தல்

**குறும்பர்** - குறுநில மன்னர், வேடர், துர்ச்சனர்

**குறும்பு** - பாலை நிலத்தூர், குறுநில மன்னர், பகைவர், அரண், வலிமை, கானவர், சீறூர்

**குறை** - குறைபாடு, குற்றம், முடிக்கப் படும் பொருள், எஞ்சியது, கடன், இன்றியமையாப்பொருள், காரியம், வேண்டுகோள், ஆற்றிடைக் குறை

**குன்னம்** - அவமானம், பழி

**கூ** - பூமி, நிலம்

**கூக்குரல்** - பேரொலி, முறையிடுதல்

**கூகம்** - ஆந்தை, கூகை, மறைவு

**கூகளம்** - ஒரு மந்திர வகை

**கூகனம்** - அவைக்கு அடாத மொழி

**கூகை** - கோட்டான், செடிவகை

**கூச்சம்** - கூசுகை, நாணுகை, அச்சம்

**கூச்சலிடுதல்** - இரைதல், கூக் குரலிடுதல்

**கூசுதல்** - நாணுதல், கூச்சங் கொள்ளுதல், வெட்கப்படுதல் அஞ்சுதல்

**கூட்டம்** - சபை, மெய்யுறு புணர்ச்சி, திரள், இனத்தார்

**கூட்டு** - நட்பு, துணை, உறவு, திரள், கலப்பு, கூட்டுக்கறி, கொள்ளைப் பொருள், திறை

**கூட்டுறவு** - நெருங்கிய உறவு, ஒற்றுமையாய் வேலை செய்கை, நட்பு

**கூடம்** - வீட்டின் கூடம், தேவகோட்ட மன்றம், மறைவு, வஞ்சகம், பொய், சம்பட்டி

**கூடல்** - பொருந்துகை புணர்ச்சி, சங்கமுகம், கூடற்சுழி, மதுரை, தோப்பு, கைகூடல்

**கூடாநட்பு** - புறநட்பு

**கூடு** - பறவைக்கூடு, நெற்கூடு, உறை, சிமிழ், உடல்

**கூடுதல்** - கூடல், திரளல், கிடைத்தல், இயலுதல், நேரிடுதல், தகுதியாதல், உடன்படுதல்

**கூத்தன்** - நடன், சிவான்மா, ஒட்டக்கூத்தர்

**கூத்தாடி** - நடன், கழைக்கூத்தன்

**கூத்து** - நடனம், நாடகம், அதிசயம், கேலி

**கூதிர்** - பின்கார்ப்பருவம், பனிக்காற்று, குளிர், சாரற்காலம்

**கூதை** - ஊதை, காற்று

**கூந்தல்** - பெண் தலைமயிர், மயிற்றோகை, குதிரைப்பிடரிமயிர், யானைக் கழுத்து மயிர், தலையிடம்

**கூப்பாடு** - முறையீடு

**கூர்மை** - ஆயுதக்கூர், நுண்மை, சிறப்பு, வெடிப்பு

**கூரை** - வீட்டிறப்பு, சிறுகுடில்

**கூலம்** - பல தவசம், கூலக்கடை, நீர்க்கரை, வரம்பு, முறை, பசு, மரை, குரங்கு

**கூவம்** - கிணறு

**கூவல்** - கிணறு, கூவுகை

**கூழ்** - மாவுணவு, பொருள், பாற்சோறு, பயிர், பயன்

**கூற்று** - கூறுமை, இயமன்

**கூறு** - பகுதி, பங்கு, தன்மை, சொல்லல், விலைகூறல், எள்

**கூன்** - வளைவு, உடற்கூனல், நுடம், கோட்டம், பெரும் பாத்திரம், நத்தை, ஆந்தை

**கூனி** - கூனலுள்ளவள்,வானவில், பங்குனி

**கெஞ்சுதல்** - இரந்து பல முறை வேண்டுதல்

**கெட்டி** - உறுதி, சாமர்த்தியம், அழுத்தம், தரம், திடம்

**கெடு** - தசணை, தரித்திரம், கேடு

**கெண்டை** - கண்டை, கணைக்கால், மேல் கையின் முன் பக்கத்துச்சதை

**கெத்து** - சூழ்ச்சி உத்தி, மீத்திறன் போலக் கட்டுதல்

**கெம்புதல்** - உரத்துப் பேசுதல், ஆரவாரித்தல்

**கேசவன்** - திருமால், சோழன்

**கேட்டை** - மூத்ததேவி, ஒரு விண்மீன்

**கேடயம்** - பரிசை, பாசறை

**கேண்மை** - நட்பு, உறவு

**கேணி** - சிறுகுளம், கிணறு

**கேது** - நிழற் கோள், ஒளி

**கேவலம்** - தனிமை, இணையற்றது, வீடுபேறு, அவமானம்

**கேள்** - உறவு, நட்பு, கணவன்

**கேள்வி** - கேட்கை,வினா கல்வி, இசை, யாழ், மந்திரம்

**கேளவன்** - கணவன்

**கேளிக்கை** - மகளிர் நடனம்

**கை** - ஒப்பனை, செயல், காப்பு, துதிக்கை, கைமரம், கைப்பிடி, பக்கம், சிறகு, சேனை,கைப்பொருள், ஆற்றல், சிறுமை, மிகுதி

**கைக்கிளை** - ஒருதலைக்காமம்

**கைக்குறிப்பு** - நினைவுக்குறிப்பு

**கைக்கூலி** - அற்றைக்கூலி

**கைக்கோல்** - ஊன்றுகோல், பற்றுக் கொடிறு

**கைகழுவுதல்** - விட்டுவிடுதல்

**கைகாட்டுதல்** - சைகைகாட்டுதல், பிடித்தல், முத்திரைக் காட்டுதல் சிறிது கொடுத்தல், திறமை காட்டுதல்

**கைகூடுதல்** - ஒன்று கூடுதல், கிட்டுதல், நல்வாய்ப்பு கிட்டல்

**கைகூப்புதல்** - கைகூப்பி வணங்குதல்

**கைத்தலம்** - கை

**கைதி** - சிறைப்பட்ட குற்றவாளி

**கைது** - சிறைக்காவல்

**கைதை** - தாழை, வயல்

**கைப்பற்று** - கையில் பெற்றுக் கொண்ட தொகை, வன் கவர்பு

**கைப்பிடி** - உலக்கை, திருமணம், கையளவு

**கைம்பெண்** - கைம்மணாட்டி, கணவரை இழந்தவர்

**கைம்மாறு** - நன்றிக் கடன், பதில் உதவி

**கைமரம்** - வீட்டுக் கூரையின் கை

**கைமாற்று** - சிறுகடன்

**கையடக்கம்** - கைக்குள் அடங்குகை

**கையறுநிலை** - கழிந்தோர்க்கு வருந்துதல்

**கையுரை** - காணிக்கை

**கையேடு** - தாள்வழிக்கணக்கு, உடன் பட்டியல்

**கையேற்றம்** - செல்வப் பெருக்க நிலை

**கைவிடுதல்** - விட்டொழிதல்

**கைவினை** - செய்தொழில்

**கையித்தல்** - மீறுதல், வரம்பு கடத்தல்

**கையுணுண்ணுதல்** - பிறர் உதவியை எதிர்பார்த்து உண்டு வாழ்தல்

**கொடி நகர்** - தலைநகர்

**கொக்கரி** - ஆரவாரம், உறுமுதல், கோழி கூவுகை

**கொக்கு** - ஒரு பறவை, மாமரம், செந்நாய், குதிரை

**கொச்சை** - இழிவு, ஆடு, ஆட்டுப்பால், நாற்றம், திருத்தாப்பேச்சு

**கொஞ்சுதல்** - குழந்தையுடன் மகிழ்வு பாராட்டல்

**கொட்டகை** - சிறுகுடில்,பந்தல் வகை, தொழுவம்

**கொட்டடி** - மாட்டுக்கொட்டில், சிறைச் சாலை, அறை

**கொட்டாவி** - நெட்டுயிர்ப்பு

**கொட்டில்** - மாட்டுக்கொட்டம், வில்வித்தை பயிற்றுமிடம்

**கொட்டை** - விதை, உருண்டை வடிவம், பாதக்குறட்டின் குமிழ்

**கொடி** - படர்கொடி, ஆடையுலர்த்து கொடி, மகளிர் கழுத்தணி, ஒழுங்கு, வரிசை, நீபசி, நீளம், காக்கை, கிழக்குத்திசை, சிறு பிரிவு, சிறுமை

**கொடிமுந்திரி** - திராட்சை

**கொடிவழி** - ஒற்றையடிப்பாதை, மரபுவழி

**கொடிவீடு** - படர்கொடியறை

**கொடுக்கு** - சிற்றுயிரின் கொட்டும் உறுப்பு, ஆடைத்தொங்கல்

**கொடுங்கோல்** - நீதிநெறி தவறிய அரசாட்சி

**கொடுந்தமிழ்** - செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்து வழங்கி வரும் தாழ் தமிழ்மொழி

**கொடுந்துயர்** - மீத்துயர் மிக்க துயரம், சாவு

**கொடுமுடி** - மலையுச்சி, உப்பரிகை, ஓரூர்

**கொடுமை** - கடுமை, தீமை, வளைவு, மனக்கோட்டம், நயனின்மை, தகவின்மை, தீங்கிழைப்பு, கேடு

**கொடுவாள்** - அரிவாள், மழு

**கொடுவினை** - முற்பிறப்பிற் செய்த தீவினை, பெருந்தீவினை

**கொடை** - நன்கொடை, ஈகை

**கொண்டவன்** - கணவன்

**கொண்டாட்டம்** - கூடிக்குலாவிப் பாராட்டுதல்

**கொண்டி மாடு** - பட்டிமாடு

**கொண்டை** - மயிர்முடி வகை, பறவைக் கூடு, தலை

**கொத்தடிமை** - குடும்பத்தோடு அடிமை

**கொத்தளம்** - மதிற்புறம், மதிலுறுப்பு

**கொத்தன்** - கட்டட வேலைக்காரன், கொல்லற்றுக்காரன்

**கொத்து** - கொத்துகை, கொத்தன் நாள் வேலை, திரள், குடும்பம், சோறு, கைப்பிடியளவு

**கொதிப்பு** - பொங்குகை, வெப்பம், பரபரப்பு, சினம், ஆற்றாமை

**கொப்பறை** - கொதிகலம், உலர்ந்த தேங்காய்ப் பருப்பு

**கொப்புளம்** - குமிழி, குமிழி போன்ற பரு

**கொம்பன்** - கொம்புள்ள விலங்கு, வலியவன்

**கொம்பு** - கோல், ஊதுகொம்பு, நீர் வீசுங்கருவி, மரக்கிளை, ஒகர ஒலிக் குறியீடு

**கொய்தல்** - தெரிந்தெடுத்தல், பறித்தல், சீலை கொய்தல்

**கொல்லர்** - அரண்மனை வாயில் காப்போர், கருமார்

**கொல்லுதல்** - உழுதல், வெட்டுதல்

**கொல்லை** - புன்செய், புறக்கடை, தினைப்புனம், முல்லை நிலம்

**கொலு** - திருவோலக்கம்

**கொழித்தல்** - தெள்ளுதல், ஒதுக்குதல், வாருதல், பொழிதல், குற்றங்கூறுதல், ஆராய்தல், மேற்கிளம்புதல், செழிப்புறுதல்

**கொழு** - ஏர்க்காறு, பேரூசி, உழுகருவி

**கொழுந்தன்** - கணவனுடன் பிறந்தவன்

**கொழுந்தி** - மனைவியின் உடன் பிறந்தாள்

**கொழுந்து** - இளந்தளிர், அளமை யானது, சிறந்தது

**கொழுநன்** - கணவன்

**கொழுப்பு** - செழிப்பு, நிணம், திமிர், மதர்ப்பு

**கொள்கை** - பெறுகை, கோட்பாடு, ஒழுக்கம், நோன்பு, செருக்கு, கற்பு

**கொள்ளம்** - குழைசேறு

**கொள்ளி** - நெருப்பு, கொள்ளிக் கட்டை, எருமை நாக்கு

**கொள்ளிமாலை** - பிணமாலை

**கொள்ளிவட்டம்** - கொள்ளி சுழற்றும் வட்டம்

**கொள்ளை** - சூறையாடல், மிகுதி, கூட்டம்

**கொள்ளைநோய்** - பெருவாரி நோய்

**கொளை** - பிடிப்பு, கோட்பாடு, பயன், பாட்டு, தாளம் போடல்

**கொற்றம்** - வெற்றி, வீரம், அரசியல்

**கொற்றவன்** - வெற்றியாளன், அரசன்

**கொற்றவி** - அரசி

**கொற்றவை** - துர்க்கை, வீரலட்சுமி

**கொறி** - ஆடு

**கொறித்தல்** - தின்னுதல், பொறுக்கி உண்ணுதல்

**கொன்றைசூடி** - சிவன்

**கொன்னை** - திருந்தாப்பேச்சு

**கோ** - மன்னர் மன்னர், அரசன், தந்தை, மலை, பெருமை, தலைமை, குயவன்,கண், பசு

**கோசம்** - கருப்பை, உறை, புத்தகம், வீதி, முட்டை

**கோசலம்** - ஆ மூத்திரம்

**கோசாலை** - பசுக்கொட்டில்

**கோடகம்** - சிகரங்கொண்ட முடி, பல தெருக்குள் கூடுமிடம், புதுமை, குதிரை

**கோட்டம்** - வளைவு, வணக்கம், நடுநிலை திறம்புகை, மனக் கோணல், பகைமை, கரை, அறை, கோயில், பசுக்கொட்டில், சிறைச் சாலை, மணச்செடி, மணப்பண்டம், ஆரவாரம், கொம்பு

**கோட்டான்** - கூகை

**கோட்டை** - 21 மரக்கால் கொண்ட ஒரு முகத்தலளவு, நெற்கட்டு, வைக்கோற் போர், மதிலரண், பரிவேடம்

**கோட்பாடு** - கொள்கை, நடத்தை

**கோடரி** - மரவெட்டி

**கோடி** - புத்தாடை, வளைவு, நூறு நூறாயிரம், தொகுதி, நுனி, எல்லை

**கோடு** - கீற்று, வளைவு, யானை பன்றிகளின் தந்தம், கொம்பு, ஊது கொம்பு, யாழ்த்தண்டு, பிறைமதி, சங்கு, மயிர்முடி, மலைச்சிகரம், மலை, மேட்டு நிலம், ஆட்டத்துக்கு வகுத்த தானம், நீர்க்கரை, குளம், காலவட்டம், ஆடைக்கரை, முனை, பக்கம், கொடுமை, கிளை, வரம்பு

**கோடை** - மேல் காற்று, வேனிற்காலம், வெயில், குதிரை, காந்தள்

**கோணாங்கி** - உடற்கோணி யாடுவோன்

**கோத்திரம்** - குலம், குடி, மலை, நெட்டி

**கோது** - சக்கை, முற்றம், பயனற்றது, பூ முதலியவற்றின் நரம்பு

**கோதை** - பெண் தலைமயிர், பூமாலை, ஆண்டாள், பெண், கைத்தோலுறை, பூரம், சேரன்

**கோப்பு** - கோத்தல், அமைப்பு, அலங்காரம், ஒழுங்கு, கவ்வு, தூக்குச் சுமை

**கோப்பெருந்தேவி** - பட்டத்தரசி

**கோபம்** - சினம், தம்பலப்பூச்சி, ஒருவகைத்துகில்

**கோபுரம்** - நகரம் அல்லது கோயிலின் வாயில்

**கோமாரி** - மாடுகளுக்கு வாய், கால்களில் வரும் நோய்

**கோமான்** - அரசன், தலைவன், பன்றி

**கோயில்** - அரண்மனை, திருவிடம்

**கோரிக்கை** - விருப்பம், வேண்டுதல்

**கோல்** - கம்பு, தண்டு, திரட்சி, யாழ் நரம்பு, அளவுகோல், துலாக்கோல், செய்கோல், அரசாட்சி, எழுதுகோல், அம்பு

**கோலம்** - அழகு, வேடம், வடிவு, அலங்காரம், விளையாட்டு, ஊர் கோலம், மாக்கோலம், கழுநீர், பன்றி, குரங்கு, பீர்க்கு

**கோவில்** - கோயில், அரண்மனை, ஆலயம், சிதம்பரம், திருவரங்கம்

**கோவேள்** - குயவன்

**கோவை** - கோக்கை, அகப்பொருள் நூல், ஏற்பாடு, வரிசை, கொடிவகை

**கோழி** - குக்குடம், உறையூர், விட்டில்

**கோழை** - கபம், மனத்திட்பமின்மை, சளி உமிழ் நீர்

**கோள்** - கொள்ளுகை, கொள்கை, துணிபு, வலிமை, தன்மை, குறளை, கொலை, கிரகம், மேகம், ஒளி, தீமை, பரிவேடம், குலை, வித்து, பொய், பாம்பு

**கோளம்** - உருண்டை

**கோளாறு** - தாறுமாறு

**கோன்** - இறைவன், தலைவன், கட்டியக் காரன்

**கோன்மை** - அரசாட்சி

**கௌ** - கொள்ளு

**கௌசிகை** - கிண்ணம், தகழி

**கௌதம்** - சிச்சிலிக்கருவி

**கௌவுதல்** - கவர்தல், வாயாற் கௌவுகை

**கௌவை** - ஒலி, வருத்தம், அலர், பழிச் சொல், எள்ளிலங்காய்

**கௌளி** - வெற்றிலைக்கட்டு, பல்லி, தேங்காயோட்டுப் பாத்திரம்

**ங** - ஓர் எழுத்து, குறுணிக் குறி, குறணியைக் குறிக்கும் குறி

**ஙகரம்** - குறுணியளவு

**ஙனம்** - தன்மை, இடம், விதம், வகை

**சக்கரம்** - வட்டம், குயவன் தண்டச்சக்கரம், சகடம், உருளை, பறவை, நிலம், மலை, பிறப்பு, செக்கு, மந்திர எழுத்துள்ள தகடு, அரைக்கும் பொறி, மதில், கடல், பாம்பின்படம், பிறப்பு, அத்தி, வாழ்நாள்

**சக்கரவாளக்கோட்டம்** - காவிரிப்பூம் பட்டினத்தில் நன்காட்டுப்புறத்திருத்த ஓரிடம்

**சக்கை** - உள்ளீடற்றது, கோது, சிராய், பட்டை, இறுக்கும் தக்கை, துமிக்குத் தக்கை, காட்டுப்பலா, தவசமணி நீக்கப்பட்டகதிர்

**சகடம்** - சக்கரம், வண்டி, தேர், கிணற்று நீர் இறைக்கும் மர உருளை

**சகடி** - வண்டி

**சகடு** - சக்கரம், வண்டி, தேரைக் குறிக்கும் சதுரங்கக்காய், மொத்தம்

**சகதி** - சேறு, ஈரக்குழைவானமண், பொல்லாநிலம்

**சங்கம்** - சங்கு, கைவளை, நெற்றி, குரல்வளை, இலக்கங்கோடி, வெண்ணிறம், 2187 தேர், 2187 யானை, 6561 குதிரை, 10935 படைவீரர்கள் கொண்ட ஒரு சேனை வகை, புலவர் அவை

**சங்கு** - நந்துக்கூடு, ஐம்படை அணியின் ஓர்உரு, சங்கு கைவளை, குரல்வளை, மிடறு, ஒரு

பேரெண், பேரெண் கொண்ட போர்ப்படை, பெருவிரல் நிற்க ஏனைய நான்கும் மடங்கியுள்ள ஒரு முத்திரை

**சங்கொலி** - சங்கினின்று எழும் ஒலி

**சடங்கு** - பழக்கவழக்கச் செயற்பாடு, திருமணவுறவு, முதற்பூப்புச்சடங்கு

**சடங்கு கழித்தல்** - பெண்ணின் முதற்பூப்புச் சடங்கு செய்தல்

**சட்ட திட்டம்** - சட்ட ஒழுங்கு, உறுதிப் பாடு

**சட்டகம்** - சட்டம், மக்களது படுக்கை, வடிவு, உடல், பிணம், மரபு, விதி, நம்பிக்கையாலான அடிப்படைக் கொள்கை

**சட்டமன்றம்** - சட்டம் உருவாக்கும் அரசு அவை

**சட்டம்**- படம், கண்ணாடி முதலிய வற்றின் நாற்புறமும் கோக்கப்படும் மரச்சட்டம், கம்பியிழுக்கும் கருவி, எழுதும் ஓலை, உடம்பு, முறைமை, ஏற்பாடு, செப்பம், நேர்மை, அணியம், மாணிக்க வகை, புனுகுச் சட்டம், புனுகுப்பூனையின் நீர்மப் பொருள்

**சட்டி** - விரிந்த வாயும் தட்டையான அடிப்பாகமும் கொண்ட மட்பாண்டம்

**சட்டுவம்** - அகப்பை, தோசைத்திருப்பி, சோற்றுப்பானை, கசடகற்றும் கருவி

**சட்டை**- மெய்ப்பை, பாம்புச்சட்டை, யாக்கை, தட்டை, தட்டையான பொருள்

**சட்டைத்துணி** - சட்டைக்கான துணி

**சட்டைப்பை** - சட்டையில் தைக்கப்பட்ட பை

**சடலம்** - உடல்

**சடுகுடு** - தமிழர் விளையாட்டு வகை

**சடைதல்** - சோர்ந்து போதல், உள்ளடங்குதல், வளர்ச்சி தடைபடுதல்

**சண்டி** - பொல்லாதவன், இடர் செய்பவன், ள்,வது, 63 தமிழ்ச் சைவ நாயன் மார்களுள் ஒருவர்

**சண்டு** - பதர், கூளம், பயிரில் விழும் வண்டுவகை, புகைபிடிக்கும் பிசினி உருண்டை, எல்லைக்கோல்

**சண்டை** - பூசல், முரண், போர், மோதல்

**சண்டைமூட்டுதல்** - பூசல் உருவாகத் தூண்டுதல்

**சணல்** - நார்க்கயிறு, செடிவகை

**சதங்கை** - கிங்கிணி, சலங்கை, பெண்கள் குழந்தைகள் அணியும் ஓரணி

**சதை** - தோலுக்குக்கீழ் என்பைச் சுற்றியுள்ள மென்மையான அடர் திசுக்களின் தொகுப்பு, பழங்களின் உட்பகுதி, உடைமை, செல்வம்

**சதைப்பற்று** - சதைப்பகுதிகளின் கூடுதல் வளர்ச்சி

**சந்தம்** - அழகு, நிறம், வடிவு, மகிழ்ச்சி, பழக்கம்

**சந்தனம்** - காய்ந்ததும் அரைக்க நறுமணம் தரும் ஒருமரவகை, அரைத்த சந்தனக் குழம்பு, தேர், நாவலந்தீவு முழுக்க வளரும் ஒரு மரவகை

**சந்தி** - கூடுகை, பல தெருக்கள் கூடுமிடம், இணைப்பு, இசைப்பு, பல கணுக்களுள்ள மூங்கில், நட்பாக்குதல், தறுவாய், ஒரு பெரும்பண், நாடகச்சந்தி, வரிக்கூத்து வகை, பகலும், இரவும் சந்திக்கும் நேரம் அல்லது பிரியும் பொழுது இணைத்தல், எதிர்தல், கண்டு கொள்ளல், நிலைமொழியின் ஈற்றெழுத்தும், வருமொழியின் முதலெழுத்தும் இணையும்போது ஏற்படும் மாற்றம்,

**சந்திப்பு** - எதிர்கை, ஆறு, பாதை, சாலை, தெரு முதலியன கூடுமிடம், இரண்டிற்கும் மேற்பட்ட தொடர் வண்டிப்பாதை இணையும் நிலையம், பெரியோரைச் சென்று காண்கை

**சந்தியெழுத்து** - இரண்டு உயிரெழுத்துகள் கூடியமைவனாகிய ஐ, ஔ என்னும் கூட்டெழுத்துகள்

**சந்து** - பொருத்து, மூட்டு, உடற் பொருத்து, இருதொடைச் சந்தான இடுப்பு, பலவழி கூடுமிடம், பிளவு, தூது, தூதன், பிணக்கர்களை ஒன்று சேர்த்தல், அமைதி, உடன்பாடு, சந்தனமரம்

**சந்தை** - பொருள்களை வாங்க விற்க பலரும் குறித்த நாளில் கூடுமிடம், கூட்டம், இருபுருவமும் கூடுமிடம், கடைத்தெரு, வணிகவீதி

**சந்தை இரைச்சல்** - சந்தையில் எழும் கூச்சல்ஒலி

**சந்தைச்சரக்கு** - சந்தையில் உள்ள விற்பனைப்பொருள்

**சப்பட்டை** - தட்டை, உள்ளீடின்மை, பதர், மடையன், கெட்டவன்,ள், சிறகு

**சப்படி** - தட்டையானது, வயிரக் குற்றங்களுள் ஒன்று

**சப்பணம்** - அட்டணைக்கால் இட்டு அமர்தல்

**சப்பரை** - மூடன்

**சப்பல்** - தட்டை, தட்டையானது

**சப்பாணி** - சப்பையாய் அமர்ந்து கைதட்டும் குழந்தை நிலை, எழுவகை பருவத்துள் ஒன்று

**சப்பாத்துக்கள்ளி** - முட்களுடன் தட்டை இலைகொண்ட கள்ளி வகை, மஞ்சட்பூக் கொண்ட கள்ளிவகை

**சப்புதல்** - சுவைத்து உண்ணுகையில் நாவால் அல்லது உதடுகளால் 'சப்'

என்ற ஒலி உண்டாக்குதல், புகையிலை மெல்லல், குதப்புதல், சுவைத்து உறிஞ்சிப்பருகுதல், அதுங்குதல், சுருங்குதல்

**சப்பை** - சப்பட்டையானது, சுவையற்றது, வலிவற்றது, பயனற்றது, தாழ்ந்தது, இடுப்பு, தோள் இவற்றின் சந்து

**சப்பைக்கட்டுகட்டுதல்** - குற்றங்குறை களைத் தாங்கிப்பேசுதல்

**சப்பையாள்** - பயனிலி

**சபைக்குப்புறத்தாக்குதல்** - சபைலிருந்து விலக்கி வைத்தல்

**சம்பளம்** - வழியுணவு, வழிப்பொருள், வேலைக்குப்பெறும் உரியகூலி, கரை

**சம்பா** - சுறவ(தை)த் திங்களில் அறுவடையாகும் ஐந்துமாத நெற்பயிர், மிளகு சீரகங்கலந்து இறைவர்க்குப் படைக்கும் திருவமுது

**சம்பு** - நாவல், சம்புத்தீவு

**சம்மட்டி** - சுத்தியல் வகை, பரியோட்டுங் கருவி

**சம்மணங்கால் போடுதல்** - இருகால் களையும் மடக்கி தரையில் உட்காருதல்

**சம அகவை** - ஒத்த பருவம்

**சம உரிமை** - இணையான உரிமை

**சமகோணம்** - ஒத்த கோணவடிவம்

**சமதளம்** - குண்டு குழியற்ற சீர்மையான நிலம்

**சமநிலை** - நடுவு நிலைமை, சரிநிகர்வு, ஒப்பு, நிலையொத்த நிலை

**சமநிறை** - சமன்தூக்கிய நிலை

**சமம்** - ஒப்பு, இணை, ஒத்த பொருள், நடுவுநிலைமை, இரட்டை எண், ஏற்றத்தாழ்வின்மை, ஒரேசீர்மை, மாறுபாடின்மை, ஒத்த அடிகளையுடைய மண்டிலப்பா

**சமய ஒழுக்கம்** - மதநெறி

**சமயக்காரர்** - மதத்தைப் பின்பற்றுபவர்

**சமயக்குரவர்** - மதத்தை நிலை நிறுத்திய அருளாளர்

**சமயம்** - மதம், மதநூல், உடன் படிக்கை, மரபு

**சமன்பாடு** - சமநிலை(அ) ஒத்துப் போகும் தன்மை, சமக் குறியீட்டு வடிவக்கூற்று

**சமனாக்கத்தாக்குதல்** - யாழில் பண்களை வலியவும் மெலியவுமாகத் தாக்காமல் அளவொத்த ஓசையெழுப்பல்

**சமைத்தல்** - படைத்தல், செய்தல், அணியமாக்கல், பக்குவப்படுத்தல்

**சமைதல்** - நிரம்புதல், பூப்படைதல், புழுங்குதல், அழிதல்

**சமையங்கடத்துதல்** - வீணே காலங் கழித்தல், செயல்படாமல் நாள் கடத்துதல்

**சமையம்** - பதனடைந்த அல்லது நுகர்ச்சிக் கேற்ற நிலை, காலம், வேளை, நேரம், பொழுது

**சமையல்** - பக்குவப்படுத்தப்பட்ட உணவு, சமைக்கை, உணவு தயாரித்தல்

**சரக்கறை** - பண்டங்கள் வைக்கு மிடம், பொன், தகுதி, திறன், சம்பாரச்சரக்கு முதலியன, மருந்துப் பண்டம்

**சரக்குந்து** - பண்டங்களைக் கொண்டு செல்லும் உந்து

**சரக்குப்பண்ணுதல்** - வெயிலில் உலர்த்தல், காய வைத்தல்

**சரகம்** - எல்லை, நாட்டின் பகுதி

**சரசரப்பு** - மொருமொரு வென்றிருக்கை, சுரசுரப்பு

**சரப்பணி** - வயிரக்கழுத்தணிவகை

**சரப்பலகை** - கடைகளின் அடைப்புப் பலகை, தூண்களுக்கு நடுவில் செல்லும் பலகை

**சரவிளக்கு** - அடுக்கித்தொங்கவிடும் ஆலய விளக்கு

**சரளை** - கல்வகை

**சராசரி** - நிரலளவு, பொது மதிப்பீடு

**சரி** - மலைச்சாரல், மலைவழி, வழு, கூட்டம், ஒழுங்காக்கப்பட்ட நிலை, தகுதி, உரியது, திருந்திய தன்மை, வழுவிலாநிலை, ஒரு சீர்மை, ஓரே வகையான தன்மை, ஒரு படித்தான நிலை, சரிநேர்த்தன்மை, பிழை யிலா நிலை, நேரானதன்மை

**சரி சொல்(லு)தல்** - இசைதல், உறுதி செய்தல், மெய்ப்பித்தல், பொறுப் பேற்றல்

**சரிகட்டுதல்** - பழிவாங்குதல், இணக்க மாக்கல், சரிநிகர்த்தன்மையாதல்

**சரிசமமாக்குதல்** - ஒப்பானதாக்கு, சீர்மையாக்கு

**சரிசமானம்** - நேரான ஒப்பு

**சரித்தல்** - சரிந்து விழச்செய்தல், வெட்டித் தள்ளுதல், ஒருபக்கம் சாயச்செய்தல்

**சரிதல்** - நழுவுதல், கீழே விழுதல், குலைதல், பின்னிடுதல், காய்தல், சாய்தல், சரிவாயிருத்தல்

**சரிநிகர்** - தன்மை, நிலை முறை போன்ற வற்றில் சமத்தன்மை

**சரிப்படுதல்** - மடைமாற்றல், ஏற்றதாதல், நேராதல், ஒப்பாதல், முடித்துவிடல்

**சரியாக்குதல்** - ஒழுங்குபடுத்துதல், முரண்பாடு, களைதல், உரியதாக்குதல், பழுது நீக்குதல்

**சரியாக** - தவறின்றி, பிழையின்றி, குழப்ப மின்றி, தெளிவாக, குறையாமல், போதுமானதாக,

ஒழுங்காக, முறையாக, நல்லநிலைமை, கடுமையாக, நன்றாக

**சரிவு** - சரிந்து விழுதல், சாய்வு, நகரம், ஆறு எல்லை முதலியவற்றின் ஓரம், மகளிர் வளையல் வகை

**சருக்கம்** - வட்டம், நூற்பிரிவு

**சருக்கரை** - கரும்பு, பனை முதலிய வற்றிலிருந்து உருவாக்கப்படும் இனிப்புப் பண்டம்

**சருக்கரைப் பொங்கல்** - அரிசியுடன் வெல்லம், பால், முந்திரி, திராட்சை, நெய், ஏலம், கிராம்பு சேர்த்து சமைத்த இன்சோறு

**சருக்குதல்** - சறுக்கு, வழுக்கி விழுதல்

**சருகு** - உலர்ந்த இலை, வெற்றிலை, சிறியது

**சருவம்** - மேல் நோக்கி சரிவாக உள்ள ஏனம்

**சருவுதல்** - பழகுதல், கொஞ்சிக் குலாவுதல், தொல்லை தருதல், போராடுதல்

**சல்லடை** - சலிக்க உதவும் மென்துளைகளுள்ள வட்டத் தட்டைக்கருவி

**சல்லி** - உடைந்ததுண்டு, சிறுகல், கிளிஞ்சலின் சிற்றோடு, சிறுகாசு, அணிகலன் தொங்கல், மெலிந்த உடல் கொண்டவன், பொறுப்பிலி, இழிந்தோன், துளை, பொய், போக்கிலி

**சலங்கை** - சதங்கை

**சலசல** - நீர் ஓடும் ஒலிக்குறிப்பு, உணர்வால் மனம் உலை யுறுதலைக் குறிக்கும் ஒலிக்குறிப்பு

**சலசலத்தல்** - ஓயாமல் ஒலியெழுப்பல், ஓயாமல் பேசுதல், சலசலவென ஓசையெழுப்பல்

**சலசலப்பு** - நீர் ஓடும் ஒலி, குழப்பம் அல்லது உதிர்ப்பு, அச்சுறுத்தும் பேச்சு, அசைவு

**சலம்** - தண்ணீர், நீர், சிறுநீர், சீழ்நீர் மூத்திரம், மலசலம்

**சலம்புரி** - அயல்நாட்டுத்துணி வகை

**சலவாணி** - பணப்புழக்கம், சாய்கால்

**சலவை** - உடை வெளுத்தல், வெளுத்த ஆடை, வெளுக்கை

**சலித்தல்** - அசைதல், மனக்கலக்கம், சினங்கொள்ளல், சல்லடையாற் சலித்தல்

**சலுகை** - விதிமுறைகளைத்தளர்த்தி வழங்கும் விலக்கு, நெறிமுறைகள் தளர்த்தப்படாத நிலையில் ஒருவர் பெறும் நன்மை

**சவ்வு** - மெல்லிய மூடுதோல், புண்ணின் மூடு தோல், படர்ந்துள்ள மென்தோல், பழங்கொட்டை முதலியவற்றின் மேலுறை

**சவட்டுதல்** - வளைவாக்குதல், மிதித்தல், காலால் மிதித்துச்சேறு குழைத்தல், கதிர்களை மிதித்து தவசங்களைப் பிரித்தெடுத்தல், அழித்தல், கொல்லுதல், மொத்துதல், அடித்தல்

**சவம்** - பிணம், உயிறற்ற உடல், பேய்

**சவர்த்தல்** - உவர்த்தல்

**சவர்மண்** - உப்புமண், உவர்மண்

**சவலை** - மனக்குழப்பம், வருத்தம், தாய்ப்பாலற்ற குழந்தையின் மெலிவு, இளமை, இளையது, முதிராதது

**சவளம்** - குந்தம்

**சவளி** - வேட்டி சீலை முதலான ஆடைகள்

**சவித்தல்** - வசைமொழிதல், சாவமிடல்

**சவுக்கம்** - சதுரம், சிறுதுண்டு, இலிங்கப் பெட்டகம், தாளத்தின் விளம்பரம், பேச்சு முதலியவற்றின் நேர்த்தி, கற்கவியின் உளி

**சவை** - மாந்தக்கூட்டம், அறிஞர் கூட்டம், கற்றறிந்தோர்

**சவைவாரியர்** - ஊரவை ஆளுங் கூட்டத்தார்

**சளித்தல்** - நீர்க்கோவை நோய், சளி நோய், சளி நோய் கொள்ளுதல், புளித்தல், பதனழிதல்

**சளைத்தல்** - தளர்தல், சோர்தல்

**சறுக்குதல்** - வழுக்குதல், வழுவுதல், நழுவுதல், உராய்ந்து செலல்

**சன்னம்** - சிறியது, நுண்மை, நேர்மை, பொடி மணிக்கல், நுண்பொடி, சிறுவெடிகுண்டு, மெல்லியதாய் அரைக்கப்பட்ட காரை, மறைபொருள், குரலிழைவு

**சாக்குருவி** - சாவு நிகழ்வினை ஓசையால் முன்னுரைக்கும் எனக்கருதப்படும் ஆந்தை வகை

**சாக்காடு** - சாவு, கெடுதல்

**சாகடித்தல்** - கொல்லுதல், உயிரைப் போக்குதல்

**சாகாடு** - மாட்டுப் (பார)வண்டி, வண்டியுருளை, உருள் நாண்மீன்

**சாகுதல்** - செல்லுதல், தொடர்தல், முன்னேறுதல், இறத்தல்

**சாட்டுதல்** - பொறுப்பை (அ) கடமையைப் பிறர்மீது சார்த்துதல், ஒருவர்மீது ஒருவர் குற்றம் சுமத்துதல், தலைக்கீழாகக் கொள்ளுதல்

**சாட்டை** - கசை, கிறிச்சுச்சாட்டை, பம்பரக்கயிறு,குதிரை, மாடு இவற்றை அடித்து ஓட்டும் வித்தக் கயிறு மரத்தலான ஒருவகைக் குயக்கருவி

**சாடுதல்** - அடித்தல், மோதுதல், துகைத்தல், கொல்லுதல், கடிதல், அசைதல், ஒன்றுக்கு சார்பா யிருத்தல், சார்ந்து நிற்றல், கை கால் எறிதல், குறை சொல்லிக் கடுமையாய்த் தாக்குதல், தாவுதல், எகிறுதல்

**சாடை** - சாயல், போன்று, ஒப்பு, போக்கு, சைகை, மிகச்சிறு அளவு

**சாணம்** - சாணி, மாட்டுக்கழிவு

**சாணை** - அதிரசம் போன்ற சருக்கரைப் பணியார வகை

**சாணை பிடித்தல்** - கத்தி முதலிய வற்றைத் தீட்டிக் கூர்படுத்தல்

**சாணைவைத்தல்** - கதிர்க் கட்டுகளைக் களத்தில் சேர்த்து வைத்தல்

**சாத்தன்** - வாணிகக்கூட்டத்தலைவன்

**சாத்து** - வணிகக்கூட்டம், கூட்டம்

**சாத்துக்குடி** - சாத்துக்குடி ஊரில் விளைந்த கிச்சிலிப்பழவகை, இனிப்பெலுமிச்சை

**சாத்தெறிதல்** - வாணிகக் கூட்டத்தைக் கொள்ளையடித்தல்

**சாதல்** - இறத்தல், புதலி முதலியன கெட்டுப்போதல், சோர்தல், ஒன்றின் மேல் மீ விருப்பம் கொள்ளல், உடலுறுப்பு செயல்படாமை

**சாதி** - குலம், இனம், சமூக உயர்வு தாழ்வுப்பிரிவு

**சாதித்தல்** - வெல்லுதல், நிலை நாட்டுதல், விடாது பற்றிக் கொள்ளுதல், தேக்கு, திப்பிலி, பிரம்பு, பிரப்பம்பாய், ஆடா தோடைகள், புனுகுச்சட்டம்

**சாந்தம்** - சந்தனம், குளிர்ச்சி, சாணம்

**சாந்து** - சந்தனமரம், கலவைச் சந்தனம், கருஞ்சாந்து, திருநீறு, விழுது, சுண்ணாம்பு, மலம்

**சாப்பாடு** - உணவு

**சாப்பிடுதல்** - உணவு உண்ணல், பதைத்தல், திடவுணவுகளை உட்கொள்ளல்

**சாம்பல்** - எரித்தபின் மிஞ்சும் பொடித்துகள், வாடற்பூ, முதுமை, பயிர்களைக் கெடுக்கும் பூச்சி

**சாம்புதல்** - வாடுதல், கெடுதல், குவிதல், ஒடுங்குதல், உணர் வழிதல், ஒளி மங்குதல், எரிதல்

**சாமம்** - 7 1 /2 நாழிகை கொண்ட கால அளவை (3 மணி நேரம்), நடுச்சாமம், இரவு

**சாமை** - ஒருவகைப்புன்செய்ப்பயிர், தவசவகை, சிறுதவசம், வரகு

**சாய்தல்** - கவிழ்தல், வானில் உடுக்கள் சாய்தல், வளைதல், படுத்தல், திரண்டு செல்லுதல், முறிதல், தோற்றோடுதல், ஒதுங்குதல், சார்தல், நடந்தேறுதல், நடுநிலை திரும்புதல்

**சாய்மானம்** - சார்மணை, சாய்கை

**சாயல்** - அழகு, நிறம், மேனி, உடல், ஒப்பு, நிழல், சார்பு, மஞ்சள், மேம்பாடு, அருள், மேலானசொல்

**சாய்வு** - சரிவு, ஒருபாற்கோடல், குறைவு, நிலைமைத்தாழ்வு, வளைவு, நோக்கம், அழிவு, கட்டடம் முதலியவற்றின் வாட்டம் (அமைப்பு), நீரின்றி உலர்ந்த பயிர்

**சாய்வு** - சரிவு, ஒருபாற்கோடல், நிலைமைத்தாழ்வு, வளைவு, நோக்கம், அழிவு, கட்டடம்

**சாயம்** - நிறம், நூலுக்கு ஊட்டும் வண்ணம், உண்மைத் தன்மை, பொய்த் தன்மை

**சாயுங்காலம்** - கதிர் சாயும் பொழுது, மாலைநேரம், படுஞாயிறு வேளை

**சார்** - கூடுகை, இடம், பக்கம், அணைக் கரை, தாழ்வாரம், வகை, அழகு, ஒருமரம், இடப் பொருளுணர் த்தும் ஏழனுருபு

**சார்தல்** - சென்றடைதல், புகலடைதல், அடுத்தல், கலத்தல், உறவுகொள்ளுதல், ஒத்தல், சாய்தல், பொருந்தல்

**சார்பு** - இடம், பக்கம், துணை, புகலிடம், பற்று, பிறப்பு, கூட்டுறவு, அருகு, அண்மை, புத்தசமயத்தின் 12 நெறிகள் பேதமை, செய்கை, உணர்வு, அருவுரு, வாயில், ஊற்று, நுகர்வு, வேட்கை, பற்று, பிறப்பு, தோற்றம், வினைப்பயன்

**சார்பெழுத்து** - தனக்கென வரிவடிவ மின்றி முதலெழுத்துகளைச் சார்ந்து ஒலிக்கும் எழுத்துகள்

**சாரம்** - மேலேறக்கட்டும் மரம், மேடு, பயிர்களின் உயிர்ச்சாறு, மருந்து, சிறந்தது, வடித்தெடுத்த பகுதி, பயன், ஆற்றல், மரவயிரம், மரவகை, இருப்பை, கொட்டைமுந்திரி, சித்திரப்பாலடை

**சாரல்** - சாய்வாக விழும் மழை, காற்றால் அடித்து வரப்படும் மென்மழை

**சாராயம்** - நொதிக்க வைத்துக் காய்ச்சி வடித்தெடுக்கும் மயக்கும் நீர்மம், மது, வெறிநீர்

**சாரியை** - பரியின் சுற்று வரவு, வீரனின் நடைவகை, ஆடல்வகை, சொல்லுக்கும் உருபுக்கும் இடையில் தோன்றும் அசை

**சால்வை** - மயிர்க்கம்பள போர்த்துமாடை

**சாலை** - உணவளிக்கும் அறச்சாலை, வேள்விச்சாலை, கல்விச்சாலை, பரிகரி கூடம், ஆவின்கொட்டில், பெரிய பொது மண்டபம், அரண்மனை, வீடு, இருபுறமும் மரஞ்செறிந்த பாதை, அகன்ற பாதை

**சாவு** - இறப்பு, பிணம், பேய், பிறப்பியத்தில் இறப்பைக் குறிக்கும் எட்டாமிடம்

**சாற்றுதல்** - விளம்பரப்படுத்துதல், விரித்துச் சொல்லுதல், சொல்லுதல், புகழ்தல், அடித்தல், நிறைத்தல், அமைத்தல்

**சாறு** - இலை,பழம் முதலியவற்றின் சாறு, மணப்பொருள்கள், ஊறிய நீர், மிளகுச்சாறு, ஓமம், சீரகச்சாறு, இறப்பு வீட்டில் இடும் உணவு

**சாறுதல்** - நழுவுதல், வழுக்குதல், சரிதல், வடிதல்

**சான்றாண்மை** - பெருந்தன்மை, நற் குணங்கள் அமைதல், பொறுமை

**சான்றிதழ்** - உறுதியாவணம், உண்மைப் படிவம்

**சான்று** - கரு, உண்மை பகர்தல்

**சான்றோர்** - அறிவொழுக்கம் நிறைந்தவர்

**சி** - ஒரு பெண்பால் விகுதி

**சிக்க** - சுருக்கமாக, நன்றாக

**சிக்கங்கோல்** - சிடுக்குவாரி

**சிக்கடித்தல்** - சிக்குநாற்றமடித்தல், குழறுபடி செய்தல்

**சிக்கம்** - உறி, வலை, வலைப்பை, பின்னல், வால்மிளகு, கன்றின் வாயைக் கட்டும் கயிறு

**சிக்கர்** - தலை நோயுடையோர்

**சிக்கவைத்தல்** - மாட்டச்செய்தல்

**சிக்கறுப்பு** - முடிவு, தீர்வு

**சிக்கிடம்** - பறவை பிடிக்கும் வலை

**சிக்கிமுக்கி** - தீ உண்டாக்கும் கல்

**சிக்கு** - நூல், தலைமுடி முதலிய பின்னிக்கொள்ளல்

**சிக்குதல்** - நூல் முதலியன சிக்குப்படுதல், இறுகுதல், ஒன்றனுள் அகப்படுதல், கிடைத்தல், கண்ணி, தடை, மாட்டிக் கொள்ளுதல், நூல் முறுக்கு

**சிக்குவாரி** - ஒருவகைச்சீப்பு

**சிங்கியடித்தல்** - விலாப்புறங்களை இரு கைகளாலும் அடித்துக்கொண்டு கூத்தாடுதல், வறுமையால் தொல்லைப்படுதல், பெண்மைக் குணமின்றி யொழுகுதல், கோலி விளையாட்டில் கைமுட்டியால் கோலியைக் குழியில் தள்ளுதல்

**சிங்கு** - நாக்கு

**சிங்குதல்** - குன்றுதல், இளைத்தல், அழிதல், கழிந்து போதல்

**சிச்சீ** - இகழ்ச்சிக்குறிப்பு

**சிட்டம்** - பெருமை, மதிப்பானது, மரியாதைக்குரியது

**சிட்டி** - சிறுமட்கலம், ஓர் அளவுக் கலம், சூது காயை உருட்டும் செம்பு

**சிட்டிகை** - கைந்நொடி, கைந்நொடிப் பொழுது, விரற்பிடியளவு

**சிட்டு** - சிறியது, சிலுப்பாக்குடுமி

**சிட்டை** - சிறுகணக்கேடு, தனிக் கணக்குப் பொத்தகம்

**சிண்** - கையாள்

**சிண்டு** - சிறுகுடுமி

**சிண்டூரி** - சிறுகீரை

**சிணுக்கம்** - மூக்கால் அழுகை, சுருக்கம் விழுகை, உடன்பாடு உணர்த்தும் முகக்குறி

**சிணுங்கி** - அழுங்குழந்தை, சிணுங்கும் பெண், தொட்டாற் சுருங்கி

**சித்தம்** - மனம், அகக்கருவி நான்கனுள் உறுதிப்படுத்தும் தொழில் உடையது, திடம்

**சித்தரித்தல்** - சித்திரமெழுதுதல், வண்(ரு)ணித்துப்பேசுதல், கற்பனை செய்தல், ஒப்பனை செய்தல்

**சித்தன்** - நுண்ணறிவர், அருளாளர், முருகன், அருகன், வைரவன், சிவன், பிள்ளையார்

**சித்தி** - சிறிய தாய், சிற்றப்பன் மனைவி, தாயின் தங்கை

**சித்திரக்கவி** - நால்வகைப் பாக்களுள்

சித்திரத்தில் அமைத்துப்பாடும் மறைப்பா, சித்திரப்பா பாடுவோன்

**சித்திரம்** - ஓவியம், சிறப்பு, அழகு, வியப்பு, சிற்ப நூல், காடு

**சித்திரர்** - கலகம் விளைவிப்போர், குழப்பம் விளைவிப்போர்

**சித்திரன்** - ஓவியன், தச்சன்

**சித்திரை** - நெய்ம்மீன், மேழுமாதம்

**சித்து** - அறிவு, அறிவுடைப்பொருள்

**சித்துரு** - அறிவு வடிவான இறைவன்

**சிதடன்** - குருடன், அறிவிலி, பித்தன்

**சிதம்** - மனைவாயில்

**சிதம்பர்** - இழிந்தோர்

**சிதம்பரம்** - கடலூர் மாவட்டத்திலுள்ள ஆடவல்லான் திருக்கோயில் உள்ள தில்லை எனும் நகர்

**சிதம்புதல்** - பதனழிதல், நீரால் கைகால்கள் வெளுத்தல், நீரால் சேதமுறுதல்

**சிதர்தல்** - மழைத்துளி, பூந்தாது, பொடி, துணி, கந்தை, உறி, வண்டு, மென்மை, சிந்துகை, சிச்சிலிப் பறவை வகை

**சிதல்** - எறும்பினத்தைச் சார்ந்த சிற்றுயிர், கரையான், சிறகு முளைத்த கரையான்

**சிதலம்** - தளர்வு, சீல் மூட்டு தளரல், சிதைவு

**சிதலை** - கறையான், துணி, நோய்

**சிதறிப்போதல்** - கலைந்து போதல், பரிந்து போதல், நோய் விலகல்

**சிதைத்தல்** - கெடுத்தல், குலைத்தல், அழித்தல், களைதல், தேய்த்தல், ஒலித்தல், நசுங்குதல்

**சிந்தடி** - இருசீரடி (குறள்)க்கும் நாற் சீரடிக்கும் இடைப்பட்ட முச்சீரடி

**சிந்தனை** - எண்ணம், நினைக்கை, ஊழ்கம்(தியானம்), கவலை, கவனம், குறி கேட்கும் செய்தி

**சிந்தித்தல்** - நினைத்தல், எண்ணுதல், ஓதம் செய்தல், மனனம் செய்தல், விரும்புதல்

**சிந்து-தல்** - சிதறுபடுதல், சொட்டி யொழுகுதல், அழிதல், கடல்நீர், ஆறு, சிந்து ஆறு, 56 நாடுகளுள் ஒன்று, மொழி

**சிந்தூரம்** - சிவப்பு, செங்குடை, நெற்றியில் அணியும் செம்பொடி, யானைப் புகர் முகம், வெட்சி, செங்கொட்டை, மாவகை

**சிந்தை** - மனம், அறிவு, எண்ணம், ஊழ்கம்(தியானம்), கவலை

**சிப்பம்** - பொட்டலம், சிறுமூட்டை, ஒருவர் சுமக்குமளவுள்ள சுமை, பொதி

**சிப்பி** - முத்துள்ள நீர்வாழ் உயிரி, தயிர் அளக்கும் கொட்டாங்கச்சி

**சிபி** - வள்ளன்மை கொண்ட கதிரவக் குல பேரரசன்

**சிம்பு** - சிராய், மாழைத்தெறிப்பு, செதும்பு, மூங்கிற்சிம்பு, இளம் விளாறு, குற்றம்

**சிம்புதல்** - துள்ளுதல், சினக்குறி காட்டுதல்

**சிம்புரி** - புரிமணை, சும்மாடு

**சிம்மாடு** - சும்மாடு

**சிமிட்டுதல்** - கண்ணிமைத்தல், சாடை காட்டல், தந்திரத்தால் ஏமாற்றுதல்

**சிமிழ்த்தல்** - கட்டுதல், அகப்படுத்தல்

**சிமுக்கிடுதல்** - எச்சரித்தல், அசைதல்

**சிமையம்** - உச்சி, மலையுச்சி, கொடுமுடி, மலை

**சிரங்கை** - உள்ளங்கையளவு, பால்வல்லிக் கொடி

**சிரட்டை** - தேங்காய் ஓடு, கொட்டாங் குச்சி, இரக்குங்கலம், திருவோடு

**சிரத்தல்** - தேய்த்தல், அழித்தல்

**சிரத்தியார்** - சிற்றன்னை

**சிரந்தை** - உடுக்கை

**சிராய்** - மரச்சக்கை, பனஞ்சிராம்பு, பருவின் முளை

**சிராய்தல்** - உராய்தல், உராய்தலால் ஊறுபடுதல்

**சிரித்தல்** - நகைத்தல், முறுவலித்தல் மகிழ்ச்சி, ஏளனம் முதலியவற்றை வெளிப்படுத்தல், மலர்தல்

**சிரிப்பு** - நகைப்பு, ஏளனம், பகடி, குதிரைக்கனைப்பு

**சிரைத்தல்** - மயிர் மழித்தல், செதுக்குதல்

**சில்** - சிறுதுண்டு, ஓட்டுச்சீலை, வட்டமானது, உருளை, தலையணி வகை, கடற்சில்

**சிலந்தி** - வலை பின்னும் எண்கால் பூச்சி

**சிலப்பதிகாரம்** - இளங்கோவடிகளால் எழுதப்பெற்ற பழந்தமிழ் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றும், கோவலன் கண்ணகி வரலாற்றைக் கூறுவதுமான இலக்கியம்

**சிலம்பம்** - கழி சுழற்றும் தற்காப்புக் கலை, சூழ்ச்சி, படைக்கலப் பயிற்சி

**சிலம்பன்** - குறிஞ்சித்தலைவன், முருகன், பொன்னியாற்றுப் புதுப் புனல்

**சிலம்பு** - ஒலி, இரைச்சல், ஒலியலை எதிர்வு, வண்டொலி, பெண்களின் காலில் அணியும் அணிகலன்

**சிலர்** - சிலபேர்

**சில்லறை** - சிறுசிறு பகுதிகள், தேவைக்குமேற்பட்ட கையிருப்பு, சில்வானம், கீழ்வாய் எண், சிறுபாகம், சிறு தொகையாக மாற்றும் பணம், காசு, சல்லிக்காசு

**சில்லாட்டை** - பன்னாடை

**சில்லான்** - ஒருவகை சிறிய ஓந்தி, குருவிவகை, சிறார் விளையாட்டு, கறையான்

**சில்லி** - வட்டம், தேருருளை, சிறுகீரை, துண்டு

**சில்லிடுதல்** - குளிர்ந்து போதல், ஒலித்தல், அச்சங்கொண்டு நடுங்குதல், முகம் சிவத்தல்

**சில்லிவாயன்** - வாயில் வந்ததைப் பிதற்றுபவன்

**சில்லு** - துண்டு, உடைந்த கற்சில்,

வட்ட விளையாட்டுக் கருவி, உடைந்த பானையோடு, கண்ணாடிச்சில்லு, சக்கரம், முழற்காற்சில்லு, நொண்டி விளையாட்டு, உடைந்த புதிய ஓடு

**சில்லை** - இழிவு, கஞ்சத்தனம், கயமை, பழிச்சொல், முரட்டுத்தனம், சிற்றின்ப நாட்டம், கொடுமனத்தான்

**சிலாப்புட்டி** - நீரிறைக்கும் தோற்பை, இறைகூடை

**சிலிர்த்தல்** - தளிர்த்தல், உடல் புல்லரித்தல், சிலிர்த்தல்

**சிலுக்கு** - இடும்பு வளையம், இடும்பு மோதிரம், வாள்பல், சிலும்பு, வெட்டிய சிறுதுண்டு

**சிலுகு** - துன்பம், குழப்பம், சண்டை, கூச்சல், குறும்பு, தடை, தோல்வி

**சிலுப்புதல்** - மயிர் நெறிக்கச்செய்தல், சுழற்றுதல், அசைத்தல், தயிர் கடைதல், கலக்குதல்

**சிலுவல்** - கந்தை, எளிமை, அழகின்மை, ஒழுங்கின்மை, மதிப்புரவின்மை, தகுதியின்மை, ஒழுங்கற்றவள்

**சிலை** - வடித்த உருவம், செதுக்கிய சிற்பம்

**சிவகதி** - வீடுபேறு, சிவனுலகப்பேறு

**சிவணுதல்** - நட்புக்கொளல், பொருந்துதல், அளவளாவுதல்

**சிவத்தல்** - செந்நிறமாதல், சினத்தல்

**சிவப்பன்** - செந்நிறத்தன்

**சிவப்பு** - செந்நிறம், சிவப்புக்கல்

**சிவம்** - வீடுபேறு, சிவனியக் கடவுள், 27 ஒகங்களுள் ஒன்று, குறுணி

**சிவலோகம்** - கைலாயம், சிவனுறைவிடம்

**சிவன்** - கண்ணுதற்கடவுள், சிவனியர்க்கு வழங்கும் சிறப்புப் பெயர், பிறவாயாக்கைப் பெரியோன்

**சிவிறி** - விசிறி, நீர்வீசுங்கருவி

**சிவை** - மலைமகள், காளி

**சிற்சபை** - சிற்றம்பலம், சிற்றவை

**சிற்றம்பலம்** - தில்லை பொற்சபை

**சிற்றம்பலவன்** - ஆடவல்லான் (ஆடலரசு) தில்லைக் கூத்தன் (சிவன்)

**சிற்றலை** - வானொலி அலைவரிசை

**சிற்றறிவு** - புல்லறிவு, குறையறிவு

**சிற்றாடை**- சிறுஉடை, சிறுமியின் ஆடை

**சிற்றாயம்** - சிற்றூர் வரிவகை

**சிற்றாள்** - சிறுவன், ஏவலாள், கொத்தனின் உதவியாள்

**சிற்றிதழ்** - தாமரைப்பூவின் உள்ளிதழ், தாளிகை

**சிற்றில்** - சிறுகுடில், குடிசை, சிறுமியர் கட்டி விளையாடும் மணல்வீடு

**சிற்றிலக்கியம்** - இலக்கிய வகை

**சிற்றிற்பருவம்** - சிற்றிலைச்

சிதைக்கும் தலைவன் பருவத்தைப் புனைந்துகூறும் ஆண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பகுதி

**சிற்றின்பம்** - இம்மை நலம், மெய்யுறு புணர்ச்சியின்பம், காமவின்பம்

**சிற்றினம்** - பண்பால் அறிவால் கீழ்மையர், தாழ்ந்தோர்

**சிற்றுண்டி** - அப்பவகை, பண்ணிகாரம், இனிப்புப் பண்ணிகாரம் வகை, அயர்வகற்றும் சிற்றுணா, அளவில் குறைந்த சிற்றுணவு

**சிற்றுந்து** - போக்குவரத்திற்கு உதவும் சிறிய உந்து

**சிற்றுயிர்** - குறைந்த ஆயுள் உள்ள உயிரினம், மாந்தன், சிறிய உயிரி

**சிற்றுரு** - சிறிய வடிவுள்ளது, தாலியுடன் கோக்கும் உரு

**சிற்றுளி** - கல், மரம் போன்றவற்றைச் செதுக்கும் தச்சுக்கருவி

**சிற்றூர்** - குறைவான மக்கள் வாழிடம், குறிஞ்சி நிலத்தூர்

**சிற்றூழியன்** - இல்லப்பணியாள், கலப்பற்றுக்காரன்

**சிறகு** - பறவை, வௌவால் பூச்சி முதலியன பறக்க ஏதுவாக அமைந்துள்ள உறுப்பு, பறவை இறகுகளின் தொகுதி, மீன் சிறகு

**சிறத்தல்** - மேன்மையுடையதாதல், மேம்படுதல், செம்மையானது, அளவிற்கதிகமாகக் கனத்தல், மிகுதல், முகாமையாயிருத்தல், மங்கலமாதல், அன்பாதல், மகிழ்தல், அழகாதல், நனிநாகரிக மாதல், பிறங்கொளி வாய்ந்த தாதல்

**சிறப்பு** - தலைமை, நிகரற்றத்தன்மை, மேன்மை, உயர்வு, பகட்டு, ஆரவாரம், பேராற்றல், நயப்பண்பு, விருந் தோம்பல் பண்பு

**சிறப்புழகரம்** - தமிழ்மொழியிலுள்ள சிறப்பு 'ழ' கரம்

**சிறுகுடி** - குறிஞ்சி நிலத்தூர், சிற்றூர், ஏழ்மைக்குடும்பம்

**சிறுசொல்** - இழிசொல், பழிச்சொல், திட்டு, வசவு, முகாமையற்றப்பேச்சு

**சிறுதவசம்** - புன்செய் கூலம்

**சிறுதாலி** - சிறிய தாலிவகை, மணமான பெண்டிர் கணவன் வாழ்நாள் வரை கழுத்தில் அணியும் தாலி

**சிறுதெய்வம்** - சிற்றூர்த் தெய்வம்

**சிறுபயிர்** - குறைந்த காலத்தில் விளையும் பயிர், சிறிய பயிர்

**சிறுபறை** - தோற்கருவிவகை

**சிறுபாணாற்றுப்படை** - நல்லியக் கோடன் மேல் நல்லூர் நத்தத்தனார் பாடியதும், பத்துப் பாட்டினுள் ஒன்றாய்த் திகழ்வதுமான கழகநூல்

**சிறுபோகம்** - கம்பு, கேழ்வரகு போன்ற குறுதவச விளைவு

**சிறுமணி** - ஆறு திங்களில் விளையும் சம்பா நெல்வகை

**சிறுமுறி** - கைச்சீட்டு

**சிறுமை** - இழிவு, புன்மை, நுண்மை, குறைபாடு, வறுமை, வறட்சி, துன்பம், பிறர் மனத்தை வருத்தல், இளப்பம், குற்றம், நோய், மிக்க காமம், சிறுமைத் தனம், இளமை

**சிறுவி** - மகள்

**சிறுவித்தம்** - சூதாட்டத்தில் வைக்கப் படும் சிறுதனம்

**சிறுவிதி** - தக்கன்

**சிறுவீடு** - பால் கறக்கும் முன் மாடுகளைப் புலர் பொழுதில் மேயவிடுதல்

**சிறை** - காவல், அரண், காப்பு, காவலில் வைத்தல், சிறைப்படுத்துதல், சிறைச் சாலை, அடிமைத்தனம், அடிமை, பெண்டாகச் சிறைபிடிக்கப்பட்ட இளம்பெண்

**சிறைத்தல்** - சிறை செய்தல், நீரைத் தடுத்தல், முடி மழித்தல்

**சிறைப்புறம்** - காவல் மனைப்புறம், வேலிப்புறம், ஒதுக்கிடம்

**சின்** - கையாள்

**சினம்** - வெகுளி, சீற்றம், நெருப்பு, போர்

**சின்ன** - சிறிய, இழிந்த, தாழ்ந்த, இளைய

**சின்னகை** - புன்னகை

**சின்னப்பட்டம்** - பெரிய மடத்துத் தலைமைக்கு அடுத்துக் கீழுள்ள மடத்துத்தலைவர்

**சின்னம்** - துண்டு, முறிவுற்றது, பொடி, கிள்ளுப்பூ, காசு, போருக்கு முன் வீரர்கள் தம் வாயிலிட்டுக் கொள்ளும் பொற்றகடு

**சின்னன்** - இளமையானவன்,ள்,து, குள்ள வடிவினன்

**சின்னி** - சிறியது, முகத்தலளவைக் கருவி, மருந்துச்செடிவகை, கிராம்பு, குன்றி மணி, தண்டங்கிழங்குச் செடி

**சின்னூல்** - சிறுநூல், நேமிநாதம் (தமிழிலக்கணம்)

**சினை** - விலங்கு முதலியவற்றின் சூல், முட்டை, பூமொட்டு, மூங்கில்

**சினைநண்டு** - முட்டை கொண்ட நண்டு

**சினைப்பு** - வெப்பத்தால் உடலில் உண்டாகும் வியர்க்குரு, கருக் கொள்கை, கொழுப்பு

**சினைப்பெயர்** - உறுப்பைக்குறிக்கும் பெயர், உறுப்படியாகப் பிறந்த பெயர்

**சினையாகுபெயர்** - சினைப்பெயர் முதன்முதலுக்கு ஆகும் பெயர், வெற்றிலை நாட்டான்

**சீ** - சீழ், சளி, இகழ்ச்சிக்குறிப்பு, இலக்குமி, ஒளி, சிறப்பு

**சீக்காய்** - பழுக்காப்பனங்காய்

**சீகரம்** - நீர்த்துளி, செல்வச்செழுமை, கவரி

**சீட்டி** - சீழ்க்கை, ஊதுகுழல்

**சீட்டு** - எழுத்துக்குறிப்பு, ஆவணம், கூட்டுச்சீட்டு வைப்பு, ஆட்டச்சீட்டு, பட்டியல், ஓலைநறுக்கு, சிற்றோலை, நுழைவுச் சீட்டு, பற்றுச்சீட்டு

**சீட்டுக்கவி** - ஓலைப்பா

**சீட்டுக்கிழிதல்** - இறப்பு, சாவு, உயிர் விடுதல்

**சீட்டைக்கதிர்** - மறுகாம்பில் (இரண்டாம் அறுவடையில்) விளையுங்கதிர், ஏழைகள் பயன்பாட்டிற்கு விடப்பட்ட கதிர்

**சீடை** - உருண்டை வடிவ சிறு நொறுவை, ஒருவகை மீன்

**சீண்டுதல்** - தொட்டு உணர்த்துதல், தொல்லை தருதல், தீண்டி கவனமீர்த்தல்

**சீப்பு**- மயிர்வாருங்கருவி, வாழைக் குலைச் சீப்பு, கதவுத்தாழ்ப்பாள், மதகு அடை பலகை, விலாவெலும்பு, தோட்சீப்பு, நெசவுக்கருவியின் ஓர் உறுப்பு, பாளம், காற்று முதலிய வற்றால் அடித்துக் கொண்டு வருவது

**சீம்பால்** - ஆ ஈன்றதும் சுரக்கும் பால்

**சீமை** - எல்லை, நாட்டின் பகுதி, மேலை நாடு

**சீயக்காய்** - குளிக்கையில் தலை மயிரைத் தூய்மை செய்ய உதவும் நறுமணப் பொடி

**சீயாள்** - மூன்றாம் பாட்டி

**சீயான்** - முப்பாட்டன், மூன்றாம்பாட்டன்

**சீர்** - செல்வம், அழகு, நன்மை, பெருமை, தலைமை, புகழ், மதிப்பு, நேர்மை, இயல்பு, சமம், செம்பொருள்

**சீரகச்சம்பா** - நெல்வகை

**சீரகம்** - மருத்துவக் குணம் நிறைந்த உணவிற்கான மணப்பொருள், ஒரு நிறையளவு

**சீர்கேடு** - ஒழுங்கின்மை, அழகிலி, அருவருப்பானது, நிலை குலைந்தது

**சீர்செய்-தல்** - திருமணம் போன்ற நிகழ்வுகளில் உறவின்முறையார் செய்யும் சீர்வரிசை

**சீர்தட்டுதல்** - தூய்மையற்றோர் மூலம் குழந்தைக்கு நோய் மிகுகை

**சீர்த்தி** - மிகுபுகழ்

**சீர்திருத்தத் திருமணம்** - சடங்குகள் இல்லா மணமுறை

**சீர்திருத்தம்** - செம்மை செய்தல், சீர் செய்தல், செவ்வைப் படுத்துதல்

**சீர்தூக்கு-தல்** - நிறையளவை வரை யறுத்தல், ஆராய்தல், ஒப்பு நோக்குதல்

**சீர்மை** - சிறப்பு, புகழ், நிறை, அளவிற் படுகை, நன்னடை, வழவழப்பு

**சீரலைவாய்** - திருச்செந்தூர்

**சீரா** - சிற்றுண்டி வகை

**சீராட்டு** - செல்வம் பாராட்டுகை

**சீரியர்** - பண்புப்பணிகளால் சிறந்தவர்

**சீரை** - செதுக்கப்பட்ட மரவுரி, சீலை, கந்தை

**சீலை** - துணி, புடவை, இரண்டேகால் முழத்துணி, நீர்ச்சீலை(கோவணம்)

**சீலைவாளை** - சொட்டைவாளைமீன்

**சீவல்** - செதுக்கப்பட்டது, பாக்குச்சீவல், மெலிவு, நெகிழ்ச்சியானது, மெலிந் தவ,ன்,ள்,து, தலைமுடி ஒப்பனை

**சீவு-தல்** - செதுக்கிக்கழித்தல், மரமிழைத்தல், தலைவாருதல், பெருக்குதல், பல் முதலியவை துலக்குதல்

**சீழ்** - புண்ணின்சீழ், புரையோடுதல்

**சீழ்க்கை** - நாவு நுனியை மடித்து நாவால் எழுப்பும் ஒலி

**சீறடி** - அழகிய சிறியகால்

**சீற்றம்** - மிகுசினம்

**சீறாப்புராணம்** - உமறுப்புலவர் 17-ஆம் நூற்றாண்டில் இயற்றிய முகம்மது நபியின் தொன்மநூல்

**சீறியகற்பு** - மறக்கற்பு

**சீறிவிழுதல்** - சினத்துடன் ஒருவன்மேல் பாய்தல்

**சீறு-தல்** - பாம்பு முதலியன சீற்றத்துடன் வெகுளுதல், மூச்செறிதல், கடுஞ்சினங் கொள்ளுதல், தீப் பற்றி எரிதல்

**சீறுமாறு** - தாறுமாறு, சரியாய் நடத்தாமை

**சீனி** - சருக்கரை

**சீனிச்சட்டி** - வறுக்க உதவும் இருப்புச்சட்டி

**சு** - நன்மை, சுகம், மங்கலம், சொந்தம் முதலியவற்றைக் காட்டும் ஓர் இடைச் சொல்

**சுக்கு** - உலர்ந்த இஞ்சி, துணுக்கு, பயனற்றது

சுக்குவெல்லம் - சுக்குப்பொடி கலந்த வெல்லம்

**சுகிர்த்தல்** - கிழித்தல், வடித்தல், வகிர்தல்

**சுங்கடி** - ஒருவகைச் சீலை

**சுங்கான்** - புகைக்கும் குழாய்

**சுங்கு** - ஆடையைத் தொங்கவிட்டுக் கட்டும் மூலை, ஆடையின் கொய்சகம், சடைக்குச்சு

**சுட்டடிக் கொள்கை** - ஒருமொழிச் சொற்களெல்லாம் சுட்டுகளின்று கிளைத்து வளர்ந்தவை என்னும் கோட்பாடு

**சுட்டுக்கோல்** - உலையாணிக்கோல், தீயவன், பொல்லான்

**சுட்டு-தல்** - குறிப்பிடுதல், நோக்கமாகக் கொள்ளுதல், குறிக்கோளாய்க் கொள்ளல், நினைத்தல், உன்னுதல், நன்கு மதித்தல்

**சுட்டுப்பெயர்** - சுட்டெழுத்தைமுன் பெற்றபெயர், சுட்டுமாத்திரையாய் நிற்கும்பெயர்

**சுட்டெழுத்து** - சுட்டி உணர்த்தும் அ, இ, உ என்னும் எழுத்துகள்

**சுட்டொலி** - சுட்டிக்காட்டும் ஒலிகள்

**சுடர்**- ஒளி, வெளிச்சம், (எரி பிழம்பு) சுவாலை, ஞாயிறு, வெயில், நிலா, கோள், நெருப்பு, விளக்கு, தீக்கொழுந்து, தீப்பொறி

**சுடர்நிலை** - விளக்குத்தண்டு, விளக்கணி

**சுடலை** - சுடுகை, சமைக்கை, கொல்லுகை, அழிக்கை, போர் செய்கை

**சுடலையாடி** - சுடுகாட்டில் ஆடும் சிவன், சவர்காரம், சிவனார்வேம்பு

**சுடுகாடு** - இறந்த உடலை எரிக்குமிடம், சுடலை

**சுடுகோல்** - சூட்டுக்கோல், பற்றுக்கோல், சுடுகாட்டு நெருப்பைக் கிளறுங்கோல்

**சுடுசொல்** - வசை, மனதை வலிக்க வைக்கும் சொல்

**சுடு-தல்** - காயச்செய்தல், எரித்தல், பணியாரம் முதலியன சுட்டுச் செய்தல், கானவாயில் வேக வைத்தல், மருந்து நீற்றுதல், சூடிடுதல், வெடிசுடுதல், வருந்துதல், துன்புறுத்தல், காயப் படுத்துதல், கெடுத்தல், அழித்தல், நெருப்பிலிட்டு வாட்டுதல்

**சுடுநாற்றம்** - மயிர், பிணம் முதலியன எரிவதால் ஏற்படும் கெட்ட நாற்றம்

**சுண்டப்பிடித்தல்** - துணியை அளக்க இழுத்துப்பிடித்தல், வயிற்றில் பிடித்துக் கொள்ளுதல், கஞ்சத்தனம் செய்தல்

**சுண்டி** - கள், புளித்தமது, சுக்கு, ஒருவகைக் கண்நோய், தொட்டால் வாடி, வறட்சுண்டி, இஞ்சி, கருஞ் சுண்டி

**சுண்டுசோறு** - மயக்கம்தரும் புளித்த சோறு

**சுண்டை** - கள், யானைத்தும்பிக்கை

**சுணக்கம்** - காலத்தாழ்வு, வாட்டம், சோர்வு, இன்பவிளையாட்டு

**சுணை** - சுரணை, நெஞ்சை உறுத்தும் மனவுணர்வு, கூரறிவு, கூர்மை, தினவு, உருத்தும் அம்மைக் கொப்புளம், இலை,காய் மேலுள்ள சிறுமுள்

**சுத்தி** - சிப்பி, சங்கு, கும்பிடு கிளிஞ்சல், சிப்பி வடிவில் தலை ஓட்டால் அமைக்கும் திருநீற்றுக்கலம், அகல், நெய் முதலியன ஊற்றும் சிறுஏனம்

**சுத்தியல்** - ஆணி முதலியன ஓங்கி அடிக்கவுதவும் காம்மாளன் கருவிவகை

**சுதை** - அமிழ்தம், பால், சுவை, சுண்ணாம்பு, வெண்மை, விண்மீன், மின்னல்

**சுமடன்** - கீழ்மகன், அறிவிலி

**சும்மா** - பணிஏதுமின்றி, வெறுமனே, இயல்பாய், அமைதியாய், வறிதாக, காரணமின்றி, பயனின்றி, கருத்தின்றி, விளையாட்டால், இலவயமாய், தடையின்றி

**சும்மாடு** - சுமையைத் தாங்க

தலையில் வைக்கும் ஏந்து, சுமையடை, துணிப் புரியணை, தவசமாகக் கொடுக்கும் உரிமை

**சுமை** - சுமக்கை, கனம், தொகுதி, கடமை, பொறுப்பு, அக்கரை, ஒருவிரல் மழை, 60 படி கொண்ட ஓர் அளவை, 180 தேங்காய் கொண்ட அளவு, 270 கவளி வெற்றிலைக்கட்டு

**சுரண்டு-தல்** - உகிர் முதலியவற்றால் பிராண்டுதல், உகிர் அல்லது விரலால் உடலில் தீண்டிக் குறிப்பிடுதல், தூண்டுதல், வம்பிற்கிழுத்தல், சண்டைக் கிழுத்தல், செலவாற் கரைத்தல், கவர்தல்

**சுரணை** - உணர்ச்சி, அறிவு

**சுர-த்தல்** - ஊறுதல், உடலில் நீர் சுரந்து வீங்குதல், நிறைதல், பெருகுதல்

**சுரம்** - காய்ச்சல், பாலைநிலம், காடு, அருநெறி, வழி, இசைக்குறிப்பு, வகை

**சுரமகளிர்** - தெய்வப்பெண்கள்

**சுரர்** - வானோர், தேவர், விண்ணவர்

**சுரிதகம்** - கலிப்பா வகையின் இறுதி யுறுப்பு, ஒருவகைத்தலையணி

**சுரி-தல்** - சுழிதல், மடிப்புவிடுதல், கடை குழலுதல்

**சுரியல்** - வளைவு, சுழன்றமயிர், மயிர், நீர்ச்சுழி, இளையோர் மயிர், பெண்மயிர்

**சுருக்கம்** - குறுக்கம், குறுக்கமானது, சிறுமை, குறைவு, வறுமை, கஞ்சத்தனம், ஆடை முதலிய வற்றின் சுருக்கம்

**சுருக்கிடு-தல்** - சுருக்குப்போடுதல், சுருக்கில் மாட்டுதல்

**சுருக்குப்பை** - வாயைச்சுருக்கிக் கட்டக் கூடிய தையற்பை

**சுருக்கெழுத்து** - குறியீடுகள் மூலம் பேச்சை விரைவாகப் பதிவுசெய்யும் முறை

**சுருங்கல்** - குறைகை, பட்டினி, தோல் சுருங்குகை, ஒடுங்குகை, மடிப்பு

**சுருட்டு** - சுருட்டுகை, சுருள், புகையிலைச் சுருட்டு, தந்திரம், சூழ்ச்சி

**சுரும்பு** - வண்டு, ஆண்வண்டு, மலை

**சுருள்** - சுருட்டை, தாமரைஉட்சுருள், பெண்மயிர், ஐம்பான்முடிகளுள் ஒன்று, கூந்தல், அளகம்

**சுருளை** - சுருள், குருத்து, காதணிவகை, சுரைக்காய்

**சுரை** - சுரக்கை, பெற்றம் முதலியவற்றின் மடி, கறவைஆன், ஒருவகைக்கொடி

**சுல்லி** - அடுப்பு, மடைப்பள்ளி

**சுவடி** - ஏட்டு நூல், பொத்தகம், ஆவணத் தொகுதி

**சுவடு** - அடித்தடம், தடத்தொலி, காலடி

ஓசை, பதிதலால் உண்டாகும் குறி, அடையாளம், தழும்பு, ஆற்றல், பழக்கம், வழிவகை, கட்டுச்சோறு, அடிதாங்கி, சுவட்டிலக்கம், 360 நெல் கொண்ட அளவு

**சுவறுதல்** - வற்றுதல், உறிஞ்சப் படுதல்

**சுவை** - நாவுணர்வு, அறிவால் உணரப்படும் மெய்ப்பாடு, பாவின் சாரம், இனிமை, சுவையும் மணமும்

**சுவைஞர்** - கலை இலக்கிய நுகர்வர்

**சுவைத்தல்** - சுவையறிதல், உண்ணல், முத்தமிடல், மெய்யுறு புணர்ச்சி நுகர்வு

**சுழல்** - வளைவு, சுழற்சி, சுழல் காற்று, சுழிநீர், சஞ்சலம்

**சுழல்(லு)தல்** - உருளுதல், வட்டமாகச் சுற்றுதல், சுற்றித்திரிதல், அலைவு படுதல், மனங்கலங்குதல், இறத்தல்

**சுழி** - சுழலுகை, கடல், அங்கச்சுழி

**சுழியம்** - இனிப்புத்தின்பண்டம், எண் வரிசையில் எண் மதிப்பற்ற சுழி

**சுழியல்** - தலைமுடி, சுழிந்திருக்கை, சுருளாக மயிரை முடிகை

**சுழிவு** - மறைவு, மனக்கவலை

**சுறவம்** - தமிழாண்டின் முதல் மாதம்(தை)

**சுற்றறிக்கை** - அலுவலகப் பணியாளர்கள் அறிய அனுப்பப்படும் செய்திச்சுற்று

**சுற்று,தல்** - சுழலல், சுற்றிப்போதல், அலைதல், வளைந்தமைதல், கிறு கிறுத்தல், மனங்கலங்குதல்

**சுற்றுப்பலி** - திக்குத்தேவதைகளுக்கு இடும் படையல், கீழதிகாரிகளுக்குக் கொடுக்கும் கையூட்டு

**சுறவு** - சுறாமீன், சுறாவினம்

**சுனை** - தினவு, சுரசுரப்பு, கரும்பு, சோளம் போன்றவற்றின் கதிர்களில் காணப்படும் மென்முள் பகுதி, நீருற்று

**சூகம்** - நெல்வால், தாமரை, ஊர்வன

**சூகரம்** - பன்றி, மான்

**சூகை** - எறும்பு வகை, யானை

**சூட்டடி** - அடிக்கதிரைக் கடாவிட்டு உழக்குகை

**சூடகம்** - கைவளை

**சூடன்** - கருப்பூரவகை

**சூடுதல்** - அணிதல், தரித்தல், பரவுதல், கவிதல்

**சூடுமிதித்தல்** - போரடித்தல்

**சூதவம்** - வண்டு

**சூது** - சூதாட்டம், சூதுக் கட்டத்தில் வைக்குங்கருவி, வழி, வெற்றி, மந்தணம், (தந்திரம்) நுண்ணுத்தி

**சூப்பி** - குழந்தைகள் வாயில் வைத்துச் சுவைக்கும் குமிழ்க்கருவி, குழந்தைகள் சிற்றுணா, இரந்துணி, விரல் சப்பும் சிறு குழந்தை

**சூர்** - அச்சம், துன்பம், நோய், கடுப்பு, ஏய்ப்பு, கொடுமை, கொடுந்தெய்வம், தெய்வமகளிர், மிளகு, வால்மிளகு

**சூரல்** - பிரம்பு, செடிவகை, நரியிலந்தை

**சூரன்** - மறவன், சூரபதுமன், நாய்

**சூல்** - கருப்பம், முட்டை, கார்முகில்

**சூவுறல்** - வெல்லுதல்

**சூழ்** - கலந்தாய்வு, ஆராய்ச்சி, சுற்று, தலைமாலை

**சூழ்ச்சி** - பரப்புகை, கலந்தாய்வு, நுண்ணறிவு, செய்வழி, மனத் தடுமாற்றம், கரவு, இரண்டகம்

**சூழ்த்துதல்** - சூழச்செய்தல்

**சூழ்-தல்** - சுற்றியிருத்தல், சுற்றி வருதல், ஆராய்தல், கருதுதல், தீய சூழ்ச்சி கருத்திட்டமிடல், தேர்ந் தெடுத்தல், அறிதல், எழுதுதல், தாக்குதல்

**சூழல்** - சூழ்கை, இடம், மணற்குன்று, கூட்டம், கலந்தாய்வு, தோற்றரவு, தந்திரம்

**சூழியம்** - உச்சிக்கொண்டை அணி

**சூளாமணி** - முடிமணி, ஒரு செய்யுணூல்

**சூளுறு-தல்** - ஆணையிடுதல், வஞ்சினம் கூறுதல்

**சூளை** - கல்சுடுகாளவாய், ஈமவிறகு

**சூறாவளி** - சுழற்காற்று

**சூறுதல்** - சூழ்தல்

**சூறை** - சூழல்காற்று, கொள்ளை, பயிர் நோய்வகை, பனிச்சை என்ற மயிர் முடிவகை, சல்லடம், ஒரு வகைக் கடல்மீன்

**சூறைக்காய்** - தெய்வத்தின் முன் உடைக்கும் சிதறு தேங்காய்

**சூறைக்காற்று** - சுழல்காற்று

**சூறையர்** - பரத்தையர்

**சூன்** - பிதுக்கம், வளைவு, சூன்நிலம், சூம்பியிருத்தல், குற்றம், கவடம், கமுக்கம், இருவீட்டு இடைச்சந்து, புறம்போக்கு நிலம், ஆங்கில ஆறாம் மாதம்

**சூன்றல்** - தோண்டுதல்

**சூனியம்** - இன்மை, மாரணவித்தை

**சூனு** - மகன்

**செக்கடி-த்தல்** - செக்காட்டி எண்ணெய் எடுத்தல்

**செக்கணி** - கூத்துவகை

**செக்கம்** - இறப்பு, சிவப்பு, சினம்

**செக்கர்** - சிவப்பு, செவ்வானம், மாலை நேரம்

**செக்கிழு-த்தல்** - சிறையில் மாட்டிற்குப் பதிலாகத் தண்டனையாகச் செக்கை இழுத்தல்

**செக்கு** - எண்ணெய் பிழியும் பொறி, செக்கில் ஒருமுறை ஆட்டக்கிடைக்கும் எண்ணெய் அளவு, இருபத்தி நான்காம் நாண்மீன்

**செக்கு-தல்** - செக்கின் அடிப்பகுதி

**செக்குலக்கை** - செக்கில் வித்தை நசுக்கும் மரத்தடி

**செகிடு** - அலகடி, கன்னம்

**செகிள்** - கனியின் தோல், மீன் செதில், மீனின் சிவந்த மூச்சுறுப்பு, கேழ்வரகின் கப்பி

**செகு-த்தல்** - கொல்லுதல், வெல்லுதல்

**செங்கட்டி** - காவிக்கல், சாதிலிங்கம், செங்கற்துண்டு

**செங்கடம்பு** - கடம்ப மரவகை

**செங்கண்மா** - செங்கம் ஊரின் பழைய பெயர், சிவப்பான கண் கொண்ட விலங்கு

**செங்கதிர்** - பகலவன், சூரியன், ஞாயிறு, இளங்கதிரோன்

**செங்கமலம்** - செந்தாமரை

**செங்கமலை** - துளசி

**செங்கரடு** - செம்மண் குன்று

**செங்கரா** - மஞ்சள் கலந்த செந்நிறக் கடல்மீன், கடல்மீன் வகை

**செங்கல்** - கட்டடம் கட்டப் பயன்படும் சுடுமண்கல், காவிக்கல், மாணிக்கம்

**செங்கழுநாடு** - ஆய்நாட்டு ஊர்

**செங்கழுநீர்** - அல்லி வகை நீர்ப்புதலி, செவ்வாம்பல்

**செங்களம்** - போர்க்களம்

**செங்கற்சீலை** - காவித்துணி

**செங்கற்சூளை** - கட்டடம் கட்ட பயன்படும் மண் கல் சுடும் காளவாய்

**செங்காந்தள்** - செந்நிறக் கொடிவகை

**செங்காய்** - பழுக்கும் பருவக்காய்

**செங்காரணி** - ஆ போன்ற கருஞ்சிவலை விலங்கு

**செங்காரி-த்தல்** - சினம், முகம் சிவத்தல், பயிர்கள் மழையின்றி கதிர் வாங்காது செந்நிறமாதல்

**செங்கீரைப் பருவம்** - பிள்ளைத்தமிழ் பருவங்கள் பத்தினுள் ஒன்று, குழந்தை ஐந்தாம் திங்களில் தலையை நிமிர்த்தி அசைக்கும் செயலைச் சிறப்பிக்கும் பகுதி

**செங்குத்து** - பக்கச்சாய்வற்ற நிலை, 900 (பாகைக் கோணத்தின்) நேர் உயர் அமைவு

**செங்குந்தர்** - சிவப்பு ஈட்டியுடைய கைக்கோளர், நெசவுத் தொழிலர் வகுப்பு

**செங்கை** - கொடைக்கை

**செங்கோட்டியாழ்** - நால்வகை "யாழ்" களுள் ஒன்றான நரம்பிசைக்கருவி

**செங்கோண்மை** - நேரிய ஆட்சி முறை

**செங்கோல்** - அரசு இலச்சினையுடன் கூடிய அரசச் சின்னமாகிய நேர்க்கோல், அறக்கோல், நல்லாட்சி, பழுக்கக் காய்ச்சிய சலாகை

**செஞ்சுடர்** - ஞாயிறு, எரியும்நெருப்பு, கதிரவன்

**செஞ்சுருட்டை** - கேழ்வரகுவகை

**செஞ்செவியர்** - செல்வம் மிக்கவர்

**செஞ்செழிப்பு** - முகமலர்ச்சி, பயிர்ச் செழிப்பு, ஏராளம், மிகுதி

**செஞ்சொல்** - திருந்திய சொல், தேர்ந் தெடுக்கப்பட்ட சரியான சொல்

**செஞ்சோற்றுக்கடன்** - நன்றியின்பால் போரில் மன்னனுக்காக உயிர் கொடுக்கும் கடமை, கடப்பாடுடைமை, உதவிக்கு உதவி செய்தல்

**செஞ்சோறு** - தீட்டாத சிவப்பரிசிச் சோறு, போரில் உயிர்க் கொடுத்தலைக் கருதிய வீரனுக்கு அரசனளிக்குஞ்சோறு

**செட்டிமை** - வணிகத்தன்மை, வணிகம்

**செட்டு** - கொங்கு நாட்டுக் குலாலர் சமூகத்தின் சிறு குழுத்தலைவர்

**செட்டுப்பொட்டா-தல்** - வணிகம் சிதைதல்

**செட்டை** - சிறகு, மீன் சிறை, தோட் பட்டை

**செடி** - சிறுபூடு, புதர், அடர்த்தி, நெருக்கம், அறங்கடை, பாவம், தீமை, இன்னல், துன்பம், தீயநாற்றம், கருச்சிதைந்த மகளிர் தீண்டுதலால் குழந்தைகளுக்கு வருவதாகக் கருதப்படும் நோய் வகை, இழிவு, பதனழிந்தது

**செடி-த்தல்** - கொடிதழைகள் அடர்தல்

**செண்டு** - பூக்கற்றை, மலர்த்தொகுப்பு, பந்து, குதிரைச்சவுக்கு, குதிரை பழக்கும் சாலை, பந்தடிமேடை, நூற்செண்டு, தீவட்டிச் செண்டு, கொடி, கூர்மை, மழு

**செண்டுகோல்** - பந்தடிக்குங்கோல்

**செண்டேறு-தல்** - உலாவரப் புறப்படுதல்

**செண்டை** - கேரள கொட்டிசைக் கருவி(மேளம்)

**செண்ணுதல்** - அலங்கரித்தல்

**செண்பகம்** - வண்டுணா மலர்

**செத்தல்** - சாகை, தேங்காய்நெற்று, உலர்ந்த பனம்பழம், மிளகாய், வாழை முதலியன, ஒல்லி, மெலிவு, பதர்

**செ-த்தல்** - பொருந்துதல், ஒத்தல், கருதுதல்

**செத்தலை** - உழவுக்கணக்கு

**செத்துபாட்டம்** - பனையில் கள்ளிறக்கக் கொடுக்கும் வரி

**செத்தை** - கூரைவேயும் தட்டை, புல், சருகு முதலியன, குப்பை, வைக்கோல், ஓலைவேலி, அழுகிய தசை, ஈன்றமாடு வெளியிடும் நஞ்சு, கடல்மீன் வகை

**செதில்** - மீன் மேலுள்ள காப்பு உறுப்பு, மரப்பட்டை

**செதிள்** - தூசி, மரப்பட்டை, ஓணான் போன்றவற்றின் உடலிலுள்ள விறைப்பான தோல் அடுக்கு

**செதுக்கு-தல்** - புல் முதலியன செதுக்குதல், கழித்தல், செம்மை செய்தல்

**செதுக்குளி** - தச்சனின் உளி, பொற் கொல்லனின் மணி பதிக்கும் கருவி
**செதுகு** - கூளம், சருகு, தீங்கு
**செதும்பு** - சேறு, குறைவாக ஓடும் நீர்
**செதும்பு-தல்** - ஈரம் உறைத்தல்
**செதுமொழி** - பொல்லாச் சொல், தீமொழி
**செந்தணல்** - கனிந்த அழல்
**செந்தமிழ்** - கலப்பில்லா தூய தமிழ்
**செந்தமிழ்நாடு** - செந்தமிழ் வழங்கு நிலம்
**செந்தமிழிலக்கணம்** - வீரமாமுனிவரின் செந்தமிழ் இலக்கணம்
**செந்தயிர்** - செம்மையான கட்டித்தயிர்
**செந்தலி-த்தல்** - செழிப்பாதல், செவ்வியுறுதல்
**செந்தலை** - அரைக்கால், 1/8
**செந்தழல்** - ஒளிரும் தீ, செந்தணல், கனிந்த நெருப்பு, 18-ஆம் விண்மீன்(கேட்டை)
**செந்தழற்கொடி** - பவழக்கொடி
**செந்தாது** - பொன்
**செந்தாமரை** - சிவப்புத்தாமரை
**செந்தாரை** - வெண்சிவப்பு
**செந்தாழை** - சிவப்புத்தாழை வகை, கோங்கிலவு மரவகை, பார்வையை மறைக்கும் கண்நோய், பயிரை சிவக்க வைக்கும் நோய், உதட்டுப்புண் தோன்றி வாயில் தீ நாற்றம் உருவாக்கும் நோய்
**செந்திணை** - திணைவகை, கரும்புப் பயிர்
**செந்திருக்கம்** - ஓலை மடலை மூடும் சுருள், காற்றாடிக் கயிற்றில் ஏறிச் செல்லும் ஓலைச்சுருள்
**செந்திறம்** - சிவப்பு, குறிஞ்சி யாழ் திறத்தில் ஒன்று, தெளிவு
**செந்துருக்கம்** - செடிவகை
**செந்துறை** - பாடற்கேற்ற செய்யுள்வகை, தமிழகத்தில் ஓர் ஊர் பெயர்
**செந்தொடை** - மோனை முதலிய அமையாப் பா, அம்பெய்யுங்குறி, சிவப்பு மாலை
**செப்பலோசை** - வெண்பாவோசை
**செம்** - சிவப்பு
**செம்பஞ்சுக்குழம்பு** - மகளிர் காலில் பூசிக்கொள்ளும் செம்பஞ்சாற் செய்யப்பட்ட வண்ணக்குழம்பு வகை
**செம்படத்தி** - பரதவரினப்பெண்
**செம்படம்** - திருவைக்கும் சிறுசெப்பு
**செம்படவன்**- மீனவன்
**செம்படாம்** - சிவந்த ஆடை, சிவப்புச் சீலை
**செம்பத்தி** - உண்மையான அன்பு
**செம்பருத்தி** - நல்ல பருத்திவகை, செம்பஞ்சு, பருத்தி வகை, சிவப்புப் பூ பூக்கும் ஒருவகைப் புதர்ச்செடி
**செம்பவளம்** - அடர் செந்நிற பவழவகை, உருண்டை வடிவ பவழவகை

**செம்பாதி** - சரிபாதி, சமபங்கு

**செம்பிறை** - கானற்கல், நீலக்கல்

**செம்பு** - வெளிர்சிவப்பு மாழை, எளிதில் வெப்பக்கடத்தி, மின்சாரக்கடத்தி, மாழை ஏனம், முகத் தலளவை, காசுக் குற்றவகை

**செம்புனல்** - புதுவெள்ள நீர்

**செம்பொருள்** - உண்மைப்பொருள், கடவுள், மெய்ப்பொருள்

**செம்போக்கு** - உயிர்கள் உயர் பதவி செல்லல்

**செம்மணி** - மாணிக்கம்

**செம்மல்** - தலைமை, உள்ள நிறைவு, தருக்கு, பெருமையிற் சிறந்தோன், இறைவன், சாதிப்பூ, பழம்பூ, நீர்

**செம்மாத்தல்** - இறுமாந்திருத்தல், மிகக்களித்தல்

**செம்மாப்பு** - அகமலர்ச்சி, இறுமாப்பு, வீறு

**செம்மீன்** - அருந்ததி

**செம்முதல்** - மூடுதல், பரவுதல், வீங்குதல்

**சேக்கிழார்** - தொண்டைநாட்டு வேளாண் குடிப்பெயர், பெரியபுராணம் இயற்றிய ஆசிரியர்

**சேக்கிழார்புராணம்** - சேக்கிழார் வரலாற்றோடு பெரியபுராண வரலாற்றையும் சேர்த்துக்கூறும் செய்யுள் நூல்

**சேக்கிழான்** - மாடுமனைகள் உள்ள செல்வர், ஆநிரைப் பண்ணையார்

**சேக்கை** - கட்டிலில் மக்கள் படுக்கை, விலங்குகளின் படுக்கை, தங்குமிடம், வலை, பறவைக்கூடு

**சேகண்டி** - கோலால் அடிக்கும் வட்டமுறி (வெங்கல)த்தட்டு

**சேகண்டியடி-த்தல்** - வீணே பேசிக்காலங் கழித்தல், சேகண்டியடித்தல், உணவுக்கு மிகவும் வருந்தி முயலுதல், பலர் அறிய ஒன்றைக்கூறுதல்

**சேகண்டியில்வை-த்தல்** - குற்றம் புரிந்தவராகக் கருதி சிறையில் வைத்தல்

**சேங்கன்று** - ஆண்கன்று

**சேடக்கோல்** - தூக்குக்கோல், எடை அளக்குங்கோல்

**சேட்டம்** - மேன்மை, வலிமை, செழிப்பு, அழகு

**சேட்டன்** - தமையன், வயதில் பெரியவன், மூத்தோன், உருத்திரருள் ஒருவர்

**சேட்டை** - மூத்தவள், மூத்ததேவி (இலக்குமிக்கு மூத்தவள்), பெருவிரல், குறும்பு

**சேட்படு-தல்** - எதிர்ப்படுதல், தொலை வாதல், நெடுங்காலமாதல்

**சேடம்** - பெருமை, மிகுதி, மீதி

**சேடவட்டில்** - வட்டவடிவ உண்கலம்

**சேடன்** - பெரியோன், கடவுள், இறைவன், இளைஞன், தோழன், பிரிந்த இணையரை இணைத்து வைக்கத் துணைபுரிபவன்

**சேடி** - ஏவல் செய்பவள், தோழி, இளமையுடையவள்,தெருச்சிறகு, விஞ்சையர் உலகு

**சேடி-த்தல்** - எஞ்சுதல், குறைத்தல்

**சேடு** - தோழமை, நட்பு, ஏவல், பெருமை, திரட்சி, உயரம், நன்மை, அழகு, இளமை

**சேடைபாய்-தல்** - உழவிற்கு வயலில் முதலில் நீர்பாய்தல்

**சேடையரிசி** - மணமக்களுக்கு இட்டு வாழ்த்தும் மஞ்சள் கலந்த மங்கல அரிசி

**சேண்** - சேய்மை, உயரம், மலைமுகடு, வானம், துறக்கம், அகலம், நீளம், நெடுங்காலம்

**சேணம்** - மெத்தை, பரிமேல் இடும் தோல் இருக்கை

**சேணாடு** - துறக்கவுலகம்

**சேணியன்** - தேவர்கோன், இந்திரன், விஞ்சையன், ஆடைநெய்வோர்

**சேணோன்** - மலைவாசி, பரண்மீதிருந்து பயிர்காப்பவன்

**சே-த்தல்** - தங்குதல், கிடத்தல், உறங்குதல், எய்துதல், சிவப்பாதல், முகம் சிவந்து சினத்தல்

**சேதபாதம்** - கூத்துகளுள் ஒருவகை

**சேதம்** - இழப்பு, பொன் வெள்ளி அணிசெய்கையில் ஏற்படும் தேய்மான இழப்பு

**சேதாரம்** - தேய்மானப் பொன்

**சேதி-த்தல்** - வெட்டுதல், அழித்தல்

**சேது-பாலம்** - செய்கரை, இராமேசுவரம், தனுட்கோடியில் உள்ள புனித நீராடுமிடம், இராமனது படைவீரர்கள் இலங்கையை இணைக்கக் கட்டியதாகக் கருதப்படும் திருவணை

**சேந்தன்** - முருகன், திவாகரம் செய்த அம்பர் தலைவன், கடைக் கழகக்கால அரசன்

**சேந்தி** - சுவரில் அமைந்த பரண், இடைவெளி இல்லாமல் இடும்பலகை, களஞ்சியம்

**சேந்து** - சிவப்பு, தீ, அசோகு

**சேந்துகிணறு** - இறைகிணறு

**சேந்து-தல்** - கயிறு முதலியவற்றை இழுத்தல், கிணற்றிலிருந்து நீரிறைத்தல்

**சேப்பு-தல்** - தங்குதல்

**சேபாலம்** - சேங்கொட்டை

**சேம்பு** - ஒருவகைக் கறிக்கிழங்குச்செடி

**சேமக்காரன்** - காவற்காரன், நம்பிக்கையுள்ளவன், சிக்கன முள்ளவன், வருமுன் காப்போன்

**சேமங்கொள்(ளு)தல்** - பிணம் வைக்க சாணம் தெளித்து இடத்தைத் தூய்மை செய்தல்

**சேமஞ்செய்-தல்** - மூடிவைத்தல்

**சேமணி** - மாட்டுக்கழுத்தில் கட்டும் மணி, சேகண்டி

**சேமத்தில்வை-த்தல்** - பாதுகாப்புச் செய்தல், கோள்கள் சரியற்ற காலை குழந்தைகளைக் கணியன் சொற்படி பெற்றோர் கண்ணில் காணாதவாறு சிலகாலம் மறைத்து வைத்தல்

**சேமத்தேர்** - வைப்புத்தேர்

**சேமப்படை** - வைப்புப்படை

**சேமப்பொருள்** - வைப்புப்பொருள், புதையல்

**சேமம்** - காவல், அரணான இடம், சிறைச்சாலை, தன்மேல் அம்புபடாமல் காக்கும் செய்கை, சவக்காப்பு

**சேமறி** - மாட்டின் புணர்ச்சி

**சேமா** - எருது

**சேமாறி** - விதையடிப்போன்

**சேமாறு-தல்** - எருதுக்குக் காயடித்தல், விதையடித்தல்

**சேமி-த்தல்** - காத்துவைத்தல், போற்றி வைத்தல், புதைத்துவைத்தல், நிறைத்தல், சிக்கனப்படுத்துதல்

**சேமிப்பு** - பணம்,பொருள் சேர்த்து வைத்தல், பாதுகாத்து வைத்தல்

**சேமிப்புவங்கி** - சேமிப்புப் பொருளகம்

**சேய்** - மகன், இளமை, பெருமை, முருகனைப் போன்ற மறவன், தலைவன், குழந்தை, தொலைவு, நீளம், மனையிடம், மூங்கில்

**சேய்குன்றம்** - முருகக்கடவுள் எழுந்தருளி யுள்ள திருப்பரங்குன்றம்

**சேய்மை** - தொலைவு, நீளம்

**சேயிழை** - அழகிய அணிகலன்கள் அணிந்த பெண்

**சேயோன்** - முருகக்கடவுள், சிவன், குழந்தை, தொலைவிலுள்ளோன்

**சேர்க்கை** - தொடர்பு, நட்பு, இன்னும் ஒரு பெண்ணை மனைவியாக்கிக் கொள்ளல், சீட்டாட்டத்தில் ஒத்த சீட்டுகளைச் சேர்த்தல், புணர்ச்சி, திரளுகை, சேர்ந்திருக்கும் நிலை, கூடுகை, கலப்புப்பொருள், கூட்டுறவு, ஒன்றிப்பு, மணக்கூட்டுவில்லை, மாணவர் ஆவதற்கான பதிவு

**சேர்க்கைமணம்** - கூட்டுப்பொருள் மணம், பலர்நட்பால் உண்டாகும் குணம்

**சேர்காலிடு-தல்** - கால்தளைதல்

**சேர்கொடு-த்தல்** - காட்டிக்கொடுத்தல்

**சேர்-த்தல்** - தொடுதல், கலத்தல், இணைத்தல், கூட்டிக்கொள்ளல், திரட்டுதல், தனதாக்குதல்

**சேர்த்துக்கொள்(ளு)தல்** - ஏற்றல், கணக்கில் பதிதல், ஈர்த்தல், கவர்தல்

**சேர்த்துப்பிடித்-தல்** - வயப்படுத்துதல், சிக்கனம் செய்தல், வைப்பு வைத்தல், தொடுப்பு வைத்தல்

**சேர்-தல்** - ஒன்றுகூடுதல், கலத்தல், தொடர்புடையதாதல், நட்பாதல், வெட்டுதல்

**சேர்-திரட்சி** - வைக்கோலாலான நெற்கதிர், களஞ்சியம், ஓரேர் மாடு, மாடுகளின் முன்னங்கால்களைச்

சேர்த்துக்கட்டுதல், சேங்கொட்டை, எட்டுபலங்கொண்ட முந்தைய தமிழ் நிறுத்தலளவை, ஒருமுகத்தலளவை

**சேர்ப்பி-த்தல்** - ஒப்படைத்தல்

**சேர்ப்பு** - இடம், கடற்கரை, கலப்புப் பண்டம், பின்னிணைப்பு, மனைவி அல்லாமல் வேறொருவளை வைத்துக் கொள்ளுதல், பட்டியலில் பதிவு செய்தல், வேலைக்கு ஆள் தேர்ந் தெடுத்தல், கப்பலிலிருந்து சரக்கிறக்கும் பாலம், கட்டுமரத் தடுப்புப் பலகை

**சேர்ப்பூட்டு** - சரியிணை, ஒத்த இணை

**சேர்பு** - வாழிடம், இல், வீடு, சேர்மானம்

**சேரமண்டலம்** - சேரநாடு

**சேர்மம்** - கூட்டுப்பொருள்

**சேர்மானம்** - சேர்க்கை, கலக்கும் பொருள், இணைப்பு, கூட்டு அளவு, பொன்னில் செம்பின் கலப்பு விழுக்காடு

**சேரர்** - குடவர், குட்டநாட்டவர்

**சேர்விடம்** - துயிலிடம், தங்குமிடம், வாழிடம்

**சேர்வு** - அடைகை, சேரி, ஊர், ஒன்று சேர்கை, திரட்சி, கூட்டம்

**சேர்வை** - கூட்டுறவு, கலவை, மருந்துக்கூட்டுச்சரக்கு, சீலையில் பூசி இடும் மருந்து, மாழை கலப்பு, சேனை, கூட்டம், 20 வெற்றிலைக் கட்டு, காய்கறி(அ) இறைச்சியும் கலந்த கூட்டுக்குழம்பு, மகளிர் காதணி வகை, கூத்துவகை, பற்று, அணை

**சேர்வைக்கட்டு-தல்** - மரக்கிளை களைச் சேர்த்துத் தாழ்வாரம் இறக்குதல், வெற்றிலைக்கொடி, படரும்படி அகத்திக்காய்களை இரட்டையாகச் சேர்த்துக்கட்டுதல், வெற்றிலைக் கொடிக்காலில் ஆள் ஏறி வெற்றிலை கிள்ளுவதற்கு வாய்ப்பாக வரிசல் வைத்துக்கட்டுதல்

**சேர்வைக்கால்** - ஏணியைத் தாங்குங்கால், தட்டின் பீடக்கால்

**சேரன் தீவு** - இலங்கையின் பெயர்

**சேராச்சேர்த்தி** - இசைவற்ற சேர்க்கை, தகாத கூட்டுறவு, தாறுமாறு, எதிர்பாரா சந்திப்பு

**சேரார்** - பகைவர்

**சேரி** - ஊர், மக்கள் சேர்ந்து வாழும் பகுதி, முல்லை நிலத்தூர், தெரு, பழந்தமிழர் வாழும் பகுதி, ஏழையர் வாழும் குடிசைப்பகுதி

**சேரிடு-தல்** - பிணைத்தல்

**சேல்விழி** - சேல்மீன் போலும் செவ்வரி ஓடிய பெண்ணின் கண்

**சேலை** - மகளிர் உடுத்தும் ஆடை, முழுத்துணியின் ஒரு பாதி

**சேலைபோடு-தல்** - கைம்மணாட்டிக்குப் புத்தாடை வழங்குதல்

**சேலொளி** - (வைடூரியம்), சேற்கெண்டை பூனைக் கண்மணி போன்ற கண்ணொளி

**சேவகம்** - யானைக்கூட்டம், தூக்கம்

**சேவடி** - சிவந்த பாதம்

**சேவல்** - ஆண்கோழி, ஆண் அன்னம், கலுழன் (கருடன்), முருகன் ஊர்தியாகிய மயில், ஆண் குதிரை, காவல்

**சேவல் காத்தல்** - புள், விலங்குகளால் பயிர்க்குக் கேடு வராமல் காத்தல்

**சேவலந்சித்தி** - கீரிப்பிள்ளை

**சேவற்கட்டு** - சேவற்போர்

**சேவற்கத்தி** - சண்டைச்சேவல்களின் கால்களில் கட்டும் கத்தி

**சேவற்கொடியோன்** - தமிழ்கடவுள் முருகன்

**சேவற்பூ** - கோழிக்கொண்டைச் செடி

**சேவு** - கடலை மாவில் செய்த கார அல்லது இனிப்புத் தின்பண்டம்

**சேற்றாமை** - ஆமைவகை

**சேற்றுப்பலகை** - மண்தாங்கிப் பலகை, பரம்புப்பலகை

**சேற்றுப்புழுதி** - உழப்பட்ட வயல்

**சேறாடுதல்** - விதைக்க வயலில் தொளி கலக்குதல், துவைத்துக் குழைத்தல்

**சேறு** - நீருடன் குழைத்த மண், சகதி, குழம்பு, பனம்பழம், ஆதங்காய் முதலிய வற்றின் செறிந்த உள்ளீடு, விளாம்பழம், சீழ்

**சேனாவரையர்** - தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குச் சிறந்த உரை எழுதியவர்

**சை** - சகர மெய்யும் ஐகார உயிரும் சேர்ந்த உயிர்மெய்யெழுத்து, இகழ்ச்சிக் குறிப்பு, தினை

**சைகை** - கை, கண், முகக்குறிப்பு முதலிய வற்றால் காட்டும் செய்திக் குறிப்பு

**சொக்கக்கட்டி வெள்ளி** - தூயவெள்ளி

**சொக்கட்டான்** - ஒருவகைத்தாய விளையாட்டு வகை, சூதாட்டக் கருவி

**சொக்கட்டான்மனை** - சொக்கட்டான் ஆடும் பலகை

**சொக்கப்பனை** - கார்த்திகைத் திருவிழாவில் கோயில்களுக்கு முன்பு எரிக்கும் பனையோலைக் கூடு

**சொக்கன்** - அழகன், சிவன், வணிகனின் கையாள், குரங்கு

**சொக்காரன்** - பங்காளி, சகலன், பங்குக்கு உரியவன்

**சொக்காரி** - சொத்துக்கு உரியவள்

**சொக்கிடு-தல்** - மயக்கப்பொடி தூவுதல்

**சொக்கு** - மயக்கம், வயப்படுதல், தூய்மை, அழகு, பொன், கன்னக் கதுப்பு

**சொக்குச்செட்டி** - சிக்கனக்காரன்

சொக்கு-தல் - அழகு, திறமை முதலிய வற்றால் தன்வயமிழத்தல், மயங்குதல், மனம் பிறர்வயமாதல், பிறரை மயக்குதல், உறக்கத்தால் கண்கள் செருகுதல், குழிவு அல்லது வளைவு விழுதல்

**சொக்குப்பொடி** - பிறரை மயக்கும் மாயப்பொடி

**சொச்சம்** – மிச்சம், சில்வானம், வட்டி, கழித்தல் வகுத்தலில் வரும் மீதி

**சொடக்கு** - விரல்களை நெறித்து எழுப்பும் ஒலி, சோம்பற்றன்மை, கைநொடி, கட்டைவிரலையும் நடுவிரலையும் சேர்த்து சுண்டி எழுப்பும் ஒலி, நொடிப்பொழுது

**சொட்டு** - சொட்டும் சிறுதுளி, துண்டு, குட்டு, குற்றங்குறை, குற்றத்தைக் குறிப்பாற்கூறும் பேச்சு, பாழ், வழுக்கை

**சொட்டு நீர்ப்பாசனம்** - குழாய்வழி வேருக்கு மட்டும் துளித்துளியாக நீர் வழங்கும் பாசனமுறை

**சொட்டுசொட்டாக** - துளித்துளியாக

**சொட்டு-தல்** - துளித்தல், கொத்துதல், சூழ்ச்சியால் கவர்தல், ஏமாற்றுதல், குட்டுதல், பால்சுரக்க ஆட்டு மடியைத் தட்டுதல், அடித்தல்

**சொட்டுப்போடு-தல்** - அடிகொடுத்தல், குறை சொல்லல், தவறுதல்

**சொட்டுமருந்து** - இளம்பிள்ளை வாதநோய்த் தடுப்பு மருந்து

**சொட்டுவை-த்தல்** - குட்டுதல், இகழ்ச்சிக்கு ஆளாக்குதல்

**சொட்டைக்கத்தி** - வளைந்தகத்தி

**சொட்டைச்சொல்** - பழிச்சொல், எள்ளல்

**சொட்டைவிழு-தல்** - தலையில் வழுக்கை வருதல், அதுங்கிப்போதல்

**சொடி-தல்** - வெயிலில் வாடுதல், குழைதல்

**சொண்டிச்சோறு** - சுண்டி யுண்டையைப் பயன்படுத்திப் புளிக்க வைத்த சோறு

**சொண்டு** - பறவை மூக்கு, உதடு, தடித்தஉதடு, அடிபருத்த ஏனவிளிம்பு, மீன்மூக்கு, குற்றம், சொத்தை மிளகாய்

**சொண்டு பண்ணுதல்** - இகழ்ச்சி செய்தல்

**சொண்டு பேசு-தல்** - சொல்லில் மறைத்து இகழ்தல், பழித்தல்

**சொண்டு மிளகாய்** - விதையில்லாத சொத்தை மிளகாய்த்தோல்

**சொண்டுக்கதை** - உணவுக்காகச் சொல்லும் கதை, புறங்கூறுதல்

**சொண்டுக்காரன்** - பருத்த உதடுள்ளவன்

**சொண்டுவில்-தல்** - புறம்பேசுதல்

**சொணை** - இலைகாய் மீதுள்ள சிறுமுள்

**சொத்தட்டை** - உளுத்தமரக்கட்டை

**சொத்தலி** - கொட்டையற்ற பனங்காய்

**சொத்தாட்சியலுவலர்** - சொத்து ஒப்படைப்பு அலுவலர்

**சொத்து** - அசையும் அசையா உடைமைப் பொருள், பொன், உடலில் பூசிக் கொள்ளும் அரத்தம் போன்ற செம்பசை

**சொத்துக்காரன்** - செல்வந்தன், பொருளுக் குரியவன்

**சொத்துவரி** - சொத்துக்களுக்கான திறை

**சொத்துவை-த்தல்** - தொகுத்து வைத்தல், வழித்தோன்றல்களுக்குச் செல்வம் சேர்த்து வைத்தல்

**சொத்தை** - புழு, வண்டு முதலிய வற்றால் அரிக்கப்பட்டது, ஊமை, சீர்கேடு, மெலிந்த உயிரி, கன்னம்

**சொத்தைப்பல்** - கெட்டுப்போனபல்

**சொத்தையிற்போடு-தல்** - கன்னத்தில் அறைதல்

**சொந்தம்** - கேளிர், சுற்றம்

**சொரசொரப்பு** - உராய்வை ஏற்படுத்தும் தன்மை

**சொரி** - தினவு, தோல்நோய்

**சொரி-தல்** - பொழிதல், விழுதல், மிகுதல், உதிர்தல், கொட்டுதல், மிகக்கொடுத்தல், சுழலுதல்

**சொரிந்தளத்தல்** - பண்டங்களை மேலே தூவியளத்தல்

**சொருகு** - துடுப்பைப் பூட்டும் வளையம், தடுத்து கதவை அடைத்தல், கதவைத் தரையுடன் பிணைக்கும் இரும்புத்துண்டு

**சொருகு-தல்** - நுழைத்தல், விழிகளை ஒருபுறமாக ஒதுக்கி மறையச்செய்தல்

**சொல்** - பேச்சு, பழமொழி, உறுதிமொழி, ஒலி, புகழ், தீமொழி (சபித்தல்), கட்டளை, அறிவுரை, பெயர்ச்சொல், வினைச் சொல், இடைச்சொல், உரிச்சொல் என்ற நால்வகைச் சொற்கள், தமிழில் உள்ள இயற்சொல், திரிச்சொல், திசைச்சொல், வடசொல் என நால்வகை மொழிகள், நாடகவரங்கிப் பேசப்படும் உட்சொல், புறச்சொல், வான்சொல் என்பன, நாமகள், நெருப்பு(அ)பொன் போன்ற நெல்

**சொல் தவறுதல்** - மொழிபிறழ்தல்

**சொல்(லு)தல்** - பேசுதல், திருப்பிக் கூறுதல், கட்டளையிடுதல், அறிவுரைக் கூறுதல், அறிவித்தல், புகழ்தல், களைதல், பேச்சு, உறுதிமொழி, புகழ் தீமொழி, சாவம், அறிவுரை

**சொல்நயம்** - இனிய சொற்களால் பேசுதல்

**சொல்லகத்தியம்** - அழிந்துபட்ட ஓர் இசைநூல்

**சொல்லடைவு** - ஒருநூலில் உள்ள சொற்களை அகரவரிசைப்படுத்தி நூலுடன் இணைக்கும் பட்டியல்

**சொல்லணி** - சொல்லினோசை முதலியன பாங்குற அமைக்கும் அணிவகை

**சொல்லதிகாரம்** - சொல் பற்றிய இலக்கணம்

**சொல்லழிம்பு** - இடக்கர்ச்சொல்

**சொல்லழுத்தம்** - ஊன்றிச் சொல்லல், சொல்லுறுதி

**சொல்லாக்கம்** - புதுச்சொற்களை உருவாக்குதல், செவ்வி, கலந்துரை யாடல்

**சொல்லாகுபெயர்** - ஒருசொல் அதனோடு ஏதேனும் தொடர்புடைய மற்றொன்றையும் குறிப்பிட்டு வழங்குவது

**சொல்லாட்சி** - சொற்களைப் பயன்படுத்தும் பாங்கு

**சொல்லாட்டி** - திறம்படப்பேசுபவள்

**சொல்லாட்டு** - பேச்சு

**சொல்லாடு-தல்** - உரையாடுதல், பேசுதல்

**சொல்லாத சொல்** - தகாத சொல், இடக்கர்ச்சொல், வசை

**சொல்லாமற்சொல்லு-தல்** - குறிப்பால் கூறுதல்

**சொல்லிக்காட்டு-தல்** - ஒப்பித்தல், விளக்கியறிதல், குத்திக்காட்டுதல்

**சொல்லிக்கொடு-த்தல்** - கற்பித்தல், அறிவித்தல், படிப்பித்தல், அறிவுரைக் கூறல், தூண்டுதல்

**சொல்லிக்கொள்(ளு)தல்** - விடை பெறுதல், ஒருவருக்காகத் தாங்கிப் பேசுதல், தனக்குள் பேசுதல், பாடம் கேட்டல்

**சொல்லிசையளபெடை** - பெயர்ச் சொல், வினையெச்சச் சொல்லின் இசையை நிறைத்தற் பொருட்டு அளபெடுப்பது

**சொல்லிசைவு** - சொல்லப்பட்டதற்கு ஏற்றது

**சொல்லிப்போடு-தல்** - வெளியிடுதல், காட்டிக்கொடுத்தல்

**சொல்லியனுப்பு-தல்** - ஏவலர் வழியே சொல்லி அறியச்செய்தல், அழைத்துவரச் செய்தியனுப்புதல்

**சொல்லிலக்கணம்** - சொல்லைப்பற்றிக் கூறும் அளவைநூல்

**சொல்லிவை-த்தல்** - முன்னறி வித்தல், கற்பித்தல்

**சொல்லிழுக்கு** - சொற்குற்றம்

**சொல்லின்பம்** - சொற்சுவை

**சொல்லுதவி** - பரிந்துரை, உறுதிமொழி தருதல்

**சொல்லுரிமை** - பேச்சுரிமை, அழுத்த மான திருந்திய பேச்சு

**சொல்லுருபு** - வேற்றுமையுருபுகட்டு மாற்றாக வழங்குஞ்சொல்

**சொல்லுருமாறுபாடு** - சொல்லின் ஒலிப்பு ஆளாளுக்கு மாறி உச்சரித்தல்

**சொல்லுறுதி** - வாக்கு நிறை வேற்றுகை

**சொல்லெச்சம்** - சொல் எஞ்சி நிற்றல்

**சொல்லெடுப்பு** - அழுத்தமாகச் சொல்லுதல்

**சொல்லேருழவர்** - புலவர், அமைச்சர், நாவலர், மொழிவல்லுநர்

**சொல்வகை** - சொல்லியற்பகுப்பு, பேசும் திறன், சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகம் என நால்வகைக் கூத்துக்குரிய பாட்டு

**சொலவடை** - பழமொழி

**சொல்வளம்** - சொற்செறிவு, சொற் பொழிவு, செஞ்சொற்கள்

**சொல்வளர்-த்தல்** - ஒரு செய்தியைப் பலரறியச்செய்தல், வீணாகச் சொல்லைப் பெருக்குதல்

**சொலவு** - சொல்லுகை, பழமொழி

**சொலி** - மரமுதலியவற்றின் தோல், பட்டை

**சொலி-த்தல்** - உரித்தல், பெயர்த்தல், பேர்த்தல், தோண்டுதல், பிளத்தல், ஒளிர்தல், எரிதல்

**சொள்ளல்** - சொத்தை, பயனிலி, குற்றம், கறை, இழுக்கு

**சொளுசொளு-த்தல்** - மழையால் தரை கூழாய்க்குழைதல், சேறாதல், சோறு குழைதல்

**சொளையமாடு-தல்** - திருடுதல், திருட்டு நோக்கத்துடன் வீட்டை வளைய வருதல்

**சொற்கா-த்தல்** - சொன்னசொல்லை நிறைவேற்றுதல், அடக்கிப்பேசுதல், புகழைப்போற்றுதல்

**சொற்குற்றம்** - சொல்லின் களத்திற்கு மாறான குற்றம், சொல்லின் தீமை

**சொற்கேள்-தல்** - சொல்கேட்டல், ஏவற்படி நடத்தல், வசையைப் பொறுத்தல், வசைபெறுதல், கேட்டல்

**சொற்கோவை** - சொற்களின் தொகுப்பு, உரை

**சொற்சித்திரம்** - பேச்சு வன்மை

**சொற்சிதைவு** - சொல்லின் மாறுபாடு

**சொற்சிலம்பம்** - சொற்களின் எழில்கூட்டு

**சொற்சுவை** - சொல்லினிமை

**சொற்சொல்(லு)தல்** - அதிகாரமாதல், அதிகாரமுடையவராதல்

**சொற்படுத்து-தல்** - இசைக்கேற்பச் சொல்லமைத்தல்

**சொற்பதம்** - சொல்லளவு, சொல்லால் குறிக்கப்படும் நிலை

**சொற்பயிற்சி** - சொற்களைப் பயன் படுத்தும் முறையைக் கற்பித்தல்

**சொற்பிழை** - சொற்குற்றம், எழுத்துப் பிழை

**சொற்பிறப்பியல்** - ஒரு சொல்லின் வேர்மூலம், தோற்றம், வளர்ச்சி மாற்றம் பற்றிய மொழியியல் ஆய்வுப்பிரிவு

**சொற்பிறப்புவகைப்படு-த்தல்** - வேர்ச் சொற்பிறப்பினைத் தொகுத்தல்

**சொற்பின்வருநிலை** - ஒருசொல் வெவ்வேறு பொருளில் பலமுறை வரும் அணி

**சொற்புத்தி** - அறிவுரை, சொந்த அறிவுத்திறன்

**சொற்புரட்டு** - பொய்

**சொற்பெருக்கு** - விரிவுரை

**சொற்பொருட்பின்வருநிலை** - ஒருசொல் ஒருபொருளிலேயே பலமுறை வரும் அணி

**சொற்பொருத்தம்** - செய்யுள் முதன் மொழிப் பொருத்தம் பத்தனுள், வகையுளி சேர்ந்ததும், சிறப்பில்லா

ததும், பல்பொருட்கேற்பதும், பொருளற்றதும், திரிதல் கெடுதல் என்னும் உறழ்ச்சியுடையதும் ஆகாது, மூவகையுடைய மங்கலச் சொல் செய்யுளின் முதற்கண் அமைத்தலாகிய பொருத்தம்

**சொற்பொருள் விரித்தல்** - உத்திகள் 32-டனுள் சொல்லின் பொருள் வெளிப்படையாக விளங்கும்படி விரித்துக்கூறும் உத்தி

**சொற்பொழிவு** - மேடைப்பேச்சு, சொற்பெருக்கு, விரிவுரை, விளக்கவுரை

**சொற்றிரிபு** - சொல் மாறுபாடு

**சொற்றிருத்தம்** - சொல்லின் சரியான பலுக்கம், எழுத்துப்பிழையின் திருத்தம்

**சொற்றிறமை** - நாவன்மை, பேச்சுநயம்

**சொற்றொடர்** - ஒருசொல் நீர்மைத்தான தொடர், முழுமையற்ற சொற்றொகுதி

**சொறி-சங்கு** - வெளிப்புறம் சொர சொரப்பாக உள்ள சங்கு

**சொறி-தல்** - நகத்தால் வருடுதல், வறண்டுதல், கெஞ்சிக்கேட்டல், தினவுண்டாதல்

**சொறிமீன்** - இழுதுமீன், கூழ்மீன்

**சொன்மடந்தை** - கலைமகள்

**சொன்மலைவு** - முரண்படப்பேசுதல்

**சொன்மாலை** - புகழ்ச்சி, புகழ்மாலை, சொற்களின் அணிவகுப்பு, பாமாலை

**சொன்னதானம்** - பொற்கொடை வழங்கல்

**சொன்னபட்டி** - நாகசெண்பகம், சிறுமரவகை

**சொனகு** - பெரும்புல் வகை

**சோ** - இடைவியப்புப் பொருளைத் தரும் இடைச்சொல், வாணாசுரன் நகர், அரசன், துன்பம், மடி, சோம்பல்

**சோகசாவேரி** - பண்வகை

**சோகா-த்தல்** - துன்புறுதல்

**சோகை** - அரத்தக்குறைவு நோய், அறிவுகுறைந்தவன்

**சோகைமூஞ்சி** - ஊதினமுகம், வீங்கிக்க ாணும்முகம்

**சோங்கண்** - மாறுகண்

**சோங்கல்** - மறந்துவிடல், மறதி

**சோடி-த்தல்** - வற்றுதல், அணியழகு செய்தல், கற்பித்தல், புனைவுரை

**சோணமலை** - திருவண்ணாமலை

**சோணாங்கி** - மெலிந்தவன்-ள்-து

**சோம்பல்** - மயக்கம், சின்னம்மைநோய்

**சோம்புதல்** - வினைமடிந்திருத்தல், அறிவு மந்தமாதல், மனவுறுதி குறைதல், வாடுதல், கெடுதல், பின்வாங்குதல்

**சோமாறி** - சொல் மாற்றிப் பேசுபவன்

**சோமாறு-தல்** - ஒரு ஏனத்திலிருப்பதை மற்றொன்றில் பகிர்ந்து வைத்தல், திருகுதல், இரவல் வாங்கியதை விருப்பப்படி

பயன்படுத்துதல், ஒரு ஏனத்தைப் பல வேலைகளுக்குப் பயன்படுத்துதல், ஒருத்தியைப் பலர் புணர்தல், பண்டமாற்றுதல்

**சோர்-த்தல்** - திருடுதல்

**சோர்-தல்** - உடல்,மனம் (செயலாற்றாமல்)தளர்தல்,மனத்தளர்வு, மயக்கமடைதல், நழுவுதல், கண்ணீர் முதலியன வடிதல், விழுதல், கசிதல், கழலுதல், வாடுதல், மெலிதல், தள்ளாடுதல், தடுமாறுதல், துன்புறல், இறுத்தல், விட்டொழிதல், உடலில் எண்ணெய் முதலியன இறங்குதல்

**சோர்வு** - தளர்ச்சி, களைப்பு, இயலாமை, மெலிவு, மறதி, இழுக்கு, சொறிகை

**சோர்வுபார்-த்தல்** - ஏமாறும் நேரம் பார்த்தல்

**சோலை** - மரங்கள் செறிந்து நிழல் தரும் இடம்

**சோலைதேவியார்** - திருவரங்கனுக்கு மாலை சூட்டும் உரிமை பெற்றவர்கள்

**சோலைநுகர்வு** - நிழல் இன்பம் நுகர்தல்

**சோலைமலை** - அழகர்மலை

**சோழகக்கொண்டல்** - தென்கீழ்க் காற்று

**சோழகம்** - தென்காற்று

**சோழகர்** - கோவை எல்லையில் வாழ் பழங்குடியினர்

**சோழகிராமணி** - நாமக்கல் மாவட்டச் சிற்றூர்

**சோழங்கன்** - சோழன்

**சோழசிகாமணிவதி** - அரியலூர் வட்டாரத்தில் ஓர் அரசியின் பெயரால் அமைந்த பாசன வடிகால்

**சோழநாடு** - சோழர் ஆண்ட தமிழ்நாட்டுப்பகுதி

**சோழன்** - புலிச்சின்னம் கொண்டு பொன்னி நதிப்பகுதிகளை ஆண்ட தமிழ் மன்னன்

**சோழன் நலங்கிள்ளி** - கழகக்காலச் சோழமன்னன்

**சோழி** - கடல் வாழ் சிற்றுயிரியின் ஓடு, பலகறை

**சோழிச்சி** - சோழநாட்டுப் பெண், சோழிய வேளாளர் பெண்

**சோழிப்பல்** - பலகறைப் போன்ற பல்

**சோழியக்காசு** - 13-ஆம் நூற்றாண்டு தமிழக நாணய வகை

**சோழியவெள்ளாளர்** - வேளாளர் குடிவகை

**சோழியன்** - சோழநாட்டான், வேளாண் குடியன்

**சோளக்கூழ்** - சோளமாவாலானகூழ்

**சோளகம்** - குடுமி வைக்கும் விழா

**சோளச்சோறு** - சோளத் தவசத்தால் பக்குவம் செய்த சோறு

**சோளத்தட்டை** - சோளத்தின் அரிதாள்

**சோளப்பொறி** - வறுத்துப் பொறித்த சோளம்

**சோளம்** - ஒருவகை புன்செய் தவசம்

**சோற்றி** - மரத்துள் உள்ள மென்சோறு, வயிரமற்றகட்டை, பழத்தின் சதைப்பாகம், பச்சிலை வகை

**சோற்றிறக்கம்** - பசியுணர்ச்சி

**சோற்றுக்கடன்** - உண்ட உணவிற்குச் செய்யும் கைம்மாறு, கடமையாக இடும் சோறு

**சோற்றுக்கடை** - சோறிடுகை, அடுப்பங் கரை, சோறுவிற்குமிடம்

**சோற்றுக்கற்றாழை** - தசைப்பற்றுள்ள கற்றாழை

**சோற்றுக்குடலை** - சோறு கொண்டு செல்லும் கூடை

**சோற்றுக்குவீங்கி** - சோற்றுக்கு ஏங்குபவன்

**சோற்றுக்குழி** - இரைப்பை, வயிறு

**சோற்றுத்துறுத்தி** - உடம்பு

**சோற்றுப்பசை** - சோற்றால் செய்த பசை, வாழ்வுக்குப் போதுமான வருவாய்

**சோற்றுப்பட்டாளம்** - (வேலை செய்யாமல்) உணவுக்காக மட்டும் ஒருவரை அண்டி வாழும் கும்பல்

**சோற்றுப்படி** - உணவுக்காகக் கொடுக்கும் தொகை

**சோற்றுப்பதம்** - அரிசிவெந்த நிலை

**சோற்றுப்பனை** - வைரமற்ற பனைமரம்

**சோற்றுப்பாளையம்** - முகாமில் சமையல் செய்யுமிடம், பயனற்ற கூட்டம்

**சோறு** - சமைத்த அரிசி, வெந்த அரிசி, பனை முதலியவற்றின் உள்ளீடு, தாழை மடலின் உள்ளீடு, வீடுபேறு, உணவு, தாழி(பரணி), நாண்மீன், வங்கியத்தின் நடுப்பாகத்தில் பூசுங்கலவைச்சாந்து

**சோறுபடை-த்தல்** - சோறு பகிர்ந்தளித்தல்

**சோறுமலர்தல்** - அரிசி பதமாய் வெந்த நிலை, சமைக்கையில் சோறு பொங்கி வழிதல்

**சோறுமாட்டு** - பிற்காலச் சோழர் காலத்து வரிவகை

**சோறுவடி-த்தல்** - சோற்றுக்கஞ்சியை வடித்தல்

**சோறுவாய்-த்தல்** - செஞ்சோற்றுக் கடன் கழித்தல்

**சோறூட்டல்** - குழந்தைக்கு முதன் முதலாகச் சோறு ஊட்டுதல்

**சோனகவாளை** - ஒருவகை நீண்ட வாளை மீன்

**சோனை** - கார்முகில், பெரும்பெயல், மலையடிவாரம் மலைச்சாரல், கைப்பிடிச்சுவர்

**சோனைகட்டுதல்** - மழைமேகம் மூடியிருத்தல்

**சோனைமழை** - சிறுதூரல், விடாமழை

**சௌடு** - உவர்மண், வண்டல்

**ஞகரம்** ஞ என்னும் எழுத்து

**ஞண்டு** கற்கடக ஓரை, நண்டு

**ஞமகண்டன்** ஒரு காணாக் கோள், ஒரு நன்மையற்ற காணா வுடு

**ஞமலி** - கள், நாய், மயில்

**ஞமன்** - யமன், கூற்றுவன், காலன், துலைக்கோலின் சமன்வாய்

**ஞா** - கட்டு, பொருத்து, இணை

**ஞாஞ்சில்** - கலப்பை, மதிலுறுப்பு

**ஞாண்** - கயிறு, வில்நாண், நாண்

**ஞாண்டு** நண்டு, அலவன், கற்கடம்

**ஞாத்தல்** - கட்டுதல், பொருந்துதல்

**ஞா-த்தல்** கட்டுதல், பொருந்துதல்

**ஞாதம்** - அறியப்பட்டது

**ஞாதர்** - அறிவுடையோர், அறிகிறவர், நாதர், ஞாதுரு

**ஞாதா** - அறிபவன்

**ஞாதா** - ஞானவான், அறிபவன்

**ஞாதி** - சுற்றம், தாயத்தார், தந்தை, தொலையுறவினர்

**ஞாதுரு** - அறிவு, அறிபவன்

**ஞாதேயம்** - உறவு,உறவுத்தன்மை

**ஞாபகப்படுத்து** - நினைவுபடுத்துதல்

**ஞாபகம்** - குறிப்பிப்பது, நற்பொருள், நினைவு, அறிவு

**ஞாபகம்** - நினைவு, போதிப்பு, அரும்பொருள், அறிவு, மேற்கோள் இலக்கியம், எடுத்துக்காட்டு, புறனடை, குறிப்பிப்பது, நற்பொருள், குறிப்பு

**ஞாபகமறதி** - நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியதை மறந்துவிடும் தன்மை

**ஞாய்** - தாய், அன்னை

**ஞாயர்** - தாய்மார்

**ஞாயில்** மதில், கோட்டையின் ஏவறை

**ஞாயில்காவல்** - நகர்ப்பாதுகாப்பு

**ஞாயிறு** - சூரியன், வாரத்தின் முதலாவது நாள், பகலவன், கதிரவன்

**ஞாயிறு வணங்கி** - கொழுஞ்சி, கொள்ளுக்காய், வேளை

**ஞாயிறுதிரும்பி** (சூரியகாந்தி) பொழுது வணங்கி

**ஞாயிறுபோது** நண்பகல், உருமம், உச்சிப்பொழுது

**ஞால்(லு)-தல்** தொங்குதல், பொழுது காய்தல், பொழுது இறங்குவேளை, படு ஞாயிறுவேளை

**ஞாலம்** நிலம், உலகம், உயர்ந்தோர், மாயவித்தை, ஊமத்தை, தோணி அசையாமல் நிற்க இடும்மண் முதலிய சுமை

**ஞாலம் படைத்தோன்** - நான்முகன்

**ஞாலமாது** - ஊமத்தை, நிலமடந்தை

**ஞாலமுண்டோன்** - திருமால்

**ஞாலித்தட்டு** - சிற்றுருக்களோடு சேர்த்து மகளிர் கழுத்தில் அணியும் அணிவகை

**ஞாலுதல்** - தொங்குதல், சாய்தல், முழங்குதல், பொழுது சாய்தல்

**ஞாழ்** - யாழ், ஒருவகைத் தமிழரின் நரம்பு இசைக்கருவி

**ஞாழல்** - குங்கும மரம், குங்குமம், புலிநகக் கொன்றை, கோங்கு மரம், சங்குப்பூ, ஒரு மல்லிகை வகை, மரவயிரம், பொன்னாவிரை, மயிர்க் கொன்றை, ஆண்மரம்

**ஞாழி** - வள்ளைக்கொடி

**ஞாளம்** - தண்டு, படர்கொடி, பொன்னாக் கத்தில் மாழை உருக்குவதற்கான குகை

**ஞாளி** - நாய், கள்

**ஞெகிழ் தல்** - கழலுதல், தளர்தல், மனமிளகுதல், மலர்தல், உருகுதல், வாடுதல், மெலிதல், சோம்புதல்

**ஞெகிழம்** - பொற்சிலம்பு, சிலம்பு

**ஞெகிழி** - தீ, நெருப்புக் கொள்ளி, கடைக்கொள்ளி, தீக்கடைகோல், கொடுவேலி, தீப்பொறி, விறகு, சிலம்பு, தீக்கடவுள்

**ஞெமல்** - சருகு, செத்தை

**ஞெமிர்தல்** - பரத்தல், நிறைதல், தங்குதல், முற்றுதல், ஒடிதல், நெரிதல்

**ஞெலி** - தீக்கடைகோல், கடையப்பட்ட மூங்கில், கடை, குடை

**ஞெலி-தல்** - தீக்கடைதல், குடைதல், உரசுதல், கடைதல்

**ஞெலிய** - கடைய, குடைய

**ஞெலுவல்** - செத்தல்

**ஞெலுவன்** - தோழன், நண்பன், எலுவன்

**ஞெள்(ளு)-தல்** - உடன்படல், ஒலித்தல், பள்ளமாதல்

**ஞெள்ளல்** - உடன்படல், ஒலித்தல், விரைவு, சோர்பு, மேன்மை, சோர்வு, தவறு, வீதி, பள்ளம், மிகுதி, பூசல், ஒலிக்கை

**த** - மென்மையும் தட்டையுமான வடிவம்

**தக்க** - தகுந்த, இயைபாக, மதிப்புறு

**தக்கடி** - ஏய்ப்பு, இரண்டகம், முரட்டுத் தனம், பொருந்தா உரையாடல், துலைக்கோல், 10 சேர் கொண்ட நிறையளவு

**தக்கடி வித்தை** - செப்படி வித்தை, ஏமாற்றும் முறை

**தக்கடை** - தராசு

**தக்கணம்** - தெற்கு, வலப்புறம்

**தக்கது** - தகுதியானது

**தக்கம்** - நிலைபேறு, பற்று, பல்லாங்குழி விளையாட்டில் காய்களில்லாக்குழி, ஏனத்தின் அடியில் தங்கிய உணவு, நீர்

**தக்கரம்** - களவு, வஞ்சகம்

**தக்கவை-த்தல்** - ஒன்றை இழக்காமல் தொடர்ந்து வைத்திருத்தல்

**தக்கன்** - இல்லத்தலைவன்

**தக்கார்** - மேன்மக்கள், நடுவுநிலை யுடையார், உறவினர் பெருமையில் சிறந்தோர்

**தக்குதல்** - நிலைபெறுதல், பயன்படுதல், ஏற்றதாதல்

**தக்கை** - அகப்புற முழவு (தண்மை, தக்கை தருணிச்சம்) மூன்றனுள் ஒன்றாகிய ஒருவகைப்பறை; காதிலிடுங்குதம்பை அடைப்பான், மரை, நெட்டி வகை, சோளம், ஆமணக்கு முதலியவற்றின் உலர்ந்த தட்டை கிழிந்த சீலையில் தைக்கும் ஒட்டுத்துண்டு, கட்டி, தெப்பம்,பாலமாக இடும் பனையின் அடிமரம்.

**தக்கோலம்** - தாம்பூலம், வால்மிளகு, திப்பிலி, சாதிக்காய், பேருநாவற்பூ, வெற்றிலைப்பாக்கு, ஏலம், முதலியன நறுமணக் கலவை, சங்கக்குப்பி, சீனமிளகு, காட்டு வெற்றிலை, நாவல், சிறுநாவல்

**தகடு** - மாழைத்தட்டு, இலை, பூவின் புறவிதழ், மந்திரமெழுதிய செப்புத் தகடு

**தகடூர்** - கடையெழு வள்ளல்களுள் ஒருவரான அதியமானின் (கி.மு. மூன்றாம் நூற்றாண்டு) தலைநகர், இன்றைய தருமபுரி

**தகண்** - தடை, தழும்பு

**தகணை** - மாழைக்கட்டி

**தகத்து** - அரியணை, சிங்காதனம், சிறந்த இடம்

**தகப்படு-தல்** - மென்மை, தங்குதல்

**தகம்** - சூடு ,எரிவு

**தகர்** - செறிவு, கொத்து, சிதறல் மேட்டுநிலம், ஆடு, பொடி, பூமி, சிதை, அழி

**தகர்(த்)தல்** - நொறுங்குதல், புடைத்தல், சிதறடித்தல், வருந்துதல்

**தகரடி** - சிதர வைக்கும் அடி

**தகர்-தல்** - நெரிதல்

**தகரம்** - மயிர்ச்சாந்து,இதயம், வெள்ளீயம், நறுமணம், நறுமண மரம், தகரைச்செடி

**தகர்முகம்** - தொடக்கம்

**தகரல்** - மரப்பட்டை

**தகல்** - தகுதி ,தடை

**தகலன்** - இரண்டகன்

**தகவின்மை** - தகுதியின்மை, நடுநிலை யின்மை ,வருத்தம்

**தகவு** -தகுதி, பெருமை , நடுவு நிலைமை, வலிமை, அறிவு, கற்பு, உவமை, அருள், தெளிவு, நல்லொழுக்கம்

**தகழி** - அகல், உண்கலம்

**தகன்** - நெருப்பு, பூரான்

**தகை** - தகுதி, உரிமை,பொருத்தம், மேம்பாடு ,அழகு, தன்மை ,குணம், நன்மை, கட்டுகை, மாலை, தடை, தளர்ச்சி , நிகழ்ச்சி

**தகைதல்** - தடுத்தல், பிடித்தல், அடக்குதல், ஒத்தல்

**தகைப்பு** - மதிற்சுற்று, மாளிகை, படை வகுப்பு

**தகைவிலான்** - அடைக்கலான் குருவி

**தங்கம்** - பைம்பொன், சிறந்தது

**தங்கலர்** - பகைவர்

**தசகூலி** - உழவுக்கூலி

**தச்சு** - தச்சன் தொழில், மரவேலை

**தசபலன்** - புத்தன்

**தசனம்** - பல், மலைமுடி ,கவசம்

**தசும்பு** - குடம், விமானகலசம், பொன்

**தசை** - சதை ,நிலைமை

**தஞ்சம்** - பற்றுக்கோடு ,அடைக்கலம், எளிமை

**தட்டம்** - தாம்பாளம், பெரும்பூ, கச்சு, துயிலிடம், கைகொட்டுகை ,பாம்பின் மேல் வாய்ப்பல், நீர்நிலை

**தட்டழிதல்** - நிலைகுலைதல், திகைத்தல்

**தட்டான்** - பொற்கொல்லன், கிழக்குரங்கு

**தட்டி** - காவல், கதவு ,தடுக்கு

**தட்டு** - தடை

**தட்டுக்கேடு** - இல்லாமை ,முட்டு

**தட்டு-தல்** - தங்குதல், கட்டுதல்

**தட்டுமுட்டு** - வீட்டுச்சாமான்கள்

**தட்டை** - மூங்கில், கிளிகடிகோல்

**தடத்தம்** - நடுநிலை,சார்பு பற்றிப் பொருட்குளதாம் இலக்கணம், திருந்திய நிலை

**தட்பம்** - குளிர்ச்சி, அருள்

**தடக்கை** - வளைந்த கை

**தடகம்** - ஏரி

**தடம்** - பெருமை ,அகலம், செல்வப் பகுதி,வளைவு, நீர்நிலை,கரை, வரம்பு, விளிம்பு, இடம், சுவடு ,வழி, மூங்கில், மனைவாயில், தாழ்வரை, மலை, மணற்குன்று, பாதை

**தடவரல்** - வளைவு

**தடவாதல்** - தடவுதல், பூசுதல், தேடுதல்

**தடவு** - தடா, ஓமகுண்டம், ஒருமரம், வளைவு ,பெருமை

**தடவுவாய்** - மலைச்சுனை

**தடறு** - ஆயதவுறை ,பறைவகை

**தடா** - மிடா, கணப்புச்சட்டி, பருமை

**தடாகம்** - குளம்

**தடாம்** - வளைவு

**தடாரி** - உடுக்கை ,கிணைப்பறை

**தடாரி(த்)தல்** - ஊடுறுவுதல், மிகக் கண்டித்தல்

**தடி** - தண்டாயுதம், வில், வயல், தசை, கருவாடு, உடும்பு

**தடி(த்)தல்** - பெருத்தல், உரப்பாதல்

**தடித்து** - மின்னல்

**தடி-தல்** - வெட்டுதல், அழித்தல்

**தடுமாற்றம்** - ஒழுங்கின்மை, மனக் கலக்கம், தவறு

**தடைதல்** - தடுத்தல்

**தடையிய** - திரண்ட

**தடைவிடை** - வினாவும்,பதிலும்

**தண்** - குளிர்ச்சி ,அருள்

**தண்கதிர்** - மதி ,நிலவு

**தண்டகம்** - தண்டகாரணியம், முதுகெலும்பு

**தண்டச்சக்கரம்** - குயவனார் (அ) குலாலர் சக்கரம்

**தண்டம்** - கோல், ஓர் அளவை ,உடம்பு, படை, தண்டனை, இழப்பு, வணக்கம், யானை செல்லும் வழி

**தண்டயாமன்** - அகத்தியன், குறுமுனி, இமயன்

**தண்டல்** - அமைதல், தணிதல், ஒறுப்பு, படகுத்தலைவன், எதிர்க்கை, வட்டியைப் பிடித்துக் கொண்டு தரும் கடன், வரியைத் தண்டுபவன் நீங்கல், அகலன், சிறைச்சாலை

**தண்டலர்** - பகைவர், தண்டுபவர்

**தண்டலை** - சோலை, பூந்தோட்டம், மேகம், முகில்

**தண்டி** - சண்டேசுரர், வானப்பிரத்தன்

**தண்டிகை** - பல்லாக்கு

**தண்டு** - கோல், கதை, சிவிகை, படை, தாள், விளக்குத்தண்டு

**தண்டுகை** வரி ஈட்டுகை

**தண்டுதல்** வரி பெறுகை, வருந்துதல், அணைத்தல், இணைத்தல், நீங்குதல், தணிதல், மனமமைதல்

**தண்டுலம்** - அரிசி

**தண்டேறு** - எலும்பு,என்பு

**தண்டை** - காலணி, கேடகம், வால், வெள்ளியால் செய்த குதிரைக் காலணி வகை

**தண்ணடை** மருதநிலத்தூர், காடு, நாடு, சிற்றூர், பச்சிலை, உடுக்கை வகை

**தண்ணம்** ஒருகட்பறை, மழு, குளிர்ச்சி, காடு

**தண்ணளி** - கருணை, சுருள், இரக்கம்

**தண்ணுமை** மத்தளம், முழவு, உடுக்கை, ஒருகட்புறை

**தண்பணியம்** - இழிந்த பண்டம்

**தண்பணை** - மருதநிலம்

**தண்பதம்** - புதுப்புனல், தாழ்நிலை

**தண்மை** - குளிர்ச்சி ,அமைதி, இன்பம், மென்மை

**தண(த்)தல்** - நீங்குதல், பிரிதல்

**தணக்கு** - நுணாமரம், வால்

**தணல்** - கனிந்த நெருப்பு, நெருப்பு, நிழலிடம்

**தணிக்கை** - மேற்பார்வை

**தணிதல்** - ஆறுதல், குறைதல், வற்றுதல், விளக்கு முதலியன அவிதல், தயக்கம், காலம், தாழ்தல், நிறைதல்

**தணிவு** - குறைகை ,அமைதி ,பணிவு, வணக்கம், நீர் வற்றுகை, தாழ்வு

**தத்தம்** - நீரிட்டுக்கொடுத்தல்

**தத்து** - தவறு, ஆபத்து ,மகன்மை கொளல், குதித்தல், தாவுதல், அடியால் அளத்தல், ததும்புதல், பரவுதல், ஒளி முதலியன வீசுதல், மனக்கவலை, தவறு, பிறப்பியத்தின் படி நேரும் இடுக்கண், சுனைநீர், சிறுக நீர் பாயக்குடைந்த துவாரம்

**தத்துறுதல்** - தத்தி வருதல், வருத்தப்படுதல்

**ததி** - தக்கசமயம், பலம், தயிர்

**ததியர்** - அடியார்

**ததைதல்** - நெருங்குதல், சிதைதல், நிறைதல்

**ததைந்த** - செறிந்த, மலர்ந்த

**தந்தம்** - யானைக் கொம்பு, பல், மலைமுகடு

**தந்தி** - ஆண்யானை, பாம்பு

**தந்திர உத்தி** - நுண்ணுத்தி, சூழ்ச்சி

**தந்திரம்** - உத்தி, தொழில், படை, நூல், கல்விநூல், ஆகமம்

**தந்திரி** - படைத்தலைவன், சூழ்ச்சியாளன், யாழ், குழலின் துளை

**தந்து** - கயிறு, நூல், (தந்திரம்) நுண்ணுத்தி

**தந்துகி** - நாடி நுண் குழல்கள், நாள நுண் குழாய்கள்

**தந்துரை** - பாயிரம்

**தந்துவை** - மாமியார், மாமன் மனைவி

**தந்நம்** - சந்தனம், மனம்

**தபதி** - சிற்பி, கற்கவி, கல்தச்சர்

**தப்பல்** - குற்றம்

**தப்பிதம்** - தவறு

**தப்பு** - குற்றம், பொய், பறை

**தபுத்தல்** - கெடுத்தல்

**தபுத்துதல்** - ஈரம் புலர்த்துதல்

**தபுதல்** - கெடுதல், இறத்தல்

**தபுதாரநிலை** - தாரமிழந்து துயருறல்

**தபுதி** - அழிவு

**தம்பட்டம்** - ஒருபறை

**தம்பதி** - கணவன், மனைவி, இணையர்

**தம்பம்** - தூண், கட்டுத்தறி, பற்றுக்கோடு, கவசம்

**தம்பலம்** - வெற்றிலை பாக்கு, தாம்பூல எச்சில்

**தம்பனம்** - இயக்கத்தடை

**தம்பித்தல்** - அசையாதிருத்தல்

**தம்பிரான்** - துறவியர் தலைவன், கடவுள்

**தம்மனை** - தாய்

**தம்மான்** - தலைவன்

**தம்முன்** - அண்ணன்

**தம்மோய்** - தாய்

**தமகன்** - கொல்லன்

**தமசு** - தவழ்கரடி என்னும் ஒருவகை விலங்கு

**தமத்தல்** - தணிதல், மலிதல், நிரம்புதல்

**தமம்** - இருள், சேறு

**தமர்** - பரிசனம், சுற்றம், துளை, அடியார்

**தமரகம்** - மூச்சுக்குழல்

**தமரம்** - ஒலி

**தமருகம்** - உடுக்கை

**தமனகம்** - மருக்கொழுந்து

**தமனியம்** - பொன்

**தமாலம்** - பச்சிலை மரம், பச்சிலைக் கொடி

**தமி** - தனிமை, ஒப்பின்மை

**தமி-த்தல்** - தனியாதல்

**தமியன்** - தனித்திருப்பவன், துணையிலி

**தமிழ்** - உலக முதன்மொழி செம்மொழி, இனிமை,தேவாரம், நீர்மை, இயல், இசை, நாடகத்தமிழ், ஒப்பிலி, தமிழ்நூல், தமிழர், தமிழ்நாடு

**தமிழ் நதி** - வைகை ஆறு

**தமிழ் மலை** - பொதிய மலை

**தமிழகம்** - தமிழ்நாடு

**தமிழ்மறை** - திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள்

**தமிழன்** - தமிழைத்தாய் மொழியாகக் கொண்ட தமிழினத்தான்

**தமிழி** - தமிழ்மொழியின் தொன் முதுவரி வடிவம்

**தமிழியல்** - தமிழ்மொழி மக்கள், பண்பாடு, வரலாறு பற்றிய ஆய்வு

**தமுக்கு** - செய்தி அறிவிக்க முழக்கும் ஒருவகைப்பறை

**தமையன்** - அண்ணன், தனக்கு முன் பிறந்தவன், அண்ணன் முறையன்

**தமோகுணம்** - காமம், வெகுளி, மயக்கக்குணம்

**தயக்கம்** - ஒளிவிடுகை, தோற்றம், கலக்கம், தெளிவு ,அசைவு ,அச்சம்

**தயங்குதல்** - ஒளிவிடுதல், திகைத்தல், வாடுதல், அசைதல்

**தரக்கு** - புலி

**தரகு** - விலை இலாபம்

**தரங்கம்** - அலை, கடல், மனக்கலக்கம், ஈட்டி

**தரவு** - கட்டளை, தருகை, தன் விவரம்

**தராளை** - கஞ்சி, கள்

**தராய்** - மேட்டு நிலம்

**தரிசு** - பயிரிடா நிலம், உள்ளீடு பரல்

**தரித்தல்** - இருத்தல், தாங்குதல், அணிதல், உட்கொள்ளுதல்,

**தரியலர்** - பகைவர்

**தரு** - மரம், கற்பகம், இசைப்பாட்டுவகை

**தருக்கம்** - ஏரணம், மேம்பாடு

**தருக்குதல்** - அலங்கரித்தல், களித்தல், ஊக்கமிகுதல், வருந்துதல், உடைத்தல், மேற்கொள்ளுதல்

**தருணம்** - இளமை, தக்க சமயம், பொருத்தமான நேரம்

**தருணிதம்** - வாச்சியப்பொது

**தருதல்** - அழைத்தல், கூறுதல்

**தருப்பம்** - கர்வம், செருக்கு

**தருமதாயம்** - அறக்கொடை, இறையிலி நிலம்

**தருமநாள்** - பரணிநாள்

**தருமம்** - கடமை ,நற்செயல், நீதி, அறம், கொடை, இயற்கை

**தருமவாடி** - இலவய உணவு (பிச்சை) வழங்குமிடம்

**தருவாய்** - தக்கசமயம்

**தருவியர்** - அசுர மகளிர், அரக்க மகளிர்

**தல்லம்** - நீர்க்குழி ,குண்டு

**தல்லிகை** - துறப்பு

**தல்லை** - தெய்வம், இளம்பெண்

**தலக்கம்** - இழிசெயல்

**தலசம்** - முத்து

**தலம்** - இடம், நிலம், புவி, புனித நிலம், இலை

**தலுதல்** - நீங்குதல்

**தலை** - சிறப்பு,உச்சி,முதல், முடிவு, ஆள், இடம், அசை. உடலின் மேற்பகுதி

**தலை** - பெய்து

**தலைக்கட்டு** - குடும்பம், கருமாதியிறுதி சுபச்சடங்கு

**தலைக்கடை** - முதல் வாசல்

**தலைக்கழிதல்** - பிரிதல்

**தலைக்கீடு** - போலிக் காரணம், தலைப் பாகை

**தலைக்கூடுதல்** - ஒன்று சேருதல், நிறை வேறுதல்

**தலைக்கை தருதல்** - கையால் தழுவி அன்புக் காட்டுதல்

**தலைக்கொள்ளுதல்** - தலைக் கேறுதல், மிகுதல், இறுத்தல், கிட்டுதல், கெடுத்தல்

**தலைக்கோலம்** - தலையணி

**தலைகுலைதல்** - நிலைகெடுதல்

**தலைச்சாவகன்** - முதல் மாணாக்கன்

**தலைதடுமாறுதல்** - கலங்குதல், ஒழுங்கு தவறுதல்

**தலைத்தலை** - ஒவ்வொருவரும், ஆளாளுக்கு, இடந்தோறும்

**தலைத்தாழ்வு** - அவமானம், மான மிழத்தல்

**தலைதல்** - மேன்மையாதல், மிகக் கொடுத்தல், பரத்தல்

**தலைதோய்தல்** - நீராடுதல்

**தலைநாண்மீன்** - உச்ச நாண்மீன், முதல் நாண்மீன் (அசுபதி)

**தலைநாள்** - முதல்நாள், முற்காலம்

**தலைநீராப்பெருந்தளி** - தண்ணீர்ப் பந்தல்

**தலைப்படுதல்** - ஒன்றுகூடுதல், மேற் கொள்ளுதல், தொடங்குதல்

**தலைப்பாடு** - கலந்திருக்கை, தற்செயல், நிகழ்ச்சி

**தலைப்பிரிதல்** - நீங்குதல்

**தலைப்பு** - ஆதி, தலைப்பெயர், முன்றானை

**தலைப்பெய்தல்** - கூடுதல், சேர்த்தல், கிட்டுதல், இடைச்செருகுதல்

**தலைப்பெயல்** - முதன்மழை

**தலைபோதல்** - அழிதல், முடிதல்

**தலைமக்கள்** - மேன்மக்கள்

**தலைமயங்குதல்** - பெருகுதல், கலந்திருத்தல், கெடுதல்

**தலைமாடு** - தலைப்புறம், தலைப்பக்கம்

**தலைமுறை** - பரம்பரை, மரபுவழி

**தலைமை** - முதன்மை, அதிகாரம், மேன்மை

**தலைய** - பெய்ய

**தலையடுத்தல்** - சேர்த்துக்கூறுதல்

**தலையல்** - தலைப்பெயல்

**தலையளி** - இரக்கம், அன்பு, முகமலர்ந்து இனியவை கூறல்

**தலையுலாஞ்சல்** - தலைநடுக்கம்

**தவ்வுதல்** - குவிதல், கெடுதல், தாவுதல், மிதித்தல்

**தவ்வை** - தமக்கை, தாய், மூ(த்த)தேவி

**தவ** - மிக

**தவக்கம்** - தடை ,தாமதம்

**தவசம்** - தானியம், கூலவகை

**தவண்** - தடை

**தவண்டை** - பேருடுக்கை

**தவணை** - கெடு, தடவை

**தவத்தல்** - நீங்குதல்

**தவத்து** - தானியம்

**தவதாயம்** - இடுக்கண்

**தவம்** - பற்றகன்ற வழிபாடு, புண்ணியம், பற்றற்ற வழிபாடு ,கற்பு

**தவர்** - துளை ,வில்

**தவல்** - குறைவு, கேடு, குற்றம், மரணம், வறுமையால் வருந்துதல்

**தவலி** - எருது ,ஒருவகை மீன், வெண்ணிறம்

**தவளம்** - வெண்மை, கருப்பூரம்

**தவிசு** - பீடம், மெத்தை

**தவிர்தல்** - நீங்குதல், தணிதல், தாங்குதல்

**தவுதல்** - குன்றுதல், குறைதல்

**தழங்குதல்** - முழங்குதல்

**தழல்** - நெருப்பு ,நெஞ்சு ,கவண், கிளியை ஓட்டும் பொறி(கருவி)

**தழிச்சுதல்** - தழுவுதல், புகுதல்

**தழுக்குதல்** - செழிப்புறுதல்

**தழுதழு-(த்)தல்** - குழறுதல், நாத்தடு மாறிப்பேசுதல்

**தழும்பன்** - ஈகையாளன்

**தழும்பு** - வடு ,குற்றம்

**தழும்பு-தல்** - தழும்புண்டாதல், பழகியிருத்தல்

**தழுவணி** - குறவைக்கூத்து

**தழை** - இலை, பீலிக்குடை, மயில்தோகை, மாலை, பச்சிலை

**தழை(த்)தல்** - செழித்தல், பூரித்தல், மிகுதல்

**தழை-தல்** - செழித்தல், தாழ்தல்

**தளப்பு** - கேடு

**தளம்** - கனம், களம், வெண்சாந்து, உப்பரிகை , முல்லை ,படை ,பூவிதழ்

**தளம்பு** - மதகு, சேறு, குத்தி

**தளம்புதல்** - ததும்புதல், மன முலைதல், பழக்கமுறுதல்

**தளரியல்** - பெண்

**தளவாடம்** - அரிசிக் கஞ்சியாகிய மெல்லிய வடாகம்

**தளர்ச்சி** - நெகிழ்ச்சி, களைப்பு, சோர்வு, சோம்பல், ஏழ்மை

**தளவம்** - செம்முல்லை, முல்லை

**தளவாடம்** - கருவிகள்

**தளவாய்** - படைத்தலைவன்

**தளவு** - செம்முல்லை, யானையின் வாய்

**தளி** - நீர்த்துளி, மழை, கோயில், விளக்குத்தாழி

**தளி(த்)தல்** - துளித்தல், பூசுதல், தெளித்தல், நூல்தாங்கி

**தளிகை** - உண்கலம், உணவு, பீடம், கூழ்க்கட்டி, சமையல், இறைவருக்குப் படைத்த அளவு சோறு

**தளிதல்** - தெளிதல்

**தளிர்** - முளையிலை, குருத்து

**தளிவம்** - தகடு

**தளுக்குதல்** - ஒளிர்தல், பூசுதல், துலக்குதல், சொலித்தல், மிளிர்தல்

**தளைகட்டு** - விலங்கு, பிணிப்பு, முறுக்கு, கயிறு, பாசம்

**தற்காலம்** - நிகழ்காலம்

**தற்கிழமை** - பிரியாத்தொடர்பு

**தற்குறிப்பேற்றம்** - இயல்பான ஒன்றை மறைத்து வேறு பொருளை ஏற்றிச் சொல்லுதல்

**தற்சமயம்** - குறித்தவேளை, உற்றவேளை, இப்பொழுது

**தற்சனி** - சுட்டுவிரல்

**தற்செய்தல்** - தானே இயலுதல், தன்னைப் பெருக்குதல்

**தற்செயல்** - எதிர்பாராத செயல்

**தற்செல்வம்** - வலி

**தற்பகன்** - மன்மதன்

**தற்பயம்** - கருவம், பாவம், துயிலிடம், மேநிலை, மனைவி

**தற்பரம்** - மேம்பட்டது

**தற்பாடி** - வானம்பாடி

**தற்பாலம்** - வெள்ளாம்பல்

**தற்றுதல்** - இறுகவுடுத்தல்

**தறி** - நடுதறி, பூண், முளைக்கோல், பறைக்கு நற்தடி, கட்டை,நெசவு, இயந்திரம்

**தறிகை** - கோடரி

**தறித்தல்** - வெட்டுதல், கட்டவிழ்த்தல்

**தறிதல்** - அறுபடுதல்

**தறிதலை** - அடங்காதவன்

**தறுகண்** - அஞ்சுவதஞ்சாமை, கொல்லுகை, கொடுமை

**தறுதல்** - இறுக உடுத்தல், கட்டுதல்

**தறுவதல்** - குறைதல்

**தறுவாய்** - உற்ற சமயம், பருவம்

**தறைதல்** - இறுக்குதல், தட்டையாதல், ஆணி அடித்தல்

**தனகு** - உள்ளக்களிப்பு

**தன்மாத்திரை** - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து மூலப் பொருள்கள்

**தன்மானம்** - தன்மதிப்பு

**தனயன்** - மகன்

**தன்வினை** - தனது செயல், ஊழ்

**தன்வேதனை** - தற்பட்டறிவு, ஆச்சாமரம், மனவலி

**தன்னம்** - சிறுமை, மரக்கன்று, ஆவின் கன்று, மான் கன்று

**தன்னுதல்** - சிறிது சிறிதாக எடுத்தல், மெல்லத்தள்ளுதல், பொருந்துதல்

**தன்னை** - தமயன், தமக்கை

**தனிசு** - கடன்

**தனிதம்** - முழக்கம்

**தனிமம்** - படுக்கை, மெத்தை, வாள், அழகு, ஒரு தன்மைகொண்ட அணுக்களான பொருள்

**தனு** - உடல், வில்

**தா** - வலிமை,வருத்தம், கேடு, பாய்கை, பகை, குற்றம், குறை, கொடு, படைத்தல், அறிவுறுத்தல், பரிமாறுதல், அடைவித்தல்,

மகவுப்பெறுதல், நூல் முதலியன இயற்றுதல் பொருளீட்டல், சம்பாதித்தல், அழைத்தல், மரம் முதலியன பயன்கொடுத்தல், ஒருதுணை வினை

**தாக்கடைப்பன்** - மாட்டு நோய்வகை

**தாக்கணங்கு** - காமநோய் தருந்தெய்வம், இலக்குமி

**தாக்கு** - மிகுபாரம், போர், அடி, குறுந்தாடி, இடம், எதிர்ப்படுகை

**தாங்கல்** - தாங்குகை, துன்பம், மனக்குறை , சகிப்பு ,நீர்நிலை, நிலம், காலத்தாழ்ச்சி

**தாங்குதல்** - தடுத்தல், பொறுத்தல், விலக்கிச்செல்லுதல்

**தாட்டி** தடவை, திறமை, உறுதி, தடையின்மை, பெருமிதம், முகவரி, கெட்டிக்காரி, ஆண் தன்மையள், வைப்பாட்டி

**தாட்படை** கோழி

**தாடம்** - அடிக்கை

**தாடாளன்** - முயற்சியுள்ளோன்

**தாடி** முகத்தின் தாழ்பகுதி, முகவாயில் வளரும் முடி, ஆ முதலிய வற்றின் அலைதாடி, சேவற்கழுத்தில் தொங்கும் சதை

**தாடித்தல்** - அடித்தல், கொட்டுதல்

**தாடு** - வலிமை, தலைமை

**தாண்டவம்** - கூத்துவகை, ஆடல் வகை

**தாண்டுதல்** குதித்தாடுதல், செருக்கனாதல், மிதமிஞ்சிப்பேசுதல், கடத்தல், செலுத்துதல், மேற்படுதல்

**தாணித்தல்** - பதித்தல், உறுதிப் படுத்துதல், கெட்டிப்படுத்தல், விரைவில் கடைதல், திறமையாய் பொய் குற்றமேற்றுதல், இழை யோட்டுதல்

**தாணு** - நிலைபேறு, தாவரம், தூண், மலை

**தாத்துதல்** கொழித்தல், செலவழித்தல், ஒளித்து வைத்தல், இழிந்ததை உயர்ந்ததற்கு மாற்றுதல்

**தாதகி** - ஆத்தி

**தாதா** -தந்தை,பெருங்கொடையாளன், பெருஈகையர், நான்முகன், தலைவன், கூலிப்படைத் தலைவன்

**தாது** - இயற்கைக் கனிமப்பொருள், நாடி, சுக்கிலம், பூந்தாது, தேன்பகுதி, சாணம், நீறு ,அடிமை

**தாது உண் பறவை** - வண்டு

**தாதெருமன்றம்** - எருக்கள் நிறைந்த மரத்தடியரங்கம்

**தாதை** - தந்தை ,பாட்டன், பிரமன், நான்முகன், அயன்

**தாபம்** - வெப்பம், தாகம், துன்பம், காடு

**தாமணி** - தாம்பக்கயிறு, மாட்டுத்தும்பு, வடம், மாடு கன்றுகளின் கழுத்தில் கட்டியிருக்கும் தும்பு, கயிறு, கப்பற் பாயின் பின் பக்கத்துக் கயிறு

**தாமரை** கொடி வகை, நீர்ப்பூ, தாமரை

இதழ்களை ஒப்ப நிறுத்தப்பட்ட காலாட்படை, அமைப்பு, ஒரு பேரெண்

**தாமளை** - புன்னை

**தாய்** - அன்னை, அம்மா, தாயார், ஈன்றாள்

**தாயகம்** - அடைக்கலம், பிறப்பிடம்

**தாயம்** - உரிமைப்பங்கு, தந்தை வழிச்சுற்றம், பெண்டீர் விளையாட்டுவகை

**தார்** - மாலை, பூ, கிளிக்கழுத்துக் கோடு, கொடிப்படை, கயிறு, ஒழுங்கு, பிடரிமயிர், ஒரு தோற்கருவி, உபாயம், குலை

**தாரம்** - எடுத்தலோசை, நா, வெள்ளி , பார்வை, முத்து ,மனைவி

**தாரா** - ஒரு புள், அன்னம்

**தாராவணி** - காற்று

**தாராளம்** - உதாரம், விசாலம், நிறைவு. உதவுதல்

**தாரி** - வழி, முறைமை, தரிப்பவன், வண்டொலி, உதவுதல்

**தால்** - தாலாட்டு

**தாலம்** - பனை, கூந்தற்பனை, மடன்மா, உலகம், தேன், உண்கலம், யானைக்காது

**தாலவடம்** - விசிறி

**தாலு** - குலை, கைவரை, முட்கோல், அங்குசம், வரையில்

**தாவடம்** - உருத்திராக்கமாலை, கழுத்தணி

**தாவடி** செலவு (பயணம்), போர்

**தாவணி** - தாமணிக்கயிறு, சிறுமிகளின் மேலாடை

**தாவளம்** - தங்குமிடம், மருதநிலத்தூர்

**தாவு** - பாய்கை, செலவு, எதிர்ப்பு, வலிமை ,கேடு

**தாழ்** - தாழ்க்கோல்

**தாழ்க்கோல்** - தாழ்ப்பாள்

**தாழ்-தல்** - சாய்தல், நிலைகெடுதல், ஈடுபடுதல், வணங்குதல், விரும்புதல்

**தாழ்மை** - கீழ்மை, பணிவு, வறுமை

**தாழ்வடம்** - கழுத்தணி, அக்கமாலை

**தாழி** - பரணிநாள், கடல், சட்டி, பெரும் பாண்டம்

**தாழை** - தென்னை, தெங்கம்பாளை, தாழைமரம்

**தாள்** - கால், முயற்சி, படி, கயிறு, காகிதம், தாள், வைக்கோல், கடையாணி, தாழ்ப்பாள், திறவுகோல்

**தாளாண்மை** - விடாமுயற்சி

**தாளி** - தாளிப்பனைமரம், ஒருவகைக் கொடி, தகளி

**தாற்றுதல்** - கொழித்தல், தரித்தல்

**தாறுமாறு** - எதிரிடை, அதிக்கிரமம்

**தானம்** - இடம், இசைச்சுரம், பெருங் கொடை, யானைமதம், பெரும்நல்கை

**தான்றி** - எல்லை, ஒருவகை மரம்

**தானை** - சேனை, மேலாடை

**திக்கு** - தெற்றுப்பேச்சு, திசை, சமயம், புகலிடம்

**திக்கு-தல்** - சொற்குழறுதல், தெற்றியுச் சரித்தல்

**திக்குமுக்கு** - மூச்சுத்திணறல்

**திக்குத்திக்கெனல்** - அச்சத்தால் நெஞ்சடித்தல் குறிப்பு, தாளக்குறிப்பு எதிர்பார்பில் நெஞ்சடித்தற் குறிப்பு

**திகிரி** - உருளை, வட்டவடிவம் (தண்டச்சக்கரம்), சக்கரப் படை, அரசாணை, சூரியன், சிறு மூங்கில், தேர்

**திகிரியான்** - சக்கரக் கருவி கொண்ட திருமால்

**திகுதிகெனல்** - தீப்பற்றி எரியும் குறிப்பு, புண்ணெரிச்சற் குறிப்பு, சினக்குறிப்பு, அச்சக்குறிப்பு, பசியுணர்வு எரிச்சல், விரைவுக் குறிப்பு

**திகழ்தல்** - விளங்குதல், ஒளிசெய்தல், சிறப்புமிகுதல், உள்ளடக்கிக் கொள்ளுதல்

**திகை(த்)தல்** - மயங்குதல், அடங்குதல், சோர்தல்

**திங்கள்** - சந்திரன், மதி, மாதம்

**திசைச்சொல்** - தமிழில் வழங்கும் வேற்றுத்திசைச் சொற்கள்

**திசைமுகன்** - நான்முகன், பிரம்மன், படைப்புத் தெய்வம்

**திட்டம்** - ஏற்பாடு, செவ்வை, கட்டளை, மதிப்பு

**திட்டவட்டம்** - ஒழுங்கு, செவ்வை

**திட்டாணி** - மரத்தைச் சுற்றியுள்ள மேடை

**திட்டிவாசல்** - பெருங்கதவிலுள்ள சிறு நுழைவாயில்

**திட்டு** - மேடு, வசை

**திட்டு-தல்** - மனங்குலைதல், ஏசுதல்

**திட்டை** - திண்ணை, திட்டு

**திட்பம்** - மனவுறுதி

**திடம்** - வலிமை, கலங்காநிலை

**திடர்** - திட்டு, தீவு

**திடல்** - வெளியிடம்

**திடுகூறு** - விரைவு

**திடுப்பு** - திசைமாற்று, புரட்டு, திருகு, மீட்டெழு

**திடுமலி** - திண்டையன், திண்மை யுள்ளவன்

**திண்** - வல்லமை

**திண்டாட்டம்** - மனக்கலக்கம், அலைக்கழிவு

**திண்டி** - பருமன், யானை, தம்பட்டம்

**திண்டிமம்** - ஒரு பறை

**திண்முண்டு** - எதிரிடைப் பேச்சு

**திண்ணம்** - உறுதி, வலிமை, இறுக்கம்

**திண்மை** - வலிமை, கலங்காநிலை

**திணர்** - செறிவு

**திணர்த்தல்** - நெருக்கமாதல்

**திணர்தல்** - சோர்தல்

**திணறுதல்** - மூச்சுத்தடுமாறுதல், மூச்சு விடவியாலமை, மூச்சுமுட்டுதல்

**திணி** - திட்பம், செறிவு

**திணிகம்** - போர்

**திணிதல்** - செறிதல்

**திணை** - இடம், வீடு, குலம், ஒழுக்கம், நிலம்

**தித்தி** - துருத்தி, ஓர் இசைக்கருவி, தேமல், இன்பம்

**தித்திமுனை** - தித்திப்புப் பனங்கட்டி

**தித்தியம்** - வேள்விக்குண்டம்

**திதலை** - தேமல், வெண்மைநிறம், பொன் பிதிர்வு

**திதைதல்** - பரவுதல்

**திமிசு** - வேங்கை மரம், நிலத்தைச் சிறுகச் செய்துச மனப்படுத்தும் கட்டை, மண்மட்டப்படுத்துங்கட்டை

**திமிதம்** - பேரொலி, குதித்தாடுதல், ஈரம்

**திமிர்த்தல்** - தடவுதல், அடித்தல், மரத்துப்போதல்

**திமிர்தல்** - பூசுதல், வாரியிறைத்தல், வளர்தல், அசைதல், பிடியிலிருந்து மீளுதல்

**திமில்** - மீன்படகு, எருத்தின் முதுகுப்பகுதி ,முறிப்பு, வேங்கைமரம்

**திமிலை** - பம்பை மேளம், ஒருவகை பறை

**தியானம்** - இடையற்ற மன ஒருமைப் பாடு, இடைவிடா மன அமைதிச் சிந்தனை

**தியானி** - மனத்தை ஒருமுகப்படுத்துதல்

**திரகுதாளம்** - ஏமாற்றுதல், தில்லு முல்லு, தகடுதித்தம்

**திரங்குதல்** - சுருங்குதல், உலர்தல், சுருளுதல், தளர்தல்

**திரட்டு** - சேகரித்தல், பொருளை பல இடங்களிலிருந்து பெற்று ஓரிடத்தில் சேர்த்தல், கூட்டுதல், ஒன்றுபடச் செய்தல், சேர்த்து உருட்டுதல், பா, கட்டுரைகள் முதலியவற்றின் தொகுப்பு

**திரட்டுப்பால்** - பாலைச் சுண்டக்காய்ச்சி சருக்கரை சேர்த்துச் செய்யப்படும் தின்பண்டம்

**திரட்டுப்புரட்டு** - களவும் முறைகேடும்

**திரண்ட** -மொத்த,பெருமளவிலான, திரட்டப்பட்ட ,ஒன்றாகச் சேர்க்கப்பட்ட

**திரவமானி** - திரவ அடர்த்தி காணும் கருவி, சாதனம்

**திரள்** - ஓரிடத்தில் பெருமளவில் கூடுதல், கண்ணீர், வெண்ணை முதலியன சிறுகச்சிறுகச் சேர்ந்து ஒன்றாதல்,தசைப்புடைப்பு,தசை வலிமை ,பெண் பருவம் எய்துதல்

**திரளி** - செதில் கொண்ட உண்ணக் கூடிய வெளிர் சிவப்புக் கடல் மீன்

**திராட்டில்விடு** - நடுவில் கைவிடுதல்

**திராணி** - ஆற்றல், வலிமை

**திரி**[1] - அலைதல், பால்பதம் கெடுதல், மாறுதல், ஒரு மெய்யெழுத்து மற்றொரு மெய்யாக மாறுதல், தற்பெருமை சொல்லித்திரிதல்

**திரி**[2] - நார், பஞ்சு முதலியவற்றைக் கயிறாக முறுக்குதல், உண்மை யினை மாற்றிக் கூறுதல்,

அரைத்தல், விளக்கு எரியப் பயன்படும் திரிக்கப்பட்டநூல், வேதிப் பூச்சு கொண்ட வெடி இழை

**திரிகல்** - எந்திரம்

**திரிகை** - எந்திரம்

**திரிகோணமிதி** - முக்கோணப் பக்கங் களைப் அடிப்படையாகக் கொண்டப் பிரிவு

**திரிசங்கு நிலை** - இரண்டும் கெட்ட நிலை, மன்னன், தொன்ம நிலை

**திரிசமன்** - கையாடல், வன்கவர்தல், ஊழல் செய்தல்

**திரிதிரியாக** - எளிதாக முறுக்கப்பட்ட துண்டுதுண்டான இழைபோல்

**திரிபு** - வேற்றுவடிவம், மாற்று வடிவம், மாறிய அடையாளம்

**திரு** - செல்வம், இறைவனோடு தொடர் புடையது, மங்கலச் சொற்களுக்கு இடப்படும் முன்னடை, மதிப்பு தரும் முறையில் பெயருக்கு முன் இடப்படும் அடைச்சொல்

**திருக்கல்யாணம்** - தெய்வத்திருமணம், தெய்வங்களின் திருமண விழா

**திருக்காணி** - திருகி உள்ளே செலுத்தும் இணைப்பு உறுதி ஆணி

**திருக்காப்பு** - கோயில்கதவு

**திருக்குட நன்னீராட்டு விழா** - குட முழுக்கு

**திருக்கை** - நீண்ட கூரிய வால், தட்டை அகலமான உடல் கொண்ட கடல் மீன்

**திருக்கோயில்** - இறைவன் உறையும் வழிபாட்டிடம்

**திருகணை** - பனை ஈர்க்கிப் பின்னிய பிரிமணை

**திருகு** - திருப்புதல், முறுக்குதல், திருகாணி, மரை

**திருட்டு** - களவு, கரவுச்செயல்

**திருட்டுத்தனம்** - கள்ளச் செய்கை

**திருடன்** - கள்வன், ஏமாற்றுக்காரன்

**திருடி** - பிறர் பொருளைக் கவரும் பெண், திருடன் பெண்பால் பெயர்

**திருடு** - களவாடுதல்

**திருத்தம்** - பிழைநீக்கம், மாற்றம், குணம், தெளிவு, ஒழுங்கு, அழகு

**திருத்தல்** - சீரமைப்பு, மாற்றம்

**திருத்து** - பிழைநீக்கு, செம்மையாக்கு, மெய்ப்புப் பார்

**திருத்துழாய்** - துளசி

**திருதம்** - தாளத்தில் ஓர் அங்கம்

**திருதிரு** - அச்சம், குழப்பம், திகைப்பு இவற்றை வெளிப்படுத்தும் பார்வை

**திருந்து** - ஒழுங்காக மாறு

**திருநாள்** - சமயச்சிறப்பு நாள், விழா நாள்

**திருநீற்றுப்பச்சை** - துளசி இனத்தைச் சார்ந்த மூலிகைச் செடி

**திருநீறு** - சிவனியர் நெற்றியிலும் உடலிலும் பூசிக்கொள்ளும் சாம்பற் பொடி

**திருப்பணி** - கோயில் கட்டுதல் புதுப்பித்தல் போன்ற பணி

**திருப்பப்படி** - உயிர்பிரியும் நிலையில் உள்ளவரின் அருகேஅமர்ந்து திருமுறை களைப் படித்தல்

**திருப்பம்** - மாற்றம், வளைவு, சாலை திரும்புமிடம்

**திருப்பள்ளியெழுச்சி** - இறைவனைத் துயிலெழுப்பப் பாடப்படும் பக்திப் பாடல்

**திருப்புமுனை** - குறிப்பிடத்தக்க மாற்றம் நிகழ்தல்

**திருப்புளி** - திருகு ஆணியை செலுத்தும் பட்டை முனையும் கைப்பிடியும் கொண்ட கருவி

**திருமகள்** - செல்வத்திற்கான தெய்வம்

**திருமஞ்சனம்** - தெய்வப் படிமைகளை நீராட்டுதல்

**திருமணம்** - ஆணும் பெண்ணும் முறையாக இல்லறம் தொடங்க நிகழும் விழா, கணவன் மனைவியாக வாழும் குமுகாயச் சடங்கு ஏற்பாடு

**திருமதி** - திருமணமான பெண்ணின் பெயர் முன் இடப்படும் மதிப்புரு அடைச்சொல்

**திரும்ப** - நிகழ்ந்ததே மீண்டும் நிகழ்தல்

**திரும்பத்திரும்ப** - மீண்டும் மீண்டும், இரட்டைக்கிளவி

**திரும்பிப்பார்** - கடந்த காலத்தைக் காண்க (அ) கருதுக

**திரும்பு** - பழைய நிலைக்கு வருதல், திசை மாறுபாடு

**திருமால்** - காத்தற் தொழிற்கடவுள்

**திருமுறை** - நாயன்மார்களும், அடியார்களும் சிவன் மீது பாடிய 12 பிரிவுகளைக் கொண்ட பாமாலைகள்

**திருமேனி** - கடவுளர் சிலை, தெய்வப் படிமம்

**திருவலகு** - தேங்காய்த்துருவி

**திருவாசிகை** - திருவாட்சி

**திருவாட்சி** - கடவுள் சிலைக்குப் பின் பீடத்தில் அமைக்கப்பட்ட வேலைப் பாடுகள் கொண்ட அரைவட்ட அழகு மாழை வளைவு

**திருவாதிரை** - இருபத்தேழு நாண் மீன்களுள் ஆறாவது நாண்மீன்

**திருவாபரணம்** - இறைப்படிமத்திற்கு சாத்தும் அணிமணிகள்

**திருவாய் மலர்தல்** - அருளாளர், முனிவர், நல்லுரை, குறைவாகப் பேசுதல்

**திருவாலாய்** - மதுரை

**திருவாழத்தான்** - எந்த வேலையையும் முறையாகச் செய்யாமல் கெடுப்பவன்

**திருவாளர்** - ஓர் ஆணின் பெயருக்கு முன்னால் இடப்படும் மதிப்புரு அடைச்சொல்

**திருவாளர்கள்** - திருவாளர் என்பதன் பன்மை வடிவம்

**திருவிருந்து** - இறுதி இரவு உணவைத் திருப்பலியில் நினைவுக் கூர்ந்து இயேசுவின் தசையையும் அரத்தத்தையும் அடையாளப் படுத்தும் வகையில் நல்லருள் வழங்கும் சடங்கு

**திருவிழா** - திருக்கோயில் உற்சவம், பண்டிகை

**திருவிளையாடல்** - சிவன் மண்ணுலகில் நடத்திய புதுமை நிகழ்வுகள், சேட்டைகள்

**திருவுருவம்** - வழிபாட்டிற்குரிய இறைவுரு

**திருவுளச்சீட்டு** - ஒரு முடிவெடுக்க சீட்டெழுதிப் போட்டு தெய்வ விருப்பம் இஃது என எடுக்கும் சீட்டு

**திருவெளிப்பாடு** - இறைவன் தன்னையே வெளிப்படுத்தும் இறுதிநூல்

**திருவோடு** - துறவியின் உண்கலமாகப் பயன்படுத்தப்படும் ஒருவகைக் காயின் காய்ந்த ஓடு

**திருவோணம்** - இருபத்தேழில் இருபத்திரண்டாம் நாண்மீன்

**திரை** - சாளரம் கதவுகளிடையே தொங்கும் மறைப்புத் துணி, திரைப்படம் தெரியும் துணி

**திரைக்கதை** - திரைப்படக்கதை

**திரைச்சீலை** - கதவு காலதர் முதலியவற்றில் தொங்கும் திரை, ஓவியம் வரையும் துணி

**திரைப்படம்** - திரையில் ஒளியாகத் தெரியும் காட்சி**திரை மறைவு** - மறைமுகச் செயல்பாடு, கமுக்க நிகழ்வு

**திரையரங்கு** - திரையரங்கம், திரையில் படம் பார்க்கும் அரங்கம்

**தில்லானா** - சொற்கட்டுகள் மிகுந்த நாட்டியத்திற்குரிய இசைப்பாடல்கள்

**தில்லை** - சிதம்பரம், ஒருவகைமரம்

**திலகம்** - நெற்றியில் இடப்படும் பொட்டு, திறமையைச் சிறப்பிக்கும் பட்டம்

**திவலை** - துளி

**திளை(த்)தல்** - நலம் நுகர்தல், உழலுதல்

**திற-த்தல்** - வழி கிடைக்க நகர்த்தும் தடுப்பு (அ)அடைப்பு, சாத்திய நிலையில் இருந்து விடுவித்தல்

**திறந்த** - மூடப்படாத, சாத்தப்படாத

**திறந்த சந்தை** - அரசு சார்பிலா வணிக வளாகம்

**திறந்த மடல்** - கமுக்கமின்றி வெளியிடப்படும் அறிக்கை

**திறந்த வெளிச்சுரங்கம்** -குடையாமல் தோண்டும் சுரங்கம்

**திறந்த வெளிப்பல்கலைக்கழகம்** - முழுநேர உயர்கல்வி நிறுவனங்களின் சேர்ந்து படிக்கத் தகுதியாக்கும் அகவை அளவு தளர்த்தப்பட்ட கல்வி நிறுவனம்

**திறந்த வெளிப்பள்ளி** - இல்லத்தி லிருந்து கற்க வழி செய்யும் கல்வி முறை

**திறந்தமனம்** - விருப்புவெறுப்பில்லாப் பரந்த மனம்

**திறந்தவெளி** - வெட்டவெளி

**திறப்பு விழா** - தொடக்க விழா

**திறம்** - ஆற்றல், தரம்

**திறம்பட** - சிறப்பாக

**திறமை** - செயல்திறன்

**திறவுகோல்** - சாவி

**திறனளவு** - இயலும் உயர் அளவு

**திறனறிதேர்வு** - தகுதிகாண் நேர்முகத் தேர்வு

**திறனாய்வாளர்** - திறனாய்வு செய்பவர்

**திறனாய்வு** - மதிப்பீடு

**திறை** - வரி, கப்பம்

**திறை சேரி** - அரசுக்கருவூலம்

**தினக்கூலி** - அன்றன்றைக்கு ஊதியம் பெறும் பணியாள்

**தின்பண்டம்** - நொறுக்குத்தீனி

**தினவு** - அரிப்பு, நமைச்சல், பெரும் உந்துதல், திமிர்

**தின்-னுதல்** - உண்ணுதல், உட்கொள்ளுதல்

**தினை** ஒருவகை சிறு தவசம்

**தீ** - நெருப்பு, கொடிய, தீய, வெப்பத்தையும் ஒளியையும் தரும் ஐம்பூதங்களுள் ஒன்று

**தீ மிதி-த்தல்** - ஆடி வெள்ளியில் அம்மன் கோயில் விழாவில் பூக்குழியில் நடத்தல், நெருப்புக் குழியில் நடத்தல்

**தீக்காயம்** - நெருப்பால் விளைந்த புண்

**தீக்குச்சி** - நெருப்பு பற்ற வைக்கும் ஒரு வேதிப்பூச்சு முனையில் கொண்ட ஒரு சிறிய மெல்லிய குச்சி

**தீக்குழி** - தீ மிதிக்கும் தலை குழி

**தீக்குளி(த்தல்)** - நெருப்பாடல், தன்னையே எரித்துக் கொள்ளுதல்

**தீக்கோழி** - நெருப்புக்கோழி, ஒருவகைப் பறவை

**தீங்கு** - பொல்லாங்கு, கேடு, தீமை

**தீச்சட்டி** - கொள்ளிச் சட்டி, அம்மன் கோயில் வேண்டுதலுக்கு எடுக்கும் நெருப்புச் சட்டி

**தீசல்** - ஏனத்தின் அடியில் பிடித்துள்ள குழம்பு போன்றவற்றின் கரிந்த பிடிப்பு

**தீட்டு(தல்)**- கூராக்குதல், அரிசி போன்றவற்றை வெண்மையாக்குதல், கண்ணுக்குமையிடல், துலக்குதல், தேய்த்தல், வரைதல், எழுதுதல், தண்டனை அளித்தல், மிகைக்கட்டணம் தண்டல், தூய்மைக்குறைவு, மாத விலக்கு, துக்க நாள்

**தீண்டாமை** - குல(சாதி)யடிப்படையில் தொடாமல் சேய்மைப்படுத்திச் சிறுமை செய்தல், தொடாமை

**தீண்டு-தல்** - தொடுதல், கடித்தல்

**தீது** - நன்றன்று

**தீ நாக்கு** - கரு நாக்கு

**தீபகற்பம்** - மூன்றுபக்கம் கடலாலும், ஒரு பக்கம் நிலத்தாலும் சூழ்ந்துள்ள நிலப்பரப்பு

**தீப்பந்தம்** - தீவர்த்தி, தீவட்டி

**தீப்பள்ளயம்** - தீமிதித்திருவிழா

**தீப்புண்** - நெருப்புக்காயம்

**தீப்பெட்டி** - நெருப்புக் குச்சி உள்ள கையடக்கப்பெட்டி

**தீம்** - இனிய, இனிமையான, (எ.கா) தீங்கனி ,தீஞ்சுவை

**தீமை** - கேடு

**தீயஆவி** - இன்னல் தரும் கொடும் ஆவி , சாத்தான்

**தீயணைப்பான்** - தீயணைக்கும் வேதிக் கருவி

**தீய்தல்** - கருகுதல், கருக்குதல்

**தீயது** -கெட்டது, கேடு விளைவிப்பது

**தீர்** - துணைவினை

**தீர்க்கரேகை** - புவியின் வடமுனை யிலிருந்து தென்முனை வரையுள்ள கற்பனைக் கோடு

**தீர்-தல்** - இல்லாமறபோதல், முடிவிற்கு வருதல், முடிதல், நோய்குணமாதல், நிறைவடைதல், தெளிவாதல்

**தீர்ப்பளி** - நயன்மை கூறல், வழக்கு முடிவு கூறல்

**தீர்ப்பாயம்** - நீதி நிர்வாக அமைப்பு

**தீர்ப்புரை** - ஒருவரின் வழக்கு முடிவு உரை

**தீர்மானம்** - கருத்து முடிவு, திட்ட உறுதி ,கோர்வை

**தீர்மானித்தல்** - முடிவு செய்தல்

**தீர்வு** - முடிவு, விடை

**தீர்வை** - வரி, சுங்க வரி

**தீர** - முற்றிலும்

**தீவட்டி** - தீப்பந்தம்

**தீவட்டிக் கொள்ளை** - தீவட்டி வெளிச்சத்தில் அடிக்கும்கொள்ளை, முறையற்ற கூடுதல் கட்டணம் பெறுதல்

**தீவட்டித்தடியன்** - உடல் பெருத்த பயனற்ற இளைஞன்

**தீவினை** - கொடுஞ்செயலின் விளைவு

**தீவு** - சுற்றிலும் கடல் சூழ்ந்த நிலம்

**தீற்று** - தீட்டுதல், பூசுதல்

**தீனம்** - நோயின் வலியால் வெளிப் படுத்தும் குரல், வலியின் குரல்

**தீனி** - விலங்கு, பறவை முதலிய வற்றிற்குப் போடும் உணவு

**தீனி எடுத்தல்** - உணவு உண்ணுதல்

**தீனி போடுதல்** - உணவிடுதல், விரும்பத்தாக உணர்வு நிலைக்கு ஊக்கமளித்தல்

**துக்கப்படுதல்** - வருந்துதல்

**துக்கம்** - துயரஉணர்வு, துன்பம்

**துக்கம்காணுதல்** - துக்கம் பேணல்

**துக்கம்கேள்** - துக்கம் உசாவல்

**துக்காி** - மங்கலமில்லாத தன்மை, கெடுதல், நல்லூழின்மை, தீமை விளைவதற்குக் காரணமாகக் கருதப்படும் ஆள்

**துகள்** - மீ சிறிய பாகம், மிகச்சிறிய பகுதி

**துகில்** - மெல்லிய ஆடை

**துகையல்** - துவையல்

**துஞ்சு** - கண்துஞ்சுதல்

**துடக்கு** - தீட்டு

**துடி-த்தல்** - நடுக்கத்துடன் துள்ளி அசைதல், நடுங்குதல், இயங்குதல், பரபரப்புடன் இருத்தல், தவித்தல், துன்புறுதல்

**துடிதுடி-த்தல்** - தவித்தல் பொருள் தரும் இரட்டித்த வடிவம்

**துடிதுடிப்பு** - ஆர்வம், சுறுசுறுப்பு

**துடியாக** - துடிப்பாக

**துடுக்குத்தனம்** - பிறரை மதியாத பேச்சு, செயல்

**துடுப்பு** - படகு ஓட்டப் பயன்படும் நீண்ட மரக்கோல்

**துடுப்புபோடுதல்** - படகைச் செலுத்துதல்

**துடை-த்தல்** - ஈரம், அழுக்கு இவற்றைத் தேய்த்து அகற்றுதல், மறையச் செய்தல், இன்னல் போக்குதல், காலிசெய்தல், தீர்த்தல், தொடை

**துடைப்பக்கட்டை** - விளக்கமாறு, துடைப்பத்தைக் கையால் பிடிக்கும் பகுதி

**துண்டம்** - காய், கறி, களி, இறைச்சித் துண்டு, பறவைமூக்கு, சிறுதுணி, பிரிவு, ஆயுதவலகு, சிறுவாய்க்கால், சிறியவயற்பகுதி, மீன் துண்டம், மூக்கு கவசம், யானைத் தும்பிக்கை, சாரைப்பாம்பு

**துண்டறிக்கை** - துண்டுச்செய்தி, துண்டுத்தாள்

**துண்டாதல்** - பிரித்தல், பிளத்தல், பகுத்தல், சிதறடித்தல்

**துண்டித்தல்** - தொடர்பறுத்தல், உறவு முறித்தல்

**துண்டு** - சிறு பகுதி, சிறிதளவு, துடைக்க, உடல் துவட்டப் பயன்படும் துண்டு, துணி, ஆடை வகையில் ஒன்று

**துண்டுப்பத்திரம்** - துண்டுச் செய்தித்தாள்

**துண்டுபோடுதல்** - சிறுசிறு துண்டுகளாக்குதல், துண்டாதல்

**துண்டுவிழு-தல்** - பற்றாக்குறை ஏற்படுதல்

**துணங்கை** - ஒருவகைக் கூத்து

**துணதம்** - அசைவு

**துணர்** - பூங்கொத்து, பழக்குலை

**துணி** - நெய்த ஆடை

**துணிகரம்** - துணிவான அரிய செயல்

**துணிச்சல்** - அஞ்சாத இயல்பு

**துணித்தல்** - வெட்டுதல், கிழித்தல்

**துணிபு** - அறுதியான முடிவு, உறுதியான கொள்கை

**துணிமணி** - ஆடை அணிகலன்கள்

**துணியல்** - துண்டு

**துணுக்கம்** - அச்சம், நடுக்கம்

**துணை** - உதவி ,ஆதரவு, இரட்டை, ஒப்பு , அளவு, வரை

**துணையல்** - பூமாலை

**துத்தரி** - ஊது கொம்புவகை

**துத்தி** - ஒத்துக்கருவி, பாம்பின் படப்பொறி, யானைப்புகர், தேமல், செடிவகை

**துதிக்கை** - தும்பிக்கை

**துதைதல்** - செறிதல், மிகுதல், படிதல்

**துப்பு** - வலிமை, அறிவு, பெருமை, நன்மை,தூய்மை,பகை,பவழம், கருவி,நெய், உணவு ,பற்றுக்கோடு, தன்மை , நுகர்ச்சி ,உளவு

**துப்புரவு** - சமர்த்து, பட்டறிவு, தூய்மை, நுகர்ச்சி

**தும்பி** - யானை, உயர் இன வண்டு, சுரும்பு, தட்டான் பூச்சி, ஆண் வண்டு

**தும்பு** - குற்றம், தூசி, கயிறு, கரும்பு, ஓரம் நார், வரம்பு, நாகரிகமற்ற சொல், வல்லம்பர், நகரத்தார் மகளிர் அணியும் ஒருவகைத் தாலியுடையது

**தும்பை** - ஒரு செடி, போர்

**துமி** - துளி, தூறல், வெட்டு

**துமித்தல்** - வெட்டுதல், அறுத்தல், விலக்குதல், துளித்தல்

**துமிதம்** - நீர்த்துளி

**துய்** -பஞ்சு, மென்மை ,சிம்பு, கூர்மை

**துய்த்தல்** - நுகர்தல், உண்ணுதல், நூல் நூற்றல்

**துயக்கு** - சோர்வு ,துக்கம், பங்கம், விருப்பம், தடை

**துயரி** - யாழ் நரம்பு

**துயலு-தல்** - அசைதல், தொங்குதல்

**துயில்** - உறக்கம், தூக்கம், தங்குகை, கனவு, இறப்பு ,ஆடை

**துயியெலல்** - பள்ளி எழுச்சி

**துரக்கு** - ஐயம்

**துரத்தல்** - ஓட்டுதல், செலுத்துதல், தூண்டுதல், முயலுதல், எரிதல்

**துரப்பணம்** - துளையிடும் கருவி

**துரவு** - நீர்பாசனப் பெருங்கிணறு, மணற்கேணி

**துரு** - இருப்புக்கறை ,களிம்பு ,குற்றம், செம்மறியாடு

**துருத்தி** - ஆற்றிடைக்குறை, கவறாட்டத்து வழங்கும் ஒரு குழூஉக்குறி, தோல், தோற்பை, உறையூது கருவி, ஆட்டுத்தோல் காற்றுக்கருவி ,நீர் வீசுங்கருவி, ஒத்து ,வயிறு

**துருத்து-தல்** - வெளித் தோன்றுதல்

**துருப்பிடித்தல்** - இரும்பில் கறை பற்றுதல், குற்றவடையாளம் கண்டுபிடித்தல்

**துரும்பு** - கூளம், சக்கை, சீராக, கண்ணுக்கு மையிடுங்கருவி ,ஒரு வகுப்பு

**துருவம்** - அசையாநிலை, உறுதி, துருவ விண்மீன், அழியாத் தன்மை, ஊழ், ஒடுக்கவழி, 34 விரல் அளவுள்ள குழி, ஒப்பு, மலைக்கோட்டை

**துரு-வுதல்** - தேடுதல், தொளைத்தல்,

தேங்காய் சீவுதல், கடைதல், துன்புறுத்துதல்

**துல்லியம்** - ஒப்பு, மிகச்சரியானது, ஒப்புக்கையெழுத்து

**துலக்கம்** - வெளிச்சம், மெருகு, தெளிவு

**துலக்கு-தல்** - மெருகிடுதல், தூய்மை செய்தல், தீட்டுதல், ஒளிரச் செய்தல், வெளிப்படையாக்குதல்

**துலங்கு-தல்** - தெளிவாதல், அறிய வருதல், சிறத்தல்

**துலாக்கோல்** - நிறைகோல், சமச்சீர் கோல், எடை காட்டி

**துலாம்** - நிறைகோல், துலைத்திங்கள் (ஐப்பசி), உத்தரக்கட்டை ,ஏற்றமரம், தூண் மேலுள்ள பொதிகையின் கீழ் வாழைப்பூ வடிவில் உள்ள ஒப்பனைச் சிற்பம்

**துலை** - ஒருவகைக் கொடை, ஒப்பு,100 பலம் நிறை ,தோட்டம்

**துவ்வாமை** - நுகராமை, வறுமை, வெறுப்பு ,வேண்டாமை

**துவ்வு** - ஐம்பொறி நுகர்ச்சி, உணவு

**துவ்வு-தல்** - நுகர்தல், வலியுறுத்தல், பற்றுக்கோடு

**துவக்கம்** - சோர்வு

**துவட்டு-தல்** - நீரைத்துடைத்தல், கறிகாய் முதலியவற்றைத் துவட்டுதல், கசக்குதல்

**துவரை** - துவரஞ்செடி, துவரம் பருப்பு கருந்துவரை ,காட்டத்தி

**துவள்(ளு)தல்** - ஓசிதல், தெளிதல், வாடல், கசங்கல், புணர்தல், இடர்தல், துடித்தல், தொடுதல்

**துவை-த்தல்** - யாழ் ஒலித்தல், ஆரவாரத்தல், புகழப்படுதல், மிதித்துழக்குதல், இடித்தல், ஆடை துவைத்தல், குற்றுதல், கடைதல், சேர்த்து வைத்தல்

**துழாவு-தல்** - கையாலளைதல், கிளறுதல், தடவுதல், ஆராய்தல், தடுமாறுதல், அளவளாவுதல்

**துள்ளல்** - கூத்து, துள்ளுகை, ஆடு, ஆட்டு நோய்வகை, நீர்க்கொதுகு, சந்தத்தின் முடுகிசை, குதித்தல்

**துள்ளுதல்** - பதைத்தல், கவலையின்றி வாழ்நாள் கழித்தல்

**துளர்-தல்** - நிலம் முதலியவற்றைக் கொத்துதல், பயிரின் களை

**துளி** - துளிக்கை, திவலை, மழை, சொட்டளவு ,சிறிதளவு ,நஞ்சு

**துளிர்-த்தல்** - தளிர்விடுதல், செழித்தல்

**துளும்பு-தல்** - அசைதல், ததும்புதல், துள்ளுதல், மேலெழுதல், மிகுதல்

**துளை** - புழை, ஓட்டை, வாயில், வயிரக்குற்றங்களுள் ஒன்று

**துளை-த்தல்** - துளையிடுதல், ஊடுருவுதல், வருந்துதல், செயற்பாடு உசாவுதல்

**துளைப்பு** - இடையறாத் தொல்லை, துளையிடல்

**துளைமை** - பிரிவின்மை, ஆற்றல், உதவி

**துறக்கம்** - மேலுலகு, விண்ணுலகு

**துறட்டி** - அங்குசம், துறட்டுக்கோல்

**துறட்டு** - முள் மரவகை, சிறு மரவகை, சிக்கல், இடையூறு

**துற-த்தல்** - பற்றுவிட்டு துறவுபூணல், கைவிடல், நீங்கல், அகலல்

**துறவறம்** - பற்றறு நிலை, துறவிகளுக்கான இலக்கணம்

**துறவன்** - துறவி

**துறவி(வு)** - துறந்தவர், மந்தணம், வாய்ப்பானநிலை ,வெளியிடம்

**துற்று** - உணவு, கவளம், கூட்டம்

**துற்று-தல்** - உண்ணல், கவ்வுதல், நெருங்குதல், மேற்கொண்டு நடத்தல்

**துறு-த்தல்** - திணித்தல், அமுக்குதல், அமைத்தல்

**துறுவல்** - நெருங்குகை, உண்கை, நுகர்ச்சி, காய்கறிகளின் சிறுதுண்டு

**துறை** - இடம், கடல், ஆறு, வழி, பகுதி, சலவையான் துணி துவைக்குமிடம், அவை கூடுமிடம், நூல், ஒழுங்கு, பாட்டு வகை

**துன்னல்** - தையல், நெருங்குகை, சிறுதிவலை

**துன்னு** - பொருத்து, செறிவூட்டு, அணுகு, மேவு, இடை, உசாவு

**துனி** - வெறுப்பு, சினம், புலவி நீட்டம், துன்பம், நோய், கரிசு

**துனி-த்தல்** - வெறுத்தல், கலாய்த்தல், நெடிது புலத்தல்

**தூ** - தூய்மை, தூயது,வெண்மை, வலிமை ,பற்றுக்கோடு ,பகை

**தூக்கம்** - உறக்கம், அயர்வு, வாட்டம், முகச்சோர்வு, சோம்பு

**தூக்கல்** - விலையேற்றம், உயரம், தூக்குகை

**தூக்கு** - உறி, தொங்கற்பொருள், பிடியுள்ள சிறுவாளி, துலையோரை, ஐம்பது பலம் எடை, தூக்கு மட்டப்பலகை, உயர்ச்சி

**தூக்கு-தல்** - உயர்த்துதல், ஆய்வு செய்தல், கைகொடுத்து உதவுதல், ஒற்றறுத்தல், நங்கூரம் வலித்தல்

**தூங்கல்** - தொங்கல், தூக்கமயக்கம், சோர்வு, துலை, யானை, கூத்து, வஞ்சியோசை

**தூங்கு-தல்** - தொங்குதல், ஊஞ்சலாடுதல், துயிலுதல், உறங்குதல், காலத் தாழ்வாதல், மிகுதல், அழுந்துதல், மெத்தென நடத்தல்

**தூசு** - தூய்மை, ஆடை, பஞ்சு, நெய்மீன், 14-வது விண்மீன், முன்னணிப்படை, படர் அழுக்கு

**தூண்** - கட்டடம், பாலம் முதலிய வற்றின் கூரையைத் தாங்கும் செங்குத்துக் கால், பற்றுக்கோடு

**தூண்டிக்கொடு-த்தல்** - நினைவூட்டுதல், குறிப்பாக அறிவித்தல், கோள் சொல்லுதல், புறம்பேசுதல், குற்றம் பேசுதல்

**தூண்டில்** - கொக்கி இணைக்கப் பட்டமீன் பிடிகோல், கொக்கி, வரிக்கூத்து வகை

**தூண்டு-தல்** - விளக்குத்திரி தூண்டுதல், கிளப்பிவிடுதல், ஏவுதல், அனுப்புதல், தள்ளுதல், நினைப்பூட்டுதல்

**தூணம்** - பெரும்தூண், பற்றுக்கோடு

**தூணி** - நான்கு மரக்கால் அளவு

**தூது** - செய்தி, செய்தி கொண்டு செல்வோர், பருக்கைக்கல், தூதாக அமைந்த ஒருவகை சிற்றிலக்கியம்

**தூதுணம்** - கூழாங்கல்லை உண்ணும் புறாவகை, தூக்கணாங் குருவி

**தூதுவளை** - முள்ளுள்ள இலை கொண்ட கொடி வகை மருந்துச்செடி

**தூர்(ரு)-தல்** - நிரம்புதல், அடை படுதல், அழிதல், மறைதல், நெருங்குதல்

**தூர்-த்தல்** - பெருக்கித்தூய்மை செய்தல், இடைத்தல், வேர், அடிப்பகுதி, பனையின் வேர்ப் பற்றுள்ள அடிப்பகுதி, சேறு, ஏனத்தின் அடிப்பகுதி, கிணற்றில் தேங்கிய வண்டல் முதலிய கசடுகள்

**தூர்வை** - கிணற்றிடை தூர், கொத்தப்பட்ட மண், செத்தை, கிணற்றைச் சார்ந்த நிலம்

**தூவு -தல்** - தெளித்தல், இறைத்தல், சொரிதல், மலரிட்டு வழிபடுதல்

**தூள்** - பொடி, துகள், பூந்தாது, திருநீறு, மூக்குப்பொடி, சிறுமுத்து

**தூளி** - புழுதி, பூந்தாது ,ஆர்ப்பு ,ஏணை

**தூளி-த்தல்** - திருநீற்றை உடல் முழுவதும் பூசுதல்

**தூற்று-தல்** - சிதறுதல், தூசி நீங்க நெல்லை காற்றில் தூவுதல், பரப்புதல், அறிவித்தல், வீண் செலவு செய்தல், திட்டுதல்

**தூறல்** - சிறுமழை,மழைத்துளி, பழிச்சொல்

**தூறு** - புதர், குவியல், குறுங்காடு, சுடுகாடு, மஞ்சள், தென்னை, பனை முதலியவற்றின் வேரொட்டிய அடி

தூறு-தல் - கிளைத்தல், சிறுமழை, பழுத்தல்

**தெ** -"த்" மெய்யும் "எ" உயிரும் கூடிய கூட்டெழுத்து

**தெக்கணம்** - தென்திசை, வலப்பக்கம், இந்தியாவின் விந்திய மலையின் தென்பகுதி நிலம்

**தெக்கு-தல்** - கொள்ளுதல், கொழித்தல்

**தெகிடி** - சூது விளையாட்டு வகை, புரட்டு

**தெகிழ்-தல்** - விளங்குதல், வாய் விடுதல்

**தெகிள்** - மென்மை

**தெகிள் உளி** - மென்மையான குழைவு உளி

**தெகுட்டு-தல்** - தெவிட்டுதல்

**தெகுள்-தல்** - நிறைதல், பெருகுதல்

**தெங்கநாடு** - கடல் கொண்ட தமிழ் நிலப்பகுதிகளுள் ஒன்று

**தெங்கு** - தென்னை,போர்ச் சேவலைக் குறிக்கும் குழூஉக் குறிகளுள் ஒன்று, தித்திப்பு

**தெட்டரசர்** - வெல்லப்பட்ட அரசர்

**தெட்டு** - வஞ்சனை, பறிக்கை

**தெட்பம்** - தேற்றம், தெளிவு

**தெண்டு** - கோல், கற்றை

**தெண்டுதல்** - கிளப்புதல், மிண்டுதல், நரம்பு வலித்தல்

**தெண்ணர்** - அறிவிலாதவர்

**தெண்மை** - தெளிவு ,அறிவின் தெளிவு

**தெந்தனம்** - கவலையின்மை

**தெப்பக்கட்டை** - மிதவை, வண்டியச்சுக் கோத்த மரம்

**தெப்பக்குளம்** - நீர் சூழ்ந்த தடாகம்

**தெப்பத்திருவிழா** - கோயிற்றிரு மேனியைத் திருக்குளத்தின் மீது எழுந்தருளச் செய்து கொண்டாடப் படும் கோயில் திருவிழா

**தெப்பம்** - மிதவை

**தெம்பு** - உடல் வலிமை, துணிவு, செருக்கு , சுறுசுறுப்பு

**தெம்மாங்கு** - தென்னாட்டில் நாட்டுப்புறத்தார் பாடும் இசைப்பாட்டு வகை

**தெம்முனை** - போர்க்களம்

**தெய்வக்கண்ணோர்** - மெய்யறி வாளர்

**தெய்வக்கணம்** - தேவக்கூட்டம்

**தெய்வக்கல்** - தெய்வவுரு அமை வதற்கான சிலை

**தெய்வக்காப்பு** - பாட்டுடைத் தலைவனைத் தெய்வம் காக்க வென்று கூறும் பிள்ளைத்தமிழ்ப் பகுதி

**தெய்வக்கிளவி** - தெய்வ மொழி, தெய்வப் பேச்சு

**தெய்வக்குற்றம்** - நேர்த்திக்கடனை நிறைவேற்றாமையால் தெய்வம் கொள்ளும் சினம்

**தெய்வங்கொண்டாடி** - தெய்வத் தால் உணர்வேற்றப்பட்டு வெறியாட்டம் ஆடுபவர்

**தெய்வச்செயல்** - இறையின்செயல், தற்செயல்

**தெய்வத்தன்மை** - இறையியல்பு

**தெய்வத்துணை** - கடவுள்துணை

**தெய்வப்பாவை** - நோக்குவோரைத் தன்வயப்படுத்தும் கொல்லிமலை தெய்வப்படிமை

**தெய்வம்** - கடவுள், ஊழ், ஆண்டு, மணம், புதுமை

**தெய்வமணி** - சிந்தாமணி, பொன்னாக்கி, குதிரைக்கழுத்திலுள்ள நற்சுழி

**தெய்வவீடு** - வானூர்தி

**தெரிதல்** - அறிதல், விளங்கல், தெரிந்தெடுத்தல்

**தெரிநிலை** - தெளிவுபட அறிவிக்கும் நிலை, ஆய்ந்தறிதல்

**தெரிப்பு** - ஆராய்வு ,சொல்லுகை ,சீட்டு பிரிப்பு

**தெரியல்** - அறிதல், பூமாலை

**தெரியலர்** - அறிவிலார், பகைவர்

**தெரிவை** - பெண்

**தெருட்சி** - தெளிவு

**தெருட்டுதல்** - உறுதிப்படுத்துதல், தெளிவித்தல், ஊடல் தீர்த்தல்

**தெருமரல்** - மனச்சுழற்சி, அச்சம்

**தெருள்** - அறிவுத்தெரிவு, நுண்ணறிவு

**தெவ்வு-தல்** - ஈர்த்தல், நிறைத்தல், கொள்ளுதல்

**தெவிட்டுதல்** - தேக்கிடுதல், திரளுதல், நிறைதல், ஒலித்தல், உமிழ்தல், அருவருத்தல், மறைத்தல்

**தெவிலள்** - திரளல்

**தெழித்தல்** - அதட்டுதல், முழக்குதல், அடக்குதல், நீக்கல்

**தெள்குதல்** - தெளிவாதல், தேங்குதல்

**தெள்விளி** - இசைப்பாட்டு

**தெள்ளி** - யானை

**தெள்ளியர்** - தெளிந்த அறிவினர்

**தெள்ளுதமிழ்** - செந்தமிழ்

**தெள்ளுதல்** - தெளிவாதல், ஆராய்தல், அலைக்கொழித்தல்

**தெள்ளேனம்** - கைகொட்டிப் பாடியாடும் மகளிர் விளையாட்டு வகை

**தெளிஞன்** - அறிஞன்

**தெளித்தல்** - தூவுதல், விதைத்தல், தெளிவித்தல்

**தெளிதல்** - ஐயம்அகலல், குழப்பம் நீங்கல், ஒளிர்தல், நம்புதல்

**தெளிர்த்தல்** - ஒலித்தல், செழித்தல், மகிழ்ச்சியுறுதல்

**தெளிர்தல்** - ஒளி பெறுதல்

**தெளிவு** - விளக்கம், துலக்கம், நுண்ணறிவு, ஆய்ந்து கண்டது, நம்பிக்கை

**தெளிவுரை** - தெளிவான பேச்சு, பாட்டுக்கெழுதும் உரை வகைகளுள் ஒன்று

**தெற்குவாசல்** - தென்திசை வாயில், தெற்குமுகவீடு

**தெற்றி** - திண்ணை, மேட்டிடம்

**தெற்றியம்பலம்** - மேட்டிடமாக அமைந்த சித்திரக்கூடம்

**தெற்றியிலக்கை** - ஊர்ப்பொது மேட்டிடத்தை நுகர்வோர் செலுத்தும் வரி

**தெற்றுக்கால்** - முட்டிக்கால், முட்டிக் காலுள்ள உயிரினம்

**தெற்றுப்பல்** - ஒன்றுடன் ஒன்று பின்னியுள்ள பல், மிகையான பல்

**தெற்றுமாற்று** - ஏமாற்று

**தெற்றுரை** - மாறுபடு மொழி

**தெற்றுவாசல்** - திட்டிவாசல்

**தெற்றென** - விரைவாக, தெளிவாக, உடனடியாக

**தெற்றெனவு** - தெளிவு, வெட்க மின்மை

**தெறல்** - அழிக்கை, சினத்தல், வெம்மை, வருந்துகை

**தெறிக்கப்பேசு-தல்** - பொறுமை யின்றிக் கருத்துப் பேசுதல்

**தெறி-த்தல்** - தாக்கப்பட்டு வெளிப்படுதல், பிதுங்குதல், பொறி அல்லது துளியாய்ச் சிந்துதல், அறுதல், தவறுதல், முறிதல், குலைதல்

**தெறித்தவன்** - செருக்குள்ளவன், கொடியவன்

**தெறித்து நடை** - துள்ளுநடை

**தெறித்துப்போ-தல்** - குடும்பத்தை விட்டு விலகி விலை மகளாதல், பிணிதீர்தல், ஒளியால் கண்கூசி மழுங்குதல்

**தெறிவில்** - சுண்டுவில்

**தெறு-தல்** - சுடுதல், தண்டஞ் செய்தல், அழித்தல், கொல்லுதல், மிகுத்தல்

**தெறுநர்** - பகைவர், கொலையாளி

**தெறுபொருள்** - நிறைப்பொருள்

**தென்** - தெற்கு, அழகு, கற்பு, இசை, இனிமை, வலப்பக்கம், இசைப்பாட்டு

**தென்கரை நாடு** - காவிரித் தென்கரைச் சோழ மண்டலம்

**தென்காற்று** - தென்றல், சிறுகால்

**தென்கிழக்கு** - தென்கீழ்த்திசை

**தென்கோடு** - பிறைநிலவின் தென்முனை

**தென்படு-தல்** - புலப்படுதல், பயிற்சியடைதல்

**தென்பால்** - தெற்குப்பாகம்

**தென்புலக்கோன்** - கூற்றுவன்

**தென்புலத்தார்** - தெற்கே வாழ்ந்து மறைந்த முன்னோர், நீத்தார்

**தென்புலத்தார் வேள்வி** - நீத்தார் கடன்

**தென்புலம்** - தென்தேயம், தென்திசை யிலுள்ளவருலகம், கூற்றுவனுலகு, தென்பாண்டி நாடு

**தென்புலர்** - காலத்தூதர்

**தென்மதுரை** - தலைச்சங்கம் இருந்து கடல் கொண்ட பெருநகரம்

**தென்மலை** - பொதியமலை

**தென்முனி** - அகத்தியன்

**தென்முனை** - தென்கோடி முனை

**தென்மொழி** - தென்னாட்டில் பேசப்படும் மொழி, தமிழ், ஓர் தூயதமிழ்த் திங்கள் இதழ்

**தென்றமிழ்** - தமிழ்மொழி

**தென்றல்** - தென்திசைக்காற்று, கோடைத் தென்காற்று

**தென்றி** - தெற்கு

**தென்று-தல்** - சிதறுதல், இனம் பிரிதல்

**தென்னகர்** - கூற்றுவன் நகரம்

**தென்னங்கருகு** - தென்னையின் உள்ளீடு

**தென்னங்காடி** - தென்னங்கள்ளைப் புளிக்க வைத்து அதனின்று வடிக்கப்படும் சாறு

**தென்னங்கிடுகு** - தென்னங்கீற்றால் முடைந்த தட்டி

**தென்னங்கீற்று** - தென்னை ஓலையில் முடைந்த கீற்று

**தென்னங்குருத்து** - தென்னை மரத்தளிர்

**தென்னங்குரும்பை** - தென்னை இளங்காய், பக்குவப்படாத தேங்காய்

**தென்னம்பாளை** - தென்னம் பூ உள்ளடங்கிய உறை,தென்னம் பூவினுறை

**தென்னம்பிள்ளை** - தென்னங் கன்று

**தென்னர் நிலம்** - பகைவர் நாடு, போர்க்களம்

**தென்னவன்** - பாண்டியன், இராவணன், கூற்றுவன்

**தென்னி** - வாழை

**தென்னிலம்** - போர்க்களம்

**தென்னுதல்** - வளைதல், நெம்புதல், கிளம்புதல்

**தே** - 'த்' என்ற மெய்யெழுத்தும் 'ஏ' என்ற உயிரெழுத்தும் அணைந்த சுட்டெழுத்து, தெய்வம், தலைவன்

**தேக்கந்தீவு** - ஏழு தீவுகளுள் ஒன்று

**தேக்கம்** - தேங்குகை, நிறைவு, நீரோட்டத்தடை

**தேக்கர்** - மிகுதி

**தேக்கரண்டி** - 60 துளி கொள்ளவு கொண்ட சிறுகரண்டி

**தேக்கிடு-தல்** - உணவின் மிகுதியால் அதன்பால் வெறுப்படைதல், ஏப்பமிடுதல், நீர் முதலியன உள் நிரம்பி வெளிவருதல்

**தேக்கு** - உறுதியான ஒருவகை மரம்

**தேக்கு-தல்** - நிறைதல், தெவிட்டுதல், ஏப்பம், தடைசெய்தல்

**தேங்காய்** - தென்னை மரத்தின் காய்

**தேங்காய் எண்ணெய்** - தேங்காய் பருப்பிலிருந்து எடுக்கப்படும் நெய்

**தேங்காய் மொத்தி** - மாட்டின் முன்னங்காலின் இடையிலுள்ள தசைத்திரட்சி

**தேங்காய்க்கண்** - தேங்காய் மேலுள்ள முக்கண்கள்

**தேங்குழல்** - பணியார வகை

**தேங்குழற்செப்பு** - தேங்குழல் பிழியுங்கருவி

**தேசசேனை** - இந்திரன் மகள், தேவகூட்டம்

**தேசத் தொண்டு** - நாட்டு நலனுக்காக செய்யும் ஊழியம்

**தேசத்தலைவர்** - நாடு முழுவதும் செல்வாக்கு உள்ள தலைவர்

**தேசப்பழமை** - நாட்டு வழக்கம்

**தேசம்** - நாடு, இடம்

**தேசியக்கொடி** - ஒரு நாட்டின் அடையாளக் கொடி

**தேசியச்சின்னம்** - கொடி, பண், இலச்சினை

**தேசியப்பண்** - நாட்டுப்பற்றை வெளிப்படுத்தும் பாடல்

**தேசியப்பறவை** - ஒரு நாட்டுக்குரிய அடையாளப்பறவை

**தேசியம்** - ஓர் இன மக்களின் தனித்தன்மை மிக்க தனியுரிமை

**தேட்டம்** - ஈட்டுகை, திரட்டப்பட்ட பொருள், விருப்பம், கவலை

**தேட்டாளன்** - புதல்வன், வருவாயுள்ளவன்

**தேட்டு** - விருப்பம், பொருளீட்டல்

**தேடு-தல்** - ஒன்றை நாடிக் கண்டறிதல், பேணல்

**தேடுபொறி** - இணையத்தில் தேடிக்காண உதவும் மென்பொருள்

**தேம்** - இனிமை, அணம், தேன், தேனீ, நெய்

**தேம்பல்** - வாட்டம், வருத்தம், பழம்பூ, விம்மியழுகை, குறைந்த நிலை

**தேம்பா** - குறையாத, அழியாத, தேயாத

**தேம்பாவணி** - வீரமாமுனிவர் 1796 - இல் பாடிய கிறித்துவின் தந்தை சூசை வரலாற்றுப்பாவியம்

**தேமல்** - சுணங்கு, வெள்ளை நோய், தோலைப்பற்றி வரும் நோய்வகை

**தேய்கல்** - உரைகல்

**தேய்-தல்** - உரைசுதல், குறைதல், மெலிதல், கழிதல், அழிதல், தேய்கடை, வளர்ச்சியற்றது

**தேய்ப்புக்கட்டை** - சாந்து பூசித் தேய்க்கப்பயன்படும் கருவி

**தேய்ப்புத்தாள்** - உப்புத்தாள்

**தேய்ப்புப்பலகை** - சாணை பிடிக்கும் பலகை

**தேய்பிறை** - குறைமதி

**தேய்பிறையிரும்பு** - அரிவாள்

**தேய்மானம்** - தேய்வு, சிக்கனம், சோம்பல், பொன்னை உரைத்தலால் உருவாகும் குறைவு

**தேய்வு** - குறைபாடு, மெலிவு ,அழிவு, பல் தேய்ந்து போதல்

**தேய்வுக்கட்டை** - தேய்ந்த சந்தனக் கட்டை

**தேயம்** - நாடு

**தேயு** - நெருப்பு ,பசி, சோர்வு ,அச்சம், தூக்கம்

**தேர்** - உருளி, ஊர்தி, சிறுதேர், கானல், உருள்விண்மீன், பாடை

**தேர்க்கால்** - தேர்ச்சக்கரம்

**தேர்க்குடம்** - தேர்ச்சக்கரக்குடம், தேரின் ஒப்பனைத்தூண்

**தேர்க்கொடி** - தேரில் கட்டிய பதாகை

**தேர்க்கொத்தர்** - தேரிழுப்போர்

**தேர்க்கொத்தன்** - தேரோட்டி

**தேர்கடை** - தீர்மானம்

**தேர்ச்சி** - வெற்றி, ஆராய்ச்சி,தெளிவு, தேர்வில் வெல்லுதல்

**தேர்ச்சிவரி** - உறவுமுறையார்க்கு தன் துயரங்களைத் தெரிவிக்கும் கூத்து வகை

**தேர்த்தட்டு** - தேரின் உட்பரப்பு

**தேர்த்தாணை** - தேர்ப்படை

**தேர்தல்** - அவைகளுக்கு உறுப்பினர் களைத் தேர்ந்தெடுத்தல்

**தேர்-தல்** - ஆராய்தல், அறிதல், உறுதிசெய்தல், கொள்ளுதல், ஐயுறுதல்

**தேர்ப்பாகன்** - தேரோட்டி ,அறிவன் (புதன்)

**தேர்மரம்** - அரசனின் போர்த்தேரின் சிறப்பினைக்கூறும் புறத்துறை

**தேர்முட்டி** - கோயில் தேர் தங்கி நிற்குமிடம்

**தேரர்** - புத்தத்துறவி

**தேர்வடம்** - தேரிழுக்கும் பெரிய கயிறு

**தேர்வண்மை** - புலவருக்கு அரசர் அளிக்கும் தேர்க்கொடை

**தேர்வலவன்** - தேர்ப்பாகன்

**தேர்வாணைக்குழு** - அரசுப் பணிக்கு தக்கவர்களைத் தெரிவு செய்யும் அமைப்பு

**தேர்வீதி** - தேரோடுந்தெரு

**தேர்வு நிலை** - பணியாளர்க்கு குறில்பட ஆண்டுபணிக்குத்தரும் உயர்நிலை, வருவாய் அடிப் படையில் உள்ளாட்சி அமைப்பு களுக்கு வழங்கும் உயர்நிலை

**தேரறேர்** - கானல்நீர்

**தேரார்** - அறிவிலி ,கீழோர்

**தேராள்** - தேர்வீரன், தேரிழுக்க அனுப்பப்படும் ஆட்கள்

**தேராளி** - தேரின் அச்சு

**தேரி** - மணற்குன்று, மணற்றரை

**தேரை** - தவளை வகை, தேங்காய் நோய்வகை

**தேரைபோ-தல்** - தேங்காயை உள்ளீடற்ற தாக்கும் நோய் பற்றுதல்

**தேரையர்** - தமிழ் மருத்துவ(சித்த வைத்தியம்) நூல்கள் இயற்றியவர்

**தேரோட்டம்** - தேர்த்திருநாள்

**தேரோர்** - தேர்வீரர், தேரேறி வந்து ஏர்க்களத்தையும் போர்க்களத்தையும் இசைக்கருவிகளுடன் பாடியாடும் புலவர்

**தேரோன்** - ஞாயிறு

**தேவ துந்துபி** - ஓர் இசைக்கருவி

**தேவகதி** - உயிர்கடக்கும் பிறப்பு நிலைகளுளொன்று

**தேவகுமாரன்** - இயேசு

**தேவகுரு** - வியாழன்

**தேவகுலம்** - கோயில்

**தேவசபை** - இந்திரனவை

**தேவசன்னதி** - தெய்வதிருமுன்னர், கோயில்

**தேவசிந்தனை** - தெய்வத்தை நினைத்துச் செய்யும் ஊழ்கம்

**தேவசேனாதிபதி** - முருகக்கடவுள்

**தேவடிமை** - கணிகையர், வேலைக் காரி

**தேவதாசன்** - தெய்வத் தொண்டன், அரிச்சந்திரன்மகன்

**தேவதாசி** - கோயிற்பணிவிடை செய்யும் மகள்

**தேவதானம்** - கோயிலுக்கு விடப்பட்ட இறையிலி நிலம்

**தேவதூதன்** - தெய்வச் செய்தி கொணர்வோன், தூதனாகிய தேவன்

**தேவதேவன்** - பரம்பொருள்

**தேவநகர்** - கோயில், துறக்கம்

**தேவநாகரி** - வட மொழிகளின் வடிவெழுத்து

**தேவநாயகன்** - தேவர்தம் கோன்

**தேவநிலம்** - தேவதைகளுக்கென்று விடப்பட்ட ஆறிலொரு மனைப்பகுதி

**தேவநீதி** - தெய்வத்தண்டனை

**தேவநேயன்** - இறையன்பன், தமிழ், திராவிடத்தின் தாய், ஆரியத்தின் மூலம், ஞால முதன்மொழி தமிழே என்றும், மாந்தன் பிறந்தகம், குமரிக் கண்டம் என்றும், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி தொகுப்பது தம் வாழ்நாள் பணி என்றும், வடமொழிப் பிணிப்பின்றி தமிழைக்காக்க பிறப்பெடுத்ததாகக் கூறியவரும், 20-ஆம் நூற்றாண்டின் இணையற்ற பேரறிஞரும் மொழி ஞாயிறு என்று போற்றப்படுபவருமான தமிழ்ப் பேரறிஞர்.

**தேவப்பசு** - காமதேனு

**தேவமணி** - ஓர் அணிகலன், சிவன், குதிரைச்சுழியினொன்று

**தேவமந்திரி** - வியாழன், இந்திரனின் அமைச்சன்

**தேவயுகம்** - 12,000 தெய்வ ஆண்டு கொண்ட ஒரு கால அளவு

**தேவர்** - கடவுள், உயர்ந்தோன், திருவள்ளுவர், அரசர், துறவியர், நால்வகைத் தேவதை வகையார்

**தேவர் நாடு** - துறக்கம்

**தேவர்கோன்** - சிவன், இந்திரன்

**தேவரடியார்** - தனிப்பெண்டிர்

**தேவரம்பை** - தேவ உலகத்து மகளிருளொருத்தி

**தேவரீர்** - பெரியோரை முன்னிலைப் படுத்தும் சொல்

**தேவருணவு** - அமுதம்

**தேவலாயம்** - கடவுளர்க்குரியக் கோயில், மேருமலை

**தேவன்** - கடவுள், அரசன், கொழுந்தன் ஈட்டிக்காரன், பரிசைக்காரன், மடையன்

**தேவனுலகம்** - துறக்கம்

**தேவாசிரிய மண்டபம்** - திருக்கோயில்களில் மன்னர், அமைச்சர் முதலியோர் தனியாக வழிபாடு செய்வதற்கு அமைந்த மண்டபம்

**தேவாதிதேவன்** - முதற்கடவுள்

**தேவாமுதம்** - தேவருணவு

**தேவாரம்** - வழிபாடு, வீட்டில் வைத்து வணங்கப்படும் கடவுள், சிவனைப்பற்றி அப்பர், சம்பந்தர், சுந்தரரால் அருளிச் செய்யப்பட்ட தமிழ்மறை, சிவநெறித் திருமுறை

**தேவி** - தெய்வ மகள், உமையம்மை, காளி, மூத்ததேவி, பெரியம்மை, தலைவி

**தேவி** - தெய்வம்

**தேவிகோட்டம்** - காளிகோயில்

**தேவேந்திரன்** - தேவர்களின் அரசன்

**தேவை** - செயல், வற்புறுத்தல், விருப்பம், முடுக்கம், அடிமைத்தனம், மணமகனை பெண்வீட்டிற்கு அழைத்து சென்று அளிக்கும் முதல் விருந்து வைத்தல்

**தேள்** - கொடுக்கால் கொட்டி வருத்தும் பூச்சி வகை உயிரி

**தேள் கொட்டு** - தேள் கடித்தல்

**தேற்றம்** - உறுதி, மனங்கலங்காமை, ஆறுதல், சூளுறவு,செழிப்பு

**தேற்றமானவன்** - துணிந்தவன், அடல் தேறியவன்

**தேற்றரவாளி** - திடமுடையவன், ஆற்றுப்படுத்துவோன், தூய நல்லாவி

**தேற்றார்** - அறிவிலி, பகைவர்

**தேற்று-தல்** - தெளிவித்தல், தெளிந்தறிதல், சூளுறுதல், தூய்மைசெய்தல், குணமாகுதல், அணியப்படுத்தல்

**தேறல்** - தெளிவு, தெளிந்த கள், தேன், சாறு

**தேறியவன்** - பட்டறிவு மிக்கவன், கலையில் தேர்ந்தவன்

**தேறு-தல்** - தெளிதல், நீர்தெளிதல், மயக்கம்தெளிதல், முதிர்தல், ஆறுதல், தங்குதல்

**தேன்** - மது, கள், இனிமை, மணம், வண்டுவகை, தேனடை

**தேன்குடுக்கை** - தேன் அடைத்து வைக்கும் மூங்கிற்கூடு

**தேன்குழல்** - முறுக்கு (தின்பண்டம்)

**தேன்மொழி** - இன்மொழியாள்

**தேனன்** - திருடன்

**தேனிரும்பு** - உயர்ந்த இரும்பு

**தேனிழை-த்தல்** - தேன்கூடுகட்டுதல்

**தேனிறால்** - தேன்கூடு, தேனடை, கடல்வாழ் உயிரி

**தேனீ** - தேன் சேகரிக்கும் ஈ, தேன் கூட்டும் வண்டு

**தேனூறு-தல்** - இனிமையாதல்

**தேனெய்** - தேன்

**தேனெறும்பு** - பெரிய எறும்பு வகை, நஞ்சுள்ள எறும்பு வகை

**தை** - 'த்' என்ற மெய்யும் 'ஐ' என்ற உயிரும் சேர்ந்த கூட்டெழுத்து

**தை** - தமிழாண்டின் முதல்திங்கள் (சுறவம்)

**தை நீராடல்** - சுறவத் திங்களில் கன்னியரின் நீராடல் சடங்கு

**தை-த்தல்** - பிரியாமல் இணைந் திருக்கத் தையலிடுதல், ஆணி முதலியன அடித்தல், பொருத்துதல், கோத்தல்

**தைப்பூசம்** - சுறவத்திங்கள் வெள்ளு வாநாளின் திருவிழா

**தைப்பொங்கல்** - சுறவத்திங்கள் முதல்நாளில் பொங்கலிட்டுக் கதிரவனுக்குப் படைத்துக் கொண்டாடும் தமிழர் திருவிழா

**தையல்** - பெண், தையல் வேலை, கட்டழகு, முகில்

**தையற்காரன்** - சிவன், துணி தைப்பவன்

**தொ** - 'த்'; என்ற மெய்யும் 'ஒ' என்ற உயிரும் கலந்த கூட்டெழுத்து

**தொக்கடவு** - குறுக்கு வழி

**தொக்கடி** - மரத்தில் பழங்களை மறைத்து வைக்கும் இலை, சிறுபழக்கூடை

**தொக்கார்** - கூட்டத்தார், தோழர்

**தொக்கு** - பொருட்டின்மை(அற்பம்), எளிமை, இளப்பமானவன், நேர்மை, துவையல் வகை

**தொகுத்தல்** - திரட்டிக்கூட்டுதல், ஈட்டுதல், செய்தல், சுருக்குதல்

**தொகு-தல்** - கூடுதல், ஒன்றாதல், அடுக்கிவருதல், நெருங்குதல், வீணாதல், ஒத்தல், உள்ளடங்குதல்

**தொகுதி** - கூட்டம், வரிசை, சேர்க்கை, மந்தை, உருபு முதலியவற்றின் மறைவு, மொத்தவெண்

**தொகுதி எண்**- மேல் வாயிலக்கம்

**தொகுதிப்பெயர்** - குழுவின்பெயர், குழுஉக்குறிப்பெயர், மொத்தவெண்

**தொகுப்பு** - தொகை, எல்லை, கூட்டம், இணைந்து

**தொகுப்பூதியம்** - அடிப்படைச் சம்பளம், அகவிலைப்படி, மொத்தமாக வழங்கப்படும் மாதச் சம்பளம், பணச் சலுகைகள் இன்றி வழங்கப்படும் சம்பளம்

**தொகை** - கூட்டம், கொத்து, சேர்க்கை, பணம், மொத்தம்

**தொகைப்பிசகு** - கணக்குத்தவறு

**தொகைப்பொருள்** - பிண்டப்பொருள், தொகைநிலைத் தொடரின் பொருள்

**தொகையகராதி** - சதுரகராதியுள் தொகையுடையப் பொருளைக் காட்டும் பகுதி, எண்ணுப்பெயர் சார்ந்த தொகைச் சொற்களின்பொருள் விளக்கும் அகரமுதலி

**தொகையடியார்** - சிவனடியார்களுள் ஒன்பது பிரிவினராயுள்ள கூட்ட அடியார்

**தொகைவிரி** - நூல் யாப்பு நான்கனுள் விரித்துக் கூறியதனைத் தொகுத்தும் தொகுத்துக் கூறியதனை விரித்தும் கூறும் முறை

**தொங்கட்டான்** - தொங்கலாயுள்ள மகளிர் காதணி, உடையைத் தளர்வாக்கக் கட்டுகை, கடிகார எடை

**தொங்கல்** - தொங்குகை, அணித் தொங்கல், காதணிவகை, பருத்த பூமாலை, ஆண்மக்களின் மயிர், மயிற்றோகை, நீத்தாரை நீராட்ட நீர் கொண்டு வரும் குடங்களின் மீது பிடிக்கப்படும் துணி, வயிற்றுத் தங்கல், குறை

**தொங்கன்** - கள்வன்

**தொங்காரப்பாய்ச்சல்** - குதிரை முதலியவற்றின் ஓட்டம்

**தொங்காரம்** - ஏளனம்

**தொங்கு பறிவு** - ஒட்டியும் ஒட்டாமலும் இருத்தல், விலக வழிபார்த்தல்

**தொங்குதல்** - நாலுதல், நிலைத்து நிற்றல், குதித்தல், சாதல், உதவி யின்றியிருத்தல்

**தொங்குந்தோட்டம்** - உலக வியப்புகள் எட்டனுள் ஒன்றான பாபிலோன் நகரத் தோட்டம்

**தொங்குபாலம்** - நீர்ப்பரப்பில் தாங்கு தூண்களின்றி இருகரைத் தூண்களிற் பிணைக்கப் பட்டிருக்கும் பாலம்

**தொங்குபுழுதி** - வயலில் இறுகாது நிற்கும் புழுதி

**தொசம்** - கொடி

**தொட்ட** - பெரிய

**தொட்டகுறை** - முற்பிறவியில் தொடங்கி விட்ட வினைக்குறை, முன்னரே தொடங்கிவிட்ட முற்றாப் பணி, பயன்துய்க்காமை

**தொட்டடி** - செய்யுளின் முதலடி

**தொட்டப்பன்** - தலைத்தொட்ட ஞானத் தந்தை

**தொட்டம்** - சிறுநிலம்

**தொட்டல்** - தீண்டல், உண்டல், கட்டுதல், தோண்டல்

**தொட்டவிரல் தறித்தான்** - பெருங் குறிஞ் சான்கொடி

**தொட்டாடுமணியம்** - தொட்டாடு வேலை, குற்றேவல்

**தொட்டாய்ச்சி** - ஞானத்தாய்

**தொட்டால் வாடி** - தொட்டாற் சிணுங்கி, தொட்டாற் சுருங்கி, தொட்டால் சுருங்கும் செடிவகை, சுண்டிவகை

**தொட்டி** - நீர்த்தொட்டி, கள், அழி, குப்பைத்தொட்டி

**தொட்டிக்கால்** - கவட்டுக்கால்

**தொட்டிச்சி** - தொட்டியச்சாதிப்பெண்

**தொட்டிமை** - ஒற்றுமை, அழகு

**தொட்டியம்** - ஒருநாடு, ஒருமொழி, சூனிய வித்தை

**தொட்டில்** - தூளி, நீர்த்தொட்டி, குழந்தைக்களுக்கான ஆட்டும் சிறுகட்டில்

**தொட்டிலிடுதல்** - பிறந்த குழந்தையை முதன்முதலில் தொட்டிலில் இடும் சடங்கு

**தொட்டிவயிறு** - பெருவயிறு

**தொட்டிவீடு** - தொட்டிக்கட்டியுள்ள வீடு

**தொட்டுக்காட்டுதல்** - ஒன்றைச் செய்து காட்டுதல்

**தொட்டுத் தொட்டு** - சிறுகச்சிறுக

**தொட்டுத்தெறித்தல்** - சிறிய அளவு தொடுத்தல்

**தொட்பம்** - திறமை

**தொடக்கம்** - தொடங்குகை, ஆரம்பம்

**தொடர்** - சங்கிலி, விலங்கு, மரபுவழி, சொற்றொடர்

**தொடர்பற** - முழுதும்

**தொடர்வண்டி** - தொடரி, புகைவண்டி

**தொடர்தல்** - இடையறாது வருதல், பின்பற்றுதல், தேடல்

**தொடர்பு** - தொடர்கை, நட்பு, உறவு

**தொடர்முழுதுவமை** - உவமானம் உவமேயம் இரண்டிலும் பொதுத் தன்மையைத் தெரிவிக்கும் சொல், தனித்தனி வரும் அணி

**தொடர்மொழி** - இரண்டெழுத்துக்கு மேற்பட்ட எழுத்துகளைக் கொண்ட சொல், இரு சொற்களால் ஆகும் தொடர்

**தொடர்வட்டி** - வட்டிக்கு வட்டி

**தொடராமுறி** - விடுதலை ஆவணம்

**தொடரி** - முட்செடி வகை, தொடர்வண்டி, கழுத்தணி நகை

**தொடரெழுத்து** - நிலைமொழி ஈற்றையும் வருமொழி முதலையும் தழுவிநிற்கும் எழுத்து

**தொடி** - வளைவு, கைவளை, தோள்வளை ,வீரவளை, பூண்

**தொடித்துடி** - வளைதடி, பூண்கட்டிய ஊன்றுகோல்

**தொடிமகள்** - விறலி

**தொடு** - தோட்டம், மருதநிலம், வஞ்சகம்

**தொடுக்கம்** - பொன்

**தொடுக்கை** - ஆட்டுப்பட்டி, தொடுத்தல்

**தொடுகழல்** - செருப்பு

**தொடுத்தல்** - இணைத்தல், பிடித்தல், உண்ணல்

**தொடுதுணை** - உதவி

**தொடுபதம்** - சோறு

**தொடுப்பி** - புறங்கூறுவோன்

**தொடுப்பு** - சேர்க்கை, தொடரி, கள்ள உறவு

**தொடுவவை** - தொடுத்திருப்பது, பழக்கு (கும்கி)யானை, பாங்கன், வைப்புக் காதலர்

**தொடுவழக்கு** - தொடர்ந்து வரும் வழக்கு

**தொடுவாய்** - கழிமுகம், ஆறும் கடலும் சேருமிடம், புறங்கூறுதல்

**தொடுவான்** - அடிவானம், பிணையடி

மாடுகளைத் தொடுக்குங் கயிறு

**தொடுவானம்** - அடிவானம்

**தொடுவிலங்கு** - இருவரைப் பிணைக்கும் விலங்கு

**தொடுவு** - கொல்லை, களவு

**தொடை** - அம்பெய்கை, பின்னுகை, கட்டுகை, எற்று, வடம், சந்து, இடுப்புக்கும் முழங்காலுக்கும் இடையேயுள்ள பகுதி, விலங்குகளின் பின்னங்கால்களின் மேலுள்ள சதைப்பகுதி

**தொடைக்கயிறு** - கலப்பை நுகத் தோடு, எருதை இணைக்கும் சிறுகயிறு

**தொடை தட்டு-தல்** - தொடையில் அடித்தக் கொண்டு வீரமுரைத்தல், சண்டைக்கழைத்தல், நடக்கும் போது இரண்டு தொடையும் தட்டி நடத்தல்

**தொடை நடுங்கி** - அஞ்சுபவன், கோழை

**தொடைமுரண்** - முரண்தொடை

**தொடையல்** - தொடர்ச்சி, கட்டுகை, தோளணிமாலை, தேன்கூடு, அழிவு

**தொண்டகம்** - குறிஞ்சி நிலப்பறை, ஆட்கோட்பறை

**தொண்டர்** - அடிமைகள், அடியார், உலகப்பற்றில் ஈடுப்பட்டவர்

**தொண்டர்சீர் பரவுவார்** - பெரிய புராண நூலாசிரியர், சேக்கிழாரின் பட்டப்பெயர்

**தொண்டலம்** - யானைத்துதிக்கை, கள்

**தொண்டாடுதல்** - பணிசெய்தல்

**தொண்டான்** - தோலால் செய்யப்பட்ட கமலைச்சாலின் கீழ்ப்புறம் நீர் வெளியேறும் பகுதியில் கட்டப் பட்டிருப்பது

**தொண்டி** - துறைமுகம், வேலி தாண்டாதிருக்க மாட்டின் கழுத்தில் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும் கட்டை, வைக்கோல் வைக்குமிடம்

**தொண்டியோர்** - சோழகுலத்தார், சேரர்

**தொண்டில்** - யானைத் துதிக்கை

**தொண்டு** - பொதுநலப்பணி, அடிமைத்தனம், எடுபிடி

**தொண்டுகிழவர்** - முதிர்ந்த அகவை யானவர்

**தொண்டு துரவு** - பணிவிடை ,உளவு

**தொண்டு நிறுவனம்** - நன்மை செய்யும் அமைப்பு

**தொண்டை** - மிடறு, குரல், குரல் வளை, யானைத்துதிக்கை

**தொண்டைக்கம்மல்** - தொண்டை யழற்சி, குரலடைப்பு

**தொண்டையடைதல்** - பருவ அகவையில் குரல் மாறுகை

**தொண்ணை** - பெருந்தடி

**தொண்மணி** - முத்து மாணிக்கம் போன்ற ஒளிர் ஒன்பது வகையான மணிக்கற்கள்

**தொத்திப்பிடித்தல்** - ஒட்டிக்

கொள்ளுதல், சார்பாகப்பற்றுதல், அடைக்கலம், கூட்டிவிடுதல்

**தொத்தியேறுதல்** - கை கால்களால் பற்றி ஏறுதல்

**தொதவம்** - நீலமலைப் பழங்குடிகள் பேசும் குடும்பமொழி

**தொந்தம்** - இரட்டை, பழைமை, நெருக்கம், பாலியல் தொடர்பு

**தொந்தி** - பெருவயிறு, தசைமடிப்பு, நோய்வகை, பருவமகளிர் அணியுங் கைக்காப்பு

**தொந்திப்பு** - நட்பு, தீராப்பகை, நோய்க்கலப்பு

**தொப்பறை** - எளியநிலை

**தொப்பாரம்** - துணியில்கட்டித் தோள்மேல் சுமந்து செல்லும் பெருமூட்டை புற்கட்டு, நெடுஞ்சப் பாத்து

**தொப்புட்கொடியுறவு** - உடல்வழி இனஉறவு

**தொப்புள்கொடி** - தாய்க்கும் கருவிலுள்ள குழந்தைக்கும் இணைப்பாக உள்ள நஞ்சுக்கொடி

**தொம்பரை** - ஊர்சுற்றி ,நெற்குதிர்

**தொம்பறை** - களஞ்சியம், பெருவயிறன்

**தொம்பன்** - கழைக்கூத்தாடி

**தொம்மை** - பருமன்

**தொய்-தல்** - இளைத்தல், சோர்த்தல், துவளுதல், வயிற்றுவாட்டம்

**தொய்படு -தல்** - நனைதல்

**தொய்யல்** - சோர்கை, துன்பம், சேறு, உழவு

**தொய்ய-விடுதல்** - கயிறு முதலான வற்றைத் தளரவிடுதல், விலை ஏறும் பொருட்டு விற்பனைப் பொருளைக் கட்டி வைத்தல்

**தொய்வு** - இளைப்பு, ஈளை, மூச்சுமுட்டல்

**தொல்** - பழைமை, இயற்கையான, தொன்மையான, பண்டைய

**தொல்கதை** - தொன்மம்

**தொல்காப்பியம்** - தொல்காப்பியர் இயற்றிய பழந்தமிழ் இலக்கணம்

**தொல்குணம்** - பழம் பண்பு

**தொல்பதி** - பழமையான ஊர்

**தொல்பொருள்** - பண்டைய மக்களின் பண்பாட்டை வெளிப்படுத்தும் கட்டடங்கள் மற்றும் பொருள்கள்

**தொல்மரம்** - ஆலமரம்

**தொல்லகம்** - முன்னோர் வாழ்ந்த இடம்

**தொல்லெழில்** - இயற்கையழகு

**தொல்லை** - பழைமை, துன்பம், செயல், வினை, வேலை

**தொல்லை வையகம்** - துறக்கம்

**தொல்லையார்** - தேவர்

**தொல்வரவு** - பழைய குடிவரவு

**தொலைக்காட்சி** - ஒரு நிகழ்வை அல்லது காட்சியை ஒளிப்பதிவு செய்து மின்காந்த அலைகளாக மாற்றி ஒளிபரப்பி அதனைப் படமாகக் காணும் முறை

**தொலைகடல்** - சாக்கடல்

**தொலை-தல்** - அழிதல், ஒழிதல், முடிதல், நீங்கல்

**தொலைதூரக்கல்வி** - நிறுவனங்களில் சேர்ந்து முறையாகப் பயிலாமல் அஞ்சல் வழி பயின்று பட்டம் பெறுதல்

**தொலைதொடர்பு** - தொலைவிற்குச் செய்திகளை மின்னணு வழியே அனுப்பும் முறை

**தொலைந்துபோதல்** - காணாமற் போதல், இறந்து போதல்

**தொலைநோக்கி** - சேய்மைப் பொருளை அண்மையில் காண உதவும் ஆடிக்கருவி

**தொலைபு** - அழிகை

**தொலைபேசி** - தொலைவில் உள்ளவர்களுடன் பேச உதவும் கருவி

**தொலைவிலுணர்தல்** - உள்ளத்தை மன ஆற்றலால் இயக்கும் திறம்

**தொலைவு** - முடிவு, சேய்மை நிலை (தூரம்)

**தொவி-த்தல்** - உரித்தல், படைத்தல், உமி அல்லது தோடுபோக உரித்தல்,

**தொவியல்** - உமி போக்கிய அரிசி

**தொழிமரம்** - பரம்புப்பலகை

**தொழில்** - பணி, வினைச்சொல், களவு, பெருமை

**தொழில்நுட்பம்** - தொழில் பற்றிய அறிவும் வழிமுறைகளும்

**தொழிலாளி** - வேலையாள்

**தொழிற்கை** - கையால் மெய்ப்பாடு காட்டுகை

**தொழிற்சாலை** - வினைக்களம்

**தொழிற்படு-தல்** - செயற்படுதல், வேலையிற்புகுதல்

**தொழிற்பண்பு** - செய்கைக்குறிக்கும் பண்புச்சொல்

**தொழிற்புரட்சி** - புதுக்கருவிகள் கண்டுபிடிப்பால் தொழில் துறையில் நிகழ்ந்த பெருமாற்றம்

**தொழிற்புலையர்** - இழிதொழில் என்று செய் தொழிலால் தாழ்த்தி வைக்கப்பட்ட கீழ்ச்சாதியர்

**தொழிற்பெயர்** - வினைப்பெயர், வினையாலணையும் பெயர்

**தொழிற்பேட்டை** - தொழிற் சாலைகள் அமைவிடம்

**தொழின்முதல்** - ஏவலர்

**தொழின்மொழி** - வினைச்சொல்

**தொழீஇ** - தொழில்செய்பவள், பணிப்பெண்

**தொழு** - பட்டி, சிறைக்கூடம், குட்ட நோய் வகை, காட்டு விலங்குகளை அடைக்கும் கூடு, உழலை மரம், நீர்நிலை

**தொழுக்கன்** - அடிமை

**தொழுகள்ளன்** - பாசாங்கு செய்பவன்

**தொழுகுலத்தோர்** - தொழுதலைத் தொழிலாகக் கொண்ட குலத்தார், குல தெய்வம், குலமாகத் தொழத் தக்கவர்

**தொழுகை** - வணங்குகை, கும்பிடல், இறை விண்ணப்பம்

**தொழுத்தை** - அடிமைப்பெண், பணிமகள், கற்பில்லாதவள்

**தொழுதக தெய்வம்** - கண்ணகி, ஆதிரை, மணிமேகலை, மாரியம்மன் காளி முதலியன

**தொழுதகு-தல்** - நன்குமதிக்கத்தக, விரும்பத்தக

**தொழுதகை** - கும்பிடுகை

**தொழுதகையீர்** - வணக்கத்திற் குரியீர்

**தொழுதல்** - வணங்கல்

**தொழுதி** - கூட்டம், பறவைக்கூட்டம், பறவையொலி, திரட்சி

**தொழுது கொண்டிருத்தல்** - கலந்து போதல்

**தொழுதை** - அடிமைப்பெண், கற்பில்லாதவள், பணிப்பெண்

**தொழுநோய்** - பெருநோய், குட்ட நோய் வகை

**தொழுப்பிறப்பு** - தன் தொழுவிலேயே பிறந்து வளர்ந்த மாடு

**தொழுப்பு** - உழுதொழில் வளைப்பு

**தொழுமகளிர்** - குற்றேவல் மகளிர்

**தொழும்பன்** - அடியவன், இழிஞன்

**தொழும்பி** - அடிமைப்பெண்

**தொழும்பு** - அடிமை, அடிமைத் தொழில், கடவுளின் அருளிப்பாடு

**தொழுமாடு** - சல்லிக்கட்டுமாடு, சல்லிக்கட்டு

**தொழுவர்** - தொழில்செய்வார், உழவர்

**தொழுவம்** - மாட்டுக்கொட்டில்

**தொழுவுரம்** - கால்நடைகளின் சாணம்

**தொழுவறை** - மாட்டுக்கொட்டில்

**தொழுவன்** - பயிரிடுவோன், தொழிலாளி

**தொழுவாடு** - வழக்கம், இயற்கை

**தொழுவு** - வணங்குகை

**தொழுவை** - மடு

**தொள்கு** - துளையுள்ள வலை, பள்ளம், தோண்டப்பட்ட சேறு

**தொளத்தி** - தளத்தி

**தொளதொள-த்தல்** - இறுக்க மில்லாமை, தளர்த்தல், இளகிப் போதல், உளறுதல், உறுதியற்ற மனம்

**தொள்ளம்** - தெப்பம், சேறு

**தொள்ளாடி** - நலிந்தோன், நெகிழுடலர், நலிவுறுகை

**தொள்ளாடு** - வலிதளர்தல், தள்ளாடுதல்

**தொள்ளை** - துளை, குழி, மரக்கலம், குற்றம், மரக்கால்(அளவை), அறியாமை

**தொள்ளைக்காது** - பெருந்துளை யுள்ள காது, காதணி நீங்கிய தொளைக்காது

**தொளாமணி** - துளையிடப்படாத முழுமணி

**தொளிவிரைப்பு** - வயலைச்சேறாக்கி விதைக்கை

**தொளுக்குதல்** - தொடுத்தல், தளரக் கட்டுதல்

**தொளை-த்தல்** - துளையிடல், தொந்தரவுசெய்தல், செய்தியை அறியும் பொருட்டு ஆழம் பார்த்தல், தோண்டித்துருவல்

**தொற்றம்பு** - ஊடுருவாமல் உடல் மேல் காயப்படுத்தும் அம்பு

**தொற்றி** - ஒட்டு, தொற்றனேவல், பற்று, பொருத்து, மூலைக் கையோடணைத்த மரம்

**தொற்று-தல்** - தொடுத்தல், ஒட்டித் தொடர்தல்

**தொற்றுநோய்** - தொடுவதாலும் நாற்ற நுகர்வாலும் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு ஒட்டும் நோய், பழைய நோய், குட்டம்

**தொற்றுநோயாளி** - ஒட்டு நோயுற்றவன்

**தொறு** - ஆவின் கூட்டம், தொழு, இடைச்சாதி, கூட்டம்

**தொறுத்தி** - இடைச்சி, ஆய்ச்சி

**தொறுநிலை** - பசுக்களைக் கட்டும் கொட்டம்

**தொறுப்பட்டி** - ஆயிரம் மாடுகள் அடைக்கப்படும் அளவுள்ள நிலம்

**தொறுப்போ-தல்** - ஆநிரைக் கவரப்படுதல்

**தொறுவன்** - இடையன்

**தொறுவிடம்** - மாட்டுத்தொழுவம்

**தொன்நிலம்** - பண்டைநாடு

**தொன்மரம்** - ஆலமரம்

**தொன்மை** - பழைமை

**தொன்மொழி** - பழமொழி, பழைமையான மொழி

**தொன்று** - பழைமை, பழையது, ஊழ், பண்டு

**தொன்றுதொட்டு** - பழங்காலமுதல்

**தொன்னை** - இலைக்கலம், எச்சிலைப்போன்ற இழிஞர்

**தொனி** - துளையிலிருந்து உண்டாகும் ஒலி

**தோக்கை** - முன்றானை, சீலை, மேற்பார்வை

**தோகை** - மயிற்பீலி, பெண், ஆடை, தானித்தாள், தொங்கல், ஆண்குறியின் நுனித்தோல், மீன்வகை

**தோகைப்பாகன்** - சிவன்

**தோசை** - அரிசிமாவில் உளுத்த மாவைக் கலந்து செய்யப்படும் சிற்றுண்டி

**தோசைக்கல்** - தோசை சுடுங்கலம்

**தோட்டக்காரன்** - தோட்ட வேலை செய்பவன், தோட்ட உரிமையாளன், தோட்டக்காவலன்

**தோட்டக்குடிசை** - கொடி வீடு, வேனிற் கொட்டகை

**தோட்டக்குழி** - கொல்லைக் கொட்டாரத்தில் அவரை புடலைப் போடும் குழி

**தோட்டக்கூறு** - மரங்கள் வளர்க்கத் தக்க நிலம், மா,பலா, வாழை முதலிய பயன்தரு மரங்கள் வளர்க்கப்பட்ட தோட்டத்தின் ஒரு பகுதி

**தோட்டந்துரவு** - தோட்டமும் பாசனத்துக்குதவும் பெருங்கிணறும்

**தோட்டப்பாழான நிலம்** - பயன்தரு மரங்கள் இருந்து பின் பாழாகி வறிதாகக் கிடக்கும் நிலம்

**தோட்டம்** - வளர்ப்பு செடிகளின் தொகுதி, சோலை, வீட்டுக்கொல்லை

**தோட்டல்** - துளைக்கை, தோண்டுதல்

**தோட்டி** - ஆணை, காவல், கதவு, மனைவாயில், சூழ் அகழ் இருக்கை, கட்டழகு, செங்காந்தள், நெல்லி, பிணம் எரிக்கும் குலத்தவர்

**தோட்டிச்சி** - தோட்டிப்பெண்

**தோட்டுப்பாய்** - நெல் காயப்போடும் பெரும்பாய்

**தோட்புரவு** - தோட்ட நிலத்திற்கான அரசுவரி

**தோடயம்** - நாடகத்தின் முன் மொழிப்பாட்டு

**தோடர்** - கையணிவகை, கல்வித் திறனுக்கு பரிசளிக்கப்படும் பொற் கங்கணம், ஒரு பழங்குடி இனம்

**தோடர்குளம்** - கையைக் கூப்பி மூழ்கி நீர்நிலைக் காட்டுங் காலத்துக் கையமிழக் கூடிய ஆழமுள்ள குளம்

**தோடு** - ஓலை, காதோலைச்சுருள், காதணி, பூ, பூவிதழ் தொகுதி, வட்டத்திரணை

**தோண்டான்**- ஓநாய்

**தோண்டி** - நீர்சேந்தும் கலவகை, சிறுகுடம்

**தோண்டுச்சால்** - நாற்றங்காலில் தேங்கின நீரை வடிக்கத் தோண்டும் சிறுகால்

**தோண்டு-தல்** - அகழ்தல், குடைதல், முகத்தல், செய்தியை உசாவி யறிதல், பண்டமிறக்குதல்

**தோண்மை** - தோள்வலிமை

**தோணி** - ஓடம், மிதவை, கப்பல், நீர்த்தொட்டி

**தோணிப்பாலம்** - தோணிபோல அமைக்கப்படும் கற்பாலம்

**தோணியம்** - அம்பு

**தோணியுழுந்து** - கப்பல் வழியே இறக்குமதியாகும் உழுந்து

**தோணோக்கம்** - மகளிர் விளையாட்டு வகை, காதினடித் தண்டு

**தோதகன்** - ஒழுக்கமற்றவன், வஞ்சகன், கடுகடுப்புள்ளவன்

**தோது** - தொடர்பு, பொருத்தம், ஒப்பு, போட்டி, நலம், வாய்ப்பு, விழுக்காடு, வழிவகை

**தோப்பு மரம்** - தோப்புகளில் தன்னின பல்லின மரங்களுடன் வளரும் மரம்

**தோப்புறா** - நிலவரி

**தோபனி** - மிகுபனி ,உறைந்த பனி

**தோம்** - குற்றம், தீமை, துன்பம்

**தோமரம்** - தண்டுக்கருவி, கைவேல், வாச்சியம், இருப்பு உலக்கை

**தோய்-த்தல்** - நனைத்தல், உறையச் செய்தல், துவைச்சலிடுதல், சாயமேற்றுதல், ஆடை துவைத்தல்

**தோய்-தல்** - முழுகுதல், நனைதல், உறைதல், நிலத்துப்படிதல், செறிதல், அகப்பட்டுக் கொள்ளுதல், பொருந்துதல், அணைதல், முகத்தல், நட்டல், ஒத்தல், துவைச் சலிடுதல்

**தோய்வு** - ஏற்றபடி கலத்தல், கலப்பு,

எண்ணெய் தேய்த்துக்கொள்ளாது குளித்தல்

**தோயம்** - நீர், கடல்

**தோயமகள்** - ஆடி முதிர்ந்த பெண், பின்பாட்டுபாடுநர்

**தோரணக்கால்** - ஒப்பனைத் தொங்கல், கட்டுங்கால், திருவாசிக் கால்

**தோரணம்** - தெருவில் அல்லது வாயிற்படியில் குறுக்காகக் கட்டும் ஒப்பனைத் தொங்கல், ஒப்பனை வளைவுள்ள வாயில், நீராட்டு மிடத்தில் கட்டும் வரம்பு, துலைதாங்கி

**தோரணவிளக்கு** - தோரணமாகப் பந்தங்களைக் கட்டி திருவிழாக் காலங்களில் தூக்கிச் செல்லும் தீப்பந்தம்

**தோரணவீதி** - தோரணங்களால் ஒப்பனைச் செய்யப்பட்ட தெரு

**தோரா வழக்கு** - ஓயாத வழக்கு

**தோராயம்** - ஏறத்தாழ

**தோரியம்** - கூத்து, இசைக்கருவி

**தோரை** - ஒருவகை மலைநெல், மூங்கிலரிசி, கைவரை, மயிற்பீலி விசிறி, அணிவடம், நான்கு விரற்கடை நீட்டல் அளவு வகை, மங்கல நிறம், குருதி

**தோல்-தல்** - தோல்வியுறுதல், ஒப்பிற்றாழ்தல், இணங்குதல்

**தோல்தனம்** - அறிவுக்குறைவு

**தோல்நோய்** - தோலில் வரும் நோய், சொறி, சிரங்கு, புண், தேமல்படை, கொப்பளம் முதலான நோய்கள், தவறான ஒழுக்கங்களால் ஏற்படும் நோய்

**தோல்முட்டை** - கருவற்றமுட்டை, தோல் கடினமாகும் முன்பு இடப்பட்ட முட்டை

**தோல்வி** - வெற்றி பெறாமை, வெல்லாமை

**தோலாட்டம்** - பொருட்டின்மை

**தோலாவழக்கு** - முடிவுறாப்பேச்சு

**தோலாள்** - பயன்பாடிலிலாள்

**தோலியாப்போ-தல்** - தோல் போலாதல், இளைத்தல்

**தோலிழிஞை** - கிடுகுபடையைச் சிறப்பித்துக்கூறும் புறந்துறை

**தோலின்றுன்னர்** - தோல் வேலை செய்வோர்

**தோலுரி-த்தல்** - மேற்தோலுரித்தல், மேற்றோலைப்போக்கல்,தோல்போக்கல், சட்டை கழற்றல், உண்மையை கூறுதல்

**தோவளம்** - கிணற்றை சுற்றி எழுப்பிய சுவர்

**தோழ்** - மாட்டுக்கொட்டில்

**தோழ்பாடி** - தீயவன், போக்கிலி

**தோழம்** - கடல், பேரெண்

**தோழர்** - அரசியல் இயக்கங்கள் சிலவற்றில் ஓர் உறுப்பினர் மற்றொரு உறுப்பினரை அழைக்கும் விளிச்சொல், தோழன்

**தோழன்** - வினைவலபாங்கன், பாங்கன்

**தோழா** - விளிச்சொல்

**தோழி** - பாங்கி, செவிலித்தாயின் மகள், மனைவி, பணிப்பெண்

**தோள்** - கையின் திரண்ட மேற்பகுதி (புயம்), கை

**தோள்கொடுத்தல்** - சுமையைத் தாங்குதல், உதவிசெய்தல்

**தோள் மாற்று-தல்** - சுமையை ஒரு தோளினின்று மற்றொரு தோளுக்கு மாற்றுதல், பிறர் சுமையை தான் சுமந்து உதவுதல்

**தோள் வலி** - தோள் வலிமை, தோள் நோவு

**தோள்(ளு)தல்** - துளைத்தல், தோண்டுதல், நீக்குதல்

**தோளணி** - தோட்பக்கத்தில் அணியப்படும் அணிகலவகை

**தோள்நாளம்** - தோள் பக்கமுள்ள தூய்மையிலா அரத்தக்குழாய்

**தோள்படி கொள்(ளு)தல்** - ஒன்றைப் பற்றாகக் கொள்ளுதல்

**தோள்பை** - தோளில் தொங்கும் பட்டை வைத்துத் தைத்தப்பை

**தோள்வளை** - தோளில் அணியும் வளைவகை

**தோளாமணி** - துளையிடப்படாத மணி

**தோளி** - நன்னீர் மீன்வகை, நீலிச்செடி, அரக்கு

**தோற்கடகு** - தோற்கேடகம்

**தோற்கருவி** - ஐவகை இசைக் கருவிகளுள் தோலால் செய்யப்பட்ட இசைக்கருவி வகை

**தோற்கொம்பு** - விலங்கின் கட்டுக்கொம்பு, கொம்பு ஆடுதலாகிய மாட்டுக் குற்றவகை

**தோற்செருப்பு** - செருப்பு வகை, காலணி

**தோற்செவி** - புறச்செவி, புறச் செவியுள்ள விலங்குகள்

**தோற்பறை** - குதிரைக் கொள் வைக்கும் பை

**தோற்பாவை** - தோலாற் செய்து ஆட்டும் பாவை

**தோற்புரை** - தோலின் துளை, மேற்தோல், சவ்வுள்ள உடலிடம்

**தோற்பெட்டி** - தோலாற்செய்த பேழை

**தோற்பை** - தோலால் செய்த பை, துளையுள்ள தோற்கவிப்பு, உடம்பு

**தோற்றக்கவி** - நாடகத்தில் கட்டியங்காரன் பாடும் பாட்டு

**தோற்றரவு** - காட்சி, உருவாதல், அறிகை, தோற்றம்

**தோற்றல்** - தோன்றுகை, புகழ், வலிமை

**தோற்றான்** - மயில் துத்தம்

**தோற்றானம்** - தோற்கலம், வெடிமருந்துப்பை

**தோற்றும்** - காட்சி, பார்வை, விளக்கம், பிறப்பு, படைப்பு, வகுப்பு, உருவம், சொன்மாலை, புனைவு, மாலை, உயிர்த்தோன்றல்

**தோற்றுருத்தி** - உலைத்துருத்தி, உடம்பு

**தோற்றுவாய்** - பின்வருவதை முன்னர் கூறும் குறிப்பு

**தோற்றுவித்தல்** - கண்ணொளி உண்டாக்கல், உண்டாக்கல், பிழைக்கவைத்தல், தோன்றுமாறு செய்தல்

**தோன்றல்** - தோற்றம், தலைமை, உயர்ச்சி, விளக்கம், தலைவன், முல்லைத்திணைத்தலைவன், வேந்தன்(அரசன்), மகன், தமையன்

**தோன்றாத்துணை** - பிறரறியாமல் உதவுவோன் , இறைவன்

**தோன்றி** - செங்காந்தள், வெண்காந்தள், குருதி, ஒருமலை

**தோன்றுதல்** - கட்புலனாதல், அறியப்படுதல்; உண்டாதல், பிறத்தல், நிலைகொள்ளுதல், வருதல், சாரியை முதலியன சொற்களிடையே வருதல்

**ந** - சிறப்பு, மிகுதி, எதிர்மறைப் பொருளை உணர்த்தும் ஓர் இடைச்சொல்

**நக்கம்** - அம்மணம்

**நக்கரம்** - முதலை

**நக்கரித்தல்** - தன் எண்ணம் ஈடேற ஒட்டாரமாய்ப் படுத்துக்கிடத்தல்

**நக்கன்** - சிவன்

**நகர்** - நகரம், இல்லம், வீடு, அரண்மனை, மருதநிலத்தூர், மனைவி

**நகல்** - சிரிக்கை, நட்பு, ஒளிப்படி

**நகழ்தல்** - துன்புறுத்தல், இடம்மாறிச் செல்லல், நகர்தல்

**நகில்** - பெண் மார்பகம்

**நகுலம்** - கீரிப்பிள்ளை

**நகை** - இன்பம், சிரிப்பு, பல், அவமதிப்பு, நட்பு, அலர், ஒளி, முத்து, அணி

**நங்கூரம்** - நாவாய், கப்பல்களை நகராமல் நிறுத்திவைக்கும் எடை மிகுந்த மாழை (அ) கருவி

**நங்கை** - பெண்ணின் நல்லாள், நற்பெண், சிறந்த மங்கை

**நச்சு** - விருப்பம், தொந்தரை, சிறுமை, நஞ்சு, பெருமையின்மை

**நச்சுக்கண்** - தீக்கண், கொள்ளிக் கண், கொடுநோக்கு, கொடும் பார்வை

**நசிதல்** - அழிதல், குறைதல், சிதைதல், சேதமுறல்

**நசியம்** - மூக்கிலிடு மருந்து

**நசை** - அன்பு, ஆசை, விருப்பம், குற்றம்

**நசைகுநர்** - நண்பர்

**நசைதல்** - விரும்புதல், வேண்டுதல், அன்பு செய்தல்

**நஞ்சு** - ஆட்கொல்லி உயிர்க்கொல்லி, உயிரழிப்பான், உயிருக்கு ஊறு தரும் பொருள், கொப்பூழ்க்கொடி

**நட்டணை** - ஆகடியம், வெறுப்பு, கொடூரம்

**நட்டார்** - நண்பர்

**நட்டுவம்** - நாட்டியம் பயிற்றுவிக்கும் தொழில்

**நடப்பு** - நடத்தை, போக்குவரவு, இன்றைய நிகழ்நிலை

**நடம்** - கூத்து, சதிர், ஆடல்

**நடலம்** - செருக்கு, பாசாங்கு, வீண்செலவு

**நடலை** - வஞ்சனை, இரண்டகம், கரவு, பொய்மை, துன்பம், அசைவு

**நடவு** - நடுதல், பயிர் ஊன்றுதல், நட்டபயிர், நாற்று நடல்

**நடவுதல்** - செலுத்துதல், நடத்துதல்

**நடவை** - வழி, வழிவகை, வழங்குமிடம், கடவை மரம்

**நடனம்** - நட்டம், நடம், கூத்து, சதிர், ஆடல், பாசாங்கு

**நடு** - மையம், இடுப்பு, நீதி, நடுநிலைமை, நயன்மை

**நடுகல்** - வீரரை நல்லடக்கம் செய்த இடத்தில் நடப்படும் நினைவுக்கல்

**நடுவன்** - நடுவர், சிக்கல் களைந்து இணக்கமாக்குபவர், இயமன்

**நடேவன்** - ஆடவல்லான், சிவன்

**நடை** - நடத்தல், இடைகழி, ஒழுக்கம், மொழிப்போக்கு, வழக்கு

**நடைநாயகம்** - அன்னப்புள்

**நடைப்பிணம்** - பயனற்றவன்

**நடைபாவி** - படிக்கட்டு, படிக்கிணறு

**நடைமலை** - யானை, கரி

**நண்ணம்** - சிறிது

**நண்ணார்** - பகைவர்

**நண்ணுதல்** - கிட்டுதல், பொருந்துதல், செய்தல்

**நண்பகல்** - உருமம், நடுப்பகல், உச்சிப்பொழுது

**நண்பகலந்தி** - உச்சிக்காலம், உருமம்

**நண்பல்** - இருபல்லிடை முளைத்தபல்

**நண்பு** - நட்பு, அன்பு

**நண்மை** - அண்மை, சமீபம், சற்றுமுன்

**நணி** - அணிமை, அண்மை, அருகில் உள்ள இடம்

**நணுகுதல்** - கிட்டி வருதல், ஒன்றிக்கலத்தல்

**நத்தம்** - ஆக்கம், ஊர்ப் பொதுவிடம், வாழை, சங்கு, இரவு

**நத்தாசை** - பேராசை, பெருவிருப்பம்

**நத்துதல்** - விரும்புதல், அண்டுதல்

**நதம்** - மேற்கு நோக்கிஓடும் ஆறு

**நதி** - ஆறு, வணக்கம்

**நதுத்தல்** - அவித்தல், கெடுத்தல், மறைத்தல்

**நந்தவனம்** - மலர்த்தோட்டம், பூந்தோட்டம்

**நந்தன்** - இடையன், கோன், திருமால், மகன்

**நந்தனம்** - நந்தவனம், நத்தை, தவளை

**நந்தாவனம்** - நந்தவனம்

**நந்தி** - சிவன், சிவகணத்தலைவன், ஏறு, இடபம், சமணர் பட்டப்பெயர், பேரிகை

**நந்து** - ஆக்கம், சங்கு, பறவை

**நந்துதல்** - கெடுதல், கேடு, அவிதல், குறைதல், மறைதல், வளர்தல், தழைத்தல், செழித்தல், விளங்குதல், செருக்குதல், தூண்டுதல்

**நந்துருணி** - புறம்பேசி, புறங்கூறி, அறிவிலி

**நந்தை** - கபிலைப்பசு, கலப்பைக் கயிறு

**நப்பின்னை** - திருமகள், செல்வி

**நபனம்** - திருமுழுக்காட்டு, திருமஞ்சனம்

**நபுஞ்சகம்** - பேடிமை

**நம்பன்** - கடவுள், இறைவன், சிவன்

**நம்பி** - தலைசிறந்த மகன்

**நம்பு** - நசை, நாவல்

**நமகம்** - உருத்திர மந்திரம்

**நமசிவாய** - திருவைந்தெழுத்து மந்திரம், சிவமந்திரம்

**நமலுதல்** - வணங்கல்

**நமன்** - யமன், காலன், நம்மவன்

**நமுருதல்** - குழைதல்

**நமை** - தினவு, ஒருமரம்

**நமைத்தல்** - சூட்டுதல், வருந்துதல்

**நயத்தல்** - விரும்புதல், அன்பு செய்தல், மலிதல், நயன்மை, செய்தல்

**நயப்பு** - பற்று, விரும்பு, ஆசைப்படு

**நயம்** - அருள், விருப்பம், நன்மை, மகிழ்ச்சி, அன்பு, பணிவிடை செய்தல், மலிவு, நீதி, அறம், அழகு

**நயன்** - நயம், அன்பு, பசை, உபாயம், வழி

**நயனம்** - கண்

**நரகம்** - பாதாளம், துன்புறு இடம்

**நரத்தம்** - கத்தூரி, நாரத்தை, ஒருவகைப்புல்

**நரலுதல்** - ஒலித்தல், கத்துதல்

**நரலை** - ஆழி, கடல், மதிலுறுப்புக்களுள் ஒன்று, ஒலி

**நரிதல்** - நிந்தித்தல், வருந்துதல், நொறுக்குதல், கெடுத்தல்

**நரித்தல்** - வருந்துதல், இழிவாகக் கருதுதல்

**நருக்குதல்** - நொறுக்குதல், தேய்தல்

**நரை** - வெண்மயிர், எருது, மூப்பு, வெண்மை, பெருமை, மரச் சொத்தை

**நல்குதல்** - விரும்புதல், கொடுத்தல், ஈதல், படைத்தல், வளர்த்தல், பயன்படுதல்**நல்குரவு** - வறுமை, ஏழ்மை, பொருளின்மை

**நல்கூர்தல்** - வறுமையடைதல், துன்புறுதல்

**நல்ல** - நன்மையான, தீதற்ற, அதிகமான, கடுமையான

**நல்லார்** - பெரியோர், மகளிர், தீதிலார்

**நல்லினம்பாடியார்** - அழகிய இளம் பெண்கள்

**நல்லேறு** - இடபம், எருமை, காளை, பசு

**நலக்குதல்** - கசங்கச்செய்தல், அழுக்காக்குதல்

**நலங்குதல்** - நொந்துபோதல், வருந்துதல், நுடங்குதல், முடங்கிப்போதல்

**நலத்தல்** - நலமாதல், விரும்புதல்

**நலம்** - நன்மை, உயர்வு, நல்வாழ்வு, சிவப்பு, விருப்பம், அழகு, அன்பு, இன்பம், குணம், புகழ், சுகவாழ்வு, இனிய வாழ்வு

**நலம்பாடு** - இன்பம்

**நலவர்** - நல்லோர்

**நலிதல்** - மெலிதல், அழிதல், வருந்தல், நோயடைதல்

**நவ்வி** - பெண்மான், மான்குட்டி, அழகு, மரக்கலம்

**நவியம்** - கோடரி, மழு, புதுமை

**நவிரம்** - புன்மை, ஆண்மயில், வாள்

**நவிலுதல்** - சொல்லுதல், செப்புதல், பகர்தல், கூறுதல், கற்றல், பழகுதல், தாக்குதல், குறித்தல்

**நவிழ்த்தல்** - அவித்தல்

**நவை** - குற்றம், தண்டனை, இகழ்ச்சி

**நவைத்தல்** - கொல்லுதல்

**நள்** - நடு, இரவு, நடுநிசி

**நள்ளிருணாறி** - இருவாட்சிப்பூ

**நள்ளுதல்** - நட்பு கொள்ளுதல், செறிதல், விரும்புதல்

**நளி** - செறிவு, பெருமை, அகலம், தேன், தமிழ்த்திங்களுள் ஒன்று

**நளிதல்** - செறிதல், பரத்தல், ஒத்தல்

**நளிர்** - குளிர்ச்சி, தண்மை, நண்டு, பகை

**நளினம்** - தாமரை, நயச்சொல்

**நற்கு** - நன்கு

**நற்சார்வு** - நல்லோர் கூட்டம்

**நற்றம்** - நற்குணம்

**நற்றவன்** - சிவன்

**நற்றாய்** - ஈன்றதாய், பெற்றதாய், செவிலித்தாய்

**நற்றிணை** - அகப்பொருள் கூறும் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று (தொகை நூல்)

**நற்றிறம்** - நீதிநெறி ,நோன்பு

**நற்று** - நன்மை

**நறவம்** - தேன், பால், மணம், கள், மயிற்கொன்றை, மணக்கொடி, குங்குமம், ஞாழல்

**நறவு** - ஒருவகை மலர், மது

**நறா** - **தேன்**, கள்

**நறுக்கு** - துண்டு, சீட்டு

**நறுக்குதல்** - துண்டித்தல், நொறுக்குதல், வெட்டுதல்

**நறுங்காழ்** - அகில் சந்தனம் முதலியன

**நறுமண்** மகளிர் கூந்தலில் தேய்த்துக் கொள்ளும் மணமண்

**நறுமை** - நன்மை, மணம்

**நறை** - நூபம், மணம், தேன், பச்சிலைக்கொடி, சாதிக்காய், குற்றம்

**நன்கனம்** - நன்றாக

**நன்காடு** - சுடுகாடு

**நனந்தலை** - அகன்றவிடம், திசை

**நனம்** - அகற்சி

**நன்மை** - நலம், பயன், ஆசி, மேம்பாடு, அழகு

**நனவு** - சாக்கிரம், தேற்றம், பகல், மெய்ம்மை, விழிப்பு, கனவு, மயக்க மறுத்தல்

**நன்றி** - உதவி, கடப்பாடு, அறம்

**நன்று** - ஆக்கம், நற்குணம், நல்வினை

**நன்னர்** - நன்மை

**நன்னி** - சிறியது

**நனி** - மிக்க

**நனை** - அரும்பு, தேன், கள், நீரால் நனைதல்

**நா** - நாக்கு, பேச்சு, நடு, பொலிவு, தவசக்கதிர், படகுத்துடுப்பின் பலகை

**நாக்கு** - உணவைச்சுவைக்க, பேசவுதவும் வாயில் உள்ள தொங்கு தசையுறுப்பு

**நாக்கு நீளுதல்** - விருப்பமிகுதல், கடும்பேச்சு, அளவுகடந்து பேசுதல், வரம்பு மீறுதல்

**நாக்குத்தப்பு-தல்** - பேச்சு மாறுதல், பொய் கூறுதல், நா கோடுதல்

**நாக்குப்புரளு-தல்** - சொல் தவறுதல்

**நாக்குமாறி** - பேச்சுமாறி, முரணாகப் பேசுபவன்

**நாக்குவழித்தல்** - பயனின்றிப் போதல், போதிய அளவின்மை

**நாக்குழறுதல்** - நாத்தழுதழுத்தல்

**நாகச்சுழி** - முன்னந்தலையில் அமையும் மயிர்ச்சுழி

**நாகம்** - வான், மேகம், நல்லபாம்பு, நாகவுலகம், யானை, நாவல், புன்னை, மலை, துத்தநாகம், குரங்கு, நஞ்சுவகை, நற்றூசு மாட்டு வாலில் உள்ள தீச்சுழி வகை, குறிஞ்சிப் பண்வகை, கந்தகம்

**நாகர்** - தேவர், நாகஉலகத்தார், ஒரு பழவினத்தார், நாகத் தலையணி வகை

**நாகரம்** - வடமொழி எழுத்து

**நாகரி** - தேவநாகரி, குருக்கத்தி

**நாகரிகம்** - நகரவொழுக்கம், மரியாதை, கண்ணோட்டம், புதுப்பாங்கு, நற்றோற்றம், செம்மை

**நாகாலயம்** - பாதாளம், தேவர் களிருப்பிடம்

**நாங்கூழ்** - மண்புழு, நாக்குப்பூச்சி

**நாச்சி** - தலைவி

**நாச்சியார்** - அரசியார், தலைவி, பெண்தெய்வம், ஆண்டாள், செட்டிநாட்டுப் பெண்களை விளிக்குஞ் சொல்

**நாச்செறு** - வசை

**நாசம்** - அழிவு

**நாஞ்சில்** - கலப்பை ,மதிலுறுப்பு

**நாட்காலம்** - விடியற்காலம், வைகறை, ஏற்ற பருவம்

**நாட்கூறு** - முற்பகல்

**நாட்சோறு** - காலையுணவு

**நாட்டம்** - கண், பார்வை, நோக்கம், அழகு, சஞ்சாரம், விருப்பம், வாள், கணியநூல், ஐயம், அசைவு, இயக்கம்

**நாட்டவன்** - நாட்டுப்புறத்தான், திணைப்பிறப்புரிமையாளர்

**நாட்டாண்மை** - ஊரதிகாரம்

**நாட்டார்** - தேசத்தார், நாட்டுமக்கள், நாட்டாண்மைக்காரர், செம்படவர் முதலிய இனத்தாரின் பட்டப்பெயர், ஒருவகை வேளாண் வகுப்பார்

**நாட்டார்** - வழக்காற்றியல், சிற்றூர் மக்களின் வழக்காறுகளை ஆராயும் துறை

**நாட்டாள்** - கூலிவேலை செய்வோள்

**நாட்டான்** - தேசத்தான், வேளாண்மை மேற்பார்வையாளர்

**நாட்டிய நன்னூல்** - தமிழ்க்கூத்துத் தொடர்பான இசைக்களஞ்சிய நூல்

**நாட்டியம்** - கூத்து, கை முதலிய வற்றால் காட்டும் குறிப்பு

**நாட்டுக்கட்டை** - உழைத்து உரமேறிய கட்டுடல் கொண்ட சிற்றூர் ஆண் (அ) பெண்

**நாட்டுக்கணக்கன்** - ஊர்க் கணக்கன்

**நாட்டுக்குடிமக்கள்** - சிற்றூரில் வாழ்பவர்

**நாட்டுக்கூட்டம்** - மக்கள் கூட்டம்

**நாட்டுச்சரக்கு** - வெறிநீர் (சாராயம்), அயல் நாட்டு மதுபோல் சிற்றூர்ப் புறத்து பழக்கலவைக்காடி

**நாட்டுச்சருக்கரை** - கரும்புச்சாற்றில் காய்ச்சி எடுத்த பழுப்புச் சருக்கரை வகை, வெல்லச் சருக்கரை

**நாட்டுதல்** - நடுதல், நிலைநிறுத்தல், வாழ வைத்தல், படைத்தல், எழுதுதல்

**நாட்டுப்பண்டுவம்** - ஊரக மருத்துவம்

**நாட்டுப்பழம்** - நாட்டு வாழைப்பழம், ஒட்டுக்கனியில்லாத பழம்

**நாட்டுப்புறத்தான்** - பட்டிக்காட்டான், நகர நாகரிகமற்ற அறிவியல் பயன்பாட்டை அறியாதவன்

**நாட்டுப்புறப்பாடல்** - நாட்டார் வழக்காற்றுப் பாடல்

**நாடக நூல்** - நாடகவிலக்கண நூல்

**நாடகசாலை** - கூத்தரங்கு, நடனமகளிர் ஆடி அழைத்து வரும் புரவலர் வரும் கோயில்

**நாடகத்தமிழ்** - தமிழ்க் கூத்திலக்கியம்

**நாடகம்** - கதை நடிப்பு ,நாடகத் தமிழ், கூத்து

**நாடன்** - தேசத்தான், ஆளுந் தலைவன், குறிஞ்சி நிலத் தலைவன், கார்த்திகை விண்மீன்

**நாடி** - தாது, அரத்தக்குழாய், மாளிகை மேலுறுப்பு, தாழிகை, நாளம், வளி, ஊதை, பித்தம், சளி, இவற்றைக் குறிக்கும் நரம்பு நல்லரத்தக் குழாய் (தமனி)

**நாடுதல்** - தேடுதல், விரும்புதல், தெரிதல், அளத்தல்

**நாண்** - வெட்கம், கயிறு

**நாண்மகிழிருக்கை** - திருவோலக்கம்

**நாண்மலர்** - அன்றலர்ந்த மலர்

**நாண்மீன்** - விண்மீன்

**நாணயம்** - முத்திரைக்காசு, நேர்மை, வாக்கு தவறாமை

**நாணி** - வில் நாண்

**நாணிழல்** - காலை நிழல்

**நாத்தனார்** - இன்மை, நாசம், கணவனுடன் பிறந்தவள்

**நாத்திகம்** - இறைமறுப்புக்கொள்கை

**நாந்துதல்** - நனைதல்

**நாப்பண்** - நடு

**நாப்பு** - பரிகாசம்

**நாம்** - தன் முன்னிலை படர்க்கை, அச்சம்

**நாமகள்** - கலைமகள், நாமடந்தை

**நாமடந்தை** - நாமகள்

**நாமநீர்** - கடல்

**நாம்பு** - மெலிவு

**நாமயம்** - தற்போதம்

**நாமறுதல்** - முற்றும் அழிதல்

**நாமாவளி** - பெயர் வரிசை

**நாய்கன்** - வணிகன், தலைவன்

**நாய்ச்சி** - தலைவி

**நாயக்கன்** - ஒருவகைத் தெலுங்கு சாதியான், படைவீரன்

**நாயகம்** - தலைமை, சிவப்பு

**நாயகமணி** - நடுமணி

**நாயகன்** - தலைவன், கணவன், தந்தை

**நாயன்மார்** - கடவுளர், கடவுட்டன்மையர்

**நார்** - கயிறு, அன்பு, நூல், பன்னாடை

**நாரம்** - நீர், பாசி, அன்பு

**நாரன்** - மன்மதன்

**நாரிகை** - பெண்

**நாலுதல்** - தொங்குதல், தூக்கிட்டுக் கொள்ளல்

**நாவல்** - ஒருமரம், நாவலந்தீவு (இந்தியாவின் தொல் பெயர்), வெற்றியொலி, துக்கக்குறிப்பு

**நாவலர்** - புலவர், அமைச்சர்

**நாவாய்** - கப்பல், மரக்கலம், நாவாய்ப்பறை

**நாவி** - கத்தூரி, புழுகுப்பூனை, கொப்பூழ், மயிர்ச்சாந்து, நாவாய்

**நாவிகன்** - கப்பலோட்டி

**நாவிதன்** - அம்பட்டன், மருத்துவன்

**நாவுதல்** - நாவளைத்தல், நாப்புக் கட்டுதல்

**நாவை** - கொழுநுனி

**நாழ்** - குற்றம், செருக்கு

**நாழி** - படியளவு, நூனாழி, அம்பறாத் தூணி, ஏர்நாழி, நேர அளவு, நாடா

**நாழிகை வட்டம்** - கடிகாரம், மணிக்கடிகை

**நாள்** - காலம், பகல், நாண்மீன்

**நாளங்காடி** - பகற்கடை

**நாளடைவில்** - நாட்கள் செல்லச் செல்ல

**நாளந்தி** - சிறுகாலை

**நாளம்** - தண்டு, உட்துளை

**நாளார்** - இயமன்

**நாளிருக்கை** - நாளோலக்கம்

**நாளோலை** - நன்முழுத்த ஓலை

**நாற்றம்** - மணம், புலனறிவு, தோற்றம்

**நாற்றி** - நான்மடங்கு

**நாறுதல்** - மணத்தல், முளைத்தல், பிறத்தல், தோன்றுதல்

**நான்மாடக்கூடல்** - மதுரை மாநகர்

**நான்முகன்** - (பிரம்மன்), படைப்புத் தெய்வம், அருகன்

**நானம்** - மான்மணத்தி(கத்தூரி), புனுகு, கவரிமான், பூசுவன, நறுமணப்பொடி

**நானிலம்** - நிலம், உலகம், மண்ணுலகு, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நால்வகை நிலம்

**நிகண்டு** - தமிழ்ப் பாவகை அகராதி

**நிகர்-த்தல்** - ஒப்புமை, சமானம், ஒளி, போர், ஒத்தல், மாறுபடுதல், விளங்குதல்

**நிகரம்** - ஓமப்புகை கூட்டம், மொத்தம், கொடை, விழுங்குகை

**நிகழ்ச்சி** - சம்பவம், நிலைமை, காரியம்

**நிகழ்த்துதல்** - நடப்பித்தல், சொல்லுதல்

**நிகழ்தல்** - சம்பவித்தல், நடந்து வருதல், செல்லுதல், தங்குதல், நிறைவேறுதல், விளங்குதல்

**நிரப்பு** - நிறைவு, வறுமை

**நிரம்புதல்** - நிறைதல், மிகுதல், முழுமையாதல்

**நிரயம்** - நரகம்

**நிரல்** - வரிசை ,ஒப்பு

**நிரலுதல்** - ஒழுங்குபடுதல்

**நிர்வாகம்** - பொறுப்பு, ஆளுதல், பராமரித்தல்

**நிரவுதல்** - சமனாதல், குறைதீர்த்தல், பரவுதல், அழித்தல்

**நிரனிரை** - நிறத்த முறையே பொருள் கொள்ளல்

**நிரை** - வரிசை ,ஒழுங்கு ,பசுக்கூட்டம்

**நிரைச்சல்** - மறைப்பு, இரவல், படைவகுப்பு

**நிரைதல்** - நிரப்புதல், கோத்தல், பரப்புதல், ஒலித்தல், திரளுதல்

**நிலத்திணை** - அசையாப்பொருள்,

**நிலமகள்** - மண்மகள், பூ மகள், பூ தேவி

**நிலவறை** - மண்ணடியில் உள்ளறை, புவியுள்ளறை

**நிலவுதல்** - நிலைத்திருத்தல், வழங்குதல், ஒளிவிடுதல்

**நிலையம்** - தங்குமிடம், கோயில், மருதநிலந்தூர், படி, கூத்து

**நிலையுதல்** - நிலைபெறுகை

**நிலைவரம்** - நிலைபேறு, நிச்சயம், உறுதி, நிலைமை

**நிவத்தல்** - உயர்தல், படர்தல், மேல்வழிதல், தோன்றுதல்

**நிழுத்துதல்** - ஓய்தல், இல்லை என்றாக்குதல்

**நிழல்** - ஒளி

**நிழற்றுதல்** - நிழல் செய்தல், அருள்காட்டல், ஒளிவிடுதல்

**நிறத்தல்** - நிறம் பிடித்தல், கோபித்தல், பயனளித்தல்

**நிறம்** - இயல்பு, ஒளி, மார்பு, உயிர்நிலை, நடுவிடம், உடல், தோல், வண்ணம்

**நிறுதிட்டம்** - நேர்நிற்கை, விறைப்பு

**நிறுவுதல்** - நிலை நிறுத்தல்

**நிறை** - மாட்சிமை, அளவு, நிறுத்துகை, கற்பு, திண்மை, நீதி, நீர்ச்சால்

**நிறைமொழி** - மந்திரம், மாறாச்சொல், தவறாச்சொல்

**நினைவு** - ஆலோசனை, வருத்தம், மறவாமை, எண்ணம்

**நீ** - முன்னிலையொருமைப் பெயர்

**நீக்கம்** - தீங்குகை, பிளப்பு, நீளம், முடிவு, திறுவாய்,

**நீக்கு -தல்** - ஒழித்தல், கழித்தல், ஒதுக்குதல், அழித்தல்

**நீச்சு** - நீந்துகை, மீன்கவிச்சு

**நீட்டம்** - நீட்டுகை, நீளம்

**நீட்டித்தல்** - நீளச்செய்தல், காலம் தாழ்த்துதல்

**நீட்டுதல்** - நீளச்செய்தல், கொடுத்தல்

**நீடம்** - பறவைக்கூடு

**நீடுதல்** - நீளுதல், பரத்தல், தாமதித்தல், கெடுதல், நிலைத்தல்

**நீண்டவன்** - திருமால்

**நீத்தம்** - வெள்ளம், ஆழம், கடல், மிகுதி

**நீத்தல்** - பிரிதல், துறத்தல், தள்ளுதல், வெறுத்தல்

**நீத்து** - நீந்தத்தக்க ஆழம், வெள்ளம்

**நீதி** - முறைமை, ஒழுக்கம், அறம்வழுவாமை, மெய்

**நீர்** - தண்ணீர், கடல், ஒளி, குணம், முறை

**நீரகம்** - கடல் சூழ்ந்த இடம், புவி

**நீரணி** - நீர் விளையாட்டுக்கோலம்

**நீர்த்தல்** - நீராதல், ஈரமாதல்

**நீர்பிரிதல்** - சிறுநீர்க் கழிதல், கோபித்தல்

**நீர்மை** - நீரின்தன்மை, தன்மை, சிறந்தகுணம், ஒளி

**நீரரமகள்** - நீர் வாழ்த் தெய்வப்பெண்

**நீராஞ்சனம்** - மஞ்சள் நீர் ஆரத்தி

**நீராளம்** - நீர்த்தன்மை, நீர்மிகுதி

**நீலகண்டன்** - சிவன், கண்டம் கறுத்தவன்

**நீலமேனியன்** - திருமால்

**நீலி** - காளி, மலைமகள், துட்டை, கருநிறம்

**நீலோற்பலம்** - கருங்குவளை

**நீவாரம்** - வனநெல், குளநெல்

**நீவான்** - மாலுமி

**நீவி** - கொய்சகம், ஆடை

**நீவுதல்** - நீக்குதல், வருடுதல், கடத்தல், அறுத்தல், அழித்தல், பூசுதல், தடவிக்கொடுத்தல், கோதுதல், பரப்புதல்

**நீள** - நீளம், நெடுங்காலம், நெடுமை, தூரம்

**நீளம்** - பறவைக்கூடு

**நீற்றறை** - சுண்ணாம்புக் காளவாய்

**நீற்றுதல்** - நீறாக்குதல்

**நீறு** - சாம்பல், விபூதி, திருநீறு, புழுதி, நீற்றினச் சுண்ணாம்பு

**நுகம்** - நுகத்தடி, பாரம், நடுவுநிலைமை, வலிமை, கதவின் கணையமரம்

**நுகர்தல்** - பயன்படுத்தல், அருந்துதல், துய்த்தல், செய்தல்

**நுகும்பு** - குருத்து, ஓலை

**நுகைத்தல்** - இளகச்செய்தல்

**நுகைதல்** - தளர்தல், இளகுதல்

**நுகைவு** - இளக்கம், தளர்வு, பொருளுதவி

**நுங்குதல்** - விழுங்குதல், ஆரப்பருகுதல், உண்ணுதல், கைக்கொள்ளுதல்

**நுங்கை** - உன் தங்கை, உன்தாய்

**நுசுப்பு** - பெண்களின் இடை

**நுடக்குதல்** - கழுவுதல், துவட்டுதல், மாய்த்தல், கரைத்தல், மடக்குதல்

**நுடங்குதல்** - துவளுதல், அடங்குதல், அசைதல்

**நுணங்கு** - நுண்மை, தேமல்

**நுணங்குதல்** - அசைதல், நுட்பமாதல், வாடுதல், வளைதல், செறிதல்

**நுணல்** - தவளை

**நுணாவுதல்** - தடவித்தெரிதல், நாவால் தடவியுணர்தல்

**நுணித்தல்** - கூர்மையாக்குதல், பொடியாக்குதல், நுணுகிஆராய்தல்

**நுணுகுதல்** - நுட்பமாதல், கூர்மையாதல்

**நுதல்** - நெற்றி, மேலிடம், புருவம், தலை

**நுதலுதல்** - தோற்றுவித்தல், கூறுதல், கருதுதல்

**நுதனாட்டி** - துர்க்கை

**நுதி** - நுனி, முனை, கூர்மை

**நுதித்தல்** - தள்ளுதல், தூண்டுதல்

**நுவணை** - நுட்பம், இடிமா, கல்வி நூல்

**நுவலுதல்** - சொல்லுதல், கூறுதல், இயம்புதல், விரும்புதல்

**நுவ்வை** - நுங்கை

**நுவறுதல்** - அராவுதல்

**நுழுத்துதல்** - நுழைத்தல், பதுங்கல், முடித்தல்

**நுழை** - சிறுவழி, குகை

**நுழைபுலம்** - நுண்ணறிவு

**நுளம்பு** - கொசுகு

**நுளையர்** - வலைஞர், ஈனர்

**நுறுங்கு** - குறுணி

**நுனித்தல்** - கூர்ந்துநோக்கல், கூராக்கல்

**நுனை** - முனை

**நூ** - எள், யானை, அணிகலன்

**நூக்குதல்** - பொடியாக்குதல், தள்ளுதல், ஊசலாடுதல், தூண்டுதல், சாத்துதல், எறிதல்

**நூங்கு** - பெருமை, மிகுதி

**நூல்** - பஞ்சுநூல், தாலி, ஆகமம், சூழ்ந்தாய், கல்வி, புத்தகம்

**நூல் வெண்மாடம்** - கூடாரம்

**நூலாக்கலிங்கம்** - பட்டாடை

**நூழில்** - கொன்று குவிக்கை, தொளை, ஒருகொடி, யானை, அலை, செக்கு

**நூழை** - தொளை, சிறுவாயில், குகை

**நூறு** - ஓர் எண், தொண்ணூற்றொன்பதுக்கு அடுத்த எண், சுண்ணாம்பு, பொடி

**நூறு-தல்** - அழுத்தல், வெட்டுதல், அறைந்துகொல்லுதல், துரத்தல், நெறித்தல்

**நூன்முகம்** - பாயிரம்

**நூனாழி** - நெசவு நாடா

**நெக்கு** - நெகிழ்ச்சி, உடைபடல்

**நெகிடி** - நெருப்புக்குவை

**நெகிழ்தல்** - கட்டுத்தளர்தல், இளகுதல், மனமிறங்குதல்

**நெங்கானாரை** - சிவந்த கால் களுடைய நாரை வகைப்பறவை

**நெஞ்சு**- மனம், மார்பு, தொண்டை

**நெட்டாங்கம்** - செருக்கு, பழிப்பு

**நெட்டாங்கு** - செங்குத்து

**நெட்டிடை** - நெடுந்தூரம்

**நெட்டு** - நெடுந்தூரம், செருக்கு

**நெட்டுயிர்ப்பு** - பெருமூச்சு

**நெட்டுரு** - மனப்பாடம்

**நெட்டெழுத்து** - நெடில், கையெழுத்து

**நெட்டை** - ஒருவகைக்கருவி

**நெட்டோலை** - திருமுகம்

**நெடி** - சிள்வண்டு, காரநாற்றம்

**நெடி(த்)தல்** - காலந்தாழ்த்தல்

**நெடியோன்** - திருமால், பெரியோன்

**நெடில்** - நெட்டெழுத்து, மூங்கில்

**நெடிலடி** - ஐந்து சீரால் அமைந்த செய்யுளடி

**நெடுங்கணக்கு** - அரிச்சுவடி, நெடுநாட்கணக்கு

**நெடுங்கை** - யானை

**நெடுஞ்சாண்கிடை** - நெடுக்காகத் தரையிற்கிடக்கை

**நெடுநீர்** - கடல், ஆழமாகியநீர், நீட்டித்துச் செய்யும் இயல்பு

**நெடுமை** - நீட்சி, கொடுமை, ஆழம்

**நெடுமொழி** - புகழ்ச்சொல், வஞ்சினம்

**நெடுவரி** - ஒழுங்கு

**நெண்டுதல்** - நொண்டுதல், தோண்டுதல்

**நெதி** - செல்வம், முத்து, தியானம்

**நெம்பு** - மேலெழும்புகை, மடலாணி, ஏணிப்படி

**நெய்** - தேன், குருதி, நட்பு

**நெய்த்தல்** - ஒளிர்தல், கொழுத்தல்

**நெய்த்தோர்** - அரத்தம்

**நெய்தல்** - வெள்ளாம்பல், செங்கழுநீர், கடல்சார்நிலம், இரங்கல், சாப்பறை

**நெய்யணி** - பிள்ளைப்பேற்றின் பின் முதல் முழுக்கு

**நெய்யரி** - பன்னாடை

**நெரி-தல்** - நொறுங்குதல், வளைதல், நெருங்குதல்

**நெரியல்** - மிளகு

**நெருடு** - கோணல், வஞ்சனை, நிமிண்டுகை, தடவுகை

**நெருநல்** - நேற்று

**நெற்றி** - கொண்டை

**நெற்று** - உலர்ந்த பழம், நெறிப்பு, மோதுகை

**நெறி** - வளைவு, சுரள், சமயம், வீதி, ஒழுக்கம், வழி, கட்டி

**நெறி(த்)தல்** - வளைத்தல், நிமிர்த்தல்

**நெறிநீர்** - கடல்

**நென்னல்** - முன்னாள்

**நே** - அன்பு, அருள்

**நேசம்** - அன்பு, தகுதி

**நேடுதல்** - தேடுதல், எண்ணுதல்

**நேதி** - முறை

**நேமி** - தேருருளை, வட்டம், சக்கரப்படைக்கலன், புவி

**நேயம்** - நேசம், பக்தி, நெய், தன்மை

**நேர்** - செவ்வை, நேர்மை, பாதி, வலிமை, ஊர்த்துவம் (ஓர் உவம உருபு)

**நேர்த்திக்கடன்** - குலதெய்வத்திற்கு வேண்டுதலை நிறைவேற்றல்

**நேர்தல்** - உடன்படுதல், பொருந் துதல், எதிர்ப்படுதல், பெறுதல், கொடுத்தல், நிகழ்தல், சொல்லுதல்

**நேர்ந்தார்** - நண்பர்

**நேர்மை** - செம்மை, நீதி

**நேரலன்** - பகைவன், நேர்மை யானவன்

**நேரிசம்** - எறிபடை, அம்பு வகை

**நேரிழை** - பெண்

**நை** - இகழ்ச்சிக்குறிப்பு

**நை(த்)தல்** - நசுங்குதல், எரித்தல்

**நை-தல்** - நசுங்குதல், குறைதல், வருந்துதல், இரங்குதல்

**நையல்** - மெலியச்செய்யும் நோய்

**நையாண்டி** - சிரிப்புப்பேச்சு, பகடி, நாட்டுப்புறப்பாடல்

**நைவரல்** - இரங்குதல்

**நைவளம்** - பாலைப்பண், குறிஞ்சி, யாழ்த்திறம்

**நொ** - துன்பம், நோய், மென்மை

**நொக்குதல்** - உண்டு குறைத்தல், அடித்தல்

**நொங்குதல்** - விழுங்குதல்

**நொச்சி** - ஒரு பூ வகை, எளில்காத்தல், மதில், சிற்றூர்

**நொசி-தல்** - அருமையாதல், வளைதல், துவளுதல், வருந்துதல்

**நொடி(ந்)தல்** - சொல்லுதல், பழித்தல், ஒடித்தல், விடுவித்தல்

**நொடிதல்** - சொல்லுதல், ஒடிதல்

**நொடுத்தல்** - விற்றல்

**நொடை** - விற்கை, விலை, பல பண்டம்

**நொண்டு** - முகந்து

**நொதி** - பெருஞ்சோறு

**நொதுத்தல்** - தளர்தல், அழித்தல்

**நொதுமல்** - அயல், மென்மை, புறக்கணித்தல், அலட்சியப்படுத்துதல்

**நொந்தார்** - பகைவர்

**நொந்து-தல்** - அழிதல், தூண்டுதல்

**நொய்** - தவிடு

**நொய்-தல்** - நுண்மை

**நொய்து** - இழிவு, விரைவு

**நொய்ப்பம்** - சமர்த்து

**நொவ்வல்** - துன்பம்

**நொவ்விதாக** - விரைவாக

**நொள்குதல்** - சுருங்குதல்

**நொள்ளை** - வண்டுவகை

**நொறில்** - விரைவு, ஒடுக்கம், நுடக்கம்

**நொறுக்குதல்** - பொடியாக்கல், நையப் புடைத்தல்

**நொறுங்கு** - சிறுநொய்

**நொறுவை** - சிற்றுண்டி

**நோக்கம்** - கண், பார்வை, அழகு, அறிவு, விருப்பம்

**நோக்கன்** - கழைக்கூத்தன்

**நோட்டம்** - மணிஆய்வு, மதிப்பு

**நோதல்** - வருந்துதல், வறுமைப்படுதல், இரங்குதல்

**நோய்** - வருத்தம், துன்பம், பிணி

**நோலை** - எள்ளுருண்டை

**நோற்றல்** - பொறுத்தல், தவஞ்செய்தல்

**நோன்பு** - விரதம், தவம்

**நோன்மை** - பொறுமை, வலிமை

**நோன்றல்** - நோற்றல்

**நோன்றார்** - போரை அஞ்சாது எதிர்கொள்பவர்

**நோன்றாள்** - வலிய கால்

**நோனார்** - போர் புரிய ஆற்றாதவர்

**நோனாமை** - சகியாமை, அழுக்காறு

**நௌ** - மரக்கலம்

**நௌவி** - மான்

**பஃது** - பத்து

**பஃறுளி** - குமரிக் கண்டத்தில் ஓடிய கடல் கொண்ட ஆறு

**பக்ககம்** - பக்கம், பின் வாசற்கதவு

**பக்கணம்** - வேட்டுவர் குடியிருப்பு, ஊர், அயல்நாட்டுப் பண்டம் விற்குமிடம், சிற்றுண்டி, நொறுக்குத்தீனி, தின்பண்டம்

**பக்கம்** - சாரி, மருங்கு, விலாப்புறம், அருகு, இடம், நாடு, வீடு, சிறகு, அம்பிறகு, வால், நட்பு, அன்பு, சுற்றம், தலைமுறை, படை, அரசயானை, பிறைநாள், பதினைந்து கொண்ட காலம், கூறு, பொத்தகத்தின் பக்கம், நூல், கோட்பாடு, துணி பொருளுள்ள இடம், தன்மை, கையணி, நரை

**பக்கரை** - அங்கவடி, அடிக்கொளுவி, சேணம், பை

**பக்கல்** - நாள், மாதநாள், பக்கம், இனம்

**பக்கறை** - துணியுறை, குழப்பம்

**பக்கிரு** - வெடித்தல், வகுப்படுதல், திடுக்கிடுதல், அறிடும் புண் மேல் வடு உண்டாதல்

**பக்கிள்** - கோட்டான்

**பக்கு** - பிளப்பு, கவர்படுகை, பை, மரப்பட்டை, புண்ணின் அசறு,

பல்லின் பற்று, உலர்ந்த மூக்குச்சளி, சோறு முதலியவற்றால் உண்டாகும் பொருக்கு

**பக்குவம்** - அளவுத்தன்மை, சரியாக சமைத்தல் முறை, முதிர்ச்சி நிலை, பூக்கும் காய்க்கும் பழுக்கும் நிலைக்கானக் காலம், பருவம், ஒருவரின் நிலையறிந்து செயல்படும் தன்மை

**பகட்டு** - மினுக்கு, மயக்கு, கவர்ச்சி

**பகடி** - எள்ளல், சகையாட்டு, கூத்தாடி, கடைப்பெயர், வீட்டைக் காலி செய்யக் கொடுக்கப்படும் கூடுதல் பணம்

**பகடு** - பெருமை, எருது, தோணி

**பகடை** - சூதின் தாயத்திலொன்று, எதிர்பாரா ஆ கூழ், போர் வீரன், துன்பம்

**பகம்** - மிகுசெல்வம்

**பகர வளைவு** - 'ப' உள்ள அடைப்புக்குறி

**பகர்தல்** - சொல்லுதல், கூறுதல், ஒளிர்தல், பெயர்தல்

**பகர்பவர்** - விற்பவர்

**பகரம்** - ஒளி, அழகு, மாற்று

**பகல்** - பகுக்கை, நண்பகல், நடுவு நிலைமை, கதிர் உதயம் முதல் மறைவு உள்ள பொழுது, அக்குள், பலருடன் கூடாமை.

**பகலிடுக்கை** - நாளோக்கம், மண்டபம்

**பகலோன்** - கதிரவன்

**பகவன்** - கடவுள், தெய்வம், அருகன்

**பகவான்** - கடவுள், தெய்வம்

**பகவு** - துண்டு, பங்கு, வெடிப்பு

**பகழி** -அம்பு, அம்புக்குதை

**பகளி** - ஐம்பது வெற்றிலைக் கொண்ட ஒரு கட்டு

**பகன்** - கதிர் கடவுளருள் ஒருவன்

**பகன்றை** - சீந்தில் கொடி, பூடுவகை

**பகாரம்** - அழகு, 'ப' எழுத்தைக் குறிக்கும்

**பகிர்வு** -பங்கீடு

**பகீரெனல்** - அச்சக்குறிப்பு

**பகுத்தல்** - பிளத்தல், பங்கிடுதல்

**பகுத்தறிவு** - பகுத்தறியும் திறன்

**பகுதி** - பகுப்பு, வேறுபாடு, வருவாய் வட்ட உட்பிரிவு

**பகுதியெண்** - கீழ்வாய் இலக்க வெண்ணிற்கு கீழ்ருக்கும் எண்

**பகுபதம்** - முதனிலை, ஈறு முதலியனவாக பிரிக்கக் கூடிய மொழி

**பகுப்பு** - பிரிவு, பிரிப்பு

**பகுவாய்** - அகன்ற வாய், தாழி, பிளந்தவாய்

**பகைமை** - எதிர்ப்பு, எதிரி

**பங்கம்** - தோல்வி, குற்றம், கேடு, வெட்கம், இடர்

**பங்களிப்பு** - ஒன்றிற்குத் தன் பங்காய் வழங்குவது

**பங்கறை** - அழகின்மை, அழகிலி

**பங்காளி** - உடன் கூட்டாளி, சிற்றப்பன் பெரியப்பன் பிள்ளைகள், சகோதர உறவு, தாயாதி

**பங்கிடுத்தல்** - பகுத்தல், பங்கிடல்

**பங்கீடு** - பங்கிடுகை, வகுத்தல் கணக்கு

**பங்கு** - பாகம். 2 ஏக்கர் நன்செய், 16 ஏக்கர் புன்செய் நிலப்பரப்பு

**பங்குனி** - கதிர் ஆண்டின் பன்னிரெண்டாம் ஆண்டு

**பசகன்** - சமையற்காரன்

**பச்சடி** - தொடுகறி, நற்பேறு

**பச்சரிசி** - நெல்லைப் புழுக்காமல் அரைத்த அரிசி

**பச்சிலை** - பச்சை இலை, மருத்துவ இயல்பு கொண்ட இலை

**பச்சை** - பசுமை நிறம், பச்சைக்கல், வெற்றிலை, வேகாதது, திருமால், நாகரிகமற்றப் பேச்சு

**பச்சைக் குழந்தை** - வளரிளங் குழந்தை, கைக்குழந்தை

**பச்சைப்பாண்டம்** - சுடப்படா மண்கலன்

**பச்சைமண்** - ஈரமண், வேகாமண், இளங்குழந்தை

**பச்சையம்** - இலைகளுக்கு பசுமை நிறம் தரும் இயற்கைப் பொருள்

**பசத்தல்** - பசுமையாதல், காமத்ததால் மேனி பசுமைநிறம் மாறுதல் (பொன்னிறப் புள்ளியுண்டாதல்)

**பசப்பு** - பசுமை நிறம், பிரிவாற்றா மையால் மகளிருக்கு உண்டாகும் நிறவேறுபாடு, ஈரப்பற்று, வளம், பொன்வண்ணம்

**பசப்புதல்** - இன்முகங்காட்டி ஏமாற்றுதல்

**பசம்பை** - கழுத்து, மரமிணைக்கை

**பசலை** - அழகுத்தேமல், பொன்னிறம், இளமை, காமத்தால் உண்டாகும் நிற வேறுபாடு

**பசி** - உணவு வேட்கை, வறுமை, தீ

**பசுங்காய்** - முற்றாத தவசம், இளங்காய், பாக்கு வகை

**பசுப்பு** - பசுமை, பசுமை கலந்த மஞ்சள் நிறம்

**பசுமை** - பச்சை நிறம், குளிர்ச்சி, இளமை, செல்வம்

**பசுமைப்புரட்சி** - புதுமை முறைகளால் குறுகிய காலத்தில் அதிக விளைச்சலைப் பெறும் வேளாண் மாற்றம்

**பசை** - ஒட்டி, செல்வம், பற்று, அன்பு

**பஞ்சடைதல்** - பசி முதலியவற்றால் பார்வை மங்குதல்

**பஞ்சணை** - பஞ்சு மெத்தை

**பஞ்சம்** - சிறுவிளைக்காலம், வறட்சியால் உணவு கிடைக்காமை

**பஞ்சமரபு** - அறிவாரின் இசைத்த தமிழ் நூல்

**பஞ்சரம்** - பறவை அடைக்கும் கூடு, உடம்பு, இடம், கழுகு

**பஞ்சை** - வற்கடம், நல்குரவு, வறியவன்

**பட்டங்கட்டுதல்** - பட்டப்பெயர் சூட்டுதல், அரசபதவி, மணப் பெண்ணிற்கு நெற்றியில் பொற்பட்டைக் கட்டுதல்

**பட்டடை** - அடைகல், கொல்லன் களறி, குவியன், தேர்த்தட்டு

**பட்டணம்** - கடற்கரையில் அமையா

நகரம்

**பட்டப்பெயர்** - சிறப்புப்பெயர், புனைவுப் பெயர்

**பட்டம்** - பருவம், வழி, நெற்றியில் அணியும் பொற்றகடு, ஆட்சி, கல்விச் சான்றிதழ்

**பட்டமரம்** - உலர்ந்த மரமம்

**பட்டயம்** - அரசன் அளிக்கும் செப்பு ஆவணம், அட்டவணை, அரசு ஆவணம்

**பட்டயம்** - வாள், செப்புப் பட்டயம், பட்டா, குறிப்பிட்டக் கல்விச் சான்றிதழ்

**பட்டறை** - இயந்திரம், தொழிற்சாலை

**பட்டறைச்சீலை** - உப்புத்தாள்

**பட்டன்** - புலவன், தெய்வம், பூசாரி

**பட்டா** - வண்டிச்சக்கரத்தின் மேலிட்ட இரும்புப் பட்டம்

**பட்டாங்கு** - இயல்பு நிலைமை, உண்மை, ஓவியச்சிலை

**பட்டாடை** - பட்டுடை

**பட்டாம்பூச்சி** - வண்ணத்துப்பு+ச்சி

**பட்டி** - ஆன் கொட்டில், ஆட்டுக்கிடை, சிற்றூர், இடம், சீலை, புண்ணைக் கட்டும் சீலை, வெற்றிலைப்பாக்குச் சுருள்

**பட்டிக்காடு** - சிற்றூர், நாகரிகமிலி

**பட்டிக்கிடா** - பொலி எருது

**பட்டிகை** - தெப்பம், மேகலை, தாழை, அரைக்கச்சை, சீலை, சீந்தில், இடையிலுடுத்தும் ஆடை

**பட்டிபார்த்தல்** - தச்சு வேலை, செம்மைசெய்தல், குறையை சரிசெய்தல்

**பட்டிமண்டபம்** - கலைபயில் கூடம், ஓலக்கமண்டபம்

**பட்டைச்சாராயம்** - வெள்வேல் முதலிய மரங்களில் இருந்து இறக்கும் சாராயம்

**பட்டைச்சோறு** - இறைவனுக்குப் படைக்கப்படும் சோற்றுக்கட்டி

**பட்டோலை** - எழுத அமைக்கப்பட்ட ஓலை

**பட்பு** - குணம், இயல்பு

**படகம்** - சிறுபறை வகை, போர்ப்பறை

**படகு** - சிற்றோடம்

**படங்கம்** - கூடாரம்

**படங்கு** - ஆடை

**படப்பமம்** - மருங்கிலூர் சூழ்ந்த நகரம்

**படப்பு** - வைக்கோற்போர், கொல்லை

**படப்பை** - தோட்டக்கூறு, புழக்கடை, ஆன் கொட்டில்

**படம்** - சீலை, போர்வை, சித்திரம் எழுதிய படம், பாம்பின் விரிந்த தலை, திரைப்படம்

**படர்க்கை** - இடம் மூன்றனுள் தன்மை, முன்னிலை அல்லாத இடம்

**படர்ச்சி** - செலவு, ஊழ்வினை, கொடியோடுதல்

**படர்தல்** - ஓடுதல், பரவல், கிளைத்தோடுதல், அடைதல், செல்லுகை, படைவீரர்

**படர்தாமரை** - தோல்நோய்

**படல்** - அடைப்பு, மறைப்புத்தட்டி, உறுக்கம்

**படலம்** - கூட்டம், நூலின் பகுதி, கண்படலம், சவ்வு

**படலை** - படர்கை, தழை, பரந்த இடம், கூட்டம், குலையில் உள்ள சீப்பு

**படன்** - படை வீரன், பேய், இழிந்தோன்

**படாகை** - கொடி, கூட்டம், தொழிலாளர்களின் ஊர்ப்புறக் குடிசை

**படாம்** - சீலை, திரைச்சீலை, பெருங்கொடி

**படாரி** - சிற்றூர் காவல் தெய்வம்

**படி** - கல் - ஏணிப்படி, நிலை, தன்மை, குதிரைக்கலனை, தகுதி, முறைமை, வழி, பகை, உசமை, ஒத்தபடி

**படிக்கட்டு** - மாடிப்படிக்கட்டு, நிறைகல்

**படிக்கம்** - எச்சில் உமிழும் கலம், புனித நீர் சேர்க்கும் ஏனம்

**படிக்காசு** - நாட்செலவுக்குக் கொடுக்கும் பணம்

**படிக்காரம்** - சீனக்காரம்

**படிக்கால்** - ஏணி

**படிகம்** - பளிங்கு

**படிசம்** - தூண்டில், அறுவைசிகிச்சைக் கத்தி

**படி-த்தல்** - எழுதியதை சொற்களில் பலுக்குதல், கற்றல், சொல்லுதல், பழகுதல், வணங்கிப் போற்றுதல்

**படித்துறை** - நீர்த்துறை

**படி-தல்** - அடியிறங்குதல், பாலேடு முதலியன உண்டாகிப்பரவுதல், தங்குதல்

**படிமம்** - சிலை, சான்று, வடிவம், நோன்பு, தவம்

**படிமேடை** - உயர்ந்தமைந்த இருக்கை வரிசை

**படியான்** - படி பெற்றுப் பயிரிடும் குடித்தனக்காரன், உழவர், குடியானவர்

**படியோலை** - மூலத்தைப் பார்த்து எழுதிய ஓலை

**படிவம்** - வழிபடு தெய்வம், உடம்பு, உருவம், தவம், அச்சிட்ட மடிப்புத்தாள்

**படிற்றுறை** - பொய்யுரை

**படிறன்** - பொய்யன், திருடன், காமுகன், தீயன்

**படிறு** - பொய், கொடுமை

**படீரம்** - சந்தனம்

**படு** - கிடத்தல்

**படுக்களம்** - போர்க்களம், தொந்தரவு

**படுக்கை** - படுத்தல், பாயல்

**படுகண்ணி** - அணிகலனில் கொக்குவால் மாட்டப்படும் உறுப்பு

**படுகர்** - நீலமலைவாழ் பழங்குடி மக்கள், பள்ளம், இழிந்தேறும் வழி

**படுகிடை** - நோயால் எழவியலா நிலை, எண்ணம் நிறைவேற எடுக்கும் ஒட்டார முயற்சி

**படுகை** - ஆற்றோரநிலம், நீர்நிலை

**படுஞாயிறு** - மறைகதிர், மாலைத் தொடங்கி நள்ளிரவில் நீங்கும் தலைவலி

**படுத்தல்** - செய்தல், துன்புறுத்தல், ஒழித்தல்

**படுத்துதல்** - இன்னல் விளைவித்தல், துன்புறுத்துதல்

**படு-தல்** - உண்டாதல், நிகழ்தல், அழிதல், சாய்தல், பாய்தல்,

புதைக்கப்படுதல், உடன்படுதல், ஒத்தல், முட்டுதல், பெரிதாதல்

**படுபொருள்** - புதையல், மிகுதியாய்த் தேடியப்பொருள், நிகழ்வது

**படை வீடு** - பாசறை, தலைநகர், முருகனின் ஆறு திருத்தலங்கள்

**படைக்கலம்** - போர்க்கருவி

**படைசால்** - உழவுசால், தொலைவின் ஓர் அளவு

**படைஞர்** - படைவீரர்

**படை-த்தல்** - உண்டாக்குதல், பரிமாறுதல், தெய்வப்படையல்

**படைப்பு** - ஆக்கல், உருவாக்கல், காடு, உணவுப்படைத்தல், காணிக்கையாக்கல்

**பண்** - இசை, நரம்புக்கருவிகள்

**பண்டம்** - பொருள், ஏனம், பணியாரம்

**பண்டமாற்று** - ஒரு பொருளைக் கொடுத்து வேறொரு பொருளைக் பெறுதல்

**பண்டாரம்** - கருவூலம், களஞ்சியம், பூசாரிகள், பொது, மடத்துறவி, பூக்கட்டி விற்போர்

**பண்டிதம்** - கல்வித்திறம்

**பண்டிதன்** - புலவன், மருத்துவன், முடித்திருத்துவோர், அறிவன்

**பண்டு** - முற்காலம்

**பண்டுவம்** - மருத்துவம்

**பண்டுவன்** - முடித்திருத்துவோர்க் குரியப் பட்டபெயர்

**பண்டை** - பழமை, தொன்மைக் காலம்

**பண்ணடுதல்** - செம்மைசெய்தல், செப்பமாக்கல், உதவுதல்

**பண்ணத்தி** - உரையும் பாட்டுமாகச் செய்யப்பட்ட ஒருவகைப் பனுவல்

**பண்ணவன்** - இறைவன், தேவன், பாணன், முனிவன்

**பண்ணாடி** - பண்ணையை ஆளுமை

**பண்ணியம்** - பண்டம், பணியாரம், விற்கப்படும்பொருள்

**பண்ணுதல்** - செய்தல், இசையமைத்தல், சமைத்தல், இசைத்தல்

**பண்ணை** - மருதநிலம், வயல், நீர்நிலை

**பண்ணைவீடு** - பெருநிலக்கிழார் இல்லம், மடைப்பள்ளி, பண்டகசாலை

**பண்பாடு** - திருந்திய ஒழுக்கம், உள்ளச்செம்மை

**பண்பு** - வண்ணம், இயல்பு, செய்கை

**பண்புத்தொகை** - சிறப்பிப்பதும் சிறப்பிக்கப்படுவதுமாகிய சொற்களால் ஆகிய தொகை

**பணம்** - பொருள், அரசால் வெளியிடப்படும் மாழை, தாள் முதலான தொகை, விலை

**பணயம்** - பந்தயப் பொருள்

**பணவிடை** - பணம் ஒருவருக்கு அஞ்சலக வழி அனுப்பும் முறை

**பணி** - செயல், தொழில், தொண்டு, நுகர் பொருள்

**பணிக்கன்** - ஆசிரியன், தச்சன், தலைமைக் கொற்றன்

**பணித்தல்** - தாழ்த்துதல், குறைத்தல், மிதித்தல்

**பணி-தல்** - கீழ்ப்படிதல், தாழ்தல், எளிமையாதல்

**பணிமனை** - பேருந்துகளை நிறுத்தி வைக்கவும், பழுது பார்க்கவும் பயன்படும், இடம்

**பணிமொழி** - கட்டளை

**பணியாரம்** - தின்பண்டம்

**பணியாளர்** - வேலை செய்பவர்

**பணிவிடை** - குற்றேவல், திருப்பணி, தொழில், கட்டளை

**பணிவு** - கீழ்ப்படிகை, வணக்கம்

**பத்தம்** - கட்டு, உண்மை, உணவு, கட்டுபாட்டுணர்வு

**பத்தர்** - தட்டார் பட்டப்பெயருள் ஒன்று, அடியார், பொற்கொல்லர், வீரச்சி வனியரில் புல்லுணவு வகுப்பினர்

**பத்தி** - வரிசை, வகுப்பு, பாத்தி, வீட்டிறப்பு, முறைமை, இறைப்பற்று, ஒழுக்கம்

**பத்திமை** - இறைப்பற்றுடைமை, காதல்

**பத்தியம்** - மருந்திற்கேற்ற உணவு, நலம், உன்னிப்பு, பூவாது காய்க்கும் மரம்

**பத்து-தல்** - கால்நடைகளை ஓரிடத்திலிருந்து போகுமாறு விரட்டுதல், கட்டிப்போடுதல், கூட்டி வருதல், ஒன்பதோடு ஒன்று கூடிய எண், பத்தாம் பிறை நாள், இறந்த பத்தாம் நாள் செய்யும் சிறப்புச் சடங்கு, மூலிகை மருந்தை அரைத்து உடலில் பூசுதல், சமையல் ஏனங்களில் ஒட்டியுள்ள உணவுப்பொருக்கு

**பத்தை** - சிறுதுண்டு, மண்ணுடன் கூடிய பசும்புற்றுண்டு குயவனார் மண்பாண்டம் அறுக்கும் கருவி

**பதக்கம்** - தொங்கல் அணி

**பதடி** - பதர், உமி, பயனின்மை ,வில்

**பதநீர்** - இனிப்புகள்

**பதம்** - பக்குவம், ஈரம், இனிமை, அழகு, தகுதி, கால், செய்யுளடி, நாலில் ஒன்று, 27 நாள்மீன்களுள் ஒன்று, பதவி, தெய்வப்பதவி, தரம், ஒளி

**பதர்** - உள்ளீடற்ற நெல், பயனற்றவன், பயனின்மை, குற்றம், அறிவிலி

**பதவி** - நிலை, வழி, புண்ணிய உலகு, சிவபதம், முத்திநிலை

**பதற்றம்** - பரபரப்பு நிலை

**பதறு-தல்** - கலங்குதல், திட்டமின்றி பரபரப்பிற்கு ஆளாதல்

**பதனம்** - பாதுகாப்பு, மிகுவிழிப்பு, சிறப்புக்கவனம்

**பதாகை** - விருதுக்கொடி, பெருங்குடி, ஆடல் முத்திரை, பெருவிரலை மட்டும் தாழ்த்தி ஏனையவற்றை உயர்த்துதல்

**பதி** - அமுத்துதல், மணி முதலியன இழைத்தல், பதியம் போடுதல், எழுதுதல், பதிகை, நாற்று, வீடு, ஊர், நாள், பதிவிளக்கு

**பதி-தல்** - முத்திரை எழுத்தச்சு முதலியன அழுத்துதல், தாழ்ந்திருத்தல், ஆழ்தல், ஊன்றுதல், அமைதியாதல், விலை தணிதல், அச்சத்தால் இணங்குதல்

**பதிப்பு** - நூல்அச்சிடுதல், பதிய அழுத்துகை, அச்சான நூல்

**பதியம்** - நாற்று ஊன்றி நடும் செடி, இலைப்பாசி

**பதிவாளர்** - ஆவணப்பதிவாளர், கல்விப்பணி அல்லாத ஆளவினைப் பொறுப்பதிகாரி

**பதிவு** - அழுந்துகை, மனம் ஊன்றுகை, பள்ளம், பதியம்

**பதிவேடு** - அலுவலகங்களில் முறைப்படி எழுதி வைக்கும் சுவடி

**பதுக்கல்** - சட்டத்திற்கு புறம்பாக பொருள்களை மறைத்து வைத்தல்

**பதுக்கு-தல்** - ஒளித்தல், உயர் விலைக்கு விற்க மறைத்து வைக்கும் பொருள்

**பதுக்கை** - கற்குவியல், இலைக் குவியல், மணற்குன்று, பாறை

**பதுமை** - பாவை, உருவச்சிலை

**பதைத்தல்** - துடித்தல், வருத்துதல், நடுங்குதல், பதற்றமடைதல்

**பந்தம்** - தீவட்டி, நெருப்புப்பந்தம்

**பந்தயம்** - போட்டி, இதுதான் முடிவு அல்லது வெற்றி என்று முன் கூட்டிக் கூறி கட்டும் பணம்

**பந்தல்** - நிழலுக்காக வேயப்படும் கீற்றுக்கூரை

**பந்தாயம்** - தவசமிட்டு வைக்கும் களஞ்சியம், பெரும்பெட்டகம், விலங்ககடைக்கும் கூடு, எலிப்பொறி

**பந்தி** - ஒழுங்கு, உண்பதற்கு அமர்ந்த வரிசை

**பந்து** - சுற்றம், உருண்டையான விளையாட்டுப்பொருள், கட்டு, சூழ்ச்சி செய்தல்

**பம்பரம்** - விளையாட்டுக்கருவி

**பம்பல்** - பரந்தவடிவு, ஒலி, களிப்பு, பொலிவு, ஒலித்தல்

**பம்மல்** - மூட்டம், தையல் நூலோட்டம், ஓர் ஊர்ப்பெயர்

**பம்முதல்** - முகில்மூட்டம், மறைதல், செறிதல், ஒலித்தல்

**பய-த்தல்** - விளைதல், உண்டாதல், பயனளித்தல், கிடைத்தல்

**பயறு** - மொச்சை, உளுந்து, துவரை போன்றவற்றின் முழுப்பருப்பு

**பயன்** - செயலின் விளைவு, நன்மை, ஏந்து

**பயன்பாடு** - பயன்தரு தன்மை, நன்னுகர்ச்சி

**பயிர்ப்பு** - அருவருப்பு, மகளிரின் நான்கனுள் ஒருகுணம், மனங் கொள்ளாமை, பிசின், தூய்மை யற்றது

**பயிலகம்** - தட்டச்சு சுருக்கெழுத்து முதலியன பயிலும் நிறுவனம்

**பயில்-தல்** - தேர்ச்சியடைதல், பழகுதல், நிகழ்தல், நெருங்குதல், நடமாடுதல், தங்குதல்

**பயிலரங்கம்** - கலந்துரையாடல் மூலமும் செய்முறை மூலமும் கற்பிக்கும் குறுகிய காலப்பயிற்சி

**பயிற்சி** - வேலை விளையாட்டுப் போன்றவற்றில் பட்டறிவு பெற பழகிக் கொள்ளும் முறை

**பயிற்று-தல்** - பழக்குதல், கற்பித்தல், செய்தல், கெளுவுதல்

**பரட்டை** - பரந்து கிடக்கும் எண்ணெய் தடவா தலைமுடி

**பரண்** - அறையின் மேற்கூரையில் கடடித் தொங்கவிடப்பட்ட பொருள்கள் வைக்கும் தளம், காவல்மேடை, மச்சு, மேற்றட்டு

**பர-த்தல்** - பரவுதல், தட்டையாதல், அலமருதல்

**பரத்தை** - பொதுமகள், விலைமகள், பரத்தைமைத்தனம்

**பரதவர்** - நெய்தல் நில மக்கள், தென்திசையாண்ட குறுநில மன்னர்

**பரதன்** - மீனவன், கடலோடி

**பரப்பு-தல்** - பரவச்செய்தல், விரித்தல், ஒழுங்கின்றி வைத்தல்

**பரபரப்பு** - அமைதியும் பொறுமையும் இழந்த நிலை, கவனத்தை ஈர்த்து ஆர்வத்தைத் தூண்டும் நிலை

**பரவு-தல்** - பரப்புதல், புகழ்தல், போற்றப்படுதல், பாடுதல், சொல்லல்

**பரி** - செலவு, வேகம், குதிரை, மாயம், பருத்தி, கணுப்பு, குதிரை மரம்

**பரிகம்** - அகழி, மதிலுண்மேடை, மதில், அழிக்கை

**பரிகலம்** - தெய்வம், பெரியோர், நுகர்ந்தெஞ்சியமிச்சம், குரு முதலியோர் உண்டகலம்

**பரிசம்** - மணப்பெண்ணுக்கு மணமகன் வீட்டார் அளிக்கும் பணம் அணிகலன்கள் முதலியன, மணமகள் வீட்டார் மணமகன் வீட்டார்க்கு வழங்கும் பொருட்கொடை

**பரிசல்** - சிற்றோடம்

**பரிசில்** - கொடை

**பரிசு** - குணம், தன்மை, நெறிமுறை, பெருமை, சிற்றோடம், கொடை, நல்கை, மானம், வெற்றிக்கு அல்லது பாராட்டுக்குரிய செயலுக்கு வழங்கப்படும் பொருள் அல்லது பணம், அன்பளிப்பு

**பரிசுச்சீட்டு** - குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்துப் பணம் பரிசளிக்க விற்கப்படும் வரிசை எண் பதிந்திட்ட தாள்

**பரித்தெடு-த்தல்** - சாறு முதலிய வற்றைப் பிழிந்தெடுத்தல், தேர்ந் தெடுத்தல்

**பரி-த்தல்** - சுமத்தல், ஆள்வினை புரிதல், பாதுகாத்தல், பொறுக்கி எடுத்தல், அணிதல்

**பரிதல்** - பற்றுவைத்தல், காதல் கொள்ளுதல், வருந்துதல், பிரிதல், அறுதல், முறிதல், அழிதல், ஓடுதல், வெளிப்படுதல், அஞ்சுதல், அறிதல், கடத்தல், உதிர்த்தல், மேற்கொள்ளல், விரும்புதல்

**பரிதி** - ஒளிவட்டம், வட்டவடிவு, கதிரவன், தேருருளை, சக்கரப் படைகலன், ஒளி, ஒரு குறளுரை யாசிரியர்

**பரிந்துரை** - கருத்து, ஓர்வு, ஒருவருக்குச் சார்பான எழுத்து அல்லது பேச்சு

**பரிமாற்றம்** - மாற்றிக்கொள்ளுகை, நெறிமுறைகளைக்கைக்கொள்ளுதல், கள்ளஉறவு, நடத்தை, நோய்பரவல், கலந்திருக்கை

**பரிமாறுதல்** - மாற்றிக்கொள்ளுதல், உணவுபடைத்தல், நுகர்தல், பணிமாறுதல், உட்கொள்ளுதல், புணர்தல், நடமாடுதல், பரவுதல், உலாவல், ஒழுகுதல், செலாவணியாதல்

**பரிய** - பருத்த

**பரிவட்டம்** - ஆடை, கோயில் மதிப்புரவாக வணங்குவோர் தலையைச் சுற்றிக் கட்டும் கடவுளாடை, பணிக்கு அடையாள மாக அரசன் அளிக்கும் நிலைக்கவசம், துயருருக்காலத்தில் தலையில் கட்டுஞ்சீலை, நெய்வார் கருவிவகை

**பரிவாரம்** - சூழ்வோர், படை, ஏவலர், காவலர், மறவர் அகம்கடியாருள் ஒருபிரிவினர், தொட்டிய பெருநிலக்கிழார், உறை

**பரிவு** - அன்பு, பத்தி, இன்பம், ஈரநெஞ்சு, வருத்தம், குற்றம், முதிர்ச்சி

**பரு** - முகம் முதலியவற்றில் உருவாகும் சிறுகட்டிவகை, சிலந்திப்புண், கணு, கடல், மலை, மேலுலகம், நெல்லின் முளை

**பருக்கை** - பருமனாதல், சோற்றவிழ், பருக்கைக்கல், பளிங்கு, புல்லன்

**பருகு-தல்** - குடித்தல், உண்ணுதல், நுகர்தல்

**பரு-த்தல்** - சதைப்பற்று மிகுதல், பெருத்தல், தடி முதலியவை சுற்றளவில் பெரிதாக இருத்தல்

**பருத்தி** - பஞ்சு விளையும் செடி, பஞ்சு

**பருந்து** - பறவை வகை, வளையல்

**பருப்பு** - சமையலுக்குப்பயன்படுத்தும் உளுந்து, பயிறு, துவரை போன்றவற்றின் விதை, வெந்ததுவரம் பருப்பு, தேங்காயின் வெண்ணிறச் சதைப்பகுதி, சிலவகைத் தாவரங்களில் ஓட்டுக்கு உள்ளே அல்லது தோல் மூடி வெளியில் தெரியுமாறு இருப்பது

**பருப்பொருள்** - கண்டு தொட்டு உணரக்கூடிய பொருள், செய்யுளில் வெளிப்படையாகத் தெரியும் பொருள்

**பருமன்** - ஒரு பொருளின் எடைதரும் பரிணாமம், கணம்

**பருமை** - பருத்திருக்கை,பெருமை, பரும்படியான தன்மை, இன்றியமையாமை

**பருவம்** - காலம், காருவா அல்லது வெள்ளுவா, இளவேனில், முதுவேனில், கார், குளிர், முன்பனி, பின்பனி ஆகிய தமிழ் பருவங்கள் ஆறு, மாதம், தக்ககாலம், பயிரிடுங்காலம், ஆண்டு, அகவை, இளமை, மாந்தர் வாழ்நாள் காலநிலைமை, நூலின் ஒருகூறு, உயர்ச்சி, அளவு, பக்குவம், வளர்ச்சி நிலை, முதிர்ச்சி காலம்

**பருவமழை** - காலத்தில் பெய்யும் மழை

**பருவரல்** - துன்பம், பொழுது

**பல்** - உணவை மெல்ல வாயில் உள்ள அரைக்கும் வெண்ணிற உறுதியான திண்ணிய உறுப்பு, யானை பன்றி முதலியவற்றின் கொம்பு, நங்கூர நாக்கு, கூர், சீப்புப்பல், வெள்ளைப் பூண்டின் தனித்தனி உதிரி உள்ளீடு, தேங்காய் உள்ளீட்டின் சிறுதுண்டு, மிகுந்த, பல

**பல்கலைக்கழகம்** - உயர்கல்வி நிறுவனம், ஆராய்ச்சியை மட்டும் மேற்கொள்ளும் உயர்கல்வி நிறுவனம்

**பல்கு-தல்** - பலவாதல், மிகுதல்

**பல** - ஒன்றுக்கு மேற்பட்டவை

**பலகணி** - சாளரம், கண்வாயில்

**பலகை** - மரப்பலகை, உழவில் சமன்படுத்தும் மரம், சூதாட்டப் பலகை, பறைவகை, எழுதுபலகை, ஒருவகைவரிக்கூத்து, தொட்டிச்செய் நஞ்சுவகை, வயிரத்தின் குணங்களுள் ஒன்று

**பலசரக்கு** - பலவகைப்பண்டம்

**பல்லக்கு** - ஆட்கள் சுமந்து செல்லும் ஊர்திவகை, பாடை

**பல்லாங்குழி** - பதினான்கு குழிகள் கொண்ட காய்கள் போட்டு விளையாடும் பலகை

**பல்லாண்டு** - பல ஆண்டு, நீடு வாழ்க என்னும் வாழ்த்து

**பல்லி** - சுவற்றில் ஊர்ந்து செல்லும் நாற்கால் சிற்றுயிரி, பூடுவகை, சிற்றூரின் அரைக்கூறு, கற்சிலைப்புள்

**பல்லியம்** - பல்வகை வாக்கியங்கள், இசைக்கருவிகள்

**பலுக்குதல்** - தெளிய ஒலித்தல், உச்சரித்தல், தற்புகழ்ச்சிப்பேசுதல், பேசுதல்

**பவ்வம்** - கடல், நீர்க்குமிழி, நுரை

**பவழம்** - அணிகளில் பதிக்கப் பயன்படும் கடல்வாழ் உயிரி எலும்பிலிருந்து பெறும் செந்நிற மதிப்புடைய பொருள்

**பவள விழா** - எழுபத்தைந்தாம் ஆண்டின் நிறைவு விழா

**பவளம்** - ஒன்பான் மணியுள் ஒன்று

**பவானி** - உமாதேவி, காவிரியில் இணையும் கிளையாறு

**பழக்கம்** - பயிற்சி, வழக்கம், அறிமுகம், ஒழுக்கம், திறமை, அமைதிக்குணம்

**பழகு-தல்** - பழகச்செய்தல், பழக்கம் ஏற்படும்படி செய்தல், பயிலுதல், உறவுகொளல், பதப்படுத்தல், சாதுவாதல்

**பழங்கண்** - துன்பம், மெலிவு, ஒலி

**பழங்குடி** - பழமையானகுடி

**பழசு** - நாட்பட்டது

**பழஞ்சொல்** - பழமொழி

**பழம்** - கனி, அகவைமுதிர்ந்தோர், நற்பயன், ஆட்டக்கெலிப்பு, முக்கால், முந்திய, கடந்தகால, பழைய

**பழம்பெரும்** - அகவை முதிர்ந்த, பட்டறிவுமிக்க

**பழம்பொருள்** - கடவுள், புதையல், பழையபொருள்

**பழமை** - தொன்மை,சாரமின்மை, வழக்கொழிந்தது,முதுமொழி, பழங்கதை ,மரபு

**பழமொழி** - முதுசொல், கருத்துத்தொடர், செய்யுட்கள் கொண்ட முன்றுறையரையானார் இயற்றிய பதினெண் கீழ்கணக்கு நூல்களுள் ஒன்று

**பழனம்** - வயல், மருதநிலம், பொய்கை

**பழி** - இகழ்ச்சி, அலர், குற்றம், பழிதீர்த்தல், பகை, ஒன்றுக்கும் உதாவான்

**பழிச்சு-தல்** - புகழ்தல், வணங்கல், வாழ்த்துதல், கூறுதல்

**பழி-த்தல்** - இகழ்தல், புறம் கூறுதல்

**பழிப்பு** - இகழ்ச்சி, அவமதிப்பு, குறளை, குற்றம், குறை

**பழிவாங்கு-தல்** - தீமைக்குத் தீமை செய்தல், பகைமை உணர்வில் பிறருக்குத் துன்பம் தருதல்

**பழுத்தல்** - பழமாதல், முதிர்தல், மூப்படைதல், பக்குவமாதல், செலவழிதல், பழுப்பு நிறமாதல், வயிறுபெருத்தல்

**பழுது** - பயனின்மை, சிதைவு, குற்றம், வறுமை, தீங்கு, உடம்பு, நிறைவு, பதனழிந்தது, பிணமா யிருக்கும் தன்மை

**பழுதை** - வைக்கோற்புரி, கயிறு, பாம்பு

**பழுப்பு** - பொன்னிறம், அரிதாரம், முதிர்ந்து பச்சயம் மறைந்த இலை, சீழ்,சிவப்பு

**பழுவம்** - காடு, தொகுதி

**பழையர்** - முன்னோர், கள் விற்போர்

**பளகர்** - மூடர், குற்றமுடையவர்

**பளபளப்பு** - ஒளிரும் மினுமினுப்பு

**பள்ளி** - தாழ்வான இடம், சிற்றூர், இடையர் சேரி, நகரம், முனிவர் இருப்பிடம், கோயில், சமண புத்த ஆலயம், அரண்மனை, மக்கட் படுக்கை, உறக்கம், விலங்கு துயிலிடம், அறை, பள்ளிக்கூடம், அறச்சாலை, வன்னியர், குறும்பர், பயிலகம்

**பள்ளை** - குள்ளம், ஆடு, வயிறு பருத்த விலங்கு

**பள்ளையம்** - உண்கலம், சிறுதெய்வப் படையல்

**பளிங்கு** - படிகம், கண்ணாடி, வெள்ளி, கருப்பூரம்

**பற்றம்** - கற்றை, கூட்டம், கனம், வீக்கம், துணையாகப்பிடிக்கை, நன்றியறிவு

**பற்று** - பிடிக்கை, அகப்புற நேயங்கள், தொடர்பு, ஓட்டு, பசைக்கலத்தில் பற்றிப்பிடித்திருக்கும் சோற்றுப் பருக்கை, சோற்றுப் பருக்கை ஒட்டியுள்ள ஏனம், தங்குமிடம், அன்பு, வீட்டுநெறி, செல்வம், இல்வாழ்க்கை

**பற்றுக்கோல்** - ஊன்றுக்கோல், கால்நடைகளுக்கு சூடு போட உதவும் இருப்புக்கோல், சூட்டுக்கோல், ஈயம் பற்ற வைக்கும் கருவி, இடுக்கி போன்ற கருவி

**பற்றுதல்** - அன்பு, பத்தி, நம்பிக்கை, பிடித்துக்கொள்ளுதல்

**பற்று-தல்** - பிடித்தல், ஏற்றல், மனங்கொள்ளல், தொடுதல், உணர்தல், ஓட்டுதல், நிறம்பிடித்தல், தீமூளல், பயனுறுதல், பொருந்துதல், உறைத்தல், போதியதாதல், உண்டாதல், நோய் முதலியன ஒருவரை தொற்றுதல், ஏனங்களில் படிதல், வன்மையால் பொருள் பறித்தல், கட்டாயப்படுத்திப் பணம் பறித்தல்

**பறட்டை** - செழிப்பற்றது, தூற்றுமயிர், பறட்டைக்கீரை, இன்மையைக் குறிக்கும் ஒரு விளையாட்டுக் குறியீடு, ஓர் இகழ்மொழி

**பறண்டை** - ஒருவகை வாச்சியம், கைமுட்டியின் மொழி

**பற-த்தல்** - பறவை, பஞ்சு முதலியன வானில் செல்லுதல், விரைந்து செல்லுதல், விரைதல், அமைதி யற்று வருந்துதல், சிதறியொழிதல்

**பறவை** - புள், சிறகு, வண்டு, காக்கை(அவிட்டம்), அம்மைவகை, பறக்கும் பாம்பு

**பறி-தல்** - ஓடிப்போதல், நிலைப் பெயர்தல், வெளிப்படுதல், கட்ட விழ்தல், இல்லாமற்போதல், ஓட்டிப்போதல், அறுதல், உண்டாதல், செடியிலிருந்து இலை முதலியவற்றை வலிய நீக்குதல், பிடுங்குதல், வலிதிற் கவர்தல், பாரம் இறக்குதல், அழித்தல், நீக்குதல், அகற்றுதல், மீன் பிடிக்கும் கருவி, பிடுங்குகை, பொன், பனை ஓலைப்பாய்

**பறிபோதல்** - கொள்ளையிடப்படுதல்

**பறிமுதல்** - அரசால் கவர்ந்த கொள்ளப் பட்ட பொருள், கொள்ளையிடப்பட்ட பொருள்

**பறிவு** - கழிவு, அதிர்கை, நிலை பெயர்கை, ஒட்டிப்போகை

**பறிவை** - சீந்தில், நந்தியா வட்டம், செடிவகை, தாழை

**பறை** - ஒரு சாதிப்பெயர், முரசு, வட்டம், சொல், விரும்பிய பொருள், ஒரு முகத்தலளவை, மரக்கால் முதலிய வற்றின் வாய்ப்பட்டம், வரிக்கூத்து வகை, சிற்றிலக்கியம், குகை

**பறைதல்** - சொல்லுதல், அழிதல், தேய்தல்

**பறையறைதல்** - செய்தி தெரிவிக்குமாறு பறையடித்தல்

**பனங்கூடல்** - பனங்காடு

**பன்மை** - ஒன்றல்லாதது, தொகுதி, ஒருபடிப்பட்டிராமை, கண்டும் காணாமை

**பன்றி** - கட்டையான கருப்பு விலங்கு வகை, ஏனம், பன்றி வடிவிலான பொறிவகை

**பன்னக்காரன்** - கீற்றுமுடைவோன், வெற்றிலை வணிகன்

**பன்னசாலை** - இலைவீடு, ஓலைவீடு

**பன்னம்** - இலை, இலைக்கறி, சாதிபத்திரி, வெற்றிலை

**பன்னறிவாள்** - கருக்கரிவாள்

**பன்னாங்குழி** - பல்லாங்குழி

**பன்னாடை** - தெங்கு பனையின் வலைத்தகடு போன்ற நார்ப்பொருள், நல்லதை விடுத்து அல்லதைக் கொள்ளும் அறிவிலி, முட்டாள், இழைநெருக்கமில்லாத் துணிவகை

**பன்னுதல்** - பஞ்செகுதல், ஆராய்ந்து செய்தல், புகழ்தல், பேசுதல், படித்தல், பாடுதல், நரம்புக்கருவி குயிற்றுதல், பின்னுதல், கொய்தல், அறிவாளைக் கூராக்குதல்

**பனி** - இனிமையானது, அச்சம், நடுக்கம், நோய்வகை, காய்ச்சல், துன்பம், துக்கம்

**பனி** - நீர், கண்ணீர், மழை, மஞ்சு

**பனி-த்தல்** - பனிகொள்ளுதல், துளித்தல், குளிர்தல், நடுங்குதல்

**பனுவல்** - நல்லதாக ஆக்கப்பட்ட பஞ்சு, பஞ்சி நூல், சொல்பாட்டு, நூல்,கேள்வி, ஆராய்ச்சி, கல்வி

**பனை** - மரவகை, ஒரு பேரளவு, பனைவிண்மீன், ஒரு நன்னீர் மீன்வகை

**பாக்கம்** - நெய்தல் நிலத்தூர், ஊர், அரசனிருப்பு

**பாக்கு** - அடைக்காய், கமுகு, பாக்குக்கு மாற்றாகப் பயன்படும் பட்டையுடைய ஒருவகைச்செடி

**பாக்குரல்** - தம்பலமிடிக்கும் கையுரல்

**பாகசாலை** - மடைப்பள்ளி

**பாகம்** - சமையல், வெப்பத்தால் வாடுதல், பக்குவம், மூவகைச் செய்யுள் நடையாகிய கொடி முந்திரி பாகம், கதலி பாகம், தேங்காய்ப் பாகம், மனநிலை, பகுக்கை, பாகை, கூறு, பக்கம், காயம், பிச்சை, பிழைவகை

**பாகன்** - யானைப்பாகன், தேர் முதலியவற்றை நடத்துவோன், அறிவன் (புதன்)

**பாகி** - கட்டுரையில் பொருள் நிரலுக்கு ஏற்ப அமைக்கப்படும் பத்தி

**பாகு** - குழம்பான உணவு, இளகக் காய்ச்சியவெல்லம், சருக்கரை, பால், பாக்கு, அடுப்பு, பரணி எனும் இரண்டாம் விண்மீன்

**பாகுபாடு** - பிரிவுபடுகை

**பாகை** - கோண அளவி, வட்டத்தின் 360 சமபாகத்தில் ஒருபாகம்

**பாங்கர்** - இடம், பக்கம், பாங்கர்க்கொடி

**பாங்கன்** - தோழன், கணவன்

**பாங்கு** - செயலைச் செய்யும் முறை வகை, நயம், பக்குவம்

**பாசம்** - கயிறு, கயிறு வடிவ படைக்கலன், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலம், அன்பு, பற்று, கவசம், நூல், சுற்றம், சீரகம்

**பாசறை** - படை தங்குமிடம், பசிய இலையாற் செறிந்த முழை, மரவகை, மணியாசப்பலகை

**பாசனம்** - ஏனம், உண்கலம், மட்பாண்டம், மரக்கலம், பயிர் களுக்கு நீரளித்தல்

**பாசாங்கு** - போலி நடிப்பு, வஞ்சகம்

**பாசி** - பசுமையுடையது, நீர்ப்பாசி, கடற்பாசி, பூஞ்சாளம், கழுத்தணி மணி, மேகம்

**பாடசாலை** - கல்விக்கூடம்

**பாட்டம்** - தோட்டம், முகில், வரி, கிட்டிப்புள்ளு விளையாட்டில் ஒருபகுதி, கிட்டிப்புள் விளையாட்டு முறை, தொகுதி

**பாட்டி** - பெற்றோரின் தாய், கிழவி

**பாட்டு** - பாடுகை, இசைப்பாடல், இசை, செய்யுள், சொல், வசைமொழி

**பாட்டை** - பாதை, இசை முதலியவற்றின் நடை, ஒழுக்கம்

**பாடம்** - சுமை வைத்து அழுத்துதல், பதப்படுத்தல், ஒன்பான் மணி முதலியவற்றின் ஒளி, முடிமாலை, வெற்றிலை, கெடாமல் வைக்கும் முறை, மனப்பாடம், படிக்கும் நூற்பகுதி, படிப்பு, மூலபாடம், பாராமல் ஒப்பிக்கும் திறன், மறைபாடம்

**பாடல்** - பாகுகை, இசைப்பா, செய்யுள், புகழ்

**பாடாண்திணை** - பாட்டுடைத் தலைவனின் திறம்புகழும் புறத்துறை

**பாடி** - நகரம், சேரி, நாடு, முல்லை நில நிலத்தூர் படை, கவசம், உளவாளி

**பாடிகாவல்** - ஊர்க்காவல், தலையாரி, ஊர்க்காவலுக்கு வரி வழங்கும் தண்டம், பாதுகாவல்

**பாடுதல்** - பண்ணிசைத்தல், வண்டிசை, பாராட்டுதல், பாப்புனைதல்

**பாடுபடல்** - வேலை செய்தல்

**பாடுபெயல்** - விடாமழை

**பாடுபொருள்** - பாடலின் கருப்பொருள்

**பாண்டம்** - மட்கலம்

**பாண்டி** - ஒரு தேயம், பன்னான்கு குழிப்பலகை, மூங்கில் பலகை

**பாண்டியம்** - எருது, எருது கொண்டு உழும் உழவு

**பாண்டில்** - வட்டம், கிண்ணி, விளக்குத்தகழி, தேர்வட்டை, கண்ணாடி, விளக்கின் கால், வட்டக்கட்டில், கண்ணாடி, வட்டத்தோல், எருது, விடையோரை, நாடு

**பாண்டு** - வெண்மை, காமாலை, நீர்க்கோவை, நோய்வகை, பாண்டவர் தந்தை, சிறுபூளை

**பாணர்** - பாடல் வல்ல ஒரு குலத்தார்

**பா-த்தல்** - பகுத்தல், பாட்டு, செய்யுள்

**பாத்தி** - பகுதி, சிறுசெய், பாங்கு, வீடு

**பாத்து** - சோறு, கஞ்சி, ஐம்புலவின்பம்

**பாத்தூண்** - பகுத்துண்கை, இரப்போர்க்கு இடும் ஐயம் (அ) உணவு

**பாதம்** - நிழற்கோள் (இராகு, கேது), ஐந்தாம் ஆறாம் மாதத்தில் கருவழிதல், கால், காற்பங்கு, விம்முதல், பாகம், நீர், அன்றன்று ஆகும் நல்லூழ்

**பாதி** - ஒன்றின் சமபாகம், நடு, பகுக்கை, துண்டு

**பாதிரி** - மஞ்சள் பூவகை மரம், சிவப்புப் பூவகை மரம், வெள்ளைப்பூவுடைய மரவகை

**பாதீடு** - பங்கீடுகை, பகைவரிடம் கவர்ந்த நிரையை படைவீரர்கள் தங்களுக்குள் தலைவன் விருப்பப்படி பங்கிடுவதைக் கூறும் புறந்துறை

**பாதுகாப்பு** - தீங்குவாராமல் காத்தல், பொறுப்போடு மேற்கொள்ளும் காவல், கவனிப்பு, கண்காணிப்பு

**பாதை** - வழி, முறை, மிதவை, ஒற்றையடி வழி

**பாம்பு** - ஊர்ந்து செல்லும் உயிரிவகை, நிழற்கோள், பகல்முழுத் தங்களிலொன்று, நாணலையும் வைக்கோலையும் பரப்பி மண்ணைக்கொட்டிச் சுருட்டப்பட்ட திரணை, நீர்க்கரை, தாளக்கருவி வகை

**பாய்** - பரவுகை, பரப்பு, விரிப்பு, கப்பற்பாய்

**பாய்ச்சல்** - தாவுகை, குதிப்பு, நீரோட்டம், பாசனம், செருகுகை, வெடுவெடுப்பு

**பாய்ச்சு-தல்** - நீரை வெளிச் செலுத்துதல், தள்ளுதல், உட்செலுத்துதல்

**பாய்ச்சுலக்கை** - இருவர் மாறிமாறி உலக்கையால் தவசங்களைக் குத்துதல்

**பாய்ச்சை** - சிள்வண்டு

**பாய்-தல்** - தாவுதல், வேகமாய்ச் செல்லும் நீர், போதல், நீருண் மூழ்குதல், விரைந்து செல்லுதல்

**பாயிரம்** - முகவுரை, வரலாறு, பொருளடக்கம்

**பார்** - உலகம், நாடு, பரப்பு, நிலம், அடுக்கு, தடை, வரம்பு

**பார்-த்தல்** - கண்ணால் நோக்குதல், ஆராய்தல், கவனித்தல், கருதல், பார்வையிடல், மருந்து முதலியன அளித்தல், தேடல், விரும்பல்

**பார்ப்பு** - பறப்பனவற்றின் இளமை, தவழ்பவற்றின் இளமை, விலங்கின் குட்டி

**பார்வை** - காட்சி, கண், தோற்றம், ஆய்வு, கவனம், கண்ணோட்டம், நேர்த்தி

**பார்வையாளர்** - கண்டு களிப்பவர், கண்டு பரிந்துரைப்பவர்

**பாரம்** - பொறுக்கை, கணம், சுமை, காய்ச்சலால் வரும் தலைக்கனம், பெருமை, பெருங்குடும்பம், கடமை, கவசம், தோணி, எடை, கொடுமை

**பாராட்டுதல்** - புகழ்தல், பெருமித முரைத்தல், விரித்துரைத்தல், கொண்டாடுதல்

**பாராமுகம்** - ஒருவரைப் பார்த்ததாகக் காட்டிக்கொள்ளாத மனப்பாங்கு, வேண்டுமென்றே ஒதுக்கும் போக்கு, புறக்கணிப்பு

**பாராளுமன்றம்** - நாடாளுமன்றம்

**பாரி-த்தல்** - பரவுதல், பருத்தல், மிகுதியாதல், தோன்றுதல், ஆயத்தப் படுத்தல்

**பாரிப்பு** - பருமன், விருப்பம், வீரச்செயல், கனம், அதிகப்படுகை

**பாரை** - கடப்பாரை, புற்செதுக்குக் கருவி, எறிபடைவகை, செடிவகை, மீன்வகை

**பால்** - பகுதி, பகிர்ந்தளித்தல், பாதி, பக்கம், வரிசை, குலம், திக்கு, குணம், இயல்பு, உரிமை, ஊழ், இடையர், அகத்திணை, ஆண், பெண், ஒன்றன், பலவின் பால் என்ற பிரிவு

**பால் மாறு-தல்** - பால் வற்றிப்போதல், தாய் பாலுண்ணாது பிற உணவு உட்கொள்ளுதல், சொல் பிறழ்தல்

**பால்மணம்** - பாலின் நறுமணம், கஞ்சிகாய்ச்சும் பொழுது பக்குவத்தில் வெளிப்படும் மணம், பால்குடி குழந்தையின் வாயினின்று வீசும் பால் மணம், முற்றின அம்மைப் பாலின் நாற்றம், இரக்க குணம்

**பாலாடை** - குழந்தைகட்குப் பால் புகட்டும் சங்கு, பால் மீது படியும் மென் படலம்

**பாலாறு** - நந்திதுருக்கத்தில் தோன்றி தமிழ்நாட்டில் ஓடும் ஓர் ஆறு

**பாலுண்ணி** - உடலில் உருவாகும் ஒருவகைச் சதை வளர்ச்சி

**பாலை** - குறிஞ்சியும் முல்லையும் முறைமையில் திரிந்த நிலம், புறங்காடு, முள்மகிழ், உலக்கைப்பாலை, மரவகை, ஏழிலைப்பாலை, காட்டலரி, வெட்பாலை, கருடப்பாலை, கொடிப்பாலை, பெரும்பண்வகை, ஒருவகை யாழ், பாலை யாழில் பிறக்கும் செம்பாலை முதலிய எழுவகைப்பண், கழை என்னும் விண்மீன், மாழ்கு என்னும் விண்மீன், கவறாட்டத்து வழங்கும் ஒரு குழூஉக்குறி

**பாலைத்திணை** - ஐந்திணைகளுள் ஒன்று, அது பாலை முதற்பொருள், பாலைக்கருப்பொருள், பாலை உரிப்பொருள் என மூன்று வகைப்படும்

**பாவடி** - அகன்ற பாதம்

**பாவலர்** - செய்யுளியற்றுபவர்

**பாவாடை** - பெண்களின் உள்புற ஆடை

**பாவீடு** - மேலே தளம் போட்ட வீடு

**பாவு-தல்** - தளவரிசையிடுதல், பரப்புதல், நாற்றுக்கு நெருக்கி விதைத்தல், நாற்று நடுதல், தாண்டுதல்

**பாவை** - பதுமை, அழகிய உருவம், கருவிழி, பெண், குரவமலர், நோன்பு வகை, இஞ்சிக்கிழங்கு

**பாழ்** - பெருமை, முனிவர் வாழ்விடம், அழிவு, கேடு, இழிவு, வெறுமை, வெற்று நிலம், ஆதன், இல்பொருள்

**பாழ்-த்தல்** - அழிவடைதல், பயனறுதல், சீர்குன்றுதல்

**பாழ்படு-தல்** - கேடுறுதல், ஒளிமங்குதல்

**பாழி** - வெறுமை, விண், கடல், அகலம், பெருமை, வலிமை, போர் இடம், நகரம், பகைவரூர், குகை, துயிலிடம், இறங்குதுறை, இயல்பு, எலிவளை

**பாழும்** - பாழடைந்த, பாழாய்ப்போன

**பாளை** - தெங்கு முதலியவற்றின் பூவை மூடிய மடல், செம்பாளை, நெல்பதர், சுறா ஈரல்

**பாளையப்பட்டு** - அரசனுக்குப் போரில் உதவ வேண்டும் என்ற வரையறையுடன் பாளையக் காரருக்கு விடப்பட்ட ஊர்த்தொகுதி

**பாளையம்** - படை ,பாசறை,பொற்றை சூழ்ந்த ஊர்

**பாற்கதிர்** - நிலா

**பாற்காரி** - பால் விற்பவள், தன்முலைப்பால் கொடுத்து குழந்தைகளை வளர்க்கும் செவிலித்தாய்

**பாற்பசு** - கறவைப்பசு

**பாற்பட்டார்** - துறவியர்

**பாறல்** - ஆனேறு, விடையோரை, பொதி எருது, மழைப்பாட்டம்

**பாற்று-தல்** - நீக்குதல், அழித்தல்

**பாற்றுளி** - வித்தமிழ்து

**பாறு** - கேடு, பருந்து, கழுகு, மரக்கலம்

**பாறு-தல்** - அழிதல், சிதறுதல், நிலைகெட்டோடுதல், கிழிபடுதல், அடிபறிதல், ஒழுங்கற்றுப் பரந்து கிடத்தல், பொருதல்

**பாறை** - கருங்கற்றிரள்

**பான் மயக்கம்** - ஒருபால் ஏனைப் பாலின் கண் மயங்குதலாகிய வழுவின் அமைதி

**பான்மை** - குணம், தன்மை, இயல்பு, பகுதி, தகுதி, முறைமை

**பானை** - மண்மிடா, ஓர் அளவு, நான்கு செம்பு கொண்ட எண்ணெயளவு

**பிக்கம்** - இருவேலி

**பிக்கல்பிடுங்கல்** - தொல்லை, தொந்தரை

**பிக்காகம்** - மாமரம்

**பிக்கு** - தொல்லை, சிக்கல், தடை, பிசகு, குழப்பம், ஒவ்வாமை

**பிக்கு-தல்** - சிறுதுண்டுகளாக்குதல்

**பிங்கம்** - இளங்கன்று

**பிங்கலம்** - பொன்னிறம், பொன், வடக்கு, பிங்கல முனிவர் இயற்றிய நிகண்டு

**பிங்கு-தல்** - பின்னால் செல்லுதல், அகலுதல், விலகுதல், தோல்வியுறுதல்

**பிச்சப்பழும்** - சருக்கரைக் கொம்மட்டிப் பழும்

**பிச்சம்** - இறகு, ஆண்பால் மயிர், பீலிக்குஞ்சம், எட்டி, இருவேரி

**பிச்சன்** - மனநலம் குன்றியவர், மருண்டவர், சிவன்

**பிச்சி** - சாதிமல்லிகைப்பூ , முல்லைப்பூ, சிறு செண்பகம்

**பிச்சிலம்** - குழம்பு, ஈரம், கஞ்சி

**பிசக்குதல்** - அழுக்காக்குதல், கசக்குதல்

**பிசகு-தல்** - தவறுதல், உறுப்புப் உபிறழ்தல், வழுக்கிவிழுதல், தடைப்படுதல்

**பிசல்** - பிடர், எருது முதலியவற்றின் திமில், தோள்

**பிசறு-தல்** - கலத்தல்

**பிசாசு** - பேய்

**பிசி** - பொய், உவமேயத்தை உவமானப் பொருளால் குறிப்பித்துக் கூறுவது, விடுகதை, புதிர்

**பிசிர்தட்டு-தல்** - இசையோடு இணையாமல் ஒலி ஏற்ற இறக்கம்

**பிசிர்-தல்** - சிதறுதல்

**பிசின்** - வெட்டுக்குருத்து, பிரம்பு, மரத்திலிருந்து வடிந்து உறைந்த பால், சுறாலை (சாம்பிராணி), ஒட்டுகை, பஞ்சுநூல்

**பிசினி** - கருமி, கஞ்சன், இவறன், இவறற்றன்மை(உலோபம்), கோள் சொல்லுவோன்

**பிசுக்க** - இவறன்மை, சற்று கூடுதலாகத் தரும்பொருள்(குசர்), பசையுறு பொருள்

**பிசுபிசுத்தல்** - பசைத்தன்மையாதல், மழைதூறிக் கொண்டிருத்தல், எதிர்பார்த்த விளைவு கிட்டாமல் போதல்

**பிசுபிசுப்பு** - ஒட்டும் பசைத் தன்மையது

**பிசுனாரி** - செல்வம் சேர்க்கத் தேவைகளைக் குறைத்து வாழ்பவன்

**பிசைதல்** - மாவு முதலானவற்றைக் கையால் கலத்தல், தேய்த்தல், உரசுதல்

**பிஞ்சம்** - இறகு, மயிற்றோகை, சத்திக்கொடி

**பிஞ்சு** - இளங்காய், இளமையானது, அணியின் அரும்புக்கட்டடம், கால்

**பிஞ்சை** - மஞ்சள்

**பிட்கு-தல்** - கத்துதல்

**பிட்டகம்** - பல்லழுக்கு, கண் நோய் வகை

**பிட்டம்** - பின்பக்கம், இடுப்பின் பூட்டு, குண்டி, முதுகு, பரப்பு

**பிட்டு** - வேகவைத்த மாவால் ஆன ஒருவகைச் சிற்றுண்டி

**பிட்டுவைத்தல்** - மறைத்ததை வெளிப்படையாகப் பேசுதல்

**பிடகம்** - கூடை, முப்பிடகம், நூல், கொப்புளம், இரவல்

**பிடகை** - பூந்தட்டு

**பிடவு** - முதுகு

**பிடா** - நார்ப்பெட்டி

**பிடாங்கு** - வெடி ,வேட்டு

**பிடாலம்** - காட்டுப்பூ

**பிடி** - பற்றுகை, மனத்திற்பதிகை, மற்பிடி, உறுதி, உள்ளங்கைக் கொள்ளளவு, நால்விரலளவு, பெண்யானை

**பிடிக்கொம்பன்** - சிறுகொம்புள்ள விலங்கு

**பிடிகடா** - காயடிக்கப்பட்டகடா

**பிடிகுருவி** - வெற்றிலை

**பிடிகூலி** - தவசம் அளக்கையில் மூட்டை பிடிப்பதற்குரிய கூலி

**பிடிகொடுத்தல்** - பேச இடம் கொடுத்தல், பேச்சில் காட்டிக் கொள்ளல், இழத்தல்

**பிடிசுற்றுதல்** - சித்திரான்னங்களைச் சுற்றி எறிந்து மணமக்கட்குக் கண்ணேறு கழித்தல்

**பிடித்தம்** - கழிவு, சிக்கனம், மனப்பொருத்தம், விருப்பம்

**பிடித்தல்** - கைப்பற்றுதல், தெரிதல், இடைதல், மூடியகையளவு, ஒட்டிக்கொள்ளுதல், விரும்புதல்,

அடங்குதல், கையால் இறுக்கித் திரட்டுதல், சுளுக்கு விழுதல், இறுக்காமயிருத்தல்

**பிடிதம்** - இரவல்(பிச்சை)

**பிடிதுணி** - சுடாமல் பிடிக்க உதவும் கரித்துணி

**பிடிபடுதல்** - பிடிக்கப்படுதல், புலப்படுதல், இணங்குதல், அடைதல்

**பிடிப்பு** - பற்றுகை, ஒட்டுகை, உறுதி, பிணைப்பு, கைகாற்பிடிப்பு

**பிடிமானம்** - பிடித்தம் செய்யப்பட்ட கழிவு, கைப்பிடி

**பிடியல்** - சிறுதுகில், நல்லாடை

**பிடியாப்பு** - மேழியில் உள்ள கைப்பிடி

**பிடியாள்** - பிடித்தடைக்கப்பட்டவன், அமஞ்சிவேலைக்காரன், கூலிக்காக அமர்த்தப்பட்டவன்

**பிடியானை** - வரமறுப்பவரை சிறைசெய்து அழைத்துவர முறைமன்றம் இடும் ஆணை

**பிடிவிடு-தல்** - கைப்பிடிப்பு விடுதல், பற்று நீங்குதல்

**பிடுக்கு** - ஆணின் இனப்பெருக்கச் சுரப்பி உறுப்பு ,விதை

**பிடுகு** - இடி

**பிடுங்கல்** - வலிந்து எடுக்கை, பொருள் பறித்தல், தொல்லை, இடையூறு செய்வோர்

**பிடுங்கிவிடு-தல்** - ஓடிப்போதல்

**பிடுங்கு-தல்** - பறித்தல், கவர்தல், தடையுடைத்து விரைதல், கொத்துதல், கொட்டுதல், வருந்துதல், மிகுதியாதல், தொல்லைதருதல்

**பிண்டகம்** - நறும்புகை

**பிண்டகன்** - முன்னோர்க்குப் பிண்டமிட்டு சடங்கு செய்வோன்

**பிண்டம்** - உண்டை, உருவற்றகரு, சோற்றுத்திரள், மூதாதையர்க்குத் தரப்படும் சோற்றுருண்டை, பல் பொருள் தொகுதி, நூற்பா, இயல், ஒத்து என்ற மூன்றுறுப்புக் கொண்ட நூல், கற்கண்டு, விலா, வெண்ணெய், இறைச்சி

**பிண்டம் விழுதல்** - காய் விழுதல், கருச்சிதைதல்

**பிண்டி** - நுண்பொடி, பிண்ணாக்கு, வடிவம், கூட்டம், கழை(புனர்பூசம்), இணையா வினைக்கை வகை (நாட்டிய முத்திரை)

**பிண்டி-த்தல்** - திரளுதல்

**பிண்டிப்பகவன்** - அருகன்

**பிண்ணாக்கு** - இலுப்பை எள் இவற்றின் எண்ணெய் நீங்கிய சக்கை, எள்ளுப்பிண்ணாக்கு

**பிணக்கம்** - மாறுபாடு, ஊடல், நெருக்கடி, பின்னுகை

**பிணக்காடு** - பிணமெரிக்கப்படுமிடம், சுடுகாடு, போர்க்களம்

**பிணக்குதல்** - கட்டுதல், பின்னச் செய்தல்

**பிணங்குதல்** - மாறுபடுதல், ஊடுதல், செறிதல், பின்னுதல்

**பிணம்** - உயிரற்ற மாந்தவுடல், பேய், சவம், கட்டை

**பிணவல்** - பெண், பன்றி, மான், நாய் முதலியவற்றின் பெண்குட்டி

**பிணவறை** - பிணம் வைக்கும் கட்டடம்

**பிணி** - கட்டுகை, கட்டு, பின்னல், அரும்பு, நெசவுத்தறியின் நூற்படை, உடல்நலமின்மை, நோவு, இடர், இன்னல், பசிப்பிணி

**பிணி வீடு** - இடையூறு நீங்குகை

**பிணி-த்தல்** - சேர்த்துக் கட்டுதல், வசப்படுத்துதல்

**பிணி-தல்** -வாழ்வு முடிதல்

**பிணிமிதி-த்தல்** - நெசவுப்பாவை மிதித்தல்

**பிணிமுகம்** - மயில், அன்னம், பறவை

**பிணியகம்** - காவலிடம்

**பிணை** - பெண் விலங்கு, பெண்மான், தெப்பம்

**பிணைக்கட்டை** - பாவு தாங்கும் தாங்கி, மாட்டுக்கழுத்தில் கட்டப்படும் கட்டை

**பிணைகைதி** - பொருளுக்காக அல்லது வேறு காட்டயத்திலோ பிடித்து வைக்கப்பட்டவர்

**பிணைத்தொகை** - பணய ஆளை விடுவிக்க கோரும் தொகை

**பிணை-தல்** - சேர்தல், ஒன்றுபடுதல், இணைதல், செறிதல், நெருக்கமாதல், புணர்தல்

**பிணைப்பு** - நட்பு, உறவு, அன்பு முதலியவற்றால் ஏற்படும் நெருக்கம்

**பிணைமாடு** - இணைக்கப்பட்ட எருதுகள்

**பிணையல்** - ஒன்று சேர்க்கை, மலர்மாலை, கதவின் இணைப்புக் குடுமி, புணர்ச்சி, இணைக்கை, பொறுப்பில் வெளிவருதல்

**பித்தங்காங்கை** - பித்தத்ததால் உண்டாகும் சூடு

**பித்தபாணி** - பனை மரங்களின் பிசின்

**பித்தம்** - ஈரலில் தோன்றும் நீர்வகை, பித்தப்பிணிக்கூறு, மயக்கம், மனக்கோளாறு

**பித்தன்** - கோட்டிக்காரன், மூடன், சிவன், பேரருளாளன், திருடன்

**பித்து** - அறியாமை

**பித்தை** - மக்கள் தலைமயிர்

**பிதற்று-தல்** - அறிவின்றிக் குழறுதல், இசிவு நோயால் இடைவிடாமல் பேசுதல்

**பிதிர்** - பூந்தாது, பொடி, திவலை, துண்டம், பொறி, காலநுட்பம், தென்புலத்தார், தேமல், விடுகதை, சேறு

**பிதிர்-தல்** - உதிர்தல், சிதறுதல், இழிதல், பரத்தல், மனங்கலங்கல்

**பிதுங்கு-தல்** - அமுக்குவதால் உள்ளீடு வெளிக்கிளம்புதல், சுவரில் கல் வெளியே நீண்டிருத்தல், ஒலித்தல்

**பிந்து-தல்** - பின் செல்லல், பின்னாதல், கீழாதல், தோற்றத்தால்

பிந்தியதாதல், தாழ்தல், விரைவு குறைதல்

**பிய்-தல்** - கிழிதல், பிரிந்து போதல், பஞ்சு முதலியனபின்னப்படுதல், ஊடறுதல், சிதைவுறுதல்

**பிரட்டன்** - நெறிபிறழ்ந்தவன்

**பிரடை** - யாழ் முதலியவற்றின் முறுக்காணி, முறுக்காணிவில்லை

**பிரண்டை** - கொடிவகை

**பிரப்பு** - குறுணிமேனி கொள்கலங்களிற் பரப்பி வைக்கும் படையல் பொருள், குறுணி

**பிரம்பு** - அளவு கொள்ளும் ஏனம், கூடை, நாற்காலி, பின்னும் கொடிவகைத் தாவரம்

**பிராட்டி** - தலைவி, தேவி

**பிரான்** - தலைவன், இறைவன், சிவன்

**பிரி-தல்** - கட்டவிழ்தல், தொடர்பறுதல், பக்குவப்படுதல், வேறுபடுதல், முறுக்கவிழ்தல், தண்டுதல், வகைப்படுதல்

**பிரிதல்** - நீங்கியிருத்தல்

**பிரிநிலை** - வேறுபடுத்திக்காட்டும் நிலை

**பிரிமணை** - பாண்டம் வைக்கும் மணை

**பிரிவினை** - கூறுகளாகப்பிரிகை

**பிரிவு** - பிரிகை, வகுத்தல் கணக்கு, பாகம், வேறுபாடு, இடையீடு

**பிருடை** - முறுக்காணி, அடைக் குந்தக்கை, சுழலாணி

**பிரை** - உறைமோர்

**பில்கு-தல்** - சிறு துவலை வீசுதல், பொசிதல், கொப்பளித்தல், வழிதல்

**பிறை** - குறைநிலவு

**பினத்தல்** - பிதற்றல்

**பின்புத்தி** - குறை அறிவு, காலம் கடந்த பின்வரும் விழிப்புணர்வு

**பின்-வாங்குதல்** - பின்போதல், தோற்றல், ஒப்பந்தத்திலிருந்து நெகிழ்தல், நெறிதவறுதல்

**பின்றேர்க்குறவை** - தேர்வீரரை வென்ற அரசனின் தேரின் பின்னே நின்று கொற்றவையும் கூளிச் சுற்றமும் களித்தாடுதலைக் கூறும் புறத்துறை

**பின்னடைவு** - பின்தங்கும் நிலை

**பின்னணி** - பின்வரிசை, பிற்படை

**பின்னம்** - மாறுபாடு, வேறுபாடு, வேறாந்தன்மை, உறுப்புக்கோணல், தடை

**பின்னல்** - பின்னுகை, தொடர்ச்சி, பின்னப்பட்டது, சடை, அரைஞாண், தவறு

**பின்னறிவு** - பின்னால் நடப்பதை அறிகை

**பின்னாடி பேசுதல்** - புறங்கூறுதல்

**பின்னிடுதல்** - பின்செல்லல், பின்புறமாதல், தோற்றல், காலத் தாழ்வாதல், வாங்குதல்

**பின்னி-தல்** - பிறகிடுதல், இணங்குதல், இரந்துநிற்றல், பின்செல்லுதல், மறுத்தல்

**பின்னிலை** - குறைவேண்டுகை, வழிபாடு, பிற்காலத்து வருவது, பின்னே சென்று போரிடுதல், பின்தங்கியுள்ளளநிலை

**பின்னுதல்** - கூந்தல் ஓலை முதலியவற்றை இணைத்தல், பிணித்தல், தழுவுதல், கூறுதல், அடித்தல்

**பின்னை** - தம்பி, தங்கை

**பின்னோக்குதல்** - வருவதை எதிர்பார்த்தல், பின்புறம் பார்த்தல், பின்வாங்குதல்

**பினாத்துதல்** - நோயுற்ற நிலையில் உளறுதல்

**பீச்சல்** - வயிற்றுக்கழிச்சல், பீச்சுகை, பீச்சியடித்தல்

**பீச்சுதல்** - பால் கறத்தல், நீர்மத்தைதக் கருவிமூலம் வெளியேற்றுதல்

**பீட்டன்** - இரண்டாம் பாட்டன், இரண்டாம் பேரன், பாட்டன்

**பீட்டி** - பாட்டி

**பீடம்** - இருக்கை (ஆசனம்), மேடை, அரியணை, காவுபீடம், சிலை வைப்பிடம், குதம், பிட்டம், குறைவட்டத்தின் எஞ்சிய பகுதி

**பீடர்** - பெருமையுடையவர்

**பீடிகை** - இருக்கை, பீடம், தேர் முதலியவற்றின் தட்டு, அரியணை, தவத்தோர் பீடம், முகவுரை, பூந்தட்டு, பூண்கொள்கலம்

**பீடிகைத் தெரு** - கடைவீதி

**பீடி-த்தல்** - துன்புறுத்துதல், பற்றுதல்

**பீடு** - பெருமை, வலிமை

**பீத்தல்** - தற்பெருமைப் பேச்சு

**பீதம்** - அச்சம்

**பீதி** - அச்சம், நோவு தரும் நோய்

**பீயாக்கு-தல்** - அழிவுண்டாக்குதல்

**பீர்** - பீர்க்கு, மரவகை

**பீரம்** - பீர்க்கு, பசலை நிறம், பூவரசு, வாகை, தாய்ப்பால்

**பீலி** - மயிற்றோகை, மயில், சிற்றால வட்டம், பொன், மகளிர் கால் விரலணி, சிறுசின்னம், இசைக் கருவி, பெருஞ்சவளம், மலை, மதில், நத்தையோடு, பனங்குருத்து, பனங்கிழங்கின் உட்குருத்து, நீர்ப்பாய்த் தொட்டி, பந்தயமுறி, வெண்குடை

**பீழ்-தல்** - பிடுங்குதல்

**பீழை** - துன்பம்

**பீள்** - கரு, இளங்கதிர், இளமை

**பீளல்** - பெண்குறி

**பீற்றல்** - கிழியல், கந்தை, கடனாளி

**பீற்று-தல்** - வீண்பெருமை பேசுதல்

**பீறு-தல்** - கிழித்தல், கீறுதல், பிளத்தல், கிழிவு, பிட்டம், குதம்

**புக்ககம்** - கணவன்வீடு, புகுந்தவீடு

**புக்கம்** - விடியல்

**புக்கில்** - தங்குமிடம், வீடு, புகலிடம், உடம்பு

**புகட்டுதல்** - உட்புகுத்துதல், ஊட்டுதல், அறிவுறுத்துதல்

**புகர்** - கபிலநிறம், கபிலநிறமாடு, நிறம், ஒளி, அழகு, வெள்ளி(நாண்மீன்), அருவி, உயிர், புள்ளி, குற்றம், கறை, சோறு, கொக்கு, பாராட்டுதல்

**புகர்க்கலை** - புள்ளிமான்கலை

**புகர்முகம்** - யானை, ஒருவகை அம்பு

**புகர்வு** - சோறு, உணவுக்குரிய பண்டம்

**புகல்** - சொல், விருப்பம், கொண்டாடுகை, பாடும்முறை, வெற்றி, புகழ், புகுகை , இருப்பிடம், துணை, பற்றுக்கோடு, உடம்பு, வழிவகை

**புகல்(லு)தல்** - சொல்லுதல், விரும்புதல், தெரிதல்

**புகல்-தல்** - ஒலித்தல், மகிழ்தல்

**புகல்வி** - விலங்கின்ஏறு

**புகல்வு** - விருப்பம், மனச்செருக்கு

**புகலி** - புதிதாகக் குடியேறியவன்

**புகலிடம்** - தஞ்சம், ஊர், இருப்பிடம்

**புகவு** - புகுகை, மேலேறுகை

**புகழ்மாலை** - பெருமையைத் தெரிவிக்கும் சொல் மாலை

**புகழாவாகை** - அகத்தி, செருக்கு

**புகார்** - ஆற்றுமுகம், காவிரிப்பூம் பட்டினம், பனிப்படலம், மந்தாரம், மழைமுகில், மங்கிய நிறம்

**புகுழ** - கழி, வாயில், புருவம்

**புகு-த்தல்** - போகவிடுதல், உட்செலுத்துதல்

**புகு-தல்** - செல்லுதல், தொடங்குதல், தாழ்நிலையடைதல், வாழ் நாளடைதல், ஏறுதல், நிகழ்தல், உட்படுதல், அகப்படுதல்

**புகு-தல்** - புகுதல், நுழைதல், உட்செல்லுதல், நிகழ்தல்

**புகுதி** - மனைவாயில், நிகழ்வு, ஆழ்ந்தறியம் நுண்ணறிவு, வழி, வருவாய்

**புகுந்தகம்** - புக்ககம்

**புகுந்துபார்-த்தல்** - ஆழ்ந்து நோக்குதல்

**புகுமுகம்புரிதல்** - தலைவன் தன்னை நோக்குதலை விரும்பும் தலைவியின் உள்ள நிகழ்ச்சி (அகப்பொருள்)

**புகை** - எரியும் பொருள் வெளிப்படுத்தும் கரும்படலம், ஆவி, துன்பம், புகைக்கொடி, வால்மீன்

**புகைச்சல்** - புகை, இருள், பார்வை மழுக்கம், கரகரப்பு, செய்தி சிறுகச்சிறுக வெளிப்படல், மனவெரிச்சல்

**புகை-த்தல்** - புகையச்செய்தல், கெடுத்தல், புகைபுகுத்தி உயிர்க் கொல்லல்

**புகைதல்** - புகையெழுதல், ஆவியெழுதல், செய்தி வெளியாதல், வருந்துதல், சினங்கொள்ளுதல், பயிர் முதலியன தீய்தல், குடி முதலியன அழிதல், மாறுபடுதல்,

தொண்டை முதலியன கரகரத்தல்

**புகைப்படம்** - ஒளிப்படம்

**புகையூட்டுதல்** - கூந்தல் முதலியவற்றிற்கு நறுமணப் புகையூட்டுதல், மருந்துப்புகை ஏற்றி பண்டுவம் செய்தல்

**புகைவு** - புகைச்சல், மனவெரிச்சல், வறட்டிருமல், தொண்டை அழற்சி

**புங்கண்** - மூடன்

**புங்கர்க்காழகம்** - மெல்லிய ஆடைவகை

**புங்கவம்** - ஆனேறு, விடை எருது, சிவன் ஊர்தி (நந்தி), சிறந்தது

**புங்கவன்** - சிறந்தோன், குரு, தேவன், புத்தன், அருகன், செய்நஞ்சு வகை

**புங்கவி** - தெய்வப்பெண், மலைமகள்

**புச்சி** - எருக்கு, கோழி

**புசிகரம்** - பேணுதல், ஊண்

**புசிப்பு** - உண்ணுகை, உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன ஆகிய நால்வகை உணவு, வினைப்பயனுகர்ச்சி

**புஞ்சம்** - திரட்சி, குவியல், கூட்டம், கும்பல், நெசவில் 240 இழைக் கொண்ட நூற்கொத்து, நெய்த ஆடையின் அளவுவகை

**புட்டி** - பருமை, கொழுப்பு, குப்பி

**புட்டம்** - புடவை, உடலின்பின்பக்கப் புடைப்புப்பகுதி, பெண்குறி

**புட்டவியல்** - சீலையில் ஏடுகட்டி வேக வைத்தல், புழுக்கம்

**புட்டா** - பாவின் உட்பகுதியில் செய்யப்படும் பூவேலைப்பாடு

**புட்டில்** - அம்பறாத்துணி, விரலுறை, உறை, கூடை, இறைகூடை, முறம், குதிரை உணவு கட்டும் பை, கெச்சை என்னும் அணி, தக்கோலத்தின் காய், வால்மிளகு

**புடம்** - புடமிடுங்கலம், மூடி, உலர்த்திப் பக்குவப்படுத்தல், பக்கம், உள் வளைவு, இலைக்கனம், தொன்னை, கண்ணிமை,

**புடமண்** - தூய அழுக்கற்றமண்

**புடம்போடு-தல்** - பொன் முதலான மாழைகளை நெருப்பில் உருக்கித் தூய்மையாக்கல், மூலிகைப் போன்றவற்றை நெருப்பிலிட்டு நீராக்குதல், மிகவருந்துதல்

**புடவி** - உலக உருண்டை, உலகம், வீங்குதல்

**புடவை களை-தல்** - சீலை நீக்குதல், மாதவிடாய் நிகழ்தல்

**புடவை போடுதல்** - கோடி போடுதல்

**புடை** - பக்கம், இடம், பகுதி, முறை, துளை, திரட்சி, ஏழனுருபு, அடி, அடித்துண்டாக்கும் ஒலி, பகை

**புடை நகர்** - புறநகர்

**புடை-த்தல்** - அரிசி முதலியவற்றை முறத்திலிட்டுத் தட்டி தவிடு தூசியகற்றல், அடித்தல், குத்துதல், துவைத்தல், சிறகடித்தல்

**புடைபடுதல்** - இடம்படுதல், மிகுதியாதல், திரண்டுபருத்தல்

**புடைப்பு** - அடிக்கை, வீங்குகை, கொழிக்கை, மந்தணம், தடித்தநிலை, துருத்திக் கொண்டிருத்தல்

**புடைப்பெண்டிர்** - வைப்பாட்டிகள்

**புடைபெயர்-தல்** - நிலைமாறுதல், அசைதல், வெளியேறுதல், தொழிற்படுதல், எழுதல்

**புடைவை** - பெண்களின் சீலை

**புண்** - தோலில் உண்டாகும் ஊறு, தசை, வடு, மனநோவு

**புண்ணாக்கு-தல்** - புண் உண்டாக் குதல், பிறர்மனம் நோகச் செய்தல்

**புண்ணுடம்பு** - மகப்பேற்றால் அமைந்த பச்சையுடம்பு, கரிசு(பாவ) உடம்பு, புண்கள் நிறைந்த உடம்பு

**புணர்ச்சி** - சேர்க்கை, கலவி, முன்பின் தொடர்பு, எழுத்து முதலியவற்றின் சேர்க்கை (சந்தி), சொற்கூட்டு

**புணர்ச்சி வேறுபாடு** - தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் புணர்ச்சி வேறுபாடுகள்

**புணர்-த்தல்** - சேர்த்தல், எழுத்து முதலியன சந்திக்கும்படி செய்தல், நிகழ்த்துதல், கட்டுதல், படைத்தல், சிற்றிலக்கியமாகச் செய்தல்

**புணர்-தல்** - பொருந்துதல், கலவிசெய்தல், அளவளாவல், மேற்கொள்ளல்

**புணர்வு** - சேர்க்கை, கலவி, இணைப்பு, உடல்

**புணரி** - அலை, கடற்றிவலை, கடல், கரை, ஒலிக்கை, தனிமை

**புத்தகம்** - நூல், நூற்பொருள் எழுதிய ஏட்டுத்தொகுதி, எழுதுதாள் தொகுப்பு, மயிலிறகு

**புத்தாக்கம்** - புதியதாக ஆக்கல், புதுச்செறிவு

**புத்தேள்** - புதுமை, புதியவள், தெய்வம்

**புதல்** - குத்துச்செடிகளின்; செறிவு, தூறு, புல்லினம், புறசாதி, மருந்துப்பூடு, அரும்பு, புருவம், நாணல்

**புதல்வன்** - மகன், மாணாக்கன், குடி

**புதல்வி** - மகள்

**புதவம்** - வாயில், அருகு

**புதவு** - கதவு, வாயில், மதகு, திட்டிவாசல், குகை

**புதியவர்** - புதிதாக வந்தவர், விருந்தினர்

**புதிர்** - விடுகதை

**புதிரி** - புதுநெற்சோறு

**புதினம்** - புதுமை, செய்தி, நெடுங்கதை, வியப்பு

**புதுக்குதல்** - புதுப்பித்தல், அழகாக்கல், மெருகேற்றல்

**புதுக்கோடி** - கைமணாட்டிக்கு அளிக்கும் கோடிப்புடவை

**புதுத்தரை** - நீர்நிலையைத் தூர்த்து உண்டாக்கின நிலம், புதிதாக இடப்பட்ட தரை

**புதுத்திங்கள்** - பிறைநிலா

**புதுநிறை** - புது வெள்ளம், புதுப்பெருக்கு, ஆற்றுப்பெருக்கு

**புதுப்புனைவர்** - புதிய ஒன்றைக் கண்டுபிடிப்பவர்

**புதுப்பெயல்** - பருவத்தில் முதன் முதலாகப் பெய்யும் மழை

**புதுமணம்** - திருமணம்

**புதுமுதல்** - அடுத்த ஆண்டு

**புதுமை** - புதிதாந்தன்மை, பழக்க மின்மை, அரிய நிகழ்வு, வியப்பு, எழில், நாட்டுக்கோட்டையார், பிள்ளைப்பேறு முதலியவற்றைக் கொண்டாடும் சடங்குவகை

**புதை சாலகம்** - சாய்க்கடைநீர் வெளியேறும் நிலத்தடி வழி, நிலத்தடி கழிநீர்க் கால்வாய்

**புதை-தல்** - மண்ணுள் மறைதல், ஏதோ ஒன்றை மறைக்கப்படுதல், அமிழ்தல், உள்ளடங்கியிருத்தல்

**புதைபொருள்** - நிலத்துள் மூழ்கிக்கிடக்கும் செல்வம், பண்டைக்காலச் சின்னங்கள், இலக்கியத்துள் மறைந்துள்ள ஆழ்ந்தபொருள்

**புயல்** - மழைப்பொழிவு, நீர், முகில், கொடுங்காற்று, சுழற்காற்று

**புயல் சின்னம்** - புயலுக்கான அறிகுறி

**புயல் வண்ணன்** - திருமால்

**புயலேறு** - இடி

**புரசு** - பூவரசு மரம், சிறுபெண் குழந்தை

**புரட்சி** - பிறழ்வு, ஒழுங்கின்மை, சட்டம்மீறிச் செய்யும் புதுமை, விதிமீறல் நிகழ்வு, குறுகிய காலத்தில் முற்றிலும் மாறும் நிலைமை

**புரட்டல்** - கறி, ஏமாற்றுதல்

**புரட்டன்** - ஏமாற்றுபவன், பொய்யன்

**புரட்டுதல்** - உருட்டுதல், செய்து முடித்தல், கீழ்மேலாகத் திருப்புதல், கறி முதலியவற்றைக் கிண்டி வதக்குதல், ஏய்த்தல், மறுத்துரைத் தல், தேய்த்தல்

**புர-த்தல்** - காத்தல், பேணிவளர்த்தல், உதவுதல், வணங்குதல், மிகுதியாகக் கொடுத்தல்

**புரம்** - ஊர், நகரம், மதிலரண் சூழ்ந்த தலைநகரம், கோயில், வீடு, புறணி, உடல், தோல்

**புரம்பாய்** - வைத்தல், மறைவாக வைத்தல்

**புரவலன்** - காத்துதவுவோன், அரசன், கொடையாளர்

**புரவி** - குதிரை

**புரவு** - காப்பு,கொடை, ஆட்சியிடம், இறையிலிநிலம், ஆற்றுப்பாசன வயல் அல்லது நிலம், செழுமை

**புரள்(ளு)தல்** - உருளுதல், கழிதல், அலைமறிதல், நிரம்பிவழிதல் , கரைகடந்தோடுதல், அழுக்காதல், நீரில்கலத்தல், பணம்விரைந்து

கைமாறுதல், மாறிமாறி வருதல், சாதல்

**புரளி** - பொய், ஏய்ப்பு, குறும்பு, கலகம், முரட்டுத்தனம்

**புரி** - கயிறு, முறுக்கு, சுருள், சுரி, சங்கு, யாழ்நரம்பு, மாலை, கட்டு, நகரம், தலைநகரம், மருதநிலத்தார், உடல்

**புரிக்கூடு** - நெற்சேர்

**புரிகுழல்** - கடைகுழன்று, சுரண்ட கூந்தல்

**புரி-தல்** - விரும்புதல், ஊழ்கம் (தியானம்)செய்தல், படைத்தல், ஈனுதல், மேற்கொள்ளல், முறுக்கிக் கொள்ளுதல், திரும்புதல், அசைதல், மிகுதல், விளங்குதல், பொருள் தெளிதல்

**புரிந்துணர்வு** - புரிந்நு தெளிதல்

**புரிமுகம்** - கோபுரம், சங்கு, நத்தை

**புரிமுனை** - பாண்டம் வைக்க வைக்கோலைச் சுற்றியமைத்த பீடம்

**புரிவு** - அன்பு, விருப்பம், தொழில், தவறு, தப்பிநீங்குகை, வேறுபடுகை, தெளிவு

**புரு** - மிகுதி, பருமை, வீடுபேறு, துறக்கம்

**புருவம்** - கண்களின் மேலுள்ள மயிர் வளைவு, வளைந்த கண்பட்டை, புண்விளிம்பு, வரம்பு

**புருவை** - ஆடு, செம்மறி ஆடு, பெண்ணாடு

**புரை** - உட்டுளை, உட்டுளைப் பொருள், குரல்வளை, விளக்கு மாடம், குற்றம், உள்ளோடும் புண், கண் நோய்வகை, பொய், அறை, கூறுபாடு, வீடு, கோயில், தவச்சாலை, பூவுலகு, மாட்டுத் தொழுவம்

**புரைசல்** - குழப்பம், துளை, குற்றம், மாணிக்கக்குற்றங்களுள் ஒன்று

**புரை-தல்** - ஒத்தல், தைத்தல், மறைத்தல், பொருந்துதல், நோதல், மூச்சுத்திணறல், பெருமையாதல்

**புரையோர்** - பெரியோர், மெய்ப்பொருள் உணர்ந்தோர்

**புல்** - மூங்கில் குடும்பத்தைச் சேர்ந்த புல்வகை, பனை, பதினேழாம் மீன், தென்னை, நிலத்தினைவகை, பூடுவகை, புதர், கம்பு, புன்செய், தவசம், சிறுமை, இழிவு, கபிலநிறம், புணர்ச்சி, சிவல், புலி

**புல்கு-தல்** - அணைதல், புணர்தல், நண்பினராய் மருவுதல்

**புல்மரம்** - தென்னை மரம்

**புல்லரி** - புற்கட்டு

**புல்லரிசி** - வற்கடக்காலத்தில் ஏழைகள் உண்ணும் அரிசி போன்ற தவசம்

**புல்லரித்தல்** - மயிர்கூச்செறிதல், உண்ண விருப்பமில்லா மாடு முதலியன புல்லைத் துழாவுதல்

**புல்லருவி** - மரம்செடிகளில் உள்ள ஒட்டுண்ணிப்பூடுவகை, பயிரோாடு கலந்திருக்கும் புல், பிறர் உழைப்பில் சார்ந்து தன்னுழைப்பை மேற்கொள்வோர்

**புல்லறிவாளர்** - மேம்போக்கான அறிவுடையவர்

**புல்லறிவு** - அறியாமை

**புல்லன்** - அறிவிலி, இழிந்தவன், ஒழுக்கமற்றவன்

**புல்லிலை வைப்பு** - இலைகளால் வேயப்பட்ட குடிசைகள் உள்ள ஊர்

**புல்லினம்** - ஆட்டினம்

**புல்லுணவு** - மரக்கறியுணவு

**புல்லுதல்** - தழுவுதல், புணர்தல், பொருந்துதல், வரவேற்றல், ஒத்திருத்தல், ஒட்டுதல், நட்பு செய்தல்

**புல்வாய்** - கலைமான்

**புல்வீடு** - புல் வேய்ந்த கூரை வீடு

**புலத்தல்** - மனம் வேறுபடுதல், துன்புறுதல்

**புலத்தி** - பெண்பாற்புலவர், வண்ணாத்தி

**புலநெறிவழக்கம்** - புலவர் கைக்கொள்ளும் செய்யுள் வழக்கு

**புலப்படுதல்** - தெரிதல், வெளிப்படுதல்

**புலம்** - வயல், இடம், திக்கு, மேட்டு நிலம், பொறி, புலனுணர்வு, அறிவு, கூர்மதி, துப்பு, நூல், மறை

**புலம் வைத்தல்** - உளவு பார்த்தல்

**புலமக்கள்** - படித்தோர், கற்றோர்

**புலம்பல்** - ஒலி, தனிமைகூறுகை, பிதற்றுகை, அலப்புகை, அழுகை, அழுகைப்பாட்டு

**புலம்பிடி-த்தல்** - துப்புக்கண்டு பிடித்தல்

**புலம்பு முத்து** - அழுகைக்கண்ணீர்

**புலம்பு-தல்** - வருந்துதல், வாடுதல், அழுதல், வெறுத்தல், அடிக்கடி கூறுதல்

**புலம்பெயர்மக்கள்** - அயல்நாட்டினர், கடலோடிகள்

**புலமை** - கல்வி, மெய்யறிவு, பாவியற்றும் ஆற்றல்

**புலமையோர்** - பாவலர், அறிவின், தருக்கி, சொல்லி என்ற நால்வகைக் கல்விவல்லோர், கற்றோர்

**புலர்-தல்** - வாடுதல், உலர்தல், தளர்தல், குறைதல், விலகுதல், முற்றுதல், விடுதல், தெளிதல்

**புலரி** - விடியல், ஞாயிறு, வைகறை, கதிர்வன்

**புலவர்** - புலன்களைவென்றோர், புலமையோர், அறிவர், குறுநில மன்னர், கடத்தர், கம்மியர், கலைஞர், கோயம்புத்தூரில் கொங்குவேளாளரையொத்த வேளாண் பிரிவினர், சில பிரிவினரின் பட்டப்பெயர்

**புலவரை** - நிலஎல்லை, அறிவின் எல்லை

**புலவி** - ஊடல், வெறுப்பு

**புலவி நுணுக்கம்** - சிறுகாரணத்தைக் கொண்டு தலைவி ஊடுகை

**புலன்** - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய புலன் உணர்வுகள், பொறி, செயல்கருவி,

அறிவுடைமை, பகுத்தறிவு, தெளிவு, உறுப்பு, வயல்

**புலால்** - ஊன், இறைச்சி, உடலின் ஊன் முழுத்தொகுதி, புலால் நாற்றம், தசைநரம்பு

**புலி** - பாயும் காட்டு விலங்கு, ஒரு துறையில் தேர்ந்த அறிவாளி

**புலிக்குருளை** - இளையபுலி

**புலிக்கொடி** - சோழர்களின் அடையாளக் கொடி

**புலியுகிர்** - புலியின் உகிர், குழந்தைகளுக்குக் காப்பாகக் கோத்து அணிவிக்கும் ஓர் அணி, உகிர்க் குறிவகை, புலியுகிர் மரவகை

**புலியேறு** - ஆண்புலி

**புலை** - இழிவு, தூய்மையற்றது, தீயநெறி, தீட்டு, பொய், விலைத் தொழில், தீநாற்றம்

**புலையன்** - இழிசனமாகக் கருதப்பட்டவர், இறுதிச்சடங்குச் செய்விப்போன், ஒரு மலை வாழினம், பாணன்

**புழக்கம்** – அறிமுகம், வழக்கில் உள்ள நிலை, பயன்பாடு, தோற்றம், இடைவெளிவிட்டதன்மை

**புழல்** - உட்குளை, சாக்கடை, பண்ணியாரம், மீன்வகை

**புழுக்கம்** - காற்றின்மையால் உடல் வெப்பமுற்று வியர்த்தல், வியர்வை, துன்பம், பொறாமை, வன்மம், அழுக்காறு

**புழுக்கல்** - அவித்தது, சோறு, புழுங்கலரிசி, முதிரைப்பண்டம்

**புழுக்கு** - அவிக்கை, புழுங்க வெந்த உணவு, குழையச்சமைத்த பருப்பு, பருப்புச் சோறு, இறைச்சி

**புழுக்கை** - ஆடு, எலி முதலியவற்றின் மலம், பிழுக்கை, அடிமை, தொழுத்தை

**புழுகு நெய்** - புழுகு சட்டத்திலிருந்து எடுக்கும் நறுமணப்பண்டம்

**புழுகுப்பூனை** - நறுமணப்பண்டம் தரும் ஒருவகைப்பூனை

**புழுங்கல்** - அவிகை, அவித்தது, புழுங்கினநெல், சினம், புழுக்கம், வியர்த்தல், பண்படுத்திய புன்செய்

**புழுங்கு-தல்** - ஆவியெழுவேகுதல், சிறுகவேகுதல், வெப்பத்தால் புழுக்கமாதல், சினத்தால் வெம்புதல், வியர்த்தல், அழுக்காறு கொள்ளுதல், வாடுதல்,வருந்துதல்

**புழு-த்தல்** - புழுப்பிறத்தல், சூலுருதல், மிகுதல், வெறுப்புடன் பேசுதல், பயனற்றதாதல்

**புழை** - துளை, குழாய், வாயில், சிறுவாயில், காட்டுவழி, ஒடுக்கவழி, சாளரம், ஏவறை, நிரயம்

**புள்** - பறவை, கணந்துள், வண்டு, புள் நிமித்தம், பறவை நாள், கைவளை, மது, கிட்டிப்புள், கிட்டி

**புள்ளடி** - பறவையின் பாதம், எழுது கையில் விட்டதை எழுத,

வரிபிளப்புக்குறி, நேரிச்சீட்டில் இடும் பெருக்கல் குறி, உரைகல், செடிவகை, தாள அளவு உறுப்புக்களுள் ஒன்று ஏணி

**புள்ளம்** - கொடுவாள், அரிவாள் வகை, அரிவாண்மனை

**புள்ளி** - பொட்டுக்குறி, எழுத்தின்மேல் இடும் சுழிக்குறி, மெய்யெழுத்து குற்றியலிகர உகரங்கள்(,உ), சரக்கின் மேலிடும் விலைக்குறி, சுவற்றின் கட்டம், மதிப்பு, ஆள், பேரேடு, பெருந்தொகை, இமயமலை, பல்லி, நண்டு, ஆய்தவெழுத்து(ஃ)

**புள்ளூர்கடவுள்** - கலுழன் மீது ஏறும் திருமால்

**புள்ளுரைத்தல்** - புள்ளொலி பொருள் கொண்டு நிமித்தங்கூறல்

**புள்ளோப்பு-தல்** - பறவையை ஓட்டுதல்

**புளகம்** - மயிர்சிலிர்க்கை, மகிழ்ச்சி, சோறு

**புளி** - புளிப்புச்சுவை, மரவகை, புளியம்பழம், புளிங்கறி, தித்திப்பு, பொதுசரக்கு வகை

**புளிச்சை** - செடிவகை, செம்புளிச்சை, பீளை

**புளிஞன்** - வேடன், கானவன்

**புளிமா** - புளிப்புக்கனிதரும் மாமரம், புளிச்சக்காய் மரம், காட்டுமா, நீண்டமரவகை

**புளிறு** - ஈன்றணிமை, அண்மையில் ஈனப்பட்டது, பிஞ்சுத்தன்மை, மகப்பேற்றலான தீட்டு, புதுமை, தோல்

**புளுகு** - முழுப்பொய், கற்பனை

**புற்றாஞ்சோறு** - புற்றுக்கரையான் திரள், பூஞ்சணம்

**புற்று** - கரையான் கட்டிய மண்கூடு, எறும்புவளை, புனரவைத்தபுண், தலை எழுத்து

**புறக்கணித்தல்** - மதியாமை, ஏளனமாக எண்ணுதல்

**புறக்காழ்** - பனை முதலியவற்றில் உள்ள வெளிவயிரம், பெண்மரம்

**புறக்கு** - வெளிப்புறம்

**புறக்குடி** - நிலஉடைமையாளருக்குக் கட்டுபடாத குடியானவன், வெளியூர் சென்று வேளாண்மை செய்யும் குடியானவன்

**புறக்கொடை** - போரில் புறமுதுகு காட்டுதல், கோயிலின்; வெளிப்புறம், உடலின் பின்புறம், பிரிந்த நிலை

**புறங்கடை** - வீட்டின் வெளிப்புறம், வெளியிடம், பிறர்க்குரிய இடம்

**புறங்காட்டு-தல்** - மதிப்பின்மையாகப் பின்புறந் திரும்புதல், தோற்றோடுதல், வெளிக்குக்காட்டுதல்

**புறங்காடு** - இடு அல்லது சுடுகாடு

**புறங்காப்பு** - புறத்தில் நின்று பாதுகாத்தல்

**புறங்கூறு-தல்** - பிறர்மேல் அலர்தூற்றல், மந்தணத்தை வெளிப்படுத்தல்

**புறச்சொல்** - நாடகத்தில் தனக்குள் உரைக்காமல், பிறர்கேட்கம்படி உரைக்கும் சொல்

**புறஞ்சிறை** - மாளிகை முதலிய வற்றிற்கு அருகேயுள்ள இடம், வேலிக்குப் புறம்பானது, அண்மையிலுள்ள இடம்

**புறத்துறவி** - அகப்பற்றுடன் துறவி வேடம் பூணல்

**புறத்தொழுக்கம்** - விலைமகளிருடன் கூடியொழுகுகை

**புறந்துறப்பு** - இடம் பொருள் ஏவல் முதலிய பக்கத்துணை, உடலின் புறத்துள்ள உறுப்பு

**புறநிலை** - வெளிப்புறம், வேறுபட்ட நிலை, 96 வகை சிற்றிலக் கியங்களுள் ஒருவகை, உதவி நோக்கிப் பிறர் புறங்கடையில் நிற்கும் நிலை, ஏவல் செய்து பின் நிற்கை, சாதிப்பெரும் பண் நான்கனுள் ஒன்று

**புறநிலை வாழ்த்து** - தலைவன் ஒருவனை வாழ்த்தும் செயல்

**புறப்பணை** - முல்லை நிலம்

**புறப்பாடு** - வெளியேறுகை, புறந்தோன்றுகை, செல்கை, கோயில் சிலை வெளியில் எழுந்தருளல், புண்கட்டி வகை

**புறப்பெண்டிர்** - பரத்தையர்

**புறம்** - வெளியிடம், அயன்மை, வீரம், பக்கம், முதுகு, பின்புறம், புறங்கூற்று, அலர்மொழி, ஒருதலைப்பக்கம், இறையிலி நிலம், ஏழனுருபுள் ஒன்று, திசை, காலம், உடம்பு, மதில், மருதநிலத்தூர்

**புறமொழி** - புறங்கூற்று

**புறவரி** - தலைவனுடன் அணையாது தலைவி புறத்தே நின்று நடிக்கும் நடிப்பு

**புறவீடு** - உலாவுக்குமுன் நன் முழுத்தத்தில் அரசுச் சின்னத்தைப் புறத்தே அனுப்புகை

**புறவு** - கான், குறுங்கான், முல்லை நிலம், குறிஞ்சிநிலம், வேளாண்மை நிலம், முல்லைக்கொடி

**புன்கண்** - துன்பம், நோய், மெலிவு, வறுமை, பொலிவழிவு, அச்சம், இழிவு

**புன்கு** - மரவகை, காட்டுப்புன்னை, புரசு, காட்டுப்பச்சிலை

**புன்கூர்-தல்** - வருந்துதல்

**புன்புலம்** - வெற்றுநிலம், புன், செய்நிலம் புல்லிய இடம், புல்லிய அறிவு,

**புன்மக்கள்**- இழிந்தவர்

**புன்மை** - இழிவு, துன்பம், வறுமை, குற்றம், புகர்நிறம், பார்வைமழுக்கம், மறதி

**புன்றலை** - சிறியதலை, இளந்தலை, சிவந்த மயிர்தலை

**புன்னம்புலரி** - வைகறை

**புன்னாடு** - சோழநாடு, கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டனுள் ஒன்று

**புன்னெறி** - தீயவழி, பொய்ச்சமயம்

**புனக்காவல்** - தினைப்புனங்காத்தல்

**புனம்** - மலைச்சார்ந்த கொல்லை

**புனல்** - நீர், ஆறு, குளிர்ச்சி, முற்குளம் (பூராடம்), வாலுளுவை

**புனல்விளையாட்டு** - நீர் விளையாட்டு

**புனை** - நீரில் மிதக்கும் கட்டை, தெப்பம், கட்டுமரம், மரக்கலம், விலங்கு, ஈடு, பிணைமுறி, ஒப்பு

**புனைதல்** - சூடுதல், அழகுபடுத்தல், அணியமாக்குதல், முடைதல், கற்பித்தல், செய்யுளமைத்தல், செய்தல்

**பூ** - மலர், மரஞ்செடி கொடிகளின் ஆண், பெண் இனப்பெருக்க உறுப்பு, பூப்பு, தாமரைப்பூ, பூத்தொழில், நீலநிறம், அழகு, பொலிவு, நுண்பொடி, கருவிழியில் விழும் வெண்பொட்டு, விளைவுப் பருவம்

**பூ நொய்** - சிறுநொய்

**பூ நோன்பு** - கொங்கு நாட்டுப் பொங்கல் விழா

**பூக்கணை** - மலரம்பு

**பூங்கொடி** - மலர் கொண்ட கொடி, பெண், அழகிய கொடி

**பூச்சக்கரம்** - பூமண்டலம், நிலநடுக்கோடு, சக்கரவாணம், பூச்சி, தடவுகை, மேற் பூசுகை, கஞ்சிப்பசை, மருந்துப்பற்று, வெளிப்பகட்டு, குற்றம் குறை மறைத்தல், இதமான சொல், செயல் முதலியன

**பூசணி** - தரையில் படர் கொடி காய்க்கும் உணவிற்காகும் பெரும் உருண்டைக் காய், சருக்கரைப் பூசணி, பூசணி வகை

**பூசல்** - போர், பேரொலி, பலரறிய வெளிப்படுத்துகை, கூப்பாடு, வருத்தம்

**பூசலிடுதல்** - முறையிடுதல், பேரொலி எழுப்பிக்கதறுதல், கூட்டுதல்

**பூசற்களம்** - போர்க்களம்

**பூசனை** - நாள் வழிபாடு, மதிப்பளிக்கை

**பூசிமெழுகுதல்** - உண்மையை மறைத்து மழுப்பிப் பேசுதல்

**பூசு** - பூசுகை, உமி அல்லது தொலி, ஒட்டடை, தூசு

**பூசு-தல்** - தடவுதல், மெழுகுதல், கழுவுதல், நீரால் தூய்மை செய்தல்

**பூசை** - வழிபாடு, வீட்டுப் பூசை, காட்டுப் பூனை, அடியார், அமுது செய்கை, செம்மையான அடி

**பூஞ்சு** - பலாச்சுளையின் மேலுள்ள நார்ப்பகுதி

**பூஞ்சை** - பூஞ்சல், பாழ், ஒட்டடை, கண்மங்கல்

**பூட்கை** - கொள்ளை, உறுதி எடுத்தல், வலிமை, அரிமா, யானை, யானையாளி, தோல்

**பூட்சி** - பொருந்துகை, பூணுகை, அணிகலன், உடல், புணர்ப்பு, கொள்கை, மனவுறுதி, வரிவகை, உரிமை

**பூட்டகம்** - வீண்பெருமை, போலிவேலை, இரண்டகம், வஞ்சகம், கமுக்கம்

**பூட்டழி-த்தல்** - கட்டுக்குலைத்தல்

**பூட்டறு-தல்** - கட்டுக்குலைதல், நுகத்தினின்றும் விடுபடுதல்

**பூட்டன்** - பாட்டனின் தந்தை

**பூட்டி** - பாட்டனின் தாய்

**பூட்டு** - பிணிப்பு, அடை, கதவைச்சாத்தி திறக்க இயலாமல் செய்யும் திறவாலுடனான ஒரு கருவி, கொக்கி, மல்லுக்கட்டு, இறுக்கம், இடர், மகளிர் அளகத்தில் பூணும் அணிவகை, அடுக்கு முடைந்த நான்கு தென்னங்கீற்று கொண்ட கட்டு, மந்தணம்

**பூட்டு-தல்** - மாட்டுதல், இணைத்தல், வைத்தல், எருது முதலியனவற்றைப் பிணைத்தல், தொழுவில் அடைத்தல், விலங்குமாட்டுதல், பொறுப்பேற்றல், நாளேற்றுதல், வழக்குத்தொடுத்தல், இறுக்குதல்

**பூட்டுவிலகு-தல்** - உடல் பொருத்துவாய் விலகிப்போதல்

**பூட்டூசி** - ஏற்றமரம், இராட்டினச் சக்கரம், நீர் இறைக்கும் கருவி, செக்கு, பூட்டாங்கயிறு

**பூட்டை** - சோளக்கதிர்

**பூட்டை தறி-த்தல்** - எருதுகள் நுகக் கட்டவிழ்தல்

**பூடகம்** - மறைமுகமாக உள்ளது

**பூடு** - சிறுசெடி, வெள்ளைப் பூண்டு

**பூடு-தல்** - இணைதல்

**பூண்** - அணி, உலக்கை, தடி முதலியவற்றின் முனையிற் செறித்த வளையம், யானைக் கோட்டின் கிம்புரி

**பூண்(ணு)-தல்** - அணிதல், சூழ்ந்துக் கொள்ளுதல், மேற்கொள்ளுதல், உடைத்தாதல், சிக்கிக்கொள்ளுதல், நுகத்திற்கட்டப்படுதல், நெருங்கி இறுகுதல்

**பூண்டி** - ஊர், தோட்டம், இடர்ப்பட்ட கடற்பகுதி

**பூணி** - எருது, கன்றுகாலி(ஆனினம்), விடையோரை, நீர்ப்பறவை வகை

**பூணித்தல்** - தோற்றுவித்தல், குறிப்பிடுதல்

**பூணை** - முல்லைநிலம்

**பூதகம்** - உடம்பு, நிலவுலகு

**பூத்தரு புணர்ச்சி** - பூப்பறித்தளித்த தலைவனுக்கு நன்றி பாராட்டி அவனைக் கூடும் கூட்டம்

**பூ-த்தல்** - தோன்றுதல்

**பூதம்** - நிலம், நீர், நெருப்பு, வளி, வெளி என்னும் ஐம்பூதங்கள், ஐம்பூதங்களின் சிறப்பு தெய்வங்கள், இறந்தோரின் பேய் உருவம், பூதகணம், தாழி(பரணி), பருத்தது, உயிரி, இறைப்பற்றாளன், இருப்பு, உள்ளான் புள், சடாமஞ்சி, கமுகு, கூந்தற்பனை, ஆலமரம்

**பூதேசன்** - சிவன்

**பூந்துகில்** - பூ வேலை செய்யப்பட்ட ஆடை, பொற்கரை ஆடை

**பூந்துணர்** - பூங்கொத்து, புனமுருக்கு

**பூந்தேறல்** - புதிய இனிய மது

**பூந்தோள்** - பொலிவு பொருந்திய சுவல் (புயம்)

**பூநீர்** - பனிநீர், அரக்குநீர், உவர் மண்ணில் எடுக்கும் நீர்

**பூப்பகம்** - பெண்குறி

**பூப்படர்-தல்** - கண்ணில் பூப்படர்தல்

**பூம்பனை** - ஆண்பனை

**பூம்புகை** - நறுமணப்புகை

**பூமண்டலம்** - நிலவுலகம்

**பூமலி** - மூளை

**பூமாறுதல்** - பூப்பு நின்றுபோதல்

**பூமுகம்** - பொலிந்த முகம், வீட்டுமுன் முகப்பு

**பூரணை** - வெள்ளுவா, நிறைவு

**பூரம்** - ஒரு திருமணச்சடங்கு, தேள், பூரான், பழம், பொன்

**பூரி** - ஊதுங்கருவிவகை, வில்லின் நாண், குற்றம், கலப்புநெல், விரிந்த பாலையினுள்ளிருக்கும் பூத்தொகுதி

**பூரித்தல்** - நிறைதல், படைத்தல், கருத்தை வெளியிட உரிய சொற்களைச் சேர்த்தல்

**பூரிப்பு** - நிறைவு, மீமகிழ்ச்சி, பருமன், மிகுதி, ஒளி

**பூரியது** - தாழ்வானது

**பூரியர்** - இழிந்தவர், தீயவர், கொடியவர்

**பூவல்** - சிவப்பு, செம்மண், பூத்திடுகை

**பூவல்லிக்கொய்தல்** - பூக்கொய்து ஆடும் மகளிர் விளையாட்டு வகை

**பூவலம்** - உலகைச்சுற்றிவரல்

**பூவலயம்** - மண்ணுலகு

**பூவன்** - சேவல், வாழையில் ஒருவகை, நெய்க்கொட்டான்பழம், செவ்வாழை

**பூவாளி** - காமன், காமனின் மலரம்பு

**பூவிலை** - விலைமாதர் பெறும் அற்றைப்பரிசம்

**பூவிழுதல்** - சொரசொரப்பு நீங்குதல், கருவிழியில் வெள்ளை விழுகை

**பூவெறி** - பூவின் நறுமணம்

**பூவை** - பெண் காயா, நாகண வாய்ப்புள், குயில், கிளி, கீரிப்புழு

**பூவைநிலை** - காயாம் பூவை மாயவன் நிறத்தோடு உவமித்துப் புகழும் புறந்துறை, அரசனைத் தேவனோடு ஒப்பக்கூறும் புறந்துறை

**பூவொதுங்குதல்** - கருப்பையின் வாசல் ஒதுங்கிப்போதல்

**பூழ்** - காடை வகை, கானாங்கோழி, புழை

**பூழ்க்கை** - யானை

**பூழ்தி** - இறைச்சி, முடைநாற்றம், புழுதி, கொடுமை

**பூழான்** - கவுதாரி, கானாங்கோழி, சம்பங்கோழி

**பூழி** - தூள், புழுதி, திருநீறு, கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டனுள் ஒன்று, குழை சேறு, சேற்றுக்குமிழி

**பூழியன்** - சேரன், பாண்டியன்

**பூழியான்** - சிவன், புழுதியிடத் துள்ளவன்

**பூழில்** - அகில், நிலம்

**பூழை** - சிறுவாயில், மழைக் கணவாய், புழை

**பூள்** - ஆண்குறி

**பூளை** - இலவு, செடிவகை, வெற்றிப்பூ

**பூறு** - பிட்டம்

**பூனை** - புலால் உண்ணும் சிறு வீட்டு விலங்கு, இலவம் பிசின், காஞ்சொறி, சிறுகாஞ்சொறி

**பூனைச்செவி** - குறைக்காது

**பூனைத்திசை** - தென்கிழக்கு

**பூனைவணங்கி** - குப்பைமேனி, நாயுருவி

**பெட்டகம்** - பெட்டி, மணமகள் வரிசைப் பெட்டி

**பெட்டார்** - நண்பர், விரும்பியவர்

**பெட்டல்** - விருப்பம், காதலித்தல், பெரிதும் விரும்புதல்

**பெட்டன்** - பொய்யன்

**பெட்டி** - பேழை, பண்டங்களைக் காத்துதவும் கலம், கூடை, தொடர்வண்டி முதலியவற்றின் அறை, வண்டியோட்டியின் இருக்கை, வண்டியிருக்கையின் கீழ் சிறுபொருள் வைக்க உதவும் இடம், வழக்குமன்றக்கூண்டு, சுண்ணாம்பு முதலியன அளக்கும் முகத்தலளவை

**பெட்டியோடுதல்** - மாழைப் பெட்டியின் வெப்பத்தால் துணியின் சுருக்கம் நீங்கத்தேய்த்து மடித்து வைத்தல்

**பெட்டை** - விலங்கு, பறவை ஆகியவற்றின் பெண்பால், பெண்குருடு, குறைபாடு

**பெட்ப** - மிக, பெருமளவு, அளவு கடந்த, அதிகமான

**பெட்பு** - விருப்பம், பேணுகை, அன்பு, பெருமை, தன்மை

**பெடை** - பறவைகளின் பெண்பால்

**பெண்** - ஆணுக்கு எதிர்பாலினம், மகள், சிறுமி, மணமகள், மனைவி, விலங்குநிலைத் திணைகளின் பெடை, பெண்டிண்மை

**பெண் பள்ளி** - பெண் துறவியர் தங்குமிடம், மடம்

**பெண்டாட்டி** - மனைவி, இல்லக்கிழத்தி, பெண், பெண்ணரசி, இல்லஆளுநர், மனையரசி

**பெண்டாளுதல்** - மனைவியாக நுகர்தல்

**பெண்டு** - பெண், மனைவி

**பெண்டுபிள்ளை** - மனைவி மக்கள் அடங்கிய குடும்பம்

**பெண்ணாறு** - வடதமிழகத்தில் கிழக்கு நோக்கி ஓடும் ஆறு

**பெண்ணுரிமை** - ஆணுக்கு இணையாக சமவாய்ப்பு அளித்தல்

**பெண்ணை** - பனை, நீர்முள்ளி, வடபெண்ணை, தென்பெண்ணை யாறுகள் பெண்பால் , ஐம்பால்களுள் ஒன்று ,பெண்ணினம்

**பெண்புத்தி** - பெண்டிர்க்குரிய அறிவு

**பெண்மை** - தாய்மை, பெண்மைநலம், பெண்தன்மை, பெண்ணின்பம், அமைதி, நிறை

**பெண்விளக்கு** - பெண்களிற் சிறந்தவள், பாவை விளக்கு

**பெதும்பை** - எட்டுதொடங்கி பதினொரு அகவை வரையுள்ள பெண்

**பெந்தை** - அருவருப்பாய்ப் பருத்தது, கலப்பையின் ஒருறுப்பு

**பெய்தல்** - பொழிதல், கலை முதலியவற்றில் இடுதல், செறித்தல் போகவிடுதல், இடைச்செருகுதல், கொடுத்தல், அமைத்தல், பரப்புதல், புகவிடுதல், எழுதுதல், அணிதல், பயன்படுத்துதல், கட்டுதல், சிறுநீர் முதலியன ஒழுகவிடுதல், தூவுதல், பங்கிடுதல், சொரிதல்

**பெயர்** - ஒன்றின் அல்லது ஒருவரின் அடையாளப்பெயர், புகழ், ஆள், வடிவு, புற இலக்கணங்கூறும் நூல், தன்பொருட்டு, சூளுரை, முதல் வேற்றுமை

**பெயர்த்தி** - மகள் வயிற்றுப்பெண்

**பெயர்க்கணக்கு** - பங்கீடு, பேரேடு

**பெயர்ச்சி** - இடமாறுகை

**பெயர்ச்சொல்** - நால்வகைச் சொற்களுள் பெயரைக் குறிக்க வழங்கும் சொல்

**பெயர்த்துரை** - திரும்பக்கூறுதல்

**பெயர்த்தெழுது-தல்** - படியெடுத்தல், மொழிபெயர்த்தல்

**பெயர்தல்** - போதல், பிறழ்தல், மீளுதல், மாறுதல், பிரிதல், பணநடமாட்டம், போக்குதல், நிலைமாறச்செய்தல், பிடுங்குதல், கெடுத்தல், தாண்டுதல், செலுத்துதல், விடுத்தல்

**பெயர்திறம்** - முல்லையாழ்த்திற வகை

**பெயர்ந்து** - மறுபடியும், பிற்பாடு, பின்னர்

**பெயர்ப்பு** - பெயரச்செய்கை, மொழி பெயர்ப்பு

**பெயர்புறம்** - புறங்கொடுக்கை

**பெயர்போ-தல்** - புகழ்பெறுதல்

**பெயர்வழி** - ஆள், தலைமுறை

**பெயரன்** - பெயரையுடையவன், மகன் அல்லது மகள் வழி பிறந்தவன்

**பெயராளி** - புகழ்மிக்கவன்

**பெயரெச்சம்** - பெயர் கொண்டுமுடியும் வினைக்குறை, பெயரை எச்சமாக உடையது

**பெயரேடு** - பேரேடு

**பெயல்** - பொழிகை, மழை, மழைத்துளி, முகில்

**பெரிய** - பெரிதான, பருத்த, மூத்த, இன்றியமையாத, நல்ல

**பெரியகை** - தாராளமான கை, செல்வந்தர், சாக்கால் மிக்க ஆட்சி

**பெரியதனம்** - பெருமை, மேட்டிமை, மேற்பார்வை

**பெரியதாக்கு-தல்** - வளர்த்தல், பலவாக்கு, பருமனாக்கு

**பெரியமனம்** - நன்மனம், அருள் உணர்வு, இரக்கஉள்ளம்

**பெரியமனிதன்** - மேன்மை யானவன், செல்வமும் சாய்காலும் உள்ளவன், அகவை முதிர்ந்தோர்

**பெரியார்** - மூத்தோர், சிறந்தோர், அறிவர், அரசர்

**பெருக்கம்** - வளர்ச்சி, மிகுதி, செல்வம், வெள்ளம், நிறைவு, நீடிப்பு

**பெருக்கல்** - குப்பை கூட்டுகை, ஓர் எண்ணை மற்றொரு எண்ணாற் கூட்டி மடங்கு அதிகப்படுத்துகை

**பெருக்காளர்** - சிறப்புடையோர்

**பெருக்கு** - வெள்ளம், கடல்நீரேற்றம், குருதியோட்டத்தின் மிகுதி, மிகுதி

**பெருக்குதல்[1]** - அளவு மிகுதல், நிறைதல், நீர் மிகுத்தெழுதல், மேம்படுதல், முதிர்தல், வளர்தல், ஆக்கம் தருதல், தாலி அற்றுவீழ்தல், கேடுறுதல், விளக்கணைதல்

**பெருக்குதல்[2]** - விரியச்செய்தல், நீர் நிரப்புதல், மோர் முதலியவற்றில் நீர் கலந்து பெருகச்செய்தல், குப்பைக் கூட்டுதல், ஓர் எண்ணைக் குறிப்பிட்ட எண்ணின் மடங்குக்கு அதிகப்படுத்தல்

**பெருக்குவேளை** - கடலின் நீரேற்றக் காலம், உடலில் அரத்தஓட்டம் மிகுந்த காலம், உருமம், உச்சிப் பொழுது

**பெருகல்** - மிகுதல்

**பெருங்கடிந்துரை** - பெருங் கண்டனம்

**பெருங்கணக்கு** - பெருந்தொகை, பெரும்படியானது, இறுமாப்பு

**பெருங்கதை** - நீள்கதை, மிகவும் அறிந்த செய்தி, பிள்ளையார் கதைப்படலத்தில் இறுதிப்படிப்பு, கொங்கு வேளிராற்பாடப்பட்ட ஒரு தமிழ் இலக்கியம்

**பெருங்குடல்** - குடற்பிரிவு

**பெருங்குரல்** - பேரொலி, குரல் உயர்த்திப்பேசுதல்

**பெருங்குழி** - பெரியபள்ளம், கடல், முழு எடைகளின் சதுர வாய்பாடு,

முக்கால் குறுக்கம் கொண்ட நிலவளவு

**பெருங்குறிஞ்சி** - பொடி வகை, பூடு வகை, குறிஞ்சிப்பாட்டு

**பெருச்சாளி** - பெருத்த வகை எலி

**பெருஞ்சீரகம்** - சோம்பு, பெருஞ்சீரக செடிவகை

**பெருஞ்சோற்று நிலை** - போர் மேற்கொண்ட மன்னன் வீரர்களுக்கு உண்டியளித்து முகமன் செய்தலைக் கூறும் புறந்துறை

**பெரு-த்தல்** - பருத்தல், மிகுதல்

**பெருந்தகை** - பெருமையுள்ளவர், மிக்க அழகு

**பெருந்தனம்** - சோழ அரசு பணிகளுள் ஒன்று, கணிகையரில் ஒரு பிரிவினர்

**பெருந்தன்மை** - மேம்பாடு, செருக்கு, இறைமை, வள்ளன்மை

**பெருந்தன்மையாளர்** - நற்பண்பாளர்

**பெருந்திணை** - அகத்திணை ஏழனுள் ஒன்று, ஒவ்வாதவளோடு கூடும் காதல். பொருந்தாக் காமம்

**பெருந்துறை** - பெரிய துறைமுகம்

**பெருநடை** - விரைந்த செலவு, புறங்கூத்துக்குரிய ஆடல்களுள் ஒன்று, உயர்ந்தவொழுக்கம்

**பெருநாள்** - திருநாள், 27-ஆவது நாண்மீன், ஒரு முகம்மதியப் பண்டிகை, நெடுங்காலம்

**பெருநிலம்** - நிலவுலகம்

**பெருநெஞ்சு** - செருக்கு, மனவுறுதி

**பெருநெருஞ்சி** - ஒருவகை முட்காய்ச்செடி

**பெருநெறி** - பெருவழி, வீடுபேறு

**பெருநோய்** - குட்டநோய், மாட்டு நோய் வகை

**பெருநோன்பு** - உண்ணாநிலை

**பெரும் பற்றப்புலியூர்** - தில்லை (சிதம்பரம்)

**பெருமக்கள்** - பெரியோர், ஊரலுவல் (காரியங்களை) மேற்பார்வையிடும் அவைப்பெரியோர்

**பெரும்படி** - உயர்தரம்

**பெரும்படை** - பெரிதானை, இறந்த வீரனின் புகழை நடுகல்லில் பொறிப்பதைக் குறிக்கும் புறந்துறை, தெய்வமாகிய நடுகல்லுக்குப் படைத்தலைக்கூறும் புறந்துறை

**பெரும்பண்** - பதினாறு தலைமைப் பண்கள்

**பெரும்பற்று** - அரசுக்கு உடைமையான நிலம், மிகுந்த ஆசை

**பெரும்பறை** - தோற்கருவி வகை

**பெரும்பாடி காவல்** - தலைமைக் காவலன்

**பெரும்பாடு** - பேருழைப்பு, மாதவிலக்குக் குருதியிறைப்பு நோய், கருப்பக்குறைப்பு

**பெரும்பாணாற்றுப்படை** - பத்துப் பாட்டினுள் ஒன்றும், தொண்டைமான் இளந்திரையனை ஆற்றுப்படுத்தி கடியலூர் உருத்திரங் கண்ணனார் இயற்றிப்பாடிய ஆற்றுப்படைவகை

**பெரும்பாலும்** - பெருமளவு, அதிக அளவு

**பெரும்பாழ்** - மூலமுதல், பெருவெளி, முற்றுமழிவு

**பெரும்பாழ்-செயதல்** - முழுவதும் அழித்தல்

**பெரும்பான்மை** - புகழுரை, பெரும்பாலும்

**பெரும்பிறிது** - இறப்பு

**பெரும்புறம்** - பெருவெளி

**பெரும்பெயர்** - மிகுந்தபுகழ்

**பெரும்பெயருலகம்** - விண்ணுலகம்

**பெரும்பெயல்** - கனத்தமழை

**பெரும்பேச்சு** - வெறும் பேச்சு, அலப்பற பேச்சு, புகழ்

**பெரும்பொங்கல்** - சுறவ(தை)ப் பொங்கல், சிறுதெய்வ வழிபாட்டிற்கு ஊரிடும் பொங்கல்

**பெரும்பொருள்** - சிறப்புடைய பொருள், அறம், அறிவு, பேரின்ப வீடு, அகப்பொருள் பற்றியதோர் நூல்

**பெரும்பொழுது** - இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என்னும் ஆறு தமிழ்ப் பருவங்கள்

**பெரும்போக்கு** - பெருந்தன்மை, சாக்காடு

**பெருமகன்** - நிலக்கிழார், உயர் பண்பாளர், தலைவன், அரசன், அருகதேவன்

**பெருமணம்** - திருமணம்

**பெருமந்தனம்** - இன்றியமையாத கமுக்கச்செய்தி

**பெருமழை** - கனத்தமழை

**பெருமாட்டி** - தலைவி

**பெருமாள்** - பெருமையிற்சிறந்தவர், சேரர் பட்டப்பெயர், திருமால், கடவுள்

**பெருமாள் மாடு** - இரப்பாளிகளின் ஆட்டம் கட்டும் புனைவு செய்யப் பெற்ற எருது

**பெருமிதம்** - பேரெல்லை, மேம்பாடு, தருக்கு, எண்வகை மெய்பாடுகளுள் கல்வி முதலிய பெருமைகளில் மேம்படுகை

**பெருமுதலி** - தலைவன்

**பெருமூச்சு** - கவலையில் விடும் நீள்மூச்சு, நெட்டுயிர்ப்பு

**பெருமை** - மாட்சிமை, பருமை, மிகுதி, வல்லமை, சீர்த்தி, செருக்கு, அருமை

**பெருவண்மை** - பெருங்கொடை, அம்பெய்ய உள்ள நால்வகை இலக்குகளுள் பெரிதாகிய இலக்கு

**பெருவயிறு** - பருத்த வயிறு, நீர்க்கோவை

**பெருவர்** - பெருமையுடையவர்

**பெருவல்லுநர்** - பெருந்திறனாளர்

**பெருவலிமை** - மிகுந்த ஆற்றல்

**பெருவழக்கு** - பலரும் கையாளும் முறை, எல்லாவிடத்திலும் நிறைந் திருத்தல், பொது நெறி

**பெருவழி** - பெரும்பாதை, வீடுபேறு

**பெருவளைப்பு** - பெரிய காவல்

**பெருவாயில்** - கோபுரம்

**பெருவாழ்வு** - நிரம்பியபேறு, பேரின்பம், நல்வாழ்வு

**பெருவிரல்** - கட்டை விரல், நெல் எட்டுக்கொண்ட நீட்டலளவை வகை

**பெருவிழா** - பெரிய திருவிழா

**பெருவெள்ளம்** - கனமழையால் உண்டாகும் நீர்ப்பெருக்கு

**பெருவெளி** - விரிந்த வெளியிடம், திறந்த வெளி, வாலறிவு

**பெள்-தல்** - விரும்புதல், காதலித்தல், நினைத்தல், மிகுதல், காப்பாற்றுதல்

**பெற்றதாய்** - ஈன்ற அன்னை

**பெற்றபிள்ளை** - சொந்த மகன்-ள்

**பெற்றம்** - பெருமை, காற்று, எருமை, விடையோரை

**பெற்றி** - இயல்பு, வகை, செயல்முறை, நிகழ்ச்சி, பேறு, நோன்பு

**பெற்று** - பெருக்கம், அடுக்கு, சாய்கால், எருது

**பெற்றோர்** - பேறுபெற்ற அன்னை தந்தை

**பெறாப்பேறு** - அரியப்பேறு

**பெறுத்து-தல்** - அடைவித்தல், உண்ணுதல்

**பெறு-தல்** - அடைதல், பேறுயிர்த்தல், பிறப்பித்தல், அறிதல்

**பெறுதி** - ஊதியம், அடையத்தக்கப் பொருள்

**பெறுமதி** - தகுதி, திறமை, உறுதி, பரிசு

**பெறுமானம்** - மதிப்பு, கடன்தீர்க்கும் தகுதி

**பே** - அச்சம், நுரை, முகில், மஞ்சு, இல்லை என்னும் பொருள் தரும் சொல்

**பேகணித்தல்** - குழப்பமுறுத்தல், நிறம் வேறுபடுதல்

**பேகணிப்பு** - துன்பம், நிறம் வேறுபடுகை

**பேகன்** - கடையெழு வள்ளல்களுள் ஒருவன், ஆண்தவளை

**பேச்சற்றவன்** - பேச இயலாதவன், பேசாநோன்பி, உறுதிமொழி தவறுபவன்

**பேச்சாளர்** - சொற்பொழிவாளர்

**பேச்சு** - பேசுகை, மொழி, செய்தி, பொய்ச்செய்தி, சொல்

**பேச்சு வார்த்தை** - ஒரு தீர்விற்கான உரையாடல்

**பேசாமடந்தை** - வாய் பேசவியலாப் பெண்

**பேசு-தல்** - சொல்லாடல், நாடித் துடித்தல், இசைக்கருவி நரம்பு இசைத்தல்

**பேடன்** - அலி, திருநம்பி

**பேடி** - திருநங்கை, ஆண்மை யின்மை, நடுவிரல்

**பேடிசெய்-தல்** - விலங்கிடுதல்

**பேடித்தல்** - அஞ்சுதல்

**பேடு** - பெண்பால்

**பேடை** - பறவையின் பெண்பால்

**பேண்** - புறந்தரல், விருப்பம்

**பேணம்** - மதிப்பு, பதனம், பேணுகை

**பேணல்** - பேணுகை, கருதுகை, மிகுகை, மிகுவிருப்பம்

**பேணலர்** - பகைவர்

**பேணாமாக்கள்** - ஏதிலிகள்

**பேணு-தல்** - போற்றிக்காத்தல், வழிபடுதல், விரும்புதல், ஒப்பரவு, பொருட்படுத்துதல், அறிதல், ஒத்தல்

**பேத்தல்** - பிதற்றுமொழி

**பேது** - மயக்கம், அறிவின்மை, பித்துப்பிடித்தல்

**பேதை** - அறிவிலி, பெண், பாலைநிலப்பெண், ஏழு பெண் பருவங்களுள் 5 முதல் 7 வயது வரை உள்ள பருவம், வறியவன், கள், அலி

**பேதைமை** - மடமை

**பேந்தவிழித்தல்** - மருண்டு விழித்தல்

**பேந்து-தல்** - மருளுதல்

**பேம்** - அச்சம்

**பேய்** - அச்சுறுத்தும் ஆவி, வெறி, தீமை, காட்டுத்தன்மை

**பேய்க்கண்** - சுழல்விழி, அஞ்சத்தக்க விழி

**பேய்த்தனம்** - மூடத்தனம், பித்து, புல்லறிவு

**பேய்த்தாரை** - ஊதற்கருவிவகை

**பேய்நடம்** - வெறியாட்டு

**பேய்நிலை** - எண்வகைத் திருமணங்களுள் ஒன்று

**பேய்புத்தி** - அறிவின்மை

**பேய்மனம்** - இழிமனம், அறிவற்ற மனம்

**பேயமன்று** - மதுவருந்துமிடம்

**பேயன்** - பேய்பிடித்தவன், பித்தன், வாழை வகைகளுள் ஒன்று

**பேயாட்டம்** - பேய்க்கூத்து, கலக்கம்

**பேயோட்டுதல்** - பேயை மந்திரத்தால் வெளியேற்றுதல்

**பேர்** - அடையாளப்படுத்த உதவும் சொல்

**பேர் அட்டவணை** - பெயர்ப்பட்டியல்

**பேர் கெட்டவன்** - கயவன்

**பேர்கேட்டவன்** - நாடறிந்தவன்

**பேர் கொடு-த்தல்** - புகழ்தருதல், குறிப்புப் பெயரிடுதல், ஒருகுறிக் கோளுக்காகச் சூளேற்றி (ஞானஸ் நானம் செய்து) பெயரிடுதல்

**பேர்க்குடி** - அடிமை

**பேர்த்தும்** - மறுபடியும்

**பேர்தல்** - சிதைத்தல், பிரிதல், பிறழ்தல், பின்னடைவு, நிலை மாற்றம்

**பேர்பெறுதல்** - பெயர் கொள்ளுதல்

**பேர்வழி** - பெயர்ப்பட்டி, மரபுவழி, ஆள்

**பேர்வழிப்பட்டோலை** - பேரேடு, பெயர்ப்பட்டியலின் நிரல்

**பேர்-வைத்தல்** - பெயரிடுதல், குறிப்புப்பெயரிடுதல்

**பேரண்டம்** - வியனுலகு, மண்டையோடு, மூளை, நரி

**பேரணி** - படையின் பின்னணி, நடுப்படை, ஊர்வலம், கிம்புரி

**பை** - பசுமை, நிறம், இளமை, அழகு, உடல்வலிமை, துணி, தோல் முதலியவற்றில் செய்த கொள்கலம், பாம்புப்படம், சிறுநீர்ப்பை, பித்தப்பை முதலான உடலறுப்பு

**பைங்கண்** - குளிர்ந்த விழி, பசியவுடம்பு, சினத்தால் பசியகண், பச்சென்றவிடம்

**பைங்கிளி** - பச்சைக்கிளி, அழகிய இளம் பெண்

**பைங்குலைத்தாரு** - இளநீர்க்குலை

**பைங்கூழ்** - இளம்பயிர், விளை நிலம், நோய்

**பை-த்தல்** - பசுமையாதல், விளங்குதல், விரித்தல், சினத்தல், பொங்குதல், மிகுதல்

**பைதல்** - இளையது, சிறுவன், துன்பம், குளிர்

**பைது** - பசுமை, ஈரம்

**பைய** - மெல்ல

**பையர்த்தல்** - வருந்துதல், அச்சந் தோன்றுதல்

**பையல்** - சிறுவன், தகுதியிலான்

**பையன்** - மகன்

**பையாப்பு** - இன்னல்

**பையுள்** - நோய், துன்பம், சிறுமை, மயக்கம், குழப்பம்

**பையெனல்** - மெதுவாதற்குறிப்பு, ஒளிமங்கற்குறிப்பு, வருந்தற்குறிப்பு

**பைவாதல்** - துன்புறுத்தல்

**பொ(ள்)-த்தல்** - துளைத்தல்

**பொக்கணி** - உரல், விரிந்ததொப்புள், நீர்மக்கலம்

**பொக்கம்** - பொய், வஞ்சம், குற்றம், மிகுதி, உயரம், பொலிவு, அச்சம்

**பொக்கு** - மரப்பொந்து, குற்றம், முற்றாத்தவசம், தவசநொறுங்கு

**பொக்கை** - சிறுதுளை, பல் இல்லா வாய்

**பொகிவு** - நெகிழ்வு, கசிவு

**பொங்கம்** - மிகுதி, மகிழ்ச்சி ஒழுங்கு, நெற்றி, பொலிவு, நறுமணம்

**பொங்கர்** - மரக்கொம்பு, மலை, சோலை, இலவு, வாடாற் பூ

**பொங்கல்** - பொங்குகை, மிளகு, சீரகம், உப்பு, நெய் முதலியன கலந்த அட்ட பொங்கல், சுறவ(தை)த் திங்கள் முதல் நாளன்று ஞாயிறு போற்றி வழிபாடாற்றி பொங்கலிட்டு படைக்கும் தமிழர் திருநாள், உயர்ச்சி, பருமை, மிகுதி, கள், பொலிவு

**பொங்குதல்** - காய்ந்து கொதித்தல், கொந்தளித்தல், மிகுதல், பருத்தல், மேற்குளிர்தல், ஊக்கம் கொள்ளுதல், வெகுளுதல், செருக்குதல், நுரைத்தெழுதல், விளங்குதல், சிலிர்த்தல், வீங்குதல், துள்ளுதல், கண் சூடுகொள்ளுதல், உயர்தல், செழித்தல், ஒலித்தல்

**பொச்சரிப்பு** - அழுக்காறு, பொறாமை

**பொச்சா-த்தல்** - மறத்தல், இகழ்தல்

**பொச்சாப்பு** - மறதி, பொல்லாங்கு, குற்றம், மனநெகிழ்வு

**பொச்சை** - காடு, கரிகாடு, சிறுமலை, மலை, புழுக்கூடு, குற்றம்

**பொசி-த்தல்** - கசிதல், வடிதல், ஒழுகுதல், செய்தி வெளிப்படல், மனமுருகுதல், உட்கொள்ளல், வினைப்பயனை எதிர்கொள்ளல்

**பொசுக்கு-தல்** - சாம்பலாக எரித்தல், வெதுப்புதல், நெருப்பிலிட்டு வாட்டுதல், துன்புறுத்தல்

**பொசுக்கெனல்** - விரைவுக்குறிப்பு

**பொசுங்கல்** - கருகியது, தீய்ந்தது, மந்தன், வலுவிலான், சிறுதூறல்

**பொசுங்குதல்** - எரித்தல், காய்தல், வாட்டப்படுதல், அழிவுறுதல், இணங்குதல்

**பொசுபொசு-த்தல்** - கமுக்கம், பேசுதல், மெல்லக்கசிதல், எரிச்சலுண்டாகும் படி அடிக்கடி பேசுதல், மழைத் துளித்தல்

**பொட்ட** - விரைவாக, முழுதும்

**பொட்டணம்** - சிறுமூட்டை, ஒத்தடமிடும் சீலைப்பந்து

**பொட்டல்** - பாழிடம், திறந்தவெளி, வழுக்கைத்தலை

**பொட்டி-த்தல்** - திறத்தல்

**பொட்டு** - நெற்றியில் இடும் வட்ட மங்கலக்குறி, ஒருவகைப்பொற்றாலி, ஒருவகை அலரி, கன்னத்தின் மேற்பொருத்து, சிறுமை, வட்ட வடிவக்குறி, துளி, புழு, பூச்சிவகை, புள்ளி, ஏமாற்றிப்பெறும் மதிப்பு, புகுவாயில்

**பொட்டுக்கட்டுதல்** - தேவ கணிகை யாக்கி கோயிலுக்குரிமையாக்கும் தாலிகட்டுஞ்சடங்கு

**பொட்டுக்குலைதல்** - மதிப்பிழத்தல்

**பொட்டெழுதல்** - அழிதல்

**பொட்டெனல்** - விரைவுக்குறிப்பு

**பொடி** - தூள், புழுதி, பூந்தாது, மூக்குத்தூள்(புகையிலை), சொக்குப்பொடி, மாழைகளைப் பற்றவைக்கும் பொடி, சாம்பல், திருநீறு, சிறியதுண்டு, சிறியது, சிறுமணி, சிறுபிள்ளை

**பொடி-த்தல்** - தூளாக்குதல், கெடுத்தல், தோற்றுவித்தல்

**பொடி-தல்** - தூளாதல், தீய்தல், ஒளிமங்கல், கெடுதல், சினத்தல்

**பொடிமட்டை** - மூக்குத்தூள் வைக்கும் வாழைப்பட்டைக்கூடு

**பொடிவு** - சிதைவு, வசவு

**பொடிவை-த்தல்** - மாழைகளைப் பற்ற வைத்தல், சூழ்ச்சியாகப் பேசுதல், கோள்சொல்லுதல்

**பொடுகு** - தலைச்சுண்டு, சிறுமை, பூடுவகை

**பொத்தகம்** - சித்திரப்படம், புத்தகம், நூல், நிலக்கணக்கு

**பொ-த்தல்** - கொப்புளித்தல்

**பொத்தாறு** - ஏர்க்கால்

**பொத்திரம்** - எறியாயுதம்

**பொத்து** - மூடுகை, அடைத்தல், பொத்தல், பொந்த, வயிறு, தவறு, தீயொழுக்கம், பொய், பல்லி

**பொத்து-தல்** - புதைத்தல், கண், காது, வாய் முதலியவற்றை மூடிக் கொள்ளல், விரல்களை மடக்கி உள்ளங்கையை மூடுதல், தைத்து மூட்டுதல், தைத்தல், மறைத்தல், அடித்தல், தீ மூட்டுதல், மாலைக் கட்டுதல், கற்பனை செய்தல், கலத்தல், நிறைதல்

**பொத்துப்படு-தல்** - தவறுதல், நோக்கம் நிறைவேறாமல் தீய பயத்தல்

**பொதி** - நிறைவு, மூட்டை, பலபண்டம், செல்வம், சொற்பயன், ஒருவகை நிறையளவு , 7'.3' அல்லது 4' அடியுள்ள நீர்மப் பொருள்வகை, 2640 ச.அடி கொண்ட நிலப்பரப்பு, பிணிப்பு, தொகுதி, அரும்பு, கொத்து, முளை, தவிடு, கரிகாடு, மூங்கில் முதலியவற்றின் பட்டை, கடையோலை, ஆ மடி, பருமன், ஓலைக்குடை

**பொதி-தல்** - நிறைதல், சேமித்தல், உள்ளடக்குதல், மறைத்தல், பிளித்தல், கடைப்பிடித்தல்

**பொதிமாடு** - மூட்டை சுமக்கும் (அ) இழுக்கும் எருது

**பொதிர்-த்தல்** - குத்துதல், முரித்தல், பருத்தல்

**பொதிர்-தல்** - வீங்குதல், மிகுதல், நடுங்குதல், அஞ்சுதல்

**பொதிர்வு** - நடுக்கம், அச்சம்

**பொதிவை-த்தல்** - புதையல் வைத்தல், நெல் முதலியன காய்ப்பிடிக்கும் பருவம்

**பொது** - பொதுமையானது, சிறப்பின்மை, வாலயமானது, நடவுநிலை, ஒப்பு, குறிப்பான பொருளின்மை, வெளிப் படையானது, மன்று, தில்லை யம்பலம்

**பொது அறிவு** - பகுத்தறிவு, உலகியல் அறிவு

**பொதுக்கு-தல்** - விலக்குதல், மறைத்தல், ஈர்த்தல்

**பொதுக்குழு** - பொதுத்திட்டம் வகுக்கும் குழு,ஓர் அமைப்பின் உறுப்பினர் கூட்டம்

**பொது-த்தல்** - துளைத்தல், முள் முதலியன பாய்தல்

**பொதுத்தல்** - துளைத்தல், முன்பாய்தல்

**பொதுத்தன்மை** - நடுவு நிலை, பெரும்பான்மைக்குணம், பொது இயல்பு

**பொது-தல்** - துளைபடுதல்

**பொதுநீக்கு-தல்** - பொதுமையை விடுத்தல், தனக்கே உரிமை யாக்குதல்

**பொதுநோக்கு** - யாவரையும் ஒப்பிப்பார்த்தல், மாறுபாடான நோக்கு, பகுத்தறிவு

**பொதுப்படு-தல்** - பொதுவாதல், ஒப்பாதல்

**பொதுமகள்** - கணிகை, பரத்தை, விலைமகள், இடைக்குலப்பெண்

**பொதும்பு** - பொழில், சோலை, சிறுகாடு, மல்லாந்து, குகை, குழி

**பொதுமை** - பொதுத்தன்மை, இயல்பானது, பொதுவுடைமை, நன்மை

**பொதுமொழி** - சிறப்பற்றச்சொல், பொதுச்சொல், இணைந்தவிடத்து ஒரு பொருளும் பிரிந்தவிடத்து வேறுபொருளும் தரும் சொல்

**பொதுவர்** - இடையர், பொதுமகளிர், நடுவர்

**பொதுவறு-தல்** - ஒருவருக்கே உரித்தாதல்

**பொதுவில்** - அம்பலம்

**பொதுவிலர்** - ஆயர்குலத்தவள்

**பொதுளு-தல்** - நெருங்குதல், தழைத்தல், நிறைதல்

**பொந்தி** - உடம்பு, பருமை, மரவாள்

**பொந்து** - மரப்பொந்து, எலி முதலிய வற்றின் வளை, பல்லி

**பொம்மல்** - பொலிவு, மிகுதி, பருமன், கூட்டம், சோறு, மகிழ்ச்சி

**பொம்மை** - பாவை, பிட்டம், கைப்பிடிச்சுவர்

**பொய்** - உண்மையின்மை, வாய்மை யின்மை, மெய்யின்மை, போலி, நிலையாமை, உட்டுளை, மரப்பொந்து, செயற்கை, சிறுசிராய்

**பொய்க்கால்** - காலுக்கு மாற்றாக மரக்கால் அமைத்துக் கட்டிக் கொண்ட போலிக்கால்

**பொய்கை** - இயற்கையிலான நீர்நிலை, குளம், தடாகம்

**பொய்-த்தல்** - தவறுதல், செயலின்றும் பின்வாங்குதல், கெடுதல், பொய்யாகப் பேசுதல், வஞ்சித்தல்

**பொய்-தல்** - பிடுங்கப்படுதல், துளைக்கப்படுதல், வீழ்த்துதல்

**பொய்படு-தல்** - பொய்யாதல், பயன் விளையாமல் அழிதல்

**பொய்ப்பு** - உண்மையில்லாதது

**பொய்மை** - பொய், மாயம், போலி

**பொய்யாமை** - உண்மை மட்டும் பேசுதல், நடுநிலைமை

**பொய்யாமொழி** - மெய்யுரை, மறைநூல், திருக்குறள், தஞ்சை வாணன் கோவை இயற்றிய புலவர்

**பொரி** - பொரிகறி, பொரித்தநெல், பொரிக்கப்பட்ட சோளம் முதலியன, கரிந்த காடு, எருமைக்கன்று, நன்கு கலக்கப்படாத சோறு

**பொரி-த்தல்** - பொரியச்செய்தல், வறுத்தல், கிழங்குசுடுதல், அடைக்காத்துக் குஞ்சை உண்டாக்குதல், போக்குதல், தீய்த்தல், புளியின்றி சமைத்தல், மலிவுவிலைக்கு விற்றல்

**பொரி-தல்** - பொரியாதல், வறுபடுதல், தீய்தல், விரைவாகப் பேசுதல், அலப்புதல், உப்பு முதலியன தரையில் பூத்தல், மெல்லென ஒலித்தல், வாணப்பொரி மிகுந்து சொரிதல், பொருக்கு வெடித்தல்

**பொரு** - உவமை, ஒப்பு, எதிர்த்தடை

**பொருக்கு** - பருக்கை, சேரு முதலியன காயும் போது மேலே உலர்ந்தெழும் ஏடு, மரப்பட்டை

**பொருகு** - சோறு

**பொருட்குற்றம்** - செய்யுளின் பொருளில் உண்டாகும் பிழை

**பொருட்சிதைவு** - சொத்து இழப்பு, சொல் கால மாற்றத்தால் கருத்தில் மாறுகை

**பொருட்பகுத்து-தல்** - மதித்தல்

**பொருட்படு-தல்** - பயனாதல்

**பொருட்பெயர்** - பொருளடியாகப் பிறந்த பெயர்ச்சொல், ஒரு பொருளுக்கு உரிய பெயர்

**பொருண்முடிவு** - செய்தி முடிவு, முடிந்தகருத்து, பயனிலை, பொருள், முற்றிய சொற்றொடர்

**பொருண்மை** - கருத்துப்பொருள்

**பொருண்மொழி** - மெய்யுரை சொல், உச்சரிப்பு மந்திரம்

**பொருத்தம்** - பொருந்துகை, தகுதி, இணக்கம், உடன்படிக்கை, மணமக்களின் பொருத்தவிணக்கம், மனநிறைவு, சரிபார்க்கை, நோயினைத்தடுக்க நஞ்சைத் தோளுள் செலுத்துதல்

**பொருத்தலன்** - பகைவன்

**பொருத்து** - இணையச்செய், உடன்படுத்து, கூட்டு, பணிக் கமர்த்து, அமையச்செய், விளக்கேற்று, போர்மூட்டு, இணைப்பு, உடல்மூட்டு, மரத்தின் இயைபு, ஒன்று சேர்த்தல், ஒப்பந்தம், கன்னப்பொட்டு

**பொருதல்** - போர், தும்பை

**பொரு-தல்** - போர்புரிதல், சூதாடுதல், மாறுபடுதல், வீசுதல், தடவுதல், கடைதல், ஒப்பாதல், தாக்குதல், முட்டுதல், பொருந்துதல், பெருக்குதல்

**பொருது-தல்** - ஒன்றுதல், போர்புரிதல், இளைத்தல்

**பொருந்து-தல்** - மனம் இசைவாதல், தகுதியாதல், அமைதல், உடன் படுதல், நெருங்குதல், நிகழ்வித்தல், நிறைவேற்றுதல், கலத்தல், அடைதல், அளவளாவுதல்

**பொருநன்** - வீரன், திண்ணியன், அரசன், குறிஞ்சித்தலைவன், படைத்தலைவன், உவமை செய்யப்படுவோன், தலைவன், பகைவன்

**பொருப்பு** - மலை, பக்கமலை

**பொருமல்** - அச்சம், துன்பம், அழாது விம்முகை, வயிற்றுப்பொருமல், பூர்ப்பு, பொறாமை

**பொருவு-தல்** - நேர்தல்

**பொருள்** - பருப்பொருள், சொற்பொருள், செய்தி, உண்மைக் கருத்து, செயல், மெய்மை, நன்கு மதிக்கப்பெறல், கல்வி, அறிவு, அறம், பயன், வீடுபேறு, செல்வம், பொன், மகன், சுணங்கு, உவமேயம், மறுதலைப்பொருளுணர்வு, அகப்புறத் திணைப்பொருள், பொருளாட்சி, தலைமை, கொள்கை, தந்திரம், சூழ்ச்சி

**பொருள்கோள்** - ஆற்றுநீர், மொழிமாற்று, நிரனிறை, விற்பூட்டு, தாப்பிசை, அளைமறிபாப்பு, கொண்டுகூட்டு, அடிமறிமாற்று என எண் வகையாகச் செய்யுட்குப் பொருள் கொள்ளுமுறை, ஒருவகைத் திருமணமுறை

**பொருள்செய்-தல்** - மதித்தல், செல்வம் தேடுதல்

**பொருளுரை** - மெய்யுரை, பயனுடைய சொல், புகழுரை, மந்திரம்

**பொருளுரையாளர்** - சான்றோர்

**பொல்லம்** - தைக்கை, இணைக்கை, சேர்த்துத் தைக்க உதவும் சிறுதுண்டு

**பொல்லர்** - தையற்காரர், தோல் வினைஞர்

**பொல்லா** - தீய, கடுமையான

**பொல்லாங்கு** - தீயது, குற்றம், ஈனம், கேடு, மறதி

**பொல்லாத்தனம்** - தீமை செய்யும் குணம்

**பொல்லாதவன்** - தீயவன், கடும் போக்கன்

**பொல்லாநிலம்** - சேற்றுநிலம், இடுகாடு

**பொல்லாப்பு** - மறுப்பு, மனக்குறை, துன்பம்

**பொலி** - தூற்றாநெற்குவியல், தூற்றியநெல், விளைவின் அளவு, தவசமாகக் கொடுக்கும் வட்டி, களத்தில் நெல் அளக்கும் பொழுது முதல் மரக்காலுக்கு வழங்கும் மங்கலப்பெயர், முடி திருத்துவோன், கொங்கு வேளாளரில் இறந்த

வரெலும்பை மூன்றாம் நாள் நீரிலிட்டுப் பசுமரத்திற்குப் பால் வார்க்கும் நற்சொல், புணர்ச்சி

**பொலிகடா** - பொலியாடு, மனம் போக வழி திரியும் தடியன்

**பொலிசை** - ஊதியம், வட்டி

**பொலிதல்** - செழித்தல், பெருகுதல், மிகுதல், விளங்குதல், சிறத்தல், மங்கலமாதல், நிகழ்தல், நீடுவாழ்தல், புணர்தல்

**பொலிவு** - அழகு, முகமலர்ச்சி, தோற்றப்பொலிவு, செழிப்பு, பருமை, மிகுதி, எழுச்சி, பொன், வெறுந் தோற்றம், புணர்ச்சி

**பொலுகுதல்** - அதிகப்படுதல், நீரொழுகுதல்

**பொழி-தல்** - பெய்தல், மிகச் செலுத்துதல், தாராளமாய்க் கொடுத்தல், தடங்கலின்றிப்பேசுதல், நிறைந்தொழுகுதல், நிறைதல், தங்குதல்

**பொழிப்பு** - நூற்பதிகம், குறிப்பு, ஊகித்தல்

**பொழிப்புரை** - பொருளைத்திரட்டிக் கூறும் உரை

**பொழில்** - பெருமை, சோலை, பூந்தோட்டம், மண்ணுலகம், உலகம், நாடு, நாட்டின் கூறு

**பொழிவு** - பொழிகை, நிறை, பெருகுதல், ஊதியம்

**பொழுது-காலம்** - தக்கநேரம், வாழ்நாள், கணம், சிறுபொழுது, பெரும்பொழுதுகள், கதிரவன்

**பொழுதுசாய்தல்** - ஞாயிறு மறைதல்

**பொழுதுபோக்கு** - காலம் கழிக்கை, இளைப்பாறும் பொருட்டு விளை யாடுகை

**பொள்ளல்** - துளைக்கை, பொளிகை, செதுக்குதல், துளை, மரப்பொந்து, அம்மைவடு, அப்பவகை, கொப்புளம், குற்றம்

**பொள்ளெனல்** - விரைவுக்குறிப்பு

**பொள்ளை** - தொளை

**பொளி-தல்** - உளியால் கொத்துதல், பிளத்தல், இடித்தல், துணைச் செய்தல், ஓட்டையாதல், பள்ளமாதல்

**பொற்கசை** - பொன் கம்பி

**பொற்கலம்** - பொன்ஏனம், பொன்னாலான அணிகலன்

**பொற்காசு** - பொன்னால் வார்க்கப்பட்ட பணம், கொள்

**பொற்காப்பு** - பொன் வளையல்

**பொற்கிழி** - சீலையில் முடிந்த தங்கக்காசுப் பொதி

**பொற்கோள்** - வியாழன் வுடு

**பொற்சிலை** - பொன்னால் வார்க்கப் பட்ட படிமை

**பொற்ப** - பொலிவு பெற

**பொற்படி** - பொன்னுலகம்

**பொற்பித்தல்** - ஒப்பனை செய்தல்

**பொற்பிதிர்** - பசலை

**பொற்பு** - அழகு, ஒப்பனை, பொலிவு, மிகுதி, தன்மை

**பொற்றாமரை** - பொன் வண்ண முளரி, மதுரை ஆலயத்துள் உள்ள பொய்கை

**பொற்றை** - சிறுமலை, கற்பாறை, மலை, சிறுதூறு, காடு, கரிகாடு

**பொற்றொடி** - பொன்னாலான தோள் வளை(அணிகலன்), பொன் தோள் வளை அணிந்த பெண்

**பொறாமை** - அழுக்காறு, பொறுமையின்மை, பொருமல்

**பொறி** - வரி, கைவரி, புள்ளி, தழும்பு, அடையாளம், எழுத்து, இலச்சினை, விருது, உடலுறுப்பு அடையாளம், வண்டு, பீலி, தேமல், படிமை, ஊழ், கன்னப்பொருத்து, ஒளி, சூழ்ச்சியம், நுண்ணுத்தி, மரக்கலம், மதிலுறுப்பு, நெற்றிப்பட்டம், திருமகள், செல்வம், பொலிவு, வினைப்பயன், திரட்சி, ஐம்புலன்கள், ஆண்குறி, மனம், அறிவு

**பொறிகலங்கு-தல்** - அறிவு மயங்குதல்

**பொறி-த்தல்** - முத்திரையிடல், எழுதுதல், சித்தரித்தல், தெறித்தல், கலைத்தல்

**பொறி-தல்** - பறிதல், தீச்சுடர் சிதறுதல், சறுக்குதல், சரிதல், விழுப்புகுதல், கலைதல்

**பொறிவாயில்** - புலன்

**பொறிவை-த்தல்** - எலி முதலிய உயிரினங்களைப் பிடிக்க வைக்கப் படும் கிட்டி, வலை, பேழை முதலியன

**பொறுத்தல்** - சுமத்தல், தாங்குதல், அணிதல், இளக்காரம் கொடுத்தல், பிழை பொறுத்தல்(மன்னித்தல்), ஏற்றமை, பொறுப்பேற்றல், தள்ளி வைத்தல், உவமையாகப்பெறுதல், அடக்கமாயிருத்தல், பேச்சு முதலிய வற்றின் இடையே நின்று கொள்ளுதல், விலைகொள்ளுதல், தோணிதட்டிப்போதல், மாட்டிக் கொள்ளுதல், பொறுப்பாதல்

**பொறுதி** - பொறுமை, குற்றம் பாராட்டாமை, இளக்காரம், ஓய்வு, சுணக்கம்

**பொறுப்பாளர்** - ஒரு குறிப்பிட்ட பணிக்கு பொறுப்பு வகிப்பவர்

**பொறுப்பு** - பாரம், முட்டு, உறுதி, இன்றியமையாமை, தகுதி, பொறுமை, வரி

**பொறுப்புக்கட்டு** - உறுதிபெறல், ஈடுகாட்டுதல், முற்றுவித்தல்

**பொறுமை** - அடக்கம், பொறை

**பொறை** - சிறுகுன்று, மலை, சுமை, கனம், நிலவுலகு, பொறுமை, அடக்கம், கருப்பம், வலிமை

**பொறையுடைமை** - நெஞ்சுரம், மனத்திண்மை

**பொன்** - செம்பொன், கிளிச்சிறை, ஆடகம், நாவலம் எனப்படும் நான்கவைத் தங்கம், மாழை, இரும்பு, செல்வம், அணிகலன், திருமங்கலநாண், தங்கக்காசு, பொலிவு, பசலை, பேரொளி, அழகு, ஏற்றம், திருமகள், வியாழன், கதிரவன், பெண்குறி

**பொன்றல்** - சாதல், இறத்தல்

**பொன்று-தல்** - அழிதல், இறத்தல், தவறுதல், பார்வை முதலியன குறைதல்

**பொன்னம்பலம்** - பொற்கூடம், தில்லையிலுள்ள பொற்சபை

**பொன்னவன்** - பொன் போன்று அருமையானவன், வியாழன், இரணியன், கனவு நூல் இயற்றியவர்

**பொன்னன்** - பொன்னுடையோன், சிறியவன், அருகக்கடவுள்

**பொன்னாடை** - பொன்னிழையால் நெய்ததுணி, ஒருவரைச் சிறப்பிக்க வேண்டி போர்த்தப்படும் நூலாடை, பயனாடை

**பொன்னித்துறைவன்** - சோழ மன்னன்

**பொன்னேர்** - பருவத்தில் நன்முழுத் தத்தில் முதன்முதலாக முறையாக உழும் கலப்பை

**போக்கழி** - இழக்கை, பொருள் ஆதரவு, தற்போக்கு, கழுவாய், காலக்கெடு

**போக்கழி-த்தல்** - இழத்தல், வீணாக் குதல், விலக்குதல், போகச்செய்தல்

**போக்கம்** - பொலிவு

**போக்கறு-தல்** - குற்றம் நீங்குதல், கதியறுதல், முட்டின்றிச்செய்தல்

**போக்கறுதி** - புகலின்மை

போக்கன் - வழிப்போக்கன், அந்நியன், வெளிநாட்டான், பயனற்றவன், கயவன்

**போக்கிடம்** - ஒதுக்கிடம், புகலிடம்

**போக்கிலி** - ஏதிலி, கயவன்

**போக்கு** - போகச்செய்தல், வழி, சுரங்கவழி, நடை, பாங்கு, மீட்சி, புகல், இடம், நிலத்தியல்பு, மனச் சாய்வு, சாக்கு, பழக்கம், நடைமுறை, விருப்பம், பொலிவு, நீர் முதலிய வற்றின் ஓட்டம், மலம் முதலியன வெளிபடுதல், புள்நூலில் ஆந்தையின் தொழிலால் குறிக்கப்படும் விளைவு, கேடு, செலவு, இறப்பு, குற்றம், கழிப்புக் கழிக்கை, மரக்கன்று, செல்கை, நடத்தை

**போக்குக்காட்டு-தல்** - வழிகாட்டுதல், சாக்குச்சொல்லுதல், குறிப்புக் காட்டுதல்

**போக்குச்செய்-தல்** - விற்றல்

**போக்குதல்** - போகச்செய்தல், செய்தல், செய்து முடித்தல், கொடுத்தல், உணர்த்துதல், உட் புகுத்துதல், கட்டுதல், மெலியச் செய்தல், இல்லாமற்செய்தல், கழித்தல், அழித்தல், கற்பித்தல்

**போக்குவரத்து** - போதலும் வருதலும், ஊடாடுகை, விருந்தினர், வரவு செலவு

**போக** - தவிர, பகுதிப் பொருளில் வரும் ஒரு துணைச்சொல்

**போகடு-தல்** - கழித்துவிடுதல், போகவிடுதல், விலகுதல்

**போகல்** - உயர்வு, நீளம்

**போகவிடு-தல்** - நழுவவிடுதல்

**போகுகாலம்** - எதிர்காலம்

**போகுயர்-தல்** - வளர்தல், உயர்தல், ஓங்குதல்

**போச்சாளி** - சொல் வன்மையாளர், சொல்லுறுதியுள்ளவர்

**போட்டடை-த்தல்** - திணித்தல், வலிந்து அடைத்தல்

**போட்டி** - எதிரிடை, கேலி, பந்தயம்

**போட்டுக்கொடுத்தல்** - கூடச்சேர்த் தளித்தல், பிறனுக்காகச்செய்தல், அடித்தல், கோள் மூட்டுதல்

**போட்டுக்கொள்(ளு)தல்** - பூணுதல், ஏற்றல்

**போட்டுவைத்தல்** - இணைத்தல், சேர்த்தல், காலந்தாழ்த்தல்

**போடு** - எடுப்பாயுள்ளது, நற்பேறு

**போடு-தல்** - எறிதல், இடுதல், தாழிடல், பூணுதல், ஈனுதல், அச்சிட்டு வெளியிடுதல், கணக் கிடுதல், வரைதல், பரிமாறல், அடித்தல், விதைத்தல், பயன் படுத்தல், மதுஅருந்துதல், விடுத்தல், பிரித்திடல்

**போத்தாதல்** - போய்க்கொணர்தல், உரிய சொல்லை வருவித் துரைத்தல், கொடுத்தனுப்புதல், புறம்படவிடுதல்

**போத்து** - பெற்றம், எருமை, புலி, மரை, புல்வாய் முதலிய விலங் கேற்றின் பொது, மயில், எழால் என்பனவற்றின் ஆண், முதலை, சுறா போன்ற நீர் வாழினத்தின் ஆண், ஓரறிவுயிரின் இளமை, புதுக்கிளை

**போதகம்** - இளமை, யானைக்கன்று, யானை, விலங்கின் பிள்ளை

**போதரவு** - போகை, செலுத்துகை, கொண்டு வருகை, நயச்சொல், நல்லுதவி, பொய்ப்புகழ்ச்சி, பேணுகை

**போ-தல்** - செல்லுதல், அடைதல், உரியதாதல், பிறத்தல், நீண்டு செல்லுதல், தகுதியாதல், நெடுமை யாதல், நேர்மையாதல், பரத்தல், நிரம்புதல், மேற்படுதல், ஓங்குதல், நன்கு பயிலுதல், கூடியதாதல், ஒழிதல், கழிதல், நீங்குதல், மறைதல், மாறுதல், காணாமற் போதல், கழிக்கப்படுதல், வகுக்கப் படுதல், சாதல், முடிவாதல், ஒலி மங்குதல், புணர்தல்

**போதா-தல்** - செல்லுதல், திரும்புதல், வருதல், பெறப்படுதல், கொண்டு போதல், கொண்டுவருதல், எதிர் கொண்டுபோதல்

**போதாமை** - மன ஒப்பின்மை, குறைவு, பற்றாக்குறை

**போதிகைத்தூண்** - நற்தூண்

**போதிய** - போதிய அளவு, நிறைவான, போதுமான

**போதியன்** - கண்ணியவான்

**போதினன்** - நான்முகன், அயன், பிரம்மன்

**போது** - மலரும் பருவத்து அரும்பு, மலர், செவ்வி

**போதுசெய்-தல்** - பேரரும்பாதல், மூடுதல், அலருதல், உண்ணுதல், குரல் மாறுதல்

**போது-தல்** - போதியதாதல், மதிக்கப் படுதல், தகுதியாதல், செல்லுதல், ஒழுகுதல்

**போந்த** - தகுந்த, பழகிய, தீர்மானமான, முடிந்த முடிவான

**போந்-தை** - பனை, இளம்பனை, பனைநாள்(அனுட நாண்மீன்), 17-ஆம் விண்மீன்

**போய்ப்பாடு** - புகழ், பெரிதாயிருக்கை

**போர்** - சண்டை, மற்போர், இகல், செறிந்து பொருந்துகை, கதிர் வைக்கோற்படப்பு, 24-ஆம் நாண்மீன், குவியல், மரப்பொந்து

**போர் மடந்தை** - காளி, வெற்றித் திருமகள்(கொற்றவை)

**போர்க்கட்டுதல்** - உள்ளுக்குள்ளே சீர்செய்தல், மறைந்து அடக்கிக் கொள்ளுதல், செம்மைப்படுத்தல்

**போர்க்கதவு** - பலகைகளை இணைத்த கதவு, இரட்டைக் கதவு

**போர்-த்தல்** - அணிதல், மூடுதல், சூழ்தல்

**போர்த்தினவு** - போரிடும் ஊக்கம், போர்த்திறன்

**போர்நிறுத்தம்** - சண்டை இடை நிறுத்தம்

**போர்ப்பறை** - போர் முரசு

**போர்ப்பை** - உழவுசாலின் உட்குழிவு, களைகொட்டின் அடி

**போர்முகம்** - போர்முனை, போர் முனைந்து நிகழுமிடம்

**போர்மூட்டு-தல்** - சண்டை செய்யத் தூண்டுதல், கோள் சொல்லிப் பிரித்தல்

**போர்வை** - மூடுகை, மேல் மூடும் துணி, தோல், கவசம், வாளுறை, தேர்த்தட்டின் வெளிமறைப் பாவின பலகை வகை

**போரடி-த்தல்** - தலையடிக் கதிர்ப்போரின்றும் தவசத்தை அடித்து (பிரித்து) எடுத்தல்

**போராட்டம்** - சண்டையிடுகை, சண்டை, போட்டி, விடாமுயற்சி

**போராடுதல்** - பொருகை, தொல்லை படுதல், பேரம் பேசுதல்

**போரு-தல்** - செல்லுதல், மீண்டு வருதல், எட்டுதல், பொருள் பெறப் படுதல்

**போரேறு** - போர் செய்யவல்ல காளை, போர் வீரன், செவ்வாய் வுடு

**போல்** - உள்ளீடற்றது, பதர், பொய், மூங்கில், வெற்றி, படை, வாள்

**போல்(லு)தல்** - ஒத்தல், இணை யொத்தல்

**போலி** - ஒப்புடையவன்-வள்-,து, ஒப்பு, சாயல், கள்ளப்பொருள், வஞ்சகம், இரண்டகம், கரவு, கேலி, பொய்ம்மை

**போவு** - போகை

**போழ்-தல்** - பிளவுபடுதல், பிரிவு படுதல், பிளத்தல், ஊடுருவல், அழித்தல்

**போழும்** - மாறுபடும் சொல்

**போற்றார்** - பகைவர்

**போற்றி** - புகழ்மொழி, மலையாளப் பூசாரி

**போற்றுதல்** - வழிபடுதல், வணங் குதல், பாதுகாத்தல், வந்தித்தல், வளர்த்தல், தீமையைத்தடுத்துக் காத்தல், கடைபிடித்தல், விரும்புதல், கருதுதல், மனத்துக்கொள்ளல், கூட்டுதல்

**போற்றுநர்** - சுற்றத்தார், கிளைஞர், ஒன்றுணர்வார்

**போன்** - பொறி, மலைக்குகை, உலைக்கும் துருத்திக்கும் இடையில் செல்லும் அடுப்புப் பகுதி

**மக்கல்** - கெட்டுப்போனபொருள்

**மக்கள்** - மாந்தர், மாந்தவினம், பிள்ளைகள், ஐம்பொறியுணர்வொடு மனவறிவுமுடைய உயிர்கள்

**மக்கன்** - மந்தன்

**மக்கு** - மந்தகுணம், அறிவிலி, அடைமன், மரவேலையில் சந்து தெரியாமல் அடைக்கும் சாந்து

**மக்கு-தல்** - அழிதல், மந்தமாதல், கெடுதல், அழுககேறுதல்

**மக்குரு** - எலும்பு இளைத்தல்

**மக** - பிள்ளை, மகன் அல்லது மகள், இளமை

**மகட்கொடை** - மகளை மணம் செய்தளித்தல்

**மகடு** - பெண், மனைவி

**மகடூ** - உக்குணம், பெண்களுக்குரிய நான்கு நற்குணம்

**மகடூஉ** - பெண், மனைவி

**மகண்மை** - பெண்தன்மை

**மகந்தரம்** - கள், பதநீர்

**மகப்பேறு** - பிள்ளைப்பேறு

**மகவான்** - மகப்பேறுடையவன், இந்திரன், சிவன், வேள்வி செய்பவன்

**மகவு** - குழந்தை, மகன், கோட்டில் வாழ் விலங்கின் பிள்ளை

**மகள்** - பெண் மகவு, பெண், மனைவி, பெண் தெய்வம், தெய்வத்தாய்

**மகளிர்** - பெண்டிர்

**மகன்** - ஆண்மகவு, குழந்தை, ஆண்பிள்ளை, சிறந்தோன், வீரன், கணவன்

**மகிணன்** - கணவன், மருதத் தலைவன், இறைவன்

**மகிழ்** - இன்பம், குடிவெறி,

**மகிழ்ச்சி** - உவகை

**மகிழ்-தல்** - அகங்களித்தல், உவத்தல், விரும்புதல், உண்ணுதல்

**மகிழ்நன்** - கணவன், மருதநிலத் தலைவன், இறைவன், சிவன்

**மகிழம்** - மரவகை, மணமலர்

**மகிழுவைத்தல்** - பொருளை மந்திரத்தால் மறைத்தல், மகிடி விளையாட்டில் ஆடு கருவியைப் புதைத்தல்

**மகுடம்** - மணிமுடி, தலைப்பாகை வகை, புனைவான உச்சி, பல பாக்களில் ஒரே வகையில் வரும் முடிவு, கட்டுரைத்தலைப்பு, ஓலைச் சுவடியின் மணமுறச்சுக் கொண்டை, மாதர் காதணி, மத்தள விளிம்பு, பறை வகை, ஒளிமங்கல்

**மகுடி** - ஓர் இசைக்கருவி, பாம்பாட்டி ஊதுகுழல்

**மகுலம்** - மகிழ் பூ

**மகூலம்** - மலர்ந்த பூ

**மங்கல்** - கெடுரக, ஒளிக்குறைவு, இருள் கலந்த நேரம், உளி மழுங்கல்

**மங்கலநாண்** - தாலிச்சரடு

**மங்கலம்** - நலம், நன்மை, ஆக்கம், பொலிவு, நற்செயல், திருமணம், தாலி, கொடை, சிறப்பு, வாழ்த்து, எண்வகை மங்கலம், சேர்க்கை, தகனபலி

**மங்கலவழக்கு** - தகுதிவழக்கு மூன்றனுள் மங்கலமல்லாததை மங்கலமாகக் கூறும் வழக்கு

**மங்கு** - சாடி

**மங்கு-தல்** - குறைதல், ஒளி குன்றுதல், நிறம்குறைதல், பெருமை குன்றல், வாட்டமுறுதல், கெடுதல், சாதல்

**மங்குல்** - ஒளிக்குறைவு, பொருள் காணாமூடுபனி, இரவு, இருண்டமுகில், கருவானம், திசை

**மங்குலம்** - மழுக்கம், கலக்கம், முகவாட்டம், பார்வைக்குறைவு, நிறக்குறைவு

**மங்குலி** - இந்திரன்

**மங்கை** - பெண்,12-13 வயதுள்ள பெண், கற்றாழை

**மச்சம்** - உடலில் உண்டாகும் புள்ளி

**மச்சு** - வீட்டின் மேற்றளம், மேற் றளத்தில் பாவும் பலகை, மேல்மாடம், உத்தர மட்டத்தின் மேலுள்ள பலகைத்தடுப்பு, குற்றம், ஓங்கின்மை

**மச்சுப்போ-தல்** - மக்குதல், சோறு குழைதல்

**மசக்கு-தல்** - மயங்கச்செய்தல், குழப்புதல், ஆடையைக்கசக்குதல்

**மசக்கை** - கருவுற்ற பெண்ணுக்கு உண்டாகும் மயக்கம், சூதகக்கட்டு

**மசகம்** - மயிர்

**மசகு** - வைக்கோல் கரியுடன் எண்ணெய் கலந்து அச்சுக்கு இடும் மை, கடலில் திசையறியாமல் ஆழ்ந்தகன்ற இடம்

**மசகுதல்** - சுணங்கி நிற்றல், மனந்தடுமாறுதல்

**மசங்கல்** - அந்திப்பொழுது, மயக்கம்

**மசங்கு-தல்** - மயங்குதல், ஒளிகுன்றுதல், கசங்குதல்

**மசி-த்தல்** - குழையச்செய்தல்

**மசி-தல்** - நன்கு அரைபடுதல், வளைந்து கொடுத்தல்

**மஞ்சட்காப்பு** - மஞ்சள் பொட்டு, மஞ்சள் பூசி தூய்மையாக்குதல், மஞ்சள் கயிறு, மஞ்சள் துணி, கையில் கட்டும் காப்பு மஞ்சள்

**மஞ்சள்** - செடிவகை, உணவில் சேர்க்கும் கிழங்குப் பொடி, எலுமிச்சை, மஞ்சள் நிறம், குங்குமப் பூச்செடி

**மஞ்சள் பாவாடை** - தெய்வங்களுக்கு அணிவிக்கும் ஆடை

**மஞ்சன்** - மகன், ஆண்மகன்

**மஞ்சனம்** - பற்பொடி

**மஞ்சனி** - பெண்

**மஞ்சி** - படகு

**மஞ்சிகை** - பெட்டி, கொட்டாரம், தொம்பை

**மஞ்சு** - அழகு, அணிகலன், நல்ல, வெண்முகில், முகில், பனி, மூடுபனி, யானை முதுகு, களஞ்சியம், கட்டில், குறு மாடியின் அடைப்பு, வீட்டுமுகடு, இளமை, வலிமை

**மஞ்ஞை** - மயில், பீலி

**மஞ்ஞையூர்தி** - தமிழ்க்கடவுள் முருகனின் மயில் ஊர்தி

**மட்கலம்** - மண்பாண்டம்

**மட்கு-தல்** - ஒளிமங்குதல், அழிதல், செரித்தல், மயங்குதல், அழுக்காதல்

**மட்டஞ்செய்-தல்** - சமனாக்கல், செவ்விதாக்கல்

**மட்டம்** - அளவு, சமநிலை, எல்லை, அளவுகோல், ஊகம், ஒப்பு, சிறுமை, தாழ்வு, மிதம், செட்டு, சிக்கனம், சிறுகுதிரை, வாழை, கரும்பு முதலியவற்றின் கன்று, சமவெண், மூன்றொத்துடைய தாளம், கேடயம், குறைவு, ஆனைக்குட்டி, கள்

**மட்டறிதல்** - மதிப்பிடல், பழகியறிதல், ஒப்பிடுதல்

**மட்டி** - மூடன், ஒழுங்கின்மை, மக்கு, பரும்படி

**மட்டி-த்தல்** - அழித்தல், முறித்தல், பூசுதல், மெழுகுதல், பிசைதல், உறுதி செய்தல்

**மட்டு** - அளவு, எல்லை, குத்துமதிப்பு, பொதுத்தன்மை, நில அளவு வகை, தேன், கள், சாறு, பால் உறவுக்கு கிளர்ச்சிக்கு தூண்டும் பருவம், மணம்

**மட்டை** - தெங்கு, பனை முதலிய வற்றின் மடல், தேங்காயின் மேல் தோடு, 45 கவுளிகள் கொண்ட வெற்றிலைக் கட்டு, பந்து மட்டை, பாம்பு, மொட்டை, உடற்குறை, மூடன், பயனற்றவன் (ள்-,து), மட்டமான நெல், மாசுள்ள நெல்மணி

**மடக்கம்** - வளைவு, வணக்கம், பணிவு, மனவடக்கம், நோய் திரும்புகை

**மடக்கிடு-தல்** - மேற்செல்லாது தடுத்து வைத்தல், வாய் மடுத்தல்

**மடக்கிளி** - இளங்கிளி, பெண்

**மடக்கு-தல்** - மடித்தல், திருப்புதல், மாறிமாறிச்செய்தல், வாயடக்குதல், ஒருசேர அடக்கி வைத்தல், தடுத்தல், அழித்தல், தவச அரியறுத்தல், உடுத்துதல், ஒதுக்கிக்கட்டுதல், திரும்பத்திரும்ப வருதல்

**மடங்கக்கூறு-தல்** - திரும்பக்கூறுதல்

**மடங்கடி-த்தல்** - தோற்கச்செய்தல், திரும்புப்படி செய்தல்

**மடங்கல்** - வளைகை, கோணம், மீளுகை, மழுங்கிப்போகை, அடக்கம், ஒடுக்கம், முடிவு, இடி, வடவைத்தீ, கூற்றுவன், கூறுவரின் ஏவலர், அரிமா, யாளி, நோய் வகை, முற்றிச்சாய்ந்த கதிர், கோடைப்பயிர், தாழை

**மடங்கலர்** - பகைவர்

**மடங்கு-தல்** - வளைந்துசெல்லுதல், வளைதல், முடங்குதல், கோணுதல், மீளுதல், திரும்பவருதல், திருகுதல், குறைதல், சுருங்கல், ஒடுங்கல், தாழ்தல், வாயடங்குதல், சென்று சேர்ந்துவிடுதல், அடைந்து வருதல்

**மடந்தை** - பெண், மகளிர் பருவம் ஏழனுள் 14-19 அகவை வரையுள்ள பருவப்பெண், பருவமடையாப் பெண், சேம்புவகை

**மடப்பம்** - மென்மை, இணக்கம், பேதமை

**மடம்** - அறியாமை, கொண்டது விடாமையாகிய பேதமை, அழகு, மென்மை, இணக்கம், துறவியர் தங்குமிடம், இரப்போர் உண்டு தங்குமிடம், சாவடி, வழிப்போக்கர் தங்குமிடம், கோயில், இடம், தேர்

**மடமடத்தல்** - ஒலித்தல்

**மடமை** - அறிவின்மை, பேதமை

**மடல்** - கடிதம், செய்தி அனுப்பும் ஏடு

**மடல்** - பனை ஏடு, பனங்கருக்கூர்தி, பனைக்குதிரையூர்தி, பனங்கருக்கு, உலாமடல், பூவிதழ், கிளை, கண்ணிமை, திருநீறும் சந்தனமும் வைக்கும் கலம், சோளக்கதிர் முதலியவற்றின் மேலுறை, காதுச் சுணை, தோண்மேலிடம், கருவி யலகு, கை, ஏற்றக்கழி, சிறுவாய்க் கால், நீற்றுக்கலம்

**மடலவிழ்தல்** - இதழ் விரிதல்

**மடவள்** - அறிவற்றவள்

**மடவளாகம்** - கோயில் சூழ்விதி

**மடவன்** - அறிவற்றவன்

**மடவாயம்** - மகளிர் விளையாட்டுக் கூட்டம்

**மடவார்** - மகளிர், மூடர்

**மடவாள்** - பெண்

**மடன்** - அறியாமை, கொண்டது விடாமை

**மடாதிபதி** - திருமடத்துத்தலைவர்

**மடி** - மடங்குகை, வயிற்று மடிப்பு, வயிறு, ஆரை, தொடையின் மேற்பகுதி, ஆடை, தாள் மடிப்பு, தீட்டற்ற நிலை, வலைவகை, அடக்கம், நோய், பகை, கேடு, சோறு, தாழை, தாழைவிழுது, மடங்கு

**மடிச்சீலை** - மடியில் கட்டிக் கொள்ளும் பணப்பை, நீர்ச்சீலை

**மடிசீலை** - தூய ஆடை

**மடி-தல்** - மடங்குதல், நுனி மழுங்குதல், தலைசாய்தல், வீழ்தல், வாடுதல், சுருளுதல், அழிதல், சாதல், தவசம் கேடுறுதல், திரண்டு செல்லுதல், மறத்தல், அழித்தல், மடக்குதல், வளைதல், உழத்தல்

**மடிப்பு** - ஒன்றைப் பலவாக மடித் திருப்பது, மடிப்படையாளம், தொந்திமடிப்பு, ஏமாற்றுகை, இரு போகம்

**மடிபிடி** - கட்டாயம், சண்டை

**மடிபிடி-த்தல்** - கட்டாயப்படுத்துதல், வலிய சண்டைக்கழைத்தல், வழக்காடுதல்

**மடிமை** - சோம்பு

**மடிவு** - சோம்பல், ஆர்வக்குறைவு, அழிவு, சாவு

**மடிவை** - தாழை

**மடு** - நீர்நிலை, ஆற்றிடைப்பள்ளம்

**மடு-த்தல்** - உண்ணுதல், நிறைத்தல், சேர்த்தல், அடங்கிக் கொள்ளுதல், ஊட்டுதல், ஏமாற்றம் பண்ணுதல், விழுங்குதல், மயக்குதல், செலுத்துதல், தீ மூட்டுதல்

**மடுப்பு** - மடிப்பு, நிறைப்பு, ஏமாற்றம், இரண்டகம் செய்தல், கேடு, உண்ணுதல், சேர்த்தல், தீ மூட்டுதல், அடக்கிக் கொள்ளுதல்

**மடுவங்கரை** - குளக்கரை

**மடை** - தொளை, வாய், மதகுப் பலகை, ஓடை, நகைக்கடைப் பூட்டு, படைக்கல மூட்டு, அழுத்தின ஆணி, உண்ணுஞ்சோறு, சமையல் வேலை, தெய்வப்படையல், மடைமை, பேதமை, மூதறி வின்மை, அறிவு மழுக்கம்

**மடைக்கலம்** - சமையல் ஏனம்

**மடைத்தலை** - மதகு

**மடைத்தொழில்** - சமையற்பணி

**மடைப்பள்ளி** - ஆலய அடுக்களை

**மடைமை** - அறியாமை

**மடையன்** - சமையற்காரன், அறிவற்றவன்

**மண்** - நிலவுலகம், ஐம்பூதங்களுள் ஒன்று, நீராடுங்கால் பூசிக்கொள்ளும் பத்து வகை மண், புழுதி, நாமக்கட்டி, தரை, அணு, சுண்ணச்சாந்து, மத்தளம் முதலியவற்றில் பூசும் மார்ச்சனை, மனை, வயல், கழுவுகை, ஒப்பனை

**மண்கூட்டாளன்** - குயவன், குலாலன்

**மண்சுதை** - சுண்ணச்சாந்து

**மண்சேய்** - செவ்வாய்

**மண்சோறு** - தெய்வத்திற்கு நேர்ந்து கொண்டு கோயில் தரையில் சோறிட்டு உண்ணல்

**மண்டபம்** - திருவிழா நாட்களில் இறைவன் தங்க உள்ள கற்கட்டடம், ஒப்பனைப்பந்தல், சாவடி

**மண்டர்** - படைவீரர்

**மண்டலம்** - நிலவுலகு, வட்டம், கதிரவன் மறைப்பிக்கும் போது ஏற்படும் நிலா வட்டப்பாதை, ஒருபகுதி, நாடு, நகக்குறி, பறிவேடம், சிற்றிலக்கியங்களுள் ஒன்று, 48 நாள், பாம்பு முதலியவற்றின் சுற்று, மேலுலகம், வட்டவடிவ படை யமைப்பு, ஒரு நாட்டிய முத்திரை, வில்லோர் நிலையுளுள் ஒன்று

**மண்டலிகன்** - அரசன், நாட்டின் பகுதியை ஆளும் அதிகாரிகள்

**மண்டவம்** - சுங்கச்சாவடி

**மண்டி** - காலை மடக்கி முழந்தாளால் நிற்கை,வண்டல், கலங்கல் நீர் , தவசம் மொத்த விற்பனை நிலையம்

**மண்டிக்கிட-த்தல்** - அடர்ந்து வளர்ந்திருத்தல், நிறைந்திருத்தல்

**மண்டியிடு-தல்** - முழந்தாளில் நிற்றல்

**மண்டிலக்கடவுள்** - நிலவு

**மண்டிலம்** - வட்டம், வட்டவடிவு, வட்டமாயோடுகை, குதிரை, நாட்டின் பெரும்பகுதி, நிலம், கதிரவன், நிலவு, தேசிக்கூத்தின் வகை, வானம், கண்ணாடி, பாம்பு முதலியவற்றின் சுற்று, வட்டவடிவப்படை அமைப்பு வகை, ஒரு நாட்டின் முத்திரை, வில்லோர் நிலையுளொன்று

**மண்டிலமாக்கள்** - நாட்டின் பகுதியை ஆளும் அதிகாரிகள்

**மண்டு** - செறிவு, மிகுதி, மூடன்

**மண்டு-தல்** - நெருங்குதல், விரைந்து செல்லல், திரளுதல், உக்கிரமாதல், ஒளியுமிழ்தல், மிகுதல், ஈடுபடுதல், செலுத்துதல், நெருக்கித்தாக்குதல், நிரம்ப உண்ணுதல், சேர விணைத்தல், மூண்டுபொருதல், கவர்தல், தாக்குதல்

**மண்டை** - மட்கலம், ஒரு முகத் தலளவை, திருவோடு, இரப்போர் கலம், மண்டையோடு, தலை, தென்னை முதலியவற்றின் தலைப் பக்கம், மகுடம், இளவரசன், விலைமகள்

**மண்டைப்பாணர்** - உண்கலமேந்தி இரக்கும் பாணர்வகையார்

**மண்டையிடி** - தலைவலி, பீனிசம்

**மண்ணகம்** - நாடு, மனை

**மண்ணவர்** - மக்கள்

**மண்ணன்** - மந்தன்

**மண்ணாங்கட்டி** - மண்கட்டி, கெட்டி யான மண்கட்டிகள், வெறுப்பு சலிப்பு ஆகியவற்றால் வெளிப்படுத்தும் சொல்

**மண்ணாசை** - நிலம் அடைவதற் கான பற்று

**மண்ணிலம்** - நிலவுருண்டை

**மண்ணீடு** - திண்ணை, மாடப்புரை, வேயாமாடம், சுதைப்பாவை வடிவம்

**மண்ணுக்குடையவன்** - நிலச் சொந்தக்காரன், அரசன், குயவன்

**மண்ணு-தல்** - நீராடுதல், மூழ்குதல், கழுவுதல், பூசுதல், செய்தல், ஒப்பனைச் செய்தல், செப்பமிடுதல்

**மண்ணுமங்கலம்** - ஆண்டுதோறும் அரசன் முடி புனைந்து நன்னீராடு தலைக்கூறும் புறந்துறை, மாற்றான் மதிலையழித்த மன்னன் மங்கல மாக நன்னீராடுதலைக் கூறும் புறந்துறை

**மண்ணுளிப்பாம்பு** - பாம்பு வகை, மண்ணில் உண்டாகும் புழுவகை

**மண்ணுறு-த்தல்** - கழுவுதல், ஒப்பனைச்செய்தல், மஞ்சன மாட்டுதல்

**மண்ணை** - கூர்மழுக்கம், மூடன், இளமை, கால் கெண்டைச்சதை, பேய், கொடிவகை

**மண்மக்கள்** - வேளாளர்

**மண-த்தல்** - கலத்தல், கூடுதல், நேர்தல், பொருந்துதல், கமழ்தல், விளங்குதல், திருமணம் செய்தல், புணர்தல், கூடல், அணைத்தல்

**மணக்கால்** - திருமணப்பந்தடை முதலில் நடும் முழுத்தக்கால்

**மணக்கோலம்** - திருமண ஒப்பனை, திருமண உறவுக்கோலம்

**மணந்தவன்** - கணவன்

**மணப்பறை** - திருமண முழவு

**மணப்பு** - நறுமணம், புணர்ச்சி, சாரம், செல்வமுடைமை

**மணம்** - கூடுகை, எண்வகைத் திருமணம், நறுமணம், மதிப்பு, நன்னிலை

**மணமகள்** - திருமணப்பெண்

**மண்மகள்** - நிலமடந்தை

**மணமகன்** - மாப்பிள்ளை, கணவன்

**மணல்** - பொடியான உதிரிமண்

**மணல்திட்டு** - கடலுள் காணப்படும் சிறுசிறு திட்டுகள்

**மணவறை** - திருமணக்கூடம், பள்ளியறை

**மணவாட்டி** - மணப்பெண்

**மணவாளன்** - மணமகன், கணவன்

**மணவினை** - திருமணநடப்பு

**மண்வெட்டி** - மண் தோண்டும் கருவி

**மணவோலை** - திருமண அழைப் பிதழ்

**மணாட்டுப்பெண்** - மருமகள்

**மணி** - நெல்மணிகள், கூலமணி, மாணிக்கம், முத்து, சிந்தாமணி, கண்மணி, பளிங்கு. உருத்திராக்கம், நஞ்சு நீக்கல், அழகு, ஒளி, சிறந்தது, உருண்டை, கருமை, 60 நிமிட (2 1/2) நாழிகை நேரம், கருவாய்உறுப்பு

**மணிக்கட்டு** - உள்ளங்கையை கீழ்க்கையுடன் இணைக்கும் வழுக்குமூட்டு

**மணிக்கயிறு** - கண்டாமணியை இழுத்தடிக்கும் கயிறு, முடிச்சுள்ள சாட்டைக்கயிறு, முத்து வடம், மெல்லிய முறுக்குக் கயிறு

**மணிக்கூடு** - மணிமாடம், கடிகார மைந்த கோபுரம், கடிகாரக்கூண்டு, நாழிகை வட்டம், சாயப்பூடு வகை

**மணிகம்** - நீர்க்கட்டு

**மணிச்சட்டம்** - எண் கற்க உதவும் மண்கள் கோத்த சட்டம்

**மணிசம்** - நீர்க்குடம்

**மணிப்பவளம்** - தமிழில் சமற்கிருதம் கலந்து எழுதிய உரைநடை

**மணிப்புறா** - புறாவகை

**மணிமலர்** - குவளை

**மணிமாடம்** - சிறந்த மாளிகை

**மணிவண்ணன்** - திருமால்

**மணிவாசல்** - ஒப்பனைமிக்க தலை வாசல்

**மணு** - பழந்தமிழ் நிறுத்தலளவு

**மணை** - அமர்வுப்பலகை, மண மேடை, பலகை, பாதப்படி, பஞ்சு பிரிக்கும் கருவி

**மத்தகம்** - தலை, உச்சி, நெற்றி, தலைக்கோலம், யானையின் கும்பத் தலம், யானை நெற்றி, முகப்பு, மலைநெற்றி, காற்றோட்டமில்லா சூழல்

**மத்தம்** - களிப்பு, மயக்கம், பித்தியம், தெரள், கோட்டி, குறுக்கு, செருக்கு, கருவூமத்தை, எருமைக்கடா, குயில்

**மத்தவாரணம்** - மதயானை, திண்டு, பாக்கு வெற்றிலைத்துவையல், வீட்டின் மேன் மாடத்துறப்பு, மச்சியின் மேலுள்ள தாழ்வாரம்

**மத்தளம்** - பறைவகை இசைக்கருவி

**மத்தன்** - கோட்டிக்காரன், பித்தன், அறிவுமயக்கமடைந்தவன், செருக்குள்ளவன்

**மத்தி-த்தல்** - மருந்துகலத்தல், அடித்தல், தேய்த்தல், மத்தினாற் கடைதல்

**மத்திரி** - பறைவகை

**மத்து** - தயிர், கீரை, பருப்பு முதலியன கடையுங்கருவி

**மத** - வலிமை, அழகு, மிகுதி, மடமை

**மதக்கால்** - முகத்தலளவைக்கலன் வகை, ஆண்டு மழையின் அளவு, மரத்தால்செய்த பாதம், திருமாலின் கூத்துவகை, உப்பளம், ஒன்பதாம் நாண்மீன் (ஆயில்பம்), சோதி நாள்

**மதகரி** - ஆண்யானை

**மதகு** - நீர்தேக்கிப்பாயும் மடைவகை

**மதங்கம்** - ஆட்பாட்டத்திற்கு உரிய இசைத்தமிழ்க் கருவி (மிருதங்கம்)

**மதங்கர்** - இசை கூத்தைத் தொழிலாகக் கொண்ட ஓரினத்தார்

**மதங்கன்** - ஒருமுனிவன், பாணன், பெரும்பாணன்

**மதங்கி** - இருகைகளிலும் வாளேந்திச் சுழன்றாடும் ஆடற்பெண்டிர், மலை மகள், காளி, பாண்மகள், ஆடல் பாடல் வல்லாள்

**மத-த்தல்** - மதம்பிடித்தல், கொழுத்தல், காமமிகுதல், களித்தல், செருக்குதல், மயங்குதல்

**மதப்பு** - களிப்பு, சிற்றின்பத்தோய்வு, வெறிகொள்ளுகை, நிலம் முதலியவற்றின் செழிப்பு

**மதம்** - அறிவு, அம்மை, இம்மை மறுமைக்கொள்கைகள், ஆன்மிகக் கொள்கைகள், கோட்பாடு, சமயம், இறையிறல், உயிரியல் பற்றிய கொள்ளை, மகிழ்ச்சி, சாரம், செருக்கு, தேன், கத்தூரி, வெறி, பெருமை, ஒண்ணீர்

**மதமதப்பு** - உணர்ச்சியின்மை, திமிர், செழிப்பு

**மதர்-த்தல்** - செழித்தல், மிதமிஞ்சிக் கொழுத்தல், மதங்கொள்ளுதல், செருக்குதல், களித்தல், மிகுதல்

**மதலை** - மகள், குழந்தை, தூண், பற்றுக்கோடு, வீட்டின் கொடுங்கை, பற்று, மரக்கலம், பாவை, கொன்றை

**மதவலி** - மிகுவலி, வலிமை மிக்கோன், முருகன்

**மதவு** - வலிமை

**மதன்** - செருக்கு, வலிமை, மனவெழுச்சி, மாட்சிமை, அழகு, மிகுதி, கலக்கம், மடமை

**மதனம்** - காமம், காமக்கணை, பெருமிதம், இளவேனிற்காலம், தேனீ, தேன்மெழுகு, மருக்காரை, கடல் மீன்வகை

**மதி** - இயற்கையறிவு, பகுத்தறிவு, செய்கடன், மதித்தல், மதிப்பு, தட்சன்மகள், பிண்டிமரம், நிலவு, மாதம், ஓரை, செல்வக்கடவுள் (குபேரன்), இடைகலை, எண் ஒன்றைக் குறிக்கும் குழூஉக்குறி, கற்கடராசி

**மதிகேடன்** - நல்லறிவில்லான்

**மதிஞன்** - அறிஞன்

**மதிஞானம்** - இயற்கையறிவு

**மதி-த்தல்** - அளவீடு, பொருட்படுத்தல், கருதல், ஊழ்கம்செய்தல், துணிதல்

**மதிப்பு** - அளவிடுகை, மேன்மைப் படுத்தல், பெருமைப்படுத்தல், கருத்து

**மதிமான்** - அறிவாளி

**மதிமுகம்** - நிலவு போன்ற முகம், மந்திரவிசை வகை

**மதிமை** - அறிவு

**மதிரை** - கள்

**மதில்** - கோட்டைச்சுவர், சுவர், சுவரின் மேற்கட்டு, இஞ்சி

**மதிவல்லோர்** - அறிவாளி, பேய், அமைச்சர்

**மது** - தேன், கள், மயக்கம் தரு எரிநீர், பூந்தாது, மலர்த்துகள், இனிமை, நீர், அமுதம், பால், இளவேனில், அசோகு, அதிமதுரம்

**மதுகை** - வலிமை, ஆற்றல், அறிவு

**மதுரை** - பாண்டிய நாட்டின் தலைநகரம், கள், இனிமையானது

**மதுரைவீரன்** - ஒரு சிற்றூர்த் தெய்வம்

**மந்தி** - கதிரவன், பெண்குரங்கு

**மந்திரம்** - திண்ணிய எண்ணம், மனவுறுதி, சூழ்வு, கலந்தாய்வு, அமைச்சுக்குழு, அமைச்சரவை, திருமூலரின் திருமந்திரம், சிவ போற்றி போன்ற திருமொழி, வசிய மந்திரம், சாவிப்பு மந்திரம்

**மந்திரி** - அமைச்சன், வியாழன், வெள்ளி, குபேரன், படைத் தலைவன், அறிவன், பித்தம், கள்விற்போன், செல்வந்தன் (குபேரன்)

**மந்தை** - கால்நடைக்கூட்டம், பொது மேய்ச்சலிடம், ஊர்ப்பொது வெளியிடம், சட்டைப் பின்பக்க ஒட்டுத்துணி

**மப்பு** - முகில் மூட்டம், செரியாமை, மயக்கம், மட்டித்தனம், செருக்கு

**மம்மர்** - வருத்தம், மயக்கம், கல்லாமை, காமம்

**மயக்கம்** - அறிவுத்திரிபு, அறியாமை, பிழைபடவுணர்தல், பிரிவுத்துன்பம், உணர்விழப்பு, மூர்ச்சை, கலப்பு, எழுத்துப்புணர்ச்சி, இறுதிச்சடங்கு களுள் ஒன்று, மடித்தனம், சோம்பல், அலித்தன்மை

**மயக்கமுறு-தல்** - மயக்கமுண்டாதல், இளைப்படைதல்

**மயக்கமேறு-தல்** - மயக்கம் கொள்ளல், வெறியேறல்

**மயக்கு-தல்** - மனத்தைக்குழப்புதல், வியக்கவைத்தல், உணர்வுறச் செய்தல், கலத்தல், சேர்த்தல், சிதைத்தல், நிலைதளர்த்தல், மூர்ச்சையுறச்செய்தல், ஊடலுணர்த்தல், பண்படுத்துதல்

**மயங்குதல்** - மருளுதல், பரவச மாதல், வெறிகொளல், மாறுபடுதல், நிலையழிதல், வருந்துதல், தாக்கப் படுதல், ஐயங்கொளல், தயக்கம், கலத்தல், நெருங்குதல், கைக் கலத்தல், அறிவுகெடல், உணர்ச்சி யிழத்தல்

**மயர்-தல்** - மயங்குதல், உணர் வறுதல், சோர்தல், திகைத்தல்

**மயல்** - மயக்கம், மந்தம், அயர்வு, ஆசை, காமவிழைவு, கோட்டி, பித்து, வெறி, மாயை, அச்சம், பேய், செத்தை, நெருப்பு

**மயலயம்** - பொதியமலை

**மயற்கை** - மயக்கம், செத்தை

**மயன்** - அசுரத்தச்சன், தச்சன், கற்கவி, சிற்பி

**மயானம்** - சுடுகாடு

**மயிர்** - முடி, தூவி, சாமரை

**மயிர் வினைஞன்** - முடிதிருத்துநர்

**மயில்** - ஆடும் பறவை வகை, மயிவடிக்குருத்து

**மயிலி** - மயில் போன்ற பெண்

**மயிலைப்பணம்** - எண்பது காசு மதிப்புள்ள நாணயம்

**மயிற்கண்** - மயில் தோகையின் கண்

**மயிற்கூத்து** - ஒருகாலை ஊன்றி மறுகாலை உயர்த்தியாடும் கூத்து வகை, ஒன்றை நிலைநாட்ட மற்றொன்றை விட்டுப் போகச் செய்யும் முறைமை

**மயிற்கொன்றை** - ஒருவகைப் பூ மரம், செடிவகை, வாதநாராயண மரம்

**மயிற்பீலி** - மயிலிறகு

**மரக்கலம்** - கப்பல்

**மரக்கலன்** - மீகாமன், மரக்கலம்

**மரக்கறி** - காய்கறி, சமைத்த காய்கறியுணவு, புல்லுணா

**மரக்கால் கூத்து** - பொய்க்கால் குதிரை ஆட்டம், மரக்கால் கொண்டு ஆடும் நடனம்

**மரக்கோல்** - கூரில்லாத அம்பு, தோணி தள்ளும் கழி

**மரக்கோவை** - கப்பல்

**மரணப்படுக்கை** - இறக்கும் தருவாய், சாவும் கட்டம்

**மரணம்** - இறப்பு, சாவு

**மரணவாக்குமூலம்** - இறக்கும் தருவாயில் சொல்லப்படும்செய்தி (அ) உறுதிமொழி

**மரத்தார்** - பகுத்தறிவற்றவர்

**மரப்பணை** - தெப்பம்

**மரப்பாவை** - மரப்பொம்மை

**மரப்பொது** - சோலை

**மரபியல்** - முன்னோர் வழங்கிய சொல் வழக்கைக் கூறும் தொல்காப்பியப் பகுதி

**மரபு** - முறைமை, சான்றோர் சொல் வழக்கு முறை, பழைமை, சரவடி, தொன்றுதொட்ட வழக்கம், இயல்பு, இலக்கணம், நல்லொழுக்கம், பெருமை, மேம்பாடு, வழிபாடு, பருவம்

**மரபுப்பெயர்** - தொன்றுதொட்டு ஒன்றிற்கு வழங்கும் பெயர்

**மரபுவழு** - வழங்கு முறைக்கு மாறானது

**மரம்** - ஆணிவேர், சல்லிவேர், நெடிது வளரும் நீர் வாழுந்தாவரம், உள் வயிரமுள்ள பயிரி, மூலிகை, அறுக்கப்பட்ட மரம், மரக்கலம், இயமரம், பரம்புப்பலகை

**மரவடி** - மரச்செருப்பு

**மரவினைஞர்** - தச்சர்

**மரவுரி** - மரப்பட்டைஆடை, மரவகை, சீரகம்

**மரவை** - மர ஏனம்

**மரி-த்தல்** - இறத்தல்

**மரு** - ஒன்றிலிருந்து மற்றொன்றொடு கலக்கும் மணம், நறுமணம், நறுமணச்செடி, மருக்கொழுந்து

**மருக்கொழுந்து** - ஒருவகை நறுமணச் செடி

**மருங்கு** - பொருந்தும் பக்கம், விலாப் பக்கம், இடை, வடிவு, எல்லை, இடம், சுவடு, சுற்றம், குலம், செல்வம், நூல், தகுதி

**மருங்குல்** - இடை, வயிறு, உடம்பு

**மருங்குற்பக்கம்** - இடுப்பு

**மருட்கை** - மெய்ப்பாடு எட்டனுள் ஒன்றான வியப்பு, மயக்கம்

**மருட்சி** - அறிவின்மை, பொய் யுணர்வு, மயக்கம்மூட்டுதல், மயக் குதல், அச்சமூட்டல், மாறுபடச் செய்தல், ஒத்தல், மனங்கவியச் செய்தல், ஏமாற்றுதல்

**மருட்பா** - வெண்பாவும் ஆசிரியப் பாவும் கலந்துவரும் செய்யுள் வகை

**மருத்து** - காற்று, வளி, ஊதைநோய்

**மருத்துவச்சி** - மகப்பேறு பார்ப்பவள், பெண் மருத்துவர்

**மருத்துவம்** - பண்டுவம், மருந்தளித்தல், மருந்து, மாற்று, பேறு பார்க்கும் தொழில்

**மருத்துவர்** - நோய்நாடி நோய்முதல் நாடி மருந்தளிப்பவர், அசுவினி தேவர்

**மருதம்** - வயலும் வயல் சார்ந்த இடமும், போகம் நுகர் ஒழுக்கம், காலைப்பண் வகை, வயல்

**மருதர்** - ஏழுவகை வளிகள்

**மருது** - ஒருவகை மரம், தமிழ் மன்னர் பெயர்

**மருதோன்றி** - செடிவகை(விரல் நகங்களுக்கு இயற்கைசாயம் தரும்செடி),முள்ளி

**மருந்து** - நோய் நீக்கும் பொருள், மாற்று, வயப்படுத்தும் பொருள், அமுதம், சோறு, குடிநீர், இனிமை, வெடிமருந்து, முள்ளுக்கடம்பு, புதற்புல் வகை

**மருப்பு** - விலங்கின் கொம்பு, யானைக் கொம்பு, யாழினுறுப்பு வகை, மரக்கொம்பு, பிறை நிலவின் இருகோடு, இஞ்சி

**மருமம்** - உயிர்நாடி உறுப்பு, உயிர்நிலை, தழுவும் மார்பு, முலை, விதைப்பை(அண்டகோசம்), மறைபொருள், கமுக்கம், உடம்பு, மந்தணம்

**மருவிதழ்** - பூவிதழ்

**மருவு-தல்** - கலந்திருத்தல், வழக்கப் படுதல், தோன்றுதல், கிட்டுதல், தழுவுதல், பயிலுதல், புணர்தல், ஊழ்கித்தல்(தியானித்தல்), பதித்தல்

**மருள்** - மயக்கம், திரிபுணர்ச்சி, வியப்பு, உன்மத்தம்கள், குறிஞ்சி யாழ் திறம் எட்டனுள் ஒன்று, எச்சம் எட்டனுள் பிறவி முதல் அறிவின்றி மயங்கி இருக்கும் நிலை, பெருங்குரும்பை, புதர், பேய், மருள், உட்புகல் (ஆவேசம்), புல்லுரு

**மருள்(ளு)-தல்** - மயங்குதல், வெருவுதல், வியத்தல், ஒப்பாதல்

**மருளல்** - எழுத்திலாவோகை, பேசுவதால் எழும் ஒலி, அச்சம், மயக்கம்

**மருளன்** - அறிவு மயக்கமுள்ளவன், தெய்வ அருளுற்றவன், சமய வெறியன்

**மருளாளி** - பேய்புனை கொண்டு குறி சொல்லும் பூசாரி, ஒருசார் சிறு தெய்வங்களை வழிபடுவோன், சிற்றூர்த் தெய்வங்களின் அருள் ஏறி ஆடுபவர்கள்

**மரூஉ** - இலக்கணம் சிதைந்து மருவி வழங்கும் சொல் முதலியன

**மரை** - மான்வகை, கவயம், தவளை, மணிக்குற்றம், திருகுவகை, விளக்கின் திரியை ஏற்ற இறக்க உதவும் திருகுள்ளகாய்

**மல்லன்** - மறப்போராளி, பெருமையில் சிறந்தோன்

**மல்லாத்-தல்** - மேல்முகமாகக் கிடத்தல், தோற்றுப் போதல்

**மல்லி** - கொத்தமல்லி

**மல்லிகை** - மணப்பூங்கொடி வகை, மகரந்த மல்லிகை, குடமல்லிகை, எருமைமுல்லை, விளக்குத்தண்டு, ஏனம், இரப்போர் கலம்

**மல்லிநாதர்** - சமணத்தின் 19-ஆம் தீர்த்தங்காரர்

**மல்லுக்கட்டுதல்** - மற்போர் புரிதல், பெருகுதல், கட்டாயப்படுத்துதல்

**மல்லை** - வளம், பெருமை, இரப்போர் கலம், வட்டம், மாமல்லபுரம்

**மலக்கு** - மயக்கம்

**மலக்கு-தல்** - கலக்குதல்

**மலங்கு-தல்** - நீர் முதலியன குழம்புதல், மனம் கலங்குதல், பிறழ்தல், கெடுதல், ததும்புதல்

**மலசம்** - தமிழ் மலையாளம் கலந்து பேசும் மலைச்சாதியினர்

**மலடன்** - மகப்பேறு பெறாதவன்

**மலடி** - மகப்பேறு பெறாதவள்

**மலடு** - கருவுறாமை, ஈனாதவள்-ன்-து

**மலநானம்** - ஆறங்குலத்திற்கு கீழுள்ள மண்ணெடுத்து மந்திரம் சொல்லி உடலில் பூசி நீரில் மூழ்குகை

**மலம்** - பவ்வீ, வெண்ணீர் மாதவிடாய் மூத்திரம் முதலிய உடல் மாசு, அழுக்கு, துரு, மும்மலம், கரிசு கற்பூரம்

**மலமலவெனல்** - ஓர் ஒலிக்குறிப்பு, கண்ணீர் பெருகும் குறிப்பு

**மலயமான்** - திருக்கோவலூர் தமிழ் மன்னர்கள் வெளியிட்ட நாணயம்

**மலர்** - பூ, தாமரை, ஒரு பேரெண் (பதுமம்), படைக்கலக் கருவியின் மேற்குமிழி, வெண்பாவின் இறுதிச் சீர் வாய்பாடுகளுள் ஒன்று

**மலர்ச்சி** - மலர்கை, பொலிவு, மகிழ்ச்சி

**மலர்-த்தல்** - மலரச்செய்தல், வாய்ப்புறம் மேலாக நிமிரச்செய்தல்

**மலர்தல்** - பூவின் மொட்டவிழ்தல், பரத்தல், மணமகிழ்தல், தோன்றுதல், எதிர்தல், அகலுதல், மிகுதல்

**மலரடி** - பெரியோர் அல்லது தெய்வத் திருவடி

**மலரேடு** - பூ விதழ்

**மலரோன்** - நான்முகன், அயன், தாமரையிலிருப்பவன்

**மலாடு** - மலையமான்கள் வாழ்ந்த பகுதி, கொடுந்தமிழ், திருக் கோவலுரைச் சூழ்ந்த ஒருநாடு, பன்னிரு நாடுகளுள் ஒன்று

**மலி-தல்** - மிகுதல், நிறைதல், நெருங்குதல், புணர்ச்சியின் மகிழ்தல், செருக்குதல், விம்முதல், பரத்தல், விரைதல், விலைநயத்தல், சொல்லுதல்

**மலிபு** - மிகுதி

**மலிர்-தல்** - பெருகுதல், நீர் முதலியன ஒழுகுதல், பயிலுதல்

**மலிவு** - மிகுதி, நிறை, காதலரின் புணர்ச்சி உவகை, உவகை, நயவிலை, தன்மை, மேன்மை

**மலினமுகன்** - சிறந்தோன், தீ, தீயஆவி, கருங்குரங்கு, கொடியவன், கருவண்டு

**மலை** - மேல் நோக்கி மிக உயர்ந்து அமைந்துள்ள பாறைகளின் தொகுதி, ஈட்டம், மிகுதி, போர்த்தொழில்

**மலைக்குடிக்கோல்** - நீட்டலளவை முறைகளுள் ஒன்று

**மலை-த்தல்** - பொருதல், மாறுபடுதல், மயங்குதல், வியத்தல், வருந்துதல்

**மலைத்தேன்** - மலையில் கிடைக்கும் தேன், இன்சுவைப் பலாப்பழம்

**மலை-தல்** - சுடுதல், மேற் கொள்ளுதல், ஒத்தல், பறித்தல், எதிர்த்தல், பகைத்து மாறுபடுதல், மயங்குதல், வழக்காடுதல்

**மலைநாடன்** - மலைவளமிக்க நாட்டுக்கு அரசன், சேரன்

**மலைபடுபொருள்** - மலையில் விளையும் அகில், மிளகு, கோட்டம், தக்கோலம், குங்குமம் ஆகிய ஐவகை நறுமணப் பொருள்

**மலைப்பள்ளி** - அருந்தவர் வாழ் மலையிடம்

**மலைப்பு** - அறிவுமயக்கம், திகைப்பு, போர், மாறுபாடு, கூத்தின் வகை, பெருவியப்பு

**மலைப்புனம்** - தினை விளை நிலம்

**மலையமான்** - தமிழ்ச்சேரவரசன், மலாடு ஆளும்; அரசன் உடையார் குடி உட்பிரிவினர்

**மலையமுனிவன்** - அகத்தியன்

**மலையரன்** - நான்கு அரன்களுள் ஒன்றான மலையாகிய காப்பிடம்

**மலையருவி** - மலையினின்று விழும் நீர்

**மலையன்** - குறிஞ்சித்தலைவன், சேரன், தமிழ்ப்பணிக்க சாதியினர், கடையெழு வள்ளல்களுள் ஒருவனான மலையமான் திருமுடிக்காரி, கடாரி

**மலையாழ்மை** - கேரளத்தில் பேசப்படும் தமிழ்க்குடும்ப மொழிகளுள் ஒன்று

**மலையாளி** - மலையில் வாழ்வோன், மலையாள நாட்டன், முகமதியர் படையெடுத்து தெற்கே வந்தபொழுது காஞ்சிபுரத்திலிருந்து ஓடிச் சேர்வராய மலையில் குடியேறிய வேளாள வகுப்பினர், மிளகு

**மலையேறுதல்** - தெய்வம் நீங்குகை, முடிவடைதல், மாவிளக்கு நெய் யற்று அணைதல், மலைமீது ஏறுதல்

**மலைவளம்** - மலைநில செழிப்பு

**மலைவு** - மயக்கம், வியப்பு, உரைத்தலின் முன்னுக்குப்பின் முரண், இடம், காலம், கலை, உலகம், நயம், ஆகமம் ஆகியவற்றைப் பொருத்தமின்றிக் கூறும் குற்றம், உவமைச்சொல், போர்

**மவ்வம்** - அழகு

**மழ** - இளமை, குழந்தை, மனமயக்கம்

**மழபுலவர்** - பள்ளியில் பயிலும் சிறார்

**மழலை** - குழந்தைகளின் திருந்தாச்சொல், மென்மொழி, இளமை, மெல்லோசை

**மழவன்** - இளைஞன், வீரன், மழநாடன்

**மழவு** - மகன்

**மா** - தாய், விலங்கு, குதிரை, மான், வண்டு, மாமரம், ஓர் அளவு, வலி, பெருமை, கருமை, மாநிறம், மாவு, இலக்குமி, செல்வம், மாற்று, நிலவளவு வயல்

**மாக்கள்** - பகுத்தறிவிலார், ஐயறிவு மக்கள், குழந்தைகள், மிலேச்சர்

**மாகத்தம்** - மாமரம்

**மாகதர்** - மகத நாட்டினர், இருந் தேத்துவோர்

**மாகம்** - திசை, ஆகாயம், மஞ்சு

**மாகாணம்** - தேசப்பெரும் பகுதி

**மாகாணி** - ஓர் அளவு, வீசம்

**மாகாளன்** - ஒரு சிவக்கணத் தலைவன்

**மாகு** - வலை, வலைமணி

**மாகூர்தல்** - குளிரால் விலங்குகள் உடல் வளைதல்

**மாங்கிசம்** - மாமிசம்

**மாச்சரியம்** - பொறாமை

**மாசி** - மேகம், ஒரு மாதம்

**மாசிகம்** - மாத சிரார்த்தம்

**மாசு** - புழுதி, அழுக்கு, குற்றம்

**மாசுணம்** - பெரும்பாம்பு

**மாசுணி** - அழுக்காடை

**மாசை** - பொன், நாணயம்

**மாட்சி** - மகிமை, விளக்கம்

**மாட்டுதல்** - இணைத்தல், கூடிய தாதல், அழித்தல், கொளுத்துதல்

**மாட்டெறிதல்** - ஏறிட்டுக்கூறுதல்

**மாடகம்** - யாழின்முறுக்காணி

**மாடம்** - உபரிகைவீடு, வீடு, புரை

**மாடியம்** - கவசம்

**மாடு** - எருது, செல்வம், பக்கம், ஏழனுருபு

**மாடை** - அரை வராகன்

**மாண்** - மாட்சிமை, மடங்கு

**மாண்டல்** - மாட்சிமைப்படுதல், இறத்தல்

**மாண்டோர்** - சிறந்தோர், இறந்தோர்

**மாணவகன்** - பிரமசாரி, சீடன்

**மாணி** - பிரமசாரி, குள்ளன்

**மாணுதல்** - சிறத்தல், மிகுதல்

**மாணை** - ஒரு கொடிவகை

**மாத்தழை** - கரிய தழை

**மாத்தாள்** - பெரிய கால்

**மாத்தான்** - பெரியோன்

**மாத்திரை** - கணப்போது, அளவு, பருவம், குளிகை

**மாத்திரைக்கோல்** - அளவுக்கோல், மந்திரக்கோல்

**மாத்து** - பெருமை, செருக்கு

**மாதங்கம்** - யானை, இளமை

**மாதங்கி** - காளி, பார்வதி

**மாதர்** - பெண், அழகு, காதல்

**மாதரங்கம்** - பெரிய அலை, பெண்கள் உடல்

**மாதராள்** - மாதர்

**மாதரி** - காளி

**மாதவன்** - திருமால், வசந்தன்

**மாதவி** - குருக்கத்தி, பனைவெல்லம், சுபத்திரை

**மாதா** - தாய்

**மாதாமகன்** - தாய்ப்பாட்டன்

**மாதி** - கிரகச்சுற்று, மாமரம்

**மாதிமை** - தகுதி, காதல்

**மாதிரம்** - திக்கு, மலை, ஆகாயம், மண்டிலம்

**மாது** - பெண், காதல், அழகு, பெருமை, ஓர் அசை

**மாதுரியம்** - இனிமை, விவேகம்

**மாதுலன்** - தாய் மாமன், மாமனார்

**மாதோயம்** - கடல்

**மாந்துதல்** - குடித்தல், உண்ணுதல், வருந்துதல்

**மாப்பு** - மிகுதி

**மாபாடியம்** - பேருரை

**மாபெலை** - பார்வதி

**மாமடி** - மாமன், மாமனார்

**மாமை** - அழகு, மேனி, கருமை, துன்பம்

**மாய்த்தல்** - மறைத்தல், அழித்தல், தீட்டுதல்

**மாய்தல்** - மறைதல், அழிதல், ஒளிமழுங்குதல், மறைத்தல்

**மாய்மாலம்** - பாசாங்கு, மோசடி

**மாயம்** - களவு, வஞ்சனை, பொய், ஆச்சிரியம்

**மாயமுனி** - அகத்தியன்

**மாயன்** - கரியன், திருமால்

**மாயாவாதம்** - அத்துவிதமதம்

**மாயூரம்** - மயில்,ஓரூர்

**மாயை** - மூலப்பிரகிருதி, பொய்த் தோற்றம்

**மாயோள்** - கருநிறமுடையவள், மாமை நிறமுடையவள், துர்க்கை

**மார்க்கம்** - வழி, முறை, ஒழுக்கம், சமயம்

**மார்ச்சனை** - முழவிற்கிடும் கருஞ் சாந்து

**மார்ச்சாலம்** - பூனை

**மார்த்தாண்டன்** - சூரியன்

**மார்பு** - நெஞ்சு, வடிம்பு

**மாரகம்** - சாவு

**மாரகாகளம்** - குயில்

**மாரணம்** - சாவு

**மாரன்** - மன்மதன்

**மாராயம்** - வேந்தன்செய் சிறப்பு, நற்செய்தி

**மாரி** - மேகம், நீர்

**மாரீசம்** - வஞ்சகம்

**மாருதம்** - காற்று

**மாருதி** - அனுமன், வீமன்

**மாரோடம்** - செங்கருங்காலி

**மால்** - மயக்கம், ஆசை, பெருமை, திருமால், இந்திரன், மேகம்

**மாலதி** - காட்டு மல்லிகை

**மால்பு** - கண்ணேணி

**மாலிகை** - மாலை, வரிசை

**மாலுதல்** - மயங்குதல், மாட்சிப்படுதல்

**மாலுமி** - கப்பலோட்டி

**மாலூரம்** - வில்வம்

**மாலை** - இயல்பு, பூமாலை, அந்தி வேலை

**மாவலர்** - குதிரைப்பாகர்

**மாவிரதியர்** - சைவத்துறவியர்

**மாவிளம்** - வில்வம்

**மாவுத்தன்** - யானைப்பாகன்

**மாழ்குதல்** - மயங்குதல், சோம்புதல், கெடுதல்

**மாழாத்தல்** - மயங்குதல், ஒளி மழுங்குதல்

**மாழை** - இளமை, அழகு, பேதைமை, மான், மாமரம், உலோகக்கட்டி, பொன், ஓலை

**மாளிகை** - மாடிவீடு, அரண்மனை, கோயில்

**மாற்றம்** - சொல், பகை

**மாற்றலர்** - பகைவர்

**மாற்றவள்** - மாற்றாள், சக்காளத்தி

**மாற்றான்** - பகைவன்

**மாற்று** - மாறுதல், உரைமாற்று, உவமை, பண்டமாற்று, பரிகாரம்

**மாறன்** - சடகோபன், பாண்டியன்

**மாறியாடுதல்** - காலைமாற்றி நடனமாடுதல்

**மாறு** - பகை, ஒப்பு, உத்தரம், மிலாறு, எதிர், விற்றல்

**மாறுதல்** - விற்றல்

**மான்மகன்** - பிரமன்

**மான்மதம்** - கத்தூரி

**மான்மறி** - மான்குட்டி, பெண்மான்

**மான்மியம்** - மகிமை

**மான்றல்** - மயக்கம்

**மான** - உவமைச்சொல்

**மானக்கவரி** - சாமரை

**மானசம்** - மனச்சம்பந்தமானது

**மானசி** - உமை

**மானபரன்** - தன் மதிப்புள்ளோன்

**மானம்** - தன் மதிப்பு, கத்தூரி, (தொறுப் பொருளிடைச்சொல்)

**மானமா** - கவரிமான்

**மானவன்** - மனிதன், பெருமையுடையோன், அரசன்

**மானார்** - பெண்டிர், பகைவர்

**மானித்தல்** - நாணுதல், கர்வங் கொள்ளுதல், பெருமைப்படுத்துதல்

**மானியம்** - இறையிலிநிலம்

**மானுதல்** - ஒத்தல்

**மிகல்** - பெருமை, வெற்றி

**மிகுதி** - செருக்கு

**மிகுதிச்சொல்** - வரம்பு கடந்த சொல்

**மிகைத்தல்** - அதிகமாதல், செருக் குறுதல்

**மிச்சில்** - எஞ்சியது, எச்சில்

**மிச்சை** - அஞ்ஞானம், வறுமை

**மிசை** - மேலிடம், உணவு, ஏழனுருபு

**மிசைதல்** - உண்ணுதல், நுகர்தல்

**மிஞ்சுதல்** - மீறுதல், செருக்குதல்

**மிடல்** - வலி

**மிடறு** - கழுத்து

**மிடா** - பானை

**மிடி** - துன்பம், வறுமை

**மிடித்தல்** - வறுமையுறுதல், குறை வுறுதல்

**மிடுக்கு** - வலிமை, செருக்கு

**மிடை** - பரண், தூறு

**மிடைதல்** - செறிதல், கலத்தல்

**மிண்டன்** - திண்ணியன், திட்ட முடையோன், அறிவிலி

**மிண்டு** - மதம்

**மிண்டுதல்** - நெருங்குதல், வலிய தாதல், குத்துதல்

**மித்தை** - பொய்

**மிதத்துரு** - கடல்

**மிதலை** - கொப்பூழ்

**மிதவாதம்** - நிதானக்கொள்கை

**மிதவை** - குழைகூழ், பாற்சோறு, தெப்பம்

**மிதத்தல்** - நீர்மேற்கிடத்தல், மேலெழும்புதல், மிகுதல்

**மிதிதோல்** - துருத்தி

**மியா** - முன்னிலையசைச் சொல்

**மிலாறு** - வளாறு

**மிலேச்சன்** - புறநாட்டான், ஆரியன், அறிவீனன்

**மிலைத்தல்** - மயங்குதல், கனைத்தல்

**மிலைதல்** - சூடுதல்

**மிழற்றுதல்** - மழலைபேசுதல், மெல்லக்கூறுதல்

**மிளிர்த்தல்** - புரட்டுதல், கீழ் மேலாக்குதல்

**மிளிர்தல்** - பிறழ்தல், புரளுதல், ஒளிர்தல், மேலாதல்

**மிளை** - காவற்காடு, காவல், நிரை

**மிறை** - வருத்தம், அச்சம், வளைவு, குற்றம், அரசிறை

**மின்** - ஒளி, மின்னல்

**மின்னலித்தல்** - மின்னுதல்

**மினுக்குதல்** - பளபளப்புண்டாக்குதல், பகட்டுதல்

**மீ** - மேலிடம், மேன்மை

**மீக்குணம்** - பெருமிதம்

**மீக்கூர்தல்** - அதிகமாதல், மேம்படல்

**மீக்கூற்றம்** - புகழ், அதிகப்பேச்சு

**மீக்கோள்** - மேற்பார்வை, பொலிவு, ஏறுகை

**மீகாமன்** - மாலுமி

**மீச்செலவு** - நீதி தவறிய செயல், பெரும் பயணம்

**மீசரம்** - மேலானது

**மீசு** - மீது, மிகுதி

**மீசை** - மேலிடம், உதட்டின் மேற் புறத்து மயிர்

**மீட்சி** - திரும்புகை, திருப்புகை, கைம்மாறு

**மீட்டுதல்** - மீளச்செய்தல், காப் பாற்றுதல், நரம்பு தெறித்தல்

**மீத்தோல்** - மேற்றோல்

**மீது** - மேல், அதிகம்

**மீதூர்தல்** - மேன்மேல் வருதல், அடர்தல், அடர்த்தல்

**மீம்பு** - மிகுதி, மேன்மை

**மீயான்** - மீகாமன்

**மீளி** - வீரன், இளைஞன், கூற்றுவன், பேய், அரசன்

**மீளிமை** - வலிமை, வீரம்

**மீளுதல்** - திரும்புதல், இல்லையாதல்

**மீறுதல்** - மிகுதல், கடத்தல்

**மீன்** - கிரகம், நட்சத்திரம், மச்சம்

**மீனநிலையம்** - கடல்

**மீனரசு** - சந்திரன்

**மீனவன்** - பாண்டியன்

**மீனேறு** - சுறாமீன்

**முக்கனி** - மா பலா வாழை என்ற மூவகைப்பழங்கள்

**முக்காணி** - ஒரு பின்னவெண்,

**முக்காரம்** - எருதின் முழக்கம், பிடிவாதம், தாழ்ப்பாள்

**முக்காழ்** - மூன்று சரம்

**முக்குதல்** - நிரம்ப உண்ணுதல், மூழ்குவித்தல், திணறுதல்

**முக்குளித்தல்** - முழுகுதல்

**முக்கோல்** - திரிதண்டம்

**முகக்கயில்** - உடைத்த தேங்காயின் மேல் மூடி

**முகங்கொள்ளுதல்** - சம்மதம் பெறுதல்

**முகசோதி** - எலுமிச்சை

**முகஞ்செய்தல்** - நோக்குதல், தோன்றுதல், முன்னாதல்

**முகடி** - உச்சி, வாயில், பாழ்

**முகத்தல்** - மொள்ளுதல், அளத்தல், விரும்புதல்

**முகந்திரிதல்** - முகங்கோணுதல்

**முகபடாம்** - யானை, குதிரைகளுக்கு முகத்திலிடுமலங்காரத்துணி

**முகப்படுதல்** - முன்றோன்றுதல்

**முகப்பு** - தலைப்பு, முற்பகுதி

**முகபூடணம்** - தாம்பூலம்

**முகம்** - வாயில்

**முகம்புகுதல்** - எதிர்சென்று நிற்றல்

**முகமன்** - உபசாரம், துதி

**முகமாதல்** - உடன்படுதல், பக்குவமாதல்

**முகர்தல்** - மோத்தல்

**முகரம்** - ஒலி, சங்கு, காகம்

**முகரிமை** - பேரறிவு, தலைமை

**முகவட்டு** - விலங்கின் தலையணி

**முகவரி** - மேல்விலாசம்

**முகவாசம்** - வாசனைப்பொடி, வெற்றிலை

**முகவிமர்** - இன்முகமுள்ளோர்

**முகவுரை** - முன்னுரை

**முகவை** - மிகுதியாகக் கொடுக்கும் பொருள், அகப்பை, நெற்பொலி, நீர்முகக்குங்கருவி

**முகவோலை** - அரசரெழுதுந்திருமுகம்

**முகனை** - முன்புறம், தலைமை

**முகாந்தரம்** - மூலம்

**முகிதல்** - முடிதல்

**முகில்** - மேகம்

**முகிழ்** - அரும்பு, தயிர் மேற்புடைப்பு, குவிதல்

**முகிழ்த்தம்** - முகூர்த்தம்

**முகிழ்தம்** - முகிழ், சிறிது குவிகை

**முகுடம்** - மகுடம்

**முகுந்தன்** - திருமால்

**முகுரம்** - கண்ணாடி, தளிர்

**முகுளித்தல்** - குவிதல்

**முகூர்த்தம்** - மூன்றேமுக்கால் நாழிகை

**முகை** - அரும்பு, குகை

**முங்குதல்** - மூழ்குதல், நிறைதல்

**முச்சி** - தலையுச்சி, கொண்டை முடி

**முச்சில்** - சிறுமுறம்

**முசர்** - மோர், தயிர்

**முசலம்** - இரும்புலக்கை

**முசலிகை** - உடும்பு

**முசித்தல்** - களைத்தல், மெலிதல், அழிதல், திருகுதல்

**முசிதல்** - கசங்குதல், கெடுதல், அறுதல்

**முசிறு** - செவ்வெறும்பு, கடுகடுப்பு

**முசு** - கருங்குரங்கு

**முசுக்கட்டை** - கம்பளிப்பூச்சி, மருந்துச் செடிவகை

**முசுண்டர்** - கீழ்மக்கள்

**முசுண்டி** - ஒரு போர்க்கருவி

**முஞ்சம்** - குழந்தைகளின் உச்சியிலணியும் அணி வகை

**முஞ்சரம்** - தாமரைக்கிழங்கு

**முஞ்சி** - நாணற்புல்

**முஞ்சுதல்** - முடிதல், சாதல்

**முடக்கம்** - தடை, வளைவு

**முடக்கால்** - வளைந்த தடி, வளைந்த கால்

**முடங்கர்** - ஈன்றணிமை மெலிவு

**முடங்கல்** - மடங்குகை, சிறுமை, மூங்கில், வரைத்தனுப்புமோலை

**முடங்கிறை** - கூடல்வாய்

**முடங்குதல்** - சுருங்குதல், வழங் காமற்போதல், தடைப்படுதல், வளைதல்

**முடங்குளை** - பிடரிமயிர், சிங்கம்

**முடந்தை** - வளைந்தது

**முடம்** - கைகால் உதவியற்ற நிலை

**முடலை** - முறுக்கு, மனவன்மை, புலால் நாற்றம், வலி, பெருமை

**முடவு** - வளைவு

**முடி** - முடிச்சு, குடுமி, உச்சி, கிரீடம், நாற்று முடி, புட்படுக்குங்கண்ணி

**முடிச்சாத்து** - தலைப்பாகை

**முடிநாறு** - நாற்றுமுடி

**முடிப்பு** - முடிச்சு, பணமுடிச்சு

**முடிவு** - தீர்மானம், கருத்து

**முடுக்கர்** - அருவழி,தெருச்சந்து

**முண்டம்** - தலையற்றவுடல்

**முத்தம்** - இதழ் முத்தம். சிப்பிமுத்து

**முன்றுறை** - துறைமுகம்

**முன்னணை** - மாட்டுத்தொட்டி

**முன்னம்** - கருத்து ,குறிப்பு

**முன்னீடு** - தலைமை

**முன்னீர்** - மடல், கடல்

**முன்னுதல்** - கருதுதல், எதிர்ப்படுதல், அடைதல், அணுகுதல், பொரு ளாகுதல், முற்படுதல்

**முன்னேற்றம்** - விருத்தியடைதல், வளர்நிலை

**மூ** - மூன்று, மூப்பு

**மூக்கம்** - சீற்றம், கீழ்மை

**மூகம்** - ஊமை, கீழ்மை

**மூகாத்தல்** - வாய்பேசாதிருத்தல்

**மூகை** - பகைக்கூட்டம், ஈரற்குலை, ஊமை

**மூங்கர்** - ஊமையர்

**மூங்கை** - ஊமை

**மூசல்** - மொய்த்தல், கெடுதல், சாவு

**மூசை** - மட்குகை, மட்கரு

**மூஞ்சி** - முகம்

மூட்டுதல் - தூண்டிவிடுதல், பொருத் துதல்

**மூட்டு** - பொருத்து ,சந்திப்பு ,கடிவாளம், கோளுரை கட்டு, மூடுகின்ற பொருள்

**மூடு** - மூட்டுப்பூச்சி, வேர், பெண்ணாடு

**மூடை** - குதிர், பொதி, மூட்டை

**மூத்தல்** - முதுமையுறுதல், கேடுறுதல், முடிதல்

**மூத்தாள்** - மூதேவி, முதியவள்

**மூதறிவு** - பேரறிவு

**மூதா** - கிழப்பசு, தம்பலப்பூச்சி

**மூதானந்தம்** - காதலர், இறந்தமை கேட்ட பொழுதே இறத்தல், பேரானந்தம்

**மூதிரி** - எருமை

**மூதிரை** - திருவாதிரை நாள்

**மூதில்** - பழங்குடி

**மூது** - முதுமை, பழமை

**மூதுரை** - பெரியோர் வாக்கு, நீதிமொழி

**மூப்பன்** - தலைமைக்காரன், அகவை முதிர்ந்தோன்

**மூப்பு** - முதுமை

**மூய்தல்** - மூடுதல், செறிதல், நிரம்புதல்

**மூர்க்கம்** - மூடத்தன்மை, கடுஞ் சினம், கொண்ட கருத்து விடாமை

**மூர்த்தம்** - வடிவுடைப் பொருள், தலை, முகூர்த்தம்

**மூர்த்தி** - கடவுள், தவவேட முடையவன், தலைவன்

**மூரல்** - புன்சிரிப்பு, பல், சோறு

**மூரி** - துண்டம், கிழம், எருமை, எருது, திமில், சோம்பல், வலிமை, பெருமை, முரிப்பு

**மூலகந்தம்** - வெட்டிவேர்

**மூலபண்டாரம்** - சேமவைப்பு

**மூலம்** - அடி, கிழங்கு, ஆதி, வாயில், மூலநோய், தலைமை, மூலநாள்

**மூலவர்** - கருவறைக் கடவுள், மூலத்தான மூர்த்தி

**மூலவெழுத்து** - பிரணவம் (ஓம்)

**மூலி** - மூலிகை

**மூலிகை** - செடி, கொடி, வேர் மருந்து

**மூவாமருந்து** - அமிர்தம்

**மூவாமுதல்** - கடவுள்

**மூவெயில்** - முப்புரம்

**மூழ்த்தல்** - மூடுதல், மொய்த்தல், வளைத்தல், முதிர்தல்

**மூழி** - கமண்டலம், யாகபாத்திரம், நீர்நிலை, மத்து, சோறு, கைம்பெண்

**மூழிவாய்** - பூக்கடை

**மூழுத்தம்** - மூகூர்த்தம்

**மூழை** - மத்து, அகப்பை

**மூற்றை** - மும்மடங்கு

**மூன்றவத்தை** - கேவலம், சகலம், சுத்தம்

**மெச்சுதல்** - புகழ்தல்

**மெட்டுதல்** - காலால் தாக்குதல்

**மெத்த** - மிகவும்

**மெய்** - உண்மை, உடல், உணர்ச்சி, ஒற்றெழுத்து

**மெய்க்காட்டு** - சேனையைப் பார்வை யிடுகை, மெய்மையைக் காட்டுதல், நேரில் தோற்றுகை

**மெய்க்காவல்** - பாதுகாக்கை, சிறை

**மெய்த்தகை** - இயற்கையழகு, உண்மைக்கற்பு

**மெய்ப்படுதல்** - உண்மையாதல், ஆவேசிக்கப்பெறுதல்

**மெய்ப்பாடு** - உள்ள நிகழ்ச்சி

**மெய்ப்பூச்சு** - கலவைச் சாந்து

**மெய்ப்பை** - சட்டை, கவசயுடை

**மெய்ம்மறை, மெய்யுரை** - கவசம்

**மெருகிடுதல்** - பளபளக்கச் செய்தல்

**மெல்குதல்** - மிருதுவாதல், இலேசாதல்

**மெல்லரி** - உயர்ந்த அரிசி

**மெல்லிலை** - வெற்றிலை

**மெலிகோல்** - கொடுங்கோல்

**மென்கண்** - இரக்கம்

**மென்கால்** - தென்றல்

**மென்பால்** - மருதநிலம்

**மென்பிணி** - சிறுதுயில்

**மென்புலம்** - மருதம், மென்பால், நெய்தல்

**மே** - மேம்பாடு

**மேக்கு** - மேலிடம், மேலான தன்மை, ஆப்பு

**மேகம்** - முகில், நீர், குயில், நோய்

**மேகலை** - இடையணி வகை, அரைஞாண்

**மேகவண்ணன்** - திருமால்

**மேகவாகனன்** - இந்திரன்

**மேட்டிமை** - தலைமை, அகந்தை

**மேடம்** - ஆடு, கவசம்

**மேடு** - உயரம், சிறுதிடர், பெருமை

**மேதகை** - மேன்மை

**மேதம்** - யாகம், கொலை

**மேதாமனு** - தட்சிணாமூர்த்தி மந்திரம்

**மேதாவி** - பேரறிவாளன்

**மேதி** - எருமை, நெற்களம்

**மேதினி** - பூமி

**மேதை** - பேரறிவு, கொழுப்பு, கள்

**மேய்ச்சல்** - புற்றரை, தீனி, மேய்கை

**மேய்ப்பன்** - இடையன்

**மேயம்** - அளவிடற்குரியது

**மேய்மணி** - நாகமணி

**மேரு** - பொன்மலை

**மேரை** - எல்லை, மரியாதை, சுதந்திர தானியம்

**மேல்வரிச்சட்டம்** - முன் மாதிரி

**மேலகம்** - மேல்வீடு, மோக்கம்

**மேலாலம்** - மழை

**மேலாழியார்** - வித்தியாதரமன்னர்

**மேலீடு** - மேலிடுதல், குதிரைச்சேணம்

**மேலை** - வருங்காலம், முன்பு

**மேவல்** - ஆசை, கலக்கை

**மேவலர்** - பகைவர், விரும்புதலை யுடையார்

**மேவுதல்** - அடைதல், விரும்புதல், ஓதுதல், அமர்தல், பொருந்துதல், மேலிட்டுக் கொள்ளுதல்

**மேழகம்** - செம்மறி ஆட்டுக்கிடா, கவசம்

**மேழி** - கலப்பை, விவசாயம்

**மேளித்தல்** - கூட்டுதல்

**மேற்கட்டி** - மேல்விதானம்

**மேற்கதி** - மோட்சம்

**மேற்கோள்** - போர்வை, காட்டு, மேன்மை

**மேற்செலவு** - படையெடுப்பு

**மேன** - மேயின (ஏழனுருபு)

**மேனி** - உடம்பழகு, நிறம்

**மேனிலை** - மேல்மாடி, முன்னர் உள்ளது

**மேனை** - மலையரையன் தேவி

**மை** - அஞ்சனம், மசி, கரிய மை, இருள், பசுமை, குற்றம், அழுக்கு, பிறவி, எருமை, ஆடு, மலடு, மேகம்

**மைத்தல்** - ஒளிகெடுதல், கருத்தல்

**மைந்து** - வலிமை, அழகு, வீரம், விருப்பம்

**மைம்மா** - பன்றி

**மைம்மீன்** - காரி(சனி)க்கோள்

**மைம்மைப்பு** - பார்வைக் குறைவு

**மைமல்** - மாலை நேரம்

**மையல்** - காமமயக்கம், பித்தம், செருக்கு

**மையா** - காட்டுப்பசு

**மையாத்தல்** - மயங்குதல், ஒளி மழுங்குதல்

**மையான்** - எருமை

**மைவிடை** - ஆட்டுக்கிடா

**மொக்கணி** - குதிரையுணவுப்பை

**மொக்குள்** - மலரரும்பு, நீர்க்குமிழி, கொப்புளம்

**மொச்சு** - ஆட்டுமணம்

**மொச்சை** - துர்நாற்றம், ஒரு பயிறு

**மொசித்தல்** - தின்னல்

**மொசித்தல்** - மொய்த்தல்

**மொஞ்சகம்** - பீலி

**மொஞ்சி** - முலை

**மொட்டித்தல்** - குவிதல்

**மொட்டு** - அரும்பு, தேரின் கூம்பு

**மொடு** - மிகுதி, நயம்

**மொண்ணன்** - வழுக்கைத் தலையன்

**மொத்துதல்** - அடித்தல்

**மொந்தை** - சிறுமட்பாண்டம், ஒரு தோற்கருவி

**மொப்பு** - ஆட்டுப்பால், நாற்றம், வெடிநாற்றம்

**மொய்** - நெருக்கம், பெருமை போர், பகை, தாய், மணக்கொடை

**மொய்த்தல்** - நெருங்குதல், மேற் பரவுதல், மூடுதல், கொடுத்தல்

**மொய்ம்பு** - வலிமை, தோள்

**மொழி** - சொல், கணு

**மொழுப்பு** - சோலை சூழிடம், கட்டு

**மோ** - மோத்தல், (முன்னிலையசை)

**மோகம்** - காமமயக்கம், திகைப்பு, ஆசை, மோர்

**மோகரம்** - பேரொலி, மயக்கம்

**மோகரித்தல்** - ஆரவாரித்தல், மயங்குதல்

**மோகனம்** - மனமயக்கம், மயங்கச் செய்யும் வித்தை

**மோகினி** - மயக்கும் பெண் பேய்

**மோட்டன்** - மூர்க்கன்

**மோடனம்** - அவமானம், மாயவித்தை, காற்று

**மோடி** - காடுகாள், மகிடி, பிணக்கு

**மோடு** - உடல், வயிறு, பெருமை, மடமை

**மோதகம்** - கொழுக்கட்டை, பிட்டு, அப்பம்

**மோத்தல்** - மூக்கால் நுகர்தல்

**மோத்தை** - வெள்ளாட்டுக் கிடா, விரியாத பூ

**மோதம்** - மகிழ்ச்சி, மணம்

**மோது** - தாக்கு, வைகோற்கட்டு

**மோப்பு** - காதல்

**மோவாய்** - தாடி

**மோழல்** - பன்றி

**மோழை** - கொம்பில்லா விலங்கு, மொட்டை, மடமை, கீழாறு

**மோழைமை** - பரிகாசம்

**மோறாத்தல்** - சோம்பிருத்தல்

**மோனம்** - பேசாதிருத்தல்

**மோனை** - முதன்மை, பாட்டின் ஓரடியில் முதலெழுத்தொன்றிருத்தல்

**மௌவல்** - முல்லை, ஒரு மல்லிகை

**யந்திரம்** - பொறி

**யமகம்** - மடக்கணி

**யமகாதகன்** - மிகப்பொல்லாதவன்

**யமபடன்** - யமன் ஏவலான்

**யமன்** - இயமன், பாம்பின் ஒரு பல்

**யவம்** - வாற்கோதுமை, நெல்

**யவனர்** - சோனகர், துருக்கர், மிலேச்சர்

**யா** - யாவை, கட்டுதல், ஒரு மரம்

**யாக்கை** - கட்டுகை, உடல்

**யாகம்** - வேள்வி

**யாங்கண்** - எவ்விடம்

**யாட்டை** - ஓராண்டுக்காலம்

**யாடு** - ஆடு

**யாண்** - அழகு

**யாண்டு** - எங்கு, ஆண்டு

**யாணர்** - புதுவருவாய், செல்வம், தச்சர், வளமை

**யாத்திரை** - புண்ணியப்போக்கு, படையெழுச்சி

**யாதவன்** - இடையன்

**யாதனை** - வேதனை

**யாப்பு** - யாத்தல், செய்யுள், உறுதி

**யாப்புறவு** - தகுதி, வினா

**யாமக்கோட்டம்** - அந்தப்புரம்

**யாமம்** - நள்ளிரவு ஏழரை நாழிகை நேரம்

**யாமியம்** - தெற்கு

**யாமினி** - இரவு

**யாமை** - ஆமை

**யாய்** - தாய்

**யாவது** - எது

**யாவதும்** - சிறிதும்

**யாழ்** - முன்னிலையசை, இசைக் கருவி

**யாறு** - ஆறு

**யானைத்தீ** - தணியாப் பசி நோய்

**யானைவாரி** - யானை கட்டுமிடம்

**வக்கடை** - நீர்பாய வயல்வரப்பில் வெட்டி விடப்படும் ஓடை, வாய்மடை

**வக்கணி** - விளக்கமாக உரை

**வக்கணை** - முகப்புச்சொல் அல்லது முத்து தொடர் மொழி, முகமன் மொழி, அழகிய வண்ணனை, கருத்துரை, அறிவாற்றல், ஒழுங்கு வரிசை, முறை வைப்பு, திறன்மிகு பேச்சு

**வக்கு** - வழி, இடம், தடம்

**வகிடு** - தலை வாருகையில் மயிரை இரண்டாக பிளந்து வாரும் ஒழுங்கு

**வகு** - கூறுபடுத்து, பகிர்ந்தளி, இனம்பிரி, தலைப்பு வாரியாக ஒதுக்கீடு செய், அமர்த்து, பகுத்துக் கணக்கிடு, வகைப்படுத்திச் சொல், முறையாகச் செலவிடு, படைத்தல், பூசு

**வகுப்பு** - கற்பிக்கும் நேரம், தர அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ள

பிரிவு, பொருளாதார அடிப்படையில் பிரிக்கப்பட்டிருக்கும் பிரிவு, கூறு படுத்தல், வகைப்படுத்தல், இனம், குழு, குடி, தரம், தன்மை, தடுப்பறை, வகிடெடுத்த முன் தலைமயிரின் இடைவெளி யொழுங்கு, சந்தம், அழகு, பொலிவு

**வகை** - கூறுபாடு, கிளை, பிரிவு, குலயினம், வகுப்பினம், பிரிவு, இனம், வழி, சூழ்ச்சி, காரணம், தந்திரம், திறமை, ஆற்றல், வலிமை, இயல்பு, தன்மை, வணிகமுதல், இடம், உறுப்பு, செல்வம், பொருள், குறுந்தெரு, மனையின் பகுப்பு, விளக்கம், கூட்டப்படும் எண்கள்

**வகைசெய்-தல்** - ஆயத்தப்படுத் துதல், ஏற்பாடு செய்தல், கணக்கில் பதிவு செய்தல், வழி செய்தல், தீர்வை ஒழுங்கு செய்தல்

**வகைதொகை** - விளக்கம்

**வகைப்படுத்து** - பங்கிடு, வகையாய்ப் பிரி

**வகைப்பாடு** - பிரித்தல்

**வங்கம்** - ஆற்றுவளைவு, வளைவு, கருத்து, மரக்கலம், வண்டி வகைகளுள் ஒன்று

**வங்கி** - மகளிர் தோளணிகளுள் ஒன்று, வளைந்த இரும்புக்கருவி, வளைந்த கத்தி, பிச்சுவா, வைப்பகம்

**வங்கு** - கல் முதலியவற்றின் உட் துளை, வளை, மலைக்குகை, மரப்பொந்து, தோல்நோய், நாய்ச் சொறி, கழுதைப்புலி, தாழை, மகரந்தம், மரக்கல விலாச்சட்டம்

**வசலை** - பசலைக்கொடி

**வசை-தல்** - வசைகூறுதல், பழித்தல், பொய்க்குற்றச்சாட்டு

**வஞ்சகம்** - சூழ்ச்சி, தந்திரம், ஏமாற்றம், ஏய்ப்பு, மறைவு, நரி

**வஞ்சம்** - ஏய்ப்பு, ஏமாற்றுகை, சூழ்ச்சி, பொய், கொடுமை, வாள், வஞ்சினம், பழிக்குப்பழி, சிறுமை, அழிவு, சிதைவு

**வஞ்சி** - புறத்திணையுள் எல்லை விரிவாக்கப் பகைவர் மேற்போரிடச் செல்லுவதைக் கூறுவது, அரசன் வஞ்சி மலர்ச்சூடி பகைவர் நாட்டின் மேல் செல்லக் கருதியதைக் கூறும் புறந்துறை, பெண், அறத்தேவி, சேரர் தலைநகர் கரூர், கொடுங்கோளூர், சேரநாடு, படகு, காணிக்கை செலுத்தும் பேழை, நம்ப வைத்துக் கைவிடுதல், கொடுமையாக ஏமாற்றுதல்

**வஞ்சிரம்** - 6'',3'' நீளமுள்ள நீலவண்ணக் கடல் மீன்வகை

**வட்கர்** - பகைவர், குற்றம், இடைமுறிவு

**வட்குதல்** - கெடுதல், தாழ்தல், வெட்குதல், வளம் பெறுதல்

**வட்டகை** - சிறுகிண்ணம், பரப் பெல்லை, நிலப்பகுதி, வட்டகை

நிலம், அடைப்புக்கட்டிய நிலம், வட்டில், சிறுகிண்ணம்

**வட்டணம்** - பரிசை

**வட்டணை** - வணங்கத் தாமரை மொட்டுப்போல கைகளைக் குவிக்கை, தலைக்கருவி, தாளமிடல், அடித்தல், மொத்துதல்

**வட்டத்தோல்** - கேடகம்

**வட்டப்பாலை** - நிலத்திணை வகைகளுள் ஒன்று

**வட்டப்பாறை** - சந்தனக்கல்

**வட்டம்** - மண்டலம், வட்டவடிவு, பரிவேடம், குயவன்திரிகை, வண்டிச் சக்கரம், உண்கலமாய்த் தைக்கும் இலையின் நடுப்பகுதி, தடவை, முறை, சுற்று, கோள் ஒருமுறை வான மண்டலத்தைச் சுற்றி வரும் காலம், சுற்றியுள்ள நிலப்பகுதி, தொடுகறி வகைகள், அப்பவகை, வட்டப்பாறை, ஆலவட்டம், வாகு வலையம், துலைத்தட்டு, கைம் மணி, கிடுகு, கேடகம், முத்துவகை, பீடம், இருக்கை, குளம், கொள்கலம், நீர்ச்சால், எல்லை, திருத்தம், செம்மை, 500சால் கொண்ட நீரளவு, மக்கட்பிரிவு, யானையின் நடுச் செவி, தாழ்வு, ஆழ்ந்த பள்ளதாக்கு, களத்தில் சூட்டிப்பதற்குப் பரப்பிய நெற்கதிர், வட்டமரம்

**வட்டாடு-தல்** - வட்டை உருட்டிச் சூதாடுதல்

**வட்டி** - திருப்பும்போது கடனுடன் கொடுக்கும் கூடுதல் தொகை, வருவாய்ப் பெருக்கம்

**வட்டிகை** - சுற்றளவு, வட்டம், கைம்மணி

**வட்டில்** - கிண்ணம், தட்டு, குவளை, நாழிகைவட்டில், அம்புக்கூடு, கூடை, வழி, பாதை, பட்டம், விருது வகைகளுள் ஒன்று, சொக்கட்டான் அறை, அப்பள மாவுருண்டை

**வட்டு** - சூதாடும் கருவி, திரட்சி, திரண்டபொருள், நீரெறி கருவிவகை, பாண்டி விளையாட்டுக்குரிய சில், விளையாட்டுக்கருவிவகை, வட்டில், குடையில் கம்பிகள் ஒன்று சேருமிடம், சிறுதுளி, வட்ட கருப்பட்டி, குறுவட்டு, குறுந்தகடு

**வட்டுடை** - முழந்தாளவுள்ள உடை, அரைக்காற்சட்டை, ஆடை

**வட்டெழுத்து** - கி.பி.1-12ஆம் நூற்றாண்டு வரை வழங்கிய தமிழ் வட்ட வரிவடிவம்

**வட்டை** - வயல், பெருங்கான், திக்கு, சக்கரத்தின் மேல் உள்ள வளைமரம், தேர், புலியின் உடல் மேலுள்ள வரி, பரப்பெல்லை, நிலப்பகுதி, மரவட்டை, பக்கப்படி

**வட்டை** - வழி, சக்கரவளை மரம்

**வடக்கிரு-த்தல்** - உயிர்துறக்க வட திசை நோக்கி உண்ணா நோன்பு எடுத்தல்

**வடக்குநோக்கி** - காந்தவூசி
**வடந்தை** - வடதிசையுள்ளது, வடகாற்று
**வடவு** - மெலிவு
**வடாது** - வடக்குள்ளது
**வடி** - கூர்மை, காற்று, மாவடு
**வடிகயிறு** - குதிரை வாய்க்கயிறு
**வடிகாது** - தொங்குத்துளைச் செவி
**வடித்தல்** - பிழிதல், தெளிதல், ஆராய்தல், பயிற்றுதல், திருத்துதல், கூராக்குதல்
**வடிதல்** - நீளுதல், உருக்கொள்ளுதல்
**வடிப்பம்** - செப்பம், அழகு
**வடிம்பு** - விளிம்பு, பழி, தாங்குமரம்
**வடிவு** - உருவம், அழகு
**வடு** - மாம்பிஞ்சு, புண், வாய், குற்றம்
**வடுகர்** - தெலுங்கர்
**வடுகன்றாய்** - காளி
**வடுகு** - ஒருகூத்து
**வடுத்தல்** - பிஞ்சுவிடுதல், வெளிபடுத்துதல்
**வடைத்தல்** - மிகுதல், தடுத்தல், வருந்துதல், கோபித்தல், பிரித்தல், குற்றப்படுத்துதல்
**வண்கை** - கொடைக்கை
**வண்டயம்** - கழல்
**வண்டர்** - நாழிகையறிவிப்போர், மங்கலப்பாடகர்
**வண்டல்** - விளையாட்டுச்சிற்றில், நதிக்கரை, நீரடி மண், சந்தனக் குழம்பு
**வண்டன்** - தீயோன்
**வண்டனார்** - முனிவர்
**வண்டானம்** - ஒரு நாரை
**வண்டு** - அம்பு, குற்றம், கைவளை, சங்கு, தேன், வண்டு
**வண்ணக்கன்** - நாணய சோதகன்
**வண்ணகம்** - வருணித்துப்புகழுகை
**வண்ணடை** - துகில்வகை
**வண்ணத்தான்** - வண்ணான்
**வண்ணம்** - நிறம், அழகு, ஒப்பனை, குணம், வகை, இசைப்பாட்டு
**வண்ணமுதம்** - பருப்புச்சோறு
**வண்ணித்தல்** - புகழ்தல்
**வண்மை** - பேரீகை, வளப்பம், கொடை, அழகு
**வணக்கம்** - கரங்கூப்பி வரவேற்றல், மதித்தல், மரியாதைச் சொல், வளைகை, வழிபாடு
**வணர்தல்** - வளைதல், மயிர் குழன்றிருத்தல்
**வத்தம்** - சோறு, நெல்
**வத்தனை** - செல்வம், வமிசம், சீவனம்
**வத்தித்தல்** - உளதாதல்
**வத்திரம்** - முகம்
**வதறுதல்** - வாயாடுதல், திட்டுதல்
**வதி** - தங்குமிடம், சேறு வழி
**வதிதல்** - தங்குதல், துயிலுதல்
**வந்தனை** - வணக்கம், வழிபாடு
**வந்தி** - வணக்கம், புகழ்வோன், மலடி, பலவந்தம்
**வந்திகர்** - மங்கலப் பாடகர்
**வந்திகை** - தோள்வளை

**வந்து** - காற்று

**வம்பம்** - புதுமை

**வம்பமாக்கள்** - அயல்நாட்டு மாந்தர்

**வம்பலன்** - புதியோன், அயலான், வழிப்போக்கன்

**வம்பு** - நறுமணம், புதுமை, நிலையின்மை, பயனின்மை, கயிறு, கைச்சரடு, கச்சை, வீண்பேச்சு

**வயக்கம்** - ஒளி, விளக்கம்

**வயங்குதல்** - விளங்குதல், மிகுதல்

**வயந்தகம்** - மகளிர் தலைக்கோலத் தொங்கல்

**வயந்தம்** - தென்றல், வசந்த காலம்

**வயப்புலி** - சிங்கம்

**வயப்பெடை** - வலியுடைய படை

**வயம்** - வலி, வண்மை, வெற்றி, வேட்கை, வசம், நீர்

**வயமா** - புலி, சிங்கம், குதிரை, யானை

**வயவர்** - படைத்தலைவர், வீரர்

**வயவு** - வலி, விருப்பம்

**வயா** - வேட்கைப் பெருக்கம், மயற்கை, நோய்

**வயிர்** - கூர்மை, சினம், மூங்கில், ஊதுகொம்பு

**வயிர்த்தல்** - வயிரங்கொள்ளுதல், செற்றங்கொள்ளுதல்

**வயிரம்** - ஒரு மணி, திண்மை, மரவயிரம், செற்றம், வட்டம்

**வயிறுவாய்த்தல்** - கருப்பங்கொள்ளுதல்

**வயின்** - பக்கம், வயிறு, இடம், வீடு, கருடன், முதுமை

**வரம்** - தெய்வப்பேறு, உயர்ந்தது

**வரம்பு** - வரப்பு, எல்லை, அணை

**வரலாறு** - விவரம், சரித்திரம்

**வரன்** - சிறந்தவன், கடவுள்

**வரன்றுதல்** - வாருதல், அரித்தல்

**வரி** - இசைப்பாட்டு, தேமல், ஒழுங்கு, கோடு, புள்ளி, அறல், நிறம், புலி

**வரிச்சு** - கட்டு வரிச்சல், கூரைமரக் கீற்று

**வரிட்டம்** - மிகச் சிறந்தது

**வரித்தல்** - தேர்ந்துகொள்ளுதல், நியமித்தல், எழுதுதல், கட்டுதல், கோலஞ்செய்தல்

**வரிப்புறம்** - அணில்

**வரிவயம்** - புலி

**வருக்கம்** - இனம், வமிசம்

**வருக்கை** - இனவரிசை, வேர்ப்பலா

**வருட்டுதல்** - தேற்றுதல், வயப் படுத்தல்

**வருடம்** - ஆண்டு, மழை

**வருடுதல்** - தடவுதல்

**வருடை** - வரையாடு, மலையாடு

**வருணம்** - நிறம்,குலம் (சாதி), நீர்

**வருணனை** - புனைவுரை, விரிவு

**வருணி** - பிரமசாரி

**வருத்தித்தல்** - விருத்தியாதல், உண்டாக்குதல், சித்திரமெழுதுதல்

**வருதி** - உத்தரவு

**வருபுனல்** - வெள்ளம்

**வருவாய்** - வரும்படி, தோன்றுமிடம்

**வரை** - கோடு, மூங்கில், மலை,

எல்லை, அளவு, மலையுச்சி, குவடு

**வரைச்சிலம்பு** - மலைச்சாரல்

**வரைதல்** - மணத்தல், வரை யறுத்தல், எழுதுதல், நீக்குதல்

**வரைப்பு** - எல்லை, மதில், உலகம், குளம், எழுதுகை

**வரையறை** - அளவு, எல்லை

**வரைவின்மகளிர்** - பொது மகளிர்

**வரைவு** - எல்லை, திருமணம், நீக்கம்

**வல்** - திறமை, மேடு, சூதாடுங் கருவி, கச்சு, விரைவு

**வல்சி** - சோறு, உணவு, நெல், அரிசி

**வல்லகி** - தளிர், பூங்கொத்து

**வல்லடி** - பலவந்தம், கொடுமை

**வல்லி** - கொடி, இளம்பெண், அகவிதழ்

**வல்லியம்** - புலி, இடைச்சேரி

**வல்லுளி** - பன்றி

**வல்லூகம்** - கரடி, ஆண்குரங்கு

**வல்லேறு** - இடி

**வல்லை** - பெருங்காடு

**வல்விலங்கு** - யானை

**வலக்காரம்** - பலவந்தம், தந்திரம்

**வலசாரி** - வலமாகச் சுற்றுதல்

**வலசை** - இடம்விட்டு இடம் குடியோடுகை, கூட்டம்

**வலத்தல்** - சுற்றுதல், தொடுத்தல், கொழுத்தல், சொல்லுதல்

**வலது** - சமர்த்து, வெற்றி, வலப்பக்கம்

**வலம்** - வலப்பக்கம், வலி, வெற்றி

**வலம்புரி** - வலஞ்சுழிச்சங்கு

**வலயம்** - வட்டம், கேயூரம், கைவளையம், தோட்டம், பாத்தி, கடல், சுற்றிடம்

**வலவன்** - சமர்த்தன், தேர்ப்பாகன், வானூர்தி ஓட்டி

**வலவை** - வல்லவன், நாணில்லாதவன், வஞ்சகப்பெண்

**வலார்** - வளார்

**வலாரி** - இந்திரன்

**வலி** - இழுத்தல், சபதம், நோவு

**வலிச்சல்** - வரிச்சு

**வலித்தல்** - நினைத்தல், துணிதல், வற்புறுத்தல், தோற்றுவித்தல்

**வலிதல்** - முயலுதல், மீறுதல், அழுந்துதல், திண்ணியாதல்

**வலியன்** - கரிக்குருவி

**வலைஞர்** - செம்படவர்

**வவ்வு** - கவர்கை

**வழக்கழிவு** - நியாய விரோதம்

**வழக்காட்டு** - ஊடல்

**வழக்காறு** - உலகில் வழங்கி வரும் வழி

**வழக்கு** - கொழுப்பு

**வழக்கு** - செய்கை, ஈகை, இயங்குகை, நீதி, வழக்கம், ஒழுக்கம், நெறி

**வழுகு** - மென்மை

**வழுங்காத்தேர்** - பேய்த்தேர்

**வழுங்குதல்** - இயங்குதல், செல்லுதல், மழை பெய்தல், நடைபெறுதல், கூத்தாடுதல், கொடுத்தல், சொல்லுதல்

**வழுலை** - ஒருபாம்பு, புண்வடிநீர், கோழை

**வழாஅல்** - வழுக்கை

**வழி** - இடம், ஏவல், கிளை, சுற்றம், நெறி, முறை, உபாயம், சந்ததி, பின்பு

**வழித்தொண்டு** - பரம்பரையடிமை

**வழிநாள்** - பின்னாள்

**வழிபடுதல்** - பின்பற்றுதல், நேர்ப் படுதல்

**வழிப்படுத்தல்** - சீர்திருத்துதல்

**வழிப்புரை** - வழியிற்றங்குமிடம்

**வழிமுறை** - கிரமம், சந்ததி

**வழிமொழிதல்** - வழிபாடுகூறுதல், ஏற்பிசைத்தல்

**வழியளவை** - அனுமானப் பிரமாணம்

**வழியிரங்குதல்** - பின் வருந்துதல்

**வழியுரைத்தல்** - தூது சொல்லுதல்

**வழியெஞ்சுதல்** - வமிசமற்றுப்போதல்

**வழு** - தவறு, பழிப்புரை

**வழுத்தரல்** - இறந்துபோதல்

**வழுத்துதல்** - வாழ்த்துதல், துதித்தல்

**வழுதி** - பாண்டியன்

**வழுதுணை** - கத்தரிக்காய், கண்டங் கத்தரி

**வழுநீர்** - பீளை

**வழும்பு** - குற்றம், தீங்கு, அழுக்கு, நிணம்

**வழுவாய்** - தப்புகை, பாவம்

**வழை** - சுரபுன்னை, புதுமை, இளமை

**வழைச்சு** - இளமை, புதுமை

**வள்** - வளம், பெருமை, கூர்மை, கடிவாளம், படுக்கை, வலிமை

**வள்ளம்** - ஒரு வட்டில், ஓர் அளவு, தொன்னை, சிறுதோணி

**வள்ளல்** - வரையாது கொடுப்போன்

**வள்ளன்மை** - கொடையுடைமை

**வள்ளி** - கொடி, கைவளை, குறிஞ்சிப் பெண், சந்திரன்

**வள்ளித்தண்டை** - பிரப்பங்கேடகம்

**வள்ளியன்** - கொடையாளன்

**வள்ளுரம்** - பசுந்தசை

**வள்ளுவன்** - ஒரு குலத்தன் (சாதியான்), நிமித்திகன், கணியன்

**வள்ளுறை** - பெரிய மழைத்துளி

**வள்ளை** - ஒருகொடி, நெற்குத்தும் பாட்டு

**வளம்** - செழுமை, வருவாய், செல்வம்

**வளவன்** - சோழன், வேளாளன்

**வளா** - பரப்பு

**வளாகம்** - இடம், உலகம், தேயம், தினைப்புனம், பரப்பு

**வளார்** - இளங்கொம்பு

**வளாவுதல்** - சூழ்தல், மூடுதல், கலத்தல், அளவளாவுதல்

**வளி** - காற்று, உடல் வாதம்

**வளை** - சங்கு, கைவளை, கங்கணம், சாமரை, குவளை

**வளைதடி** - ஓர் எறியாயுதம்

**வற்கடம்** - வறட்சி, பஞ்சம்

**வற்கம்** - கடிவாளம், கலனை முதலியன

**வற்கலை** - மரவுரி, காவித்துணி

**வறங்கூர்தல்** - மழை பெய்யாது போதல்

**வறடு** - வறண்டது

**வறத்தல்** - பெய்யாதொழிதல், காய்தல், சுருங்குதல்

**வற்பம்** - பஞ்சம், வன்மை

**வற்புலம்** - மேட்டுநிலம்

**வறம்** - வற்றுகை, பஞ்சம், வெம்மை

**வற்றம்** - கடல்நீர் வடிகை

**வற்று** - கூடியது

**வறிது** - சிறிது, உள்ளீடற்றது

**வறு** - குற்றம்

**வறுங்கோட்டி** - அறிவிலார் கூட்டம்

**வறை** - பொறிக்கறி

**வன்கண்** - கொடுமை, வீரம்

**வன்புலம்** - முல்லைநிலம்

**வன்மம்** - தீராப்பகை, வலிமை

**வன்மான்** - சிங்கம்

**வன்றி** - பன்றி

**வன்னம்** - நிறம், எழுத்து, அழகு

**வன்னி** - நெருப்பு, குதிரை, மணமிலி, கிளி

**வன்னிகை** - எழுதுகோல்

**வன்னிசகாயன்** - வாயு தேவன்

**வன்னியன்** - தளகர்**வனசம்** - தாமரை

**வனசரம்** - காட்டானை, காட்டுமிருகம்

**வனப்பு** - அழகு

**வனம்** - காடு, கான், ஊர்சூழ், சோலை, அழகு, துளசி, காடுபடுபொருள்த்தன், சிற்றரசன், ஒரு குலப்பெயர்

**வனிதை** - பெண்

**வனைதல்** - உருவமைத்தல், அலங்கரித்தல்

**வாக்கல்** - வடிக்கப்பட்ட சோறு

**வாக்கு** - திருத்தம், வளைவு, தன்மை, வாய், புகழ்ச்சொல், பக்கம், செல்வாக்கு, நேரி

**வாக்குத்தத்தம்** - உறுதி மொழி கூறல்

**வாக்குதல்** - வார்த்தல்

**வாக்குவாதம்** - பேச்சுத் தருக்கம்

**வாகு** - அழகு, ஒழுங்கு, தோற்பட்டை

**வாகை** - ஒரு மரம், வெற்றி, வெற்றி மாலை

**வாங்குதல்** - வளைதல், தழுவுதல், இழுத்தல், கொள்ளுதல், நீக்குதல், குலைதல், குறைதல், பின் வாங்குதல்

**வாசகம்** - பேச்சு, சொற்றொடர், வசனநடை, செய்யுள், வாய்பாடு

**வாசகன்** - இந்திரன், பஞ்சவாசகம் விற்போன், நூற்பிரியன்

**வாசம்** - இருப்பிடம், மணம்

**வாசனை** - நறுமணம், பற்று

**வாசி** - வேறுபாடு, தகுதி, நன்னிலை, வீதம், நாணயம், தன்மை, குறியீடு, குதிரை, வட்டம். படித்தல்

**வாசிகம்** - செய்தி, தூது

**வாசிகை** - மாலை

**வாசினை** - வாசித்தல்

**வாட்டு** - பொரியல்

**வாட்டுதல்** - வருத்துதல்

**வாடூன்** - உப்புக்கண்டம்

**வாடை** - வடகாற்று, மணம், வரிசை

**வாணன்** - வசிப்பவன்

**வாணி** - கலைமகள், சரசுவதி, சொல், அம்பு

**வாதுதல்** - அறுத்தல்

**வாதுவன்** - குதிரைப்பாகன், யானைப் பாகன்

**வாமம்** - அழகு, இடப்பக்கம், தொடை

**வாமன்** - அருகன்

**வாமனம்** - குறள்வடிவம்

**வாமான்** - குதிரை

**வாய்** - வாக்கு, இடம், துவாரம், உண்மை, நுனிவாயில், வடு, மேற்பக்கம், மூலம், விளிம்பு

**வாயசம்** - காக்கை

**வாயடை** - உணவு

**வாய்த்தல்** - சேர்தல், நன்கமைதல்

**வாய்த்தலை** - தொடங்குமிடம், தலைமதகு

**வாய்தல்** - சித்தித்தல், பெறுதல், வாசல்

**வாய்ப்பக்காட்டல்** - விளங்க உணர்த் துதல்

**வாய்ப்பகை** - பொய்க்குறளை, வன்சொல், பயனில்சொல்

**வாய்ப்பு** - அனுகூலம், சிறப்பு, பேறு, அழகு, செல்வம்

**வாய்ப்புள்** - நற்சொல், குறி

**வாய்பாடு** - குறியீடு, மரபுச்சொல்

**வாய்மலர்தல்** - பேசுதல், சொல்லுதல்

**வாய்மை** - உண்மை, தவறாச்சொல்

**வாய்மொழி** - மெய்ம்மொழி

**வாய்வாள்** - குறிதப்பாத வாள்

**வாய்வாளாமை** - பேசாதிருக்கை

**வாய்விடு** - வஞ்சினம், ஆரவாரம்

**வாய்வைத்தல்** - ஊதுதல், சிறிது பயிலுதல்

**வாயில்** - நுழைவாயில், இடம், வழிவகை, தூது, பொறி புலன்கள்

**வாயில் விழைச்சு** - உமிழ் நீர்

**வாயுறை** - உணவு, கவளம், மருந்து, உறுதிமொழி, மகளிர், காதணி

**வார்** - நெடுமை, கடைகயிறு, கச்சு, வரிசை, நீர், தோல், வார்

**வார்க்குத்து** - நீர்சுழித்தோடுமிடம்

**வாரணம்** - சங்கு, யானை, பன்றி, மறைப்பு, கோழி, கடல்

**வார்தல்** - யாழின் விரற்றொழிதல், ஒழுகுதல், உரிதல்

**வாரம்** - பக்கம், இசைப்பாட்டு, கிழமை, குடியிறை, அன்பு, பட்சபாதம், தடை, வரம்பு, பின்பாட்டு, மாசூற் பங்கு, மலைச்சாரல்

**வாரி** - வருவாய், விளைவு, மதிற்சுற்று, செண்டுவெளி, வெள்ளம், கடல், யானை யகப்படுத்துமிடம்

**வாரிசம்** - உப்பு, சங்கு, தாமரை

**வாரித்தல்** - தடுத்தல், ஆணையிட்டுக் கூறுதல், நடத்துதல்

**வாரிதம்** - மேகம், தடை

**வாரிதி** - கடல்

**வாரியார்** - குதிரைப்பாகன்

**வாருகோல்** - துடைப்பம்

**வாருதல்** - தொகுத்தல்

**வாரை** - மூங்கில்

**வால்** - இளமை, தூய்மை, பெருமை, ஒளி, வெண்மை

**வாலாமை** - அழுக்கு, அசுத்தம், தீட்டு

**வாலிகை** - மணல்

**வாலிசம்** - தலையணை

**வாலுகம்** - மணல், மணற்குவியல்

**வாலுவன்** - சமைப்போன்

**வாலை** - திராவகம் வடிக்கும் பாண்டம், இளம் பெண்

**வாவல்** - வௌவால், வயா, தாண்டுகை

**வாவி** - நடைக்கிணறு, ஆற்றோடை, நீர்நிலை

**வாவுதல்** - தாவுதல், தாண்டுதல்

**வாள்** - ஒளி, கூர்மை, ஈர்வாள்

**வாளகம்** - வெட்டிவேர்

**வாளம்** - வட்டம், சக்கரவாகம்

**வாளரி** - சிங்கம்

**வாள்வரி** - புலி

**வாளாமை** - மௌனம்

**வாளி** - அம்பு, வாள்வீரன், வட்டவோட்டம், ஒரு காதணி

**வாளுழத்தி** - கொற்றவை, நீர்ச்சால்

**வாறு** - விதம், பேறு, வலிமை

**வான்** - ஆகாயம், மேகம், மழை, தேவருலகு, பெருமை, அழகு, இடி, சிறப்பு

**வான்கண்** - ஞாயிறு

**வானநாடு** - பொன்னாங்காணி

**வானப்பிரத்தம்** - மனைவியொடு காட்டில் தவஞ்செய்தல்

**வான்மை** - வெண்மை, தூய்மை

**வானவர்** - சேரர், விண்ணில் வாழ்வோர்

**வானவரம்பன்** - சேரன்

**வானவூர்தி** - ஆகாய விமானம்

**வானி** - கூடாரம், மரம், கொடி, படை

**வானிழல்** - அசரீரி

**வி** - பறவை, விசும்பு, காற்று, அழகு, விசை, விகுதி

**விக்கினம்** - இடையூறு, தீமை

**விக்குள்** - விக்கல்

**விகலம்** - குறைவு, சிதைவு

**விகலை** - ஒரு நாழிகை

**விங்குதல்** - மிகுதல், துளைத்தல்

**விச்சை** - கல்வி, அறிவு, மந்திரம், தெரு

**விசயன்** - அருச்சுனன்

**விசித்தல்** - இறுகக் கட்டுதல்

**விசும்பு** - வானம்

**விசை** - விரைவு, தடவை, எந்திரம், பக்கம், வெற்றி

**விசைத்தல்** - வீசுதல், விரைவு பண்ணுதல், துள்ளுதல், சிதறுதல்

**விஞ்சுதல்** - மிகுதல், மேலாதல்

**விஞ்சை** - கலை, மாயவித்தை, மந்திரம்

**விடக்கு** - இறைச்சி

**விடங்கம்** - கொடுங்கை, இயற்கை லிங்கம், நல்லுருவம், அழகு, ஆண்மை

**விடங்கர்** - முதலை, சிறுவழி

**விடங்கன்** - காமுகன், வம்பன்

**விடங்கு** - அழகு, அணி

**விடம்பு** - உள்ளொன்று புறம்பொன் றான தன்மை

**விடமம்** - அழுத்தமின்மை, குறும்பு

**விடர்** - பிளப்பு, மலைக்குகை, பெருச்சாளி

**விடலி** - தூர்த்தை

**விடலை** - திண்ணியன், வீரன்

**விடவி** - மரம்

**விடன்** - வீரன், தூர்த்தன்

**விடுதோல்** - மேற்றோல்

**விடை** - ஆண், இடபம், இளமை

**விடைப்பு** - வேறுபாடு

**விண்** - வானம்

**விண்டு** - திருமால், மேலுலகம், ஆகாணம், மலை, மூங்கில்

**விண்டுராதன்** - பரீட்சித்து

**விண்ணதிர்ப்பு** - இடி முழக்கம்

**விண்ணாணம்** - இடம்பம், நாணம், நாகரிகம்

**விண்மணி** - சூரியன்

**வித்தம்** - சூதாட்டம், அதிசயம், ஞானம், கூட்டம், பொன், பழிப்பு

**வித்தல்** - பரம்புதல்

**வித்தாரம்** - விரிவு, விற்பன்னம்

**விதத்தல்** - மிகுதல், சிறப்பித் துரைத்தல்

**விதரணை** - சமர்த்து, விவேகம், கொடை, தயாளம்

**விதலை** - பூமி, நடுக்கம்

**விதறு** - நடுக்கம்

**விதி** - நெறி, ஊழ், ஆயுள், ஆகம முறை, பிரமன்

**விதிர்த்தல்** - நடுங்குதல், சிதறுதல், சொரிதல், அஞ்சுதல்

**விது** - சந்திரன், பிரமன்

**விதுப்பு** - நடுக்கம், விரைவு

**விதும்புதல்** - விரைதல், ஆசைப் படுதல், நடுங்குதல்

**விதுவிதுப்பு** - குத்துநோய், நடுக்கம், ஆசை

**விதைப்புனம்** - புதுக்கொல்லை

**விந்தம்** - செம்மணி, தாமரை, மலை, காடு, பேரெண்

**விந்து** - பொட்டு, துளி, சுக்கிலம்

**விந்தை** - துர்க்கை, கலவி, அழகு, ஆச்சரியம்

**விம்மாத்தல்** - தேம்பியழுதல்

**விம்மிதம்** - அதிசயம், உவகை, உடல்

**விம்முதல்** - வருந்துதல், மகிழ்வுறுதல், நிறைதல்

**வியத்தல்** - அதிசயித்தல், பாராட்டுதல்

**வியம்** - ஏவல், வழி, போக்கு, விரிவு

**வியமம்** - பாராட்டத்தக்கது

**வியர்த்தம்** - பயனின்மை

**வியர்ப்பு** - வியர்வை, சினம்

**வியல்** - பெருமை, மிகுதி, பரப்பு

**விரட்டுதல்** - துரத்துதல், பயமுறுத் துதல்

**விரலேறு** - ஓர் தோற்கருவி

**விரவல்** - கலத்தல்

**விரவலர்** - பகைவர்

**விராய்** - விறகு
**விரிச்சி** - வாய்ச்சொல்
**விரிதல்** - வெடித்தல்
**விரியல்** - பூமாலை, மலர்ச்சி, பரப்பு
**விருகம்** - மிருகம், விலங்கு, செந்நாய்
**விருட்சம்** - மரம்
**விருது** - கொடி, வெற்றிச்சின்னம்
**விருந்து** - புதுமை, உணவளித்து உபசரிக்கை, விருந்துண்போன்
**விருந்தை** - துளசி
**விரை** - வாசனை, கலவைச்சாந்து, தேன்
**விரைதல்** - முற்படுதல், வேகமாதல், மனங்கலங்குதல்
**வில்** - ஒளி, அம்பெய்யுங்கருவி
**விலங்கு** - மிருகம், பறவைகுன்று, குறுக்கானது, தடை
**விலங்குநர்** - தடுப்போர்
**வில்லவன்** - சேரன், மன்மதன்
**வில்லார்** - வேடர்
**வில்லேப்பாடு** - அம்பு விழும் எல்லை
**வில்லேருழவர்** - வேடர், பாலை நிலமக்கள்
**விலைமகள்** - கணிகை, தாசி
**விழல்** - புல்வகை, பயனின்மை
**விழவு** - விழா, விளையாட்டு
**விழா** - கொண்டாட்டம், உற்சவம்
**விழாவணி** - விழாச்சிறப்பு, வீரர், போர்க்கோலம்
**விழி** - கண், மிண்டை
**விழுக்காடு** - வீதம், பொருளின்றிக் கூட்டுச்சொல்
**விழுக்கு** - நிணம்
**விழுக்குலை** - சிறந்தகுலை
**விழுச்சீர்** - சீரிய புகழ்
**விழுத்திணை** - உயர்குலம்
**விழுது** - கிளையிரங்கு வேர், வெண்ணெய்
**விழுப்பம்** - சிறப்பு, உயர்வு
**விழுப்பு** - கழிக்கப்படுவது, அசுத்தம்
**விழுப்புகை** - பெரும்புகை
**விழுமம்** - சிறப்பு, இடும்பை
**விழுமியோர்** - பெரியோர்
**விழைதல்** - மிக விரும்புதல், ஒத்தல்
**விள்** - விள்ளுதல், பேசுதல்
**விளம்பம், விளம்பனம்** - தாமதம்
**விளர்த்தல்** - வெட்குதல், வெளுத்தல்
**விளர்தல்** - வெளுத்தல், முதிரா திருத்தல்
**விளரி** - இரங்கற்பண், யாழ்
**விளாவுதல்** - சுற்றுதல், கலத்தல்
**விளி** - ஓசை, இசைப்பாட்டு, கொக்கரிப்பு, கூப்பிடு
**விளித்தல்** - அழைத்தல், சொல்லுதல், அழித்தல், பேராரவாரஞ்செய்தல்
**விளிதல்** - சாதல், குறைதல், கழிதல், கோபித்தல், பாடுதல், கூப்பிடுதல், நாணமடைதல், சொல்லுதல்
**விளிப்பு** - ஓசை
**விளிம்பு** - ஓரம், கரை
**விளிவு** - கேடு, சாவு, உறக்கம், நாணம், பேரொலி
**விளையுள்** - விளைச்சல், முதிர்கை

**விளைவு** - பயன், கருத்தேற்றம்

**விற்கிடை** - நான்கு முழ அளவு

**விறகு** - எரிகட்டை

**விறத்தல்** - செறிதல், வெற்றி பெறுதல், மிகுதல், வெருவுதல்

**விறல்** - வெற்றி, வலி, பெருமை, மிகுதி

**விறலி** - பாணர்ப்பெண்

**விறைத்தல்** - மரத்துப்போதல், பிரமித்தல்

**வினை** - ஏவல், செயல், ஊழ், முயற்சி, தந்திரம்

**வினைமுதல்** - கருத்தா

**வீ** - மரணம், அழிவு, நீக்கம், மலர், பறவை

**வீக்கம்** - பருமை, பெருமை

**வீக்குதல்** - கட்டுதல், அடக்குதல், நிறைத்தல், வேகமுறச் செல்லுத் துதல்

**வீங்குதல்** - பூரித்தல், ஏக்கங் கொள்ளுதல்

**வீசம்** - பதினாறில் ஒரு பங்கு, முளை, விதை

**வீட்டுதல்** - அழித்தல், நீக்குதல், கொல்லுதல்

**வீடு** - மனை, வினைநீக்கம், மோட்சம், விடல்

**வீதம்** - அளவு முறை, பங்கு, அமைதி

**வீரட்டானம்** - வீரம் விளங்கியதலம்

**வீராணம்** - பெரும்பறை

**வீழ்** - விழுது

**வீழ்த்தல்** - விழச்செய்தல், வீணாகக் கழித்தல், தாழவிருத்தல்

**வீழ்தல்** - மிக விரும்பல், நீங்குதல்

**வீளை** - சீழ்க்கை, சத்தம்

**வீற்றாதல்** - பிரிவுபடுதல்

**வீற்றிருத்தல்** - சிறப்போடிருத்தல், தனிமையாயிருத்தல், கவலை யற்றிருத்தல்

**வீற்று** - கூறு, வேறுபடுகை, தனிமை

**வீற்றுவீற்று** - வெவ்வேறு

**வீறு** - சிறப்பு, பெருமை, செழுமை, வெற்றி, பகுப்பு

**வீறுதல்** - மேம்படுதல், மிகுதல், கீறுதல், வெட்டுதல்

**வெஃகல்** - பேராசை

**வெக்கை** - மிகுந்த சூடு, கடாவிடுகளம்

**வெகுளுதல்** - கோபித்தல், பகைத்தல்

**வெங்களம்** - போர்க்களம்

**வெங்காரம்** - மருந்துச்சரக்கு வகை

**வெங்குரு** - சீகாழி

**வெஞ்சுடர்** - சூரியன்

**வெட்சி** - ஒருசெடி, பசு நிரை கவர்தல்

**வெட்டி** - பயனின்மை

**வெட்டென** - கடுமையாக, கொடுமை யாக

**வெட்டை** - மிகுவெப்பம், வெளி

**வெடிபடுதல்** - அஞ்சுதல், பேராசை யுண்டாதல்

**வெண்கதிர்** - சந்திரன்

**வெண்களமர்** - வேளாளர்

**வெண்கை** - எழிற்கை, வெறுங்கை

**வெண்டலை** - தலையோடு

**வெண்டேர்** - கானல்

**வெண்டோடு** - பனந்தோடு
**வெண்பலி** - சாம்பல்
**வெண்பாட்டம்** - கோடை மழை
**வெண்போழ்** - தாழைமலர்
**வெதிர்** - செவிடு, மூங்கில், நடுக்கம்
**வெதும்புதல்** - வாடுதல், கொதித்தல், சினங்கொள்ளுதல்
**வெந்தை** - ஆவியில் வெந்தது, பிட்டு
**வெப்பர்** - வெம்மை, சூடான உணவு
**வெப்பு** - வெப்பம், கொடுமை, தொழு நோய்
**வெப்புள்** - வெம்மை
**வெம்புதல்** - கோபித்தல், வாடுதல், விரும்புதல், ஒலித்தல்
**வெம்மை** - வெப்பு, விருப்பம்
**வெய்து** - கொடியது, விரைவு, விருப் பத்தைக் கொடுப்பது, வெப்பமுள்ளது
**வெய்துயிர்ப்பு** - வெப்பமூச்சு
**வெய்துறுதல்** - துன்புறுதல்
**வெய்யோன்** - கொடியவன், சூரியன், விரும்பியவன்
**வெயர்ப்பு** - கோபம்
**வெயில்** - ஒளி, சூரியன், வெம்மை
**வெரிந்** - முதுகு
**வெரு** - அச்சம்
**வெருகு** - காட்டுப்பூனை, மரநாய்
**வெருவந்தம்** - அச்சம்
**வெருவுதல்** - அஞ்சுதல்
**வெருளுதல்** - மருளுதல்
**வெவ்வர்** - வெம்மை
**வெள்குதல்** - வெட்குதல், அஞ்சுதல்
**வெள்ளடை** - வெற்றிலை
**வெள்ளணி** - பிறந்தநாள் ஒப்பனை
**வெள்ளம்** - கடல், நீர்ப்பெருக்கு, ஒரு பேரெண்
**வெள்ளாவி** - ஆடை வெளுக்கும் நீராவி
**வெள்ளி** - சுக்கிரன்
**வெள்ளிடை** - ஆகாயம், தெளிவு, வெளியிடம்
**வெள்ளில்** - விளாமரம், பாடை
**வெளித்தல்** - வெளிப்படையாதல், விடிதல், வெண்ணிறங்கொள்ளுதல்
**வெளிமை** - புல்லறிவு
**வெளியார்** - அறிவிலார், புறம்பானவர்
**வெளில்** - யானைத்தறி, அணில், கம்பம்
**வெளிறு** - பயனின்மை, உள்ளீ டின்மை, வெண்மை, அறிவின்மை
**வெற்பு** - மலை
**வெறி** - ஆவேசம், ஒழுங்கு, ஆடு, கள், மணம், வெறியாட்டு மயக்கம், முருகன் பூசை
**வெறுக்கை** - மிகுதி, செல்வம், பொன்
**வெறுமனே** - சும்மா
**வெறுமை** - ஒன்றுமின்மை, பயனின்மை, அறியாமை
**வென், வென்றி** - வெற்றி
**வேகப்புள்** - கருடன்
**வேகம்** - நஞ்சு, விரைவு
**வேகர்** - தூதுவர்
**வேகித்தல்** - விரைதல், கோபித்தல்

**வேங்கை** - புலிவகை, மரவகை, ஒருமலை

**வேட்கை** - பற்றுள்ளம்

**வேட்கோ** - குயவன்

**வேட்டகம்** - மனைவி பிறந்த வீடு

**வேட்டம்** - வேட்டை

**வேட்டல்** - யாகம், விவாகம், விரும்புதல்

**வேடு** - வரிக்கூத்துள் ஒன்று

**வேடுபறி** - வழிப்பறி

**வேடை** - தாகம், காமநோய், வெப்பம்

**வேண்டுதல்** - விரும்புதல்

**வேண்மான்** - வேளிர் குல மகன்

**வேணவா** - வேட்கைப் பெருக்கம்

**வேணி** - பின்னியமயிர், நதி, சடை

**வேணீர்** - வேட்கைநீக்கு நீர்

**வேத்தகன்** - அறியத்தக்கவன்

**வேதி** - அறிந்தவன், சடங்கு மேடை

**வேதித்தல்** - பிளத்தல், வேறாக்கல், தீற்றுதல்

**வேதினம்** - கருக்கரிவாள்

**வேது** - வெம்மை, நீராவி

**வேபாக்கு** - வேகுகை

**வேம்பன்** - பாண்டியன்

**வேமம்** - நெசவுத்தறி

**வேய்** - மூங்கில், ஒற்றன்

**வேய்தல்** - மூடுதல், சூடுதல், சூழ்தல், பதித்தல், பொருந்துதல்

**வேய்ந்துணி** - ஊதுகுழல்

**வேய்வனம்** - திருநெல்வேலி

**வேயாமாடம்** - நிலாமுற்றம்

**வேர்த்தல்** - மனம் புழுங்கல், வியர்வை விடுதல்

**வேரம்** - வெகுளி, செய்குன்று

**வேரல்** - சிறு மூங்கில்

**வேர்வு** - சினம்

**வேரி** - தேன், கள்

**வேலம்** - வேலமரம்

**வேலன்** - முருகன், பூசாரி

**வேலாவலயம்** - கடல், பூமி

**வேலாழி** - கடல்

**வேலேறு** - வேல் தைத்த புண்

**வேலை** - காலம், கடல்

**வேவு** - ஒற்று

**வேவை** - வெந்தது

**வேழம்** - கரும்பு, நாணல், மூங்கில், யானை

**வேழம்பம்** - வஞ்சகம், ஏளனம்

**வேழம்பர்** - கழைக்கூத்தர்

**வேள்** - கலியாணம், விருப்பம், மன்மதன், கந்தன், வேளாளர் உரிமைப்பெயர்

**வேள்வி** - யாகம், பூசனை, கலியாணம், நோன்பு, புண்ணியம்

**வேளாண்மை** - உபகாரம், பயிர்த் தொழில்

**வேளிர்** - குறுநில மன்னர்

**வேற்கோட்டம்** - முருகன் கோயில்

**வேற்றுப்புலம்** - பகையிடம்

**வேனல்** - வேனில், சினம், கானல், கொதிப்பு

**வேனிலான்** - மன்மதன்

**வை** - கூர்மை, வைக்கோல்

**வைகல்** - தங்குதல், கழிகை, நாள், வேளை

**வைகறை** - விடியல்

**வைகறைப்பாணி** - காலை வாத்திய வொலி

**வைகார்ப்பு** - இடையறா ஆரவாரம்

**வைகுசுடர்** - விடியல்வரையெரியும் விளக்கு

**வைகுண்டம்** - திருமாலுலகம்

**வைகுதல்** - தங்குதல், கழிதல், வற்றுதல், விடிதல், புணர்தல்

**வைகுறுமீன்** - விடிவெள்ளி

**வைத்தூறு** - வைக்கோற்போர்

**வைதரணி** - எமப்புரத்தாறு

**வைதல்** - நிந்தித்தல், சபித்தல்

**வைதாளி** - புகழ்ப்பாட்டு

**வைப்பு** - சேமநிதி, புதையல், நிலப் பகுதி, ஊர், உலகம், சூனியம், செயற்கை

**வைபவம்** - மகிமை

**வைபோகம்** - சீர்மை

**வையகம்** - பூமி, வைக்கோல் வேய்ந்த வீடு

**வையம்** - பூமி, ஊர்தி, இடம்

**வௌவுதல்** - கைப்பற்றுதல், கவர்தல்

☯☯☯